CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்

பி.வி. ஜகதீச அய்யர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசம் என்ற வரையறை பலவித பரிசீலனை களுக்குள்ளாகி இருக்கும் வேளையில் நூறு வருடங் களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நூல், இந்தியா என்ற புராதன தேசத்தின் புவியியல் பிரிவுகளையும், பண்பாட்டு, இயற்கை வளங்களையும் ஆய்வுபூர்வ மாக எடுத்துரைக்கிறது. 56 தேசங்களின் புராணப் பின்னணியைச் சொல்லி அதன் பிரத்யேகமான தாவரங்கள், பறவை, விலங்குகள், சீதோஷ்ணம் வரை சிறப்பான தகவல்களைத் தருவது இந்நூலின் கூடுதல் சிறப்பு. நூறு வருடங்களுக்கு முன் தமிழ் உரைநடை எப்படி இருந்தது என்பதில் ஆர்வ முள்ளவர்களுக்கும் இப்புத்தகம் பல வெளிச்சங் களைத் தரக்கூடியது.

இந்நூலின் பிரதியை பாதுகாத்து வைத்திருந்து இதன் மறுமதிப்பை வெளியிட உதவிய 'சேக்கிழார் அடிப்பொடி' முனைவர் டி.என். ராமச்சந்திரன் அவர்களுக்கு எமது நன்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்

முதல் பாகம்

P.V. ஜகதீசய்யர்

சந்தியா பதிப்பகம்
பிளாட் ஏ - நியூடெக் வைபவ் பிளாட்ஸ்,
77, (பழைய எண் 57), 53-வது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
தொலைபேசி : 2489 6979 / 55855704 / 31045211

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

PURANIC INDIA
OR
THE OLD 56 KINGDOMS
(Ist Part)
by **P.V. JAGADEESA IYER**

First published in 1918
P.R. Rama Iyer & Co.

First edition under Sandhya Publication 2004

Size of Book	:	Demy
Number of copies	:	1000
Paper used for text	:	16.4 white print
Printing type	:	11 pts.
No. of pages	:	143

Printed by
Chennai Micro Print
Chennai - 600 029.

Published by
Sandhya Publications
Flat A - Nutech Vaibhav Flats,
77 (Old No. 57), 53rd Street,
Ashok Nagar, Chennai - 600 083.
Phone : 24896979 / 55855704
Mobile : 31045211

Price : Rs. 60/-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னுரை

நமது ஆரியர்கள் அனுஷ்டித்து வரும் வ்ரதங்களின் லக்ஷணங்களை விவரிக்கக் கூடியதாய் ''இந்து புண்யகதை'' என்னும் ஒரு சிறிய நூலை யான் சில மாதங்களுக்கு முன் இயற்றிய பிறகு அவைகளின் விசேஷங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் தருணத்தில் தஞ்சாவூர் அரண்மனை லைப்ரெரியிலிருக்கும் சில சாஸ்திரங்களைக் கண்ணுற்று வருகையில் பாலகாப்ய மஹரிஷியினால் செய்யப்பட்ட கஜ சாஸ்திரமே நமது பூர்வ இந்தியாவின் பாக்கியமென்று விளங்கிற்று. ஏனெனில் அந்நூலில் குரு, சூரஸேனம், அங்கம், வங்கம் முதலான அனேக தேசங்களின் பெயரும், அவைகளின் நீர்நிலவளமும், எல்லையிலடங்கிய மலைநதிகளும், மற்றும் சில சரித்திரங்களும் வெகுஅழகாய் வரையப்பட்டிருந்தன. இந்தியாவில் பூர்வநிலைமையிலிருந்த 56 தேசங்களின் விவரங்களைப் பற்றி ஒரு நூலை இயற்ற வேணுமென்று கருதிய எனக்கு அந்நூலே என் விருப்பத்தை தூண்டிவிட்டது.

ஆகையால் அது முதற்கொண்டே ''புராதன இந்தியா'' என்னும் இந்த நூலை எழுதத் துணிந்தபொழுது எனது நண்பரில் ஒருவராயும் ஸம்ஸ்கிருத பாஷையில் பல நூல்களைப் படித்துச் சிறந்த தேர்ச்சியை யடைந்த பண்டிட் வீ.விஜயராகவாசாரியாரின் பெரிய உதவியைப் பெற்று பலவிடங்களில் அனேக விதமாய்க் குறிக்கப்பட்ட விஷயங்களை நன்றாய் சோதித்து முன்புள்ள ஐம்பத்தாறு தேசங்களின் நிலைமையை இந்நூலில் விவரித்திருக்கிறேன்.

இந்நூலை இயற்றியதில் பண்டிட் வீ.விஜயராகவாசாரியரிட மிருந்து அடைந்த பொருளாராய்ச்சி உதவியையும், சென்னை சிலாசாஸன இலாகா (Epigraphical Department) ஸூப்பிரன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

டென்டெண்டு ராவ்ஸாஹிப் H. கிருஷ்ண சாஸ்திரியாரவர்களிடமிருந்து முகவுரை ரூபமாய் கிடைத்த உதவியையும் யான் எக்காலத்திலும் மறக்க மாட்டேன் என்பது எனது கருத்தாகும்.

ஆகையால் வெகு ப்ரயாஸைப்பட்டும் கிடைக்காத சில தேச நிர்ணய விஷயமாய் இந்நூலில் சொல்லப்பட்டவைகளில் ஏதேனும் குற்றமிருந்த போதிலும் கண்ணுற்றோர் அதை தெரிவிப்பார்களாகில் அடுத்த ப்ரசுரத்தில் வெகு அன்புடன் அதை வெளியிடுவதாயும் யான் நிச்சயித்திருக்கிறேன்.

P.V. ஜகதீசய்யர்

(1918ம் ஆண்டு வெளியிடப்பட்ட வி.ஆர். ராம அய்யர் அண்டு கம்பெனி பதிப்பில் ஆசிரியரின் முன்னுரை)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதல்பாக விஷய ஸூசிகை

பூர்வ பீடிகை

இந்தியாவின் எல்லைகள், யுகங்கள், ஐம்பத்தாறு தேசங்களின் பெயர் உபதேசங்கள் - ஸப்தகுல பர்வதங்கள் - ப்ரம்மாவர்த்தம், ஆர்யாவர்த்தம், தக்ஷிணாபதம் இவைகளின் விவரம் - ஹிமயமலையின் வ்ருத்தாந்தம், அதிலுள்ள காடுகள், அளகா நகரம், மானஸஸரோவரம் அதிலுள்ள ஹம்ஸ பக்ஷியின் விசேஷம் - அச்சோதம் - அதிலுள்ள யானையின் பெருமை - ஸுப்ரம்மண்ய அவதாரஸ்தலம் - விந்திய மலையின் கர்வத்தை அகஸ்திய மஹரிஷி அடக்கியதின் காரணமும் அந்த மலைக்கு வடக்கிலுள்ள தேசங்களுக்கும் தெற்கிலுள்ள தேசங்களுக்கும் பன்னிரெண்டு வருஷங்களின் காலவித்யாஸம் ஏற்பட்ட காரணம், சர்மண்வதி நதியின் உற்பத்தியின் காரணம் - முக்யநதிகள்; த்ரியாமா, ரிஷிகுல்பா, க்ருதமாலா, தாம்ரபர்ணீ, காவேரி, க்ருஷ்ணவேணீ, குமாரி, கோதாவரி, பீமநதி, தாபினி, வேதஸ்மிருதி, ஸுரஸா - ஸூர்ய வெப்பமாரிய வெய்யிலின் பெருமை சந்தரகாந்தியாகிய நிலா விஷயம் - மழை விஷயம் - காற்றின் பெருமை - ஸப்தபுரி க்ஷேத்ரம், அயோத்யா, மதுரா, மாயா (ஹரித்வாரம்), காசி, காஞ்சி, அவந்தி, த்வாரகா விஷயம்.

அத்யாயம் 1. குருதேசம்

இந்த தேசத்திற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் - சந்த்ர வம்சத்து அரசர்களின் வம்சாவளி - யமுனை, நீலா இந்த நதிகளின் ஜலத்தின்குணம் - சில்பிகளின் வேலைத்திறமை - ஹஸ்தினாபுரம், கைலாஸபதி க்ஷேத்ரம், பரக்ராமரால் உண்டாக்கப்பட்ட ஸ்யமந்தபஞ்சகம் என்னும் ஐந்து மடுக்களின் விசேஷம் - இந்த தேசம் வடகுருதேசம் தென் குருதேசம் என்று இரண்டாக பிரிந்ததின் காரணம் - ஸ்தானேச்வர க்ஷேத்ரம் - இந்த்ரப்ரஸ்தம் - பாரதச்ரவண மண்டபம் விஷயம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 2. சூரஸேனதேசம்

இந்த தேசத்திற்கு பெயர் ஏற்பட்டதின் காரணம் - ஆநர்த்தம் என்னும் உபதேசம் - கோவர்த்தன பர்வதம், ப்ருந்தாவனம் - காளியன் மடுவு - பாண்டி வடஸ்தலம் - புஷ்கர தீர்த்தம் - மதுராபுரி - க்ருஷ்ண ஜயந்தீ மேளா உத்ஸவம் - வடமதுரை க்ருஷ்ணவ்ருத்தாந்தம் பலவித க்ருஷ்ண பிம்பங்களின் விவரம் - கோகுலம் எனப்படும் திரு வாய்ப்பாடி, க்ஷேத்ர மஹிமை.

அத்யாயம் 3. குந்திதேசம்

அச்வநந்தி ஒருகாலம் இந்த தேசத்தின் வழியாய்ச் சென்றது - சிபி சக்கரவர்த்தியின் வ்ருத்தாந்தம் - குந்திதேவியின் பிறப்பும் வளர்ப்பும் - ஒரு ஸமயம் இந்த தேசத்திற்கு உசீநரம் என்று பெயர் வழங்கியதின் காரணம் - குந்தியின் சிலை தஞ்சாவூர் ஜில்லா நல்லூர் கோயிலின் குளக்கரையில் இருப்பதின் காரணம்.

அத்யாயம் 4. குந்தலசேதம்

உலூதம் என்னும் உபதேசம் - கௌரீகிரி - ப்ருஹத் கடகமலை - கௌரிகிரிக்கு தென்ஹிமயம் என்று பெயர் ஏற்பட்டது - ஒஷதிபுர வ்ருத்தாந்தம் - பார்க்கவி நதியும் இதற்கு பெயர் ஏற்பட்டதின் காரணமும் - பாண்டவர்களைத் தேடச்சென்ற துர்யோதனனின் தூதர்கள் இவ்விடத்தில் களைப்பை நீக்கிக்கொண்டது - கௌரீபுரமே ஒஷதிபுரமெனப் பெயர் வழங்கப்பட்டது.

அத்யாயம் 5. விராடதேசம்

காலகிரியில் ப்ரம்மா தவம் செய்ததுபற்றி அதற்கு ப்ரம்மகிரி என்று பெயர் ஏற்பட்ட விவரம் - ஸத்யகிரி - வன்னிமரம் உண்டானதும் அதன் விசேஷமும் - இவ்விடத்தில் பாண்டவர்கள் அக்ஞாதவாஸத்தில் சிலகாலம் கழித்தது - உத்தரை கல்யாணம்.

அத்யாயம் 6. மத்ஸ்யதேசம்

இந்த தேசத்திற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் - குசல்யம் என்னும் உபசேதம் - கௌடராஷ்டரம் என்றும் பெயர் உண்டானது - துரந்தரமலை அதற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் - சதகும்பா நீலா, விபாசா நதி - பசுக்களின் மிகுதி - கௌசாம்பீநகரம் - பாண்டவர்களின் சரித்திரம் - ராடா நகரம் விசேஷ சிலப்ப முறைப்படி ஏற்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 7. த்ரிகர்த்ததேசம்

இதற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் - ஹரிகிரி என்னும் விஷ்ணுகிரி - ஐராவதீநதி சதத்ருநதி இவைகளின் ஜலத்தின்குணம் - ஐராவதி நதியின் பெயரின் காரணம் - த்ருஷ்டகேது சரித்திரம்.

அத்யாயம் 8. கேகயதேசம்

ஸ்வராஷ்தேசம் என்றும் பெயர் எற்பட்டது. அருணகிரி - விபாசாநதி ஜலத்தின்குணம் - கேகயராஜன் வ்ருத்தாந்தம் - கைகேயின் பிறப்பு வளர்ப்பு முதலியவைகள்.

அத்யாயம் 9. பாஹ்லீகதேசம்

சக்திஸங்கமதந்திரபுஸ்தகத்தில் இதின் குறிப்பு - மாஹிகம், சகிகம், தால்வி என்னும் உபதேசங்கள் - ஹிமய மலையின் பாதமலையாகிய ப்ரத்யந்தபர்வதம் - மதுமான். மலை - பனியின் மிகுதி - குதிரையின் மிகுதி விசேஷம் - ஸுசீலைகதை - அச்வத்த வ்ருக்ஷத்தின் பெருமை.

அத்யாயம் 10. கோஸலதேசம்

நைகப்ருஷ்டம் என்று சிலபாகத்திற்கு பெயர் - சித்ர கூடபர்வதம் - கபலகிரி - நாரதகிரி - நாதபர்வதம் ஸீதா குண்டம், சீதாஸரஸ் - அதற்கு ராமகங்கை வசிஷ்டகங்கை என்று பெயர்கள் கிடைத்ததின் காரணம் - தமஸாநதி - வால்மீகிநதி - அயோத்யாநகரம் அதற்கு ஸாகேதம் என்னும் பெயர் - ஸ்ரீராமன் வ்ருத்தாந்தம் - ஸூர்யகுலத் தரசர்களின் வம்சாவளி - ஹனுமான் ஸந்நிதியும் அவர் பெருமையும் - சிரஞ்ஜீவிகள் - கான்பூர்நகரம்.

அத்யாயம் 11. பாஞ்சாலதேசம்

காஞ்சநாக்ஷமலை - கங்காநதி - காஞ்சனாக்ஷிநதி - மாயா என்னும் ஹரித்வாரக்ஷேத்ரம் - ஹரிணீசிலாகற்பாறையின் அதிசயம் - கங்கோத் பத்திஸ்தலம் - ப்ரம்மகபாலம் - பதரிகாச்ரமம் - நைமிசாரண்ய வ்ருத்தாந்தமும் அதில் ரிஷிகள் வெளியிட்ட தர்மசாஸ்த்ரத்தில் அடங்கி இருப்பது முக்ய விஷயங்களாகிய மலிம்லுசாதி, தாயபாகம், ஸம்ஸ்காரம், சுத்திநிர்ணயம், ப்ராயச்சித்தம், க்ரஹகார்யம், தீர்த்தம், வரதம், கலை, வயவஹாரம், தடாகாதிவிதி, ப்ரதிஷ்டா, பரீக்ஷா, ஜோதிஷம், வாஸ்துவிதி, தீக்ஷா, ஆன்னிகம், க்ஷேத்ரம் - க்ஷமதா - நீசஸேவை - விச்வாமித்ரகண்ட க்ஷேத்ரம் - கேதாரக்ஷேத்ரம் - கண்வரிஷியின் ஆச்ரமம் - நாரதபர்வத மஹரிஷிகளின் வாஸம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 12. நிஷததேசம்

ஆநர்த்தம் என்னும் உபதேசம் - தேசத்தின்வளப்பம் - நாதகிரி - நிஷதபுரம் என்னும் மாவிந்தநகரம் - நளமஹாராஜன் சரித்திரம் - நாமக்கல் ஸ்தலவிசேஷம் - சனி பகவானுக்கு விசேஷ ஸ்தலங்கள்.

அத்யாயம் 13. நிஷாதசேம்

நரதத்வாரம், த்ரிபுரம இந்த ஸ்தலங்களின் விவரம் - கங்காளகிரியின் பெருமை - கங்காளமூர்த்தி விசேஷமாய் இருக்கு மிடங்கள் - திருவதிகை க்ஷேத்ரத்தின் பெருமை.

அத்யாயம் 14. சேதிசேதம்

விந்தியத்திற்கு வடக்கிலுள்ள மலைநாடு - க்ருதிராஜன் வ்ருத்தாந்தம் - இவனுடைய புத்திரனாகிய சிசுபாலன் ஸ்ரீக்ருஷ்ண பகவானுக்கு விரோதமாய் நடந்துவந்து அவரது ஸுதர்சனத்தினால் மாண்டவிவரம்.

அத்யாயம் 15. தசார்ணதேசம்

உத்தமம், ஆரவாடம் என்னும் இரண்டு உபதேசங்கள் - வாயுமலை - ஹனுமான் உற்பத்தி - ஹனுமானை மந்திரத்தினால் உபாஸிப்பதின் விசேஷம் - காண்டவனமும் அதன் பெருமையும் - ஜைனர்களின்மிகுதி - ஹேமலேகை கதையும் இவளது உபதேசத் தினால் தேவிபூஜை அந்த தேசத்தில் அதிகமாய்ப் பரிபாலிக்கப் பட்டதும்.

அத்யாயம் 16. விதர்ப்பதேசம்

இதற்கு போஜகடகம் என்றும் பெயர் - யானை, சமரிமான் இவைகளின் மிகுதி - மஹாமலை - கும்பிலாநதி - கோமந்தம் - குண்டின நகரம் தமயந்திகதை - அகஸ்திய மஹரிஷி லோபாமுத்ரை யை விவாஹம்செய்துகொண்டது.

அத்யாயம் 17. அவந்திதேசம்

குரங்குகளின் மிகுதி - கந்தவான்மலை- கலிஸிந்துநதி - விசாலாநகரம் - போஜராஜன் வ்ருத்தாந்தம் - காளிதாஸகவி - மஹாகாலக்ஷேத்ரம் - த்ரிபுரஸ்தலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா

பூர்வ பீடிகை

இருப்பிடம் : எல்லைகள்

ஜனங்கள் வாஸம் செய்யும் பூமியானது புராணங்களில் அனேக த்வீபங்களாய்[1] பிரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வித பூமியில் ஜம்பூத்வீபம்[2] ஒன்று. இந்த ஜம்பூத்வீபத்தின் ஒருபாகத்திற்கு பாரதவர்ஷம் என்று பெயர். இந்த பாரத வர்ஷத்தின் உட்பிரிவாகிய பரதகண்டத்தின்[3] முக்ய பாகம் இந்தியா[4] என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த இந்தியாவிற்கு வடக்கில் ஹிமயமலையும்[5], கிழக்கில் மஹோததி[6] என்னும் ஸமுத்ரமும், தெற்கில் ரத்னாகரம்[7] என்னும் ஸமுத்ரமும், மேற்கில் பாச்சாத்ய ஸமுத்ரமும்[8] எல்லை களாக இருந்து வருகின்றன.

யுகங்கள்

இந்த இந்தியாவில்தான் க்ருத யுகம், த்ரேதா யுகம், த்வாபர யுகம், கலி யுகம் என்னும் இந்நான்கு யுகங்களும், இந்த யுகங்களுக்கு ஏற்பட்ட வர்ணாச்ரம தர்மானுஷ்டானங்களும் நடந்து வருகின்றன. மேலும், இவ்விடத்தில்தான், ப்ரம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களென்னும் நான்குவிதமான ஜனங்களின் பிரிவும் ஏற்பட்டிருக்கிறது. இந்த பரதகண்டத்தில்தான் வேதங்களையும், அவைகளின் அங்கமான சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்பவைகளையும் குருவின் முகமாய் உணர்ந்து அவரவர்கள் புண்ய பாபத்திற்குத் தகுந்தபடி ஸத்கதி, துஷ்கதிகளை அடைகிறார்கள். இவ்விதமான ஏற்பாடுகளுக்குக் காரணமான இந்த யுகதர்மங்கள் மற்ற கண்டங்களில் இல்லாதபடியால் இந்த பரதபூமியை இதர தேசவாஸிகளும் அதிக பெருமையுடன் கொண்டாடுகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஐம்பத்தாறு தேசங்கள்[9]

ஆதிகாலத்தில் இந்த பரதகண்டமானது வைவஸ்வதமனு என்னும் ஸூர்யபுத்ரனாகிய மனுவின் காலம் முதல் பலதேசங்களாகப் பிரிக்கப்பட்டு இக்ஷ்வாகு, ஸகரன், பகீரதன், ராமன், யயாதி, நளன், நஹுஷன், விக்ரமாதித்யன், போஜன் முதலிய ப்ரஸித்தியுள்ள ராஜாக்களால் விசேஷமாய் ஆண்டுவரப்பட்டது. இந்த தேசங்களை செழுமையாய் ஆளுவதற்கு தனித்தனி ராஜாக்கள் ஏற்பட்டிருந்தாலும் ஸூர்ய வம்சத்தரசர்களும், சந்த்ர வம்சத்தரசர்களுமே சக்ரவர்த்தியாய் இருந்தார்கள். இவ்வித சக்ரவர்த்தியின் உதவியைக் கொண்டே மேற்கண்டபடி அனேக தேசத்தரசர்களும் தமது ராஜ்யத்தை நீதிமுறை தவறாமல் வெகுநாளாய் ஆண்டு வந்தார்கள். அவ்விதமாய் அவர்கள் அரசு புரிந்த தேசங்களின் பெயராவன:-

1. குருதேசம்
2. சூரஸேநதேசம்
3. குந்திதேசம்
4. குந்தலதேசம்
5. விராடதேசம்
6. மத்ஸ்யதேசம்
7. த்ரிகர்த்ததேசம்
8. கேகயதேசம்
9. பாஹ்லிகதேசம்
10. கோஸலதேசம்
11. பாஞ்சாலதேசம்
12. நிஷததேசம்
13. நிஷாததேசம்
14. சேதிதேசம்
15. தசார்ணதேசம்
16. விதர்ப்புதேசம்
17. அவந்திதேசம்
18. மாளவதேசம்
19. கொங்கணதேசம்
20. கூர்ஜரதேசம்
21. ஆபீரதேசம்
22. ஸால்வதேசம்
23. ஸிந்துதேசம்
24. ஸௌவீரதேசம்
25. பாரஸீகதேசம்
26. வநாயுதேசம்
27. பர்பரதேசம்
28. கிராததேசம்
29. காந்தார தேசம்
30. மத்ரதேசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

31. காச்மீரதேசம்
32. காம்போஜதேசம்
33. நேபாளதேசம்
34. ஆரட்டதேசம்
35. விதேஹதேசம்
36. பார்வததேசம்
37. சீநதேசம்
38. காமரூப தேசம்
39. ப்ராக்ஜோதிஷதேசம்
40. ஸிம்ம தேசம்
41. உத்கலதேசம்
42. வங்கதேசம்
43. அங்கதேசம்
44. மகததேசம்
45. ஹேஹயதேசம்
46. களிங்கதேசம்
47. ஆந்த்ரதேசம்
48. யவனதேசம்
49. மஹாராஷ்டிர தேசம்
50. குளிந்த தேசம்
51. த்ராவிட தேசம்
52. சோளதேசம்
53. ஸிம்மள தேசம்
54. பாண்டியதேசம்
55. கேரள தேசம்
56. கர்ணாடக தேசம்.

இவ்வித ஐம்பத்தாறு தேசங்களின் இருப்பிடத்தையும், நதி, க்ஷேத்திரம், மலை முதலியவைகளின் ஸ்வரூபம் முதலியவைகளையும் பின் விவரிக்கப்படும் அத்யாயங்களில் காணலாம்.

மலை. ஸப்தகுல பர்வதங்கள்

இந்த இந்தியாவில் அங்கங்கு தேசங்களில் அனேக மலைகள் இருந்தபோதிலும், மஹேந்தர பர்வதம்[10], மலயபர்வதம்[11], ஸஹ்ய பர்வதம்[12], சுக்தி மான்பர்வதம்[13], ரிக்ஷபர்வதம்[14], விந்திய பர்வதம்[15], பாரியாத்ரபர்வதம்[16] என்னும் ஸப்தபர்வதங்களே குலபர்வதங்களாக விஷ்ணுபுராணம், சைவபுராணம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதமான குலபர்வதங்கள் தவிர, ஹிமயம், த்ரிகூடம், சித்ரகூடம்[17], வேங்கடகிரி, கந்தமாதனம் முதலிய இதர ப்ரஸித்திபெற்ற மலைகளும் இருந்து வருகின்றன. இவ்வித மலைகளில் அனேக தேவாலயங்களும், ரத்னங்களை உண்டு பண்ணக் கூடிய நீர்க்கனிகளும், மஹான்கள் வஸிக்கக்கூடிய குகைகளும், நீரோடை, நீர்ச்சுனை, மலையருவி முதலிய ஜல ஸௌகர்யமும், மான்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குதிரை, யானை, பசு, பக்ஷிகள் முதலியவைகளுக்கு ஜீவாதாரமான புல்முதலிய உணவுப்பொருள்களும் எக்காலத்திலும் நிறைந்ததாகவே காணப்பட்டு வருகின்றன.

ப்ரம்மாவர்த்தம், ஆர்யாவர்த்தம், தக்ஷிணாபதம்

இந்த இந்தியாவின் வடக்கு திக்கில் இருக்கும் இமயமலையின் நடுவிலும், தென்சார்பில் சில தேசங்களும், மற்றும் சில நதிகளும் பெரிய அரண்யங்களும் இருக்கின்றன. இதுபோலவே இந்த மலைகளுக்குத் தெற்கே வெகு தூரத்தில் விந்த்யம் என்னும் மலையும், அதற்குத் தென்மேற்கில் த்ரிகூடபர்வதமும், தென்கிழக்கில் சித்ர கூடப் பர்வதமும் நிலைபெற்று வருகின்றன. இந்த விந்த்யபர்வதத் திற்கும் இமயமலைக்கும் நடுவில் நான்கு திக்குகளிலும் பரவிய தேசங்கள் முப்பத்தெட்டேயாகும். இவைகளில் பூமியின் வடமேற்கு பாகத்திலிருக்கும், காச்மீரம், மத்ரம், காந்தாரம், பர்பரம், வநாயு, ஸிந்து, ஸௌவீரம், மாளவம், கூர்ஜரம், அவந்தி, தசார்ணம், விதர்ப்பம், ஆபீரம், ஸால்வம், த்ரிகர்த்தம், கேகயம், விராடம் என்னும் இந்த பதினேழு தேசங்கள் அடங்கிய பூமிக்கு ப்ரம்மா வர்த்தம் என்று பெயர். இந்த பூமிக்குக் கிழக்கில் பாஹ்லிகம், குரு, சூரஸேனம், குந்தலம், மத்ஸ்யம், குந்தி, நிஷதம், சேதி, நிஷாதம், கோஸலம், பாஞ்சாலம், நேபாளம், ஆரட்டம், பார்வதம், ப்ராக்ஜோதிஷம், காமரூபம், அங்கம், விதேஹம், வங்கம், மத்ரம், ஹேஹயம் என்னும் இந்த இருபத்தொன்று தேசங்கள் அடங்கிய பூமிக்கு ஆர்யாவர்த்தம் என்று பெயர். விந்த்ய மலைக்குத் தென்கிழக்கிலும் தெற்கிலும் உள்ள உத்கலம், களிங்கம், யவனம், கொங்கணம், மஹாராஷ்டிரம், குளிந்தம், ஆந்த்ரம், கர்ணாடகம், த்ராவிடம், சோளம், பாண்டியம், கேரளம் என்னும் இந்த பன்னிரண்டு தேசங்கள் அடங்கிய பூமிக்கு தக்ஷிணாபதம் என்று பெயர். இவ்விதமாய் விந்த்யமலைக்கு வடக்கில் ப்ரம்மாவர்த்தம் என்றும் ஆர்யாவர்த்தம் என்றும் தெற்கில் தக்ஷிணாபதம் என்றும் பூகண்டங்களாகப் பிரிக்கப்பட்டதாக ஏற்படுகிறது.

இவ்விதமாய் முன்சொன்ன ப்ரம்மாவர்த்தம், ஆர்யா வர்த்தம் என்று இருபிரிவாகப் பிரிக்கப்பட்ட தேசம் முழுமைக்கும் புண்யபூமி என்றே ஒரே பொதுப் பெயரும் வழங்கி வரப்படுகிறது. அதாவது ப்ரம்மாவர்த்தம், ஆர்யாவர்த்தம் என்று இவ்விதம் இரண்டு பிரிவுகளுக்குள்ளடங்கிய முப்பத்தெட்டு தேசங்களை அடக்கிக் கொண்டு மேற்கில் பாரியாத்ரமலை, அபராந்தமலை இவைகளாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாரஸீக தேசத்திலிருக்கும் மஹாமலையினாலும், வடக்கில் ஹிமய மலையின் வடசார்பிலிருக்கும் மலைகளினாலும் தொடர் மலை களினாலும், கிழக்கில் இமயமலையிலிருந்து உண்டாகி, தெற்கு முகமாய் பராக்ஜோதிஷம், காமரூபம் என்னும் தேசங்களின் வழியாய் ஓடிவருகிற ப்ரம்மபுத்ரா நதியினாலும் எல்லையை அடைந்ததா யிருக்கும் இந்த பூமிக்குத்தான் புண்யபூமி என்று பெயர். ஏனெனில், இமயந் தொடங்கி விந்த்யமலை வரையில் கங்கை, யமுனை, ஸரயூ, ஸிந்து, விபாசா, சதத்ரு முதலிய புண்ய நதிகள் ஓடுவதினாலும், ஹ்ருஷீகேசம், கேதாரம், நைமிசாரண்யம், ஸாளக்கிராமம், மஹ காளம், அயோத்யை, மதுரை, காசி, ப்ரயாகை, ப்ரம்மகபாலம், அமிர்தஸரஸ், கனகலம், மாயாபுரி என்னும் ஹரித்வாரம் த்வாரகை, அவந்தி முதலிய புண்ய ஸ்தலங்களும் இருப்பதினாலும் மற்றுமுள்ள அனேகவித வளம், செழிப்பு பல குணமுள்ள இயற்கை இவைகள் அமைந்திருப்பதினாலும் இதற்கே புண்யபூமி என்று மனுஸ்ம்ருதி, விஷ்ணு புராணம், பாகவதம், அமரஸிம்மன் செய்த நாமலிங்கானு சாஸனம் என்னும் அமரகோசம், மற்றுமுள்ள புராணங்கள் இவைகளால் ஏற்படுகிறது. இவ்விதமாய் புண்ய பூமியின் அளவை காட்டுவதுபோல் தோன்றுகிற விந்த்யமலைக்குத் தெற்கே, பஞ்சவடி முதல் தென்கோடியில் உள்ள பொதியமலை என்னும் மலயபர்வதம் வரையிலும் மஹோததி என்னும் கிழக்குக் கடல் முதற்கொண்டு கடல் ஓரத்தில் விளங்கும் தேசமும், இதுபோலவே மேற்குக் கடலோரத்தில் விளங்கும் சில தேசங்களும் கோகர்ணம், ப்ரபாஸம் முதலிய தீர்த்தங்கள் இருப்பிடமும் சேர்ந்து இதின் நடுவில் இருக்கும் பூமிக்குத்தான், தக்ஷிணாபதம் என்று பெயர்.

ஹிமய மலையின் விருத்தாந்தம்

இவ்விதம் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்ட இந்த இந்தியாவின் வடக்கில் காச்மீரம், பார்வதம் என்னும் இந்த இரண்டு தேசங்களை யும் தனது தொடர்மலைக் குன்றுகளாலும், கற்பாறையின் உள்கனி என்றும் பாஷாணாந்தர்த் தாரைகளாலும், பக்க ப்ரதேசங்களின் அணைவினாலும் ஆரட்டம், நேபாளம் முதலிய தாழ்வரைத் தேசங்களையும் ஆக்ரமித்து (கவர்ந்து கொண்டு) தனக்குள் அடக்கிக் கொண்டு விளங்கும் ஹிமயமலையானது வெகு உயரமுடையதாய் எப்பொழுதும் பனியினால் மூடப்பட்டு வெண்மை நிறமுடைய தாகவே விளங்குகிறது.

ஸம்ஸ்க்ருத பாஷையில் தேசம் என்பதற்கு தமிழில் நாடு என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வித நாடுகள் மலைநாடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றும், மலைச்சார்பு நாடு என்றும், உள்நாடு என்றும் மூன்று வகைப்படும். இந்த பரததேசத்தில் அனேகமாய் உள்நாடுகளே அதிகமாய் இருக்கின்றன. ஆகிலும், பார்வதம் என்னும் தேசம் ஹிமயமலையின் மேல் இருக்கும் மலைநாடு என்றும், காச்மீரம், நேபாளம், ஆரட்டம் என்னும் இந்த தேசங்களும் இமயமலைக்கு மலைச்சார்பு நாடுகள் என்றும் வழங்கப்படுகிறது. இதுபோலவே விந்த்ய மலையின் ஸமீபத்தில் வடக்கு, மேற்கு, தெற்கு இந்த மூன்று திக்குகளிலும் நிஷதம், அவந்தி, கூர்ஜரம், கொங்கணம் என்னும் இந்த நான்கு தேசங்கள் விந்த்யமலையின் மலைச்சார்புநாடுகள் என்றே வழங்கிவரப்படுகிறது. இதுபோலவே தக்ஷிணாபதமென்று, முன் சொன்ன பூமியிலும் சில இடங்களில் மலைச்சார்பு நாடுகளுமுண்டு.

இமயமலையின்[18] கிழக்கு பாகத்தில் தென்சார்பில் பார்வதம் என்று ஒரு மலைநாடு உண்டு. இந்த பார்வதம் என்னும் தேசமானது கிழக்குக்கோடி வரையிலும் பரவி, அது போலவே கொஞ்சம் மேற்கிலும் பரவி, மலையின் மேல் பாகங்களிலும், தாழ்வரை களிலும், அனேகவித குகைகளையும் கவர்ந்து கொண்டு ஒருவித வழக்கமுடைய ஜனங்களினால் வாஸம் செய்யப்பட்டு வருகிறது. இவர்களுக்கு உத்ஸவ ஸங்கேத ஜனங்கள்[19] என்று பெயர். இந்த ஜனங்கள் பெரும்பாலும் பனியினாலும் குளிர் மழையினாலும் வருத்தப்பட்டவர்களாயிருந்த போதிலும் மிகவும் தைர்யசாலியான படியால் அவ்வித குளிர் மழை முதலியவைகளின் பயத்தை சற்றேனும் கவனிக்காமல் மூங்கிலினால்[20] செய்யப்பட்ட வில்லு, பாணம், ஈட்டி, கைப்பாரை என்னும் சுக்காங்கல், கவுண்டுகல், தடி முதலிய மலைநாட்டிற்குரிய ஆயுதங்களை கையில் ஏந்திக்கொண்டு அங்கு மிங்கும் வேட்டையாடி பெரிய காடுகளில் பாய்ந்து அனேகவிதமான பன்றி முதலியவைகளைக் கொன்று அவைகளின் மாம்ஸங்களையே முக்ய ஆஹாரமாக உடையவர்களாய் இருக்கிறார்கள்.

காடுகள்

இமயமலையின் மலைநாடு என்று சொல்லப்பட்ட இந்த பார்வத தேசத்தின் மேற்கு முகட்டில் அனேக விதமான குங்கிலிய மரங்களும், பூர்ஜமரங்களும், மதியகம், இடூகம், என்னும் காட்டுமரங்களும், மருதமரங்களும் நிறைந்த பெரிய காடுகள் விசேஷமாய் வளர்ந்து ஆகாயத்தை அளாவியது போலவே காணப்படுகின்றன. இவ்விதக் காடுகளின் ஸமீபத்திலும், இதற்கு மேற்கே கங்காநதி உற்பத்தி ஸ்தானத்தின் வடக்கிலும் மேற்கிலும், மானஸம் என்னும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸரஸ்ஸுக்குத் தெற்கிலும் உள்ள தாழ்வரையின் பக்கங்களிலும் அநேகவிதமான பளிங்குக் கற்களும், வெண்மணல் போன்ற பனிக்கட்டித் துண்டுகளும், பொடிகளும் கண்களுக்கு எட்டியதூரம் வரையில் மிகவும் தூய் வெண்மையாகவே தோன்றும். இவ்விடங்களின் ஸமீபத்தில் தாழ்ந்தகணவாய்களும் தாழ்வரைகளும் அவைகளில் முளைத்து வ்ருத்தியடைந்த அனேகவித முட்செடி களும், ஓஷதிக் கொடிகளும், ஈச்சமரங்களும், நாணல் புதர்களும், விசேஷமாய் கண்களுக்கு அழகாகத் தோன்றும். மற்றும் சில விடங்களில் அதிக உயரமாய், தலையை நீட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றும் மலைக்குன்றின் சிகரங்களும், அவ்வித சிகரங் களில் முளைத்திருக்கும் காட்டு மரங்களின் தோற்றமும் அழகிய செடிகள் அம்மரங்களின்மேல் படர்ந்து காற்றினால் அசைந்து குளிர்ந்த நிழலையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த இமயமலையின் வடசார்பிலும் அதற்கு ஸமீபத்திலும் இவ்விதமான காடுகளின் நடுவில் சிலசில இடங்களில் பெரிய பாலைவனங்களும், முள் வனங்களும், கரடி, புலி, காட்டு யானை, குரங்கு, பெரிய பாம்பு என்னும் மலைப்பாம்பு, முதலிய கொடிய மிருகங்கள் வஸிக்கும் நெருக்கமான காடுகளும், அவைகளின் நடுவிலும் நான்கு பக்கங்களிலும் பூமியில் படிந்திருக்கும் பெரிய பாறைகளும், அப்பாறைகளின் பள்ளத்தாக்குகளில் மலையருவி அதிகமாய் வீழ்ந்து நிறைந்த உடனே அவைகளிலிருந்து ஓரத்தில் பெருகி சிறிய துளிகளாய் கீழே பள்ளத்தாக்குகளில் ஓடும் அருவி நீரும், அவ்வித நீரில் நகர்ந்துசெல்லும் மலை ஆமைகளும், ஜலநண்டு களும், தண்ணீர்ப் பாம்புகளும், கிளிஞ்சல் போன்ற பனிக்கட்டித் துண்டுகளும் அனேக இடங்களில் காணப் படும். மற்றொரு பக்கத்தில் வெண்மையான துப்பட்டியை போர்த்துக் கொண்டிருப்பதுபோல் விளங்கும் பனிக்கட்டிக் குன்றுகளே விசேஷ தோற்றத்துடன் காணப்படும்.

கைலாசம் இருக்குமிடம்

இந்த இமயமலையின் நடுபாகத்தில் வடகிழக்கு மூலையின் சார்பில் கைலாசம்[21] என்னும் மலை இருப்பதாக ஏற்படுகிறது. இந்த மலையில் ஸ்ரீ பரமசிவன் தனது ப்ரமதகணம் என்னும் பரிவாரங்களால் சூழப்பட்டவராய் வெள்ளிமயமான மண்படத்தில் பார்வதி தேவி யுடன் கூடியிருந்து அனேக தேவர், அஸுரர், கின்னரர், கிம்புருஷர், மஹரிஷிகள் முதலியவர்களால் ஸ்துதிக்கப்பட்டு, சிற்சில ஸமயங் களில் துஷ்ட அஸுரர்களை ஸம்ஹாரம் செய்து பக்தஜனங்களுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸகல ஐச்வர்யங்களையும் கொடுத்து உலகங்களை ரக்ஷித்துவந்தார் என்று சிவரஹஸ்யம், ஸ்கந்த புராணம் முதலியவைகளால் ஏற்படுகிறது.

அளகாபுரியின் மஹிமை

இவ்விதமான கைலாஸ பர்வதத்திற்கு கிழக்கில் அளகா என்னும் யக்ஷர்களின் நகரமிருந்ததாகவும், அந்த அளகாபுரியை நவநிதி களுக்கும்[22] அதிபதியாகிய குபேரன் மிகவும் சிறப்புடன் ஆண்டுவந்த தாகவும், அவனுடைய ப்ரதானநகரமாகிய அளகையின் உத்யா னவனங்களில் மல்லிகை, முல்லை, செண்பகம், தாமரை, முதலிய உத்தம புஷ்பங்கள் நிறைந்தும், இமயமலையின் வடசார்பிலிருந்து கங்காநதியின் பிரிவு ஒன்று கூடி இந்த அளகைக்கு மிகுந்த ஸுகத்தையும் அழகையும் உண்டு பண்ணியதாகவும், மற்றும் அனேக விதமான மேன்மையுடன் அளகாபுரி இருந்ததாகவும் மேகஸந்தேசம் முதலிய சில காவ்யங்களினாலும் புராணங்களினாலும் இந்த ஸ்தலத்திற்கு இவ்வித மேன்மை ஏற்படுகிறது.

மானஸஸரோவரம்

மானஸஸரஸ் என்னும் பெரிய ஆழ்ந்த மடுவு போன்ற நடவாபியானது இந்த இமயமலையின் உச்சியில் இருக்கிறது. இப்பொழுதும் இதற்கு மானஸஸரோவரம்[23] என்பதாகவே பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த பூலோகத்தில் இருக்கும் ஜலபக்ஷிகள் எல்லாவற்றிலும் ராஜஹம்ஸம்[24] என்னும் ஹம்ஸபக்ஷிகளே மிகவும் சிறந்தது. ஓர் பாத்திரத்தில் பாலையும் தண்ணீரையும் கலந்து ஊற்றிவைத்தால் இவ்வித ஹம்ஸபக்ஷிகள் என்னும் அன்னப் பறவைகள்தான் அந்தப் பாலை தண்ணீரிடமிருந்து வேறாகப் பிரித்து உண்ணக்கூடிய ஸாமர்த்தியத்தை ஈச்வரனால் கொடுக்கப்பட்டு அது போலவே இப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன.

இவ்விதமான ஹம்ஸங்களுக்கு இளமைப்பருவம் முதற் கொண்டே மிகவும் நிர்மலமான ஜலத்தையே குடிப்பதும், அதிலே மூழ்கி விளையாடுவதுமான இயல்புக் குணம் ஏற்பட்டிருப்பதால், இந்த மானஸ ஸரஸ் என்பது மிகவும் ஆழமாயும், மிகவும் விரை வாய்ப் பெய்யக்கூடிய மேகங்களின் மழைதாரையினாலும் கலங் காமல் முத்துபோல் மிகவும் நிர்மலமான ஜலத்தை எப்பொழுதும் குறையாதபடி அடைந்திருப்பதால் பூலோகத்தில் மழைகாலங்களில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி, தடாகம், நடைவாபி, முதலியவைகள் கலங்கிவிடுமாகையால் வர்ஷருதுவின் ஆரம்பத்தில் மேகங்கள் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் பொழுதே ஹம்ஸபக்ஷிகள் எல்லாம் ஒன்றுகூடி இந்த மானஸம் என்னும் அழகிய தடாகத்தில் சிலகாலம் ஸுகமாய் வாஸம் செய்து விட்டுப் பிறகு தமதிருப்பிடம் திரும்பி விடுவதாயும் ஏற்படுகிறது.

அச்சோதம் இருப்பிடம்

அச்சோதம்[25] என்று மற்றொரு ஸரஸ் கைலாஸத்தின் வடமேற்கில் ஒரு குன்றின் சார்பில் இருக்கிறது. மானஸரஸ், அச்சோதஸரஸ் என்னும் இவ்விரண்டு தடாகங்களே இமயமலையின் மேல்பாகத்தில் சிறந்தவைகளாகும். இந்த அச்சோத ஸரஸ் என்னும் தடாகத்தின் ஜலமும், மானஸத்தின் ஜலம்போலவே அதிக நிர்மலமாயும் ருசியாயும், சரீரத்திற்கு ஸுகத்தை உண்டுபண்ணக் கூடியதாயு மிருக்கும். இந்த அச்சோதம் என்னும் தடாகத்துக்குச் ஸமீபத்தில் அழகிய புஷ்பச் செடிகளும், கொடிகளும், புதர்களும், அணில், கிளி, முதலியவைகளும் உலாவுகின்றன. இவ்வித வளப்பமுள்ள இமயமலையின் மேற்குபாகத்தின் இருபக்கத்துச் சார்பிலும் இருக்கும் பெரிய காடுகளில் மதத்தினால் மதித்த சில யானைகள் சில ஸமயங்களில் அதிக மதக்கொழுப்பினால் உடம்பில் ஓர்விதமான தாபம் உண்டாகிறபடியால் அதை அடக்கிக்கொள்ளும் பொருட்டு நல்ல நிழல், ஜலம் இவைகள் நிறைந்த இடத்தில் சற்றுநேரம் தங்கியிருந்து, தனது தும்பிக்கையை மரத்தின் மேல் ஓர்க்கிளையில் தூக்கி வைத்து, மூக்கு போன்ற இரண்டு த்வாரங்களையும் நன்றாய் திறந்து வைத்துக்கொண்டு முகத்திலும், உடம்பிலும், நல்ல மலையருவியுடன் கூடிய குளிர்ந்த காற்று எதிர்முகமாய் வீசும்படி சற்றுநேரம் நின்று கொண்டிருக்கும். இன்னும் சில யானைகள் முப்பதாவது வயது வந்தவுடன் காமத்தை அடைந்து ஆஹாரத்தில்கூட விருப்பத்தை மறந்து பெண் யானைகள்[26] ஒளிந்து வஸிக்கும் இடத்தை நோக்கிச் செல்வதுமுண்டு.

ஸுப்ரம்மண்ய அவதாரம்

இவ்வித அச்சோத ஸரஸ்ஸுக்கு ஸமீபத்தில்தான் ஸுப்ரம்மண்ய அவதார ஸ்தலம் இருக்கிறதாகத் தெரிய வருகிறது. முன்பு தாரகன் என்னும் ஒரு பெரிய அஸுரராஜன், ஸம்பூர்ண அஸுராம்சத்துடன் பிறந்தமையால் இயற்கையாய் அமைந்த அதிகபலத்தினாலும், வரம் முதலியவைகளால் ஏற்பட்ட பலத்தினாலும் மற்ற அஸுரர்களின் ஸஹாயத்தைக் கொண்டும் தேவர்களுடன் யுத்தம் செய்து பல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தடவைகளில் அவர்களைத் தோல்வியடையச் செய்தபடியால், இவ்விதம் வருத்தமுற்ற தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி தங்கள் குலகுருவாகிய ப்ருஹஸ்பதியின் ஸந்நிதானத்தில் தமக்கு ஏற்பட்ட அபஜயத்தை சொல்லிக் கதறி முறையிடும்போது, அந்த ப்ருஹஸ் பதியானவர், நமது தேவஸேனையை நன்றாய் (யுத்த முறைப்படி ஒழுங்காய்) செலுத்தக்கூடிய ஒரு சேனைத் தலைவன் மாத்திரம் கிடைப்பானாகில், வெகுஸுலபமாய் அந்த தாரகாஸுரனைக் கொன்றுவிடலாம் என்று சொன்னார். இவ்வார்த்தைகளை எல்லாம் நன்றாய் செவியுற்ற தேவேந்த்ரனும் ஆலோசித்துப் பார்த்து, இக்காலத்தில் தமது தேவஸேனையை அவ்வளவு திறமையுடன் நடத்தவல்லவன் ஒருவருமில்லை. இனி ஒரு அபூர்வமான வ்யக்தி யைத்தான் ஏற்படுத்த வேணும் என்று ஒருவாறு தேறுதலையடைந்து மன்மதனை வரவழைத்து, இமயமலையின் ஒரு பாகத்தில், ஸ்ரீ பரமசிவனார் இப்போது கல்யாணத்தில் ஆசை வைக்காமலே ஏகாந்தமாய் தவம்புரிந்து வருகிறார். அவர் ஸமீபத்திலேயே சிலவித உபசரணைகள் செய்து வருகிற பார்வதீ என்னும் ஓர் தேவியை அவர் விவாஹம் செய்து கொள்ளும்படிசெய்ய வேண்டும் என்று இவ்வாறு மன்மதனை ப்ரார்த்திக்கவே, அந்த மன்மதனும் தனது தேவியாகிய ரதி என்பவளின் கையைப் பிடித்து அணைத்துக்கொண்டு, கரும்பு வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு வெகு உல்லாஸ நடையுடன் புறப்பட்டு தன் தோழனாகிய வஸந்த ருதுவின் மஹிமையை இமயமலைக்காட்டில் தோன்றும்படி ஏவி விடவே, அந்த பரமசிவன் வஸிக்கும் காட்டில் அனேகவித புஷ்பங்கள் உண்டாகி அவைகளின் மகரந்தம் என்னும் மதுவை வண்டுகள் பானம் செய்துவிட்டு காந்தாரம்[27] என்னும் பாட்டை அதிக இனிமையாகப் பாடிக் கொண்டும், மற்றொரு பக்கத்தில் குயில் கூவவும், மற்றுமுள்ள அனேகவித காமோத் தீபகமான விஷயங்கள் உண்டாயிருக்கும் ஸமயத்தில், பரமேச்வரருடைய மனதுக்கு தேவகார்யார்த்தமாய் ஓர்விதமான விஷய விருப்பம் உண்டாகும்படி நேரிட்டது.தாம் தவம் செய்துகொண்டு வருகையில் இவ்வித விரோதம் நேரிடுவதற்கு என்ன காரணம் என்று சற்று யோசித்துப் பார்க்கும் தருணத்தில், இதற்குக் காரணம் மன்மதனே என்று தோற்றிய படியால், அவன்மேல் மிகவும் கோபித்து தனது நெற்றியிலிருக்கும் கண்ணால் அந்த மன்மதனைப் பார்க்கும்போது, அவன் சாம்பலாகி உருவம் மாறி உடம்பு வெதிர்வெதிர்த்து ஆகாயத்தில் துள்ளிக் கிளம்பி, அங்க தேசத்தில் சரீரத்தை விட்டான். அது முதற்கொண்டு அந்த தேசத்திற்கு அங்கதேசம்[28] என்று பெயர் உண்டாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிறகு மன்மதனால் விருப்பத்தையடைந்த பரமேச்வரன் தனது ஸமீபத்திலேயே வெகுநாளாய்த் தவம் புரிந்து வரும் பார்வதீ தேவியின் கோரிக்கை நிறைவேறும் பொருட்டும், தேவகார்யமும், முக்யமாய் நிறைவேறும்பொருட்டும், ஸப்தரிஷிகளையும்[29], பக்கத்தில் வைத்துக்கொண்டு பார்வதீ தேவியை விவாஹம் செய்துகொண்டு, அவளுடன் ரமித்து வருகையில், அவருடைய ஆக்ஞையினால், அவர் வீர்யத்தை அக்னி தேவன் சற்றுநேரம் வஹித்து அதன் வேகத்தை பொறுக்க முடியாமல் கங்காநதியில் தள்ளிவிட, அந்த கங்கா நதியும் ஹிமயமலையில் அந்த அச்சோதம் என்னும் பொய்கைக்கு ஸமீபத்தில் உள்ள ஒரு நாணல் காட்டில் ஒதுக்கி விட்டது. அப்படி அவ்விடத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு தேஜஸ் ஆனது அந்த நாணல் காட்டிலேயே மிகவும் நல்ல ஒளிவீசும் ஆறுமுகங்களையுடைய ஸுப்ரம்மண்யராக ஆவிர்ப்பவிக்கவே, அப்போது தேவர்கள் அச்வினீ தேவிகளைக்கொண்டு அந்தக் குழந் தையை வளர்த்து தேவலோகத்திற்கு அழைத்துக்கொண்டு போய் ப்ருஹஸ்பதி, பரமசிவன் இவர்கள் மூலமாய் ஸகல தனுர் வித்தையை யும் கற்பித்து தங்களுடைய சேனைக்கு அவ்வித ஸுப்ரம்மண்யரை அதிபதியாக்கி, அஸுரர்களுடன் மறுபடியும் போர் விளைத்து இவரால் தாரகாஸுரனைக் கொன்று ஹிதத்தையும் தர்ம மார்க்கங் களையும் நிலைநாட்டினார்கள் என்றும் பூர்வசரித்திரம் ஏற்படுகிறது. இந்த இடத்திலேயே பரமசிவனுக்குக் கைலாஸம் இருப்பதுபோல் ஸுப்ரமண்யருக்கும் வாஸஸ்தலமாகிய கோயில் இருந்து வருவதாயும் தெரியவருகிறது.

இவ்வித இடங்களுக்கும் மேற்கு பாகத்தில் இமயமலையின் வடக்கு சார்பிலும், தெற்கு சார்பிலும், முள்ளம்பன்றி, காட்டுப்பன்றி, யானையின் உருவம் போன்ற யாளி என்றும் ஓர்வித ம்ருகம், சிங்கம், கரடி, புலி, சிவிங்கை முதலிய ம்ருகங்களும், பலவித பக்ஷிகளும் வஸிக்கும் பெரிய காடுகளும் உண்டு. சில ஸமயங்களில் இந்தக் காட்டில் ஸஞ்சரிக்கும் மலைப்பாம்பானது ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்தின் கிளையைத் தாவிப் பாயும்போது, அம்மரங்களின் கிளைகள் சில ஸமயத்தில் மளமளவென்று முறிந்துபோகும். இவ்வளவு பலம் பொருந்திய இந்த மலைப்பாம்புகள், வாயைத் திறந்தால் அதில் ஒரு பெரிய ஆடு நுழையக் கூடிய சந்தும் இருக்கும். இவ்வித மலைப் பாம்புகளும் காட்டு எருமைகளும் பெரிய நரிகளும், அங்குமிங்கும் வெகுவாய் உலாவிக் கொண்டிருக்கும். சாதகம் என்னும் பக்ஷிகள் பூமியில் தங்கியிருக்கும் நீரை உட்கொண்டால் அது அவைகளுக்கு வ்யாதியை உண்டு பண்ணுமாகையால், அவ்வித சாதகப்பக்ஷிகள் ஓரிடத்தில் இந்த இமயமலையின் தாழ்வரையின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கீழே வட்டமிட்டுக் கொண்டு மலையின்மேலே உலாவி ஸஞ்சரிக்கும் மேகங்களிலிருந்து எப்பொழுது ஜலபிந்துக்கள் விழப்போகிறதென்று எதிர்பார்த்துக்கொண்டும்,சில சாதகப்பக்ஷிகள் இந்த மலையின் சில பாகங்களில் எப்போதும் மழை பெய்கிறபடியால் அவ்விடத்தில் போய் அம்மேகங்களின் கீழ்த்தங்கி வாயைத்திறந்து கொண்டும் அதில் மழைத்துளி விழும்படி உலாவிக் கொண்டுமிருக்கும்.

இவ்வித தாழ்வரையின் ஸமீபத்தில் நாரை, நீர்க்கொக்கு முதலிய நீர்ப்பறவைகளும், தாமரை ஓடைகளும், மேடைகள் போன்ற கற்பாறைகளும் சில இடங்களில் காணப்படும். மேலும் இம் மலையின் குகைகளில் சிங்கம் புலி, கரடி முதலிய மாம்ஸ ஆஹாரத்தில் விருப்பமுள்ள ம்ருகங்கள் பலவித ம்ருகங்களைக் கொன்று நாளடைவில் அவைகளின் எலும்பை பலவிடங்களில் சிதறும்படி போட்டு விட்டபடியால், அவ்வித எலும்புகளும், குளம்புத் துண்டுகளும், கொல்லப்பட்ட யானைகளின் தந்தங்களும் மண்டை ஓடுகளும் சில இடங்களில் புலப்படும்.

இந்த இமயமலையின் மேல்பாகத்தில் உச்சிக் குன்றுகளின் குகையிலும், மண்டபங்களிலும், மண்டபம்போல் நுழையக்கூடிய கற்பாறைகளின் சந்துகளிலும் கண்களை மூடிக்கொண்டு, மௌனத் துடன், யோகம் செய்து வருகிற சில யோகிகளும் இருந்து வருவதாகத் தெரியவருகிறது. இந்த மலையின் அடிவாரத்தில் சில இடங்களில் நீலமான கற்பாறைகள் படிந்த பூமியும் உண்டு. இவ்வித ஸ்தலங்களின் ஸமீபத்தில் தங்கம்,[30] கோமேதகம், பச்சைக்கல், முதலிய சில ரத்னங்கள் உண்டாகக்கூடியக் கனிகளும்[31] தோன்றி வருகின்றன. இந்த மலையின் தாழ்வரைகளிலும் காடுகளிலும் வளர்ந்திருக்கும் மரங் களின்மீது ஓர்விதமான ஓஷதிக்கொடி படர்ந்திருக்கும். அவ்விதக் கொடிகள் இரவு காலத்தில் மின்னல் கொடிபோல் பளபளவென்று ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். ஹ்ருஷீகேசம், அமிர்தஸரஸ்ஸு, கங்கோற்பத்தி, கனகலம், க்ரௌஞ்ச பர்வதம், ஸரஸ்வதிநதி உற்பத்தி ஸ்தலம், இவைகள் இந்த இமயமலையின் தென்சார்பிலேயே நிலை பெற்றிருக்கின்றன. அச்சோதம், மானஸம், கைலாஸம், அளகை, பார்வததேசம் இவைகள் மலையின் மேல்பாகத்திலும் சார்பிலும் நின்றுவருகின்றன. இவ்வித ஸ்தலங்களில் பெரும்பாலும் முரட்டுத் தனமுள்ள காட்டு ஜனங்களும், வேடர் முதலிய சில ஜாதியருமே வஸித்து வருவதாகவும் அவர்கள் மழை, குளிர், பனி இவைகளால் வருத்தப்பட்டவர்களாகவே இருப்பதாயும் ஏற்படுகிறது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விந்த்யமலை

இவ்விதமான இம்யமலையின் தெற்கில் ப்ரம்மாவர்த்த பாகத்தில் இருக்கும் நீசைர்கிரி, தேவகிரி,[32] முதலிய சில மலைகளுக்கப்பால் தெற்கில் வெகுதூரத்தில் விந்த்யம் என்று ஒரு பெரிய பர்வதம் இருக்கிறது.

இந்த விந்த்யபர்வதமானது முன்பு ஒரு ஸமயத்தில் (ஸூர்ய காந்தி கொஞ்சமேனும் தெற்கு பாகத்தில் காணாதபடி) அவ்வளவு உயரமாய் கிளம்பிவிட்டபடியால், இந்த விந்த்ய பர்வதத்தின் வடமேற்கு சார்பிலே அஸ்தமன பர்வதமும், இம்மலையின் வடகிழக்கு பாகத்திலேயே உதய பர்வதமுமிருந்து வருகிறபடியால் தினந்தோறும் உதயமாகும் ஸூர்யனுடைய வெளிச்சமானது இந்த விந்த்ய மலைக்கு வடக்கில் ப்ரம்மாவர்த்தம் ஆர்யாவர்த்தம் என்னும் இதில் அடங்கிய தேசங்களிலேயே தோன்ற, அந்த தேசவாஸிகளுக்கு மாத்திரம் க்ரமமாய் பகலும் இரவும் உண்டாகி வந்தன. இப்படி இவர்களுக்குப் பன்னிரண்டு வருஷகாலம் நடைபெற்று வந்தது. இவ்விதமாய் விந்த்யத்தின் வட பார்ச்வத்தில் க்ரமப்படி உதயம் தோன்றும் காலையில் விந்த்யத்தின் தெற்கு பாகத்தில் வஸிப்பவர் களுக்கு கொஞ்சமேனும் ஸூர்ய வெளிச்சம் புலப்படாமல் விந்த்யபர்வதம் மறைத்துவிடவே அவர்களுக்கு விளை பொருள், மழை, தேஹ ஆரோக்யம் முதலியது குறைந்து வெளிச்சம் அடை யாமல் தட்டுத் தடுமாறி அனேகம்பேர் இந்தப் பன்னிரண்டு வருஷத் திற்குள் உயிரை இழந்தனர்கள். மற்றும் சிலர் யோகாப்பியாஸம் செய்யத்தொடங்கினர். அவர்களில் சிலர் உலகத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் வருத்தத்தைக் கண்டு மனமிரங்கி சில பெரிய மஹான் களுடன் ஒன்றுசேர்ந்து யோசித்து முடிவாய் ஒருவாறு தேறுதலை அடைந்து, பாண்டிய தேசத்திற்குத் தெற்கில் மலயபர்வதத்தின் ஸமீபத்தில் தன் ஆச்ரமத்தில் லோபாமுத்ராதேவியுடன்[33] வீற்றிருக் கும் ஸ்ரீ அகஸ்திய மஹரிஷியினிடத்தில் விந்த்யபர்வதம் கிளம்பி தென் தேசங்களுக்கு ஸூர்ய வெளிச்சத்தை விடாமல் செய்து வந்த ஸங்கதியையும் அதனால் உண்டாகும் ஜன நஷ்டத்தையும் விபரமாய் எடுத்துக் கூறினார்கள்.

விந்த்ய மலையை அடக்கியது

அகஸ்திய மஹரிஷியும், இவ்வாறு அவர்கள் மொழிந்ததைக் கேட்டு ஜீவகாருண்யம் மேலிட்டவராய், உடனே தெற்கு திக்கிலிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடக்கு நோக்கி வெகுவேகமாய் அனேக நதிகள், வனம், வனாந்தரம், தேசம் இவைகளை கடந்து இந்த விந்த்யபர்வதத்தின் ஸமீபத்தில் வரும்போது அவ்வளவு வேகமாய் தன்னிடம் திடீரென்று வந்திருக்கும் இந்த மஹரிஷியைக் கண்டு பயந்து விந்த்யபர்வதமானது குருபக்தியினால் அவரை நன்றாய் வணங்கி பணியும்போது ''நீ கொஞ்சகாலம் இப்படியே வணங்கியிருப்பாயாக'' என்று சொல்லி விட்டு மறுபடியும் தன்னிருப்பிடம் சென்றார். அது முதல் கொண்டு விந்த்யபர்வதத்திற்குத் தென் புரத்திலும் வழக்கப்படி ஸூர்யோதயம் ஏற்பட்டுவருகிறது. இவ்விதமாய் அகஸ்தியர் விந்த்யமலையை அடக்குவதற்கு முன் விந்தியத்தின் தென்பாகத்திற்கு பன்னிரண்டு வருஷம் குறைந்தும், விந்த்யத்திற்கு[35] வடக்கில் வஸிக்கும் ஜனங்களுக்கு பன்னிரண்டு வருஷம் அதிகமாயும் ஜோதிஷ சாஸ்திர முறைப்படி ஏற்பட்டுவிட்டதாய் வழங்கி வரப்படுகிறது என்று ஏற்படுகிறது.

பசுக்களின் வேண்டுகோள்

இந்த விந்த்யபர்வதத்தின் வடக்கில் ஓர் குன்றில் சர்மண்வதீ என்று ஒரு நதி உற்பத்தியாகி முதலில்மாளவதேசத்தில் நேர் வடக்கு முகமாய்ச் சென்று பிறகு கொஞ்சம் வடகிழக்காகவும் திரும்பி வில்லுபோல வளைந்து யமுனா நதிக்கு உபநதியாகச் செல்லுகிறது.

முன்பு ஒரு ஸமயத்தில் தேவர்களும் அஸுரர்களும் ஒன்று சேர்ந்து பாற்கடலைக் கடையும்போது, யாகாதிகளுக்கு நெய் பால் முதலிய ஹோமத்ரவ்யங்களை ஏராளமாய்க் கொடுக்கக்கூடிய மேன்மை பொருந்தியும், தேவர் முதலியவர்களாலும், பூஜிக்கத் தகுந்ததாயுமிருக்கிற - ஸுரபி - என்னும், காமதேனு என்னும் சொல்லப்படும் கபிலைப் பசு ஒன்று அந்தப் பாற்கடலிலிருந்து உண்டாயிற்று. பிறகு ஒரு ஸமயத்தில் மத்ஸ்யதேசத்தின் அரசனாயும் மிகவும் மேன்மை பொருந்தியவருமான ரந்திதேவன் என்பவருடைய தேசத்தின் காடுகளில் முன் சொல்லியபடி அந்தக் கபிலைப் பசுவின் மேன்மைபோல் மேன்மை பொருந்தியதாயும் கனகமயமான சரீரத்துடன் கண்களுக்கு மிக அழகாகப் புலப்படும் சில பசுக்களை அந்த தேசத்துப் பசுக்கள் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து, ஓ பசுக்களே! உங்களுக்கு இவ்விதமான அழகிய ரூபமும், கண்களை பறிக்கக்கூடிய காந்தியும் எவ்விதக் காரணத்தினால் உண்டாயிற்று என்று கேட்கவே, அந்தப் பசுக்கள் சொன்னதாவது - ''ஓ தேசப் பசுக்களே! நாங்கள் தேவப் பசுக்கள். வேதம் ஓதும் தர்ம சீலர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எங்களை சாஸ்த்ர முறைப்படி யாகம் செய்யும்போது யூபம் என்னும் கம்பத்தில் கட்டி வதைத்ததினால் எங்களுக்கு உண்டான புண்ணியத்தின் பலனாக நாங்கள் இவ்வித தேவப் பசுக்களாகவும் காந்தியை அடைந்தும் இருக்கிறோம்'' என்று இவ்வாறு கூறியதை அந்தப் பசுக்கள் கேட்டு வெகுவிரைவாய் தங்கள் அரசனாகிய ரந்தி தேவனிடத்தில் போய் அவன் யாகம் செய்யும் படியாகவும் அதில் தங்களையே யூபஸ்தம்பத்தில் கட்டி வேள்வி நடத்தும்படியாகவும் வேண்டிக்கொள்ள, அவ்வரசனும் அதற்கு இணங்கி யாகம் செய்யும்போது அந்தப் பசுக்களின் சர்மங்களிலிருந்து பெருகிய ரக்தம் எல்லாம் ஒன்று கூடிப்பெருகி, இந்த சரமண்வதீ நதியாக ஓடி சர்மவதி என்று காரணப் பெயருடன் கூடியதாய், விளங்கிவருகிறது. அவ்விதம் யாகம் செய்த அவ்வரசனும் அவ்வித பசுக்களுடன் புண்யலோகம் பெற்றான் என்று மஹாபாரதத்தினால் சர்மண்வதீ நதியின் வரலாறு ஏற்படுகிறது.

நதிகள்

இந்த விந்த்யபர்வதத்தின் நான்கு சார்பிலும் அநேக மலைகளும் நதிகளும் உண்டு. அவைகளில் த்ரிகூடம், ஆம்ரகூடம், தேவகிரி, நீசைர்க்கிரி முதலிய சிலபர்வதங்களும், ஸிந்துநதி, வேத்ரவதீ நர்மதை,[36] சிப்ராநதி, சர்மண்வதீ, கம்பீராநதி என்னும் இவைகளும் பார்வதீ, கலிஸிந்து, கலிபாலன் என்னும் சில சிற்றாறுகளும் ப்ரஸித்தமானவைகள். இவைகளில் நீசைர்க்கிரி என்பது ஓர் சிறு குன்று என்று பொருள். இந்த மலையானது விதிசாநகரத்திற்கு தெற்கில் ஒரு இடத்தில் இருக்கிறது. சிப்ராநதிக்கும் தசார்ண தேசத்தில்[37] ஓடும் தசார்ணநதிக்கும் மத்தியில் ஓடும் சிலநதிகளும் இந்த மலையிலிருந்தே பெருகியதாக ஏற்படுகிறது. நிர்விந்த்யா என்னும் மற்றொரு நதியும் இந்த விந்த்யபர்வதத்திலிருந்தே உற்பத்தியாகி முன்சொன்ன சர்மண்வதீநதிக்கு உபநதியாகச் செல்லுகிறது. இந்த சர்மண்வதீநதி உண்டாகும் இந்த விந்த்ய பர்வதத்தின் மற்றொரு குன்றின் சார்பிலிருந்தே சிப்ரா என்னும் நதி உண்டாகி அந்த சர்மண்வதீநதியுடனே சேர்ந்து ஓடுகிறது. கம்பீரா[38] என்னும் நதியும் இந்த விந்த்யபர்வதத்தின் வடக்குச் சார்பிலேயே உண்டாகி ஓடுகிறது. இவ்வித விந்த்யமலையின் தென்பாகத்தில் பெரிய கற்பாறைகளாலும் சிறு குன்றுகளினாலும் தாழ்வரைகளினாலும் மிகவும் மேடுபள்ளமாயிருக்கும் அடிவாரத்திலிருந்து நர்மதா நதி உண்டாகி மேற்குமுகமாய் ஆம்ரகூட பர்வதத்தின் சார்பிலும் பரவி பிறகு மேற்குக் கடலில் வீழ்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காடுகள்

இந்த விந்த்யமலையின் நான்கு சார்பிலும் பெரிய மரங்களால் சூழப்பட்ட காடுகளும் விசேஷமாய் உண்டு. அவ்விதக்காடுகளில் திந்துகம், இலுப்பை, கடம்பு, மகிழம், அசோகம், காட்டுவாழை, தேக்கு, வேம்பு, வேல், நாவல், செம்புளி, கொடுங்கு, மாவலிங்கை, அத்தி, மா, பூர்ஜம், அகில் முதலிய பெரிய மரங்களும், பிரம்பு, நாணல், மூங்கில், ஈச்சை முதலிய கொடி மரங்களும், பலவித செடி கொடிகளும் முட்செடிகளும், கொடிய காட்டு ம்ருகங்களும் நிறைந்து ஜனங்கள் கடந்து செல்வதற்கு அஸாத்யமான மேடுபள்ளங்கள் உயர்ந்த கற்பாறைகள் ஆழ்ந்த நீரோடைகளும், நீண்டு குறுகிய காட்டு வழிகளும், ஆழ்ந்த குழிகளும் குகைகளும், மலையருவிகளும் விசேஷமாய்க் காணப்பட்டு வருகின்றன. இந்த விந்த்யமலைக் காடுகளிலும் அநேகவித காட்டுஜாதியர்களும் வேடர் முதலியருமே பெரும்பாலும் பயமின்றி எப்போதும் உலாவி வருகிறார்கள். இவர்கள் அணில், கிளி, குருவி, முயல், மான், காட்டுப்பன்றி, காட்டு எருமை, காட்டுப்பசு, யானை, குதிரை முதலியவைகளைப் பிடிப்பதற்கு அனேகவித உபாயமுள்ள வலைகளையும் நூல் கயிற்றோட்டங்களையும் குழிகளையும் ஏற்படுத்திவருவார்கள்.

நதி – முக்யநதிகள்

முன்சொன்ன ஸப்தகுல பர்வதங்களில் ஒன்றாகிய மஹேந்த்ர மலையின் தாழ்வரையிலிருந்து த்ரியாமா,[39] ரிஷிகுல்யா, என்னும் இரண்டு நதிகளும், மலைய பர்வதத்திலிருந்து க்ருதமாலா, தாம்ரபர்ணீ என்னும் இவ்விரண்டு நதிகளும், ஸஹ்ய பர்வதத் திலிருந்து[40] காவேரி, கிருஷ்ணவேணீ[41] என்னும் இவ்விரண்டு நதி களும், சுக்திமான் பர்வதத்திலிருந்து குமாரி என்னும் நதியும், விந்த்ய பர்வதத்திலிருந்து கோதாவரீ, பீமநதி, தாபினி[42] என்னும் இம்மூன்று நதிகளும், பாரியாத்ர பர்வதத்திலிருந்து வேதஸ்மிருதி, ஸுரஸா[43] என்னும் நதிகளும் உண்டாகி அங்கங்கு பூமியைப் பரிசுத்தம் செய்து ஜனங்களுக்கு ஸுகத்தையும் செழுமையையும் உண்டாக்கி வருகிறபடியால் இப்படிப்பட்ட நதிகளில் ஜனங்கள் புண்யதீர்த்தங்கள் என்று புண்ய காலங்களிலும் மற்றுமுள்ள தினங்களிலும் பக்தியுடன் ஸ்நானம் முதலியது செய்துவருகிறார்கள்.

மேலும் இந்த பரததேசம் என்னும் இந்தியாவில் கங்கை, யமுனை, ஸிந்து முதலிய ஜீவநதிகளும் ஏற்பட்டு அவைகளால் ஜனங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பலவித ப்ரயோஜனத்தையும் தேஹஸௌக்கித்தையும் மனக் களிப்பையும் பெற்று வருகிறார்கள்.

விளைபொருள் விசேஷம் : வெயில்

ஸகல ஜனங்களுக்கும் கண் விழிப்பையும், ஆனந்தத்தையும், ஸௌக்கியத்தையும் ஆயுள் வ்ருத்தியையும் கொடுத்தும், இரவு காலத்தில் எங்கும் பரவிய அந்தகாரத்தை தனது ஒளியினால் நீக்கி, ம்ருகங்களையும், பக்ஷிகளையும் மற்றுமுள்ள ப்ராணி வர்க்கங் களையும், செடிகொடி மரங்களையும் வளரும்படியும் செய்து காப்பாற்றி வருபவன் ஸூர்யன் ஒருவனேயாகும். இவ்விதமாய் ஸகல நன்மைகளுக்கும் காரணமான ஸூர்யன் உலகத்தில் அடங்கிய ஸகலவித ஜீவராசிகளுக்கும் ஜலத்தைக் கொடுத்து விளைபொருளை மேன்மேலும் வளரும்படி செய்வதற்காகவே, பகவானுடைய ஆக்ஞையின்படி சில ஸமயங்களில் அதிக உஷ்ணமான கிரணங்களை பூமியில் விழச்செய்து, அதனால் கொதிப்பை அடைந்திருக்கும் பூமியிலிருந்து ஓர்வித வெப்பத்தைக்கிளப்பி, ஆகாயத்தில் மேக மண்டலத்துடன் சேரும்படி செய்து வருகிறான். இதனால்தான் முக்யமாய் மேகங்கள் மழையை அங்கங்கு சொரிய ஆரம்பம் செய்கின்றன. ஸகல பொருள்களுக்கும், ஸகல ஜீவராசிகளுக்கும் நல்ல நன்மையை உண்டு பண்ணும் பொருட்டு வேத ஸ்வரூபியாகிய ஸூர்யனுடைய (கிரணங்கள்) வெய்யில் பூமியில் ஒரு பங்கு வீழ்ந்தால், அதற்கு (அவ்வித வெய்யிலின் ஸாரத்திற்கு) ஆயிரம் பங்கு அதிகமான மழை உலகத்தில் உண்டாகும். சில ஸமயங்களில் வெய்யிலின் பங்குக்கு 750 பங்கு அதிகமான மழை நேரிடும். மற்றும் சில ஸமயங்களில், 500 பங்கு தான் அதிகமான மழை உண்டாகும். ஆகையால் விசேஷ மழை பெய்வதற்கு இவ்விதமாய் ஸூர்யன் காரணமாகிறபடியால் இவ்வித ஸூர்யனே கர்மஸாக்ஷி என்றும், ஜகச்சக்ஷு என்றும் ஸுகங்கொடுப்பவன் என்றும் வழங்கப்பட்டு ஸகல ஜனங்களாலும் தொழப்பட்டு வருகிறான்.

1. இவ்விதமான ஸூர்யனுடைய கிரணம் என்னும் வெய்யிலானது மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி என்னும்இந்த ஆறுமாஸ காலங்களில் பாண்டியம், சோளம், த்ராவிடம், ஆந்த்ரம், குளிந்தம், களிங்கம் என்னும் இந்த தேசங்களில் அதிக உஷ்ணமாகவே தோற்றும். இதிலும், களிங்கம், யவனம், உத்கலம் என்னும் இந்த தேசங்களில் கொஞ்சம் உஷ்ணக் குறைவாகவே தோன்றும்.

2. மஹாராஷ்டிரம், கொங்கணம், அவந்தி, மாளவம், ஸௌவீரம், ஸிந்து, விதர்ப்பம், ஆபீரம், வநாயு, பர்பரம், பாரஸீகம் என்னும் இந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசங்களில் மார்கழி, தை, மாசி, பங்குனி, சித்திரை இந்த மாஸங்களிலே வெய்யில்[44] உஷ்ணமாகத் தோன்றும்.

3.கேகயம், ஸால்வம், சூரஸேனம், மத்ஸயம், கோஸலம், நிஷாதம், மகதம் என்னும் இந்த தேசங்களில் ஐப்பசி கார்த்திகை, மார்கழி, தை இந்த மாஸங்களிலே வெய்யில்[45] அதிகமாகத் தோன்றும்.

4. வங்கம், ஸிம்மம், ப்ராக்ஜோதிஷம், சீனதேசம், நேபாளம், காம்போஜதேசம், கிராததேசம் என்னும் இந்த தேசங்களில் புரட்டாசி, ஐப்பசி மாதமும், மாசி, பங்குனி மாதமும் வெய்யிலைக் கொடுக்கும் மாஸங்களாகும்.

இவ்விதம் நான்கு வகுப்பாய்ச் சொன்னவைகளில், மஹாராஷ்டிரம் முதல் பாரஸீகம் வரையில் இரண்டாவது வகுப்பில் சொன்ன தேசங்களில் மார்கழி மாதத்திலும் சித்திரை மாதத்திலும் வெய்யில் கொஞ்சம் குறைவாகவே தோன்றும். முதலாவது வகுப்பில் சொன்ன தேசங்களில் களிங்க தேசத்திலும், குளிந்த்ரம், ஆந்த்ரம் என்னும் தேசத்தில் ஆனி, ஆடி, மாஸங்களில் வெய்யில் கொஞ்சம் குறைந்த தாகவே தோன்றும். மூன்றாவது நான்காவது வகுப்பாகச் சொல்லப் பட்ட தேசங்களில் இங்கு குறிப்பிட்ட மாஸங்கள் தவிர மற்ற மாஸங்களில் வெய்யில் காணாமல் மேகங்களினால் ஆகாயமானது மூடப்பட்டும்சிலஸமயங்களில் கொஞ்சம் மழையாகவும், சில ஸமயங்களில் அதிக மழை பெய்து கொண்டே இருக்கும். கேரளம், கர்னாடகம், கொங்கணம் என்னும் இந்த தேசத்தில் மார்கழி, தை, மாசி, பங்குனி என்னும் இந்த மாஸங்களில் தான் வெய்யில் அதிகமாகத் தோன்றும். விந்த்யமலையின் ஸமீபத்திலிருக்கும் சில தேசங்களுக்கும் இதுவே தக்க வெய்யில் காலமாகும்.

நிலா விஷயம்

முதல் வகுப்பில் சொல்லியபடி பாண்டியம், சோளம், த்ராவிடம், ஆந்த்ரம், களிங்கம் இந்த தேசங்களில் முன் சொன்னபடி வெய்யில் வீசும் காலத்தில் ராத்திரிகளில் சுக்லபக்ஷ பஞ்சமீ முதல் க்ருஷ்ணபக்ஷ பஞ்சமீ வரையில் பாலை ஊற்றுவதுபோல் நல்ல அழகிய நிலா என்னும் சந்த்ர காந்தி வீசிக்கொண்டிருக்கும். இரண்டாவது வகுப்பாகவும் மூன்றாவது வகுப்பாகவும் பிரித்து முன் குறிக்கப்பட்ட மஹாராஷ்டிரம், கொங்கணம், அவந்தி, மாளவம், ஸௌவீரம், ஸிந்து, விதர்ப்பம், ஆபீரம், வநாயு, பர்பரம், பாரஸீகம், கேகயம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸால்வம், சூரஸேனம், மத்ஸ்யம், கோஸலம், நிஷாதம், மகதம் என்னும்இந்த தேசங்களிலும் இவைகளின் நடுவில் அமைந்திருக்கும் தேசங்களிலும், விந்த்யமலையின் சார்பில் இருக்கும் கூர்ஜரம் முதலிய சில தேசங்களிலும், முன் சொன்னபடி வெய்யில் காலத்தில் இரவில் நிலாவானது வெகு ஆனந்தத்தையும், தேக ஸௌக்யத்தையும் வளர்த்தி கண்களுக்கு அழகாய்த் தோற்றிக் கொண்டு, இடையில் மேகங்களினால் மறைக்கப்பட்டதாகவே விளங்கும்.

இவ்விதமாய் சொல்லிய நிலா என்னும் சந்த்ரவெளிச்சத்திற்கு என்ன குணம் என்றால், சந்த்ர வெளிச்சமானது ஜனங்களின் உடம்பில் வீழ்ந்தால் பித்தம் வளராமல் அடங்கிவிடும். ஆனால் கொஞ்சம் சீதளம், கபம், வாதம் இவைகள் உண்டாகலாம். ஆகையால் கொஞ்சநேரம்தான் நிலாவை உபயோகிப்பது ஸுகமாகும். மேலும், நிலாவானது கண்களுக்கு மலர்ச்சியையும், களிப்பையும் கொடுக்கும். பசி, தாகம், உடம்பு எரிச்சல், அங்க ஜ்வரம்என்னும் தாபம் இவைகள் தணிந்துவிடும். மேலும் மோஹம், மூர்ச்சை, ப்ரமை,உடம்பு வேர்வை இவைகளும் நீங்கும். ஆகிலும் கைகால்களுக்கு ஓய்தலைக் கொடுக்கும்.

வெய்யிலுக்கு எவ்வித குணம் என்றால், வெய்யில் வியர்வையையும், மூர்ச்சையையும்,பித்தத்தையும், அதிக தாகத்தையும், வாட்டத்தையும், உடம்பு விதிர்விதித்தலையும் உண்டு பண்ணும். வெய்யில் உடம்பில் பட்ட மாத்திரத்திலேயே உடம்பில் வேறு வர்ணத்தை உண்டு பண்ணி அழகைக் கெடுத்துவிடும். காலை வெய்யில் வ்யாதியை அதிகரிக்கச் செய்யும். மாலை வெய்யில் வ்யாதிகளைத் தணிக்கும். வெய்யிலால் வாட்டமடைந்தவர்கள் மரம், கட்டடம் இவைகளின் நிழலில் தங்கினாலும், விசிரிக்காற்று, ஜலக்காற்று, குடைபிடித்தல் முதலிய சீதோபசாரங்களைப் பெற்றாலும் அவர்களுக்கு ஒருவாறு தேறுதல் உண்டாகும். ஆகையால் இவ்விதமான வெய்யில், நிலவு இவைகள் வங்கம், ஸிம்மம், ப்ராக்ஜோதிஷம், சீனம், நேபாளம், காம்போஜம் என்னும் இந்த தேசங்களில் பனி, குளிர், மேகம் மூடுதல்இவைகள் எப்போதும் அதிகமாய் இருக்குமாதலால் இவைகளில் வெய்யில் வீசுங்காலத்திலும் பகற்காலங்களில் மேகங்கள் ஆகாயத்தில் உலாவி வெய்யிலை தடுத்துக் கொண்டே வருகிற வழக்கம். இவ்விதம் வெய்யில் வீசுங் காலத்தில் இரவுகளிலும் மேகம் அதிகமாய் ஆகாயத்தில் உலாவி நிலாவை மறைத்துவிடும் வழக்கமுமுண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மழை விஷயம்

இவ்விதமாய் வெய்யிலின் குணத்தினாலும், நிலவின் பெருமையினாலும் வளர்ந்தோங்கிவரும்இந்த பரத கண்டத்தில் (இந்தியாவில்) ஜீவராசிகளின் ஆதாரமான ஜலத்தைப் பெருக்கக்கூடிய மேகங்கள் எந்தெந்த காலத்தில் எப்படி வர்ஷித்து (மழைபெய்து) வருகிறது என்பதைப் பற்றி சற்று இப்போது கவனிப்போமாகில், அவ்விதமாய் மழையை வர்ஷிக்கக்கூடிய மேகங்கள் பரதகண்டத்தில் ஏழு இடங்களிலே உற்பத்தியாகிறதாய் தெரிய வருகிறது. மேகங்கள் ஸமுத்திர ஜலத் தொகுதியின் மேலும் பர்வதங்களின் மேலும் ஆகாயத்திலும், பரவிச் செல்லும் இயற்கையைப் பெரும்பாலும் உடையதாயிருந்த போதிலும் ப்ராக் ஜோதிஷம், சீனம்என்னும் இவ்விரண்டுதேசங்களின் மத்தியிலிருக்கும் இமயமலையின் கிழக்கு பாக உச்சியிலும் (1) காம்போஜ தேசத்திற்கு நேர் தெற்கிலிருக்கும் இமயமலையின் மத்திய பாக உச்சியிலும் (2) காச்மீர தேசத்திற்கும் கிராத தேசத்திற்கும் மத்தியில் இருக்கும் இமயமலையின் மேற்குபாக உச்சியிலும், (3) விந்த்ய மலையின் உச்சியிலும் (4) உத்கலம், களிங்கம் இந்த தேசத்தின் வழியாய்க் கிழக்குக் கடல் ஓரத்திலும் (5) மேற்கு ஸமுத்திரக் கரையின் ஓரத்தில் கேரள தேசத்திலும் (6) கொங்கணம்,கூர்ஜரம் இந்த தேசங்களின் ஸமீபத்தில் கடல், மலை இவைகளின் ஓரங்களிலும் (7) இவ்விதமாய் ஏழு இடங்களில் முக்யமான மேகங்கள் தோன்றி மழை பெய்வதாக ருக்வேதம், மஹாபாரதம், ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ பீடிகை,முதலிய புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமாய் ஏழு இடங்களில் முதலில் மேகங்கள் தோன்றி அங்கிருந்து வெகுதூரம் ஆகாயத்தில் நான்கு திக்குகளிலும் பரவி அங்கங்கு நடுவில் இருக்கும் மலைகளில் சற்று தங்கியிருந்தும், சில ஸமயங்களில் எங்கும் தங்காமலும் காற்றினால் அடிக்கப்பட்டதாய் பலவிதமாய் சிதறி இடி, மின்னல், மழை இவைகளுடன் தோன்றி அங்கங்கு தேசத்தில் மழைதாரையினால் தகுந்த வெள்ளத்தை யுண்டுபண்ணி நாட்டிலும் காட்டிலும் பூமியைச் செழிப்பிக்கும்.

1. வருஷந்தோறும்இவ்விதமாய் உண்டாகும் மேகங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, கார்த்திகை, மார்கழி, தை என்னும் இந்த எட்டு மாஸங்களிலும் இமயமலையின் கிழக்கு பாக உச்சியில் சீன தேசத்திலும், ப்ராக்ஜோதிஷம், காமரூபம், ஸிம்மம், வங்கம், விதேஹம், ஆரட்டம், மகதம் என்னும் இந்த தேசங்களிலும் விசேஷ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மின்னலுடன் கூடி கர்ஜனை செய்துகொண்டு தென் கிழக்கிலிருந்து வடமேற்கு மூலையாகவே சித்ரகூடம் வரையில், ஏராளமாய் மழைபெய்வது வழக்கம்.

2. காம்போஜம், மத்ரம், கேகயம், ஸால்வம், சூரஸேனம், மத்ஸ்யம், கோஸலம், நிஷதம், மகதம் என்னும்இந்த தேசங்களில் காம்போஜதேச ஸமீபத்தில் இமயமலையின் மத்யபாக உச்சியிலிருந்து கிளம்பி, மேகங்கள் நேர்தெற்கு முகமாய் ஆகாயத்தில் விசேஷ காற்றினால் தள்ளப்பட்டதாய் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி என்னும் இந்த மாஸங்களில் விந்த்யபர்வதம் வரையில் விசேஷமாய் மழை பெய்யும்.

3. இமயமலையின் மேற்கு பாகத்தின் உச்சியில் உண்டாகும் மேகங்கள் நீரைச் சுமந்துகொண்டு ஆகாயத்தில் கிளம்பி, கிராதம், காந்தாரம், பர்பரம், விதர்ப்பம், அவந்தி என்னும் இந்த தேசங்களின் வழியாய் வடமேற்கிலிருந்து தென்கிழக்காய்ப் பரவி விந்திய பர்வதம் வரையில் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை என்னும் இந்த மாஸங்களில் விசேஷமாய் மழை பெய்யும்.

4. மேற்குக் கடலில் த்வாரகைக்கு ஸமீபத்தில் நேர்கிழக்கு முகமாய்க் கடற்கரையிலிருந்து கிளம்பும் சில மேகங்கள் ஆகாயத்தில் மேற்குக்கரையோரமாகவே பரவி கூர்ஜரம், கொங்கணம், மஹாராஷ்டிரம் என்னும் இந்த தேசங்களில் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, இந்த மாஸங்களில் விசேஷ மழை பெய்துக் கொண்டேயிருக்கும்.

5. கிழக்குக்கடலின் வடகிழக்கில் களிங்கதேச ஸமீபத்திலிருக்கும் மஹேந்த்ர மலையிலிருக்கும் கிழக்குக் கடலின் நீர், தொகுதியிலிருந்தும் கிளம்பும் மேகங்கள் வடகிழக்கிலிருந்து தென்மேற்கு முகமாய் களிங்கம், குளிந்தம், ஆந்த்ரம், த்ராவிடம், சோளம், பாண்டியம் என்னும் இந்த தேசங்களில் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாஸங்களில் விசேஷ இடி மின்னலுடன் கூடி மழையைப் பெய்யும்.

6. மேற்கு ஸமுத்திரக்கரையில் கேரள தேசத்தின் ஸமீபத்தில் உண்டாகும் மேகங்கள் நேர் வடக்குமுகமாய், ஆகாயத்தில் கிளம்பி கேரளம், கர்னாடகம் என்னும் இவ்விரண்டு தேசங்களையும் பெரும்பாலும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி என்னும் இந்த மாஸங்களிலே மழை பெய்து பூமியை மேன்மைப்படுத்தும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. விந்த்யமலையின் நடுவிலிருந்து நேர்தெற்கு முகமாய் ஆகாயத்தில் கிளம்பிவரும் மேகங்கள் தண்டகாரண்யம், பஞ்சவடி, யவனம், குளிந்தம் இந்த இடங்களை பெரும்பாலும் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை என்னும் இந்த மாஸங்களில் வர்ஷித்து பூமியைச் செழிப்பிக்கும்.

நதிகள்

இவ்விதமாய் ஏழு இடங்களில் உண்டாகும் மேகங்கள் மேற் சொல்லியபடி ஏழுமுகமாய் ஆகாயத்தில் கிளம்பி அதிக ஆடம் பரத்துடன் கர்ஜனை செய்து வர்ஷிக்கும் ஸமயத்தில் இந்த பரத கண்டத்தில் (இந்தியாவில்) இருக்கும் அனேக தடாகங்கள், நடவாபிகள், ஏரிகள், ஓடைகள், மடுக்கள், நதிகள் இவைகள் எல்லாம் ஸம்பூரண மானப் ப்ரவாஹத்தினால் நிறைந்து அந்தந்த தேசங்களின் பூமியின் ஸாரத்துக்குத் தகுந்தபடி விளைபொருள்களையும், மற்றுமுள்ள பலன்களையும் உண்டாக்கி செடி, கொடி, மரம், பக்ஷி, மனுஷ்யர் முதலிய எல்லாவற்றிற்கும் விசேஷ வளர்ச்சியையும் ஆனந்தத்தையும் உண்டுபண்ணிவருகின்றன.

இவ்விதமாய் உலகெங்கும் மழைபெய்யும்போது பெரிய நதிகளில் வெள்ளம் அதிகமாய் புறப்பட்டு இருகரைகளையும் வேகத்தினாலும் பெரிய சுழிகளினாலும் பிளந்துகொண்டு அங்கங்கு அவைகளின் ஸமீபத்திலிருக்கும், கிழக்குக் கடலிலோ மேற்குக்கடலிலோ வீழ்கின்றன. அவ்வித நதிகளுக்குள் எந்தெந்த நதி எந்தெந்த காலத்தில் முழு வெள்ளத்தைப் பெறுகிறது என்பதின் விவரமாவது:-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த பரத கண்டத்தில் (இந்தியாவில்) இருக்கும் முக்ய நதிகளின் பெயர்	அந்த நதிகள் ஓடும் இடங்கள்	விசேஷ வெள்ளம் புரளும் மாஸங்கள்
1. ஸரயூ (Gogra)	கேதாரக்ஷேத்ரம் முதல் கோஸல தேசம் முழுமையும்	சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி
2. கங்கை (Ganges)	பதரிகாச்ரமம் முதல் நிஷத்தேசம் முழுமையும் ப்ரயாகை, கயாக்ஷேத்திரம் வரையிலும்	சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி.
3. யமுனை (Jumna)	ஹஸ்தினாபுரம் (டெல்லி) முதல் சூரஸேநம் குந்தி சேதி தேசங்களின் வழியாய்ப் பிரயாகை வரையில்	சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி
4. ஸிந்து (Indus)	காச்மீரம், பர்பரம், வநாயு, ஸிந்து, ஸௌவீரம் தேசங்களின் வழியாய் பாரியாத்ர மலைவரையில்	வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி
5. சர்மண்வதீ (Chambal)	அவந்தி, நாதத்வாரம், திரிபுரம் வழியாய் தசார்ணதேச முழுமையும்	சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த பரத கண்டத்தில் (இந்தியாவில்) இருக்கும் முக்ய நதிகளின் பெயர்	அந்த நதிகள் ஓடும் இடங்கள்	விசேஷ வெள்ளம் புரளும் மாஸங்கள்
6. நர்மதை (Narmada)	விந்த்ய மலையின் தென்பாகம்முதல் ஸோமநாத க்ஷேத்ரம் வரையில்	வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி.
7. கோதாவரி (Godavari)	பஞ்சவடி கிஷ்கிந்தை வழியாய் யவனதேசம் ஆந்த்ரதேசத்தின் கிழக்குபாகம் வரையில்	வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி
8. காவேரீ (Kaveri)	கர்ணாடக தேசத்தில் ஆதிரங்க க்ஷேத்திரம் (ஸ்ரீரங்கப்பட்டினம், மைசூர் மாநிலம் முதல் சோளதேசம் முழுமையும்	ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை
9. தாம்ரபர்ணீ (Thamraparni)	ஜநார்த்தன க்ஷேத்ரஸமிபம் முதல் கேரள தேசத்தின் தென்பாகம் முழுமையும்	ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி

* Seringapatam in Mysore State

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பரதகண்டத்தில் இருக்கும் முக்கிய நதிகளின் பெயர்	ஸங்கமமாகும் கடலின் பெயர்
1. கங்கை	கிழக்குக்கடல் (மஹோததி)
2. ஸிந்து	மேற்குக்கடல் (பாச்சாத்ய ஸமுத்ரம்)
3. நர்மதை	ஷை
4. பயோஷ்ணீ	ஷை
5. கோதாவரி	கிழக்குக் கடல் (மஹோததி)
6. காவேரி	ஷை
7. தாம்ரபர்ணீ	ஷை

இவ்விதமான முக்கிய நதிகளில் கிழக்கு ஸமுத்ரத்தில் வீழ்பவைகள் நதிகள் என்றும் மேற்கு ஸமுத்திரத்தில் வீழ்பவைகள் நதங்கள் என்றும் வழங்கப்பட்டுவருகின்றன. இந்த இந்தியாவில் இவ்வித நதிகளாலும் மற்றுமுள்ள அனேக நதீ நதங்களாலும் காட்டாறுகளினாலும் ஊற்று ஜலத்தினாலும் அங்கங்கு பூமியில் அனேகவித விளைபொருள்கள் உண்டாகி வருகின்றன. காச்மீரம் முதல் விந்த்யம்வரையிலும், ஸிந்துதேசம் முதல் வங்கம் மகதம் என்னும் தேசம்வரையிலும், விந்த்யத்திற்கு தெற்கில் மஹாராஷ்டிரம், ஆந்த்ரம், த்ராவிடம், சோளம், பாண்டிய தேசம் வரையிலும் இவைகளின் மத்தியிலுள்ள இன்னும் மற்ற தேசங்களிலும்,சிகப்புதான்யம், வெளுப்பு தான்யம் என்னும் சிறுமணிச்சம்பா, வெள்ளைச் சம்பா முதலிய தான்ய ராசிகளும், கோதுமை, துவரை, உளுந்து, கடலை, பயிறு, எள்ளு, மிளகு, மிளகாய், ஜீரகம் முதலிய புஞ்சை தான்யங்களும் வாழைப் பழம், பிலாப்பழம், மாம்பழம், மாதளம்பழம், கொய்யாப்பழம், நாவல்பழம், எலுமிச்சம் பழம், முதலிய இனிய பழங்களை கொடுக்கும் அனேகவித மரங்களும், திராக்ஷைப்பழம் முதலிய கொடிப்பழவர்க்கங்களும், அகில், சந்தனம் முதலிய வாஸனை மரங்களும், வெத்திலை, மல்லிகை, குடமல்லிகை, முல்லை, பாரிஜாதம், செண்பகம், ஜவந்தி முதலிய புஷ்பக் கொடிகளும், செம்பு, பித்தளை, இரும்பு முதலிய லோஹங்களும் ஆடை, முதலியவைகளுக்கு ஸாதனமான பட்டு பருத்தி முதலியவைகளும், மாணிக்கம், முத்து, கோமேதகம் முதலிய நவரத்தினங்களும் இந்தியாவில் அங்கங்கு விசேஷமாய்க் காணப்பட்டு வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மேலும் அழகிய தென்னல்காற்றும், மிகவும் ருசிகரமான ஓடைகளும், மடுக்களும், கிணறுகளும், தடாகங்களும் விசேஷமாய் அங்கங்கு காணப்பட்டுவருகின்றன. இராக்காலத்தையும் பகற் காலத்தையும் தனது இனிய சப்தங்களால் தெரிவிக்கக்கூடிய கோழி, குயில், மயில், சக்ரவாகம், ஊர்க்குருவி, தத்துக்குருவி, முதலிய பக்ஷிகளுடன், சகுனத்தைக் குறிப்பிடும், (1) கருடன், வலியன், காக்கை, முதலிய சகுனப் பக்ஷிகளும் மற்றும் அனேகவிதமான ஸுகர வஸ்துக்களும் அங்கங்கு ஏராளமாய் உண்டாகி ப்ராணி களுக்கு வளர்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுத்துக் கொண்டு வருகின்றன.

அன்றியும், ஹரித்வாரத்திற்கு தெற்கிலும், பாரஸீக தேசத்திலும், விந்திய பர்வதத்தைச் சுற்றிலும் அனேகவித (2) மரங்களடங்கிய காடுகளும், அவைகளில் மான், யானை, குதிரை, ஒட்டகம் முதலியவைகளும் வஸித்து வருகின்றன. இவைகள் தவிர காசீக்ஷேத்திரத்தின் ஸமீபத்திலும், அவந்தி, குந்தலம், சூரஸேனம், மத்ஸயம், கோஸலம், சோளம் என்னும் இந்த தேசங்களிலும் அனேகவித உத்யானவனங்களும் மதுரமான பலவித பழங்களுடன் கூடியதாய்க் காணப்படுகின்றன.

காற்று விஷயம்

இவ்விதமாய் மழை, வெய்யில் முதலியவைகளாலும் இயற்கைப் பான்மையினாலும் மிகவும் செழுமையை அடைந்த இந்த இந்தியாவில் பல மாஸங்களில் வெவ்வேறு விதமாய் வீசும் காற்றானது வெகு தூரத்தில் இருக்கும் மேகங்களைக் கொண்டு வரவும் கொண்டு போகவும், மழை பெய்யச் செய்வதும், இன்னும் அனேகவித புஷ்பங்களை மலரச் செய்வது முதலிய குணங்களையும் பெற்றிருக்கிறது.

1. கேரள தேசத்திலும் அதன் ஸமீபத்திலும் கர்ணாடக தேசத்திலும் கோகர்ணம் வரையிலும், தை, மாசி, பங்குனி இந்த மாஸங்களில் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்க் காற்று வீசிக் கொண்டிருக்கும். அப்போது அங்கு மழை கிடையாது. வெய்யில் காலமாகவே தோன்றும். இரவு காலங்களில் நல்ல நிலவும் தோன்றும். அந்தத் தேசங்களிலே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, இந்த மாஸங்களில்

(1) இவ்வித பக்ஷிகளின் சகுன பலனை சகுன சாஸ்திரத்தில் காணலாம்.

(2) விதர்ப்பதேசத்தில் ஓர் ஆலயத்தில் விளங்கும் கப்பணன் என்னும் புத்தன் வம்சத்தில் பிறந்த அமரஹிம்மன் என்பவன் செய்த கோசத்தில் இவ்வித மரங்களின் பெயர், குணம் முதலிய விவரங்களைப் பார்க்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெரும்பாலும் தெற்கிலிருந்து வடக்கு முகமாய் காற்று வீசும். அப்போது அங்கு இரவிலும் பகலிலும் விடாமல் மழை பெய்யும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்னும் இந்த மாஸங்களில் சில ஸமயத்தில் கிழக்கிலிருந்து மேற்கு முகமான காற்றும், சில ஸமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு முகமாயும் காற்று வீசும். அப்போது அந்த தேசத்தில் மழை அனேகமாய் பெய்யாமல் வெய்யிலே அதிகமாய்த் தோன்றும்.

2. மகாராஷ்டிர தேசம், கொங்கண தேசம், கூர்ஜர தேசம் என்னும் இந்த தேசங்களிலும் இதைச் சேர்ந்த அடுத்த பூமிகளிலும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி என்னும் இந்த மாஸங்களில் மேற்கில் இருந்து கிழக்கு முகமாய் காற்று வீசும். அப்போது அங்கு விசேஷமழை காலமாகத் தோன்றும். கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இந்த மாஸங்களில் கிழக்கிலிருந்து மேற்குமுகமாயும் சில ஸமயத்தில் விந்த்யமலையின் வடக்கிலிருந்து தெற்கு முகமாயும் காற்று வீசும். அப்போது அங்கு மழை யில்லாமல் வெய்யில் காலமாகத் தோன்றும்.

3. காந்தாரம் காச்மீரம் பாரஸீகம் பர்பரம் வநாயுஸிந்து ஸௌவீரம் விதர்ப்பம் ஸால்வம் அவந்தி என்னும் இந்த தேசங்களில் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி இந்த மாஸங்களில் காச்மீர தேசத்தின் வடமேற்கிலிருந்து தென் கிழக்காக விந்த்யபர்வதம் வரையில் காற்று வீசும். அப்போது அங்கு விசேஷ மழை பெய்து வெள்ளப் பெருக்கு உண்டாகும். மார்கழி, தை, மாசி, பங்குனி, சித்திரை என்னும் இந்த மாஸங்களில் சில ஸமயத்தில் விந்த்யத்திலிருந்து வடக்கு முகமான காற்றும் சில ஸமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் காற்று வீசம். அப்போது அவ்விடங்களில் வெய்யில் காலமாக இருக்கும்.

4. இமயமலையின் நடுமத்திய பாகத்தில் ஐராவதீ சதத்ரு நதிகள் உண்டாகும் இடத்திலிருந்து நேர் தெற்குமுகமாய் வீசும் காற்றானது மத்ரம், கேகயம், குரு, சூரஸேனம், மத்ஸயம், கோஸலம், தசார்ணம், நிஷதம், சேதி என்னும் இந்த தேசங்களிலும் இவைகளின் மத்தியிலும் விந்த்யமலை அடிவாரம் வரையிலும் பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி இந்த மாஸங்களில் பரவும். அப்போது அவ்விடத்தில் பெரும்பாலும் விசேஷ மழை பெய்யும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை என்னும் இந்த மாஸங்களில் விந்த்ய மலையிலிருந்து வடக்கு நோக்கும் காற்றும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கும் காற்றுமே பெரும்பாலும் வீசும். அப்போது அங்கு வெய்யில் காலமாக காணப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. ப்ராக்ஜோதிஷம் காமரூபம் அங்கம் விதேஹம் நேபாளம் வங்கம் மகதம் என்னும் இந்த தேசங்களிலும் இதின் மத்தியிலும் சித்ரகூட பர்வதம் வரையில் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி இந்த மாஸங் களிலும் மாசி, பங்குனி, இந்த மாஸங்களிலும் வட கிழக்கிலிருந்து வட மேற்காகவே காற்று வீசும். அப்போது அவ்விடங்களில் அதிக மழை பெய்யும். (இவ்விதமாய் இந்த தேசங்களில் வருஷத்திற்கு இரண்டு தடவை மழைகாலம் உண்டு என்பதை கவனிக்கவும்) ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்னும் இந்த மாஸங்களில் நேர் வடக்கிலிருந்து தெற்கு முகமாய் காற்று வீசும். அப்போது அனேகமாய் வெய்யில் காலமாகவே தோன்றும்.

6. உத்கலம், களிங்கம், யவனம், ஆந்த்ரம், த்ராவிடம், சோளம், பாண்டியம், என்னும் இந்த தேசங்களில் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்னும் இந்த மாஸங்களில் வடகிழக்கிலிருந்து வடமேற்காகவே காற்று பெரும்பாலும் வீசும். அப்போது இவை களில் அநேகமாய் மழைகாலமாகவே தோன்றும். (இதில் உத்கலம், களிங்கம், என்னும் இவைகளில் ஆனி, ஆடிமாதம் முதற்கொண்டே இவ்வித காற்று வீசி மழை உண்டாகும்) மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என்னும் இந்த மாஸங்களில் பாண்டிய தேசத்தின் தெற்கில் பொதியம் என்றும் மலையிலிருந்துவரும் 'தென்னல்' என்னும் காற்றானது மிகவும் குளிர்ச்சியுடன் கூடியதாய் தெற்கிலிருந்து நேர்வடக்கு முகமாய் குளிர்ந்த தேசம் வரையில்தான் (இந்த மந்தமாருதம் என்னும் தென்னல்) வீசும். அப்போது அவ்விடங்களில் வெய்யிலே பெரும்பாலும் தோன்றும். இந்த மாதங்களிலே விந்த்ய மலையிலிருந்து தெற்குமுகமாய் ஹேஹயம், யவனம், மஹாராஷ்டிரம் என்னும் இவ்விடங்களில் காற்று வீசுவது முண்டு. அதே மாதங்களில் களிங்க தேசத்திற்கும் அதற்கு ஸமீபத்தில் நேர் கிழக்கிலிருந்து மேற்குமுகமாய் கடல் காற்றே வீசும் வழக்கமுண்டு.

இதுபோலவே விந்த்யபர்வதத்திலிருந்தும் பாரியாத்ர மலை யிலிருந்தும் வடக்குமுகமாய் நிஷாதம், மகதம், கோஸலம், மத்ஸயம், ஸிந்து இந்த தேசங்களில் சில ஸமயங்களில் காற்று வீசுவது முண்டு. சீன தேசத்தில் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மார்கழி, இந்த மாஸங்களில் கிழக்கிலிருந்து காற்றுவீசும். அப்போது அவ்விடத்தில் வெய்யில் காலமாய் இருக்கும். தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி இன்னும் இந்த மாஸங்களில் தென் மேற்கிலிருந்து வடமேற்கு மூலையாய்க் காற்று வீசும். அப்போது அங்கு அதிக மழைகாலமாகவே புலப்படும். காம்போஜ தேசத்தில் இமயமலை யிலிருந்து வடக்கு முகமாய் சித்திரை, வைகாசி,'ஆனி, ஆடி, ஆவணி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னும் இந்த மாதங்களில் காற்று வீசும்போது விசேஷ மழை பெய்யும். வடக்கிலிருந்து தெற்கு முகமாய் காற்று வீசும்போது வெய்யில் காலமாய் இருக்கும். இது போலவே கிராத தேசத்திலு முண்டு. பாரஸீகத்தில் மேற்கிலிருந்து காற்றுவீசும்போது வெய்யில் காலமாகவும், வடக்கிலிருந்து காற்று வீசும்போது மழை கால மாகவும் தோன்றும்.

இவ்விதமாய் வீசக்கூடிய காற்றுகள் சில இடங்களில் அந்தந்த சீதோஷ்ண ஸ்திதிக்கு அனுகுணமாக கொஞ்சம் மாறுபட்டதாகவும் வீசும். ஏனெனில் சீதோஷ்ணஸ்திதிக்கு ஏற்றபடிதான் காற்று வீசுமென்று ஏற்பட்டிருக்கிறது. இவ்வித முறையையே பெரும் பாலும் அனுஸரித்துக் காற்று வீசும். இந்த இந்தியாவில் அடங்கிய காமரூபம், ஆரட்டம், கோஸலம், ஆபீரம், வநாயு, ஸௌவீரம், ஸிந்து, நிஷாதம், தசார்ணம் என்னும் இந்த தேசங்களிலும் இவை களில் மத்தியிலிருக்கும் காடுகளிலும், மலையின் தாழ்வரைகளிலும் வஸிக்கும் யானை, குதிரை, ஒட்டகம், பசு, ஆடு, கிளி முதலிய அனேகவித ப்ராணிகள் எல்லாம் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி முதலிய மாஸங்களில் உண்டாகும் மழையினால் விசேஷ ஸுகத்தை யடைந்து பிறகு புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாஸங் களில் உண்டாகும் வெய்யிலாலும் சரீர வளர்ச்சியை அடைந்து ஜனங்களுக்குப் பலவித உபகாரங்களையும் செய்து வருகின்றன. விந்த்யமலைக்குத் தெற்கிலுள்ள ஸகல ஜீவராசிகளும் பெரும்பாலும் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாஸங்களில் மழையினால் குளிர்ச்சியையும் ஸுகத்தையும் பெற்று பிறகு பங்குனி, சித்திரை, வைகாசி மாஸங்களில் உண்டாகும் நல்ல வெய்யிலாலும் ருசியான ஜலப் பெருக்கினாலும், உணவுப் பொருள்களாலும் வளர்ச்சியையும் நன்மைகளையும் பெற்று விளங்கிவருகின்றன.

க்ஷேத்ரம் : ஸப்தபுரிகள்

இந்த இந்தியாவிலுள்ள பூமி முழுமையும் புண்ய ஸ்தலங்களாகக் கொண்டாடப்பட்டு அங்கங்கு விசேஷ க்ஷேத்ரங்கள் ஆதிகாலம் முதல் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வித க்ஷேத்திரங்களிலும் அயோத்யா,[46] மதுரா,[47] மாயா என்னும் ஹரித்வாரம், காசீ, காஞ்சீ, அவந்தி, த்வாரகா என்னும் இவ்வித ஏழு ஸ்தலங்கள் முக்தியைக் கொடுக்க வல்லன என்று விசேஷமாய் மஹரிஷிகள் இயற்றிய நூல்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

❋ ❋ ❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. இதன் விபரங்களை விஷ்ணுபுராணத்திலும், மற்றுமுள்ள முக்ய புராணங்களிலும் காணலாம்.

2. ஜம்பூ என்றால் நாவல் மரம். இந்த ஜம்பூத்வீபத்தின் தெற்கு எல்லையிலுள்ள முக்ய மலையாகிய கந்தமாதனம் என்னும் மலையில் ஏராளமான நாவல் மரங்கள் அடர்ந்திருந்தது பற்றி இப்பெயர் உண்டாயிற்று.

3. இந்த பூமியை பல ராஜாக்கள் ஆண்டிருந்த போதிலும், சந்த்ரவம்சத்தில் உதித்த பரதன் என்னும் அரசன் விசேஷ மேன்மையுடன் ஆண்டுவந்த காலம் முதல் அவன் பெயரைக்கொண்டே பரதகண்டமென்று வழங்கலாயிற்று.

4. இந்தப் பெயர் வந்ததற்கு காரணம் முதலிய பல விவரங்களை வாதங்களைப் பற்றிச் சொல்லும், இந்து புண்ய கதைகள் என்னும் புஸ்தகத்தின் முதல் பாகத்தில் பார்க்கவும்.

5. ஹிமம் என்றால் பனி. இந்த மலையில் எப்பொழுதும் பனி விசேஷமாய் இருப்பதுபற்றி ஹிமாலயம் என்றும் ஹிமயம் என்றும் இவ்விதப் பெயர் உண்டாயிற்று.

6. மஹத் என்றால் ச்லாக்கியம். உததி என்றால் ஸமுத்ரம். கங்கை, கோதாவரி, காவேரி முதலிய அனேக புண்ய நதிகள் மேற்கில் உற்பத்தியாகி நதி என்னும் லக்ஷணத்துடன் கூடி கிழக்கு முகமாய் சென்று இந்த ஸமுத்ரத்தில் சேர்கிறபடியால் இதற்கு மஹோததி என்று பெயர் உண்டாயிற்று. இந்த மஹோததியையே வங்காளக்குடாக் கடல் (Bay of Bengal) என்று வழங்கி வருகிறார்கள்.

7. முத்து, பவழம் முதலிய ரத்னங்கள் இதில் ஏராளமாய்க் கிடைப்பது பற்றி ரத்னாகரம் என்னும் பெயரால் இது வழங்கப்படுகிறது. இதை இப்பொழுது இந்து மஹா ஸமுத்ரம் (Indian Ocean) என்று சொல்கிறார்கள்.

8. பச்சாத் என்றால் பிறகு என்றும் மேற்கு என்றும் பெயர். இவ்விடத்தில் பாச்சாத்யஸமுத்ரம் என்பது இந்த இந்தியாவின் மேற்கிலிருக்கிறபடியால் இது இப்பெயரை அடைந்து வருகிறது. இதை அரேபியன் கடல் (Arabian Sea) என்று வழங்கி வருகிறார்கள்.

9. இந்த ஐம்பத்தாறு தேசங்களுக்குள் அடங்கிய உப தேசங்கள் பல உள்ளன என்று மஹாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் பெயராவன:-

ஜாங்கலம், புளிந்தம், போதம், மாலம், குசல்யம், ஸௌசல்யம், காந்தி கோஸலம், கரூசம், போஜம், உத்தமம், மேகலம், நைகப்ருஷ்டம், துரந்தரம், கோதம், குகுத்ரம், காசி, அபரகாசி, ஜடாம், குகுரம், அபரகுந்தி, கோமந்தம், மந்தகம், ஸண்டம், ரூபவாஹிகம், அஸ்மகம், பாண்டுராஷ்டிரம், கோபராஷ்டிரம், கரீதி, அதிராஜ்யம், குசாத்யம், மல்லராஷ்டிரம், கேவலம், வாரவாஸ்யம், ஆயவாஹம், சக்ரம், சக்ராதி, சகம், ஸ்வக்ஷம், மலஜம், விஜயம், யகிருல்லோமம், மல்லம், ஸுதேஷ்ணம், ப்ரஹ்லாதம், மாஹிகம், சசிகம், வாடதானம், காலதோயகம், அபராந்தம், பராந்தம், சர்ம மண்டலம், அடவீசிகரம், மேருபூதம், உபாவ்ருத்தம், அனுபாவ்ருத்தம், ஸ்வராஷ்டிரம், குந்தாபராந்தம், மாஹேயம், கக்ஷம், ஸாமுத்ரநிஷ்குடம், அங்கமலஜம், மானவர்ஜகம், ஸமந்தரம், ப்ராவ்ருஷேயம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பார்க்கவம், புண்ட்ரம், பர்க்கம், ஸுத்ருஷ்டம், யாமுனம், ஆனர்த்தம், நைருதம், துர்க்காலம், ப்ரதிமத்ஸ்யம், தீரக்ரஹம், ஈஜிகம், கன்யகம், குணம், திலபாரம், மஸீரம், மதுமான், குந்தகம், தர்சகம், அபீஸாரம், உலூதம், சைவலம், தார்வி, வானவம், தர்வம், வாதஜாமம், ரதோரகம், பஹுவாத்யம், ஸுதாமா, ஸுமல்லிகம், வத்யம், கரீஷகம், உபத்யகம், தசாபார்சவரோமா, குசபிந்து, கச்சம், கோபாலகக்ஷம், குருவர்ணகம்,ஸித்தம், தாம்ரலிப்தகம், ஓண்ட்ரம், ம்லேச்சம், ஸைஸிரித்ரம்; பூஷிகம், வனவாஸிகம், மஹிஷகம், விகல்பம், மூஷகம், ஜில்லிகம், ஸௌஹ்ருதம், நபகானனம், கௌகுட்டகம், நரம், ஸமங்கம், கரகம், அங்காரம், மாரிஷம், த்வஜினீ, உத்ஸவஸங்கேதம், ஸால்வஸேனி, வ்யூஹம், கோகபகம், ப்ரோஷ்டம், ஸர்மம், வேகவசம், விந்த்யசுலிகம், வல்கலம், வல்லவம், அபரவல்லவம், காலதம், குண்டலம், கரடம், தனபாலம், நீபம், கடஸ்ருஞ்ஜயம், அடிதம், பாசிவாடம், தநயம், ஸுநயம், விதபம், காகம், தங்கணம், பரதங்கணம், க்ரூரம், தாருணம், ஸக்ருத்க்ருஹம், குலத்தம், ஹுணம், ரமணம், தசமாலிகம், க்ஷத்திரியோபநிவேசம், வைச்யகுலம், சூத்ரகுலம், சூத்ரம், தரதம், பசு, காசீரம், அந்தசாரம், பஹ்லவம், கிரிகஹ்வரம், ஆத்ரேயம், பரத்வாஜம், ஸ்தனபோஷிகம், புரோஷகம், தோமரம், ஹன்யமானம், கரபஞ்சம்.

இவ்விதமாய் பரதகண்டமென்னும் பாகமானது ஐம்பத்தாறு தேசங்களாய் முன்பு பிரிக்கப்பட்டிருந்தாலும், தற்காலத்தில் இந்தியா என்று வழங்கப்படும் பூமியில் முன்சொன்ன ஐம்பத்தாறு தேசங்களில் ஐம்பதிரண்டு தேசங்கள்தான் அடங்கியிருக்கின்றன. மற்ற நான்கு தேசங்களில், சீநதேசம் என்பது இந்தியாவின் வட கிழக்கிலும், ஸிம்மளம் தென்கிழக்கிலும், பாரஸீகம் வடமேற்கிலும் காம்போஜதேசம் வடக்கிலுமிருக்கின்றது.

இவ்விதமாய் இந்த இந்தியாவின் வெளிப்புறத்திலுள்ள நான்குதேசங்களும், ப்ராசீன பரதகண்ட ராஜாக்களால் ஆளப்பட்டு வந்திருந்தாலும், இவைகளில் மூன்று தேசங்கள் மாத்திரம் இப்பொழுதும் அந்தந்த தேசத்து ஜனங்களால் ஆராய்ந்து எடுக்கப்பட்ட ராஜாக்களாலேயே ஆண்டு வரப்படுகின்றன. நான்காவதான ஸிம்மளம் என்னும் தேசமானது இவ்விந்தியாவைச் சேர்ந்திராவிட்டாலும், இப்பொழுது நிலைபெற்றுவருகிற ப்ரிடிஷ் ராஜாங்கத்தாரால் முன்சொன்னது போலவே தனி அரசாக்ஷியினால் ஆளப்பட்டு வருகிறது. மேலும், இந்த இந்தியாவில் அடங்கிய ஐம்பத்திரண்டு தேசங்களில் சில தேசங்களை நமது இந்து ராஜாக்களே இப்பொழுதும் ஆண்டு வருகிறார்கள். பெரும்பாலும் இந்தியா முழுமையும் ப்ரிடிஷ் அரசாக்ஷிக்குள் பட்டிருந்தாலும் நமது இந்து ராஜாக்களும் தமது ராஜ்யங்களை முன்போலவே ஆண்டுவருகிறார்கள். இப்படி இந்தியாவிலுள்ள தேசங்கள் இந்து ராஜாக்களின் வசத்தில் எவ்வளவு இருக்கிறது என்பதை நிஷ்கர்ஷிக்க முடியாது. ஏனெனில் ப்ரிடிஷாருக்கு இந்த இந்தியா நாளடைவில் சேர்ந்தமையால் அவர்கள் தங்கள் சௌகரியப்படி முன் உள்ள தேச எல்லைகளை அனேகமாய் மாற்றிவிட்டார்கள். பொதுவாய் சொல்ல வேண்டுமென்றால் இப்பொழுதுள்ள இந்தியாவில் நான்கில் ஒரு பாகத்தை தான் நமது இந்துராஜாக்களில் பலருக்கு சிறுசிறு நாடாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இந்து ராஜாக்களில் சிலர் ப்ரிட்டிஷாரின் அதிகாரத்திற்குள்படாமலும், ஆனாலும் அவர்களின் ஸ்நேகம் விஸ்வாஸம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவைகளை அங்கீகரித்துக்கொண்டு தமது தேசங்களை வெகு க்யாதியுடன் இப்பொழுதும் அரசாக்ஷி செய்துகொண்டு வருகிறார்கள்.

10. இது அநேகமாய் Central Provinces ல் இருக்கும் Mardian Hills என்று ஊஹிக்கலாம்.

11. இது Cardamom Hills என்று வழங்கி வருகிறது.

12. இது Western Ghats என்று சொல்லப்படுகிறது.

13. Kathiawar Range in Gujarat.

14. Aravalli Hills.

15. Vindhya Hills.

16. Hindukush Mountains.

17. இதற்கு Comptah in Bundel Khand of the Central India என்று பெயர் வழங்கி வருவதாகத் தெரிகிறது)

18. இந்த இமயமலையின் சிலபாகத்தை மேற்கு பாகம் என்றும், நடுபாகம் என்றும், கிழக்கு பாகம் என்றும் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிற தென்பதை கவனிக்க. இதற்குத் தற்காலத்தில் Himalayas என்று பெயர் வழங்கிவருகிறது.

19. இவர்களுக்குள், நன்மை நேரிட்டாலும், கெடுதி ஸம்பவித்தாலும் எல்லோரும் திடீரென்று ஒன்றுகூடி அதில் ப்ரவேசிக்கும் குணமுடையவர்கள் என்று பொருள் தோன்றுகிறது.

20. இவைகளினாலேயே முற்காலத்தில் வில்லுகட்டும் வழக்கம் இருந்தப்படியால், வேடர் முதலியவர்கள் புதருக்குள் நுழைந்து ஒரு பெரிய மூங்கிலைக் குறிப்பிட்டு அதன் அடியில் முதல் கணுவில் துளை செய்து, அதில் குங்குமத்தைக்கொட்டி, வாயை மூடிவிட்டுவந்துபிறகு, சிலகாலஞ் சென்றவுடனே மறுபடிபோய், அந்த மூங்கிலின் பத்தாவது கணுவில் குத்திப் பார்க்கும்பொழுது, முன்பு முதற்கணுவில் கொட்டிய குங்குமத்தின் சிகப்பு நிறமான்து இந்த பத்தாவது கணுவில் காணப்படுமேயாகில், அவ்வித மூங்கிலே வில்லுகட்ட உத்தமம் என்று தெரிந் தெடுக்கும் வழக்கமுண்டு. காடுகளில் வளரும் மூங்கில்களில் கொடிபோல் மெல்லியதாய் இருக்கும். கொடிமூங்கில், பெருமூங்கில், தண்டுமூங்கில், கணு மூங்கில், குழல்மூங்கில் என்று இவ்விதம் ஐவகை ஜாதி உண்டு. முற்காலத்தில் வில்லுகட்ட கொடிமூங்கிலையும், கம்பம் முதலியது நிலைநாட்ட பெருமூங்கிலை யும், பிளந்து உபயோகப்படுத்த தண்டுமூங்கிலையும், கழி முதலியதுபோட கணுமூங்கிலையும், புள்ளாங்குழல் செய்ய குழல்மூங்கிலையும் உபயோகிப்பது வழக்கம் என்பதை மாகம், கிருஷ்ண கர்ணாம்ருதம் இவைகளின் வ்யாக்யானத்தில் கண்டு கொள்ளவும்.

21. இதற்கு இப்பொழுதும் கைலாஸம் என்றும், காங்கரி மலைத்தொடர் ★ என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இவ்வித கைலாஸமலையின் சார்பிலிருந்தே ப்ரம்மபுத்திரா என்னும் மஹாநதி உற்பத்தியாகிறது.

22. இந்த நவநிதிகளின் விவரங்களை மார்க்கண்டேய புராணத்தில் பார்க்கவும்.

23. Manasarowar lake in Himalayas.

24. இந்தப்பக்ஷிகளின் ஸ்வரூபம், குணம், பரோபகார விருப்பம் முதலியவைகளை நைஷதம், ஹம்ஸஸந்தேசம் முதலியவைகளில் விசேஷமாய்க் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

25. இந்த ஸரஸ்ஸில் எப்பொழுதும் முத்துபோல் மிகவும் நிர்மலமான ஜலம் நிறைந்திருப்பதால் இதற்கு அச்சோதம் என்று காரணப்பெயர் உண்டாயிற்று.

26. இதன் விபரத்தை கஜசாஸ்த்ரத்தில் (வனப்பரகரணத்தில்) விசேஷமாய்க் காணலாம்.

27. இந்த ராகத்தின் விவரங்களை அறுபத்தி நான்கு கலைக்ஞானங்களில் ஒன்றாகிய ஸங்கீத சாஸ்த்ரத்தில் காணலாம்.

28. வால்மீகி ராமாயணத்திலும், போஜ சம்புவிலும் இதன் விபரங்களைக் காணலாம்.

29. இந்த ஸப்தரிஷிகளின் பெயர் பெருமை இவைகள் இந்து புண்ணியகதைகள் புஸ்தகம் முதற்பாகத்தில் ரிஷிபஞ்சமி அத்யாயத்தின் கீழ் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

30. இப்படிப்பட்ட நவரத்னங்களின் குணாதிசயங்களை ஸிம்மளதேச அத்யாயத்தில் பார்க்கவும்.

31. கனி என்பதற்கு தமிழ் பாஷையில் பழம் என்று பெயர். ஆகிலும் ஸம்ஸ்கிருத பாஷையில் ரத்னமுண்டாகும் இடத்தைச் சொல்லும் கனி என்னும் அர்த்தமுடைய பதத்தையும் வழங்கிவருவதால் இங்கு கனி என்பதற்கு ரத்னமுண்டாகும் இடம் என்று பொருள் கொள்ளவும். இவ்வித கனியில் உண்டாகும் ரத்தினங்களின் குணம் பரீக்ஷை முதலியவைகளை இந்த புஸ்தகத்தின் 53-வது அத்தியாயத்தில் காண்க)

32. இதற்கு இப்பொழுது Dewagar என்பதாக பெயர் ஏற்பட்டிருக்கிறது.

33. இந்த லோபாமுத்ரா தேவியை விதர்ப்ப தேசத்தில் அகஸ்தியர் கல்யாணம் செய்து கொண்டார் என்பதாகத் தெரிய வருகிறது.

34. அநேக மஹரிஷிகளையும் ப்ராம்மணர்களையும் ச்ரார்த்தத்தில் சாப்பிடும்படி செய்து அன்னம், கரியகாய் முதலிய ரூபம் கொண்டு வாதாபி என்னுமஸுரன் அவர்களைக் கொன்று வரும்போது இந்த அகஸ்தியர் அவனைக் கொன்ற விதமும், கடலை சுளகபானமாக உண்டதும், மற்றுமுள்ள விபரங்களையும் பாரதத்திலும், போஜசம்புவிலும் காணலாம்.

35. விந்த்யத்திற்கு வடக்கே இதன்படி இந்த ஸமயம் சுக்லவருஷம், விந்த்யத்திற்கு தெற்கே பிங்களவருஷம் என்று பொருள். இம்மாதிரியே ப்ரதி வருஷமும் விந்தியத்திற்கு வடக்கிலிருக்கும் தேசங்களுக்கும் தெற்கி லிருக்கும் தேசங்களுக்கும் பன்னிரண்டு வருஷங்கள் வித்யாசங்கள் இருந்துகொண்டே வரும்.

36. இந்த நதியின் ஜலத்தினுடைய குணத்தை இந்துபாக சாஸ்திரத்தில் காணலாம்.

37. தசார்ணம் என்னும் தேசத்தில் தசார்ணம் என்று ஒரு நதியும் (Dasan) உண்டு என்று ஏற்படுகிறது.

38. அதிக ஆழமுடையதாகையால் இதற்கு கம்பீராநதி (Ken) என்று பெயர்.

39. த்ரியாமா என்றால் ராத்திரி என்று பொருள். இங்கு த்ரியாமா என்பது இந்த நதிக்கு எப்படி பெயராயிற்று என்றால், இரவு காலங்களில் இந்த நதியில் வீசும் அலைகள் அதிகமாய் ஏற்பட்டு ஓசை அதிகமாய் உண்டாவதினால் என்று பொருள்.

40. இந்த நதி உற்பத்தியாகும் ஸஹ்யமலைக்கு கவேரம் என்று மற்றொரு பெயர் உண்டு. அதினிடத்திலிருந்து இந்த நதி உண்டாகிறபடியால் இதற்கு காவேரி என்று பெயர் (Kaveri).

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

41. வேணீ என்றால் தலைப் பின்னலுக்கும், ஜலப்ரவாஹத்திற்கும் பொதுப்பெயர். க்ருஷ்ண என்பது கருப்புவர்ணத்தை இங்கு குறிப்பிடுகிறது. இந்த நதியின் ஜலம் கருத்து பின்னல்போல் வளைந்து ஓடுகிறபடியால் இதற்கு க்ருஷ்ணவேணீ என்று பெயர்.

42. Tapti.

43. இந்த நதியின் ஜலம் எப்பொழுதும் தெளிவாயும் ருசியாயும் இருக்கிறபடியால் இது ஸுரஸா என்னும் பெயரால் வழங்கி வரப்படுகிறது.

44. இதின் விபரத்தை இந்துபாக சாஸ்திரத்தில் காண்க.

45. இதின் விபரத்தையும் ஷை இந்துபாக சாஸ்திரத்தில் காண்க.

46. Oudh.

47. Muttra.

48. Haridhwar.

49. Benares.

50. Conjeeveram.

51. Ujjain.

52. Dwaraka.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருதேசம்[1]

அத்யாயம் 1

இருப்பிடம் : பூமியின் நிலைமை

குருதேசமானது இமயமலையிலிருந்து உற்பத்தியாகி தெற்கு முகமாய் ஓடும் யமுனை நதியின் ஸமீபத்தில் சூரஸேன தேசத்திற்கு வடக்கிலும் பாஹ்லிக தேசத்திற்குத் தெற்கிலுமிருக்கிறது.

இந்த தேசத்தின் பூமியானது பெரும்பாலும், மேடு பள்ள மில்லாமலும் ஸமமாகவே இருக்கும். ஆகிலும், இந்த தேசத்தின் கிழக்கில் யமுனா நதியில் ஸமீப பூமிகளில், மட்டும் கொஞ்சம் தாழ்ந்து செரிவாய் இருக்கும். இந்த தேசத்தில் குளிர், பனி இவைகள் அதிகமாய்த் தோன்றாது. மழை மாத்திரம் சித்திரை வைகாசியில் மாஸம் முதல் புரட்டாசி மாஸம் முடியும் வரையிலும் விடாமல் பெய்துகொண்டே இருக்கும். இந்த தேசத்தில் வாஸம் செய்தவற்கு தகுந்த பலவித ஆதாரங்களும், பூமியின் இயல்பு குணமும் விசேஷமாய் ஏற்பட்டிருக்கிறது.

மலை : காடு, வெண்மைக் குதிரை, பசு முதலியவைகளின் மிகுதி

இந்த தேசத்தின் வடக்கு பாகத்திலும் மேற்கு பாகத்திலும் பெரிய மலைகள் உண்டு. அவ்வித மலைகளிலும் விசேஷமாய் பனி பெய்துகொண்டேயிருக்கும். சிலவிடங்களில் பெரிய பனிக் கட்டிகளும் இமயமலையில் இருப்பதுபோலவே காணப்படும். இவ்வித மலையின் தாழ்வரைகளின் ஸமீபத்தில் பெரிய காடுகளு முண்டு. இவ்விதக் காட்டில் வெண்மையான எருமைகளும், பசுக்களும், வெண்மையான குதிரைகளும் ஏராளமாய் உலாவி வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி : யமுனை, நீலா இவைகளின் ஜலத்தின் குணம்

இந்தகுரு தேசத்தின் கிழக்கு பாகத்தில் யமுனை என்னும் நதி ஓடுகிறது. இந்த நதியானது மிகவும் ஆழத்தை உடையதாகவும் ஜீவநதி[2] என்னும் பெயரை வஹித்துக் கொண்டும், மிகவும் கருப்பான தோற்றமுள்ள ஜலத்துடன்கூடி பெரிய நதியாய் செல்லுகிறது. இந்த நதியின் ஜலமானது பித்தம், தாகம், வெய்யிலினால் உண்டாகும் களைப்பு இவைகளை அடக்கும். ருசியாயும், பரிசுத்தமாயு மிருப்பதுடன் வாதத்தை மாத்திரம் கொஞ்சம் அதிகரிக்கச் செய்யும். இந்த யமுனா நதியின் ஜலத்தில்மூழ்கி இதின் ஜலத்தையே உட் கொள்கிறவர்களுக்கு அஜீர்ணம் நீங்கி அக்னிபுஷ்டி நன்றாய் உண்டாகும். தேகத்தில் நல்ல பலமும், பளபளப்பு முண்டாகும். இவ்வித யமுனா நதியே இந்த தேசத்திற்கு முக்ய நதியாகும்.

இது தவிர, இத்தேசத்தின் மேற்கிலிருக்கும் ஒரு மலையிலிருந்து நீலா என்று ஒரு நதி உண்டாகி கிழக்கு முகமாய் இந்த தேசத்தில் பரவி பூமியை மிகவும் செழிக்கச் செய்து பிறகு யமுனா நதியுடன் சேரு கிறது. இந்த நதியின் ஜலமானது யமுனா நதியின் ஜலத்தைவிட அதிக கருப்பாயிருக்கும். இந்தநதி அதிக ஆழமுடையதல்ல. இதின் ஜலம் உடம்புக்கு அவ்வளவு ஸுகத்தை உண்டு பண்ணாது.

இந்த தேசத்தின் வடக்கிலிருந்து சில காட்டாறுகளும் கொஞ்ச தூரம் பெருகி யமுனையுடனே சேருகின்றன.

விளைபொருள் – தான்யங்கள், பித்தளை பாத்திரங்கள் விசேஷம்

இந்த தேசத்தின் பூமியில் பெரும்பாலும் யமுனை நதியின் ஜலம் ஓடிப் பாய்வதால் நெல், கோதுமை, கரும்பு முதலிய தான்யங்களும், பலவித ஆடைகளும் ஏராளமாய் ஜனங்களால் அடையப்பட்டு வருகின்றன. இந்த தேசத்தில் தாம்பரம், பித்தளை முதலிய சிலவித லோஹ பாத்திரங்களில் வெகு அழகாய் அனேகவித சித்திரவேலை செய்யக் கூடியவர்களும், கட்டடம் கட்டுவதில் தேர்ச்சியடைந்து சில்ப சாஸ்த்ரமறிந்தவர்களும் சிலர் வஸிக்கிறார்கள். இந்த தேசத்து சித்திரம் மிகவும் அழகானது என்று பெயர் பெற்றது.

நகரம்

இந்த குரு தேசத்திற்கு ஹஸ்தினாபுரம்[3] என்பது முக்ய நகரமாகும். முற்காலத்தில் இதை சந்த்ர வம்சத்தரசராகிய யயாதி, நஹுஷன், த்ருதராஷ்டிரன், பாண்டு முதலியவர்கள் ராஜதானியாக ஏற்படுத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷ க்யாதியுடன் நீதிமுறை தவறாமல் நெடுநாள் ஆண்டு வந்தார்கள். இவ்வித ஹஸ்தினாபுரமானது சில்ப சாஸ்திர முறைப்படி, அனேகவித துர்க்கமுள்ள கோட்டையுடன் கூடியதாயும், அவ்வித கோட்டைக்குள் அட்டம், பெரிய ஸௌதம் என்னும் ராஜ மாளிகை, பல கோபுரங்கள், ஸேனைஸ்தலம், ஆயுதஸ்தலம், ஜனங்கள் கூடும் இடம், பலவித சாலைகள், அனேக விசித்ரங்கள், அனேக வீதிகள் முதலியவைகளுடன் கூடியதாயும் வெகு அழகாய் இருந்ததாகவும் ஏற்படுகிறது. அவைகளில் இப்போதும் சில சில அடையாளங்கள் காணப்பட்டு வருகின்றன. இந்த நகரத்தில் அனேக க்ஷேத்ரங்கள் இருக்கின்றன. அவைகளில் கைலாஸபதி க்ஷேத்ரமே மிகவும் முக்கியமாய் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வித கைலாஸபதி க்ஷேத்திரத்தை பீமரதன் என்னும் சந்த்ரவம்சத்தரசன் கட்டிவைத்ததாயும் அதற்குப்பிறகு பாண்டவர் களின் காலத்திலும் அதற்குப் பிறகும் அவ்வித தேவாலயத்தையே மேன்மேலும் ஜீர்ணோத்தரம் முதலிய சீர்திருத்தங்களைச் செய்து வந்ததாயும் ஏற்படுகிறது. அவ்விதமாய் அரசாக்ஷி செய்தவர்களில் சிலர் ஸார்வ பௌமனாகவும் சிலர் ராஜராஜர்களாகவும் சிலர் சக்ரவர்த்திகளாகவும் இருந்து ஜனங்களைப் ப்ரியமாய் நடத்தி வந்து உலகத்தில் அந்தந்த ஜாதியர்களின் தர்ம நிலையை ஸ்தாபித்தார்கள். இவர்களின் ராஜதானியாகிய ஹஸ்தினபுரத்துக்குச் ஸமீபத்தில் பரசுராமரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்யமந்தபஞ்சகம் என்று ஐந்து மடுவுகள் இப்பொழுதும் காணப்படுகின்றன. ஸ்ரீமந்நாராயண னுடைய அம்சா வதாரமான பரசுராமன் முன்பு ஒரு ஸமயத்தில் அரசர்கள் எல்லோரும் ந்யாய முறையை விட்டுவிட்டு தமது மனப்போக்குபோல் கொடுமையாய் அரசாக்ஷி செய்யும் தருணத்தில் அவர்களைக் கண்டிக்கும் பொருட்டு தனது கையில் தரித்துக்கொண் டிருந்த கோடாலி என்னும் ஆயுதத்தையே துணையாக வைத்துக் கொண்டு இந்த பரதகண்டத் தரசர்களையும் அவர்களது ஸந்ததியை யும் இருபத்தொரு தலைமுறை வரையில் மடிய வைத்து ஸரியான தர்மத்தை நிலைநாட்டினார். அவ்விதம் அவர்களைக் கண்டிக்கும் பொழுது கட்டப்பட்ட இந்த ஐந்து மடுவுகளில் ஸ்நானம் செய்து அந்த பரசுராமர் தமது பித்ருக்களுக்கு த்ருப்தியை உண்டு பண்ணி வைத்தார் என்னும் ஐதிஹ்யத்தைப் பாண்டவர்கள் முதல் பரம்பரையாய் ஹஸ்தினபுரியில் (டெல்லியில்) வஸிக்கும் ஜனங்கள் எல்லோரும் மிகவும் மரியாதையுடன் அந்த ஐந்து மடுவுகளை கொண்டாடி வருகிறார்கள். அந்த மடுவுகளுக்கு ஸமீபத்தில் அழகிய சோலை சூழ்ந்த ஸ்தலங்களும் பரசுராமருடைய சிலாபிம்பமும் இப் பொழுதும் காணப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

''முன்பு க்ருஷ்ணாவதார ஸமயத்தில் அவருக்கு மூத்தவராய் அவதரித்த பலராமர் என்பவர் யமுன நதியின் ஸமீபத்தில் ஹஸ்தினா புரத்து பூமியை தனது கையில் தரித்திருக்கும் கலப்பை ஆயுதத்தினால் தாழ்த்தி இழுத்துவிட்டார். ஆகையால்தான் இப்பொழுதும் ஹஸ்தினாபுரத்தின் கிழக்கு பாகம் பள்ளமாய் காணப்படுகிறது'' என்றும் சிலர் சொல்லுவது முண்டு.

வஸிப்பதற்குத் தகுந்த ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய நீர்வள நிலவளமுடையதாயும் அனேகவித மஹிமை பொருந்தியுமிருக்கும் இந்த குருதேசத்தை ப்ரியவ்ருத ராஜனுக்குப் புத்திரனாகிய ஆக்நீத்ரராஜன் சக்ரவர்த்தி பதவியைப் பெற்று மற்றதேசங்களை தனது அரசுக்கு உட்படுத்திக் கொண்டு இந்த குருதேசத்தை வடகுருதேசம் தென்குரு தேசம் என்று இரண்டு பிரிவாகப் பிரித்து ஆண்டு வந்ததாயும் அதுமுதல் இப்பொழுதும் இரண்டு பாகமாக இருப்பதாயும் சிலர் வழங்குகிறார்கள். இவ்வித ஹஸ்தினபுரத்தின் ஸமீபத்தில் தானேச்வரம் என்னும் க்ஷேத்திரமிருக்கிறது. அதற்குத் தெற்கில் இந்த்ரப்பிரஸ்தம் என்று ஒரு கண்ட பூமிக்குப் பெயர். தெற்குக்குரு நாட்டிலிருக்கும் இந்த இந்த்ரப்ரஸ்தத்தை முன்பு பாண்டவர்கள் ராஜதானியாக வைத்துக் கொண்டு அரசு புரிந்தார்கள். பாண்டவர்கள் காலத்திற்கு பிறகு அரசுபுரிந்த அனேக ராஜாக்கள் இந்த ஹஸ்தின புரத்திற்குள் சில அபூர்வமான தேவாலயங்களையும், பெரிய தடாகங் களையும், ஜபதப மண்டபங்களையும் கட்டி வைத்ததாய் இப்பொழுதும் காணப்படுகின்றன. இந்த தேசத்தின் ப்ரதான ராஜதானி யாகிய ஹஸ்தினா புரத்தை பரிபாலனஞ் செய்த சந்த்ரவம்சத்து அரசர்களில் கடைசியில் உதித்த பரீக்ஷித்து மஹாராஜாவின் புத்திர ராகிய ஜனமேஜய மஹாராஜன் குலமுறையாய் வந்த ராஜ்யபாரத்தை தகுந்தகாலத்தில் வஹிக்க ஆரம்பித்து எண்பத்து நான்கு வயது வரையில் ஆண்டு, அனேக தர்மங்களையும், அச்வமேதம் முதலிய பெரிய யாகங்களையும் செய்தான். பிறகு இவனுடைய தகப்பனாகிய பரீக்ஷித்து மஹாராஜன் ஓர்வித காரணத்தினால் ஸர்ப்பத்தினால் தீண்டப்பட்டவனாய் உயிரிழந்தமையைக் கண்டு ஸஹிக்காமல் மனக்கொதிப்புடன் இந்த ஜனமேஜய மஹாராஜன் சில பெரியோர் களையும், மஹரிஷிகளையும், ஸஹாய மாக வைத்துக் கொண்டு, உலகிலிருக்கும் ஸகல ஸர்ப்பங்களையும் அழிக்கக்கூடிய வேத மந்திரங்களைச் சொல்லி ஸர்ப்பயாகம் செய்ய ஆரம்பித்தான். தக்ஷகன், கார்க்கோடகன், சங்கபாலன், ஆதிசேஷன் என்னும் சில முக்ய ஸர்ப்பங்கள் தவிர மற்ற, ஸர்ப்பங்கள் எல்லாம் அந்த யாககுண்டத்தில் வேத மந்திரத்தினால் இழுக்கப்பட்டதாய் வீழ்ந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மடிந்தன. அவ்வித கடோரச் செயலைப் பார்த்து சரத்காரு மஹரிஷியின் புத்திரராகிய ஆஸ்திகன் என்பவர், அவ்வரசனுக்கு பலவிதமாய் ராஜ நீதிமுறையை எடுத்துக்கூறினார். அதைக்கேட்ட ஜனமே ஜயமஹாராஜன் அவரது உபதேசத்தை யுக்தமென்று கருதி அந்த ஸர்பயாகத்தை ஸம்பூரணமாய் நிறைவேற்றாமல் நின்று விட்டான். சில தினங்களுக்கப்புரம் தனது புத்ரனாகிய சதாநீதிகள் என்பவனை அரசாக்ஷியில் அமர்த்திவிட்டு தனது மனக்கலக்கத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு அனேக பூர்வ மந்திரிகளையும், பெரியோர் களையும் மஹரிஷிகளையும் தனது ஆஸ்தான மண்டபத்தில் வரவழைத்து அவர்களுக்குத் தக்கபடி உபசாரங்களையும் செய்து அவர்களின் உபதேசப்படி இந்த ஹஸ்தினாபுரத்தில் ஸ்ரீவ்யாஸ மஹரிஷிக்கு ப்ரியசிஷ்யராகிய ஸ்ரீவைசம்பாயன மஹரிஷியை சாஸ்திர முறைப்படி பூஜித்து தனது மூதாதைகளின் சரித்ரமாகிய மஹாபாரதத்தை தினந்தோறும் கேட்டு ஆனந்தித்து முடிவில் நற்கதியடைந்தாராம். அவ்வித பாரத ச்ரவணமண்டபமும் இப் பொழுதும் சில பெரியோர்களால் காண்பிக்கப்பட்டு வருகிறது.

❄ ❄ ❄

குறிப்புகள் :

1. குரு என்று ப்ரஸித்திபெற்ற நாமதேயத்தை அடைந்த அரசன் ப்ரியவ்ருத ராஜனுக்குப் புத்திரனாகிய ஆக்நேத்ரராஜனுக்கு புத்திரனாய்ப் பிறந்தவன். இவன் பால்யம் முதல் வெகு பராக்கிரம முடையவனாய் நல்ல மந்திரிகளுடன் ஆலோசித்து தகுந்த ரக்ஷகனில்லாமல் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் ஜனங்களைக் காப்பாற்றும் பொருட்டு இந்த தேசத்தின் வடக்கு எல்லையை முதலில் தனது ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டு அரசுபுரிய ஆரம்பித்தான். ஆகையால் இவனது பெயரைக் கொண்டே இதற்கு குருதேசம் என்பதாகப் பெயர் உண்டாயிற்று. இந்த அரசனுடைய வம்சம் சந்த்ரவம்சம் என்று அனேக நூல்களில் சொல்லப்பட்டிருக்கிற படியால் அவ்வித சந்த்ரவம்சாவளி இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது:

ப்ரம்மா : (நான்முக முடையவராய் நாராயணனுடைய நாபீ கமலத்தில் உதித்து உலகங்களை ஸ்ருஷ்டிப்பவர்.)

அத்ரிமஹரிஷி : (ஸப்தரிஷிகளில் ஒருவராயும், கோத்ர ப்ரவர்த்தக ராயும், ப்ரஸித்தி பெற்றவர். இவரது கண்ணிலிருந்து சந்திரன் உண்டாகி, அது முதல் அவனது வம்சம் க்ஷத்ரிய வம்சம் என்று உலகில் பரவிய போதிலும், இந்த அத்ரிமஹரிஷியினுடைய வம்சமும், இப்பொழுது உலகில் வெகுவாய்ப் பரவியிருக்கிறது. இவரது வம்சத்தில் பிறந்தவர்களில் சிலர் மிகப் பெரிய வித்வான்களாயும், யாகாதிகளைச் செய்து தீக்ஷை பெற்றவர்களாயும் தோன்றுகிறார்கள்.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சந்த்ரன் : (நாராயணனுடைய மனத்திலிருந்தும், பாற்கடலி லிருந்தும், இதற்கு முந்திய கல்பங்களில் பிறந்தவனாக ஏற்படுகிறது. இந்த ச்வேத வராஹ கல்பத்தில் அத்ரிமஹரிஷியின் நேத்திரத்தில் பிறந்தவனாகவே ஏற்படுகிறது.)

புதன் : (வைவஸ்த மனுவின் பெண்ணாகிய இளா என்பவளை விவாஹம் செய்துகொண்டான். அது முதற்கொண்டு சந்த்ரவம்சத்திற்கும், ஸூர்யவம்சத்திற்கும் ஸம்பந்தம் ஏற்பட்டதெனக் கொள்க.)

புரூர்வஸ் : (ப்ரதிஷ்டா என்னும் நகரத்தை நிர்மாணம் செய்து அதில் முதலில் அரசுபுரிந்து, இந்த பரத கண்டம் என்னும் இந்தியா முழுமையையும், தன் அரசாக்ஷிக்கு உட்படுத்திக் கொண்டு சக்ரவர்த்தியாய் இருந்தான்.)

ஆயுள் : (ஊர்வசியினிடத்தில் பிறந்த ஆறு புத்திரர்களுக்குள் முதன்மையானவன்.)

நஹுஷன் : (தனது மஹிமையினால் இந்த்ர பதவியைப் பெற்றதும், பிறகு துச்செஷ்டிதத்தினால் அதிலிருந்து விலகியதும் மஹாபாரதத்தில் ப்ரஸித்தம்.)

யயாதி : (வ்ருஷபர்வன் என்னும் தானவராஜனுடைய பெண்ணாகிய சர்மிஷ்டை என்பவளையும், சுக்ராசார்யருடைய பெண்ணாகிய தேவயானை என்பவளையும் கல்யாணம் செய்துகொண்டான். தேவயானைனிடத்தில் யது என்னும் துர்வஸு என்னும் இரண்டு புத்திரர்களும், சர்மிஷ்டையினிடத்தில் த்ருஹ்யு-அனு-புரு என்று மூன்று புத்ரர்களும் உண்டாயினர். இவ்விதமாய் இவ்வைவரும் வளர்ந்து வருகையில் யயாதிராஜன் யது, துர்வஸு, த்ருஹ்யு, அனு என்னும் இந்த நான்கு குமாரர்களையும் தனது ஸமீபத்தில் வரவழைத்து ''எனது கிழத்தனத்தை நீங்கள் பெற்றுக் கொண்டு உங்களது யௌவனத்தை சில வருஷ காலம் வரையில் நான் அனுபவிக்கும்படி கொடுப்பீர்கள்'' என்று ஒவ்வொருவரையும் கேட்கும்போது ஒவ்வொருவரும் அதற்கிணங்காமல் மறுத்துவிட்டார்கள். அவ்விதம் மறுத்தவர்களில் ''உனது வம்சத்தில் பிறக்கும் குமாரர்களில் ஒருவர்கூட சக்ரவர்த்தி பதவியைப் பெறாமல் போகக்கடவது'' என்று யதுவுக்கு யயாதி சாபங்கொடுத்தான். ''உங்களது வம்சத்தில் பிறக்கும் குமாரர்கள் வேதத்தைக் கற்காமலும் வேதத்துக்கு விரோதமாக நடவடிக்கையுடைய ம்லேச்சர்களாகவும் பிறக்கக்கடவது'' என்று மற்ற மூவருக்கும் சாபம் கொடுத்தான். கநிஷ்ட குமாரனாகிய புரு என்பவன் பிதாவினுடைய கட்டளைக்கிணங்கியபடியால், தகப்பனுக்கு அவனிடத்தில் அதிக ப்ரீதியுண்டாயிற்று. யயாதி அரசனும் தனது அந்திம தசையில் தன் புத்திரர்களில் மிகவும் கநிஷ்டனாயிருந்த போதிலும், இந்த புரு என்பவனையே தனது ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கச் செய்து சக்ரவர்த்தி பதத்தையும் கொடுத்தான். பிறகு சில நாள் சென்றதும் யயாதி ராஜனுக்கு மற்ற புத்திரர்களிடத்தில் தயை உண்டாகும்படி மந்திரிகள் செய்து விடவே, அவர்களின் வேண்டுகோளின்படி, தனது ராஜ்யமாகிய

யது-துர்வஸு-புரு-த்ருஹ்யு-அனு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருதேதசத்தின் தெற்கு பாகத்தில் கொஞ்சம் பூமியை, யதுவுக்கும், கிழக்கு பாகத்தில் கொஞ்சம்பூமியை த்ருஹ்யுக்கும், மேற்கு பாகத்தில் கொஞ்சம் பூமியை துவர்ஸுக்கும், வடக்கு பாகத்தில் கொஞ்சம் பூமியை அனுவுக்கும் பங்கிட்டு கொடுத்து கொடுத்து புரு என்பவனையே அந்நால்வருக்கும், மேலதிகாரியாகவே செய்தான். அந்நால்வருக்குள் யது என்பவரே மிகவும் தர்மசிலனாயும் குணநிதியாயுமிருந்தார். இவ்வித யதுவின் வம்சத்தில் த்வாபரயுகத்தின் முடிவில் பகவான் ஸ்ரீ கிருஷ்ண ரூபியாய் அவதரித்தார்.

ஜனமேஜயன் : (இந்த சந்த்ர வம்சத்தில் இப்பெயர் கொண்டவன் இவனே முதன்மையானவன். பாண்டவர் காலத்திற்குப் பிறகு பரீக்ஷித்து மஹாராஜனுடைய குமாரனே இரண்டாவது ஜனமேஜயன் என்று ப்ரஸித்தி உண்டு.)

ப்ரசின்வான்

ப்ரவீரன்

மனஸ்யு

சாருபதன் : (இவன் அரசுசெய்யும்பொழுது கால மழை முதலிய நன்மைகளை ஜனங்களுக்கு விசேஷமாய் ஸம்ப வித்திருந்தாக ஏற்படுகிறது.)

ஸுத்யு

பஹுகலன் : (பகைவர்களை வெல்லவும், நல்ல புத்தியை கொடுக்கவும், ஜனங்களின் குறைகளை நீக்கவும் நற்கீர்த்தியை உண்டு பண்ணக்கூடியதுமான நீதிசாஸ்திரம் முதலிய அனேக சாஸ்திரங்களைக் கற்றவன்.)

ஸம்யாதி

அஹம்யாதி

நளத்ராச்வன்

ருசேயு

நந்திநாரன்

ஸுமதி

ரைம்யன்

ஸுரோதன்

துஷ்யந்தன் : (பாஞ்சால தேசத்திற்கு உபதேசமாகிய கான்யகுப்ஜம் என்னும் சிறிய தேசத்தை முதலில் அரசு புரிந்து வந்த காதிராஜன் குமாரராகிய விச்வாமித்ரருக்கு மேநகையினிடத்தில் பிறந்த சகுந்தலா என்பவளை விவாஹம் செய்து கொண்டான்.

பரதன் : (கண்வமஹரிஷியின் புத்ரி என்று பாவிக்கப்பட்டு வந்த சகுந்தலையினிடத்தில் உண்டானான். இந்த பரதனுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இயற்கையாய் அநேக நற்குணங்கள் அமைந்திருந்தபோதிலும் பல சாஸ்திரங்களில் தேறிய பெரிய மஹரிஷிகளையும், நல்ல மந்திரிகளையும் வைத்துக்கொண்டு, அதிக பலமுள்ள பெரிய சேனையைத் திரட்டி, தனது மூதாதை மூதாதையாகிய சாருபதன், ஸுத்யு, பஹுகலன்நாள்தொடங்கி இழக்கப்பட்ட ராஜ்யத்தை மறுபடியும் தன் அரசுக்குட்படுத்தக் கருதி, பகைவரின்மேல் படை எடுத்து கடும்போர் விளைத்து, தன் தேசம் நீங்கலான மற்ற ஐம்பத்தைந்து தேசங்களையும், அவற்றினரசர்களையும், தன் ஏகச்சத்ரம் என்னும் ஒரு குடை நிழலின் அடியில் வைத்து, விசேஷ மேன்மையுடன் அரசு செலுத்தி, தன் பெயராலேயே இந்த பூமியை (இந்தியாவை) பரதகண்டமெனப் பிரித்தும், அனேக யாகங்கள் நடத்தியும், வெகுநாள் வாழ்ந்திருந்தான். இந்த பரதனுடைய மேன்மையையும் இவனது பிதாவாகிய துஷ்யந்தனுடைய சரித்திரத்தையும், மஹாபாரதத்திலும், காளிதாஸனா லியற்றப்பட்ட சாகுந்தல நாடகத்திலும் விபரமாய்க் காணலாம்.)

விததன்

மன்யு

ப்ருஹத்க்ஷேத்ரன்

ஹஸ்தி : (இப்பொழுது டெல்லி என்று வழங்கப்படும் நகரமானது இவ்வரசனால்தான் முதலில் நிர்மாணிக்கப்பட்டு பரிபாலனத்தை அடைந்தபடியால் அதுமுதல் அவனது பெயரைக் கொண்டே ஹஸ்தின(னா)புரம் என்று பெயர் வழங்கலாயிற்று.)

அஜமீடன்

அக்ஷன்

ஸம்பரணன் : (இவ்வரசன் ஸூர்யனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த தபதீ என்பவளை விவாஹம் செய்து கொண்டதாக ஏற்படுகிறது.)

குரு

ஜன்ஹு : (இவ்வித பெயர்பூண்ட ரிஷி (ஜன்ஹுரிஷி) ஸூர்ய வம்சத்தில் பிறந்த பகீரதன் அழைத்துவந்த கங்கையை தடுத்தவர்)

ஸுரதன்

விதூரதன்

ஸார்வபௌமன்

ஜயத்ஸேனன்

ராதிகன்

அயுதாயு

ருக்ஷன்

திலீபன் : (ஸூர்ய வம்சத்திலும் இப்பெயர் கொண்ட திலீபன் என்னும் ஒருஅரசன் ரகுமஹாராஜனின் பிதாவாய் விளங்கினான்.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ரதீபன்

தேவாபி-சாந்தனு -பாஹ்லீக : 1. முதல் குமாரனாகிய தேவாபி என்பவன் பாஞ்சால தேசத்திலிருக்கும் கபாலக் கிராமத்தில் யோகியாகி விட்டான். (இப்பொழுதும் உயிருடன் வஸிக்கிறான் என்று சிலர்) இவனே (தேவாபியே) இந்த கலியுகத்தின் முடிவில் சந்த்ரவம்ச மழிந்து விடுங்கால், மறுபடியும் அதை உண்டு பண்ணப்போகிறான் என்றும் சிலர் கூறுகின்றனர். (2) இரண்டாவது குமாரனாகிய சாந்தனு என்பவனே சக்ரவர்த்தியாய் அரசுபுரிந்தான்.

பீஷ்மர் - சித்ராங்கதன் - விசித்ரவீரியன் : (1) முதல் புத்ரனாகிய பீஷ்மர் கங்கையில் பிறந்தபடியால் காங்கேயர் என்றும் இவரை சிலர் வழங்குவர். பரமதர்மசாலி. அஸ்த்ரசஸ்த்ரத்தில் வீரர்களுக்குமேல் மஹாவீரர். தனது தகப்பனுடைய கலியாண ஸௌகரியத்தை உத்தேசித்து க்ரமமாய் தனக்கு சேரவேண்டிய ராஜ்யத்தை அவனுக்கே கொடுத்து விட்டு, தானும் விவாஹத்தில் (இல்லற தர்மத்தில்) விருப்பம் கொள்ளாமல் ஜிதேந்திரியயராய், காலத்தைக் கழித்தவர். (இரண்டாவது புத்ரனாகிய சித்ராங்கதன் என்பவன் சிறுவயதிலேயே யுத்தத்தில் ஒரு கந்தர்வனால் கொல்லப்பட்டான்.

த்ருதராஷ்டிரன் - பாண்டு : (இவ்விருவரும் வ்யாசருக்குப் பிறந்தவர்கள். அதெப்படியெனில், விசித்ரவீரியனுக்கு வெகுநாள் வரையில் புத்ரனில்லாமல் அந்த வம்சத் தொடர்ச்சி நின்றுவிடும்போல் தோன்றி யதைக் கண்டு மனந்தளர்ந்து ஸ்ரீபராசர மஹரிஷிக்கு தர்மபத்னியான ஸத்யவதி என்பவள் தனது புத்திரனாகிய வ்யாஸரை விசித்ர வீரியனுடைய தர்மபத்னியிடம் சேரும்படி கட்டளையிட்டாள். இவ்வித கட்டளையானது த்வாபரயுகத்தில் நடைபெற்று ஸ்ம்ருதிப்படி அனுஷ்டிக்கப்பட்டது என்றறியவும்.)

துரியோதனன், துச்சாஸநன், முதலிய நூறுபேர்

தர்மபுத்திரர்... முதலிய ஐந்துபேர்

: 1. த்ருதராஷ்டிரன் ஜன்மம் முதல் குருடனாய்ப் பிறந்தபடியால் ராஜ்ய காரியங்களில் அதிகாரத்தை அடையாமல் வெகு துக்கத்துடன் வெகுகாலம் கழித்து பிறகு காந்தாரி என்பவளை விவாஹம் செய்து கொண்டாள். இவர்களுக்கு துரியோதனன் முதலிய நூறு புத்ரர்கள் உண்டாகிய காரணம் முதலிய விபரங்களை விசதமாய் மஹாபாரதத்தில் காண்க. (2வது) புத்திரனாகிய பாண்டு, தனது தமயனாகிய த்ருதராஷ்டிரன் குருடனாய் ராஜ்ய அதிகாரத்தை இழந்தமையால் தானே (பாண்டு என்பவனே) ராஜ்ய காரியங்களை மிகவும் சிறப்பாய் நடத்தி வந்து குந்தி-மாத்ரீ என்னும் இரண்டு ராஜபுத்ரிகளை தகுந்தகாலத்தில் மணம்புரிந்து கொண்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தர்மபுத்ரன்-பீமன்-அர்ஜுனன்-நகுலன்-ஸஹதேவன்

: இவ்வைந்து குமாரர்களில், குந்திக்கு முதல் மூன்று புத்ரர்களும், மாத்ரிக்கு இரண்டு புத்ரர்களும் உற்பவித்தார்கள். இது ஸம்பந்தமான மற்ற விபரங்களை மஹாபாரதத்தில் காண்க.)

அபிமன்யு : (ஸ்ரீ க்ருஷ்ண பகவானுக்கு தங்கையாய்ப் பிறந்த ஸுபத்ராதேவியினிடத்தில் உதித்தவன்.)

பரீக்ஷித்து : (விராடதேசத்தரசன் பெண்ணாகிய உத்தராதேவி யினிடத்தில் பிறந்தவன். பாண்டவர்களில் ஐவரும் பரலோகம் சென்றபிறகு கலியுகத்தின்ஆரம்பத்தில் பரத கண்டம்முழுமையும் ஆண்டு சக்ரவர்த்தி என்னும்பெயர் பூண்டும் விளங்கினான்.)

ஜனமேஜயன் : (தனது ராஜஸபையில் வைசம்பாயன ரிஷியிடம் இருந்து வைசம் மஹாபாரதத்தைக் கேட்டவன்)

சதாநீகன்

ஸஹஸாநீகன்

மேதஜன்

ஸீமக்ருஷ்ணன்

நிமிசக்ரன் : (ஹஸ்தினாபுரத்தின் (டெல்லியின்) ஓர்பாகமானது யமுனா நதி வேகத்தினால் (கரைக்கப்பட்டு பிளக்கப்பட்டுப் போன பொழுது, விச்வாமித்ரரின் ராஜதானியாகிய கௌசாம்பீ என்னும் ஓர் பெரிய பட்டணத்தில் அரசு புரியலானான்.)

உப்தன்

சித்ர-ரதன்

சுசிரதன்

வ்ருஷ்யான்டி

ஸுஸேனன்

ஸுநீதன்

ந்ருசக்ஷன்

ஸுகீநலன்

பரிபப்லவன்

ஸுநயன்

மேதாவீ

ந்ருபஜ்ஞயன்

தூர்வன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திமி

ப்ரஹத் ரதன்

ஸுதாஸன்

சதாநீகன்

துர்த்தமனன்

மஹீநரன்

தண்டபாணி

நிமி : (ஸூர்ய வம்சத்திலும் இப்பெயருடன் ஒரு அரசன் ஆண்டு வந்ததாகத் தெரிய வருகிறது.

க்ஷேமகன் : (கலியுகத்தில் (1000) ஆயிரம் வருஷம் கழியும் ஸமயத்தில் உதித்து அரசு செய்தவன்)

இவ்விதமாய் விவரிக்கப்பட்ட சந்த்ரவம்சத்து வம்சாவளியில் எட்டாவது தலைமுறையில் பிறந்த யயாதி மஹாராஜனுக்கு புத்திரராகிய ஐவரில் யதுவினுடைய வம்சமும் வெகுநாள் விளங்கிவந்தபடியால் அந்த வம்சாவளி த்வாரகா நாதனாயிருந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் சரித்திர அத்யாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோலவே இந்த சந்த்ரவம்சத்திலுதித்த பாண்டவருக்கு ஸமகாலமாகிய ஜராஸந்தனுடைய புத்திரனுக்கு சந்த்ரவம்சத்தரசில் ஒரு பாகம் கிடைத்து ராஜ்ய பரிபாலனம் செய்தபடியால் அந்த மகத தேசத்து வம்சாவளியையும், மகததேச அத்யாயத்தில் காணலாம்.

2. ஜீவநதி என்றால் எப்போதும் வற்றாமல் ஜலம் ஓடிக் கொண்டிருக்கும் நதி.)

3. ஹஸ்தினன் என்னும் சந்த்ரவம்சத்தரசன் ஒருவன் இந்த நகரை (Near Delhi) முதலில் ஏற்படுத்தி வெகு அழகாயும் ந்யாயமுறை தவறாமல் ஜனங்கள் வாஸம் செய்யும்படி முன்பு ஆண்டுவந்தமையால் அவனது பெயரை முன்னிட்டுக் கொண்டே இதற்கும் ஹஸ்தினா புரமென்றே பெயர் வழங்கலாயிற்று. இந்த நகரம் பெரும்பாலும் நதியின் ப்ரவாஹத்தினால்அழிந்துபோய்விட்டதாகத் தெரியவருகிறது.

This may be in the modern Delhi Province

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூரஸேனதேசம்[1]

அத்யாயம் 2

இருப்பிடம் : பூமியின் நிலைமை

சூரஸேன தேசமானது முன் சொன்ன குரு தேசத்திற்கு தெற்கிலும், குந்தல தேசத்திற்கு வட பூமியின் கிழக்கிலும், யமுனாநதியின் மேற்குக் கரையில், ஸால்வ தேசத்திற்கு நேர் கிழக்கிலிருக்கிறது.

இந்த தேசத்தின் பூமி மட்டமானது மிகவும் தாழ்ந்து யமுனாநதி ஜலத்தின் அளவுக்குக் கீழ்ப்பட்டதாகவே தோற்றும். ஆகையால் எப்பொழுதும் வற்றாத யமுனா நதியின் ப்ரவாஹம் இந்த தேசத்தின் பூமியின் மேல் பெரும்பாலும் பரவிச் செல்வதால் இந்த தேசத்தின் மண் மிகவும் ம்ருதுவாயும் யமுனாநதி வண்டல் படிந்ததாகவே காணப்படும்.

இந்த தேசத்தின் ஸமபூமியிலும், மற்றும் சில விடங்களிலும் அழகிய பச்சைப்புல், கரும்பு, கோதுமை, நெற்பயிர் அழகிய புஷ்பச் செடிகள் இவைகள் அதிக செழிப்பாய் வளர்ந்து வருகின்றன.

இந்த தேசத்தின் கிழக்கில் ஆநர்த்தம் என்று ஒரு உபதேசமுண்டு. இதில்தான் கோவர்த்தனம்[2] என்னும் பர்வதமும் ப்ருந்தாவனம் என்னும் அழகிய காடும், ப்ருந்தாவனம் என்னும் ஒரு நகரமுமிருக்கிறது. இந்த நகரத்திற் கருகில் காளியன்[3] மடுவும் பாண்டிவடம்[4] என்னும் ஸ்தலமும் நிலை பெற்றுவருகிறது.

இந்த, சூரஸேன தேசத்திலும் பாஞ்சாலம், கோஸலம், மத்ஸ்யம், குந்தலம், த்ரிகர்த்தம், பாஹ்லிகம் என்னும் தேசங்களிலும் மழை, குளிர் முதலிய சீதோஷ்ணஸ்திதி அதிகமில்லாமல் ஸதாதாரணமாய் மிதமாகவே இருக்கும். இந்த தேசத்தின் முழுபூமியும் செழிப்பானதாகவே இருக்கும். இந்த தேசத்தின் தென்மேற்கில் புஷ்கரம்[5] என்று ஒரு விசேஷ தீர்த்தமும் ஸ்தலமுமிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை பசுபக்ஷி இவைகளின் பகுதி காடு முதலியன

இந்த சூரஸேனதேசத்திற்கு வடக்கில் சில சிறிய மலைகளிருந்தபோதிலும் கோவர்த்தனம் என்னும் மலையே மிக முக்யமானதாயும், ச்ரேஷ்டமானதாயும் விளங்கிவருகிறது. இந்த மலையானது சிறிய உருவமுடையதாகத் தோற்றியபோதிலும் இதின் செழிப்பும், வளப்பமும், சகல ஜீவன்களுக்கும் நன்மையை கொடுக்கக்கூடியது. இவ்வித கோவர்த்தன மலையின்சார்பிலும் அதற்கு அடுத்த காடுகளிலும் விசேஷமாய் வெள்ளைப் பசுக்களும் நீலப் பசுக்களும், அனேகவித அழகிய பக்ஷிஜாதிகளும் வஸிப்பதற்கு ஆதாரமான அனேகவித தாமரை ஓடைகளும், பச்சைப்புல் காடுகளும், மடுக்களும் ஸுரபுன்னை, புந்நாகம், தேவலிங்கை, கடம்பு, நாவல், மா, பலா, கொங்கு முதலிய அழகிய மரங்களுமிருக்கின்றன. குடஜம் என்னும் குடமல்லிகை, பாரிஜாதம், செண்பகம் முதலிய புஷ்ப மரங்களும், தாகத்தையும் பசியையும் ச்ரமத்தையும் நீக்கவல்ல அனேகவித பழ வர்க்கமும் ஆறுவித ருதுக்களிலும்[6] ஜனங்கள் விரும்பத் தக்கதாய் தோன்றி வருகின்றன.

நதி

இந்த தேசத்தின் வடகிழக்கிலும், கிழக்கிலும் ஓடும் யமுனை நதியே முக்யமானது. இந்த யமுனையானது இந்ததேசத்தில் அனேக பிரிவுகளாகப் பிரிந்து பூமியை செழிக்கச்செய்து பலவித பலனை உண்டுபண்ணி வருகிறது. இந்த நதிதவிர இந்த தேசத்தின் மேற்கிலிருக்கும் கோவர்த்தன கிரியிலிருந்து சில மலை ஊற்றுகளும் கிளம்பி ஓர் நதியாக ஓடி கடைசியில் யமுனைக்கு உபநதியாகச் செல்லுகிறது.

விசேஷம் : க்ருஷ்ணன் வ்ருத்தாந்தம், ப்ருந்தாவனத்தின் பெருமை

இந்ததேசத்தின் கிழக்கில் ஓடும் யமுனை[7] நதியின் கரையில் மதுரை[8] என்று ஒருபெரிய நகரமிருக்கிறது. இந்த நகரமே இந்தேசத்தரசர்களுக்கு ராஜதானியாக இருந்ததாகத் தெரிய வருகிறது.

இப்படிப்பட்ட மதுரை நகரத்திற்குக் கிழக்கில் (யமுனாநதிக்கும் கிழக்கில்) கோகுலம்[9] என்று மற்றொரு பெரிய நகரமிருக்கிறதாக ஏற்படுகிறது. நந்தகோபன் என்னும் யாதவன் ஓர்வித காரணத்தினால் தன் ஸ்வாதீனத்திற்கு உள்பட்ட இந்தநகரத்தை பூர்வீகர்போலவே ஆண்டு வருகையில் மதுரைமாநகரத்தில் அவதரித்த க்ருஷ்ணபகவான் பாலப்ராயத்திலேயே இந்த கோகுலநகரில் வளர்ந்து வருகையில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கம்ஸனால் ஏவப்பட்ட பூதகி என்னும் ஸ்திரீயையும் சகடாஸுரன் முதலிய மற்ற துஷ்டர்களையும் பகவான் ஸம்ஹரித்து மேன்மேலும் அனேகவித அற்புதச்செயல்களை பெரும்பாலும் இவ்விடத்திலேயே காண்பித்து வந்தார்.

மேற்சொன்ன மதுரைநகருக்கு சமீபத்தில் ப்ருந்தாவனம் என்று ஒருவனம் உண்டு. இந்தவனத்தில் ஸ்ரீ க்ருஷ்ணபகவான் தனது தமயனாகிய பலராமனுடன் சேர்ந்து கொண்டு தன்பிதாவாகிய நந்த்கோபருடைய ஆக்ஞை போலவே, தமது குலத்திற்குத் தகுந்தபடி அனேகவித பசுக்களைமேய்த்து புல்லாங்குழல் ஊதி ஜனங்களுக்கு ஸந்தோஷத்தை அதிகமாய் வளர்த்திவந்தார். ஆகையால் இந்த அழகான ப்ருந்தாவனத்தில் சிலசில இடங்களில் அனேகவித க்ருஷ்ணபிம்பங்கள்[10] தற்காலத்திலும் காணப்பட்டு வருகின்றன. ஸ்ரீக்ருஷ்ணபகவான் அவதாரத்திற்குப் பிறகு ப்ருந்தாவனம் என்று பெயர்கொண்டதாகவே ஒரு நகரம் உண்டாகி இப்பொழுதும் இந்தபெயருடன் கூடியதாகவே மிகப் பெருமையுடன் விளங்கி வருகிறது. இந்த ப்ருந்தாவனம் என்னும் நகரத்தில் வருஷந்தோறும் ஆவணிமாதத்தில்வரும் அஷ்டமியில் க்ருஷ்ணஜயந்தீ உத்ஸவமும், கார்த்திகைமாஸத்தில் மேளா என்னும் வனபோஜன உத்ஸவமும் விசேஷமாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

க்ஷேத்ரம்

இந்த தேசத்தில் அடங்கிய பலக்ஷேத்திரங்களுள் முன் சொன்ன வடமதுரை நகரிலே ஸ்ரீக்ருஷ்ண பகவானுடைய கோயிலும் மற்றும் அனேக வித அழகிய கட்டடங்களும் இப்போதும் தோன்றி வருகின்றன. முன்பு ஒருகாலத்தில்[11] (க்ருதயுகத்தில்) தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரியயுத்தம் உண்டானபோது மஹா விஷ்ணுவானவர் தேவர்களுக்கு அனுகூலமாயிருந்து கால நேமி முதலிய அஸுரர்களை ஜயித்துவிடவே அவர்கள் எல்லோரும் இந்த பூமியில் கம்ஸன் முதலிய துஷ்ட அரசர்களாகப்பிறந்து தர்ம ந்யாயமார்க்கங்களை அழித்து ஜனங்களை பலவாறு, ஹிம்ஸித்து வருகையில் பூமிதேவி அஸுரபாரத்தினால் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாள். அந்த சமயத்தில் பகவான் இந்த மதுரையில் வசித்துவந்த வஸுதேவர்க்கும் தேவகீதேவிக்கும் புத்திரராக அவதரித்தார்.

மேற்சொன்ன கோகுலம் என்னும் க்ஷேத்ரத்திற்கு திருவாய்ப்பாடி என்று பெரியாழ்வார் பெயர் வழங்கினார். தற்காலத்தில் இவ்விடத்தில் பாலக்ருஷ்ண விக்ரஹமும், யசோதா தேவி அவருக்கு வெண்ணை கடைந்துகொடுத்த அடையாளத்தை காட்டக்கூடிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உருவத்துடன் நவநீதக்ருஷ்ண விக்ரஹமும் விளங்கிவருகிறது. மேலும் கூர்ஜரம், மாளவம் முதலிய சில வடதேசங்களிலிருந்து சிலஜனங்கள் இந்த கோகுல நகரத்திற்குவந்து இந்தகோகுல அரண்மனையில் முன்பு பகவான் வளர்ந்ததுபோலவே தமது ஸீமந்த புத்திரர்களும் சுகமாய் தீர்க்காயுஸ்ஸு உடையவர்களாய் வளருவார்கள் என்னும் கருத்துடனே ப்ரார்த்தனைப் பொருள் செலுத்துவது போல் இப்பொழுதும் தமது குழந்தையை எடுத்துக்கொண்டு இந்தகோகுலநகரத்திற்கு யாத்ரை செல்லும் வழக்கமும் நடந்து வருகிறது.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. சந்தர வம்சத்தில் உதித்து சூரத்தன்மை பொருந்திய ஸேனைகளைச் சேர்த்து, தானும் சூரனாகயிருந்து அரசாண்ட ஒரு ராஜனுக்கு சூரஸேனன் என்றும் அவனது அரசுக்குட்பட்ட தேசத்திற்கு சூரஸேனதேசம் என்னும் பெயர் உண்டானதாகத் தெரியவருகிறது.

2. கோ என்றால் ஸம்ஸ்க்ருத பாஷையில் பசு என்று பொருள். இவ்வித பசுக்களை அனேகமாய் தனது செழிப்பினால் இம்மலை வளர்ப்பதுபற்றி இதற்கு கோவர்த்தனம் என்று காரணப்பெயராயிற்று. இந்த கோவர்த்தன கிரியின் பெருமையை யாதவாப்யுதயத்தில் விசேஷமாய் காண்க.

3. காளியன் என்னும் ஒரு ஸர்ப்பராஜன் இந்த மடுவில் முன்பு வஸித்தான். அதுமுதல் இதற்கு காளியஸரஸ்ஸு என்றும் காளிய மடுவு என்றும் பெயர் உண்டாயிற்று. இந்த மடுவின் ஜலத்தில் நெடுநாளாய் வஸித்துவந்தும், தனது கொடிய விஷக்காற்றினாலும், விஷத்தினாலும் இந்த மடுவின் ஜலம் உண்பவர்களைத் தொலைத்தும் பலவித தீங்கு செயல்களைச் செய்துவந்த அந்த காளியன் என்னும் நாகத்தின் ஐந்து தலையின்மேல் முன்பு ஸ்ரீக்ருஷ்ணபகவான் பாலப் பிராயத்திலே பசு மேய்க்கும் ஸமயத்தில் ஒருநாள் பகற்காலத்தில் அந்த மடுவின் கரையில் ஓங்கி நின்றிருந்த கடம்பு மரத்திலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்த ஸர்ப்பத்தின் வாலையும் கையினால் பிடித்துக் கொண்டு அதின் கொழுப்பை அடக்கி ஸமுத்திரத்தில் ஓட்டி விட்டார் என்னும் கதையையும் இவ்விதம் செய்த காளியமர்த்தனன் என்னும் க்ருஷ்ணபிம்ப லக்ஷணத்தையும் பாகவதத்தில் காணலாம்.

4. யாதவர்களின் ஜாதிக்குத் தக்கபடி மயில்தோகை, குந்து மணிமாலை முதலியவைகளை ஸ்ரீக்ருஷ்ணபகவான் பால்யதசையில் இவ்விடத்தில் தரித்துவந்தபடியால் இந்த ஸ்தலத்திற்கு பாண்டி வடம் என்று பெயர் வழங்கியதாகத் தெரியவருகிறது.

5. புஷ்கரம் என்னும் இந்த க்ஷேத்திரத்தில் இப்பெயர் கொண்ட ஒரு பெரிய தடாகம் இருக்கிறது. இக்கரையில்தான் முன்பு விச்வாமித்ர மஹரிஷி சிலநாள் தங்கி யாகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்துவந்தார். இப்பொழுதும் இந்த புஷ்கர தீர்த்தத்தின் கரையில் விச்வாமித் ஆச்ரமமிருந்து வருகிறது. இந்த புஷ்கரீ நகரத்தில் விசேஷமஹிமை வாய்ந் தேவாலயங்களும் த்ருடமான கட்டடமும் பலவித சித்ரசாலைகளும் இருக்கின்றன.

6. சித்திரை, வைகாசி முதலிய பன்னிரண்டு மாஸங்களை ஆறு ருதுக்களாகவும் ஒவ்வொரு ருதுவிற்கும் இரண்டு மாஸங்கள் என்றும் பூர்வீகர்கள் பிரித்திருக்கிறார்கள். அவ்வித ருதுக்களாவன:– வஸந்தருது, க்ரீஷ்மருது, வர்ஷருது சரத்ருது, ஹேமந்தருது, சிசிரருது. வஸந்தருதுவுக்கு சித்திரையும் வைகாசியும் என்று இதுபோல் ஊஹிக்கவும்.

★ இந்த யமுனையின் ஜலத்தின் குணத்தை இந்துபாகசாஸ்த்ரம் புஸ்தகத்தில் பார்க்கவும்.

★ தென்இந்தியாவிலும் ஹாலாஸ்ய க்ஷேத்ரம் என்று ப்ரஸித்தி பெற்ற மதுரை இருப்பதுபற்றி, ஸப்தபுரிகளில் ஒன்றாகிய இந்த மதுரைக்கு வடமதுரை (Muttra) என்று பெயர்வழங்கி வருகிறார்கள்.

★ இந்த நகரத்தில் விசேஷமாய் பசுக்கள் வளர்ந்துவந்ததுபற்றி இதற்கு கோகுலம் என்று பெயர் உண்டாயிற்று.

★ அனேகவித க்ருஷ்ணபிம்பங்களாவன - புள்ளாங்குழல் கிருஷ்ணன், நவநீதக்ருஷ்ணன், ருக்மிணீராதாஸமேதக்ருஷ்ணன், காளியமர்த்தன க்ருஷ்ணன் முதலிய என்றறியவும். இவ்வித பிம்பங்களின் லக்ஷணத்தையும் அளவையும், மயசில்பசாஸ்திரத்திலும், மூர்த்தித்யானம் என்னும் புஸ்தகத்திலும் காணலாம்.

★ ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திற்கு முன் இந்த மதுரைமாநகரத்தை அஸுராம்சம் பொருந்திய கம்ஸன் என்பவனே ஆண்டுவந்ததாயும் ஏற்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குந்திதேசம்[1]

அத்யாயம் 3

இருப்பிடம் பூமியின் ஸ்வரூபம்

குந்திதேசமானது குந்தலதேசத்திற்கு நேர்வடக்கிலும், ஆபீர தேசத்திற்கு கிழக்கிலும், சூரஸேன தேசத்திற்கு தெற்கிலும் நைமிசாரண்யத்தின் மேற்குதிசையில் யமுனாநதியின் ஓரத்தில் சதுரமாய் நிலைபெற்ற பூமியில் தங்கியிருக்கிறது.

இந்த தேசத்தின் வடக்கு பாகத்திலும் சூரஸேனம், குந்தலம், ஆபீரம், ஸால்வம், மத்ஸ்யம், பாஹ்லிகம் முதலிய சில சுற்றுப்பிரதேசங்களில் எவ்விடத்திலும் விசேஷ மணல் பூமியாகவே இருக்கிறது. இந்த குந்திதேசத்தின் பூமிமட்டத்தைக்காட்டிலும் இதற்குத் தெற்கிலிருக்கும் அனேக தேச பூமிகள் மிகவும் தாழ்ந்ததாய் சர்மண்வதி நதியானது யமுனையில் விழும்பாகம் வரையில் மிகவும் பள்ளமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மலை, காடு – யானை முதலிய துஷ்ட ம்ருகங்களின் வாஸம்

இந்த குந்திதேசத்தின் வடக்கு எல்லையிலும் மேற்கு திக்கில் சில இடங்களிலும் பெரிய மலைகள் இருக்கின்றன.

இவ்வித மலைகளின் ஸமீபத்தில் பெரிய காடுகளும் அனேக மேடுபள்ள ஸ்தலங்களும் இருக்கின்றன. இந்த காடுகளில் விசேஷமாய் யானைகளும், கரடி, புலி முதலிய பல ம்ருகங்களும் வஸித்து வருகின்றன. இவ்வித மிருகங்களின் உபத்திரவம் இந்த தேசத்தின் ஸமீபத்தில் சில சமயங்களில் விசேஷமாய் ஏற்படும் வழக்கமுமுண்டு. இந்தக் காட்டில் வசிக்கும் சில ம்ருகங்கள் இரவில் சில ஸமயத்தில் வடக்கில் சர்மண்வதீ நதி வரையிலும், தெற்கில் விந்த்யமலை வரையிலும் ஓடிப்பாய்ந்து திரியும்போது விந்த்ய மலையின் சமீபத்தில் வஸிக்கும் வேடர்கள் பெரும்பாலும் அவ்வித ம்ருகங்களை வலையினால் பிடித்து வருவதுண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி

இந்த குந்திதேசத்தின் வடக்கில் இருக்கும் மலையிலிருந்தும் மேற்கிலிருக்கும் ஸேநாமமலையிலிருந்தும், சில நதிகள் உண்டாகி இந்த குந்திதேசத்தின் பூமியில் பாய்ந்து பிறகு கிழக்குமுகமாய் ஓடி யமுனையுடன் சேருகிறது. மத்ஸ்யம் குந்தலம் சூரஸேனம் என்னும் இந்த தேசங்களின் பூமிபோலவே இந்த குந்திதேசத்தின் பூமியும் மிகவும் நல்ல மண்ணுடன் கூடியதாயும் பலவித பழவர்க்கங்களை உண்டுபண்ணும் மரங்கள் நிறைந்ததாகவும் தான்யம் கோதுமை இவைகள் விளையக் கூடியதாயுமிருந்து வருகிறது.

விசேஷம் : சிபி சக்ரவர்த்தியின் கதை

இந்த தேசத்தை சிபி[2] என்னும் ஒரு அரசன் நீதி முறைப்படி பரிபாலனஞ் செய்துவருகையில் இவ்வரசன் யாசிக்கிறவர்களுக்கு ஸகலவித பொருள்களையும் தானம்செய்யும் குணம் பொருந்தினவன் என்று நாரதர் முகமாய் கேள்விப்பட்டு இந்திரன் இவ்வரசனை தான விஷயத்தில் பரிசோதிக்க வேணுமென்று (பருந்து ஜாதியைச் சேர்ந்ததான) டேகை என்னும் ஒரு பக்ஷியின் ரூப மெடுத்துக்கொண்டு தனக்கு அதிக பசி உண்டானதுபோல் பாவனை செய்து ஓர் கழுகு பக்ஷியைப் பின்தொடரவே அந்தக் கழுகும் தன்னுயிரைக் காப்பாற்றும் பொருட்டு இந்த சிபி என்னுமரசன் ஒருநாள் ராஜஸபையின் அலங்கார கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் ஸமயத்தில் தனது உயிரைக் காப்பாற்ற வேணுமென்று சொல்வதுபோல் அவன் பாதத்தில் வீழ்ந்து சரணமடைய, அந்த சிபி என்னும் அரசனும் மிக வருத்தத்துடன் தன் பாதத்தில் வீழ்ந்துகிடக்கும் கழுகை ரக்ஷிக்கக்கருதி, இந்த கழுகின் மாம்ஸத்திற்கு ஸமமான அளவு உடையதாய் தன் சரீரத்தின், மாம்ஸத்தை அறுத்து டேகைக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னான். அப்பொழுது டேகையின் ரூபம்கொண்ட இந்திரனும் இவ்வரசன் சொன்னவார்த்தையைக் கேட்டு அதற்கு ஸம்மதித்து மாம்ஸத்தை நிறுக்கும் பொருட்டு கொண்டுவரப்பட்ட திராசின் ஓர்தட்டில் உட்கார்ந்து தனது மாயையினால் அதில் அதிகபாரத்தை உண்டு பண்ணினான். அவ்வரசனும் தான்சொன்ன வாக்குமாறா வண்ணம் தனது தொடையின் மாம்ஸத்தைக் கத்தியினால் அறுத்து மற்றொரு திராசில் வைத்து நிறுக்கும்போது திராசில் அளவு குறைந்திருக்கக்கண்டு தனது சரீர மாம்ஸம் எல்லாவற்றையும் பெரும்பாலும் அறுத்து வைக்கும்போது தேவேந்திரனும் தேவர்களும் மனக்களிப்புடன் இந்த சிபி சக்ரவர்த்திக்கு அனேக ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வழங்கினார்கள் என்னும் கதை[3] இக்காலத்திலும் வெகு ப்ரஸித்தி பெற்றுவருகிறது.

பாண்டவர்களின் தாயாராகிய குந்தி[4] என்பவள் இந்த தேசத்தரசனுடைய வேண்டுகோளின்படி இந்த தேசத்திலிருக்கும் ஓர் காளிதேவியினுடைய வரத்தின் மஹிமையினால் அவ்வரசனுக்குப் புத்திரியாய் பிறந்தபடியாலும், மேலும் இந்த குந்திதேவியே இந்த தேசத்திற்கு விசேஷ நன்மைகளை உண்டுபண்ணியபடியாலும் அது முதற்கொண்டு இதற்கு குந்திதேசம் என்றே பெயர் உண்டாயிற்று. அதற்கு முன் இந்ததேசத்திற்கு உசீநரம் என்று பெயர் இருந்ததாக ஏற்படுகிறது.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. This may be in the modern Rajputana. The river Asvanadi is said to have passed through this country in the olden days.

2. இவன் சந்த்ரவம்சத்தரசர்களில் ஒருவனாய் அதிக தர்ம சிந்தையுடன் ராஜ்யபாரம் பண்ணிவந்தான் என்னும் மற்றய விபரங்களை மஹாபாரதத்தில் கண்டு கொள்ளவும்.

3. இதின் மற்ற விபரங்களை மஹாபாரதம் போஜசம்பு முதலியவைகளில் பார்க்கவும்.

4. குந்திதேவியும் பாண்டவர்களின் நன்மையையும் ஜயத்தையும் உத்தேசித்து முன்பு விந்த்யபர்வதத்திற்கு தெற்கிலும் வெகு தூரம் தீர்த்தயாத்திரைப் ப்ரயாணம் செய்திருக்கிறாள் என்பதை நன்றாய் காட்டுவதற்காக தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலுகா நல்லூர் என்னும் க்ஷேத்ரத்தில் இருக்கும் கோயிலின் குளக்கரையில் அந்த குந்திதேவியின் சிலைரூபம் இப்பொழுதும் தோன்றி வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குந்தலதேசம்[1]

அத்யாயம் 4

இருப்பிடம் பூமியின் ஸாரம், தான்யம், கால்நடை

குந்தலதேசமானது தசார்ணதேசத்திற்கு வடக்கிலும் சூரஸேன தேசத்திற்கு தென்மேற்கிலும், ஆபீரதேசத்திற்கு வடக்கிழக்கிலும் இருக்கிறது.

இந்த தேசமானது குரு, சூரஸேனம் முதலிய சில தேசங்களைக் காட்டிலும் நீளமுடையதாய் கிழக்கு மேற்கில் மிகவும் நீண்டிருக்கிறது. இந்த தேசத்தின் நடுமத்யபாகத்தில் வடக்கிலிருந்து தெற்குமுகமாய் யமுனா நதியின் வெள்ளம் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருப்பதால் இந்த தேசத்தின் மண்குணம் மிகச்லாக்யமாகவே கருதப்படும்.

இந்த தேசத்தில் ஸகலவித தான்யங்களும் பழவர்க்கங்களும், பசு முதலியவைகளின் உணவுக்குரிய பச்சைப்புல் முதலியவைகளும், எப்பொழுதும் ஏராளமாய் அடையக்கூடும். இந்த தேசத்தின் நடுவில் ஓடும் யமுனைக்கு கிழக்கு பாகத்தில் கௌரீகிரி என்று ஒரு பெரிய மலை உண்டு. இந்த யமுனாநதிக்குக் கிழக்கில் அந்த கௌரீகிரியைச் சுற்றிலும் இருக்கும் தேசத்திற்கு உலூதம் என்று பெயர். இந்த உலூத தேசமானது குந்தலதேசத்திற்கு உபதேசமாகும்.

மலை, பார்வதி தேவியின் வ்ருத்தாந்தம்

இந்த தேசத்தின்கிழக்கில் முன்சொன்ன கௌரீகிரியும்[2], அது போல் ப்ருஹத்கடம்[3] என்றும் மற்றொரு மலையும் இருந்து வருகின்றன. இவ்விரண்டுமே இந்த தேசத்திற்கு ப்ராதன மலைகளாகும். இவை தவிர மற்றும் சில சிறு குன்றுகளுமுண்டு.

கைலாஸபதியாகிய ஈச்வரன் முன்பு த்ரிபுரஸம்ஹாரம் செய்தபிறகு பார்வதீதேவியுடன் இந்த கௌரீகிரி என்றும் மலையில் சற்று நேரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தங்கி இருந்தார். அப்பொழுது பார்வதீ தேவியானவள் பகவானிட மிருந்து அனேகவித புராணங்களையும் வேதார்த்தங்களையும் கேட்டு பிறகு மஹரிஷிகளின் சபையில் வெகு ஆதரவுடன் வெளியிட்டாள். இவ்வித ஸமயத்தில் பார்வதீதேவி இவ்விடத்தில் சற்று நேரம் தங்கியிருந்தபடியால் இதற்கு கௌரீ என்று பெயர் வழங்கலாயிற்று. மேலும், இந்த கிரிக்கு தென் ஹிமயம்[4] என்று பெயருமுண்டு. ஏனெனில், முன்பு இமயமலைக்கு அதிகாரியான பர்வதராஜன் தனது பெண்ணாக அவதரித்த பார்வதீ தேவியை ஓஷதிபுரம் என்னும் இமயமலை நகரத்தில் ஈச்வரனுக்குக் கலியாணம் செய்து கொடுத் தான். இதற்குமுன் ஸதீ என்னும் தேவியை ஈச்வரன் இந்த நகரத்தில் தான் கல்யாணம் செய்துகொண்டார். பார்வதீதேவியின் கல் யாணத்திற்குப் பிறகு இமய ஓஷதியுரமே அதிகமாய் விளங்கலாயிற்று. அதற்கு முன் இந்தமலையின் ஸமீபத்திலுள்ள இந்த நகரம் ஏற்பட்ட படியால் இதற்கு தென்ஹிமயம் என்றும் இந்நகரத்திற்கு தென் ஓஷதிபுரம் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

நதி, பார்க்கவி நதியின் ஜலத்தின் குணம்

இந்த குந்தலதேசத்தின் கிழக்கிலுள்ள கௌரீகிரியிலிருந்து பார்க்கவீ[5] என்று ஒரு நதி உண்டாகி மேற்குமுகமாய் ஓடி பிறகு கொஞ்சம் தெற்கு முகமாய் திரும்பி யமுனா நதியுடன் சேருகிறது.

ப்ருஹத்கடகம் என்னும் மற்றொரு மலையிலிருந்து வேறொரு நதி உண்டாகி இந்ததேசத்தில் பெருகி பிறகு கிழக்குமுகமாய் பரவி யமுனையுடனேயே கலந்தோடுகிறது.

முன்சொன்ன பார்க்கவீ என்னும் நதியின் ஜலமானது யமுனா நதியின் ஜலம்போலவே மிகவும் ருசியாயிருக்கும்.

துர்யோதனன் தூதர்களின் வ்ருத்தாந்தம்

முன்பு ஒரு ஸமயத்தில் ந்யாயமார்க்கத்துக்கு விரோதமாய் ஸபையில் ஒரு சூதாட்டத்தை ஏற்படுத்தி சகுனியின் மாயையினால் பாண்டவர்களை ஜயித்து ஹஸ்தினாபுரத்தையும் அரசாக்ஷி பெருமையையும் கைப்பற்றிய துர்யோதனன் அந்த பாண்டவர்களை பன்னிரண்டு வருஷ காலம் வரையில் வனவாஸம் செய்தும் மறுபடியும், பிறகு ஒரு வருஷ காலம் அக்ஞாதவனவாஸம் (மறைந்து வாஸம் செய்தல்) செய்ய வேண்டுமென்று அனுப்பிவிட்டான். அப்படியே பாண்டவர்கள் த்வைத வனம் முதலிய பன்னிரண்டு வனங்களில் பன்னிரண்டு வருஷங்களையும் கழித்துவிட்டு பதின்மூன்றாவது வருஷத்தில் ஒளிந்து ரூபம்மாறி காலத்தைக் கழித்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வருகையில் அவ்வித பாண்டவர்களைக் கண்டுபிடிக்கவேணும் என்னும் துஷ்ட ஆசையினால் துர்யோதனன் தனது வேவுகாரர் களையும் தூதர்களையும் நானா தேசங்களில் தேடும்படி அனுப்பிய பொழுது அந்த தூதர்கள் ஸௌவீரம், ஸிந்து, காந்தாரம் முதலிய ஸகல தேசங்களிலும் தேடிப் பார்த்து உடம்பு மெலிந்து இந்த குந்தல தேசத்தில் ஓரிடத்தில் களைப்பை நீக்கும்பொருட்டு வந்து தங்கினார் என்னும் ஐதிஹ்யத்தை காட்ட இப்பொழுதும் இந்த தேசத்தில் ஒரு நகரத்தில் அனேக கல் மண்டபங்கள் சாலைகள் தோன்றிவருகின்றன.

க்ஷேத்ரம்

இந்ததேசத்தில் பல க்ஷேத்ரங்கள் இருந்தபோதிலும் இந்த கௌரீகிரிக்கு ஸமீபத்திலிருக்கும் கௌரீபுரமே மிகவும் விசேஷ முடையது. இந்த பார்வதீநாதன் கோயிலில் உத்ஸவம் முதலிய விமரிசையும் சிறப்புடன் நடத்தி வரப்படுகிறது. இவ்வித கௌரீபுரத்துக்குத் தான் தென் ஓஷதிபுரம் என்று பெயர்.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. This may lie in the modern Rajaputana territory
2. கிரி என்றால் பர்வதம். அவ்விதபர்வதராஜனுக்குப் பெண்ணாய் பிறந்தமையால் பார்வதிக்கு கௌரீ என்று பெயர். இவ்வித கௌரீதேவி தங்கிய இதற்கு கௌரீகிரி என்று பெயர்.
3. கடகம் என்றால் கையில் அணியும் காப்புக்கும் மலையின்தாழ்வரைக்கும் பெயர். இவ்விடத்தில் ப்ருஹத்கடகம் என்னும் மலையானது பெரிய தாழ்வரைகளை உடையது என்று காரணப் பெயர் உண்டாயிற்று.
4. இதற்கு வடக்கில் மிகவும் ப்ரஸித்திபெற்ற ஹிமயமலையிருப்பதால் அதற்கு வடஹிமயகிரி என்னும் இதற்கு தென்ஹிமயகிரி என்னும் பெயர் வழங்கலாயிற்று.
5. ப்ருகு என்பவருக்குப் புத்திரராக அவதரித்தது பற்றி பரசுராமருக்கு பார்க்கவர் என்று பெயர். அவ்வித பார்க்கவர் என்னும் பரசுராமர் முன்பு ஒரு ஸமயத்தில் இந்த நதியின் கரையில் பர்ணசாலை ஏற்படுத்திக் கொண்டு தவம் புரிந்தமையால் அவர் ஸம்பந்தம் பெற்று இதற்கு பார்க்கவீ என்று பெயர் உண்டாயிற்று. இந்த பரசுராமர் முன்பு இவ்வுலகில் உள்ள க்ஷத்திரியர்களை ஓர் காரணத்தால் இருபத்தொரு தலைமுறை வரையில் கொன்று இந்த பூமி முழுமையும் தன் ஆதீனத்தில் வைத்துக்கொண்டு பிறகு கச்யபமஹரிஷிக்கு தானம் செய்துவிட்டார் என்னும் விபரத்தையும் மற்றும் சில அபூர்வச்செயல்களையும் ரீமாயணம், பாரதம், பார்க்கவ புராணம் முதலியவைகளில் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விராடதேசம்[1]

அத்யாயம் 5

இருப்பிடம் பூமியின் வளப்பம்

விராடதேசமானது சூரஸேனதேசத்திற்கு தென்மேற்கிலும் மத்ஸ்யதேசத்திற்கு தெற்கிலும் ஸால்வதேசத்திற்குக் கிழக்கிலும் இதன் மத்தியில் நிலைபெற்றிருக்கிறது.

இந்ததேச முழுமையும் செம்மண்ணும் களிமண்ணும் கலந்த பூமியாகவே பெரும்பாலும் காணப்படும். இவ்வித பூமியில் கரும் கோறைப்புல்லும், மஞ்ஜாடி, கோரை, அருகம் முதலிய இளம் புல்லும் எவ்விடத்திலும் கண்களுக்கு மிகவும் ஆனந்தத்தை விளை விக்கும் மரங்களும் புஷ்பச்செடிகளும் சோலைகளும் நிறைந்த தாகவே, நல்ல வளம் பொருந்தியதாய் விளங்கும். அன்றியும் இந்த தேசத்தில் நீர் கொண்ட மேகம் அழகிய மின்னலுடன்கூடி எக் காலத்திலும் மாதம் மும்மாரி பெய்து கொண்டே பூமியை செழிப்பித்து வளரச்செய்து வருகிறது. இந்த தேசத்தில் மல்லிகை, முல்லை, முதலிய பூஞ்செடிகளும், மற்றுள்ள ஓஷதிக் கொடிகளும், மா, பலா முதலிய மரங்களும் எல்லாம் தழைத்து எருதழை முதலியவைகள் இல்லாமலே பூமியில் வைத்த உடனேயே மிகவும் அழகாய் செழித்து ஓங்கிவளரும்.

மலைமான் ஜாதிகள்

இந்த தேசத்தின் வடக்கில் ப்ரம்மகிரி[2] என்று ஒரு பெரிய மலை உண்டு. இந்த தேசத்தின் கிழக்கு திக்கில் மற்றும் சில சிறுமலைகள் சதத்ருநதியின் கரையில் இருக்கின்றன.

இந்த மலைகளின் ஸமீபத்தில் சாதாரணமான காடுகளே தவிர பெரிய அரண்யங்கள் இந்த தேசத்தில் எங்குமில்லை. இந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலைகளின் சார்பிலும், ஸாதாரண காடுகளின் அனேக இடங்களிலும் பசுக்களும் குதிரைகளும் சாமரம் செய்யக்கூடிய சமரி ம்ருகங்களும் மான்களும், விசேஷமாய் மேய்ந்து உலாவி வருகின்றன. இந்த தேசத்திலும் மற்றும் சில பெருவளம் பொருந்திய தேசத்திலும் புலி, கரடி முதலிய கொடிய ம்ருகங்கள் தங்கி வஸிக்கிறதாக ஏற்பட வில்லை.

நதி

இந்த தேசத்தின் பூமியானது வடக்கில் உயர்ந்து தெற்கில்தாழ்ந்து சரிவாய் வருகிறது. இதுபோலவே இந்த தேசத்திற்கு மேற்குதிக்கில் சதத்ருவின் கிளைநதி வடக்கில் உயர்ந்து தெற்கில் சாய்ந்து மிகவும் வேகத்துடன் ஓடுகிறது. இந்த நதிகளின் ஜலமே பெரும்பாலும் இந்த தேசபூமியில் பெருகி சில சிற்றாறுகளாய் ஓடி கேகய த்ரிகர்த்த தேசத்தில் பாய்ந்து ஓடுகிறது.

ஸமீபத்தில் இமயமலை மிகவும் ஓங்கி பனிக்கு இருப்பிடமாய் இருப்பதாலும், இந்த தேசத்தின் இருபுறத்திலும் இரண்டு நதிகள் ஓடுவதினாலும், மண்வளமும் மிகவும் குளிர்ச்சியாக இருக்கிற படியாலும், இந்த தேசத்தில் எப்பொழுதும் குளிர் பனி மழை இவைகள் அதிகமாகவே இருக்கும்.

விசேஷம் ப்ரம்மாவின் வ்ருத்தாந்தம்

மேற்சொன்ன ப்ரம்மகிரியில் முன் ஒரு ஸமயத்தில் பிரம்ம தேவனானவர் மஹாவிஷ்ணுவை வெகுநாளாய் க்ரமப்படி பூஜித்து வருகையில் ஒரு ஸமயத்தில் பூஜை செய்யும்போது பூஜையில் மனம் நிற்காமல் அலைந்தோடி திரிவதைக் கண்டு மனவருத்தமடைந்து தனது புத்திரராகிய நாரதமஹரிஷியை வரவழைத்து அதின் காரணத்தைக் கேட்க, இந்த தேசத்தில் சதத்ருநதியின் ஸமீபத்தி லிருக்கும் காலகிரி என்பதில் தவம் செய்யும்படியும், அப்படிச் செய்தும் மனம் திருப்தியடையாவிட்டால் பிறகு விந்த்யபர்வதத் திற்குத் தெற்கே வேங்கடகிரிக்கு ஸமீபத்திலிருக்கும் துண்டீரமண்ட மென்றும் தொண்டை மண்டலத்தின் ப்ரதான நகரமாகிய காஞ்சீ க்ஷேத்திரத்தில் தபஸ் செய்யும்படிக்கும் ஏவப்பட்டார். இப்படியாக இந்த காலகிரி என்னும் இந்த புராதனமலையில் ப்ரம்மாதவம் செய்த காரணத்தினாலேயே இதற்கு ப்ரம்மகிரி என்று பிறகு பெயர் உண்டாயிற்று.

வன்னிமரத்தின் விசேஷம்

முற்காலத்தில் இமயமலையின் நடுவில் வடக்குச் சார்பிலிருக்கும் மானஸ ஸரஸ்ஸுக்குத் தென்மேற்கில் கைலாயம் என்னும் ஒரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பர்வதத்தின் சாரலில் அம்மலைச் சிகரத்தின் ஸ்வரூபமாகிய ஸத்யகிரி என்று ஒருமலை உண்டு. அம்மலையில் காச்யபரிஷியானவர் புத்திரனை வேண்டி தவம் செய்து கொண்டிருக்கையில், பார்வதீ தேவியானவள் வெய்யிலினால் ச்ரமமடைந்திருந்த ஸமயத்தில் அவளுக்கு நிழலைக் கொடுத்து களைப்பை நீக்கும்பொருட்டு ஈச்வரன் முதல் முதலில் அந்த பார்வதியின் ஸமீபத்தில் வன்னிய மரமாகத் தோன்றினார். அப்பொழுது அவ்வித வன்னிமரத்தின் நிழலையும் குளிர்ந்தகாற்றையும் அடைந்து பார்வதி தேவியானவள் ஸந்தோஷப்பட்டு ஈச்வரனிடம் ப்ரார்த்தித்ததாவது - ''நீங்கள் என் நிமித்தமாய் இந்த ஸமயத்தில் வன்னிமரமாய்த் தோன்றி எனது களைப்பை நீக்கியது போலவே, இனி உலகத்தில் எந்தஸமயத்திலும் உங்களுடைய அம்சமான வன்னிமரத்தின் அடியை அடைந்து, வஸித்து நிழலை ஸேவித்தவர்களுக்கு சரீரசுகம் ஜயம் முதலிய ஸகல விருப்பங்களும் கைகூடும்படி அனுக்கிரஹிக்க வேணும்'' என்று இவ்வாறு வேண்டினாள். அதுபோலவே பகவான் வாக்களித்தார் ஆகையால் வன்னிமரத்தடியில் செய்யப்படும் ஜபம், ஹோமம், தானம் முதலியவைகள் அளவற்ற பலன்களை கொடுக்கின்றன என்று ஏற்படுகிறது.

பாண்டவர்களின் அக்ஞாத வாஸம், உத்தரை கலியாணம்

இவ்வித மஹிமை இந்த வன்னி[3] மரத்திற்கு ஏற்பட்டபடியால்தான் பாண்டவர்களும்[4] முன்பு த்வைதவனம், காண்டவவனம் முதலிய பன்னிரண்டு வனங்களிலும் பன்னிரண்டு வருஷங்களையும் கழித்துவிட்டு இந்த தேசத்தில் விளங்கும் இந்த வன்னி மரத்தில் தங்களுடைய ஆயுதங்களை மறைவாய் வைத்துவிட்டு மாறுரூபம் கொண்டு விராடராஜன் மாளிகையில் ஒரு வருஷகாலம் அக்ஞாத வாஸம் (ஒருவராலும் தெரிந்து கொள்ளப்படாமல் வஸித்தல்) செய்தார்கள். இவ்விதமாய் பாண்டவர்களின் அக்ஞாதவாஸம் முடியும் ஸமயத்தில் துர்யோதனனுடைய கட்டளைப்படி உலகமெங்கும் திரிந்து தேடிப்பார்த்து பாண்டவர்களைக் காணாமலே தூதர்கள் திரும்பிவந்து துர்யோதனனிடம் சென்று தங்களது ப்ரயாணத்தில் நேர்ந்த ஸகல விஷயங் களையும் சொல்லி முடித்து கடைசியில் இந்த தேசத்தின் மிகுந்த வளப்பத்தையும் பெருமை யையும் வெகுவாய் எடுத்துக் கூறினார்கள். இவ்வித வார்த்தையைக் கேட்டு தர்மசீலர்களான பாண்டவர்கள் வஸிக்கும் தேசத்தில்தான் இவ்வித வளப்பமும், செழிப்பும் இருக்கலாமென்று ஊஹித்து இந்த தேசத்து அரசனின் பொருள்களை அபஹரிக்கும்படி தனது ஸேனையை ஏவினான். அதுபோலவே அந்த ஸேனைகளும் இந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசத்து மன்னனுடைய முக்ய தனமாகிய பசுக் கூட்டங்களை அபஹரித்தபோதிலும் ஸஹாதேவன் அந்த பசுக் கூட்டத்திற்கு தலைவனாய் நின்றுகொண்டு அவைகள் எதிரியினிடம் சிக்கிக் கொள்ளாமல் செய்துவிட்டான். ஆனபோதிலும் துர்யோதன னுடைய ஸேனைகள் மேன்மேலும் மீறிவந்து போர் விளைத்து விராட ராஜனைப் பிடித்துவிடவே அவனுடைய மகனாகிய உத்தரன் என்பவன் ப்ருஹந்நளை என்று பேடி உருவம் பூண்டிருந்த அர்ஜுனனை ஸாரதியாய் வைத்துக்கொண்டு தேரேறி அந்த அர்ஜுன னுடைய யுத்தத் தேர்ச்சியினாலேயே பகைவரை வென்று தகப்பனை மீட்டுக் கொண்டு தனது அரண்மனை சேர்ந்து தனக்கு இவ்விதமாய் ஜயத்தை உண்டாக்கிய அர்ஜுனனுக்கு தனது தங்கையாகிய உத்தரை என்பவளை பாணிக்ரஹணம் செய்து கொடுக்க வேணும் என்று விரும்புகையில் அப்பொழுது அர்ஜுனன் வேண்டு கோளின்படி அவனது புத்ரனாகிய அபிமன்யுவுக்கு உத்தரையை விவாஹம் செய்துமுடித்தான். இவ்விதமாய் இந்த விராடதேசத்திற்கு அனேகவித நல்லவளமும் மஹிமையும் உண்டு.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. This way lie in the modern Rajputana. It was originally 105 miles to the S.W. of Delhi and 41 miles to the north of Jaipur.

2. ப்ரம்மகிரி.

3. வன்னிமரங்களின் உள்ளே அக்னி எப்பொழுதும் இருந்து வருகிறது என்னும் விஷயத்தை மஹாபுராணம், விஷ்ணுபுராணம், முதலியவைகளில் காணலாம்.

4. பாண்டவர்கள் இவ்விதமாய் இந்த தேசத்தில் ஒரு வருஷகாலம் மறைந்து வாஸம் செய்தார்கள் என்பது முதலாக உத்தரை கல்யாணம் நடந்தவரையில் ஏற்பட்ட விஷயங்களை மஹாபாரதத்தில் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மத்ஸ்யதேசம்[1]

அத்யாயம் 6

இருப்பிடம் : பூமியின் ஸ்வரூபம் சீதோஷ்ணம்

மத்ஸ்யதேசமானது குருதேசத்திற்கு நேர்மேற்கிலும், பாஹ்லிக தேசத்திற்கு தென்மேற்கிலும் ஸால்வதேசத்திற்கு வடகிழக்கு பாகத்தில் விபாசா நதியின் கிழக்கு பாகத்திலே நிலை பெற்றிருக்கிறது.

இந்த தேசத்தின் கிழக்கு பாகத்திற்கு குசல்யம் என்று ஒரு உபதேசமிருப்பதாயும் ஏற்படுகிறது. இந்த குசல்யம் என்னும் உபதேசத்தை பூர்வகாலத்தில் சிலர் ஆண்டுவந்தார்கள். அப்போது கௌடராஷ்ட்ரம் என்று இதற்குப் பெயர் உண்டாயிற்று. அதில் வாஸம் செய்பவருக்கு கௌடர்கள் என்று பெயரும் பரவலாயிற்று. அவ்விதமாய் கௌடராஷ்டிரத்தில் வாஸம் செய்பவர்களில் அனேகர் வடதேசத்துப் ப்ராம்மணர்களாயிருந்தார்கள். அவர்கள் கல்வியில் விசேஷ பயிற்சியை அடைந்தவர்களாய் ராடா[2] என்னும் அழகிய நகரத்தை சாஸ்த்ர முறைப்படி நிர்மாணம் செய்துஸரஸ்வதி சாலை (லைப்ரெரி) என்னும் பீடத்தையும் ஸ்தாபித்தார்கள். அந்த ஸரஸ்வதி சாலையிலிருந்து நூல்கள் பல இப்பொழுது அனேக தேசங்களில் பரவி இருக்கிறதாகவும் தெரியவருகிறது.

இந்த தேசத்தின் பூமியானது மிகவும் ம்ருதுவாயும், மல்லிகை புஷ்பத்தின் மணம் வீசுவதாயும் (அவ்வித பரிமளமுடையதாய்) மண்பாகமே அதிகமாயும் இருக்கிறது. இந்த தேசத்தில் எப்பொழுதும் விசேஷ மழை பெய்வதாலும் சதத்ரு நதியின் உபநதிகள் வழியாய் வெள்ளம் ஸம்பூர்ணமாய் விடாது வருவதாலும் கடலை கோதுமை முதலிய புஞ்சை தான்யங்களும் பழ வ்ருக்ஷங்களும், கொடிகளும், விசேஷமாய் பலிக்கின்றன. இந்த தேசத்தின் பூமிமுழுமையும் மேடுபள்ள மில்லாமல் ஸமபூமியாகவேயிருக்கும். விசேஷ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தோப்புகளும் சோலைகளும் நந்தவனம்போன்ற தோட்டங்களும் ஆகாயத்தை அளாவியது போலவே காணப்படுகின்றன. இந்த தேசத்தில் அதிகமழை பெய்துவந்தபோதிலும் ஜனங்கள் வாஸத்திற்குத் தகுந்த சீதோஷ்ணமுடையதாய் இருக்கும். இந்த மத்ஸ்ய தேசத்திலும், விராடம், சூரஸேனம், குந்தி, குந்தலம், ஆபீரம், ஸால்வம், த்ரிகர்த்தம் என்னும் இந்த தேசங்களிலும் இவைகளுக்குக் கிழக்கு பாகத்திலிருக்கும் பாஞ்சாலம், கோஸலம், நிஷதம் முதலான சில தேசங்களிலும் சித்திரை மாஸ ஆரம்பத்தில் தென்கிழக்கு திக்கிலிருந்து காற்றுவீச விசேஷ மழை பெய்யும். பிறகு கார்த்திகை மாஸம் முதல்தான் நல்ல வெய்யில் தோன்றி இந்த தேசத்தில் வஸிக்கும் ஜீவராசிகளுக்கு விசேஷ நன்மையை உண்டாக்கும்.

மலை; மலையில் உற்பத்தியாகும் சந்தன வகைகள்

இந்த மத்ஸ்யதேசத்திற்கும் இதற்கு வடக்கிலிருக்கும் த்ரிகர்த்த தேசத்திற்கும் நடுவில் துரந்தரம்[3] என்னும் ஒரு பெரிய பர்வதமானது எல்லைக் கல்போல் நிலை பெற்றிருக்கிறது. இந்த மலையின் கிழக்குபாகத்தில் இதன் தாழ்வரையின் ஸமீபத்திலேயே வடமேற்கு முகமாய் கொஞ்சம் தூரம் வரையில் வெகுவேகமாய் சதத்ருநதி ஓடுகிறது. இவ்விதமான துரந்தரமலையின் அருகில் இமயமலையின் உச்சியிலிருக்கும் அமிர்தஸரஸ் ஸமீபத்திலிருந்து உண்டாகி ஓடி வருகிற விபாசா நதியும் அந்த சதத்ரு நதியுடன் சேர்ந்து பிறகு ஒரு பெரிய மஹாநதிபோல் விரிந்து ஸால்வதேசத்தின் வடமேற்கு திக்கில் பரவி முடிவில் ஸிந்து மஹாநதியுடன் உபநதியாய் சேருகிறது. இந்த தேசத்தின் மேற்கு பாகத்திலும் தெற்கு பாகத்திலும் ஸால்வதேச ஸமீபத்திலும் சிறு குன்றுகள் உண்டு. இவ்வித குன்றுகளிலும் முன்சொன்ன மலைகளிலும் எப்பொழுதும் பனி அதிகமாகவே உண்டு.

இந்த தேசத்திலுள்ள மலைகளிலும் மலையின் ஸமீபமாயுள்ள காடுகளிலும் மிகவும் உயரமாய் வளரும் சோரா மரங்களும், அனேகவித காட்டுமரங்களும், அகில், சந்தனம் முதலிய பரிமள மரங்களும் நாவல் பலா முதலிய கனிமரங்களும் விசேஷமாய் வளர்ந்திருக்கின்றன. இந்த மத்ஸ்யதேசத்திலும் இதற்கு நான்கு புரத்திலுமுள்ள தேசங்களிலும் கச்சக்காயும், குந்துமணியும் விசேஷமாய் உண்டு.

நதி, நதியின் தரையிலுள்ள பூமியின் செழிப்பு

முற்கூறிய துரந்தரம் என்னும் மலையிலிருந்து சதகும்பா[4], நீலா[5] என்னும் இவ்விரண்டு நதிகளும் மிகவும் ஆழத்துடன் கூடியதாயும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யமுனா நதிபோலவே கருத்த ஜலமுடையதாயும், பெரிய ஜலச்சுழல் களுடனும் சேர்ந்து வடகிழக்கிலிருந்து தென் மேற்குமுகமாய் ஓடி இந்த தேச பூமியில், எங்கும் விரைவாய் பரவி சிறிய கால்வாய்களாக வும் ஓடுகின்றன. இந்த சதகும்பா நதியும், நீலாநதியும் ஸிந்து நதிக்கே உபநதிகளாக செல்லுகின்றன. இந்த தேசத்தின் வட கிழக்கிலிருந்து சில காட்டாறுகளும் ஓடி விபாசா நதிக்கும் சதத்ரு நதிக்கும் உப நதிகளாகச் செல்லுகின்றன.

ஆகிலும் இந்த தேசத்தின் உட்பிரிவாகிய குசல்ய தேசத்தில் நீலாநதியின் ஜலமே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. குரு, சூரஸேனம், குந்தி, குந்தலம் என்னும் தேசங்களுக்கு யமுனா நதியின் ஜலமே ஸ்நானம், பானம், பாய்ச்சல் முதலியவை களுக்கு எப்படி பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறதோ, அது போலவே மத்ஸ்யம், ஸால்வம், ஆபீரம் என்னும் தேசங்கள் சதத்ரு நதியின் அருகில் இருக்கிறபடியால் சதத்ரு நதியின் ஜலமே ஸகலகாரியங்களுக்கும் முக்ய ஆதாரமாய் இருக்கிறது.

ஸிந்து, யமுனை, கங்கை முதலிய ஜீவநதிகளிலிருந்து எப்படி அனேகவித வாய்க்கால்கள் ஓடிச் செல்லுகின்றனவோ அதுபோலவே இந்த சதத்ருநதியிலிருந்து அனேக வாய்க்கால்கள் அனேக முகமாய்ப் பிரிந்து பள்ளத்தாக்குகளில் சென்று இந்த மத்ஸ்யதேச பூமியை விசேஷமாய் செழிக்கச் செய்கிறது.

இமயமலையின் பீடபூமியிலிருந்து பாஹ்லிக தேசபூமி மட்டம் வெகுதாழ்வாகவும், அதைக்காட்டிலும் இந்த மத்ஸ்ய தேச பூமி தாழ்வாகவும், அதைவிட ஸால்வபூமி தாழ்வாகவும், அதைவிட ஆபீரஸௌவீர தேசங்களின் பூமிமட்டம் வெகுதாழ்வாகவும் இப்படி பரம்பரையாய் சதத்ரு நதியின் ஓரமாய் தாழ்வாய் சரிந்து இருப்பதால் இந்த தேசங்கள் எல்லாம் சதத்ரு ஸிந்து நதிகளின் வெள்ளத்தின் வண்டலை அடைந்து ஏராளமான விளைபொருள்களை கொடுக் கின்றன. மற்ற தேசத்தைப் பார்க்கிலும் இந்த மத்ஸ்ய தேசத்தின் பூஸாரத்தினால் இத்தேசத்திலுள்ள மா, பலா, செடி, கொடி, பயிர்கள் எல்லாம் வெகு சீக்கிரமாய் வளர்ந்தோங்கி நல்ல பலனை விளைவிக் கின்றன. இத்தேசத்தில் தோப்புகள், தோட்டங்கள், காடுகள் முதலிய இடங்களில் விசேஷமாய் மரங்களும், செடிகொடிகளும் வளர்ந்து படர்ந்திருப்பதால் இந்த தேசத்தில் எத்திசையிலும் மிக்க பசுமையான அழகிய தோற்றமே காணப்படும்.

இந்த தேசத்தில் ஓடும் சதகும்பா, நீலா என்னும் இரண்டு நதிகளின் கரையிலும் மற்றுமுள்ள செழிப்பு நிலங்களிலும், திந்துகம், கடம்பை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மா, புளி, இலவு, பூர்ஜரம் (பூவரசு) அரசு, புன்னாகம், நாவல் முதலிய மரங்களும், மல்லிகை, முல்லை, மந்தாரை, செண்பகம் முதலான புஷ்பச் செடிகளும் திராக்ஷை முதலிய சில இனிய பழக்கொடிகளும் பறவைகளுக்கு இனிமையான செடிகளும் வளர்ந்து நிறைந்திருக் கின்றன. கொஞ்சம் மணலும் மண்ணும் கலந்து குளிர்ச்சியான இந்த தேச பூமியில் திராக்ஷைக்கொடிகள் விசேஷமாய் வளர்ந்து ஸூர்ய வெளிச்சத்தை தோட்டங்களில் ப்ரவேசிக்க வொட்டாமல் குளிர்ந்த நிழலைக்கொடுத்துக் கொண்டு பருத்த பழக்குலைகளையும் ஏந்தி நிற்கின்றன. இந்த தேசத்திலும் த்ரிகர்த்தம் கேகயம் பாஹ்லிகம் குரு சூரஸேனம் குந்தி ஆபீரம் ஸிந்து வநாயு என்னும் தேசங்களிலும் சமரீமான்களும் கஸ்தூரிமான்களும் விசேஷமாய் காணப்படும்.

விசேஷம் : பாண்டவர் சரிதம், ஜனங்களின் குணம்

முன்பு பாண்டவர்கள் பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்கள் நிறைந்த ராஜஸபையில் துர்யோதனனுடைய தீயச்செயல்களை எல்லாம் ஸஹித்துக்கொண்டு ந்யாய மார்க்கத்திற்கு குறைவு வராதபடி பன்னிரண்டு வருஷங்கள் காட்டில் கழித்து பதின்மூன்றாவது வருஷத்தில் ஒளிந்து வாஸம் செய்யும்போது அந்த ஸமயத்தில் அவர்களைக் கண்டுபிடித்தால் மறுபடியும் பதின்மூன்று வருஷகாலம் காட்டிற்கு அனுப்பிவிடலாம் என்று ஆலோசனை செய்த துர்யோதன னால் அனுப்பப்பட்ட தூதர்கள் இந்த மத்ஸ்யதேசத்தின் வளப்பத் தைக்கண்டு, ''இங்கே புண்ய சீலர்களாகிய அந்த பாண்டவர்கள் வஸிக்கலாம்; அல்லது இதற்கு அடுத்த விராட தேசத்திலாவது வஸிக்கலாம்; இல்லாவிடில் இவ்விரண்டு தேசங்களுக்கு இவ்வித செழிப்பு இருக்கமாட்டா'' என்று இத் தேசத்தின் செழுமையைப்பற்றி வெகு புகழ்ச்சியாய் துர்யோதனன் ஸபையில் திரும்பிப்போய் பேசியதாக மஹாபாரதத்தில் கூறப்பட் டிருக்கிறது.

மேலும் விராட தேசத்தின் வடபார்ச்வத்தில் துர்யோதனனுடைய ஸேனைத்தலைவர்கள் பசுக்களைப் பிடித்து போர்விளைக்கக் கருதிய போது அனேக பசுக்கள் பயந்து இந்த மத்ஸ்யதேசத்தில் சரணமாக வந்து அடைந்ததாகவும் அது முதல் இந்த தேசத்தில் பசுக்கள் விசேஷமாய் வ்ருத்தி அடைந்து வருகிறதாகவும் இந்த தேசத்தில் இருக்கும் சில கிழவர்கள் இப்போதும் வழங்கி வருகிறார்கள். ஆகையால் இத்தேசத்தில் அனேக இடங்களில் பசுக்களை வளர்க்கக் கூடிய தர்மசாலைகளும், பசுமடங்களும் இப்பொழுதும் நிலை பெற்று வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாண்டவர்களின் காலத்துக்குப்பிறகு தர்மகேது, நீதிமான் முதலிய சில பூர்வீக அரசர்களால் இந்த தேசம் ஆளப்பட்டதாய் ஏற்படுகிறது. குசன் என்னும் அரசனுக்குப் புத்திரனான குசாம்பன் என்னும் அரசன் கனசாம்பீ என்னும் ஒரு அழகிய நகரத்தை பதரிகாசிரமத்திற்கு ஸமீபத்தில் நிர்மாணித்து அதில் அனேக குளங்களையும் குளங்களின் கரையில் அழகிய பூஞ்சோலைகளையும் ஏற்படுத்தியதாயும் ஏற்படு கிறது. அவ்விதமாய் கௌசாம்பீநகரம் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அனேக ஆயிர வருஷ காலமான பிறகு ஸால்வம், விதர்ப்பம் என்னும் தேசங்களிலிருந்து அனேக கௌட ப்ராம்மணர்களும் மற்றுமுள்ள கௌடஜாதியரும் உலகில் பரவ ஆரம்பித்து அந்த கௌசாம்பீ நகரம் முதல் கிழக்குமேற்காய் இந்த மத்ஸ்ய தேசத்தின் மேற்கு வரையில் வெகுதூரம் பூமியை ஆக்ரமித்துக்கொண்டு அரசுசெய்ய ஆரம்பித்தார் கள். இவ்விதமாய் கௌட ப்ராம்மணர்கள் சுமார் நூறு வருஷ காலம் வரையில் இந்த பூமியை ஆண்டுவந்தும் அனேக மண்டபங் களையும் விஹாரஸ்தானங்களையும் கட்டி வைத்திருப்பதும் இப்போதும் புலப்படுகின்றன.

அன்றியும் கௌடர்களின் அரசாக்ஷிகாலத்திலேயே இந்த மத்ஸ்ய தேசத்தின் நடுவில் ராடா என்னும் ஓர் பெரிய நகரம் சில்ப சாஸ்திர முறைப்படி நிர்மாணிக்கப்பட்டதாய் இப்பொழுதும் ராடா என்றே ஹிந்தி பாஷையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்ததேசத்தில் அனேக வர்த்தகர்களும், நாநாசாஸ்த்ரங்களில் நன்றாய் தேர்ச்சி யடைந்த அனேக வித்வான்களும், விசேஷதனவான்களும், இப் பொழுதும் குலமுறை ஆசாரத்தை விடாமல் நடத்தி வருகிறார்கள். மேலும் இந்த தேசத்தில் வஸிக்கும் ஸ்த்ரீகளும் புருஷர்களும் அதிக அழகையுடையவர்களாயும், ஸூக்ஷ்ம புத்தியுடையவர்களாயும், விடாமுயற்சியுடையவர்களாயும் இருக்கிறார்கள். ஆகிலும் இவர் களுடைய ஆடையும், ஆபரணமும் ஓர்வித விலக்ஷணமாய்த் தோன்றும்.

❋ ❋ ❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. Formerly this might have been in the country around Jaipur including Alwar, west of Surasena Desa.

2. இந்த நகரத்தின் மேன்மையைப் பற்றி ப்ரபோத சந்த்ரோதயத்தில் விசேஷமாக் க்ருஷ்ண மிச்ராயதிகள் கூறியிருக்கிறார்.

3. இந்த பாரதபூமியில் விந்த்யமலைக்கும் இமயமலைக்கும் நடுவில் இந்த பர்வதம் நின்றுகொண்டு, பூமிக்குள் வெகுதூரம் ஆழத்தில் சென்று பூமியை சுமப்பதுபோல் தோன்றுகிற படியால் இதற்கு துரந்தரம் என்று காரணப்பெயராயிற்று.

4. சதம் என்றால் நூறு. கும்பம் என்றால் குடத்திற்கும் பீப்பாய்க்கும் பொதுப்பெயர். முற்காலத்தில் இந்த நதியை தாண்டுவதற்காக நூற்றுக்கணக்கான பீப்பாய்களைக் கட்டி தோணி என்னும் படகை இதில் செலுத்தி ஜனங்கள் அக்கரையை அடைந்தது பற்றி இந்த நதிக்கு சதகும்பா என்று பெயர் உண்டாயிற்று.

5. இந்த நதியின் ஜலமானது அதிக நீலவர்ணமாய் இருப்பது பற்றி இதற்கு நீலா என்ற பெயர் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

த்ரிகர்த்த தேசம்[1]

அத்யாயம் 7

இருப்பிடம் : பூமியின் குணம்

த்ரிகர்த்த தேச[1]மானது கேகய தேசத்திற்கு தென்மேற்கிலும் மாத்ரதேசத்திற்கு தெற்கிலும் சதத்ருநதியின் ஸமீபத்தில் இருக்கிறது. இந்த தேசத்தின் மேற்குபாகம் முழுமையும் சதத்ருநதியின் வெள்ளப் பெருக்கினால் மிகுந்த செழுமையை அடைந்ததாயும், மற்ற மூன்று பாகபூமி கரடுமுரடாயும், மிகவும் ஆழ்ந்த மேடு பள்ளங்களையுடைய தாயும், கடினமாயும் சிலவிடங்களில் சுண்ணாம்புக் கற்பாறைகளால் சூழப்பட்டதாயுமிருக்கும்.

இவ்வித பூமியின் இயற்கை குணத்தினால் இந்த தேசத்தில் குளிர், மழை, பனி எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும் மண்ணின் அமைப்பு குணம் உஷ்ணகரமாகவே பெரும்பாலும் காணப்படும். இந்த தேசத்திலும் இதற்கு ஸமீபமாயுள்ள கேகயம், பாஹ்லிகம், மாத்ரம், காந்தாரம் என்னும் தேசங்களில் வெய்யில் காலத்திலும் விசேஷ வெய்யிலை ஒருவரும் காணவே முடியாது.

மலை

இந்த த்ரிகர்த்த தேசத்தின் வடக்கிலும், கிழக்கிலும்ஓடும் முக்ய நதிகளின் கரையில் சிறிய மலைகளும் மலைக் குன்றுகளும் காணப்படுகின்றன. அவ்வித குன்றுகளில் ஒரு பெரிய குன்றுக்கு ஹரிகிரி என்றும் விஷ்ணுகிரி[2] என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வித மலைக் குன்றுகளின் ஸமீபத்தில் சில ஸமயங்களில் அதிகமழை, கடுங்குளிர், நடுக்கக்காற்று இவைகள் அதிகமாகவே தோன்றுவதால் இத்தேசத்திலுள்ளார் ஸ்நானம் முதலிய செய்வதற்குங் கூட வருத்தத்தை அடைந்து கொண்டேசெய்யும்படி நேரிடும் வழக்கமுண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதிகள் செல்லும் நிலத்தின் வளப்பம்

இந்த தேசத்தின் வடமேற்கு பாகத்தில் ஐராவதீ நதியும் கிழக்கு பாகத்தில் சதத்ரு நதியும் ஓடுகிறபடியால் இவ்விரண்டு நதிகளின் ஜலப்பெருக்கானது இந்த தேச பூமியின் எல்லை முழுமையும் பெரும்பாலும் நனைத்துக்கொண்டு நல்ல செழுமையையும் தான்ய உற்பத்தியையும் விசேஷமாய் விளைவித்துக்கொண்டு வருகிறது.

சதத்ரு நதியின் ஜலத்தைவிட ஐராவதீ நதியின் ஜலமே சரீரத்திற்கு நல்ல ஸுகத்தை உண்டு பண்ணத் தகுந்தது. இமயமலையின் மேல்பாகத்தில் உற்பத்தியாகி மாத்ரதேசத்தில் கிழக்கு முகமாய் கேகய தேசத்தின் வழியாய் ஓடிவருகிற ஐராவதீ[3] நதியானது இந்த தேசத்தின் மேற்கு எல்லை முழுமையிலும் பரவி பிறகு ஸிந்து மஹாநதியுடன் சேர்ந்துவிடுகிறது. அவ்விதம் சேருமிடத்திற்கு கொஞ்சம் தெற்கில் இத்தேசத்தின் கிழக்கு பாகத்தில் ஓடும்முன் சொன்ன அந்த சதத்ருநதியும் அந்த ஸிந்து மஹாநதியுடனே சேர்ந்தோடுகிறது. ஆகையால் வெகுவாய் நீண்டிருக்கும் இந்த தேசத்தின் நிலமானது சிற்சில விடங்களில் விசேஷ செழிப்பாயிருப்பதுடன், இயற்கையாய் ஸிந்து நதியின் ஸமீபத்தில் வெண்மணல் இருப்பதுபோல் சிற்சில இடங்களில் வெண்மணலையும் அடைந்து செழித்தோங்கிய மரங்களாலும், தோப்புகளாலும் சூழப்பட்டதாய் இருக்கிறது.

விசேஷம் : த்ருஷ்டகேது சரித்ரம்

ப்ரதாபகேது என்னும் தார்மிகஅரசன் இந்த தேசத்தை வெகுநாள் ந்யாயமாய் பரிபாலனம் செய்து வந்தான். அவனது புத்ரனாகிய த்ருஷ்டகேது என்பவன் குருதேசத்தில் மிகக் கொடுமையாய் நடந்தேறிய மஹாபாரத யுத்த ஸமயத்தில் பாண்டவர்களுக்கு விரோதமாய் துர்யோதனன் பக்கலில் சேர்ந்து அவர்களுடன்போர் புரிந்து முடிவில் அர்ஜுனனால் கொல்லப்பட்டான். பிறகு இந்த தேசத்தை பல மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். நெடுநாள் சென்றவாறே, ஜைனரில் சிலர் இந்த தேசத்தில் நாளடைவில் குடியேறி ராஜ்யத்தை ஆண்டு வந்ததாகவும் தெரியவருகிறது.

❄ ❄ ❄

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. Jalandhar, a part of the District of Lahore.

2. முன்பு ஒரு ஸமயத்தில் விதர்ப்ப தேசத்தில் இருக்கும் ப்ரம்மகிரியில் ப்ரம்மா தவம் செய்து கொண்டிருக்கையில் அவரது மனோரதத்தை நிறைவேற்றும் பொருட்டு தர்சனம் கொடுத்து ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் இந்த தேசத்திலிருக்கும் இம்மலையின் மேல் தவம் செய்யும் ருசீகன் என்னும் மஹரிஷிக்கும் தர்சனம் கொடுப்பதற்காக தோன்றி அது முதல் திவ்ய அர்ச்சாரூபமாய் நின்றுவிட்டபடியால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

3. (முன்பு இமயமலையின் ஓர் பாகத்தில் கங்கையின் அருகில் நாணல் காட்டில் உதித்த ஷண்முகன் தேவகார்யத்திற்காக அச்வினி தேவிகளினால் போஷிக்கப்பட்டு பாலப்ராயத்திலேயே அதிக பலத்தையடைந்து வருகையில் அக்காட்டிலுள்ள ம்ருகங்களுடன் பால விளையாட்டை கற்றுக்கொண்டு வரும்போது ஒருநாள் அந்த ஷண்முகன் ஐராவதம் என்னும் தேவயானையை தன் பலத்தினால் வெகு ஸுலபமாய் தூக்கி அருகிலுள்ள ஒரு சுனையில் எறிந்து விட்டபடியால் அதில் முன்னமேயே நிறைந்திருந்த ஜலமானது இந்த நதியாய் அவ்விடத்திலிருந்து கிளம்பி ஓட ஆரம்பித்தது. ஐராவத யானையின் ஸம்பந்தம் பெற்றுக் கிளம்பிய நதியாதலால் இதற்கு அதுமுதல் ஐராவதீ என்பதாகவே பெயர் வழங்கலாயிற்று.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கேகய தேசம்[1]

அத்யாயம் 8

இருப்பிடம் : பூமியின் வளமை

கேகயதேசமானது குருதேசத்திற்குதென்மேற்கிலும் (முன் சொன்ன) த்ரிகர்த்த தேசத்திற்கு வடக்கிலும், மத்ரதேசத்திற்கு தெற்கிலும் ஐராவதீ நதியின் கரையோரத்தில் நிலைபெற்றிருக்கிறது.

இந்த தேசத்தின் தெற்கு பாகத்திற்கு ஸ்வராஷ்ட்ர தேசம் என்று பெயர். இதுபோலவே வடக்கு பாகத்திற்கு வடக்கு ஸ்வராஷ்டம் என்றும் உத்தர கேகயம் என்றும் இவ்விதமாய் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இது சிறிய தேசமாய் இருந்தபோதிலும் வடக்கிலும் தெற்கிலும் இவ்விதம் ஸ்வராஷ்ட்ர நாமதேயமும் முக்யமாகிய நடு பாகத்திற்கு கேகயம் என்னும் நாமதேயமும் நெடுநாளாய் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த தேசத்தின் பூமியானது வடக்கிலும் வடகிழக்கிலும் மிகவும் உயரமாகவும் தெற்கிலும் தென்மேற்கிலும் மிகவும் தாழ்ந்ததாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. (செங்குத்தாய்) ஒரு பக்கம் மிகவும் உயர்ந்தும் மற்றொரு பக்கம் மிகவும் தாழ்ந்திருக்கும் தேசங்களுள் இந்த கேகயதேசம் முதல் என்று கணக்கிடப்படுகிறது.

த்ரிகர்த்த தேசத்திற்கு ஏற்பட்ட சீதோஷ்ண முறையும், பூமி வளப்பமும், பெரும்பாலும் இந்த தேசத்திலும் உண்டு. ஆகிலும், இந்த தேசத்தில் குளிர், மழை கொஞ்சம் அதிகமாய் இருக்கும்.

மலை ம்ருகங்கள்

இந்த தேசத்தின், வடக்கு பாகத்தில் அருணகிரி என்று ஒரு பெரியமலை இருந்து வருகிறது. இம்மாதிரியாய் அருணகிரி என்னும் ஓர் மலை தென் இந்தியாவில் காஞ்சீபுரத்திற்கு மேற்கில் இருப்பது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பற்றி அதற்கு தென் அருணகிரி என்றும் இதற்கு வட அருணகிரி என்றும் சிலர் பெயர் வழங்குவார்கள். இந்த வட அருணகிரியின் தொடர்ச்சியானது சதத்ரு நதியின் கரையோரமாய் வெகுதூரம் வரையில் வடக்கில் நீண்டு வளர்ந்திருக்கிறது. அதின் நடுவில் கொஞ்சம் இடைவெளியுமுண்டு. இம்மலையின் சிகரங்கள் மிகவும் உயரமாய் தோன்றுகின்றன.

இம்மலையின் சுற்றுப்பக்கங்களில் கருங்குரங்கு, பெரிய மலைப் பாம்பு, கரடி முதலிய மலை ம்ருகங்களும் உண்டு. ஆகிலும் இந்த தேசத்தில் பெருங்காடுகள் விசேஷமாய் கிடையாது. தேசம் முழுமை யிலும் பச்சையாகிய மரங்களின் தொகுதியும் நல்ல காற்றும் அழகிய செடி கொடிகளும் கண்களுக்கு அழகாய்த் தோன்றும். பூமிவளம் மிகவும் நன்மையானபடியால் துஷ்ட ம்ருகங்கள் இதில் அதிகம் கிடையாது.

நதி

அந்த கேகயதேசத்தின் தெற்குமுனையில் முற்கூறிய அருணகிரி யின் தொடர்ச்சியின் முடிவில் விபாசா என்னும் நதியானது சதத்ரு என்னும் மஹாநதியுடன் சேருகிறது. அந்த நதிஸங்கமத் துறையே மத்ஸய தேசத்திற்கும் த்ரிகர்த்த தேசத்திற்கும் கேகய தேசத்திற்கும் எல்லையாகும். இமயமலையின் தெற்கு பாகத்தி லிருக்கும் இந்த விபாசா நதியும் உண்டாகிவருகிறது. ஆகிலும் சதத்ருநதிபோல் அவ்வளவு ஆழமும், அகலமும், வேகமும் விபாசா நதிக்கு கிடையாது.

இந்த விபாசா நதியின் ஜலமோ, மிகவும் ருசியாய் இருக்கும். சரீரத்திற்கு நல்ல காந்தியைக் கொடுத்து அக்னிபுஷ்டியையும் நன்றாய் வளரச் செய்யும். சதத்ருநதியைவிட ஐராவதீ நதியானது மிக ஆழ முடையதாயும் பெரிய அலைகளையுடையதாயும் எப்பொழுதும் ஸம்பூர்ண ப்ரவாஹத்துடன் வரும். அவ்வித ஐராவதீ நதியும் இந்த தேசத்தின் மேற்கிலும், வடமேற்கிலும் வளைவாய் பூமியைப் பிளந்து கொண்டு செல்வதுபோல் ஓடி பிறகு த்ரிகர்த்த தேசத்தின் மேற்கு எல்லையாய்ச் சென்று வநாயு தேசத்தின் ஸமீபத்தில் ஸிந்து மஹாநதியுடன் சேர்ந்தோடுகிறது.

விசேஷம்

தானம் தர்மம் செய்யும் விஷயத்தில் இவனுக்கு ஒருவரும் நிகரில்லை என்று எவ்வுலகத்திலும் அப்படிப்பட்ட நற்கீர்த்தியை அடைந்த சிபி[1] என்னும் சக்ரவர்த்தியானவன் இந்ததேசத்தில் சில

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முக்ய நகரங்களை நிர்மாணம் செய்து வெகுநாள் ஆண்டுவந்தான். அவனுக்குப் புத்ரனான கேகயன் என்னும் அரசனும் நாளடைவில் தனது பிதாபோலவே சக்ரவர்த்தி பதவியைப் பெற்று வெகு ந்யாயமுறையுடன் இந்த தேசத்தை விசேஷமாய் அரசுபுரிந்து வந்தகாலம் முதல் இதற்கு அவ்வரசனின் பெயரைக்கொண்டே கேகயமென்று வழங்கலாயிற்று. இதற்குமுன் இவ்வரசனின் தகப்பனாகிய சிபிசக்ரவர்த்தி ஆளும் காலத்தில் சிபி தேசம்என்று சிலர் வழங்கிவந்ததாக ஏற்படுகிறது. இந்த கேகயன் வம்சத்தில் உதித்த கைகேயி என்பவளை வடகோசல தேசத்தின் சக்ரவர்த்தியாகிய தசரத மஹாராஜன் கல்யாணம் செய்து கொண்டபிறகு, இந்த கைகேயி தேவியே[2] ராவண ஸம்ஹாரத்திற்கு முக்ய காரணமாக விளங்கினாள். பிறகு ஶ்ரீராமாவதார காலத்தில் இந்த கைகேயி தேவியின் ஸஹோதரராகிய யுதாஜித் என்னும் மஹானும் வெகு விமரிசையாய் இந்த தேசத்தை ஆண்டுவந்ததாகவும் ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. சிபி சக்ரவர்த்தியின் நற்குணங்களையும் இவனது சரித்ரத்தையும் போஜ சம்புவிலும், மஹாபாரதத்திலும் விசேஷமாய்க் காணலாம்.
2. அனேகவித கல்யாண குணங்கள் நிறைந்த, ஶ்ரீராமனிடத்தில் இவள் முதலில் மிகவும் அன்பாய் இருந்ததையும், பிறகு மந்தரை என்னும் கூனியின் கலகத்தினால் ராமனது பட்டாபிஷேகத்தை மறுதளித்ததையும், ராவண ஸம்ஹாரத்தை ராமன் மூலமாய் சீக்கிரத்தில் செய்ய வேண்டிய நிமித்தம் தெய்வத்தினால் தூண்டப்பட்டவளாய் தர்ம நிதியான தசரதரிடத்தில் இவள் இரண்டுவரம் கேட்ட முறைமையையும் மற்றுமுள்ள இவள் சரித்திரத்தையும் வால்மீகி ராமாயணத்திலும் போஜ சம்பு அயோத்யா காண்டத்திலும் தெளிவாய் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாஹ்லிக தேசம்[1]

அத்யாயம் 9

இருப்பிடம் : பூமியின் நிலைமை

பாஹ்லிக தேசமானது ஸரஸ்வதீ நதிக்கும் விபாசா நதிக்கும் நடுவில் இமயலையின் தெற்கு பாக அடித்தொடர் முதல் வெகு தூரம் தெற்கு வடக்காய் நீண்டு மத்ஸ்யதேசத்தின் வடக்கு எல்லைப்புறம் வரையில் பரவி இருக்கிறது.

இந்த தேசமானது காம்போஜ தேசத்தின் தெற்கு பாகத்தில் சில ப்ரதேசத்தையும், இமயமலையின் மேல் ஸிந்துநதி ஓடும் பாகத்தையும், கிராத தேசத்தின் கிழக்கு எல்லை வரையிலும் அவ்வளவு விசாலமாய் முன்பு ஒரு ஸமயத்தில் பரவி இருந்ததாக 'சக்திஸங்கமதந்திரம்' என்னும் இதிஹாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்ததேசத்தின் வடக்கு எல்லை நுனியில் தான் ஹ்ருஷீகேச க்ஷேத்ரம் நிலைபெற்று விளங்கி வருகிறது. சதத்ரு, விபாசா, ஸரஸ்வதீ என்னும் இம்மூன்று நதிகள் உண்டாகும் ஸ்தலமும் இந்த பாஹ்லிக தேசத்தில்தான் அடங்கி யிருக்கிறதாக ஏற்படுகிறது.

இந்த தேசத்திற்கு வடக்கு பாகத்தில் மாஹிகம், சகிகம், தால்வி என்று மூன்று உபதேசங்கள் உண்டு. அவைகள் எல்லாம் இமய மலையின் அடித்தொடர் வரையில் பரவியிருக்கின்றன. தேசத்தின் தெற்கு முனையில் தான் பாஹ்லிகம் என்னும் பிரதேசம் நிலை பெற்றிருக்கிறது.

இவ்வித பாஹ்லிகம் என்னும் ப்ரதேச பாகத்தில்தான் வெண்மை யாகிய மணல் சில சிலவிடங்களில் இருக்கின்றன. முன்கூறிய மூன்று உபதேசங்களில் கடினமான கற்பாறைகளும், மேடுபள்ளத்தாக்கு களுமே விசேஷமாய் உண்டு. இந்த தேசத்தில் எப்பொழுதும் விசேஷ குளிரும் மழையும் விடாமல் பெய்துகொண்டே இருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை

இந்த தேசத்தின் வடக்கு பாகத்தில் இமயமலைத்தொடர் குன்றுகளே அங்கங்கு பரவி இடையிடையில் சுருங்கியும், உயரமாகவும், நீண்டும், திக்குகளை அளாவியதாகவே புலப்படு கின்றன. அவைகள் எல்லாம் இமயமலையின் பாதமலை என்றே வழங்கப்பட்டுவருகின்றன. அவ்வித பாதமலைகளுக்கே ப்ரத்யந்த பர்வதங்கள்[1] என்றும் மற்றொரு பெயருமுண்டு. இந்த மலைகளில் பெரிய பனிக் கட்டிகளும், மேடு பள்ளத்தாக்குகளும் பெரிய பனி மடுவுகளும் துஷ்ட ம்ருகங்களுமே ஏராளமாய் நிறைந்திருக்கின்றன. இவ்வித மலைகளின் ஸமீபத்தில்கூட ஜனங்கள் செல்ல முடியாது. இந்த தேசத்தின் தெற்கில் மத்ஸ்ய தேசத்திற்கு ஸமீபத்தில் மதுமான்[2] என்று ஒரு மலை உண்டு. இதுவும் மிகப் பெரியதேயாகும்.

நதி : பனியின்மிகுதி

இந்த தேசத்தின் தெற்குபாக பூமியில்தான் செழிப்பு நில மிருக்கிறது. அவ்வித செழிப்பான ப்ரதேசத்தில் விபாசா நதியின் ஜலப்பெருக்கே விசேஷமாய் பல வழிகளாய்ப் பிரிந்து வருகிறது. வடக்கிலிருந்து பனி மடுவுகளிலிருந்தும் மாசி, பங்குனி, சித்திரை மாசங்களில் பனித்தண்ணீர் நதிகளும், ஏராளமாய் வருவதுமுண்டு. அந்த பனிக்கட்டிகள் இரண்டு மூன்றுநாள் வரையில் வெய்யிலில் உருகாமல் இருக்கும். நடந்து செல்லக்கூடிய மார்க்கங்களில் சில ஸமயத்தில் அவ்வித பனிக்கட்டி வந்து தங்கி, வழியை மறைக்குமே யாகில் அவ்விடத்திலுள்ள ஜனங்கள் கோடாலி, மண்வெட்டி முதலிய ஆயுதங்களினால் அப்பனிக்கட்டியை உடைக்கிற வழக்கமும் இன்னமும் நடைபெற்றுவருகிறது. இந்த தேசத்தின் தெற்கு முகப்பில் மதுமான் என்னும் மலையிலிருந்து சிறுகாட்டாறுகளும் பெருகி சில பூமியைச் செழிப்பிக்கச் செய்து தெற்குமுகமாய் ஓடி விபாசாநதியில் வீழ்ந்து ஸிந்து மஹாநதியுடனே சேர்ந்தோடுகின்றன.

விசேஷம் : குதிரையின் மிகுதி ஜுஊலை கதை

இந்த பாஹ்லிக தேசத்தின் தெற்கு பாகம் முழுவதிலும் அங்கங்கு சிறிய காடுகளிலும் ஒருவித நல்ல ஜாதிக்குதிரைகள் நூற்றுக்கணக்காக உலாவுகின்றன. இந்த தேசத்தில் பிறந்து வளரும் பெண்குதிரைகள் மிகவும் நல்ல ஜாதி என்று அச்வ சாஸ்த்ரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் இந்த தேசத்தில் உதித்த பெண் குதிரைகளும், ஆண் குதிரைகளும் விசால நெற்றியையும், அழகிய கண்களையும், பருத்த தொடைகளையும் உடையதாயும் மிகவும் பராக்ரமமுள்ளதாயும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேகத்தில் சிறந்தவையாகவும் அகப்படுகின்றன. இவ்வித உத்தம ஜாதிக் குதிரைகளாலேயே இந்த தேசத்திற்கு விசேஷ கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த தேசத்தின் வடக்கு பாகத்தில் முன்கூறிய மாஹிகம், சசிகம், தால்வி என்னும் பாகங்களிலும் சில குதிரைகளும், யானைகளும் உண்டு. இவைகள் அவ்வளவு ச்லாக்யமான குணம் நிறைந்தவைகள் அல்ல. ஏனெனில், இத்தேசத்தின் விசேஷமான பனியே அதற்குக் காரணமாகும். இந்த பாஹ்லிகத்தின் தென்பாகத்தில் உண்டாகும் குதிரைகளை மத்ஸ்யம், கேகயம், த்ரிகர்த்தம், மாத்ரம், பாஞ்சாலம், சூரஸேனம், விராடம் முதலிய தேசங்களில் கொண்டு போய் சிலர் வளர்த்து வருகிறார்கள். இந்த தேசத்தின் மண்ணின் குணத்தினாலேயே வெண்மையான பசுக்களும் இங்கு உண்டா கின்றன. அவ்வித பசுக்களின் சரீரத்தில் ஒரு ரோமம்கூட வேறு வர்ணமில்லாமல் சுத்த வெண்மை நிறம் இருக்கும். இவைகளின் பால்மிகவும் சுத்தமாய் சரீரத்திற்கு நல்ல புஷ்டியைத் தரும். இந்த பாஹ்லிக தேசத்திலும் மத்ஸ்ய தேசத்திலும் வெகு கீர்த்திபெற்ற குதிரைவைத்யர்கள் வெகுநாளாய் குதிரை, சிகித்ஸை செய்து வருகிறார்கள். எப்படிப்பட்ட முரட்டுத்தனமுள்ள குதிரை களையும் வெகு ஸுலபமாய் பழக்கி யஜமானனுடைய கருத்துபோல் நடந்து கொள்ளும்படி அவ்வளவு உபாயங்களையும் அக்குதிரைகளுக்கு அவர்கள் பயிற்சி செய்வித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தேசத்தில் சில மாஸங்களில் விசேஷமாய் பனி பெய்யும் ஸமயத்தில் சில குதிரைகள் அந்த குளிர் (பாதையை) வெதிர்ச்சியைத் தாங்க முடி யாமல் அங்கங்கு மலைகளின் குகைகளிலும், புதர்களிலுய் உட்சென்று பனிகாலத்தை கழித்துவிட்டு வெய்யில் காலம் ஆரம்பித்தபொழுதே வழக்கப்படி உலாவ ஆரம்பிக்கும். அவ்விதமாய் வெய்யில் காலம் வந்தவுடனே இத்தேசத்துக் குதிரைகளுக்கு பிடரிமயிரும் வால் மயிரும்அதிக நீளமாயும் அழகாயும் வளரும். உடம்பில் பளபளப்பான நல்ல காந்தியும் வீசும். மனிதர்களுக்கு இருப்பதுபோலவே இந்த தேசத்தில் பிறந்த குதிரைகளுக்கும், வநாயு தேசத்தில் பிறந்த குதிரை களுக்கும், புணர்ச்சி காலங்களில் விசேஷ வெட்கமுண்டு. ஆகையால் இந்தக் குதிரைகள் புணர்ச்சியை ஒருவரும்பார்க்க முடியாது. ஒருவரும் காணாதபடி இந்த தேசத்துப் பெண் குதிரைகளும் மறைவாகிய ஸ்தலங்களிலேயே குட்டிபோடும். உலகத்திலிருக்கும் ஸகலவிதமான பெண் குதிரைகளும் விசேஷமாய்ப் பகற்காலத்தில் குட்டிபோடாது. இரவிலேயே ப்ரஸவிக்கும் வழக்கம். இந்த தேசத்துப் பெண் குதிரை கள் அநேகமாய் இரவிலேயே குட்டிப்போடும். பகலில் பிறக்கும் குட்டிகளுக்கு வயது கொஞ்சம் நல்ல பலம் உண்டாகாது. இரவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிறக்கும் குட்டிகளுக்கே ஸகலவித நன்மைகளுமுண்டு. இந்த தேசத்துப் பெண் குதிரைகளுக்கு உத்தம வாமீ என்றும், உத்தம படபீ என்றும் பெயர் வழங்குவார்கள். இந்த ஜாதி பெண் குதிரைகளுக்கு எப்பொழுதும் அதிக விலையும் உண்டு. இவைகளின் இயற்கை குணமும், ஜாதியும் நடையில் தேர்ச்சியும் பலவிதமாய் அச்வ சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த தேசத்திலுள்ள பகுதான்னியம் என்கிற அக்ரஹாரத்தில் ஆச்வலாயன கோத்திரத்தில் பிறந்த ப்ரம்மசர்மா என்னும் ப்ராம்மணர் தமது ஜாதிக்கு தகாத தயிர் பால் வஸ்திரம் இதுகளால் வ்யாபாரம் செய்து ஏராளமான த்ரவ்யத்தை ஸம்பாதித்தும் பரான்ன போஜனம் செய்து காலக்ஷேபஞ் செய்துவந்தான். அவனுடைய பத்நியாகிய ஸுசீலை என்பவள் தன் புருஷனிடம் இப்படி பரான்னத்தை புஜிப்பது சரியல்லவென்றும், தன் கணவனுக்கு அப்ரியமாய் நடக்கிற ஸ்திரீ, பிக்ஷை எடுத்து சாப்பிடாத ஸந்யாசி, ப்ராம்மண விஸ்வாசம் இல்லாத ராஜா, அக்னி ஹோத்ரமில்லாத க்ரஹஸ்தர் இவர்கள் நால்வரும் நாசமடைவார் களென்று சாஸ்த்ரம் சொல்லுவதால் ஏராளமாய் தானம் செய்யும்படிக்கும் அச்வத்த வ்ருக்ஷத்தை வைத்து அதை போஷிக்கும் படிக்கும் தெரிவித்தாள். அப்படிச் செய்வதிலும் மத்யானம் ஸாயங்காலம் இராத்திரி செவ்வாய்க் கிழமை வெள்ளிக்கிழமை இவைகளில் மட்டும் அச்வத்தஸேவனம் கூடாது. ச்ராத்த காலம் சனிக்கிழமை இதுகளில் இந்த வ்ருக்ஷத்தை பூஜிப்பவன் பிதுர்களை திருப்தி செய்விக்கிறான். காலையில் இந்த மரத்தை ஆலிங்கனம் செய்துகொள்ளுபவனுக்கு வ்யாதி ம்ருத்திய பயம் நீங்கும், கண்பாதை நீங்கும், திங்கட்கிழமை அபிஷேகம் செய்பவன் ஞாயிற்றுக்கிழமை அபிஷேகம் செய்பவன் க்ரஹபாதையை பெறான். இப்படியாக ஸுசீலை தன் கணவனுக்கு நல்ல புத்திமதி கூறி துலாகாவேரி மாஹாத்மியத்தையும்[2] சொல்லி அதன் நிமித்தமாக ப்ரம்மசர்மாவின் உயிரை எடுத்துப்போக யத்தனித்த சித்ரகுப்தனை நமஸ்கரித்தாள். இப்படி நமஸ்கரித்தவளுக்கு அவன் ஆசீர்வாதம் செய்யும்படி நேரிட்டது. ஏனென்றால் சிறியவர்கள் நமஸ்கரித்தால் பெரியோர் ஆசீர்வதிக்காவிட்டால் அந்த பெரியவரின் வயது குறைந்து சிறிய வரை வந்து அடையும். அதிலும் உபநயனம் ஆகாதவன் குருவுக்கு வந்தனம் செய்தால் சிறுவனுக்கு ஆயுஸு புத்தி இதுகளை ஆசீர்வதிக்கவேண்டும். ப்ரம்மசாரி அல்லது க்ருஹஸ்தன் அவனது பெயரைக் குறிப்பிட்டு தீர்க்க ஆயுஸுக்கு கிடைக்கும்படி ஆசீர்வதிக்க வேண்டும். கல்யாணம் ஆகாத பெண் ஒரு ப்ராம்மணனை நமஸ்கரித்தால் நல்ல கணவன் கிடைக்கும்படிக்கும் விவாஹ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மானவளானால் தீர்க்கஸுமங்கலியாக இருக்கும்படிக்கும் விதவை யானால் ஞானமடையும்படிக்கும் ஆசீர்வதிக்க வேண்டும். இப்படியாக சித்ரகுப்தனிடமிருந்து ஆசீர்வாதம்பெற்று தன் புருஷனுக்கு நீண்ட ஆயுளை ஸம்பாதித்துக்கொடுத்தாள்.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. ப்ரத்யந்த பர்வதங்கள் என்றால் - பெரிய மலைகளின் ஸமீபத்திலிருக்கும் சிறுபர்வதங்கள் என்றும், குன்றுமலை என்றும், பாதம் என்றும் வடமொழியின்படி கருத்து ஏற்படுகிறது.
2. இந்த மலையிலுள்ள காடுகள் அதிக செழுமையுடன் இருப்பதால் அதில் ஏராளமான தேன்கூடுகள் இருந்து வருகின்றன. ஆகையால் இம்மலைக்கு மதுமான் என்று காரணப் பெயர் உண்டாயிற்று.
3. இதன் மற்றய விவரங்களை ஆக்நேயபுராணம் துலாகாவேரி மாஹாத்மியத்தில் பார்க்கவும்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோஸல தேசம்[1]

அத்யாயம் 10

இருப்பிடம்

கோஸலதேசமான்து பாஞ்சாலதேசத்திற்கு தென்கிழக்கிலும் கங்கோத்பத்திஸ்தலம், தேவப்ரயாகை, கேதார க்ஷேத்ரம், நேபாளம் இவைகளுக்குத் தெற்கிலும் ஆரட்ட விதேஹ தேசங்களுக்கு மேற்கிலும், நிஷததேசத்திற்கு வடக்கிலும் நைமிசாரண்யத்திற்கு வெகுதூரம் கிழக்கிலும், ஓர் பெரிய அகன்றபூமியில் தங்கியிருக்கிறது. ஆர்யா வர்த்தத்திற்கும், ப்ரம்மவரத்தத்திற்கும் இந்த கோஸ்ல தேசம்தான் வடக்கு எல்லைக் கல்லுபோல் நிற்கிறது. விதர்ப்ப தேசம்தான் தெற்கு எல்லைக்கல்லுபோல இருக்கிறது. அதாவது - கங்கை, யமுனை என்னும் இந்த மஹாநதிகளுக்கு மேற்குபாகத்தில் காச்மீரம், காந்தாரம், பர்ப்பரம், வநாயு,ஸிந்து, ஸௌவீரம், மாளவம், அவந்தி, குந்தி, சூரஸேனம், மத்ஸ்யம் முதலிய தேசங்கள் ப்ரம்மாவர்த்த மெனவும், கங்கா யமுனைக்கு கிழக்கு பாகத்தில் பாஞ்சாலம், விதேஹம், அங்கம், வங்கம், மகதம் முதலிய தேசங்கள் ஆர்யாவர்த்தமெனவும் இரண்டு பாகமாக ஏற்பட்டிருப்பதில் தெற்கில் விதர்ப்பதேசம் அதற்கு நேராய் வடக்கில் இந்த கோஸல தேசமுமே எல்லைக் கல்லுபோல் தோன்றுகிறது. இவ்வித கோஸலதேசமானது, வடகோஸலமென்றும், தென்கோஸல மென்றும் இருவகைப்படும். தென் கோஸலத்திற்கு நைகப்ருஷ்டம் என்று சிலர் பெயர் சொல்லுவார்கள்.

இமயமலையின் நடுபாகத்தில் உற்பத்தியாகும், ஸரயூநதி தமஸாநதி, கங்காநதி என்னும் இம்மூன்று மஹாநதிகளின் ஜலம் ஸம்பூரணமாய்ப் பாய்ந்து ஏறிப்போவதற்குத் தகுந்த பூமி அமைப்பை உடைத்தாயிருக்கிற இந்த கோஸலதேசமானது வடபாகத்தில் கொஞ்சம் உயரமாகவும் கிழக்கு தெற்கு பாகங்களில் கொஞ்சம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாழ்ந்ததாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த தேசத்தின் மண் இயற்கையிலேயே மிகவும் ம்ருதுவாயும் ஸகலவித விளை பொருள்களின் விசேஷ பலனை உண்டுபண்ணக்கூடியதாயும் அமைக்கப்பட்டிருப்பதுடன் முற்கூறிய மூன்று நதிகளின் ஜலப் பெருக்கினால் விசேஷ செழிப்பையும் அடைந்ததாய் இருக்கிறது.

மலை

இந்த தேசத்தின் உட்பிரிவாகிய தென் கோஸலபூமிக்குத் தெற்கில் ப்ரயாகை க்ஷேத்திரத்திற்கு ஸமீபத்தில் சித்ரகூட்மென்று ஒரு மலை உண்டு. இந்த மலையின் தாழ்வரைகளில் தான், முன்பு ஸ்ரீராமன் லக்ஷ்மணரால் நிர்மாணிக்கப்பட்ட பர்ணசாலையில் ஸீதாதேவியுடன் எட்டுவருஷகாலம் வாஸம் செய்ததாக ஏற்படுகிறது. இந்த மலையின் பக்கங்களில் ஸ்ரீராமனுடைய தேவாலயங்கள் அன்றுமுதல் இன்று வரையில் வெகு புண்யசீலர்களால் தொழப்பட்டு வருகின்றன. இதில் ஸீதாகுண்டம் என்றும் ஸீதாஸரஸ் என்றும் சொல்லப்படும் தடாகமானது வெகு புண்யதீர்த்தமாக மஹான்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறது. இந்த கோஸலதேசத்தில் நான்கு புறங்களிலும் மற்றும் அனேக மலைகள் உண்டு. அவைகளாவன: கபிலகிரி, நாரதகிரி, நாதபர்வதம் முதலியவைகளேயாகும்.

இவ்வித மலைகளும் பெரியதாய் அனேகவித காடுகளால் சூழப்பட்டதாகவே விளங்குகின்றன. இம்மலைகளிலிருந்து சிறிய காட்டாறுகளும் நீரோடைகளும் ஓடுகின்றன. இம்மலைகளின் ஸமீபத்திலும், இந்த தேசத்திலுள்ள காடுகளிலும் காட்டு எருமை, பன்றி, யானை, புலி, கரடி, காட்டுக்குரீங்கு முதலிய துஷ்ட ம்ருகங்கள் இருந்தபோதிலும் அவ்வித ம்ருகங்களால் ஜனங்களுக்கு விசேஷ தொந்திரவு நேரிட்டதாக ஏற்படவில்லை.

நதி

இந்த கோஸலதேசத்தின் வடக்கு எல்லையில் ஸரயூ[1] என்கிற நதியானது ஓடிவருகிறது. நேபாள தேசத்திற்கும் வடக்கில் இமயமலையின் தென்பாகத்திலிருந்து உற்பத்தியாகி தெற்குமுகமாய் ஓடிவருகிற ஸரயூநதியானது மிகவும் ஆழமுடையதாய் பெரிய அலைகளுடன், ஆரவாரித்துக்கொண்டு இந்த கோஸலதேசத்தை ஸம்பூரணமாய்த் தாண்டிப்பிறகு மகத தேசத்தின் ஸமீபத்திலுள்ள கயாவின் ஸமீபத்தில் கங்கையுடன் கலந்து ஓடுகிறது. இப்படிப்பட்ட ஸரயூநதியானது இந்தக் கோஸல தேசத்தின் ப்ரதான நகரமாகிய அயோத்யாநகருக்கு ஸமீபத்தில் ப்ரவாஹித்து, மஹா புண்ய நதி என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெகுநாளாய் பெரியோர்களால் கொண்டாடப்பட்டதாய் விளங்கு கிறது. தமஸா என்னும் மற்றொரு நதியானது அதே இமயமலையில் உற்பத்தியாகி பாஞ்சால தேசத்தின் வழியாய் வட கோஸல பாகத்தை அடைந்து நேர் தெற்குமுகமாய் வந்து அயோத்தியா நகரை ப்ரதக்ஷணம் செய்வதுபோல் சுற்றிவந்து அந்த ஸரயூ நதியுடன் கூடச் செல்லுகின்றன. மிகவும் தெளிவாகிய ஜலம் நிறைந்த இந்த தமஸாநதியில் தான் முன்பு ஸ்ரீ வால்மீகி மஹரிஷி மாத்யான்னிக ஸ்நானம் செய்யக்கருதி தமது சிஷ்யராகிய பரத்வாஜ மஹரிஷியுடன் போய்க் கொண்டிருக்கையில் ஒரு துஷ்ட வேடனால் அடிக்கப்பட்ட ஆண் க்ரௌஞ்சபக்ஷியைக்கண்டு மனமிரங்கி 'மாநிஷாத' என்று ராமாயணத்திற்கு ஆரம்பச்லோகம் சொல்லத் தொடங்கினார். அந்த ஸரயூ நதிக்கரையில் சில விடங்களில் தசரதர் யாகம்செய்த குறிகளும், இந்த தமஸா நதிக்கரையிலும் சில அரசர்கள் செய்த அச்வமேதயாகம் முதலிய அபூர்வச் செயல்களின் அடையாளங்களும் இப்பொழுதும் தோன்றுகின்றன. இந்தக் கோஸல தேசத்தின் மேற்கு பாகத்தையும் தென்மேற்கு பாகத்தில் சில ப்ரதேசங்களையும் கங்காநதியின் வெள்ளமே மிகச் செழுமையாகச் செய்துவருகிறது. இவ்விதம் முக்யமாய்ச் சொல்லிய இந்த நதிகளின் ஜலஸம்ருத்தியாலும், இயற்கை குணத்தினால் இந்த கோஸல தேசமானது மிகவும் நல்ல வளநாடு என்று எங்கும் விசேஷப்புகழ் பெற்றிருக்கிறது.

தமஸா நதிக்கும் கங்காநதிக்கும் ஸமீபத்தில் வால்மீகியாச்ரமம் என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. அதன் ஸமீபத்திலேயே வால்மீகிநதி என்று ஒரு சிறு நதியும் ஓடுகிறது. ப்ரம்மாவின் அனுக்ரஹத்தைப் பெற்று இராமாயணம் என்னும் இதிஹாஸத்தை இயற்றிய ஸ்ரீ வால்மீகிமஹரிஷி இந்த நதிக்கரையில் ஆச்ரமத்தில் முன்பு வஸித்திருந்தார். ஆகையால் முதலில் வால்மீகி ஆச்ரமும், அதற்கு அருகிலேயே அவரது சிஷ்யரான பரத்வாஜருடைய ஆச்ரமும் இப்பொழுதும் விளங்கி வருகின்றன.

இந்த கோஸலதேசத்தின் மேற்கு பாகத்திலும் தெற்கு பாகத்திலும் கங்கையின் கரையில் உள்ள பெரிய காடுகளில் பத்ரம், மந்தம் என்னும் அநேகவித யானைக்கூட்டம் உலாவி வருகிறது. அக்காட்டிலுள்ள வேடர் வலையர் முதலியவர்கள் யானை மான் முதலியவைகளை வெகு உபாயமாய்ப் பிடித்துப் பழக்கி வருகிறார்கள்.

விசேஷம் : ஸ்ரீராமரின் பெருமை ஹநுமார் உற்பத்தி

அயோத்யா என்னும் நகரம் தான் இந்தக் கோஸல தேசத்திற்கு முக்ய பட்டணமாய் விளங்குகிறது. இந்த நகரமானது ஸூர்ய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வம்சத்தில் உதித்த பூர்வீக ராஜாக்களுக்கு ராஜதானியாயிருந்தது மன்றியும், ஸ்ரீ ராமபிரானுக்கு அவதார ஸ்தலமாயும் விளங்குகிறது. இந்த அயோத்திமா நகருக்கு தெற்கில் அதி ஸமீபத்தில் நந்திக்ராமம் என்று ஒரு க்ராமம் இருக்கிறது. ஸ்ரீராமன் பதினான்கு வருஷகாலம் காட்டில் வஸிக்க வேணும் என்று தகப்பனாராகிய தசரதர் ஆக்னையினால் வனத்தில் சென்றிருக்கும் ஸமயத்தில் அந்த ராமனுடைய அடிநிலை என்னும் பாதுகையை பரதன் இந்த நந்திக்ராமத்தில் ஒரு மாளிகையில் ஸ்தாபித்து ராமனைப்போல் தானும் ஜடை தரித்தும் மரவுரியை உடுத்துக்கொண்டும் அந்தப் பாதுகையினிடத்தில் வெகு பக்தியுடன் சக்ரவர்த்திக்குச் செய்ய வேண்டிய ஸகல ராஜோபசாரங்களையும் அதில்செலுத்தி பதினான்கு வருஷ காலம் வரையில் இந்த தேசத்தையும் மற்றும் தமது அரசுக்கு உட்பட்டிருந்த தேசங்களையும் நன்றாய் ஆண்டு வந்தார். அயோத்தி மாநகர் வைகுண்டம் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு ப்ரியஸ்தானம் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வித அயோத்திக்கு ஸாகேதம் என்று மற்றொரு பெயருமுண்டு. இந்த அயோத்தியிலும் அதைச் சுற்றிலும் ஸமீப ஸ்தலங்களிலும் அனேகவித திவ்ய க்ஷேத்திரங்களும், ஸ்தலங்களும், தீர்த்தங்களுமிருக்கின்றன. அவை களாவன- ஸ்ரீராமன் அவதரித்த கர்ப்பஸ்தானம், அயோத்யா பீடம், தர்மஸ்தானம், தேவதாஸ்தானம், ஹரிஸ்தலம், ஸீதாதேவியின் யாகசாலை, பொக்கிஷமிருந்த மண்டபம், அக்னிகுண்டம், யாகவேதி, உத்யானவனப் பிரதேசம், ஸித்தபீடம், விஷ்ணு ஹரிஸ்தானம், ரமணஸ்தானம், அகஸ்த் யாச்ரமம், பாராசர்ய ஆச்ரமம், மகஸ்தானம், ஸுக்ரீவ அங்கஸ்தானம், வஸிஷ்ட ஸ்தானம், கணேசஸ்தானம், தந்ததாவனகுண்டம், ஹநுமத் குண்டம், கஜேந்த்ரகுண்டம், ஸீதாகூபம் (ஸீதைக்கிணறு) ஸுக்ரீவ குண்டம், விபீஷண குண்டம், வஸிஷ்டதிலோதகா ஸங்கமம், ஸீதாகுண்டம், கர்ஜகுண்டம், துர்க்காகுண்டம், நாராயண குண்டம், வித்யாகுண்டம், கணேசகுண்டம், தசரத குண்டம், கோஸலை குண்டம், ஸுமித்ரா குண்டம், யோகினி குண்டம், ஊர்வசீகுண்டம், ப்ரஹஸ்யபதிகுண்டம், ருக்மிணி குண்டம், க்ஷீரோதகதீர்த்தம், தனக்ஷய தீர்த்தம்,சக்ரதீர்த்தம். ரணவிமோசன தீர்த்தம், பாப விமோசன தீர்த்தம், வைதரணி தீர்த்தம், மஹேச்வர தீர்த்தம், இந்த்ர தீர்த்தம், கோப்ரதாரக தீர்த்தம், வால்மீகி தீர்த்தம், முதலானவைகள். இவ்வித அயோத்யா நகரின் ஸமீபத்தில் ஓடும் ஸரயூநதியானது இந்த நகரத்தை அரசு செலுத்திய இக்ஷ்வாகு என்னும் சக்ரவர்த்தியின் வேண்டுகோளினால் அவன் வம்சத்திற்கு குலகுருவாகிய வஸிஷ்ட மஹரிஷியினால் மந்த்ரமஹிமையைக் கொண்டு மானஸஸரஸி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லிருந்து கொண்டுவரப்பட்டதாக அயோத்யா மஹாத்மியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நகரப்ரதிஷ்டை செய்தகாலம் முதல் நெடுநாளாய் வெகு செல்வம் நிறைந்த இந்த அயோத்தியை முக்ய ராஜதானியாகச் செய்து கொண்டு ஸூர்ய வம்சத்தில் உதித்த அரசர்களில் மிகவும் ப்ரஸித்திபெற்ற இக்ஷ்வாகு, விகுக்ஷி, அனரண்யன், ப்ரது, த்ரிசங்கு, ஹரிச்சந்த்ரன், ரோஹிதாக்ஷன், குவலயாச்வன், யுவனாச்வன், மாந்தாதா, அம்பரீஷன், முசுகுந்தன், பரதன், ஸகரன், அம்சுமான், திலீபன், பகீரதன், ரகு, சிபி, அஜன், தசரதன் முதலிய பல அரசர்கள் ஆண்ட விபரத்தையும், அவர்களது திவ்ய சரித்திரத்தையும் ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம், பாகவதம், விஷ்ணுபுராணம் முதலியவைகளில் விவரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. மோக்ஷம் கொடுக்கக்கூடிய ஏழு நகரங்களுக்குள் இந்த அயாத்யா நகரமே முதலில் ச்லோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நகரில் ஸ்ரீராமன் அவதரித்த அரண்மனையும், அரசு மண்டபமும் இப்பொழுதும் நன்றாய் விளங்கிவருகிறது. காலவசத்தினால் சில ஜாதி ஜனங்களால் மறைக்கப்பட்டிருந்தபோதிலும் இந்த நகரில் இன்னும் அனேகவிதமான முக்ய ஸ்தலங்களை இன்னும் சிலர் சுட்டிக்காட்டி அவைகளின் சரித்ரத்தையும் எடுத்துக் கூறுகிறார்கள்:

அவ்வித அயோத்யா நகரின் கிழக்கு பாகத்தில் ஸ்ரீஆஞ்ஜநேய ருடைய ஸன்னிதியானது மிகப்ரபலமாய் கொண்டாடப்பட்டு வருகிறது. வாயு பகவானுக்கும் அஞ்ஜனாதேவிக்கும் புத்ரராய்ப் பிறந்த இந்த ஹனுமாருடைய ப்ரபாவத்தையும், புத்திபல பராக் கிரமத்தையும் சொல்வது அசாத்தியம். இவர் அவதரித்தவுடனே, சிவந்த வர்ணத்துடன் உதித்து வரும் ஸூர்ய பிம்பத்தை பழுத்த கனி என்று ஆகாயத்தில் தாவி அதைப் பிடிக்க முயன்றவர். இவரது வேகத்தை கணக்கிட முடியாது. தக்ஷிணோததி என்னும் கடலைத் தாண்டிய ஸமயத்திலும் லங்கா நகரை அக்னி ஜ்வாலைக்கு இரை யாகச் செய்துவைத்த ஸமயத்திலும், ஸஞ்சீவி பர்வதம் கொண்டுவந்த ஸமயத்திலும் இவரது பராக்ரமம் நன்றாய் வெளியாய் இருக்கிறது. இப்படிப்பட்ட ஹனுமான் ஸ்ரீராமனிடத்தில் விசேஷ பக்தி செய்து அவர் ஸீதாதேவியை அடையும் விஷயத்தில் அநேக ஸாஹஸமான கார்யங்களை வெகு ஸுலபமாய் நொடிப்பொழுதில் செய்து முடித்திருக்கிறார்.

மேலும் இவர் ஸ்ரீராமனை எப்பொழுதும் தனது தோள்களிலேயே வஹித்துச் சென்றவர். ராமபக்தனாகிய இந்த ஆஞ்ஜனேயருடைய ஸந்நிதானத்தில் ப்ரார்த்தனை செய்து கொள்பவருக்கு இஷ்டஸித்தி உண்டாகிறது என்பது இப்பொழுதும் நடந்தேறி வருகிறது. இவ்வித

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆஞ்ஜனேயர் ஸந்நிதியில் அனேக வித்வான்கள் எப்பொழுதும் ஸ்ரீ ராம சரித்திரமாகிய ராமாயணத்தை பாராயணம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுதும் இவர் சிரஞ்ஜீவிகையால்[2] ராமாயண பாராயணம் செய்யப்படும் இடங்களில் ப்ரஸன்னமாய் இருந்து வருகிறதாக ஏற்படுகிறது. இவரை உபாஸிக்கிறவர்கள் விசேஷ மந்த்ரசக்தி பலன்களை அடைந்து வருகிறார்கள்.

இந்த தேசத்தின் மேற்கு எல்லை நுனியில் கங்கையின் ஸமீபத்தில் கனபுரம்(கான்பூர்) என்று ஒரு பெரிய நகரமிருக்கிறது. அதற்குத் தெற்குபாகத்தில் மாகந்தீ நகரத்தில் முன்பு பாண்டவர்கள் வனவாஸம் செய்கையில் மூன்று வருஷகாலத்தை இவ்விடத்திலேயே கழித்தவர்கள் என்றும், இந்த நகரத்தில் அனேக வித்வான்களும் தர்ம சிந்தையுடையவர்களும் நெடுநாளாய் வஸித்து வருகிறதாகவும் ஏற்படுகிறது. இந்த கோஸல நாட்டை பரிபாலனம் செய்த பூர்வ அரசர்களின் பெயரை முன்பு வம்சாவளியில் விவரித்தபடி, அதில் எட்டாவது அரசனாகிய ககுத்ஸன் என்னும் சக்ரவர்த்திக்குப் பத்னியாகிய மனோன்மணி என்பவளிடத்தில் தாராவதீ என்னும் பெண் பிறந்து வளரும் ஸமயத்தில் அந்த ககுத்ஸ சக்ரவர்த்தி அயோத்யா நகரைவிட்டு, போகவதீ என்னும் நகரில் போய் சிலகாலம் தங்கியிருந்து, அவ்விடத்தில் தனது குமாரத்தியாகிய தாராவதீ என்பவளுக்கு ஸ்வயம்வரம் ஏற்படுத்திய விசேஷ வ்ருத்தாந்தத்தை காளிகா புராணத்தில் காணலாம்.

❄ ❄ ❄

குறிப்புகள் :

1. ஸ்ரீராமன் அவதரித்த அயோத்தி மாநகரை இந்த நதி ப்ரதக்ஷணமாய் சுற்றிவருவதுபோல் இருக்கிறபடியால் இதற்கு ராமகங்கை என்று மற்றொரு பெயரும், ஸூர்யவம்சத்தரசர்களுக்கு குலகுருவாகிய வஸிஷ்டமஹரிஷியினால் கொண்டுவரப்பட்டதால் இந்த ஸரயூநதிக்கு வஸிஷ்டகங்கை என்று மற்றொரு பெயருமுண்டு.
2. இக்கலியுகத்தில் எக்காலத்திலும் ஜீவித்திருக்கும் ஏழு சிரஞ்சீவிகள் வாஸம் செய்து வருகிறார்கள். அவர்களாவன: - அசுவத்தாமா, மஹாபலி, வ்யாசர், ஹனுமான், விபீஷணன், க்ருபாசாரியர், பரசுராமர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

1. இவ்வித ஸூரியவம்சத்தரசர்களின் வம்சாவளியாவது:

பரப்ரம்மம் : ஸகலலோகங்களுக்கும் ஆதிகாரணமான திவ்ய தேஜஸ்வரூபி

நான்முகப் பிரம்மா : லோகநாதனுடைய ஆக்ஞையின்படி அவனால் கொடுக்கப்பட்ட ஸாமர்த்தியத்தினால் உலகங்களையும், கடல்களையும், மலை முதலிய மற்றவைகளையும் ஸ்ருஷ்டிப்பவர். ஸ்ரீமந்நாராயணனுடைய நாபீகமலத்தில் உதித்தவர். ஸரஸ்வதி தேவிக்கு பர்த்தாவாகி புலஸ்தியர், கச்யபர், வஸிஷ்டர் முதலியவர்களுக்கு பிதாவாய், நான்கு திசையை நோக்கும் நான்கு முகங்களினால் நான்கு வேதங்களையும்ஓதுகிறவர்.

மரீசி மஹரிஷி : அநேகவித சாஸ்த்ரங்களையும் ஆகமங்களையும் இயற்றியவர்.

கச்யபர் : யாகம் செய்து அதில் கச்யம் எனும் ஸோமரஸத்தை சாஸ்த்ர முறைப்படி முதலில் இவர் பானம் செய்தபடியால் இவருக்கு கச்யபர் என்று பெயர் உண்டாயிற்று. கண்களுக்குப் புலப்படாத ஸகல விஷயத்தை அறியவல்லவராகையால் 'பச்யதீதி கச்யப' என்று மற்றொரு பொருள் கொண்ட பெயருமுண்டு. தக்ஷப்ரஜாபதியின் பெண்கள் பதினேழு பேர்களை இவர் விவாஹம் செய்துகொண்டு அநேகஜாதி ஜீவராசிகளை உலகத்தில் உண்டு பண்ணினார். அவ்வித தேவிமார்களின் பெயரும் அவர்களுக்குப் பிறந்த ப்ராணிகளின் பெயரும் ஆவன: - அதாவது 1. அதிதி தேவியினிடத்தில் தேவர்களும், 2. திதியினிடத்தில் அஸுரர்களும் 3. தனுவினிடத்தில் தானவர்களும் 4. காஷ்டை யினிடத்தில் குதிரை முதலியவைகளும் 5. அநிஷ்டை யினிடத்தில் கந்தர்வர்களும் 6. ஸுரஸையினிடத்தில் ராக்ஷஸர்களும் 7. இளையினிடத்தில் மரம் முதலியவைகளும் 8. முனியினிடத்தில் அப்ஸரஸ் கன்னிகளும் 9. க்ரோதவசையினிடத்தில் ஸர்ப்பங்களும் 10. தாம்ரை யினிடத்தில் கழுகு டேகை முதலியவைகளும் 11. ஸுரபியினிடத்தில் பசு முதலியவைகளும் 12. ஸரவையினிடத்தில் நாலுகாலுள்ள மற்ற ப்ராணிகளும் 13. திமியினிடத்தில் மத்ஸ்யம், திமி, திமிங்கலம் முதலிய ஜல ஜந்துக்களும் 14. விந்தையினிடத்தில் அருணனும் கருடனும் 15. கத்ருவினிடத்தில் நாகங்களும் (தக்ஷகன் கார்க்கோடகன் முதலியவர்களும்) 16. பதங்கியினிடத்தில் பறவைகளும், 17. யாமினியிடத்தில் விளக்குப் பூச்சிகளும் உண்டாயின என்று ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸூர்யன் : சந்திரன், அக்னி என்னும் இரண்டு சுடரைவிட மேற்பட்ட மூன்றாவது சுடராய்உலகங்களில் ஜனங்களால் நடத்தப்படும் ஸகலவித கார்யங்களுக்கு ஸாக்ஷியாய் இருந்துகொண்டு கர்மஸாக்ஷீ என்று பெயர் பெற்றவன். ஸகலஜனங்களுக்கும் கண்விழிப்பையும், புத்தியையும், சரீர ஆரோக்யத்தையும் கொடுத்துக்கொண்டு முக்காலத்திலும் ப்ராம்மணர்களால் விசேஷமாய்ப் பூஜிக்கப்படுகிறவன். வேதஸ்தரூபி, மனுஷ்யர், ம்ருகம், மரம் புல் பூண்டு முதலிய ஸகல ஜீவராசிகளின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸுகத்திற்கு முதல் காரணமானவன். அயோத்யா அரசர்கள் எல்லோருக்கும் முதன்மையாய் நிற்பவன். ஸூர்யவம்சமென்று உலகத்தில் நல்ஸந்தியைப் படைத்தவன் ஸூர்யபகவானின் மற்றைய பெருமைகளை இந்து புன்யகதைகள் புஸ்தகம் முதல்பாகம் 'ரதஸப்தமி' அத்யாயத்தின் கீழ் காணலாம்.

மனு : வைவஸ்வத மனு என்னும் மற்றொரு நாமதேயத்தை யடைந்த புண்யசீலன். ஸகல அரசர்களுக்கும் முதல்வராய் இருந்து க்ருதயுகம் முழுமையிலும் இவர் ஒருவரே இவ்வுலகை அரசு புரிந்தவர்.

இக்ஷ்வாகு : த்ரேதாயுக ஆரம்பத்தில் இவர் அயோத்தியை நிர்மாணித்து ராஜஸபையை ஸ்தாபித்தவர்.

விகுக்ஷி

கருத்ஸ்தன் : வடமொழியில் ககுத் என்றால் எருதின் முப்பு - ஸ்தன் என்றால் அதின்மேல் ஏறி நிற்பவன் என்று பொருள். இதின் விவரமாவது - இவ்வரசன் அயோத்யா நகரில் அரசுபுரியும் ஸமயத்தில் ஸ்வர்க்க லோகத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அதிக கடோரமான யுத்தம் உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் தேவர்கள் எல்லோரும் பயமடைந் திருக்கும் ஸமயத்தில் தேவேந்திரன் தமக்கு ஸஹாயம் செய்யும் பொருட்டு இவ்வரசனை ஸ்வர்க்கலோக யுத்த பூமிக்கு அழைத்துக்கொண்டு போனான். அவ்விதம் செய்தும் தேவர்களுக்கு விசேஷ ஜயம் உண்டாகாமல் இருக்கும் தருணத்தில் தேவேந்திரன் கபடமாய் தான் ஒரு வ்ருஷத்தின் உருவமெடுத்துக் கொண்டான். அவ்வித வ்ருஷபத்தின் முதுகின்மேல் இவ்வரசன் ஏறிநின்றுகொண்டு மஹா கம்பீர கர்ஜனையுடன் அனேகவித பாணங்களை யுத்தக்களத்தில் வர்ஷிக்கும் ஸமயத்தில் அவ்வித ஏற்பாட்டைக் கண்டு ஸாக்ஷாத் ஈச்வரனே தமது எருதின்மேலேறிக் கொண்டும் தேவர்களின் பக்ஷமாய்ச்சேர்ந்துகொண்டும் நம்முடன் சண்டை செய்கிறார் என்று ப்ரமித்து ஸகல அஸுரர்களும் பயந்தோடி விட்டார்கள். ஆகையால் அந்த ஸமயத்தில் இவ்வரசன் எருதுமேல் நின்றது பற்றி அதுமுதல் ககுத்ஸ்தன் என்று பெயர் பூண்டு ப்ரஸித்தி அடைந்தவன்.

அனேனன் : யாகம் முதலிய சில புண்ணிய காரியங்களை நடத்தியவன்.

ப்ருது : உலகத்தில் அங்கங்கு இருந்த பெரிய மேடு பள்ளங்களை இவன் ஸமதலமாகச் செய்தவன் என்று சில நூல்களில் கூறப்பட் டிருக்கிறது.

விச்வகந்தி

சந்த்ரன் : இப்பெயர் கொண்ட சந்த்ரன் என்பவன் தேவஜாதி. நவக்ரஹத்தில் ஒருவன். புதனுக்குத் தகப்பனாய் பாண்டு வம்சத்திற்கு முதன்மையானவன். பூஷா, யசா, ஸுமநஸா, ரதி, ப்ராப்தி, த்ருதி, ருத்தி, ஸளம்யா, மரீசி, அமசுமாலிநீ, அங்கிரா, சசிநீ, சாயா, மண்டலா, துஷ்டி, அம்ருதா என்கிற பதினாறு கலைகளைப் படைத்தவன். ராத்ரிக்கு நாதன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யுவனாச்வன்

ச்ராவன்

ப்ருஹதச்வன் : விபுலம், போகம், புலாயிதம் முதலிய நடையிலும் வேகத்திலும் நன்றாய்த் தேர்ச்சியடைந்த குதிரைகளை ஏராளமாய் தன் கையிருப்பில் வைத்துக்கொண்டு உலகத்திலுள்ள பகைவரை ஜயித்து அரசுபுரிந்தவன்.

துந்துமாரன்

த்ருடாச்வன்

ஹர்யச்வன்

நிகும்பன் : இப்பெயர்கொண்ட மற்றொருவன் ராக்ஷஸ ஜாதியில் பிறந்து லங்கையில் ஸ்ரீராமனால் அடிக்கப்பட்டவன்.

க்ருகாச்வன்

ஸேந்ஜித்

யுவநாச்வன்

மாந்தாதா : விசேஷ செல்வத்திலும், நற்கீர்த்தியிலும், உதாரகுணத்திலும் மிகவும் ப்ரஸித்திபெற்று வெகு காலம் உலகில் சக்ரவர்த்தியாய் அரசு புரிந்தவன். ந்யாய மார்க்கத்தையே துணையாகக் கொண்டவன்.

புருகுத்ஸ்யன்

த்ரஸதஸ்யு

அநரண்யன் : அயோத்யா நகரின் ஸமீபத்திலுள்ள தமஸா நதிக்கரையில் அநேக அச்வமேத யாகம் செய்தவன். இவன்யாகம் செய்யும் ஸமயத்தில்தான் ராவணன் நல்ல இளமைப்பருவத்தையடைந்து ஈச்வர வரத்தினால் கொழுத்து அஸமயத்தில் இவனுடன் சண்டை செய்ய முயன்றவன்.

ஹர்யச்வன்

ப்ராருணன்

த்ரிபந்தனன்

ஸத்யவரதன்

த்ரிசங்கு : மனுஷ்ய சரீரத்துடனே ஸ்வர்க்கத்தில் ஸ்தானத்தை விரும்பி, தமது குருவினாலும், குருபுத்திரர்களாலும் நிராகரிக்கப்பட்டு சாபத்தையுமடைந்து விச்வாமித்தரரை சரணடைந்தவன்.

ஹரிச்சந்த்ரன் : எவ்வித ஆபத்து நேரிட்டபோதிலும் ஸத்யத்தையே நம்பி பலவித இடர்களை (துன்பங்களை) அனுபவித்து பிறகு ஸத்யஸந்தன் என்னும் பெயரை மஹரிஷிகளால் கொடுக்கப்பட்டவனாய் உலகில் உபமான பூதனாய் விளங்கியவன். ராஜஸூய யாகமும் செய்தவன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ரோஹிதன்

ஹரிதன்

சம்பன்

ஸுதேவன்

விஜயன்

பருகன்

வ்ருகன்

பாஹுகன்

ஸகரன் : சக்ரவர்த்தியாய் வெகுகாலம் உலகை ஆண்டு அனேக அச்வமேதயாகம் செய்து ப்ரஸித்தி பெற்றவன்.

அஸமஞ்சன் : பட்டத்திற்குரியவனாயும் மூத்த குமாரனாயும் இருந்தபோதிலும் நிரபராதியாகிய ஜனங்களுக்கு உபத்திரவம் செய்துவந்தபடியால் காட்டில் துரத்தப்பட்டவன்.

அம்சுமான்

பகீரதன் : யாகத்திற்காக விடப்பட்ட குதிரையை கபடமாய் இந்திரன் அபஹரித்து பாதாளத்திலிருக்கும் கபில மஹரிஷியின் அருகில் கொண்டுபோய் சேர்த்துவிட்டு மறைந்துவிட்டபடியால் அக்குதிரையைத் தேடிச் சென்று ஸகராதிகள் குற்றமற்ற கபில மஹரிஷியை நிர்ப்பந்திக்க அவரால் சாபத்தையடைந்து எரிந்துவிடவே சாம்பலாய் இருக்கும் ப்ர்ட்டன்மாரை உஜ்ஜீவிக்கும் பொருட்டு வெகுநாள் தவம் செய்து இந்த மண்ணுலகில் முதலில் கங்கையை கொண்டுவந்த ஒரு பெரிய மஹாசக்ரவர்த்தி என்று புகழப்பட்டவன்.

ச்ருதன்

நாபன்

ஸிந்துத்வீபன்

அயுதாயு : பால்யம் முதல் இவன் யோகாப்பியாஸம் செய்து வெகு வயது வரையில் உயிருடனிருந்தவன்.

ருதுபர்ணன் : கலி புருஷனுடைய வஞ்சனையினால் ராஜ்யமிழந்த நளமஹாராஜன் இவனது அரண்மனையில் அமர்ந்து பாக சாஸ்த்ரத்தையும், அச்வசாஸ்த்ரத்தையும் வெளியிட்டான். இவ்வரசனால் விசேஷமாய் ஆதரிக்கப்பட்டு எவராலும் கொண்டாடப்பட்ட ஒரு தர்மசாலி மஹாராஜ சக்ரவர்த்தி.

ஸௌதாஸன்

அச்மகன்

மூலகன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தசரதன் : இப்பெயர்கொண்ட மஹானுபாவனே இவனுக்குப்பிறகு இவனது வம்சத்திலே தோன்றி ஸ்ரீ ராமனுக்கு பிதாவாக இருந்தவர்.

ஐடவிடி

விச்வஸஹன்

கட்வாங்கன் : இவனது மூதாதை காலத்தில் சத்துருக்களால் கவரப்பட்ட ராஜ்யத்தை இவன் மறுபடியும் தனது காலத்தில் மீட்டு சக்ரவர்த்தி பதவியை மீளவும் அடைந்தவன்.

தீர்க்கபாஹு

திலீபன் : வெகுநாள் புத்ரனுண்டாகாதபடியால் வஸிஷ்டரது ஆச்ரமத்தை நாடி அவரது ஆக்ஞையினால் காமதேனுவின் வம்சத்தில் பிறந்த, நந்தினீ என்னும் பசுவை பத்னியுடன் பூஜித்தவன்.

ரகுமஹாராஜன் : நந்தினீ என்னும் பசுவின் அனுக்ரஹத்தினால் பிறந்து பால்ய வயதிலேயே கல்வியில் தேர்ச்சியடைந்து நல்ல மந்திரிகளின் உதவியினால் நீதிமுறை வழுவாமல், அரசு நடத்தி ஸிம்மம், வங்கம், உத்கலம், களிங்கம், கேரளம், ஸிந்து, பாரஸீகம், காம்போஜம், காமரூபம் என்னும் இந்த தேசங்களின் வழியாய் பூமியை ப்ரதக்ஷிணமாய் தனது கோஸல தேசத்திலிருந்து ௯0 பெரிய ஸேனையுடன் திக்விஜயம் செய்து பரதகண்டம் முழுமைக்கும் தன்னரசுக்கு உட்படுத்திக் கொண்டு விசேஷ கீர்த்தியுடன் விளங்கியவன்.

அஜன் : விதர்பதேசத் தரசனின் தங்கையாகிய இந்துமதீ என்பவளால் ஸ்வயம்வர மண்டபத்தில் வரிக்கப்பட்டனாய், கல்யாணத்தை முடித்துக்கொண்டு அவளுடன் தனது தேசத்தை நோக்கிச் செல்லுகையில் அவ்விதம் நடந்தேறிய கல்யாண விஷயமாய் பொறாமைகொண்ட சில சிற்றரசர்களால் விளைவிக்கப்பட்ட யுத்தத்தில் கந்தருவன் உபதேசித்து காந்தர்வாஸ்த்ர மஹிமையினால் பகைவரை துரத்திவிட்டு சுபமாய் ஸாகேத (தனது ராஜதாநியாகிய அயோத்யை) மடைந்தவன்.

தசரதன் : ஆகாயம், பூமி உள்பட பத்து திக்குகளிலும் பகைவரால் தடுக்க முடியாத ரதத்தையுடையவராதலால் இவருக்கு தசரதரென்று இவ்வித காரணப்பெயர் உண்டாயிற்று. புலஸ்திய மஹரிஷிக்குப் புத்திரனாய் குபேரனுக்குத் தம்பியாய் பிறந்த ராவணன் முன் ஜன்மத்தில் அஸுர ரக்ஷஸாம்சமாகப் பிறந்தமையால் இந்த ஜன்மத்திலும் அந்த துர்வாஸனையடங்காமல் ப்ரம்மாவினிடத் திலிருந்தும், ஈசனிடத்திலிருந்தும் பெரிய வரங்களை வாங்கிக் கொண்டு ஒருவரையும் பொருட்டாக எண்ணாமல் தேவர்களை யுத்தத்தில் ஓட்டியும், மஹரிஷிகளைப் பாதித்தும், தேவதா ஸ்திரீகளை சிறையிலிட்டும் பலவிதமாய் உலகத்தில் கொடுஞ் செயல்கள் செய்துவந்தான். அந்த ஸமயத்தில் அயோத்யா நகரை பரிபாலனம் செய்து வந்த இந்த தசரதர் தனக்கு வெகுகாலம் புத்ர உற்பத்தி உண்டாகாமல் இருக்கவே கலைக்கோட்டு மஹரிஷி என்னும் ரிஷ்யச்ருங்க மஹரிஷியின் ஸந்நிதானத்தை ஏற்படுத்திக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டு அவரை ருத்விக்காக வரித்து புத்ரகாமேஷ்டியாகம் செய்தார். அந்த யாகத்தில் தமக்குரிய ஹவிர்ப்பாகங்களைவாங்கிக் கொள்வதற்காக ஒன்றுசேர்ந்த தேவர்கள் எல்லோரும் சதுர்முகனை முன்னிட்டுக் கொண்டு ஸ்ரீமந்நாராயணனுடைய ஸந்நிதியை நாடி ராவணன் செய்துவரும் கொடுஞ்செயல்களை எடுத்துக் கூறினார்கள். அவர்களின் விண்ணப்பத்தைச் செவியுற்ற தயாநிதியாகிய பகவானும் இதுவே தக்க ஸமயமென்று யோசித்து இந்த தரசதருடைய யாக குண்டத்திலிருந்து ஒரு திவ்ய புருஷனைக் கொண்டு பாயஸத்தை கொடுத்தனுப்பி தானும் தசரத பத்னியாகிய கௌஸல்யா தேவியினிடத்தில் ஸ்ரீ ராமபிரானாக அவதரித்து தன் அம்சத்தையே, லக்ஷ்மண பரத சத்ருக்னராயும் அவதரிக்கும்படி செய்து மிதிலா நகரத்தில் அவதரித்த ஸ்ரீ ஸீதாதேவியை கல்யாணம் செய்துகொண்டு அவள்நிமித்தம்போல் பாமரர்களுக்கு தெரியும் படி மாரீசன், கபந்தன், விராடன், கரன், தூஷணன், த்ரிசிரஸ்ஸு ராவணன், கும்பகர்ணன் முதலிய ராக்ஷஸர்களைக் கொன்று தர்ம மார்க்கத்தை மறுபடியும் உலகில் நிலைநாட்டி ஞானிகளுக்கு மோக்ஷத்தைத் தந்த ஸ்ரீபரமபதநாதனுக்கும் தகப்பனராக அவ்வளவு பாக்யம் செய்தவர்.

ஸ்ரீராமன் : ஸ்ரீமஹா விஷ்ணுவே இப்பெயர்கொண்டவராக க்ஷத்திரிய ஜாதியில் த்ரேதாயுக முடிவு ஸமயத்தில் அவதரித்தவர். கட்வாங்கர் முதல் இந்த ஸ்ரீ ராமபர்யந்தம் உதித்த எல்லா அரசர்களும் சக்ரவர்த்தியாகவே அரசு புரிந்து சிஷ்டபரிபாலனம் செய்தார்கள்.

குசன் : த்வாபர யுகத்தின் ஆரம்பத்தில் உதித்தவன். வால்மீகி ஆச்ரமத்தில் சிலகாலம் வரையில் வஸித்தவன்.

அதிதி : குமுத்வதீ தேவிக்குப் புத்திரன். ராமன்போலவே மிகவும் தர்மிஷ்டன் பராக்கிரமசாலி.

நிஷதன்

நபன்

புண்டரீகன்

க்ஷேமதன்வன்

தேவாநீகன்

ஹீநன்

பாரியாத்ரன்

பலஸ்தலன்

வஜ்ரநாபன்

அர்க்கன்

ஸகணன்

வித்ருதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஹிரண்யநாபன்

புஷ்பன்

த்ருவஸந்தி

ஸுர்தசனன்

அக்னிவர்ணன்

சிக்ரன்

மரு : இவ்வரசன் குலமுறைப்படி வந்த ராஜ்யபாரத்தை சிலது காலம் வஹித்து பிறகு தனது புத்திரனிடத்தில் அதை வைத்துவிட்டு தான் யோகாப்யாஸம் செய்துகொண்டு இமயமலையின் ஸமீபத்தில் கலாபக்ராமத்தில் இப்பொழுதும் வஸித்து வருகிறதாயும், இந்த கலியுகத்தின் முடிவில் அழிந்துவிடும் ஸுர்ய வம்சத்தை மறுபடியும் ஸ்தாபிக்கப் போகிறதாகவும் ஸ்ரீபாகவத நவமி ஸ்கந்தத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

ப்ரஸ்ருச்ருதன்

ஸந்தி

அமர்ஷணன்

மஹஸ்வான்

விச்வாபாஹு

ப்ரஸேனஜித்

தக்ஷகன் : இப்பெயர் நாக ஜாதியில் பிறந்த ஸர்ப்பம் ஒன்றுக்கு உண்டு.

ப்ருஹத்பலன் : பாண்டவருக்குச் ஸமான வயதுடையவன். மஹா பாரத யுத்தத்தில் அபிமன்யுவினால் ஸம்ஹரிக்கப்பட்டவன்.

ப்ருஹத்ரணன்

உருக்ரயன்

வத்ஸவ்ருத்தன்

ப்ருதிவ்யோமன்

பானு

திவாகன்

ஸஹதேவன்

வீரன்

ப்ருஹதச்வன்

பானுமான்

ப்ரதீகாச்வன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸுப்ரதீகன்

மருதேவன்

ஸுநக்ஷத்ரன்

புஷ்கரன்

அந்தரீக்ஷன்

ஸுதபன்

அமித்ரஜித்

ப்ரஹத்ராஜன்

பர்ஹி

க்ருதஞ்ஜயன்

ரணஞ்ஜயன்

சாக்யன்

சுத்தோதன்

லாங்க்லன்

ப்ரஸேனிஜித்

க்ஷுத்ரகன்

ஸுமித்ரன் : இவ்வரசன் இந்த கலியுகம் பிறந்து ஆயிரவருஷ காலம் வரையில் ராஜ்யபாரம் செய்து வந்தான். இவன் வரையிலுமே ஸூர்ய வம்சம் நின்றுவிட்டதாக பாகவதத்தினால் ஏற்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாஞ்சால தேசம்[1]

அத்யாயம் 11

இருப்பிடம்

பாஞ்சால தேசமானது கோஸலதேசத்திற்கு, வடமேற்கிலும் குரு பாஹ்லிக தேசங்களுக்கு நேர்கிழக்கிலும், இமயமலையின் சார்பில் கங்கால தரணஸ்தலத்திற்கு ஸமீபத்தில் வடக்கிலிருந்து தெற்கில் தாழ்ந்தபூமியில் மிகவும் விசாலமுடையதாயிருக்கிறது.

இந்ததேசத்தின் மண்குணமானது சூரஸேனதேசத்தின் மண்குணம் போலவே இருக்கும். அன்றியும் பலவித புஷ்பச் செடிகளும் மருந்து வகையைச் சேர்ந்த அனேகவித செடிகொடிகளும் ஒரு தழை இல்லாமல் வளரக்கூடிய குணமுடையதாய் இருக்கும். கேரள தேசத்தைப்போல் இந்த பாஞ்சால தேசத்திலும் விசேஷமாய் பச்சிலை மருந்துகளை காலமுறைப்படியும் வஸ்துமுறைப்படியும் உபயோகிக்கவல்ல சில வைத்யர்கள் ஆதிகாலம் தொடங்கி இப்பொழுதும் வெகுவாய் தோன்றிவருகிறார்கள். அவ்விதம் அவர்கள் செய்யும் மருந்துகளும் உலகெங்கும் ப்ரஸித்தி பெற்றவைகளே.

மேலும் இத்தேசத்தின் வடபாகம் இமயமலையின் சார்பில் வெகு ஸமீபத்திலிருப்பதால் குளிர் மழை பனி இவைகள் எப்பொழுதும் விடாமல் பெய்துகொண்டே இருக்கும். அவ்விடமெல்லாம் விசேஷ கற்பாறை பூமியாகவே காணப்படுகின்றன. தென்பாகத்தில் என்றால் மண்ணும் கொஞ்சம் கல்லும் கலந்த பூமியாகவே இருக்கும்.

மலை

இந்த தேசத்தின் வடக்குபாகத்தில் இமயமலையின் சிறு மலைத் தொடர்களே வெகுதூரம் வரையில் தெற்குநோக்கி ஓங்கிநின்ற மலைகளாகக்காணப்படுகின்றன. அவ்வித மலைகளுக்கு நடுவில் ஒன்றுக்கொன்று சில விடங்களில் இடைவெளியுடையதாயும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலவிடங் களில் இடைவெளியில்லாததாயும் காணப்படுகின்றன. இதின் தெற்குப் பாகத்தில் விச்வாமித்ரர் யாகபூமிக்கு வெகுதூரம் மேற்கில் கங்கையின் ஸமீபத்தில் காஞ்சநாக்ஷம் என்று ஒரு பெரியமலை நின்று வருகிறது. அம்மலையின் ஸமீபத்தில் பெரியகாடுகளும் முட்செடிகளும் கொடிய காட்டு மிருகங்களும் ஏராளமாய் திரிந்து உலாவும். இவ்வித மலைச்சார்பு தவிர இந்த தேசத்தின் மற்ற இடங்களில் மண் மிருதுவாகவும் நல்ல மரங்களும் புஷ்பச் செடிகளும் நிறைந்த தோட்டங்கள் சூழ்ந்ததாகவும் இருக்கும்.

நதி

இந்த பாஞ்சால தேசத்திற்கு மேற்குபாகத்தில் நெடுந்தூரம் வரையில் கங்காநதியே முக்யநதியாகும். இதற்கு கிழக்கில் வெகுதூரத்தில் தமஸா என்னும் நதியானது மிகவேகமாய் தெற்கு முகமாய்ச் சொல்கிறது. அவ்வித தமஸா நதியானது இமயமலை யின் நடுபாகத்தில் அமிர்த ஸரஸ்ஸுக்கு ஸமீபத்தில் கங்கையுண்டாகும் ஸ்தலத்தின் சார்பிலிருந்தே உண்டாகிறது. இந்த கங்கா தமஸா என்னும் நதிகள் தவிர முன்சொன்ன காஞ்சனாக்ஷம் - என்னும் மலையிலிருந்து காஞ்சனாக்ஷி என்று ஒரு நதியும் கம்பீரமாய் ஓடுகிறது.

விசேஷம்

இவ்வித இயற்கையினால் வடக்குபாகம் நீங்கலாக மற்ற மூன்று பக்கங்களிலும் கங்கா, தமஸா, காஞ்சனாக்ஷி என்னும் இம்மூன்று மஹாநதிகளின் ஜலப்பாச்சலும் வண்டல்படிதலும் இந்த தேச பூமிக்கு சிறந்த செல்வமாய் பூர்வீகர்களால் கருதப்பட்டு வந்ததாய் ஏற்படுகிறது.

இந்த பாஞ்சாலதேசத்தின் வடஎல்லையில்தான் மாயா என்னும் ஒரு பெரிய நகரமானது வெகு வெகுநாளாய் விளங்கி வருகிறது. இந்த மாயா நகருக்குத்தான் ஹரித்வாரம் என்று மற்றொரு பெயர் உண்டு. இது ஸப்தபுரிகளில் ஒன்றாய் கணக்கிடப்படுவதோடு ஹிமய மலையின்மேல் அமர்தஸரஸைக் குறித்துச் செல்வதற்கும் முக்யமார்க்கமாயுமிருக்கிறது. இப்படிப்பட்ட ஹரித்வார நகரத்தில் உலகங்களை எல்லாம் மூன்றடியாய் அளந்த ஸ்ரீத்ரி விக்ரமபகவா னுடைய திவ்யாலயமும் நல்ல புண்யதீர்த்தமும் விளங்கி வருகிறது. அவரது ஆலயத்திற்கு கொஞ்சம் வடக்கு திக்கில் ஹரிணீசிலா என்று ஒரு பெரிய கற்பாறை மிகவும் விசித்ரமாய் காணப்பட்டுவருகிறது. அஃதென்னவெனில் -முற்காலத்தில் த்ருணபிந்து என்னும் ஓர் பெரிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மஹறிஷி அனேக நியமங்களுடன் மூச்சுக்காற்றை அடக்கிக் கொண்டு அதிக கடோரமாய் தவம்புரிய ஆரம்பித்த ஸமயத்தில் இந்திரன் அவரது தவம் நிறைவேறா வண்ணம் செய்ய வேண்டும் என்று கருதி ஹறிணீ என்னும் ஒரு தேவலோகஸ்த்ரீயை அவரது ஸமீபத்தில் ஏவ அம்மஹறிஷியும் அவளது கபடச்செயலை உணர்ந்துகொண்டு "நீ இவ்விடத்திலேயே கல்லாக தோற்றக்கடவது'' என்று சாபம் கொடுத்தார். அவரது வாக்குபோல இப்பொழுது அந்த ஹறிணீசிலை அதிக வடிவமைப்புடன் நிற்பதைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் கிடையாது.

அவ்வித ஹறித்வாரநகரத்தின் தென்மேற்கு பாகத்தில் இமய மலையின் அடியில்தான் ஸரஸ்வதி நதிக்கும் உற்பத்தி ஸ்தானமும் அந்நதி இறக்கமுமிருக்கிறது. அதற்கு நேராய் வடக்கில் அமிர்த ஸரஸூம் கங்கோத்பத்திஸ்தலமும், ப்ரம்மகபாலமும் விளங்குகிறது. அந்தப் ப்ரம்மகபாலம் என்பது ஓர் பெரிய கல்லில் உரல்போல் ஆழமுடையதா யிருக்கிறது. நமது ஆர்யபுண்யபூமியில் உதித்த ப்ராம்மணர்கள் தமது பிதுர்க்களுக்கு ப்ரயாகை, கங்கை முதலிய புண்யஸ்தலங்களில் ச்ராத்தம் செய்துவிட்டு மூதாதைகளைக் குறித்து பலியாக இடும் அன்ன பிண்டத்தை இந்த ப்ரம்மகபாலத்தில் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அதனால் அவர்களின் பிதுர்க்கள் விசேஷ நற்கதியையடைகிறார்கள் என்று நமது சாஸ்த்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கங்கோத்பத்திஸ்தானம், ப்ரம்மகபாலம், தேவப்ரயாகை என்னும் இடங்களுக்கு ஜனங்கள் நடந்து செல்வதே பெரிய கஷ்டமாயிருக்கும்.நல்ல மார்க்கமில்லாமல் எங்கும் கரடுமுரடாயும் மேடு பள்ளமாயும் பனிக்கட்டிகளே காணப் படுகின்றன.

முற்கூறிய ஹறித்வாரநகரத்திற்கு நேர்தெற்கில் கபிலா என்று மற்றொரு நதியானது ஓடி காஞ்சனாக்ஷீ என்னும் நதியுடன் சேர்ந்து பிறகு கங்கையுடன் கலந்தோடுகிறது. அவ்விடத்தில்தான் பதரிகாச்ரமம் என்னும் ஒரு விசேஷ ஸ்தலம் விளங்குகிறது. அதில் ஸ்ரீ பதரி நாராயணனுடைய கோயிலும் அதற்குரிய மற்றச் சின்னங்களும் ஏற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தென் இந்தியாவில் வஸிப்பவர்கள் திருப்பதியில் வெங்கடாசல ஸ்வாமியையும் கோவிந்தராஜனையும் எப்படி விசேஷ பக்தியுடன் நமஸ்கரித்து வருகிறார்களோ இதுபோலவே விந்தியத்திற்கு வடக்கேயுள்ள அனேக தேசத்து ஜனங்கள் கங்கையில் நீராடி இந்த பதரிகாச்சிரம ஸ்தலத்தைநாடி, நரன் நாராயணன் என்னும் இரண்டு மூர்த்திகளையும் கைதொழும் வழக்கமுண்டு. ஆதிசங்கராச்சாரியார் ஸ்வாமிகள் தமது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முக்யசிஷ்யர் நால்வருடன் இந்த பதரிகாச்ரமம் வந்து நடத்திய சில அற்புதச்செயல்களையும் பெரியோர் சொல்லும் வழக்கமும் உண்டு.

அன்றியும், திருமொழி என்று (1084) பாசுரங்கள் கூறிய திருமங்கை மன்னன் என்னும் ஆழ்வாரும் தனது பக்தியை விசேஷமாய் வெளியிட்டுக் கொண்டு இந்த பதரிகாச்மத்தின் மேன்மையை விவரமாய் எடுத்துக் கூறியிருக்கிறார். இவ்வித பதரிகாச்சிரமத்திற்கு நேர்தெற்கில் நைமிசம் என்னும் க்ஷேத்திரம் இருக்கிறது. நைமிசாரண்யம் என்று மற்றொரு பெயர் உண்டு. மனு, அத்ரி, ஹாரீதர், யாக்ஞவல்கியர், ஆபஸ்தம்பர், ஸம்வர்த்தகர், காத்யாயனர், பராசர்,வ்யாஸர், சங்கர், லிகிதம், கௌதமர், சாதாதபர், வசிஷ்டர் முதலிய பெருமஹரிஷிகள் உலகத்திலிருக்கும் ஸகல ஜனங்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டும், அரசர்கள் ந்யாயமுறை தவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்யும் பொருட்டும், அரியதர்ம சாஸ்த்ரங் களையும் பதினெட்டு முக்யபுராணங்களையும் இந்த நைமிசாரண்ய க்ஷேத்திரத்தில்தான் வெளியிட்டார்கள். அவ்வித தர்மசாஸ்த்ரங்களில் கூறப்பட்டவிஷயங்கள் பலவிதமாயிருந்த போதிலும் முக்யமான விஷயங்கள் இருபதேயாகும். உலகமெல்லாம் அவ்விருபது விஷயங்களை கைப்பற்றியே நிலைத்து விளங்குகிறது. அவை யாவன:

1. மலிம்லுசர்தி : ஒருவரை ஒருவர் வாயினால் தூஷித்தல், அடித்தல், திருடுதல் முதலியவைகள் இவைகளுக்குத் தக்கபடி அரசன் தண்டனை விதித்தல், அரசரின் லக்ஷணம், குணம், மந்திரி முதலிய ராஜஸபையின் கொள்கை விஷயம்.

2. தாயபாகம் : ஸஹோதரர்களுக்கும் தகப்பன் தாய் முதலியவர் களுக்கு ஸொத்தில் உண்டாகிய பாத்யத்தின் நிர்ணயம் ஸ்வீகாரம் செய்யும் லக்ஷணம். ஸ்வீகார குமாரர்களின் பாக விஷயம். மற்றுமுள்ள சுற்றத்தாருக்கு ஏற்பட்ட பாத்யா பாத்யதைகளின் நிர்ணயம்.

3. ஸம்ஸ்காரம் : ஒருவனுக்குப் புத்திரன் பிறந்தால் உடனே செய்ய வேண்டிய சாஸ்த்ரமுறை, சரீரஸ¬கமுறை, உபநயனம், படிப்பு, விவாஹம் முதலிய க்ருஹஸ்தாச்சிரமத்தின் தர்மங்கள், நான்குவித ஆச்ரமங்களின் பேதமும் லக்ஷணமும்.

4. சுத்திநிர்ணயம் : ஒருவன் காலகதியால் இறந்துவிட்டால் அவனது சுற்றத்தாருக்கு ஏற்படும் தீட்டு விஷயம். அவ்வித தீட்டில் செய்யத் தகுந்த கார்யங்கள், செய்யத்தகாத கார்யங்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசங்கள்தோறும் ஜாதிகள் தோறும் ஏற்பட்ட தீட்டு முறைகளும் அவைகளின் உட்பிரிவும்.

5. ப்ராயச்சித்தம் : ப்ராம்மணர், க்ஷத்ரியர், வைச்யர், சூத்ரர் என்கிற முக்யமான நான்கு ஜாதிகளில் பிறந்தவர்கள் தங்களது குலாசார முறையைவிட்டு நடந்துகொண்டால் அதற்கு ஏற்பட்ட ப்ராயசித்த கார்யங்கள். பரலோகத்தை அடைந்தவர்களைக் குறித்து அதே திதி வார நக்ஷத்ரங்களில் செய்ய வேண்டிய சாஸ்த்ர சடங்குகளைச் செய்யா விடில் அதற்கு ப்ரதீகாரம், குலம் மாறுதல், உணவுமாறுதல், துஷ்ட ஸ்தலம் செல்லுதல், கள்குடித்தல், நித்யகர்மாவை விடுதல் முதலியவைகளால் உண்டான பாபத்தை தணிக்கும் பொருட்டு கங்கை, ஸேது முதலியவைகளில் நீராடி ஹோமம் ப்ராம்மண பூஜை செய்தல் முதலியவைகள்.

6. க்ரஹகார்யம் : நமது பரதகண்டமென்னும் இந்தியாவில் வஸிக்கும் ஸ்திரீகளும் புருஷர்களும் காலை ஸமயத்தில் செய்ய வேண்டிய ஸ்நானம் முதலிய முறைகள். தாய், தகப்பன், மாமியார், மாமனார், தகப்பனார், மாமன், குரு, ஸ்நேகிதர் முதலியோரிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள். உணவு சமைத்தல், தேச குலாசாரப்படி தமது சரீரத்தை அலங்கரித்துக் கொள்ளுதல், தேவபூஜை குருபூஜை முதலிய செய்தல், கீழ்படுதல்.

7. தீர்த்தம் : இம்மையிலும், மறுமையிலும் நன்மையை வேண்டி கங்கை, காவேரி முதலிய புண்ய தீர்த்தங்களுக்கு யாத்திரை செல்லல். தேவாலயங்களில் நடைபெற்று வருகிற பகவானுடைய உத்ஸவத்தை கண்டு களித்து வழிபடுதல், பக்தி செய்தல்.

8. வ்ரதம்[1] : அஷ்டமி, ஏகாதசி, பௌர்ணமி, சனி வாரம் முதலிய முக்யதினங்களில் உணவை அடக்கி சாஸ்த்ர நியமப்படி வ்ரதம் அனுஷ்டித்தல். ஸ்ரீராம நவமி, ஸ்ரீக்ருஷ்ணஜயந்தி, வரலக்ஷ்மீ வ்ரதம் முதலிய சில நாட்களில் தேவபூஜை செய்து நியமத்துடனிருத்தல்.

9. கலை : உலகத்திலிருக்கும் ஸகல விஷயங்களையும் எளிதில் அறிவிக்கக்கூடிய நல்ல சாஸ்த்ரங்களைப் படித்தல். குருவினிடத்தில் விச்வாஸம் வைத்து சிஷ்ய முறைப்படி நடந்து கொள்ளல். கோபம், மோஹம், காமம் முதலிய சில

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கெட்ட குணங்களை உள்ளடக்கி ஜாதி முறைப்படி நடந்து கொண்டு நற்கீர்த்தி ஸம்பாதித்தல்.

10. வ்யவஹாரம் : ஒருவர்க்கொருவர் உண்டாகும் ந்யாய அந்யாய விஷயங்களில் தான் உட்புகுந்து உண்மையை நிலை நாட்டுதல். உலகத்திலுள்ள பொருள்களின் விலையையும் மதிப்பையும் தெரிந்து கொள்ளுதல். பெரியோர்களிடத்தில் பக்தி செய்து அவர்களின் மஹிமையையும் கற்றல், மற்று முள்ள விவேகஞானம் ஸம்பாதித்தல்.

11. தடாகாதிவிதி : மனுஷ்யர்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் உபகாரம் செய்தல்; குளம், தடாகம் வெட்டுதல்; ஏழைகளுக்கு உணவு ஈயல்; காலத்தில் பலவித தானம் புரிதல்; மடம், ஸத்திரம், தேவாலயம் முதலிய கட்டி வைத்தல்; ஏழைகளின் வ்யாதியை தகுந்த மருந்து கொடுத்து நீக்குதல் முதலிய.

12. ப்ரதிஷ்டா : நற்கீர்த்தி வாய்க்கவல்ல நிலையைப் பெறல். காமம், கோபம், மோஹம் முதலியவைகளை ஜயித்து பகவா னுடைய குணங்களையே சிந்தித்து நல்லமார்க்கமாகவே காலத்தை கழித்து, ப்ராணிகளுக்கு தீங்கு செய்யாம லிருக்கை முதலிய.

13. பரீக்ஷா : வைரம், கோமேதகம், புஷ்யராகம் முதலிய நவ ரத்தினங்களின் ஸ்வரூபத்தையும் குணதோஷங்களையும், விலையையும் கற்றுணர்தல். யானை, குதிரை, மான், புறா, ஒட்டகம், பசு முதலியவைகளின் ஜாதியும் குணமும் விலையும் இவ்வளவு என்று கற்றுணரல்; உலகத்திலுள்ள மற்றப்பொருள்களுக்கு ஸமுதாயமான மதிப்பையும், அந்தந்த வேலைகளின் கஷ்டங்களுக்குத் தகுந்தபடி கூலி விலை முதலியவைகளை நிச்சயித்தல்.

14. ஜோதிஷம் : முக்யமாய் நமது பரதகண்டத்தில் வஸிப்பவர் எக்காலத்தில் எந்த வேலையை ஆரம்பித்தபோதிலும் அவைகள் சரிவர நிறைவேறும்படி ஜோதிட சாஸ்த்ரத்தில் சொல்லிய முறைப்படி காலத்தை அறிதல். குழந்தை பிறந்தவுடன் அக்காலத்திற்குத் தக்கபடி வேள்விமுடித்தல். ஒரு கார்யத்தை உத்தேசித்து செல்லும்போது நேரக்கூடிய சகுனங்களையும் அவைகளின் பலனையும் நன்றாய் கற்றறிதல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

15. வாஸ்துவிதி : நாம் வஸிப்பதற்கு முக்யமான ஸ்தலம் வீடேயாகும். அவ்விதமான வீடு மாளிகை முதலிய வாஸஸ்தானங்களை ஸரியான திக்கில் அமைத்து சரீரத்துக்கு நல்ல ஸுகத்தை ஸம்பாதித்துக் கொள்ளுதற்காக சில்ப சாஸ்த்ர ஆராய்ச்சி செய்தல்; வீட்டை ஒழுங்காய் வைத்துக் கொள்வது போலவே ஆத்மாவுக்கு வீடாகிய தேகத்தை ஸரியாய் வைத்துக்கொண்டு ரோகம்வராமல் பார்த்துக்கொள்ளுதல் முதலிய சில முக்ய கார்யங்கள்.

16. தீக்ஷா : நமது பரத கண்டத்தில் உதித்த ப்ராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்ரர் என்னும் நான்கு ஜாதியரும் மற்றுமுள்ள எல்லாவர்ணத் தோர்களும் தமது ஜாதி முறைப்படி உணவு அருந்தல், ஆடை அணிதல், தமது மதத்தைக் கெடுக்காமல் நியமத்துடனிருத்தல், மற்ற மதங்களை தூஷித்துப் பேசாமலும், மதத்வேஷத்தைப் பாராட்டாமலும், ஊராருடன் விரோதமில்லாமலும், கூடியவரையில் நேசித்து வாழ்தல் இம்மையில் குடும்பத்திற்கு வேண்டிய ஆஹாரப்பொருள்களை ஸம்பாதிப்பதுடன் மறுமைக்கும் நல்ல புண்யத்தை ஸம்பாதித்தல். அக்ஞானத்தை நீக்குதற்கு குருகுலவாஸம் செய்தல் முதலிய.

17. ஆன்னிகம் : காலத்திற்கும் தேசத்திற்கும் தகுந்தபடி நடந்து கொள்ளுதல். விசேஷமாய் தமது ஜாதியின் அனுஷ்டானச் செயல்களை கெடுக்காமல் உலக வாழ்க்கை செய்தல். மனதை பல விஷயங்களில் செலுத்தாமல் நிறுத்தல். வேதங்களிலும் நமது பூர்வீக சாஸ்த்ரங்களிலும் உண்மை புத்தி புகட்டுதல். வைதிக கார்யங்களை தூஷிக்காமல் கொண்டாடுதல் முதலிய சில நற்கார்யங்கள்.

18. க்ஷேத்ரம் : கலியுகத்தின் மஹிமையினாலும் சில வித துஷ்ட மதங்களின் உபதேசத்தாலும் மனங்கலங்காமல் தமது ஜாதிக்குத் தகுந்த ஜாதியிலேயே பிறந்த பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளுதல், பெண்ணைக் கொடுத்தல் முதலிய. இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை ஸம்பாதிப்பதிலேயே எப்பொழுதும் மனதைச்செலுத்தி ஊடாடிக்கொண்டிருந்தபோதிலும் ஒரு க்ஷணப்போது காலத்தையாவது ஈச்வரத்யானம் செய்துகழித்தல் வேதாந்தப்பொருளே உலகத்திற்குக் காரணம் என்று நம்பி ஈச்வரனை முன்னிட்டுக் கொண்டு ஸகல கார்யங்களையும் செய்ய முயலுதல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

19. க்ஷமதா : பூர்வஜன்ம பாவத்தினாலும் பலவித தீயச் செயல்களாலும், விரோதிகளின் வஞ்சனையினாலும், தமது புத்திக்குறைவாலும் எவ்வித ஆபத்து நேர்ந்தபோதிலும் மனதைச் சலிக்க விடாமல் தைரியமாயிருத்தல். குடும்பத்தில் தாய் தகப்பன் பாரியாள் முதலியவர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏதாவது இடைஞ்சல் நேரிட்டபோதிலும் அதைப் பொறுத்துக் கொள்ளாமல் தேசாந்தரம் ஓடிவிடாமலிருத்தல். பிறர் நம்மை பரிஹாஸத்திற்காவது உண்மையாகவாவது இகழ்ந்து பேசியபோதிலும் அதை நாம் பொறுத்துக் கொள்ளாமல் அவருடன் சண்டை வாக்தூஷணம் செய்யாதபடி நடந்து கொள்ளுதல், பொறாமை நீக்குதல் முதலிய.

20. நீசஸேவை : காலகதியினால் தமக்கு ஏழ்மைத்தனம் நேரிட்ட போதிலும் தமது வர்ணத்திற்குத் தகுந்தபடி ஆசாரங்களை விடாவண்ணம் நடந்துகொள்ளுதலுடன் அதமனை ப்ரபுவாக எண்ணுதல் முதலிய சில ஈனத் தொழிலைத் தவிர்த்தல்.

இவ்விதமாய் விவரிக்கப்பட்ட இருபது விஷயங்களாலேயே இவ்வுலகத்துள்ளோர் நன்மையை அடைந்து வாழ்வதற்கு அந்த நைமிசாரண்யத்தில் தமது மெய்ஞானத்தினால் அனேக தர்ம சாஸ்திரங்களையும் ஸ்ம்ருதிகளையும் புராணங்களையும் மஹரிஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாய் ஸகல சாஸ்த்ரங்களையும்வெளியிட்ட அனேக பெரிய மஹரிஷிகளின் ஆச்ரமங்களும் கல்மண்டபங்களும் சில சில விடங்களில் இந்த நைமிசாரண்யத்தில் இப்பொழுதும் நிலை பெற்று வருகின்றன. இந்த நைமிசாரண்யத்திற்கு தெற்கில் அனேக நகரங்களும் க்ராமங்களும் கோஸல தேசத்திலிருப்பது போலவே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நைமிச வனத்திற்கு கிழக்கு பாகத்தில் விச்வாமித்ரகுண்டம் என்னும் ஒரு பெரிய க்ஷேத்திரமிருக்கிறது. இதில் முன்பு விச்வாமித்ரர் அரசனாய் இருந்து அரசு புரியும் தருணத்தில் வஸிஷ்டரிடத்தில் விரோதத்தினால் பெரிய தவங்களைச் செய்து வருகையில் இவ்விடத்திலும் சில நாள் தங்கியிருந்து ஒருபர்ணசாலை ஏற்படுத்தி வாஸம் செய்தார். அதுமுதல் அந்த ஸ்தலத்திற்கு விச்வாமித்ர யாககுண்டம் என்றும் விச்வாமித்ர யாகசாலை என்றும் பெயர் பரவலாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷமாய் இந்த விச்வாமித்ர யாககுண்டஸ்தலத்தை யாத்திரை போகும் ப்ரயாணிகள் பூஜித்து வரும் வழக்கமும் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. இந்த ஸ்தலத்திற்குத் தெற்கில் யமுனாநதி கிழக்கு முகமாய் திரும்பும் கட்டம் (படித்துறை) வரையில் அங்கங்கு குளிர்ந்த சோலைகளும் தோப்புகளும் பூர்வ மஹரிஷிகள் வஸித்த இடங்களும் மிகவும் பரிசுத்தமானவைகள் என்று ப்ரஸித்தி பெற்றதாயிருக்கின்றன. அவ்விதமாய் யமுனையின் கிழக்குஸ்நான கட்டத்தின் ஸமீபத்தில் ஒரு பெரிய மலையும் அதன் ஸமீபத்தில் நாரதபர்வத மஹரிஷிகளின் இரண்டு சிலாபிம்பமும் புண்ய ஸ்தலமும் இருக்கிறது. அவ்விடத்தில் அவர்கள் ஏதோ ஒரு காரணத்தினால் தேவலோகத்திலிருந்துவந்திறங்கினார்கள் என்று மஹாபாரதத்தில் வெகு விபரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதின் சுருக்கமாவது -

முன்கூறிய நைமிசாரண்ய ஸ்தலத்திற்கு ஸமீபத்தில் ஓடும் காஞ்சனாக்ஷி நதியின்கரையில் முன்பு ஒரு ஸமயத்தில் அழகிய வஸந்த காலம் (இளவேனிற்காலம்) தோன்றியபொழுது ஸகல ஜனங்களின் மனதைக் கவரக்கூடிய அழகு வாய்ந்த உத்யான வனத்தில் மந்தமாருதம் வீசவே ஆகாய மார்க்கமாய் எங்கும் ஸஞ்சரிக்கவல்ல நாரத மஹரிஷியும் அவருக்கு மருமான் (உடன்பிறந்தவள் பிள்ளை) ஆகிய பர்வத மஹரிஷியும் அந்த ப்ரதேசத்தின் அழகைக்கண்டு மனுஷ்யர் வஸிக்கும் இவ்விடத்தில் தாமும் சற்று நேரமாகிலும் லீலையாய் வஸிக்க வேண்டும் என்று விருப்பங்கொண்டவர்களாய் தேவ சரீரத்தை மறைத்துக்கொண்டு அழகிய மனுஷ்ய சரீரத்துடன் இந்த பாஞ்சால தேசத்தை அந்த ஸமயத்தில் அரசாக்ஷி செய்துவந்த ஸஞ்ஜயன் என்னும் பூபாலனுடைய கொலு மண்டபத்தின் முன் இறங்கினார்கள். அவ்விதம் தனக்கு எதிரில் வந்து தோன்றிய அவ்விருவர்களையும் அவ்வரசன் அக்காலமுறைப்படி உபசரித்து ''என்ன வேண்டும்? யாதுகாரணமாய் என்னிடம் வரலானீர்கள்?'' என்று வினவ நாரதரும் பர்வதரும் அவனுக்கு விசேஷ ஆசீர்வாதம் கூறிய பிறகு உமது தேசத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் சில நாள் நாங்கள் வஸிக்கும்படி விடைகொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார்கள். அந்த ஸஞ்ஜயனும் அதுபோலவே விடை கொடுத்ததுடன் ''எனது அரண்மனையின் ஓர் பாகத்திலேயே நீங்கள் வஸிக்கலாம். எனது மூத்த பெண்ணையும் உங்களது உபசரணைக்காக அனுப்புகிறேன். அவளுக்கு நீங்கள் அபூர்வ சாஸ்த்ரங்களின் ஞானத்தையும் புகட்டவேண்டும்'' என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்த ஸஞ்ஜய பூபாலனுடைய சொற்படி அவ்விருவர்களும் இசைந்து அவனது அரண்மனையின் உத்யான வனத்திலேயே சிலநாள் வஸித்து வந்தார்கள். அப்படி வஸிக்கும் தருணத்தில் ஒருவருக் கொருவர் மனதில் எவ்வித விருப்பமாவது எவ்வித எண்ணமாவது தோன்றியபோதிலும் அதை கொஞ்சமேனும் ஒளிக்காமல் ஒருவருக் கொருவர் அவச்யம் அப்போதைக்கப்போது சொல்லிக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் ஒருவித ஸங்கேதம் (ஏற்பாடு) செய்து கொண்டார்கள். அவ்வரசன் கட்டளைப்படி அவனது மூத்த குமாரத்தியும் இவர்களுடைய ஸமீபத்தில் வந்து காலமுறைப்படி நானாவித உபசாரங்களைச் செய்து வந்தாள். அவளது பருவத்திற் கேற்ற அழகையும் குணத்தையும் கண்டு நாரத மஹாரிஷியினுடைய மனமானது அக்னியின் ஸமீபத்திலிருக்கும் வெண்ணெய்க் குடம்போல மன்மத சேஷ்டையால் கொஞ்சம் கொஞ்சமாக உருக ஆரம்பித்தது. முகத்தில் நல்ல தோற்றம் மாறிவிட்டது. வ்ரஹம் மேலிட்டது. உடம்பிலும் இளைப்பு காணலாயிற்று. அந்த ராஜப்புதல்வியிடத்தில் வைக்கப்பட்ட விசேஷ அன்பினால் நாரதருடைய எண்ணமானது அவளிடத்திலே செல்லலாயிற்று.

இவ்விதமாய் மிகவும் வ்ரஹதாபத்தையடைந்த நாரதர் தமதுமனம் ராஜகுமாரியிடம் செல்வதை தனது மருமானும் அந்தரங்கத் தோழனுமான பர்வதமஹரிஷியுடன் ஸங்கேத முறைப்படிசொல்ல வேண்டியிருக்க வந்த நாரதர் அப்படிச் சொல்லாமல் மௌனமாய் நடந்து கொண்டார். இவரது நடிவடிக்கையை அந்த பர்வதமஹரிஷி பல ஸமயங்களில் ஸூக்ஷ்மமாய் ஊஹித்துக்கொண்டு நாரதர் தன்னுடன் செய்து கொண்ட ஸங்கேதத்தின்படி நடவாமையால் கோபித்துக் கொண்டு அந்த ராஜகுமாரியே உமக்கு பத்னியாக ஆகக்கடவது. நீரும் வானரரூபியாக மாறக் கடவீர் என்று நாரதருக்குச் சாபம் கொடுத்தார்.

அதைக்கேட்ட நாரதரும் மனங்கலங்கி தாம்செய்த ஏற்பாட்டைக் கடந்தது தன் குற்றமென்று தபித்திருக்கையிலே சாபப்படி உருவம் மாறிவிட்டது. ஸஞ்ஜயன் என்னுமரசனும் இவ்வித விஷயங்களை எல்லாம் அரண்மனை தூதர்கள் மூலமாய் அறிந்துகொண்டு பர்வதமஹரிஷியின் கருத்துபோலவே தனது பெண்ணை அந்த நாரதமஹரிஷிக்கு கல்யாணம் செய்து கொடுத்தார். அவருக்கு மனுஷ்ய சரீரத்தில் ப்ரம்மசாரியின் தர்மம் கெடவில்லை. வானரஸ்வரூப தசையில்தான் மஹரிஷியின் சாபமுறைப்படி கெடும்படி நேரிட்டது என்று அங்குள்ளோர் எல்லோரும் வியப்புடன் சொல்லிக் கொண்டார்கள். ராஜ கன்னிகையும் அப்படிப்பட்ட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மஹரிஷியை தர்மபர்த்தாவாக வரித்து ஸகல உபசாரங்களையும் நடத்தி வந்து அவரது அனுக்ரஹசக்தியினால் நல்ல புத்திரனையும் சிறந்த செல்வத்தையும் பெற்றாள் என்று இவ்வித பூர்வகதையை மஹாபாரத மூலமாய் தெரிந்து கொண்ட பெரியோர்கள் மஹரிஷி களின் பிம்பத்துக்கு இப்பொழுதும் யமுனா ஜலத்தைக் கொண்டு அபிஷேகம் முதலியது நடத்திவருகிறார்கள்.

நாரத பர்வத மஹரிஷிகளுக்கு இவ்விதம் நடந்த பிறகு கொஞ்சநாள் சென்றவுடனே அவர்களின் அனுக்ரஹத்தினால் அவ்வரசனுக்கும் புத்ரன் உண்டானபடியால் அவ்வரசனால் அனேக புண்ய ஸ்தலங்களில் கோயில் படித்துறைகள் முதலிய கட்டடங்கள் கட்டி வைக்கப்பட்டதாக காணப்படுகின்றன.

முன்சொன்ன மாயாபுரீ என்னும் ஹரித்வார நகரத்திற்குத் தெற்கில் இந்த நாரத பர்வத ரிஷிகளின் பிம்பஸ்தலங்களுக்கு வடக்கில் ஸ்ரீ கண்வ மஹரிஷியின் ஆச்ரமம் விளங்குகிறது. விச்வாமித்ர யாககுண்டத்திற்கு நேர் மேற்கில் இருக்கும். அந்த கண்வமஹரிஷி யாச்ரமத்தின் ஸமீபத்தில்தான் முன்பு விச்வாமித்ர மஹரிஷிக்கும் மேநகைக்கும் பிறந்த சகுந்தலையின் உற்பத்தி ஸ்தானம் இப்பொழுது ஒரு பெரிய நகரமாகி விளங்குகிறது. அந்த நகரத்திற்கு புஷ்பமாலை கட்டியதுபோல் மாலினீ என்னும் நதி ஓடுகிறது. அந்நகரத்திற்கு மேற்கில் திக்கில் சகுந்தலா உத்யானம் என்று ஒரு அழகிய தோப்பும் இப்பொழுதும் விசேஷவளம் பொருந்தியதாகவே விளங்குகிறது.

இந்த பாஞ்சாலதேசத்தில், பதரிகாச்சிரமம் முதலிய சில விஷ்ணுஸ்தலங்களும் அதற்கு கிழக்கில் கேதாரம் என்னும் சிவ ஸ்தலமும் விசேஷமாய் விளங்குவதால், இத்தேசத்தில் வஸிக்கும் ஜனங்கள் கங்கை, யமுனை, காஞ்சனாக்ஷி முதலிய நதிகளில் காலந் தோறும் ஸ்நானம்செய்து பகவத்பூஜை முதலிய வைதிக கார்யங்களில் அன்புடையவர்களாய் விளங்குகிறார்கள். இந்த தேசத்தில் அனேக வித்வான்களும் அழகில் சிறந்த மாதர்களும் இப்பொழுதும் காணப்படுகிறார்கள்.

❄ ❄ ❄

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. இதன் விவரங்களை இந்து புண்யகதைகள் என்னும்புஸ்தகம் முதல்பாகம், இரண்டாம் பாகம் இவைகளில் காணலாம்.

2. கலைக்ஞானங்கள் அறுபத்துநான்கு வகுப்பாக பிரிக்கப்பட்டிருக் கின்றன. அவைகளின் விவரம் சுக்ரநீதி, மஹாபாரதம் முதலிய புஸ்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

3. நவரத்தினங்களின் பெயர், குணம் முதலிய விஷயங்கள் இந்த புஸ்தகங்களின் முடிவில் 53-வது ஸிம்மளதேச அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

4. இதில் சகுந்தலை தனது தோழிகளாகிய அனஸூயை, ப்ரியம் வதை என்பவர்களுடன் சேர்ந்து கன்யகாதசையில் அநேக செடிகொடிகளுக்கு ஜலம் கொட்டியதும் பிறகு அவ்விடத்தில் தற்செயலாய் வேட்டையாடி அங்குவந்த துஷ்யந்த மஹாராஜன் அவர்களுடன் பேசியதும், அதன் நிமித்தமாய் சகுந்தலை அவனிடத்தில் விருப்பம் வைத்தது முதலிய ஸம்பூரண விருத்தாந்தங்களை சாகுந்தல நாடகத்திலும், ஸ்ரீ மஹாபாரதத்திலும் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிஷத தேசம்[1]

அத்யாயம் 12

இருப்பிடம்

நிஷத தேசமானது நைமிசாரண்யத்திற்கு வெகுதூரம் தெற்கிலும் தசார்ணதேசத்திற்குக் கிழக்கிலும் சேதி தேசத்திற்கு வடக்கிலும் ப்ரயாகை க்ஷேத்ரத்திற்கு மேற்கிலும் மிகவும் நீளமான பூமியில் கங்கை யமுனையின் நடுவில் நிலைபெற்றிருக்கிறது. இந்த தேசத்திற்கு வடக்கில் கங்காநதியும் தெற்கில் யமுனாநதியும் பலமுகமாய்ப் பரவிச் செய்வதால் இந்த தேசத்தின் மண்குணமும் வளப்பமும் விசேஷ மேன்மை பெற்றதாகவேயிருக்கிறது.

இந்த தேசத்தின் வடக்குபாகத்தில் ஆநர்த்தம் என்று ஓர் உபதேச முண்டு. அதில் மலைகளும் கற்களும் நிறைந்த பூமியே விசேஷமாய்க் காணப்படுகிறது.

இந்த தேசத்தில் எப்பொழுதும் விசேஷ குளிர்ச்சியே அதிகரித் திருக்கும். ஏனெனில் இந்த தேசத்தின் வலதுபுறத்தில் யமுனா நதியின் பெருக்கமும் இடதுபுறத்தில் கங்கா நதியின் பெருக்கமும் எப்பொழுதும் இடைவிடாமல் பாய்ந்து வருவதேயாகும்.

மகததேசத்தின் வடக்கு எல்லைபாகத்தில் யமுனையும் கங்கையும் கூடும் ப்ரயாகை க்ஷேத்திரத்திற்கும் மேற்குபாகம் முதல் நைமி சாரண்யம் வரையிலும் வில்லுபோல் வளைந்து இந்த தேசம் ஒன்றுதான் இந்த பரதகண்டத்தில் நீண்ட தேசம் என்று ஒரு க்யாதியுமுண்டு. இவ்விதம் குறிப்பிட்ட இந்த தேசமானது நாம் ஐம்பத்திரண்டாவது தேசமாக விவரிக்கப் போகிற சோளதேசத்தை விட மிகுந்த வளப்பமுடையதாகவும் செழுமையாகவும் விளங்குகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை நதி

இந்த தேசத்தின் இருபுறத்திலும் ஓடும் கங்கா யமுனா நதிகளுக்கு ஸமீபத்திலும் மற்றும் சிலவிடங்களிலும் சிறிய மலைகள் பலஉண்டு. அவைகளில் நாதகிரி என்னும் மலையே மிகவும் பெரியது. பலவித பக்ஷிகளுக்கு இருப்பிடம். எப்பொழுதும் அழகிய மலையருவிகள் வீழ்ந்துகொண்டேயிருக்கும். அவ்வித மலையருவிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சிறிய ஆறுகளாக ஓடி யமுனையில் வீழ்கின்றன. இந்த தேசத்தின் வடநுனியில் காஞ்சனாக்ஷி நதி விழும் முகப்பும் தெற்கில் சர்மண்வதீ நதி விழும் முகப்பும் இருபுறத்தில் யமுனை கங்கை நதியும் பாய்ந்து நிலத்துக்கு மிகவும் வளப்பத்தை உண்டாக்கிவருகிறது.

நைமிசாரண்யம் முதல் ப்ரயாகைவரையில் வில்லுபோல் நீண்டு வளைந்திருக்கிற இந்த தேசத்தில் எல்லா பாகங்களிலும் குளிர்ந்த சோலைகளும் தோப்புகளும் மரங்களடர்ந்த வனங்களும் விசேஷ மாய்ப் பலிக்கின்றன. இந்த நிஷததேசம் கோஸலம் மகதம் பாஞ்சாலம் விதேஹம் என்னும் இந்த தேசங்களில் யானை, குதிரை, ஆடு, பசு, எருமை, மான், புறா, கிளி, குருவி முதலிய ஜந்துக்கள் மிக வளர்ச்சியை உடையதாய் கூட்டங் கூட்டமாய் உலாவுகின்றன.

விசேஷம் : நளமஹாராஜன் சரித்திரம்

சர்மண்வதீ நதியானது யமுனையுடன் சேர்ந்தோடும் ஸமீபத்தில் இந்த தேசத்திற்கு ப்ரதான நகரமாகிய நிஷதபுரம்[1] விளங்குகிறது. இந்த நகரத்தில் வெகு பூர்வகாலத்திலேயே சில்ப சாஸ்த்ர முறைப்படி தேவாலயங்கள், ஸ்தூபி, தீபஸ்தம்பம், மாளிகை, அரண்மனை, வீடுகள், சாலைகள், நர்த்தன மண்டபம், நாற்சந்திவீதிகள் தடாகங்கள் ராஜஸபை மண்டபம் முதலிய பெரிய கட்டடங்கள் ஏற்பட்டு இப்பொழுதும் அவைகளில் சிலகுறிகள் விளங்குகின்றன. இவ்வித மான நிஷதபுரத்தை சந்த்ரவம்சத்தில் உதித்த வீரஸேனன் என்னும் மஹாராஜ சக்ரவர்த்தியானவர் வெகு புகழ்ச்சியுடன் ஆண்டுவந்தார். அவனுடைய புத்ரனாகிய நளமஹாராஜனும் தனது பிதாவினால் கொடுக்கப்பட்ட ராஜ்யாதிகாரத்தைப் பெற்று அனேக தேசங்களுக்கு சக்ரவர்த்தியாகவும் அரசு புரிந்தான். இந்த நளனுடைய நாமதேயத்தை நாவினால் சொல்லியமாத்திரத்திலே ஸகல பாபங்களும் நீங்கும் கலிபுருஷனுடைய மோஹச் செயல்களே உண்டாகாதென்றே ஸ்ரீஹர்ஷகவி செய்த நைஷதகாவ்யத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது. நளமஹராஜன் ரூபத்தில் மன்மதனுக்கொப்பானவன். புண்யபுருஷன். அச்வசாஸ்த்ரமறிந்தவன். தயாநிதி, ஸத்யஸந்தன் என்பதாக உலகத்தோர் சொல்ல நாம் பலதடவைகளில் கேள்விப்பட்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

டிருக்கிறோம். புண்ய சீலனாகிய இவ்வித நளனுடைய திவ்ய சரித்திரம் இங்கு சுருக்கமாய் விவரிக்கப்படுகிறது. அதாவது -

வீரஸேன மஹாராஜனுக்குப் புத்ரனாய் உதித்த நளன் இளமைப் பருவத்திலேயே குருவிடனிடத்திலிருந்து தனது விசேஷ புத்தி ஸாமர்த்தியத்தினால் ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுக் கொண்டு க்ஷத்ரிய குலத்திற்குத் தகுந்த தனுர்வேதத்திலும் தர்மநூல்களிலும் விசேஷ பயிற்சியையுமடைந்தான். பிதாவான வீரஸேன சக்ரவர்த்தியும் நளனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்துவிட்டு காட்டிற்குச் சென்றான். நளனும் காலமுறைப்படி இளவரசு பட்டத்தைப் பெற்றவுடனே நல்ல மந்திரிகளை ஸபையில் வைத்துக் கொண்டு உலக நடவடிக்கைகளிலும் ந்யாயங்களிலுமுள்ள ஸௌகரிய பலாபலன்களையும் அரசர்களின் லக்ஷணத்தையும் நன்றாய்க் கற்றுக்கொண்டு ரத்னங்களிழைத்த பெரிய ராஜ ஸிம்மாஸனத்தில் ஏறி அரசு புரியும் முறைமையைக் கண்டு ஜனங்கள் எல்லோரும் ஸ்துதித்தார்கள். மஹரிஷிகளும் பெரியோர்களும் புலவர்களும் ஆசி கூறினார்கள். நளன் அரசுபுரியும் தருணத்தில் மேகங்கள் மாதம் மும்மாரி பெய்தன. பசுக்களும் ப்ராம்மணர்களும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டவர்களாய் வ்ருத்தியடைந்தார்கள். வர்ணாச்ரம தர்மங்கள் சரியாய் நிறைவேறி வந்தன. ஸகலப் ப்ராணிகளிடத்திலும் விசேஷ விச்வாஸத்தை வைத்து இவ்விதமாய் ராஜ்ய பரிபாலனஞ்செய்து வந்த நளன் யௌவனவயதில் மன்மத னுக்கு நிகரான அழகையடைந்தான். சில ஸமயங்களில் நானா தேசங்களிலிருந்த தனது ராஜஸபா மண்டபத்தையடைந்தவர்களை முறைப்படி பூஜித்து யோகக்ஷேமங்களை வினவும் தருணத்தில் விந்திய மலையின் வடக்கு அடிவாரத்திலிருக்கும் விதர்ப்ப தேசத்து அரசனாகிய பீம மஹாராஜனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த தமயந்தியின் ரூப குணங்களைக் கேள்விப்பட்டபடியால் அவளிடத்தில் நளனுடைய மனம் செல்லலாயிற்று.

சரீரத்தில் பலவிதமாய் வ்ரஹ சின்னங்கள் தோன்றின. தமயந்தியினிடத்திலேயே மனம் சென்றபடியால் ராஜ்ய கார்யங் களையும் கவனிக்க முடியவில்லை. இவ்வித இடையூறினால் தர்ம நிலை குலையா வண்ணம் அமைச்சரிடத்தில் பூபாரத்தை வைத்து விட்டு நகருக்கு வெளிப்புறத்திலிருக்கும் உத்யானவனத்தில் சென்று வ்ரஹதாபத்தை ஆற்றிக் கொண்டு வந்தான். ஒருநாள் காலையில் அந்த நந்தவனத்திலிருக்கும் நடவாபியில் பெரிய தாமரை புஷ்பத்தில் ஒரு ராஜ ஹம்ஸத்தைக் கண்டு நளன் அதை தனது கையினால் பிடித்துக் கொண்டான். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் அந்த அன்னத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேண்டுகோளின்படி இஷ்டப்படி திரிவாய் என்று அதை விட்டுவிட்டான். அவ்விதமாய் நளனிடத்திலிருந்து விடுபட்ட ஹம்ஸமானது அவனை ஸ்துதித்து தமயந்தியினுடைய குணத்தையும் அழகையும் விசேஷமாய் எடுத்துக் கூறிற்று.

அதைக்கேட்ட நளனும் அந்த ஹம்ஸத்தையே தமயந்தியினிடம் தூதாக அனுப்பினான். அவ்வரசனுடைய விருப்பத்துக்கிணங்கி அந்த அன்னப்பறவையும் குண்டினபுரத்தில் அந்தப்புர உத்யான வனத்தில் தோழிகளுடன் விளையாடும் தமயந்தியை தனியாய் அழைத்துக் கொண்டுபோய் நளமஹாராஜனுடைய குணங்களை அதிகமாய் எடுத்துரைத்து அவளது மனதையும் அவ்வரசனிடம் பதியும்படி செய்தது. இவ்விதம் ஒருவருக்கொருவர் மேல் ஆசையை உண்டு பண்ணிய ஹம்ஸ பக்ஷியானது அரசனிடம் திரும்பியவுடனே தமயந்திக்கு நளனிடத்தில் விரஹதாபம் அதிகரிக்கலாயிற்று. அந்தரங்க தோழிகள் எவ்வித சீதோபசாரம் செய்தபோதிலும் தமயந்தியின் மனம் தேறுதலையடைய வேயில்லை.

பீமராஜனும் தனது புதல்விக்கு நளன் விஷயமாய் ஏற்பட்ட மையலை சீக்கிரத்தில் தீர்க்க வேணுமென்று நிச்சயித்து ஸகல தேசத்தரசர்களுக்கு தமயந்தி ஸ்வயம்வரம் என்று மணவோலை அனுப்பிடவே நான்கு திக்குகளிலிருந்து ஸகல ராஜ குமாரர்களும் விசேஷ அலங்காரத்துடன் நிஷதபுரத்தில் நடக்கும் ஸ்வயம் வரத்துக்காக வந்து சேர்ந்தார்கள். பூலோக மன்னர்கள் எல்லோரும் இவ்விதமாய் ஸந்தோஷ கோலாஹல ஆடம்பரத்துடன் குண்டின நகரத்தில் வந்து சேருவதை ஆகாச மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும் நாரதஹரிஷி பார்த்து மனதில் ஓர் வித வியப்படைந்தவராய் அந்த க்ஷணத்திலேயே ஸ்வர்க்கலோகம்சென்று இந்திரனைக்கண்டு இந்த தமயந்தியின் ரூபகுணங்களைப் பற்றி விசேஷமாய் எடுத்துக் கூறியதுடன் அவளிடத்தில் ஒவ்வொரு அரசர்களும் வைத்திருக்கும் ப்ரீதியையும் அவர்கள் அவளது ஸ்வயம்வரத்திற்கு வந்து சேரும் கோலாஹலத்தையும் நன்றாய் மொழிந்தார்.

இவ்வண்ணம் நாரதரடமிருந்து தமயந்தியின் குணங்களை செவியுற்ற இந்த்ரனும்அவளிடத்தில் விருப்பங்கொண்டு, பூலோகத் திற்குப் புறப்படலானான். அதைக்கண்ட வருணன், யமன், அக்னி என்னும் மூன்று தேவர்களும் அந்த இந்த்ரனைப் பின்தொடர்ந்தார்கள். இவ்விதம் நான்கு தேவர்களும் தமயந்தியை தாம் தாமே விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்னும் பேராசையால் ஆகாயத்திலிருந்து இறங்கி குண்டினபுரத்தின் மேற்கு எல்லையில் வந்தார்கள். அதே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காலத்தில் இந்த நிஷததேசத்தையாளும் நளமஹாராஜனும் தனது பரிவாரங்களுடன் அந்த ஸ்வயம்வரத்துக்கு புறப்பட்டான். தமக்கு எதிரில் வருகிற நளனைக்கண்டு தேவர்கள் நால்வரும் கை எடுத்துத் தூக்கி நளனை ஸ்துதித்து ''ஓ ஸத்ய ஸந்தா! நள மஹாராஜனே! நாங்கள் விரும்பியபொருளை நீ எப்படியாவது எங்களுக்கு கொடுக்க வேண்டும்'' என்று பொருளைக் குறிக்காமல் பொதுவாய் கபடமார்க்கமாய் யாசித்தார்கள். அப்பொழுது நளனது மனதில் என்ன தோன்றியதென்றால் -

''கற்பக வ்ருஷத்தின் நிழலில் ஸ்வர்க்கலோகத்தில் அரசாளும் தேவேந்த்ரன் முதலிய திக்பாலர் நால்வரே இவ்விதமாய் நம்மை யாசிக்கும்போது நாம் எதைத்தான் கொடுக்கக்கூடாது? யாசிப்பவர் எதைக் கேட்டபோதிலும் தானம் செய்பவன் உடனே அதை கொடுத்துத் தீருவதுதான் நலம். தானத்தின் மஹிமையை நாம் எவ்வாறு எடுத்துரைக்க முடியும்? ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கபடமான யாசனையை மஹாபலி சக்ரவர்த்தி அறிந்திருந்தபோதிலும் பூமிதானம் செய்யவில்லையா? நானிலத்தில் நற்கீர்த்தியடையவில்லையா? தானம் செய்வதின் மஹிமையை யார்தான் அறிந்திலார்? செல்வத்தையும், சரீரத்தையும், ஜீவனையும் சிலர் தானம் செய்ததாக நாம் கேள்விப்பட்டு வருகிறோம். கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு அதை ஈயாவிடில் அவ்வித தாதாவுக்கு அதிகபாபம் உண்டாகும் என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. ஸத்பாத்ரத்தில் தானம் செய்பவனுக்கு நல்ல லோகங்களில் ப்ரவேசமுண்டு என்றும் எல்லாவித நற்கார்யங்களைக் காட்டிலும் தானம் செய்வதே மிக்க நலமென்றும் நமது குருக்கள் உபதேசித்திருக்கிறாரல்லவா? எந்தப்பொருள் யாருக்கு சொந்தம்? மனுஷ்ய சரீரத்திற்கு புண்ய பாவங்களே துணையாகும். மனுஷ்யருடைய ஜீவன் நிலைத்திருப்பது அரிதாகையால் ஜீவதசையிலேயே நற்கார்யங்களைச் செய்வதும் புண்ய காலங்களில் நல்ல யோக்யர்களிடத்தில் பலவிதப் பொருள் களை சாஸ்த்ரமுறைப்படி தானம் செய்வதுதான் புலவர்களின் மதம். ஆகையால் நம்மை நாடி இப்படிப்பட்ட தேவர்களே யாசிப்பார் களாகில், நாம் இவர்களுக்கு எதைத்தான் ஈயலாகாது? அரசாக்ஷி யையும் ஜீவனையும் கொடுத்துவிடலாம். ஜீவனைப் பார்க்கிலும் பதிஞயிரம்பங்கு அதிகமான தமயந்தியல்லவா இப்பொழுத நமது மனதிலிருக்கிறாள். அவளையும் ஒரு ஸமயம் கொடுத்தாலும் கொடுத்துவிடலாம்'' என்நிறு இவ்விதமாய் நளன் தானத்தின் மஹிமையை நினைந்துருகி, கண்ணீர் ததும்ப கைகூப்பிக்கொண்டு ஓ!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவர்களே! நீங்கள் எதைக் கேட்டபோதிலும் நான் அதைத் தவறாமல் கொடுக்கிறேன், கேட்பீர்கள் என்று கூறினான்.

அதைக்கேட்ட தேவர்கள் நால்வரும் மிகவும் மகிழ்ந்து ஓ, நளனே! நீ ஒருவனே உலகத்தில் புண்ய புருஷனாக விளங்கக் கடவாய். தமயந்தியை நாங்கள் கல்யாணம் செய்துகொள்ளும்படி நீ எங்களது தூதனாய் அவளிடம் செல்ல வேண்டும் என்று உறுதியாய் கூறினார்கள். நளனும் அதிக மனமகிழ்ச்சியுடன் தான் விரும்பிய தமயந்தியினருகில் தேவர்களின் தூதனாக செல்ல இசைந்தான். தேவர்களும் ஆசிகூறினார்கள். நளனும் தேவர்களின் அனுக்ரஹத்தினால் தனக்கு அப்பொழுது உண்டான அந்தர்த்தான வித்யையினுல் (தன் கண்களுக்கு எல்லோரும் புலப்படவும், தான் மாத்ரம் ஒருவருடைய கண்களுக்கும் புலப்படாவண்ணம்) அந்த தமயந்தியினுடைய அந்தப்புரத்தை நாடி அங்குள்ள பலவித விசித்ரங்களையும் ஸ்திரீகளின் லீலைகளையும் கண்டு மகிழ்ந்தும் தனது தூதத்தொழிலைக் கண்டு, கொஞ்சம் ஏங்கியும் முடிவில் மனதைத் தைர்யப்படுத்திக்கொண்டு தமயந்தியின் அருகில்சென்று வணக்கத்துடன் மொழிந்ததாவது—

ஓ விதர்ப்பராஜன் குலக்கொழுந்தே! ஸ்வர்க்கலோகத்தில் அரசுபுரியும் இந்த்ரனும் அக்னியும், யமனும், வருணனும் உனது விவாஹத்தை விரும்பி என்னைத் தூதனாக இவ்விடம் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு நீ இசையவேணும். இதைவிட வரம் உலகத்தில் யார் இருக்கிறார்கள் என்று பலவிதமாய் அவர்களின் பெருமையை எடுத்துக்கூறினான். தமயந்தியானவள் அதற்கு ஒத்துக் கொள்ளாமல் 'நான் நள மஹாராஜன் ஒருவனையே மணம் புரிவேனே தவிர வேறொருவனையும் மனதிலும் கனவிலும் எண்ணமாட்டேன்' என்று உறுதியாய் மறுத்துவிட்டாள்.

இவ்வித நடவடிக்கைகளை எல்லாம் ஆதியோடந்தமாக கண்டிருந்த தேவர்கள் [2]பாகசாஸ்த்ர வித்யையும் மற்றும் சிலவித சக்திகளையும் நளனுக்கு வரமாகக் கொடுத்தார்கள்.

தேவர்களுடன் விவாஹத்தை தற்செயலாய் மறுத்துவிட்ட தமயந்தியை தாமே அடையப்போகிறோம் என்று நிச்சயத்துடன் மறு நாட்காலையில் குண்டினபுரத்தில் விதர்ப்பராஜனுடைய அரண்மனை யின் கல்யாண மண்டபத்தில் தமயந்தியின் ஸ்வயம்வரத்துக்காக வந்து சேர்ந்திருக்கும் அரசர்களின் மத்தியில் நளனும் உட்கார்ந்து கொண்டான். மணத் தோழியினால் (ஸ்வயம்வரத் தோழியினால்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடத்திவரப்பட்ட தமயந்தியும் ஒவ்வொரு அரசர்களையும் பார்த்து சற்று யோசித்து தனக்கு வேண்டாமென்று ஒவ்வொருவரையும் தள்ளிவிட்டு முடிவில் நள மஹாராஜனுடைய ஸமீபத்தில் வந்து நிற்கும்போது அந்தநான்கு தேவர்களும் தமது உருவத்தை மறைத்துவிட்டு, நளனுடைய உருவம்போல் தோன்றிக்கொண்டு அவனது இருபுரத்திலும் மாயையாய் உட்கார்ந்து கொண்டிருந் தார்கள்!! அவ்விடம் சென்ற தமயந்தியும் அங்கு புலப்படும் ஐந்து நளனைக்கண்டு ஆ! இதென்ன ஆச்சரியம்! இதுவரையில் ஒரு நளன்தான் உலகத்தில் இருக்கிறான் என்று அவனையே மணம் செய்ய விரும்பினோம். இப்பொழுது நமக்கெதிரில் ஐந்து நளஸ்வரூபம் புலப்படுகிறதே! இதற்கு நாம் என்ன செய்வோம். நமது புத்தி மயக்கமோ! தேவர்களின் சூதோ தெரியவில்லையே! என்று கலங்கி நின்றாள். தோழியின் உதவியினாலும் ஸரஸ்வதியின் கருணை யினாலும் தமயந்தி அவர்களை வணங்கவே தேவர்கள் மனமிரங்கி தமயந்திக்கு ஆசி கூறி நளனுக்கும் தமயந்திக்கும் விவாஹத்தை நிறை வேற்றி வைத்தார்கள்.''

சிலநாள் சென்றபிறகு அந்த தம்பதிகள் நிஷதபுரத்தையடைந்து வஸிக்கையில் இந்த்ரஸேனன் என்று அவர்களுக்கு ஒரு புத்ரன் உண்டானான். தமயந்திக்கு ஸ்வயம்வரம் நடந்த காலத்திலேயே அவளைக் கலிபுருஷனும் அடைய விரும்பினான். அவனது விருப்பம் நிறைவேறாதபடியால் நளனைக் குறித்து வெகுவாய்க் கோபித்துக் கொண்டு ஸமயம் தேடிக்கொண்டிருக்கையில் ஒருநாள் மாலை நேரத்தில் நேர்ந்த கொஞ்சம் அசுசியை நிமித்தமாக வைத்துக்கொண்டு கலிபுருஷன் நளனுடைய சரீரத்தில் ப்ரவேசித்துப் பரவிவிட்டான். மற்றும் சிலநாட்கள் சென்றவுடனே பாபிஷ்டனாகிய கலி புருஷனுடைய மாயையினால் நளனது புத்தி நிலைமை மாறிவிட்டது. நேபாள தேசத்துக்கு ஸமீபமான பூமியை ஆண்டு வந்த தனது தம்பிகளாகிய புஷ்கரன் என்னும் அரசனுடன் நளன் சூதாடும்படி ஸமயம் நேரிட்டுவிட்டது. அந்த சூதாட்டத்தில் ஸகல பொருள் களையும் பந்தயமாக வைத்து கொஞ்சம் கொஞ்சமாக எல்லா வற்றையும் இழந்துவிட்டான். ராஜ்ய அதிகாரம் புஷ்கரராஜ னுடைய வசமாயிற்று. அவ்வித ஸமயத்தில் தயையற்ற புருஷ்கரனது எதிரில் வஸிப்பதைவிட காட்டுக்குச் செல்வதே உத்தமமென்று எண்ணித் தனது பத்னியாகிய தமயந்தியை துணையாக அழைத்துக்கொண்டு நளன் வனங்களில் சென்று கனிகிழங்கு வகைகளையே உணவாக வைத்துக்கொண்டு சில காலம் வஸித்து வந்தான். அவ்விருவர்களின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சரீரத்திலும் அழகு மாறிவிட்டது. மழையாலும் வெய்யிலாலும் கடினமான வழியினாலும் மிகவும் வருத்தத்தை அடைந்தார்கள்.

இவ்விதம் காட்டில் வஸிக்கும் தருணத்தில் ஒருநாள் தனது மடியில் அயர்ந்து நித்திரை செய்யும் தமயந்தியை நளன் காட்டில் தனியாய் விட்டு விட்டு தன் மனம்போல் ஓடிவிட்டான். அதற்குக் காரணம் என்னவெனில் காட்டிலும் கூட அந்த தம்பதிகளை பிரிக்க வைக்க வேணும் என்னும் கருத்தினால் அந்த கொடிய கலிபுருஷன் நளனுடைய மனதில் சென்று தயையை ஓட்டிவிட்டான். ஆகையால் தான் நளனும் தயையற்றவன் போல் ஒரு பெண்ணைத் தனியாகக் காட்டில் விட்டோடும்படி நேர்ந்தது.

சற்றுநேரத்திற்கெல்லாம் நித்திரையை விட்டொழிந்த தமயந்தி யானவள் தனது ஸமீபத்தில் கணவனைக் காணாதவளாய் பலவித மாய்க் கதறினாள். பூமியில் புரண்டழுதாள். இதைக்கண்டு கலி புருஷன் ஸந்தோஷமடைந்தான். அவ்விதம் தனிமையாய்க் கூக்குரலிட்டு அழுது கொண்டிருக்கும் தமயந்தியை சில வழிப் போக்கர்கள் பார்த்து அவளுக்கு தைர்யம் சொல்லி தங்கள் குடும்பத்துடன் சேர்த்துக்கொண்டு சில நாள் போஷித்து வந்தார்கள். தமயந்தியும் மனம் தேறுதலையடையாமல் அவர்களுடன்கூட வஸித்தபோதிலும் தனது கணவனையே தேடிக்கொண்டு ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச்சென்று கடைசியாய் தனது சிறிய தாயார் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். தனது ப்ராணநாதனை யடையாத வருத்தத்தினாலும் வழியில் பலவிதக் கஷ்டங்களை அனுபவித்ததினாலும் தேஹமெலிவையடைந்த தமயந்தியானவள் சிறிய தாயார் தன்னை இன்னாரென்று அறிந்து கொள்ளாதபடி அவ்வளவு தந்திரமாய் அவள் வீட்டில் வஸித்து வந்தாள்.

நளமஹாராஜன் ஏதோ ஒருவித காலத்தின் செயலால் சூதாட்டம் ஆடி ஸகலபொருள்களையும் ராஜ்யத்தையுமிழந்ததுமின்றி பத்னியுடன் காட்டையடைந்தான். அவ்விடத்திலும் தனது பெண்ணான தமயந்தியை விட்டுப்பிரிந்து சென்றுவிட்டானாம் என்கிற இந்த விஷயத்தை செவியுற்ற பீமராஜனும் மிகவும் வருத்தம் அடைந்தான். மந்த்ரிகளால் சற்று தேறுதலைடைந்தவனாய் உலகெங்கும்போய்த் தன் பெண்ணைத் தேடியழைத்து வரவேணும் என்று தூதர்களையும் வேவுகாரர்களையும் மந்த்ரி ப்ரதானிகளையும் நான்கு திக்குகளிலும் அனுப்பினான். அவர்களில் மிகவும் ஸூக்ஷ்ம புத்தியுள்ள சில வேவுகாரர்கள் மாத்ரம் நடையினாலும் பேச்சினாலும் அழகினாலும் மற்றும் சிலவித அடையாளங்களினாலும் இவள்தான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தமயந்தியாக இருக்க வேண்டும் என்று நிச்சயித்து அதை பீம ராஜனுக்கு அறிவித்தார்கள்.

தமயந்தியும் உயிருடனிருக்கிறாள் என்னும் ஸமாசாரத்தை தூதர் முகமாய் கேள்விப்பட்ட பீமராஜன் மிகவும் ஸந்தோஷப்பட்டு தகுந்த அதிகாரிகளை அனுப்பி தமயந்தியை தனது அரண்மனைக்கு வரவழைத்து பலவித ஸௌக்ய உபசாரங்களைச் செய்துவந்தான்.

இது இவ்விதமிருக்க, தமயந்தி நித்திரையில் விட்டுப்பிரிந்த நளமஹாராஜனும் அனேக வனங்களையும் நதிகளையும் தாண்டி வழி தெரியாமல் தட்டுத் தடுமாறியும் பசி உண்டான ஸமயத்தில் காய் கிழங்குகூட கிடைக்காமல் வருத்தமடைந்தும் மிகவும் மனத் துயரத்துடன் செல்லும் தருணத்தில் நான்கு பக்கங்களிலும் அக்னி ஜ்வாலை வீச அதின் நடுவில் கார்க்கோடகன்[3] என்னும் ஸர்ப்பம் அகப்பட்டுக் கொண்டு பரிதபிப்பதை நளன் கண்டான். புண்ய சீலனாயும் உத்தம புருஷனாயுமிருக்கிற படியால் அந்த நளன் அதைக் கண்டவுடனே மனதில் தயை மிகவும் உண்டாகவே அந்த அக்னி ஜ்வாலையிலிருந்து அந்த ஸர்ப்பத்தை வெளிநீக்கி வைத்தான். பெரிய ஆபத்திலிருந்து விடுபட்ட அந்த கார்க்கோடன் என்னும் ஸர்ப்பமும் வெகு ஸந்தோஷத்துடன் நளனை உகந்து போற்றி நீர் யார் உமக்கு ஏன் இவ்வித கஷ்டம் நேரிட்டிருக்கிறது என்று வினவ, அவனால் ஸகல விஷயங்களையும் அறிந்துகொண்ட கார்க்கோடகனும் நளனும் துயரத்திற்கு கலிபுருஷனே முதல் காரணமென்றறிந்து கொண்டு அவனது சரீரத்தில் பரவியிருந்த கலி புருஷன் மிகவும் வருந்தும்படி, தனது கொடிய விஷப்பற்களால் நளனைக்கடித்தது. அவ்வித கொடிய விஷத்தினால் நளனது சரீரம் யாதொரு வாட்டத்தையுமடையாமல் முன்போலவே விளங்கிற்று. அதைப்பற்றிக்கொண்டிருந்த கலி புருஷனுடைய சரீரம் விஷாக்கினியினால் தஹிக்கப்பட்டதாய் முடிவில் கலிபுருஷன் நளனை[4] முற்றிலும் விட்டோடும்படி நேரிட்டது.

கொடிய கலிபுருஷனுடைய மாயையும் துலைந்தபடியால் முன்னிருப்பதைப்பார்க்கிலும் பதின் மடங்கு அதிகமாய் ஒளிவீசும் சரீரத்துடனே நளன் மறுபடியும் ஒவ்வொரு நகரங்களிலும், க்ராமங்களிலும், பர்ண சாலைகளிலும், குகைகளிலும், மலை களிலும், தோப்புகளிலும், கொஞ்சகாலம் வஸித்துக்கொண்டு கோஸல தேசத்தின் பிரதான நகரமாகிய அயோத்யா நகரத்தை பரிபாலனஞ் செய்கிற ருதுபர்ண மஹாராஜனுடைய ஸபையை நாடி தனது புத்தியின் திறமையினால் அவனிஷ்டம் போல்நடந்கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வந்தபடியால் அவ்வரசனும் நளனையே தனது தேர்ப்பாகனாக ஏற்படுத்திக் கொண்டான்.

தனது பிதாவாகிய பீமராஜனுடைய அரண்மனையில் உறைந்து வந்த தமயந்தியும், கணவனுடைய விரஹத்தை ஸஹிக்க முடியாதவளாய் தன்னிடத்தில் வெகு விச்வாஸம் வைத்து வந்த சில ப்ராமணர்களுக்கு பசு, வஸ்த்ரம், பொன் முதலியவைகளைக் கொடுத்து உபசரித்து நள மஹாராஜன் இவ்வுலகில் எங்கிருந்த போதிலும் கண்டறிந்து அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று ப்ராம்மணர்களை அனுப்பினாள். அவர்களும் தர்மநிதியாகிய நளனைக் காணவேணுமெனும் கருத்துடனே க்ராமம், நகரம் பட்டணம் முதலியவைகளில் சென்று ஒவ்வோரிடத்தும் சில நாள் தங்கியிருந்து எங்கும் காணாமல் ருதுபர்ண மஹாராஜனுடைய அழகிய குதிரைகளுக்கு அனேகவித நடை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு புருஷனைப் பார்த்து இவன்தான் நளனாக இருக்க வேண்டுமென்று சிலகுறிகளால் தெரிந்து கொண்டு அவளிடம் சென்று ஆசி கூறி மொழிந்ததாவது- கேளாய் தமயந்தி! உனது கருத்து போலவே நாங்கள் பலவிடம் சென்று தேடிப்பார்த்தோம்; எங்கும் நளன் கிடைக்கவில்லை. நேற்று காலையில் தான் அயோத்தியாநகரில் ருதுபர்ண மஹாராஜனுடைய குதிரைலாயத்தில் குதிரைகளுக்கு நடை கற்பித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன்தான் உனது கணவனாக இருக்கலாமென்று கருதி வெகு தடவை கூப்பிட்டும் அவன் வர ஸம்மதிக்கவில்லை. அந்த நகரில் அச்வஹ்ருதயம் என்னும் ஒரு க்ரந்தத்தை வடமொழியில் இயற்றி அதன் முறைப்படி குதிரைகளையே செலுத்துவதில் அவனுக்கு விருப்பம்போல் தோற்றுகிறது என்று கூறினார்கள்.

இவ்விதமாய் நளன் ஜீவனுடன் கூடியிருக்கிறான் என்பதையும் அவனது கருத்தையும், ப்ராம்மணர்கள் முகமாய் கேள்விப்பட்டு தமயந்தியானவள் தனது அந்தரங்கத் தோழிகளுடனும் தகப்பனுடைய மந்திரிமார்களுடன் யோசித்து ருதுபர்ணராஜன் நளனை விட மாட்டான் என்பதையும் அவர்கள்சொல்லக்கேட்டு அவ்விருவர் களையும் சேர்த்தே தனதிருப்பிடம் வரவழைக்க வேணும் என்று முடிவாய் தீர்மானித்தாள். மறுநாள் காலையிலேயே சுற்றத்தாருக்கும் அனேக அரசர்களுக்கும் ''தமயந்தியின் தங்கைக்கு ஸ்வயம்வரம்'' என்று பீமராஜன் மணவோலை எழுதியதுமன்றி தனது அரண் மனையையும் நகரத்தையும் அலங்கரிக்கும் படி மந்திரி ப்ரதானிகளுக்கு உத்திரவுசெய்துவிட்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பீமராஜனுடைய கோரிக்கையின்படி ஸகல அரசர்களும் அவனது ப்ரதான நகரமாகிய குண்டினபுரத்துக்கு ஸ்வயம்வரத்திற்காக வந்து சேர்ந்தார்கள். ருதுபர்ணமஹாராஜனும் நளனால் செலுத்தப்பட்ட அழகிய குதிரை கட்டிய தேரில்மேலேறிக்கொண்டு அங்குவந்து சேர்ந்தான். அன்றிரவின் உணவு (சாப்பாடு) ஸித்தமாவதற்கு முன்னமே ருது பர்ணமஹாராஜன் பீமராஜனிடம் வந்து யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டு ஓ பீமராஜனே! கேளீர் சில வருஷ காலமாய் எனது அரண்மனையில் ஒரு சமையற்காரன் வந்திருக்கிறான். அவனது பாக ஸாமர்த்தியத்தை வாயினால் எடுத்துரைக்க முடியாது. ஆகையால் எனது சமையல்காரனே நாம் எல்லோரும் சாப்பிடுவதற்காக இங்கு சமையல் செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறேன். என்னுடன் கூட நீங்களும் அவச்யம் போஜனம் செய்ய வரவேணும் என்று வணக்கமாய்க் கேட்டுக் கொண்டான். அது போலவே பீமராஜனும் தமயந்தி முதலிய மற்றெல்லோரும் ருது பர்ணமஹாராஜன் தங்கியிருக்கும் மாளிகையில் அன்றிரவு போஜனத்திற்காக ஒன்றுசேர்ந்தார்கள்.

நளமஹாராஜன் தேவர்களுக்காக தூதுசென்ற ஸமயத்தில் அக்னிபகவனால் கொடுக்கப்பட்ட பாகவித்தையையடைந்தபடியாய் அமிர்தத்தை புசித்ததேவர்களும் விரும்பக்கூடியதாய் அறுசுவையுடன் கூடிய அவ்வித உணவுகளை அன்று ஒரு நிமிஷநேரத்தில் ஸித்தப்படுத்தி அவர்களுக்கு விருந்தளித்தான். அதை புஜித்த ஒவ்வொருவரும் இந்த பாசகன் (சமையல் செய்பவன்) ஏதோ ஒரு அபூர்வ தேவதாகடாக்ஷத்தைப் பெற்றிருக்க வேண்டும்; அல்லது இவனே ஒரு தேவனாகவாவது இருக்க வேண்டுமே ஒழிய ஸாதாரணமான சமைப்பவனன்று என்றுபலவிதமாய் நளனைப் புகழ்ந்து மெச்சினார்கள்.

ருதுபணர்ராஜன் குண்டினநகரத்திற்கு வருகையில் அவனது தேர்க்குதிரைகளை செலுத்தும் திறமையைக்கண்டே அந்தஸாரதி தனது பர்த்தாவாகிய நளனாகத்தான் இருக்க வேணும் என்று மாளிகையின் மேலிருந்து நோக்கிய தமயந்தியானவள் அன்றிரவு அவன் செய்த உணவினாலும் நளமஹாராஜன் இவன்தான் என்று உறுதியாய் நிச்சயித்துக்கொண்டாள். விருந்து முடிந்தவுடனே தெய்வ ஸங்கல்பத்தினால் நளனும் தமயந்தியை நேரில் ஸந்தித்தான். இவள்தான் தனது தர்மபத்னி என்று பூர்வஞாபகம் உண்டாயிற்று. உடம்பு முழுமையிலும் மயிர்க்கூச்சல் கிளம்பியது. குரல் தழதழத்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் துளித்துளியாய் வீழ்ந்தன. தமயந்தியைக் கண்டு அழுதான். ஸந்தோஷித்தான், கட்டிக் கொண்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருகிலிருந்து இதைக் கண்டவர்கள் எல்லோரும் அந்த உத்தம தம்பதிகள் வெகு கஷ்டத்தையடைந்து மறுபடியும் ஒன்று சேர்ந்ததைப் பற்றி மிகவும் ஸந்தோஷப்பட்டார்கள். போற்றினார்கள். கண்டு களித்தார்கள். பீமராஜனும் ஆசி கூறினான். ருதுபர்ண மஹாராஜனும் இதுவரையில் தனக்கு ஸாரதியாயும் பாசகனாயுமிருந்தவன் நளன் என்பதாகக் கேள்விப்பட்டு அதுவரையில் இவ்வித ஹீநத் தொழிலில் அறியாமல் ஏவியதற்காக மன்னிப்புக்கேட்டுக் கொண்டு அவர் களுடைய சேர்க்கையை மிகவும் மெச்சினான். மற்ற அரசர்களும் முனிவர்களும் ஆசீர்வதித்தார்கள்.

கலிபுருஷனால் முன்னமே விடப்பட்ட நளமஹாராஜன் வெகுகாலம் பிரிந்திருந்த தமயந்தியை அடைந்து முன்போல சிலநாள் வரையில் குண்டினபுரத்திலேயே வஸித்து பிறகு பீமராஜனால் தனது நிஷத தேசத்திற்கு அனுப்பப்பட்டான். நிஷததேசத்து வாஸிகளால் எதிர்கொள்ளப்பட்டவனாய் தனது அரண்மனையை நாடி தன் ஸஹோதரனாகிய புஷ்கர அரசனை மறுபடியும் சூதாட்டத்திற்கு வா என் நிர்பந்தமாய் கூப்பிட்டு அதில் அவனை வென்று அவன் வசத் திலிருந்த தனது ராஜ்யத்தை தானே மறுபடியும் கைப்பற்றி வெகுநாள் மிகுந்த சிறப்புடன் அரசு புரிந்தான்'' என்று மஹாபாரதத்தில் வன பர்வத்தில் நளமஹாராஜனுடைய சரித்ரத்தை வெகு விபரமாய்க் காணலாம்.

நளமஹாராஜனுக்குப் பிறகு அவனது புத்ரனும் பிறகு அவன் ஸந்ததியாரும் சில காலம்வரையில் இந்தநிஷத தேசத்தை ஆண்டு வந்ததாயும் ஏற்படுகிறது.

❋ ❋ ❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. இந்த நிஷதபுரம் என்னும் நகரத்திற்கு மாவிந்த நகரம் என்று தமிழ் நைடதகாவ்யத்தில் புகழேந்தி கூறியிருக்கிறார். வடமொழியில் நிஷதபுரம் என்று பெயர் சில நூல்களில் மாத்திரம் இருப்பதாய் ஏற்படுகிறது.

2. இந்த நளமஹாராஜன் செய்த பாகசாஸ்த்ரத்தின் சில விஷயங்களை இப்புஸ்தக ஆசிரியர் வெளியிட்டிருக்கும் ''இந்துபாக சாஸ்திரம்'' என்னும் நூலில் காணலாம்.

2. இந்த கார்க்கோடகன் என்னும் ஸர்ப்பம் அஷ்டநாகங்களில் ஒன்று. தென்னிந்தியாவிலுள்ள நாமக்கல் என்னும் ஸ்தலத்தில் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி இந்த கார்க்கோடக நாகத்தின்மேல் சயனித்திருக்கும் சிலாபிம்பம் நன்கு விளங்குகிறது. அப்படிப்பட்ட கார்க்கோடக நாகத்தின் படம் அக்கோயிலிலும் அதின்வால் கோயிலுக்குப் பின்புறம் உள்ள கமலாயம்என்னும் குளத்துவரையில் நீண்டு இருப்பதாயும் ஐதிஹ்யம் சொல்லுகிறார்கள்.

3. நளமஹாராஜன் ஈச்வரனைப்பூஜித்து கலிதோஷம் நீங்கப் பெற்றது, தஞ்சாவூர் ஜில்லாவில் ப்ராஞ்சுக் (French) காரர்ராஜ்யத்தைச்சேர்ந்த காரைக்கால் ஸமீபத்திலிருக்கும் திருநள்ளாறு என்னும் க்ஷேத்திரத்தில். இதன் காரணமாகவே இந்த ஸ்லத்திற்கு இப்பெயர் இந்த கலியுகத்தில் ஏற்பட்டது. முதல் யுகத்தில் இந்த க்ஷேத்திரத்திற்கு ஆதிபுரி என்றும், இரண்டாம் யுகத்தில் தருப்பாரண்யம் என்றும், மூன்றாம் யுகத்தில் விடங்கபுரம் என்றும் பெயர் வழங்கிவந்தது. இது ஸப்த விடங்க ஸ்தலங்களில் ஒன்று. ஸ்வாமியின் பெயர் தருப்பாரண்யேச்வரர் என்பதற்குத் தகுந்தபடி உருவம் தருப்பைக் கொழுந்துகள் சேர்ந்தாற் போலிருந்து வருகின்றன. நளமஹாராஜனுக்கு சனியின் உபத்திரவம் நீங்கப்பெற்ற பெருமையினால் சனீச்வரன் ஸந்நிதி வெகு பிரஸித்தி பெற்று வழங்கிவருகிறது. நளனால் இந்தக் கோயிலுக்கு திருப்பணி செய்த காலத்தில் வெட்டப்பட்ட நள தீர்த்தம் என்னும் குளம் ஊரின் வடமேற்கில் இருந்து வருகிறது.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிஷாத தேசம்[1]

அத்யாயம் 13

இருப்பிடம்

நிஷாததேசமானது அவந்திதேசத்திற்கு நேர்கிழக்கிலும் விந்த்ய மலையின் நடுபாகத்தின் வடசார்பிலும் தங்கியிருக்கிறது. இந்த தேசத்தின் விஸ்தீரணம் மிகப்பெரியதேயாகும். ஆகிலும் கோஸல தேசத்தைக் காட்டிலும் சிறியதென்றே கருத வேண்டும். இதில் பெரிய மேடுபள்ள ஸ்தலங்களும் பெரிய மலையருவி நதிகளும் சிற்றாறுகளும் பெரிய கற்பாறைகளும் அவைகளின் துண்டுகளும் நெருக்கமான காடுகளும் விசேஷமாய் உண்டு.

மலை

இந்த தேசத்திற்கு மேற்கு வடக்குபாகங்களின் நுனியில் சர்மண்வதி நதிக்கரை வரையில்அனேக விஷப்பூச்சிகளும் அவைகள் வஸிக்கும் புற்றுகளுமே விசேஷமாய்க் காணப்படும். இந்த தேசத்தில் அழகிய ஸமமான பூமி கொஞ்சமேனும் கிடையாது. இதை தண்டகாரண்யத் திற்கு ஸமயமாகவே சொல்லலாம்.

இந்ததேசத்திற்கு தெற்கு பாகத்தில் ஆகாயத்தில் அளாவியதான விந்த்யமலையே இதற்கு முக்யமாகும். ஆகிலும் இந்த தேசம் முழுமை யிலும் விந்த்ய மலையின் தொடர் மலைகளே அனேகம் உண்டு. அவைகளில் ஒரு மலைக்கு கங்காளகிரி என்று பெயர். அதின் கருத்து என்னவென்றால் - மஹாகாள ஈச்வரன் த்ரிபுர அஸுரர்களுடன் கடும் போர் விளைத்து அவர்களைக் கொன்று அவர்களது சரீரத்தின் எலும்பை ஒரு மலைபோல் இந்த மலையடிவாரத்தில் சேர்த்துஅதில் கொஞ்சம் எடுத்து தன் கழுத்தில் ஒரு மாலையாய் அணிந்துகொண்டு கோபக் கூத்தாடினார்[2]. அவ்வித எலும்புகள் தங்கியபடியால் ஸம்ஸ்கிருத பாஷையில் எலும்புக்கு கங்காளம் என்று பெயர் ஏற்பட்டிருப்பதுபற்றி அதற்கு கங்காளகிரி என்றே பெயர் பரவலாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த மலையைச் சுற்றிலும் விசேஷ காடுகளும், துஷ்டம்ருகங்களும், அதிகமாய்க் காணப்படும். அவைகளின் உபத்ரவத்திற்கு இந்த தேசத்தில் வஸிக்கும் தீரத்தனமுள்ள நிஷாதர் வேடா புளிந்தர்கள் கொஞ்சமேனும் பயப்படாமல் ஆயுதபாணி களாகவே எப்பொழுதும் ஸஞ்சரிப்பார்கள்.

நதி

இந்த தேசத்தில் புண்ய நதிகள் ஒன்றும் கிடையாது. விந்த்ய மலையிலிருந்து ஓடும் அனேக சிற்றாறுகளும் நீரோடைகளும் சர்மண்வதீ நதிக்கும் யமுனாநதிக்கும் உபநதிகளாகச் செல்லுகின்றன.

விசேஷம்

இந்த தேசத்தில் இப்பொழுதும் நாகரிகத்தன்மையுள்ள ஜனங்களே பெரும்பாலும் கிடையாது. மழை, பனி, குளிர் அதிகமாயிருப்பதால் காட்டு ஜனங்களே அதை ஸஹிக்கவல்லவர்களாய் இருப்பதால் அவர்களே இதில் அதிகமாய் ஸஞ்சரித்து வருகிறார்கள்.

மேலே விவரித்த த்ரிபுர தஹன விஷயமான சிலர் உருவங்கள் அந்த வ்ருத்தாந்தத்தைக் காட்ட பல இடங்களில் இருந்து வருவதாகத் தெரிகின்றன. இதே மாதிரியான த்ரிபுரதஹன விஷயத்தை தென் இந்தியாவில் பண்ருட்டி ஸமீபத்திலுள்ள திருவதிகை[3] என்னும் ஸ்தலத்தில் கொண்டாடுகிறார்கள். இவ்விடத்திலுள்ள மூர்த்திக்கு த்ரிபுராந்த கேச்வரர் என்றுபெயர் வழங்கப்பட்டு வருகிறது.

❋ ❋ ❋

குறிப்புகள் :

1. இந்த தேசத்தின் தென்மேற்கில் தாதத்வாரம்,த்ரிபுரம் என்று இரண்டு ஸ்தலங்கள் இருக்கின்றன. த்ரிபுரம் என்னும் ஸ்தலத்தில் பூர்வகாலத்தில் மிக பராக்ரமுள்ள அனேக அஸுரர்கள் விந்த்யமலைக் கொப்பாகிய மூன்று கோட்டை சூழ்ந்த நகரங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்களது தீயச் செயல்களால் ஜனங்களுக்கு வெகுநாள் தொந்திரவு செய்து வந்தார்கள். அவர்களின் கொடுஞ்செயல்களை அழிக்கக்கருதி மஹா காளச்வரன் அவர்களுடன் ஒரு மஹாயுத்தம் செய்து அவர்கள் எல்லோரையும் ஸம்ஹரித்துவிட்டார். அந்த யுத்த ஸமயத்தில் சிவபிரானாலும் அஸுரர்களாலும்,ப்ரயோகிக்கப்பட்ட கத்தி, கேடயம், பிண்டி, பாலம், இருப்புலக்கை, மரம், கற்கள் முதலிய ஆயுதங்களினால் இந்த தேச பூமி முழுவதும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிகவும் மேடுபள்ளமாகிவிட்டது. இதில் ஜனங்கள் வஸிப்பதற்கு தகுந்த ஸ்தலம் மிகவும் ஸ்வல்பம்தான் இருக்கிறது. த்ரிபுரயுத்தம் முடிந்தபிறகு இந்த தேசத்தில் வஸிப்பதற்கு தகுந்த இடம் இல்லாத படியால் அரசர்களும் ப்ரஜைகளும் வஸிக்க வராமலிருக்கும் தருணத்தில் நிஷாதர் என்னும் வேடர், வில்லி முதலிய காட்டு வாஸி ஜனங்களே இந்த தேசத்தில் வஸிக்கலாயினர். பெரும்பாலும் நிஷாதர்களே வஸிப்பதால் இதற்கு நிஷாததேசம்என்று அதுமுதற்கொண்டு பெயர் உண்டாயிற்று. அதற்குமுன் த்ரிபுரதேசம் என்றும் அடவீசிகரம் என்றும் பெயர் இருந்ததாக மஹாபாரதத்தினால் காணப்படுகிறது.

2. இந்த கங்காளேச்வர மூர்த்தியின் பிம்பங்கள் அனேக கோயிலிலிருந்தபோதிலும் கும்பகோணம் நாகேச்வரஸ்வாமி கோயிலிலும், நன்னிலத்திற்கு ஸமீபமாயுள்ள திருச்சங்காட்டங்குடி என்னும் ஸ்தலத்திலும் பூர்வீக சில்பிகளால் பஞ்சலோஹங்களினால் வார்ப்பிக்கப்பட்டு வெகு லக்ஷணமமைந்ததாய் விளங்கிவருகின்றன.

3. இந்த இடத்தில்தான் சைவ பக்தர்களில் ஒருவராகிய அப்பருடைய தமக்கையான திலகவதியார் என்பவள் தனது தம்பியாகிய அப்பர் சைவ சமயத்தை விட்டு சமண மதத்தைச் சேர்ந்து அதைக் கொண்டாடும் வருத்தத்தை பொறுக்க மாட்டாமல் இந்த ஸ்தலத்திலுள்ள மூர்த்தியை வேண்ட பகவான் அப்பருக்கு ஒருவிதமான வயிற்று வலியை உண்டாக்கி அதன் காரணமாக அப்பர் சமண மதத்தின் பெருமையால் அந்த வியாதி தீராமல் இவ்விடம் வந்து அந்த வலிநீங்கியதால் தமது ஸ்வமதமாகிய சைவமதத்தை அனுஸரித்து பல அற்புதச் செயல்களை செய்தார். இந்த ஸ்தலத்தில் காடகன் என்னும் சமணராஜா சைவமதத்தின் பெருமையை தெரிந்துகொண்டு பாடலிபுரத்திலிருந்த சமணருடைய கோயில், மடம் முதலிய கட்டடங்களை இடித்து அந்த கற்களைக் கொண்டு ஒரு தனிக்கோயில் கட்டினதாக ஏற்படுகிறது. இந்தக்கோயிலுக்கு 'குணதரவீச்சுரம்' என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

காஞ்சீபுரத்தில் அப்பர் காலத்தில் ப்ரஸித்தி பெற்ற பல்லவ ராஜாவும் இந்த க்ஷேத்திரம் சென்று அப்பர் பெருமையைத் தெரிந்துகொண்டு தானும் சமண மதத்தை மதித்தது தப்பென்று தீர்மானித்து கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார்.

இந்த ஸ்தலம் தக்ஷிண கடிலம் என்னும் நதியின் வடகரை யிலிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேதி தேசம்[1]

அத்யாயம் 14

இருப்பிடம்

சேதிதேசமானது விந்த்யமலையின் வடகிழக்குப் பாகத்தில் உற்பத்தியாகும் சோணாநதியின் கரைவரையில் பரவிஅதற்கு மேற்கில் விதர்ப்பதேச நிஷததேச எல்லைவரையில் வில்லுபோல் வளைந்து சர்மண்வதீ நதியின் தென்கரை ஓரத்தில் யமுனா நதியின் கரையில் நிலைபெற்றிருக்கிறது.

இந்த தேசத்தின் மண்குணமானது சர்மண் வதிக்கும் யமுனைக்கும் ஸமீபத்தில் மிகவும் நல்லதாயும் சோணாநதியின் கரை ஸமீபத்தில் மண்ணும் கல்லும் கலந்து கொஞ்சம் கடினமாயுமிருக்கும்.

மலை நதி

இந்ததேசத்தின் தெற்கிலிருக்கும் ஸிந்த்யமலையே இதற்கு முக்கிய பர்வதமாகும். ஆகிலும் யமுனா நதியின் அருகிலும் சோணா நதியின் மேற்கு பாகத்திலும் சிறுகுன்றுகள் அனேகமுண்டு.

அவைகளிலிருந்து சிறிய நீரோடைகளும் அருவிகளும் பெருகி இந்த தேசத்தின் வடகிழக்கு பூமியை செழிப்பித்து பலவித விளை பொருள்களை உண்டு பண்ணி வருகின்றன.

விசேஷம் : க்ருதிராஜன் வ்ருத்தாந்தம்

விந்த்யமலைக்கு வடபாகத்திலிருக்கும் தேசங்களுள் இந்த சேதி தேசமும் மதகதேசமுமே மலைநாட்டு தேசங்களென்று வழங்கப் படுகின்றன. இவ்விரண்டு தேசங்களும் சித்ரகூட பர்வதத்திற்கும் விந்த்ய பர்வதத்திற்கும் வடக்கிலிருப்பதால் சித்ரகூடமலை நாடென்றும் விந்த்யமலை நாடென்றும் சிலர் சொல்லுவார்கள். இதுபோலவே விந்த்யமலையின் வடமேற்கு கோணத்தின் சார்பில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிலைபெற்றிருக்கும் கூர்ஜர தேசமும் மலைநாடென்றும் வழங்கு வாருமுளர். இவ்விதமான பெயர்கள் எல்லாம் வெகு ஆதிகாலத்தில் வழங்கப்பட்டு வந்ததாக ஏற்படுகிறது.

த்வாரகா நகரைப் பரிபாலனஞ் செய்துவந்த ஸ்ரீக்ருஷ்ணாவ தாரத்திற்குப் பின்பு கூர்ஜரம் சேதி மகதம் என்றே இவ்விதப் பெயர் மிகவும் ப்ரஸித்தியையடைந்துவருகிறது. இந்த சேதி என்னும் தேசத்தை க்ருஷ்ணாவதாரத்திற்கு கொஞ்சம் முன்பிறந்த க்ருதி என்னும் அரசன் மிகவும் நற்குணமுடையவனாய் பரிபாலித்து வந்தான். முன்பு ஹிரண்யகசிபு ரூபமாயும், ராவணானயும் பிறந்த அஸுரனே இந்த க்ருதி என்னும் அரசனுக்குப் புத்திரனாய் சிசுபாலன் என்று பெயரை தரித்துக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பகவானுக்கு விரோதமாய் அனேகவித கொடுஞ்செயல்களைச் செய்துவந்தான்.

இவ்வித சிசுபாலனுடைய கொடிய சேஷ்டைகளைக் கண்டு ஸஹிக்காத இந்த்ரன் நாரதர் முகமாய் அவனை ஸம்ஹரிக்கும்படி ஸ்ரீ க்ருஷ்ணனை வேண்டிக்கொண்டான். உலக நன்மைக்காக அவனின் வேண்டுகோளின்படி க்ருஷ்ணன் பாண்டவர்கள் குருதேசத்தின் தெற்கில் இந்த்ரப்ரஸ்தத்தில் நடத்திய ராஜஸூயயாகத்திற்கு வந்தார். அவ்விடத்தில் அனேக பெரியோர்களும் அரசர்களும் வந்துகூடினார் கள். பாண்டவர்களின் மூத்தவரான தர்மபுத்ரர் முறைப்படி அந்த யாகத்தை நடத்திவிட்டு அதின் முடிவில் க்ருஷ்ணனை ஸ்துதித்து அவருக்கு முதல் பூஜை பாததீர்த்தம் முதலிய மரியாதைகளைச் செய்தார். அதைக்கண்டு ஸஹிக்காத சிசுபாலன் அவரை நூறுவித கடுஞ்சொற்களால் தூஷித்து அவருடன் வலுவில் சண்டைசெய்ய முயன்றான். அந்த க்ருஷ்ணா பகவானும் அவனுடன் போர்விளைத்து தனது ஸுதர்சனம் என்னும் சக்ராயுதத்தினால் அவன் சிரஸை அறுத்துவிட்டார். அவனுக்கு நேரிட்ட பூர்வஜன்ம ஸங்கேதப்படி முதலில் ஹிரண்யகசிபுவாயும் பிறகு ராவணனாயும் அதன்பிறகு சிசுபாலனாயும் பிறந்து இந்த மூன்று பிறப்பிலும் ஸ்ரீ மஹா விஷ்ணுவுக்கு விரோதியாய்அவரது கல்யாண குணங்களைத் தூஷித்து வந்தபடியால் அந்த ஸமயத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பாதார விந்தங்களில் அவனது ஜீவன் ஐக்யமாய் விட்டது.

❄ ❄ ❄

குறிப்புகள் :

1. This lies in the Central India.
2. அந்த சிசுபாலன் இந்த தேசத்தை ஆண்டபிறகு அவனது வம்சத்தார்களில் சிலரும் பிறகு மகததேசத்தரசர்களும் ஆண்டு வந்தார்கள் என்னும் விசேஷங்களை மாகம், விஷ்ணுபுராணம் முதலியவைகளில் விபரமாய்க் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தசார்ண தேசம்[1]

அத்யாயம் 15

இருப்பிடம்

முற்கூறிய சேதி தேசத்திற்கு நேர் வடமேற்கிலும் சர்மண்வதீ நதியின் இருபுறத்திலும் இந்த தசார்ணதேச பூமி நிலைபெற்றிருக்கிறது. இந்ததேசத்திற்கு உத்தமம், ஆரவாடம் என்று இரண்டு உபதேசங்களுமுண்டு. சர்மண்வதீ நதிக்கு வடபுறம் முழுமைக்கும் உத்தமம் என்றும் அந்த நதிக்கு தெற்கு பாகத்தில் ஆரவாடம் என்றும் பெயர். குரு சூரஸேனம் குந்தி குந்தலம் என்னும் நான்கு தேசங்களின் பூமிஸாரத்தைக் காட்டிலும் இந்த தேசத்தின் வடபுறபூமி மிகவும் நற்குணமுடைய தாகையால் அதற்கு உத்தமம் என்று காரணப்பெயர் உண்டானதாக ஏற்படுகிறது. த்ரிபுர (ஸம்ஹார) ஸ்தலத்திற்கு கிழக்கு முதல் சர்மண்வதீ நதியும் யமுனையும் கூடுமிடம் வரையில் ஆரவாடமென்று பெயர்.

இந்ததேசத்தின் மண்குணமானது மிகவும் நல்லதென்று வடதேசம் முழுமையிலும் ப்ரஸித்தி உண்டு. நாமும் கேள்விப்பட்டிருக்கலாம். இதில் விசேஷமாய் பருத்தி, பட்டுப்பூச்சிகள், கோதுமை முதலிய புன்செய் தான்யங்களும் கனிவர்க்கங்களும் விசேஷமாய்ப் பலித்து வருகின்றன. இந்த தேசமானது மேற்கில் உயர்ந்தும் கிழக்கில் தாழ்ந்தும் மிகவும் செழுமையான தோப்பு தோட்டங்களுடன் கூடிய தாய், கிளி, குயில், மயில், அணில், பலவித ஆடுகள், எருமைகள் முதலிய ப்ராணிகளுக்கு வெகு ஸுகத்தைக் கொடுக்கக் கூடிய வளப்பமுடையதான அமைப்புடன் கூடியிருக்கிறது.

மலை

இதற்கு ப்ரதானநகரமாகிய விதிசாநகரத்திற்கு தெற்கில் சர்மண்வதீ நதியின்கரை ஓரமாக அனேக பெரியமலைகளும் குன்றுகளும் நீண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வளர்ந்திருக்கின்றன. அவைகளுக்குள் வாயுகிரி என்னும் மலையே மிகவும் பெரியது. இம்மலையில்தான் வாயுதேவனுக்கு அஞ்ஜனா தேவியினிடத்தில் ஹநுமான்[2] அவதரித்தார் என்று சில பூர்வீகர்கள் மொழியும் இந்த தேசத்தில் பரவி வருகிறது. இந்த வாயுகிரிக்கு தக்ஷிணஸஞ்ஜீவி[3] என்று மற்றொரு நாமமும் உண்டு. ஏனெனில் - ஹனுமான் அவதார காலத்திற்குப் பிறகு மந்த்ர சாஸ்த்ரங்களில் விசேஷ நம்பிக்கையையுடைய சில பெரியோர்கள் இந்த பர்வதத்தின் ஸமீபத்திலுள்ள வாயு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிலநாள் இங்கு வஸித்து ஹனுமந் மந்த்ரங்களை பலதடவை ஜபம் செய்து வந்தால் அவர்களுக்கும் அவரைப் பற்றியவர்களும் இஷ்டஸித்திகள் (மனோ ரதங்கள்) நிறைவேறும் என்னும் ஏற்பாடு இப்பொழுதும் நமது ஆர்யர் களில் சிலருக்கு (விசேஷபக்தி நம்பிக்கை வைத்தவர்களுக்கு) பலித்து வருகிறது. இம்மலையின் ஸமீபத்தில் ஸஞ்சரிப்பவர்களுக்கு தேள் கொட்டல் பாம்பு கடித்தல் முதலிய விஷ ஜந்துக்களின் தொந்திரவு கொஞ்சமேனும் வெகுநாளாய் நேரிடுவதில்லை!! ஆகையால் இதைப் பற்றியே மற்றும் சிலர் கூறுவதாவது- ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் சொல்லியபடி ஸ்ரீ ராமபிரான் லங்கையில் ராக்ஷஸர்களுடன் போர்புரியுந் தருணத்தில் ராவண குமாரனான இந்த்ரஜித்தனால் ப்ரயோகிக்கப்பட்ட நாகபாசாஸ்த்ரத்தினால் வானர ஸேனைகள் மூர்ச்சையடைந்திருக்கையில் அவர்களை தேற்றுவதற்காக ஆஞ்ஜனேயர் வடக்கிலிருந்து ஸஞ்ஜீவி பர்வதங்களைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு வருகையில் இந்த மலையின் மேல் மார்க்கத்தில் வானத்தில் பாய்ந்து வருகையில் அந்த ஸஞ்ஜீவி மலைகளிலிருந்து சில ஓஷதிக் கொடிகள் கீழே சிதறி இம்மலையில்படிய ஆரம்பித்த படியால் இதனருகில் தங்குவோர்களுக்கு விஷபயமே நேரிடுகிற தில்லை. அதன் ஸம்பந்தம் இதற்கு ஏற்பட்டபடியால் இதற்கு தக்ஷிணஸஞ்ஜீவி என்றுபெயர் சொல்வாருமுண்டு.

நதி

இந்த தேசத்திற்கு முக்யநதி சர்மண்வதியேயாகும். ஆகிலும் வடக்கில் குந்தலதேசத்தின் ஸமீபத்திலிருக்கும் சில மலைகளிலிருந்து வந்தனா என்று பெரிய நதி உண்டாக தெற்குமுகமாய் ஓடி இதின் வடக்குஎல்லையையும் விதிசா நகர பீடபூமியையும் மிகவும் செழிப்பிக்கச் செய்து பிறகு சர்மண்வதீ நதியில் வீழ்ந்து யமுனையுடன் கலந்தோடுகிறது. இந்த நதியின் ஜலமானது வெகு ருசியாயிருக்கும். இதில் ஸ்நானபானம் செய்பவர்களுக்கு சரீரத்திலுள்ள அனேக ரோகங்கள் நீங்கிவிடும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷம் : காண்டவ வனத்தின் பெருமை

இதற்கு முக்ய நகரமாகிய விதிசாநகருக்கு கொஞ்சம் வடக்கில் வந்தனா நதிக்கும் யமுனைக்கும் நடுவில் காண்டவம் என்னும் பெரிய வனமுண்டு. இதில் பெரிய பள்ளத்தாக்குகளும் குன்றுகளும் நெருக்க மான மரங்களடர்ந்த புதர்களும், முட்செடிகளும், கொடியம்ருகங் களும், புற்றுகளும் விஷஜந்துக்களுமாகவே மிகவும் கொடுமை யாகவே இருக்கின்றன. முன்பு ஒரு ஸமயத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனும் அர்ஜுனனும் கோடைகாலத்தின் நடுவில் யமுனையில் ஜலக்கிரீடைசெய்து உண்டியருந்தி ஒரு மரத்தின் நிழலில் சற்று உல்லாஸமாய் தங்கியிருந்தார்கள். அக்னி பகவான் ஒரு கிழ ப்ராம்மண உருவத்துடன் அவர்களிடம் வந்து ஓ புண்ய புருஷர்களே! எனக்கு பசி மிகவும் அதிகமாயிருக்கிறது, ஏதாவது கொஞ்சம் ஆஹாரம் கொடுத்து ரக்ஷிப்பது உங்களது தர்மம் என்று யாசித்தான். அவ்விருவர்களும் அப்படியே கொடுக்கிறோம் என்று வாக்கு கொடுத்த தக்ஷணமே அந்த அக்னிதேவன், காளீ, கராளீ, மனோஜவாமே, ஸுலோஹிதை, தூம்ரை, ஸ்புலிங்கினி, விச்வரூபி என்னும் ஏழுவித ஜ்வாலைகளுடன் (ஏழுவித நாக்குகளுடன்) இந்த காண்டவ வனத்தைச்சுற்றி நான்கு புறத்திலும் சூழ்ந்துகொண்டு அதற்குள்ளடங்கியிருக்கும் ஸகல கொடிய ஜீவன்களையும் பொசிக்கி விட்டான் என்னும் காண்டவ தஹன விஷயத்தையும் விசேஷமாய் மஹாபாரதத்தில் ஸ்ரீவ்யாஸர் கூறியிருக்கிறார். இப்பொழுதும் இந்தக்காட்டிற்கு காண்டவ வனம் என்றே பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

அயோத்யா நகரை அரசு புரிந்த ருதுபர்ணராஜன் இந்த தசார்ண தேசத்தையும் மிகவும் ப்ரீதியுடன் இதில் தங்கி கொஞ்சநாள் இதை ஆண்டு வந்ததாயும் ஏற்படுகிறது. பிறகு ஸுதர்மா நீண்டகாலம் ஆண்டான். பிறகு அனேகர் ஆண்டுவந்ததாயும் சுமார் ஆயிரம் வருஷங் களுக்கு முன் இந்த தேசத்தை பத்மநாபமிச்ரன், வோபதேவன், ஸதர்ஸர்வாநந்தன், பரதமல்லன் என்னும் ஜைனர்கள் ஆண்டு வந்ததாயும்அக்காலத்தில் அவர்களால் கட்டப்பட்ட சில ஜைன ஆலயமும் மண்டபங்களும் குந்தல தேசத்திலும் அவந்தி தேசத்திலும் இப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன.

ஹேமலேகையின் கதை

முன்பு இந்த தசார்ண தேசத்தில் முக்தாகூடன் என்னும் அரசன் இருந்தான். அவனுக்கு ஹேமகூடன், மணிகூடன் என்று இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இந்த இரண்டு ராஜகுமாரர்களும் ஸஹ்ய பர்வதத்தின் ஸமீபத்திலுள்ள காட்டில் வேட்டையாடச் சென்றார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அப்பொழுது கனத்த இடி மின்னலுடன் மழை வருவதைக் கண்டு இந்த இரண்டு ராஜகுமாரர்களும் குதிரையின் மேல் ஏறி ஓடி விட்டார்கள். இப்படி இவர்கள் தனித்தனி செல்லுகையில் மூத்தவனான ஹேமகூடன் வேணாநதிக் கரையிலுள்ள வ்யாக்ரபாத மஹரிஷி யின் ஆச்ரமத்தை அடைந்தான். அவ்விடத்தில் வங்கதேசத்து ராஜாவுக்கும் ஒரு வித்யாதர ஸ்த்ரீக்கும் பிறந்த ஹேமலேகை என்னும் கன்னிகை இந்த மஹரிஷியின் ஆச்ரமத்தில் வளர்ந்து வந்தாள். அவளைக் கண்டு இந்த ராஜகுமாரன் மோஹப்பட இதை அந்த மஹரிஷி தெரிந்துகொண்டு அந்த ஹேமலேகையை இந்த ராஜ குமாரனுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தார். இவ்விதமாய் அந்த கன்னிகையை விவாஹம் செய்துகொண்டு ஹேமகூடன் தனது ராஜ்யம் சென்றான்.

சிலநாள் சென்ற பிறகு அந்த ராஜபுத்ரன் அதிக காமவசத்தினால் தனது பத்னியாகிய ஹேமலேகையை நெருங்கி அவளை தனக்கு வசப்படும்படி செய்யும்பொழுது அவள் இவனுக்கு பல த்ருஷடாந்தங்களுடன் ''ஸ்த்ரீகளிடத்தில் அதிக ப்ரீதியை வைக்கும் புருஷர்கள் அதமர்கள் என்றும் இவர்கள் ஒருவரிடத்திலும் நிலைத் திருக்கும் ஸ்வபாவமுடையவர்கள் அல்லாததினால் அவர்களை ஸர்வ ஜாக்ரதையுடன் நடத்த வேண்டும்'' என்றும் புத்திமதி சொல்லி ஈச்வரியின் மஹிமைகளையும் தெரியப்படுத்தி அவளை உபாஸித்து நல்ல புத்தியுடன் நடந்து கொள்ளும்படி சொன்னாள். அந்தப்படியே ஹேமகூடன் தேவியை உபாஸித்து க்ருதார்த்தனானான்.

இந்த மாதிரியே பிறகு முக்தாகூடன், மணிகூடன், மந்திரி அந்த தேசத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் தேவியை உபாஸித்ததின் காரணத்தினால் ராஜ்யம் விருத்தி அடைந்து வந்தது.

❄ ❄ ❄

குறிப்புகள் :

1. This also forms part of Central India.
2. இந்த ஹனுமாரின் வ்ருத்தாந்தங்களை கோஸல தேசத்தின் முடிவில் 111-ம் பக்கத்தில் பார்க்கவும்.
3. ஹிமயமலைக்கு வடக்கே வெகுதூரத்தில் ஸஞ்சீவி பர்வதமிருப்பதால் அதற்கு தெற்கில் விந்த்ய பர்வதத்திற்கு ஸமீபத்திலிருக்கும் இந்த வாயுகிரிக்கு தக்ஷிணசஞ்சீவிகிரி என்பதின் உட்பொருள் இதுவேயாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதர்ப்ப தேசம்[1]

அத்யாயம் 16

இருப்பிடம்

விதர்ப்ப தேசமானது விந்த்யமலையின் தெற்கில் மலையடிவாரம் முதல் கிழக்கில் சிபராநதி உற்பத்தி ஸ்தலம் வரையிலும் மேற்கில் நர்மதை உற்பத்திஸ்தலம் வரையிலும் பரவி அகன்றதாயிருக்கிறது. இந்த தேசத்தின் பூமிமட்டமானது விந்த்யமலை ஓரத்தில் மிகவும் உயர்ந்தும் பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் வடக்கில் தாழ்ந்ததாக அமைந்திருப்பதுடன் பெரிய மலைகளுக்கிருப்பிடமாயுமிருக்கிறது.

மலை

இந்த தேசமானது விந்த்யமலையின் சார்பிலிருப்பதால் இதற்கு அம்மலையே முக்யமாகும். அன்றியும் விந்த்ய மலையின் தொடர் குன்றுகளே மூன்று பக்கங்களிலும் விசேஷமாய்ப் பரவியிருக்கின்றன. இந்த தேசத்தின் மண்பூமி கொஞ்சமாகவும் மலைக் கற்கள் பரவிய பூமியே விசேஷமாயுமிருக்கிறபடியால் அதில் விசேஷ காடுகளும் உண்டு.

அவ்வித காடுகளில் மிகவும் வீரத்தன்மையுடைய பெரிய காட்டு யானைகளும் புலி கரடிகளும் அழகிய குதிரைகளும் யதேச்சையாய் கூட்டங்கூட்டமாய் உலாவும். பத்ரம், மந்த்ரம், ம்ருகம் என்னும் லக்ஷணங்கள் நிறைந்த சில ஜாதியானைகளும் முகத்தில் சிகப்புப் புள்ளிகளையுடைய சில யானைகளும் பலவித சமரிமான்களும் இந்த தேசத்தில் அதிகமாய் காணப்படும்.

இவ்விதமாய் பலவித அரண்யவாஸி ம்ருகஜாதிகளுக்கு மிகவும் வளர்ச்சியையும் புஷ்டியையும் கொடுக்கவல்ல இந்த தேசத்தின் மலை ப்ராந்தங்களில் மஹாகிரி என்பதே மிகவும் பெரியது. விந்த்ய மலைக்கு கொஞ்சம் ஏறக்குறைய உயரமுடையது. பாரஸீக தேசத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடக்கெல்லையில் இருக்கும் மஹாமலையைக் காட்டிலும் இதின் உயரம் அதிகமாயிருக்கும்.

நதி விளைபொருள்

விந்த்யமலையிலிருந்து ஓடும்பல மலையருவி நதிகளே இந்த தேசத்தின் பூமிக்கு மேன்மையை கொடுத்துக்கொண்டு வருகிறது. அவைகளுள் கும்பிலா என்னும் நதி முக்யமானதாகும். இந்ததேசத்தில் விசேஷமாய் புன்செய் தான்யங்களும் செடி கொடிகளுமே பலிக்கும்.

விசேஷம்

இந்த விதர்ப்பதேசத்திற்கு குண்டினபுரிதான் முக்ய நகரம். இந்த தேசத்திற்கு சுக்ரனும் கேதுவும் அதிபதிகள் என்று ஜோதிஷ சாஸ்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவ்விரண்டு க்ரகங் களின் அருளால் இந்த தேசத்தில் எந்தவருஷத்திலும் மழை உண்டாகாமல் இருந்ததே கிடையாது. பஞ்சம் என்னும் க்ஷாம காலமும் நேரிட்டதுமில்லை. இந்த தேசத்தின் கிழக்குபாகத்திற்கு கோமந்தம் என்று ஒரு உபதேசமுண்டு. அதின் நடுவில் விளங்கும் குண்டினபுரத்தை அரசுபுரிந்து வந்த பீமராஜனுக்குப் பெண்ணாகிய, தமயந்தி என்பவள் குணத்திலும், அழகிலும், புத்தியிலும், நிகரற்றவளாய் வளர்ந்து வருகையில் ஹம்ஸத்தின் மூலமாய் நிஷத தேசத்து அரசனான நளமஹாராஜனை விவாஹம் செய்துகொண்டாள் என்றும் இத்தேசத்தின் விஷயங்களை மஹாபாரதத்தில் விபரமாய்க் கண்டு கொள்ளலாம்.

மேலும் புலஸ்த்ய மஹரிஷிக்குப் புத்ரராயும் தமிழ் பாஷைக்கு மூலகாரணமாய் விளங்கும் ஸ்ரீ அகஸ்த்ய மஹரிஷி இந்த தேசத்தின் மேற்கிலிருக்கும் மந்தகம் என்னும் ப்ரதேசத்தில் லோபாமுத்ரா என்னும் தேவியை சாஸ்த்ர முறைப்படி விவாஹம் செய்துகொண்டு இவ்விடத்திலேயே சிலகாலம் வஸித்துவந்தார் என்றும் இப்பொழுது அந்த அகஸ்த்ய மஹரிஷியின் ஆச்ரமமிருப்பதாகவும் ஏற்படுகிறது.

❄ ❄ ❄

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. (Berar Province) இதற்கு போஜகடகம் என்று மற்றொரு பெயர் வழங்கப்பட்டு வருவதாய் ஏற்படுகிறது. இதற்கே கோமந்தம், மந்தகம் என்று இரண்டு உபதேசங்கள் இருப்பதாயும் ஏற்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவந்தி தேசம்[1]

அத்யாயம் 17

இருப்பிடம்

அவந்திதேசமானது விதர்ப்பதேசத்திற்கு நேர்மேற்கில் சர்மண்வதி நதியின் உற்பத்திஸ்தானத்தில் விந்த்யமலையின் வடசார்பில் தங்கியிருக்கிறது. விந்த்யத்தின் வடக்கு அடிவாரத்தில் உண்டாகி ஓடும் சர்மண்வதியின் ஜலமானது வடக்குமுகமாய் எதுவரையில் கொஞ்சம் கொஞ்சமாய் சாய்ந்து செல்லுகிறதோ, அதுபோலவே இந்த தேசத்தின் பூமிமட்டமும், சாய்ந்ததாகவேயிருக்கிறது.

நிஷாததேசமென்றும் வனநாடுக்குமேற்கிலும் கூர்ஜர தேசத்திற்கு கிழக்கிலுமுள்ள இந்த அவந்திதேசத்துக்கு ராஜதானியாகிய விசாலா நகரமானது, சர்மண்வதிநதியின் கரையில் நிலைபெற்றிருக்கிறது. அதற்கு வடக்கில் நாதத்வாரமும் அதற்கு வடக்கில் த்ரிபுர ஸ்தலமும் அவைகளைச் சுற்றிலும் பெரிய காடுகளும் கற்பாறைகளும் மேடு பள்ளங்களும் அதிகமாய் காணப்படும். ஆதலால் இந்த தேசத்தில் பெரும்பாலும் அழகிய ஸமபூமி இல்லை என்பதாகவே சொல்ல வேணும். ஆனபோதிலும் விதிசாநகரம் முதல் வடக்குமுகமாய் ஓடும் சர்மண்வதி நதியின் இருகரைகளிலும் வெகுதூரம்வரையில் மிகவும் ம்ருதுவான மண்ணும் நல்ல பயிர்த்தொழில்முறையும் தோப்பு தோட்டங்களும் உண்டு.

இந்த தேசத்தில் குரங்குகள் மிகப் பெரியதாயும் நல்ல பலம்பொருந்தியதாயும் பூமியைக் குடைந்து காட்டுக் கிழங்குகளை உண்பதில் முயற்சியுடையதாயும் கூட்டம் கூட்டமாய் உலாவும்.

மலை

இந்ததேசத்திற்கு வடக்கிலுள்ள தரிபுரஸ்தலத்திற்கு நான்கு புறத்திலும், அதற்கு தெற்கிலும் பெரிய மலைகளும் குன்றுகளும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விந்த்ய பர்வதம்போலவே மிக உயரமாய் நிலைபெற்று வருகின்றன. அவைகளுள் கந்தவான் என்னும் மலையே மிகவும் ப்ரஸித்திபெற்றது. அதில் அகில் மரங்களும் சந்தனமரங்களும் தேவதாருமுதலான மற்றுமுள்ள வாஸனை மரங்களும் காட்டு வாழைமரங்களும் அதிகமாய் வளர்ந்து எப்பொழுதும் புஷ்பங்களின் பரிமளத்தை அடைந்து கொண்டிருப்பதால் இதற்கு கந்தவான் என்று காரணப்பெயர் உண்டானதாக ஏற்படுகிறது. இந்த தேசத்திலும் நிஷாதம், தசார்ணம், ஆபீரம், வநாயு முதலிய சில தேசங்களிலும் சமர ம்ருகங்களும் பலவித மான்களும் மூங்கில் புதர், புளியமரத் தோப்பு இவைகளும் அதிகமாய் வ்ருத்தியடைந்து வருகின்றன. இந்த தேசத்தில் மனுஷ்யர் செல்ல முடியாத சில அரண்யங்களுமுண்டு.

நதி

இந்த தேசத்தில் தெற்கிலிருந்துவடக்குமுகமாய் ஓடும் சர்மண்வதி நதிக்கு உபநதியான கந்தவதி என்னும் மலையின் தாழ்வரையிலிருந்து ஓடுகிறதாகவும் அதற்கே கலிந்து (Ken) என்று மற்றொரு பெயருண்டா யிருப்பதாயும் காளிதாஸனுடைய ச்லோகத்தால் ஏற்படுகிறது.

விசேஷம் : விக்ரமாதித்யன், போஜன், காளிதாஸன், வ்ருத்தாந்தம்

இந்த தேசத்திற்கு முன் சொன்னபடி சர்மண்வதி நதியின் கரையில் விசாலா நகரம் ராஜதானியாய் வெகுகாலத்திற்கு முன்பு ஏற்பட்டதாய்த் தெரியவருகிறது. ராஜாதிராஜனாயும் அழகிலும், புத்தியிலும், கீர்த்தியிலும் கொடையிலும் நிகரற்றவனான விக்ரமாதித்ய ராஜன் உதித்த பிறகு அந்த சர்மண்வதி நதிக்குஇன்னும் கொஞ்சம் தெற்கில் ஓடும் சிப்ரா நதியின் கரையில் உஜ்ஜயீனி நகரமே முக்ய ராஜ தானியாய் விளங்கி வருகிறது. அந்த விக்ரமாதித்ய மஹாராஜனுக்குப் ப்ரதான மந்திரியான பட்டி[2] என்பவன் கல்வியில் சிறந்தவனானபடியால் அவனது யுக்தியினால் கட்டிவைக்கப்பட்ட அனேக கட்டடங்களும் பழைய கோட்டைகளும் காணப்பட்டுவருகின்றன. விக்ரமாதித்யன் ந்யாய முறைகொஞ்சமேனும் தவறாமல் உலகத்தை ஆண்டபிறகு அவனது ஸிம்மாஸனத்தை யடைந்த போஜராஜனும் அந்த உஜ்ஜயினி நகரத்தையே முக்ய ராஜதானியாக்கிக் கொண்டு காளிதாஸன் முதலிய பெரிய கவிகளையும் அனேக வித்வான்களையும் வெகு மரியாதை யுடன் தனது ராஜசபையில்வைத்துக் கொண்டு அரசு புரிந்தான்.

உஜ்ஜயினீ நகருக்கு கொஞ்சம் வடக்கில் மஹாகாளம் என்னும் க்ஷேத்ரம் என்று ஒரு திவ்ய ஸ்தலமிருக்கிறது. அதற்கு கிழக்கில்தான் ஒரு க்ராமத்தில் மஹாகவி காளிதாஸன் உதித்ததாய் இந்த தேசத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லுள்ளோர் சிலகுறிப்புகளுடன் அதை வெகு மரியாதையாய்ப் பார்த்து வருகிறார்கள். அந்த மஹா காளக்ஷேத்திரத்தில் ஸ்ரீகைலாஸநாத னுடைய கோயிலும் அவ்விடத்தில் நடக்கும் உத்ஸவ விமரிசைகளும் உலகெங்கும் ப்ரஸித்தியாயிருக்கிறது.

இந்த தேசத்தின் வடக்கிலிருக்கும் த்ரிபுர[3] ஸ்தலத்தில்தான் முன்பு மூன்று அஸுரர்கள்பெரிய துர்க்கங்கள் அமைத்துக் கொண்டு அனேக அஸுரர்களுக்குத்தலைவராய் இருந்துகொண்டு ஜனங்களுக்குப் பலவிதமாய் உபத்ரவம் செய்துவருகையில் ஸ்ரீ கைலாசநாதன் ப்ரம்மாவிஷ்ணு முதலிய தேவர்களை ஒவ்வொரு கார்யத்திற்கு ஸஹாயமாய் வைத்துக்கொண்டு, ஸூர்யனும், சந்த்ரனும், சேர்ந்து இரண்டு சக்கரங்களாக அமைக்கப் பெற்ற அந்த ரதத்தில் ஏறி அந்த துஷ்டவஸுரர்களுடன் கடும்போர்விளைத்து அவர்கள் அனைவரையும் துலைத்து நன்மையை உண்டு பண்ணினார். அவ்விதம் அவர்களுடன் சண்டைசெய்த ஸ்தலங்களின் குறியும் இப்பொழுதும் காணப்படுகின்றன.

இவ்வித த்ரிபுர ஸம்ஹாரஸ்தலம் முதல்கொண்டே மிகவும் பயங்கரமான மேடு பள்ளமும் கொடிய ம்ருகங்கள் வஸிக்கும் காடுகளும் ஆரவல்லிமலை என்னும் ஆதர்சகிரி வரையில் விசேஷ காடுகளே காணப் படுகின்றன. இந்த தேசத்துக்கு குஜன் அதிபதியா யிருக்கிறபடியால் இவ்வித காடுகளும் துஷ்ட ப்ராணிகளும் நிறைந்திருக்கின்றன. ஆகிலும் இந்த தேசத்தில் ஸமதலமான இடங்களில் ஜனங்கள் வஸிப்பதற்கு தகுந்த அனேக ஸௌகர்யங்களுமுண்டு. இந்த தேசத்து ஜனங்கள் விசேஷ பக்தியுடையவர்களாயும் ஸூக்ஷ்ம புத்தியுடையவர்களாயுமிருக் கிறார்கள்.

மேலும் த்ரிபுர ஹம்ஸாரஸ்தலத்திற்கு ஸமீபத்தில் பெரிய யானைக் கூட்டங்கள் குகைகளிலிருந்துதம் புதர்களிலிருந்தும் கிளம்பி எங்கும் உலாவும். இந்த தேசத்து யானைகளுக்கும் வநாயு பாஹ்லிக தேசத்து குதிரைகளுக்கும் விலை அதிகமாகவே நெடுநாளாய் ஏற்பட்டு வருகிறது.

❄ ❄ ❄

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள் :

1. This is in Central India.
2. இவனால் வடமொழியில் பாணிநி வ்யாகாரண ஸூத்ரங்களுக்கு உதாரணமாய் செய்யப்பட்ட பட்டிகாவ்யம்இப்பொழுதும் உலகெங்கும் பரவி ஸ்ரீராமனுடைய சரித்ரத்தை அடக்கிக் கொண்டு விளங்குகிறது.
3. இவ்வித த்ரிபுரதஹன விஷயம் நமது தென்னிந்தியாவில் 159வது பக்கத்தில் விவரித்திருக்கும் திருவதிகை க்ஷேத்திரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்நூலில் குறிப்பிட்ட ஆதார புஸ்தகங்களின் பெயராவன

விஷ்ணுபுராணம்
மஹாபாரதம்
மாகம்
க்ருஷ்ண கர்ணாம்ருதம்
சிவா ஹஸ்யம்
ஸ்கந்தபுராணம்
மேகஸந்தேசம்
மார்க்கண்டேய புராணம்
நைஷதம்
ஹம்ஸ ஸந்தேசம்
கஜசாஸ்திரம்
ஸங்கீத சாஸ்திரம்
ராமாயணம்
போஜசம்பு
இந்துபாக சாஸ்திரம்
ருக்வேதம்
ஸாம்ராஜ்ய லக்ஷ்மி பீடிகை
சிவபுராணம்
சகுனசாஸ்திரதம்
அமரகோசம்
சாகுந்தலம்
யாதவாப்யுதயம்
பாகவதம்
மயசில்பசாஸ்திரம்
மூர்த்தி த்யானம்
இந்து புண்ணிய கதைகள்
பார்க்கவ புராணம்
வேதாரண்ய ஸ்தலபுராணம்
மஹாபுராணம்
ப்ரபோத சந்த்ரோதயம்
சக்திஸங்கம தந்திரம்
ஆக்நேய புராணம்
காளிகா புராணம்
சுக்ரநீதி
பெரியபுராணம்
வாமனபுராணம்
விச்வகுணாதர்சம்
ரகுவம்சம்
ரத்னபரீக்ஷை
ஸாமுத்ரிகாலக்ஷணம்
காச்யப ஸம்ஹிதை
கிரா தார்ஜுனீயம்
காதம்பரீ
கஜாயுர்வேதம்
அச்வலக்ஷணம்
குவலயாநந்தம்
கருடபஞ்சாசத்
ஸாளக்ராம நிர்ணயம்
ப்ரம்மாண்ட புராணம்

குறிப்பு : மேல்கண்டவைகள் தவிர ஆர்க்யலாஜிகல் இலாகா வருஷாந்தர ரிபோர்ட்டுகளின் உதவியும் சேர்க்கப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0 In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்

இரண்டாம் பாகம்

பி.வி.ஜகதீச அய்யர்



Center for Shaiva Studies, Pondicherry

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசம் என்ற வரையறை பலவித பரிசீலனை களுக்குள்ளாகி இருக்கும் வேளையில் நூறு வருடங் களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நூல், இந்தியா என்ற புராதன தேசத்தின் புவியியல் பிரிவுகளையும், பண்பாட்டு, இயற்கை வளங்களையும் ஆய்வுபூர்வ மாக எடுத்துரைக்கிறது. 56 தேசங்களின் புராணப் பின்னணியைச் சொல்லி அதன் பிரத்யேகமான தாவரங்கள், பறவை, விலங்குகள், சீதோஷ்ணம் வரை சிறப்பான தகவல்களைத் தருவது இந்நூலின் கூடுதல் சிறப்பு. நூறு வருடங்களுக்கு முன் தமிழ் உரைநடை எப்படி இருந்தது என்பதில் ஆர்வ முள்ளவர்களுக்கும் இப்புத்தகம் பல வெளிச்சங் களைத் தரக்கூடியது.

இந்நூலின் பிரதியை பாதுகாத்து வைத்திருந்து இதன் மறுமதிப்பை வெளியிட உதவிய 'சேக்கிழார் அடிப்பொடி' முனைவர் டி.என். ராமச்சந்திரன் அவர்களுக்கு எமது நன்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்

இரண்டாம் பாகம்

P.V. ஜகதீசய்யர்

சந்தியா பதிப்பகம்
நியூடெக் வைபவ் பிளாட்ஸ்
77 (பழைய எண் 57) 53-வது தெரு
அசோக் நகர், சென்னை –600 083
தொலைபேசி: 24896979 / 55855704

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புராதன இந்தியா என்னும் பழைய 56 தேசங்கள்
இரண்டாம் பாகம்

ஆசிரியர்	:	P.V. ஜகதீசய்யர்
முதற் பதிப்பு	:	2004
பக்கங்கள்	:	160
நூலின் அளவு	:	டெமி 1/8
தாள்	:	16 Kg கிராபிக் வெள்ளைத் தாள்
அச்சுப் புள்ளிகள்	:	11 புள்ளிகள்
படிகள்	:	1000
அட்டை வடிவமைப்பு	:	ட்ராட்ஸ்கி மருது
வெளியீடு	:	சந்தியா பதிப்பகம், சென்னை – 83.

First published in 1918
P.R. Rama Iyer & Co.

Puranic India or The Old 56 Kingdoms (Second Part)

Author	:	P.V. Jagadeesa Iyer
First Edition	:	2004
No. of Pages	:	160
Size	:	Demy 1/8
No. of Copies	:	1000
Paper used for text	:	16 Kg Graphic White Print
Printing Type	:	11 Points
Cover Design	:	Trotsky Marudu Studio 5; Ph : 23624455
Laser Typeset at	:	LKM Computer Printers, Chennai - 17. Phone : 24361141
Printed at	:	Chennai Micro Print Pvt. Ltd., Chennai - 600 029.
Published by	:	SANDHYA PUBLICATIONS, Flat A, Nu-tech Vaibav Flats, 77, (Old No.57), 53rd Street, Ashok Nagar, Chennai - 600 083.
Price	:	Rs.65/-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Foreword

"It is an unquestionable fact that in building up the History of Ancient India the historian has to depend entirely upon very slender material such as inscriptions, coins, tradition and literature. "The puranic India" of Mr. P.V. Jagadisa Aiyar, which is herewith presented to the public, is a brochure written in the very simplest Tamil style and in my opinion, a sincere attempt to supply some historical material about the ancient Geographical divisions of India drawn solely from that unconfirmed matter of quasi historic literature-the puranas. In doing this, the author has handled the subject very creditably and cautiously not committing himself to wild conjectures and surprising identifications. He leaves it to the trained sense of the historian to gather what information he could from the numerous unidentified names which he collects in his book and their puranic connections. While thus far the book may be of some interest to the student of history its value to the rising generation of young men and women is immense. An intimate acquaintance with the epics and myths of one's own country must indeed be of the utmost importance for every true son of the motherland."

H. Krishna Sastri

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூலாசிரியரின் முகவுரை

நமது ஆரியர்கள் அனுஷ்டித்து வரும் வ்ரதங்களின் லக்ஷணங்களை விவரிக்கக் கூடியதாய் ''இந்து புண்யகதை'' என்னும் ஒரு சிறிய நூலை யான் சில மாதங்களுக்கு முன் இயற்றிய பிறகு அவைகளின் விசேஷங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் தருணத்தில் தஞ்சாவூர் அரண்மனை லைப்ரெரியிலிருக்கும் சில சாஸ்திரங்களைக் கண்ணுற்று வருகையில் பாலகாப்ய மஹரிஷி யினால் செய்யப்பட்ட கஜசாஸ்திரமே நமது பூர்வ இந்தியாவின் பாக்கியமென்று விளங்கிற்று. ஏனெனில் அந்நூலில் குரு, சூரஸேனம், அங்கம், வங்கம் முதலான அனேக தேசங்களின் பெயரும், அவைகளின் நீர்நிலவளமும், எல்லையிலடங்கிய மலை நதிகளும், மற்றும் சில சரித்திரங்களும் வெகு அழகாய் வரையப் பட்டிருந்தன. இந்தியாவில் பூர்வநிலையிலிருந்த 56 தேசங்களின் விவரங்களைப் பற்றி ஒரு நூலை இயற்ற வேணுமென்று கருதிய எனக்கு அந்நூலே என் விருப்பத்தை தூண்டிவிட்டது.

ஆகையால் அது முதற்கொண்டே ''புராதன இந்தியா'' என்னும் இந்த நூலை எழுதத் துணிந்தபொழுது எனது நண்பரில் ஒருவராயும் ஸம்ஸ்கிருத பாஷையில் பல நூல்களை நன்றாய்ப் படித்துச் சிறந்த தேர்ச்சியடைந்த பண்டிட் வீ. விஜயராகவா சாரியாரின் பெரிய உதவியைப் பெற்று பலவிடங்களில் அனேக விதமாய்க் குறிக்கப்பட்ட விஷயங்களை நன்றாய்ச் சோதித்து முன்புள்ள ஐம்பத்தாறு தேசங்களின் நிலைமையை இந்நூலில் விவரித்திருக்கிறேன்.

இந்நூலை இயற்றியதில் பண்டிட் வீ. விஜயராகவாசாரியரிட மிருந்து அடைந்த பொருளாராய்ச்சி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிலாசாஸன இலாகா (Epigraphical Department) ஸூப்பிரன்டென்டெண்டு ராவ்ஸாஹிப் H. கிருஷ்ணசாஸ்திரியார் அவர்களிடமிருந்து முகவுரை ரூபமாய் கிடைத்த உதவியையும் யான் எக்காலத்திலும் மறக்கமாட்டேன் என்பது எனது கருத்தாகும்.

ஆகையால் வெகு ப்ரயாஸைப்பட்டும் கிடைக்காத சில தேச நிர்ணய விஷயமாய் இந்நூலில் சொல்லப்பட்டவைகளில் ஏதேனும் குற்றமிருந்த போதிலும் கண்ணுற்றோர் அதை தெரிவிப்பார்களாகில் அடுத்த ப்ரசுரத்தில் வெகு அன்புடன் அதை வெளியிடுவதாயும் யான் நிச்சயித்திருக்கிறேன்.

P.V. ஜகதீசய்யர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரண்டாம்பாக விஷய ஸூசிகை

அத்யாயம் 18: மாளவதேசம்.

ஜைனர்கள் மிகுதி - ஒட்டகங்களை உபயோகித்தல் - போஜராஜன் பிறப்பு.

அத்யாயம் 19: கொங்கணம் அல்லது ஸௌராஷ்ட்ரதேசம்

ஜில்லகம் என்னும் உபதேசம் – கோதாவரி நதி – கிஷ்கிந்தை - பஞ்சவடி – பலிசக்ரவர்த்தி வ்ருத்தாந்தம் – ப்லக்ஷாவதரணம் என்னும் தடாகம் – சனிபகவான் ஆதி பத்யம் – துணி வ்யாபாரிகள் - கணிகையின்கதை.

அத்யாயம் 20: கூர்ஜாதேசம்

விந்த்யமலை – கோவேரிகழுதை – மதுமான் மலை - கோமதிநதி – நர்மதைநதி – த்வாரகாக்ஷேத்ரம் – யதுவின் வம்சாவளி - கன்னிகாந்தப்புரம்.

அத்யாயம் 21: ஆபீரதேசம்

ஆதர்சாவளி (அரவல்லி மலை) – ஹிந்துநதி – சிசு பாலன் வ்ருத்தாந்தம் – இடையர்களின் மிகுதி – ஸ்திரீகளின் ஸங்கீதபயிற்சி.

அத்யாயம் 22: ஸால்வதேசம்

விபாசா சதத்ருநதிகள் – சரவீரபுரநகரம் – ஜனங்களின் கணிதசாஸ்திர திறமை.

அத்யாயம் 23: ஸிந்து தேசம்

தேசத்தின் காரணப்பெயர் – நீலகிரி – விஷஜந்துக்களின் மிகுதி - ஹிந்து நதி – விபாசாநதி – பாடலாவதிநதி –குதிரையின் விசேஷம் - ரகுமஹாராஜன் திக்விஜயம் – த்வாரகா விஷயம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 24: ஸௌவீரதேசம்

தேசத்தின் காரணப்பெயர் – பாரியாத்ரமலை – த்ரி கூடமலை – தேவகிரி –ஹிந்துநதி – ப்ரஹஸ்பதியின் ஆளுகை.

அத்யாயம் 25: பாரஸீகதேசம்

தேசத்தின் காரணப்பெயர் – ரதசித்ராநதி – மஹாமலை – ஸீமாமலை என்னும் எல்லைமலை – ரத்னங்களின் மிகுதி – குதிரையின் விசேஷம் – ரகுமஹாராஜன் திக்விஜயம்.

அத்யாயம் 26: வநாயுதேசம்

சகம் கக்ஷம்மலைகள் – நீர்ப்ராணிகளின் மிகுதி – கன்யகாநதி – குதிரைகளின் மிகுதி.

அத்யாயம் 27: பர்பரதேசம்

அரசுமரத்தின் மிகுதியும் தேசத்தின்பெயர் உண்டானதற்கு காரணமும் – பாரியாத்ரமலை – மஹாமலை – ஸிந்துநதி – ஜனங்களின் குணம்.

அத்யாயம் 28: கிராததேசம்

தேசத்திற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் – வேடர்களின் மிகுதி – கர்ஜூரிப்பழ விசேஷம்.

அத்யாயம் 29: காந்தாரதேசம்

விஷ ஜந்துக்களின் ஸஞ்சாரம் – ஜனங்களின் கல்வி விசேஷம் – மஹாபாரதத்தில் சொல்லப்பட்ட சகுனி இந்த தேசத்தை ஆண்டதும் பிறகு சில துலுக்கர்கள் ராஜ்யபாரம் வகித்ததும்.

அத்யாயம் 30: மத்ரதேசம்

தேசத்திற்குப் பெயர் ஏற்பட்டதின் காரணம் – மத்தன தேசம் என்றும் பெயர் – பஹூகூடமலை – ஸிந்து, ஐராவதீநதி – மத்ரீயின் சரித்திரம் – நகுல ஸஹதேவ ஜனனம் ஸாவித்ரீகதை – திருக்கடையூரின் விசேஷம்.

அத்யாயம் 31: காச்மீரதேசம்

மஹிரம், கநீதி என்னும் உபதேசங்கள், முத்தம்பி யூதநாதன் என்னும் யானைகளின் மிகுதி, ஸ்ரீ ஹர்ஷன் ஜனன பூமி, ஸூப்ரயோகை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி – பட்டுப்பூச்சியின் மிகுதி – புஷ் கலாவதி நகரம் – புஷ்கல மேகத்தின் வழி – சாரதாபீடம் – கபிலேச்வரன் கோயில் – பாசுபதம் பெற்றது – கிராதார் ஜுநீயம் – சந்த்ராபீடன் தாராபீடன் ஆண்டது – விஜயவடம் என்னும் பெஜ்வாடாவிலும் பாசபத ஐதீகம் அனுஷ்டிப்பது – காதம்பரீ விவாஹம்.

அத்யாயம் 32: காம்போஜதேசம்

அங்கோலமரத்தின் மிகுதி – கர்கம் என்னும் குதிரையின் விசேஷம் –ஸைப்யா, ஸதாநீரா என்னும் நதிகள்.

அத்யாயம் 33: நேபாளதேசம்

குளிரின் மிகுதி – ஆயவாஹம் என்னும் உபதேசம் – கௌசிகி என்னும் கண்டகி, த்ரோணா, கோவர்த்தினீ நதிகள் – தவளகிரி, தெற்கே வந்தவாசியில் இப்பெயர் கொண்ட மலை ஏற்பட்டது – லிலிதா நகரம் – ஜடேச்வரம், யோகினீ குண்டம் என்னும் நகரங்கள் – கஸ்தூரி விளைவு.

அத்யாயம் 34: ஆரட்ட தேசம்

வேடர்களின் மிகுதி – குதிரைகளின் விசேஷம்.

அத்யாயம் 35: விதேஹதேசம்

உயர்ந்தகுணமுடைய மண்பூமி – மலதம், கரூசம் என்னும் உபதேசம் – மிதிலாநகரம், கௌசாம்பீ, மஹோதயம், தர்மாரண்யம், கரிவரஜம் முதலிய நகரங்கள் – ஹிதாகல்யாணம் விசேஷம்.

அத்யாயம் 36: பார்வததேசம்

மஹாவேகாநதி – அருணன், கருடன், ஸர்ப்பங்கள் உற்பத்தி – ஜனங்களின் முரட்டுத்தனம் விஷயம்.

அத்யாயம் 37: சீனதேசம்

ஹூணர்கள் யவனர்கள் என்னும் பெயர் – பருத்தி பட்டுகளின் மிகுதி – அருமையான விளையாட்டு ஸாமான், புத்தர் சமணர்கள் விஷயம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 38: காமரூபதேசம்

கஜகிரி – அச்வகிரி என்னும் பெயரும் யானை, குதிரைகளின் மிகுதியும் – ஸம்ஸ்கிருத ஞானம், கஸ்தூரி விளைவும்.

அத்யாயம் 39: ப்ராக்ஜோதிஷதேசம்

புராவதீநகரம் – தபனகிரி – ப்ரம்மபுத்ராநதி – பசு மாடுகளின் மிகுதி – நரகாஸுரன் வ்ருத்தாந்தம் – தீபாவளி பண்டிகை விஷயம்.

அத்யாயம் 40: ஸிம்மதேசம்

ரேவதிநதி – பரந்தாநகரம் – த்ரிசங்குவின் விசேஷம்.

அத்யாயம் 41: உத்கலதேசம்

மேகலம், பல்லாடம் என்னும் உபதேசங்கள் – கந்தர்வகிரி – ப்ராம்மணநதி.

அத்யாயம் 42: வங்கதேசம்

–பௌண்ட்ரம், கரவடம் என்னும் உபதேசங்கள் – ஹரகிரி ஹரிகிரி – யமுனைநதி – கர்ஸுவர்ணம் – காசிநகரம்.

அத்யாயம் 43: அங்கதேசம்

அருணம், அபரகாசி என்னும் உபதேசங்கள், மழைவிடாமல் பெய்யும் விசேஷம் – மோதாகிரி, கண்டகிகள் – ஸாலக்ராம விசேஷம் –அகஸ்திய ஆச்ரமம், வாமன அவதார விஷயம் – மன்மதன் அங்கத்தை இந்த தேசத்தில் விட்டதும் அதன் நிமித்தியம் காரணப்பெயர் உண்டானதும் – கர்ணன் வ்ருத்தாந்தம்.

அத்யாயம் 44: மகததேசம்

வாஸத்திற்குத் தகுந்த தேசம் – சித்ரகூடம், கமட்டாகிரி – பல்குனிநதி – தேவிகாநதி, கிரிகாணதீர்த்தம், வைதரணிநதி, உருபில்லம், கிரிவ்ரஜம் என்னும் நகரம், தர்மாரண்யத்தின் வ்ருத்தாந்தம் – கயாக்ஷேத்ரம், கயாஸுர விஷயம் – கம்ஸன் அஸ்தி – ப்ராப்தி இவர்களை விவாஹம் செய்து கொண்டது – மகதராஜ வம்சாவளி – அறுபத்து நான்கு கலை ஞானம் – கீதம், வாத்யம், ஈர்த்தனம், நாடகம், சித்ரம், தண்டுலகுஸுமபலி – புஷ்பாஸ்தரணம் – விசேஷகச்சேத்யம் – தசனவஸராங்கராகம் – மணிபூமிகாகர்மா –

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சயனஸூகம் – உதகவாத்யம் சித்தயோகம் – மால்யக்ரதனம்- சேகராபீடயோஜனம் – நைபத்யயோஜனம் – கர்ணபத்ரபங்கம் - ஸூகந்த யுக்தி – பூஷணயோஜனம் – பதாதி சஸ்த்ரஸந்தானம்- சௌசுமாரயோகம் – ஹஸ்தலாகவம் – பாகக்ஞானம் அல்லது பாகசாஸ்த்ரம், ஆஸவாதிரசனை – ஸூசீவாபகர்மம் – ஸூத்ரக்ரீடை, வீணாதிரசனை – ப்ரஹேளிகை – ப்ரதிமாலா – துர்வாசகயோகம் - புஸ்தகவாசனம் – ஆக்யா யிகாகதனம் – காவ்யஸமஸ்யா - பட்டிகாவேத்ரவிகல்பம் – தர்க்கசாஸ்தரம் – தக்ஷணம், வாஸ்துவித்யா – ரத்னபரீக்ஷை – க்ரஹக்ஞானம் மணிக்ஞானம் – ஆகரஞானம் - வ்ருக்ஷாயுர்வேதம் குக்குடா தியுத்தவிதி சுகசாரிகா ஸாபம் - உத்ஸாதனம் – தேசாடனம், அக்ஷரமாத்ருகை என்னம் பாலசிக்ஷை - குவிகல்பம் – தேச பாஷாக்ஞானம் – புஷ் பசகடிகா – தாரணக்ஞானம் – ஸம்வாச்யம் மானஸீக்ரியா – கோசம் – சந்தோக்ஞானம் க்ரியாவிகல்பம் – சலிதக யோகம் – கோபனம் – த்யூதலிசேஷம் (மார்ஜனம்) – ஆகர்ஷக்ரீடை – பாலக்ரீ – கம – விநயம் – ரஜ்ஜுக் ஞானம் – வைதாளகம்.

அத்யாயம் 45: ஹேஹய தேசம்

சித்ரகூடம் – பஹூருபம் – காஹளமலை – மஹாநதி - தண்டகாரண்யம் – கபந்தன் வ்ருத்தாந்தம் – மாஹிஷ்மதி கிரிதுர்க்கம்- கார்த்தவீரியார்ஜுன விஷயம்.

அத்யாயம் 46: களிங்கதேசம்

உட்ரதேசம் – அடவீசிகரம் – ஸ்ரீ கூர்மகிரி – பத்ராசலம் - ஹிம்மாசலம் – பரசுராமாச்ரமம் – தந்தபுரம் – ஜகந்நாதம் - புவனேசுவரம் – விஜயநகரம்.

அத்யாயம் 47: ஆந்த்ரதேசம்

கருடமலை (அஹோபிலம்) கோதாவரி – க்ரௌஞ் சாலத்மலை – பம்பா நதி – ஏகசிலா நகரம்.

அத்யாயம் 48: யவனதேசம்

ருச்யமூகமலை – கோதாவரிநதி – பீமநதி – க்ருஷ்ணா - துங்கபத்ரா – பாக்ய தேசம் பாக்யபுரம் – மஹாம்பாபுரம் – பீஜபுரம் இவைகளின் சிறப்பு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 49: மஹாராஷ்டர தேசம்

ருச்யமூகமலை மால்யவான் – துங்கவேணா நதிகள் – கல்யாணபுரம் – மஹாம்பாபுரம் – மஹாபலேச்வரம் – ப்ரதிஷ்டானபுரம் – நாதத்வாரம் – பாண்டுரங்கம் – கலாஸல்.

அத்யாயம் 50: குளிந்த தேசம்

வத்ஸம் – கரீஷகம் – அப்பாச்சிராயர் – தென்னாலிராமன் – பாளையக்காரர் கோட்டைகள்.

அத்யாயம் 51: த்ராவிட தேசம்

தமிழ்தேசம், தென்னல்காற்று – வெங்கடாசலம் என்னும் திருப்பதிமலை காளாஸ்தி கடிகாசலம், வேதகிரி : ஹஸ்திகிரி அருணகிரி, தேவகிரி மலைகள் – ஸ்வர்ணமுகி வேகவதி, க்ஷீரநதி (பாலாறு) பெண்ணையாறு, கருடநதி – காஞ்சிபுர நகர விஷயம்.

அத்யாயம் 52: சோழதேசம்

வாழை தென்னை வ்ருஷங்களின் மிகுதி, காவேரி, கொள்ளிடம், காவேரியின் உற்பத்தி – காவேரிக்குப் பல பெயர்கள் –ஸ்ரீரங்கம், கும்பகோணம், மாயூரம்.

அத்யாயம் 53: ஸிம்மளதேசம்

ஸிம்மகிரி – வேணாநதி வெண்முத்து பவளக்கொடி இவைகளின் மிகுதி – வைரம், முத்து, மாணிக்கம் என்னும் பத்மராகம், மரகதம் என்னும் பச்சை, புஷ்யராகம், வைடூரியம், பவளம், நீலம், கோமேதகம் இவைகளின் குணம் முதலியவைகள்.

அத்யாயம் 54: பாண்டிய தேசம்

தென்னல்காற்றின் விசேஷம் – மலையம் தர்துரம் பெரியமலை வருஷகிரி என்னும் அழகர்மலை, வராஹகிரி என்னும் பழனி மலை – ராமேஸ்வரத்வீபம் – வைகை தாமிரபரணியின் – முத்துசிப்பி விஷயம், மதுரையின் சிறப்பு, ஆழ்வார் திருநகரி, தர்ப்பசயனம், திருப்புல்லாணி க்ஷேத்ரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்யாயம் 55: கேரள தேசம்

இதற்கு மலையாளம் என்று பெயர் – தென்கேரளம் வட கேரளம் என்னும் பிரிவு – ஆனந்த்கிரி –கந்தமாதன மலை – முரளாநதி - பரசுராமரின் பெருமை அனந்த பத்மநாபபுரம் – ஜனார்த்தனம் இந்த தேச ஸ்திரீகளின் விசேஷம் – சந்தையின் விசேஷம்.

அத்யாயம் 56: கர்னாடக தேசம்

கோகர்ணமலை – யதுகிரி – ஸஹ்யமலை காவேரிநதி - ஆதிரங்கம் என்னும் ஸ்ரீரங்கப்பட்டணம் – சிருங்கேரி – மஹீசூரபுரம் என்னும் மைசூர் விஷயம்.

அனுபந்தம் – 1

இந்தியாவென்னும் இந்த பரதகண்டத்தில் பூர்வகாலத்திற்குப் பிறகு நடைபெற்ற விஷயமும் போஜராஜன் காலத்திற்குப் பிறகு நடந்த விஷயங்களும்.

அனுபந்தம் – 2

சில தேசங்களின் முக்கிய குறிப்புகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாளவதேசம்

அத்யாயம் – 18

இருப்பிடம் : பூமியின் ஸ்வரூபம்

[1] மாளவதேசமானது கூர்ஜா தேசத்திற்கு வடகிழக்கிலும் அவந்தி தேசத்திற்கு வடமேற்கிலும், அஸ்தமனகிரிக்கு கிழக்கிலும் இதன் நடுவில் சதுரமான பூமியில் நிலைபெற்றிருக்கிறது. இந்த தேசத்தின் தென்கிழக்கு பாகத்தில் மாத்திரம் மண் மிக மிருதுவாயும் செழிமையாயும் நல்ல விளைபொருள்களை உண்டுபண்ணுவதாயும் அழகிய அனேகவித மரங்களுடன் கூடியதாயுமிருக்கிறது.

மலை

இந்த மாளவதேசத்திற்கு மேற்கில் அஸ்தகிரி[2] என்னும் மலையானது மேற்கு ஸமுத்திரத்தின் கரையின் அருகில் இருக்கிறது. இந்த அஸ்தகிரிக்கும் ஸிம்மதேசத்தின் தென்கிழக்கில் கடற்கரையை நோக்கிப் போகும் பிரம்மபுத்ரா நதியின் சமீபத்திலிருக்கும் உதய கிரிக்கும்[3] கிழக்கு மேற்காக நேரான நூல் அளவு ஏற்படுத்தப்பட்டிருக் கிறது என்பதை காண்பிக்கும் பொருட்டே இதற்கு அஸ்தமனகிரி என்றும் அதற்கு உதயகிரி என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தேசத்திற்கு நான்குபுறத்திலும் த்ரிகூடம் அஸ்தகிரி மஹாகாளமலை இவைகளே பெரிய மலைகளாகும். அஸ்தகிரியானது தாளம் போல் வட்டமாயும் மேலே சற்று கிளம்பி உயர்ந்துமிருக்கிறது.

நதி

இந்த தேசத்தின் மேற்கில் உள்ள அஸ்தபர்வதத்திலிருந்தும் வட மேற்கில் உள்ள த்ரிகூட மலையிலிருந்தும் சிறு நதிகள் உண்டாகி இந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசத்தின் தெற்கு வடக்கு பூமியை செழிக்கச் செய்து பிறகு கிழக்கு முகமாகவே சென்று சர்மன்வதீ நதியுடன் சேருகிறது.

விளைபொருள் : புஞ்சைத் தானியங்கள் அதிகம்

இந்த தேசத்தில் எவ்விடத்திலும் கடலை, கொள்ளு முதலிய தானியங்கள் அதிக விசேஷமாக உண்டாகின்றன.

விசேஷம்: ஜனங்களின் தொழில், புத்தர்களின் வாஸம்

இந்த மாளவதேசத்தின் கிழக்கு பாகத்தில் அனேக பெரிய நகரங்கள் உண்டு. இந்த மாளவ தேசத்திலும் விராடம், சூரஸேனம், த்ரிகர்த்தம், காந்தாரம், கோஸலம், நேபாளம், அங்கம் என்னும் தேசங்களிலும் அனேக வியாபாரிகளும் வித்வான்களும் வஸித்து வருகிறார்கள்.

இந்த தேசத்தில் அனேக கோயில்களும் புத்தர்களுடைய வாஸ மண்டபமும் இப்பொழுதும் காணப்படுகின்றன. இந்த தேசத்திற்கு தென்கிழக்கில் ஓர்பாகத்தில்தான் தசபுரம்[5] என்னும் நகரத்தையும் இந்த தேசத்திற்கு வடக்கிலிருக்கும் த்ரிகூடம் என்னும் மலைக்கருகில் ஜோதிபுரம் என்னும் நகரத்தையும் விதிசா நகரத்திற்கு சமீபத்திலேயே உதயபூர் (உதயபுரி) என்னும் நகரத்தையும், சேதி தேசத்தின் மேற்கு முகட்டிலிருக்கும் ஜபாபுரி (ஜப்பல்பூர்) என்னும் நகரத்தையும் சுமார் (2000) வருஷகாலங்களுக்கு முன் இந்த தேசத்தை கைப்பற்றிய சில ஜைனர்களும் புத்தர்களும் உண்டு பண்ணியதாக ஏற்படுகிறது.

இவைகள் தவிர இன்னும் அனேக நதிகளின் கரையில் அனேக கிராமங்களையும் நகரங்களையும் அந்த பௌத்தர்களே நிர்மாணித்து தங்கள் குருவினுடைய ஆலயங்களையும் ஸ்தாபித்து வைத்திருக்கிறார்கள்.

முக்யமாய் இந்த மாளவ தேசத்திலும் இதற்கு வெகு சமீபத்திலுள்ள கூர்ஜா தேசத்திலும் ஸிந்து ஸௌவீர தேசங்களிலும் ஒட்டகங்கள் விசேஷமாய் வளர்ந்து வருகிறபடியால் இந்த தேசத்து ஜனங்கள் வீடு, ஆலயம் முதலிய கட்டடம் கட்டுவதற்கு அவ்வித ஒட்டகங்களின் முதுகின் மேல் செங்கல், கருங்கல், மரத்துண்டுகள் சுண்ணாம்பு முதலியவை ஏற்றி வேலைகளுக்கு உபயோகித்துக் கொள்வது வழக்கம். இதுமாத்திரமல்ல. சில சமயங்களில் முற்கூறிய சில தேசங்களில் கோவேரிக் கழுதை, காட்டுக்கழுதை, குதிரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலியவைகளைக் கொண்டே ஜனங்கள் தமது வேலைகளைப் பெரும்பாலும் செய்து கொள்ளுகிறார்கள். கோதாவரிக்குத் தெற்கு பாகத்தில் எருதுகளையும் எருமைக் கிடாக்களையுமே எப்படி வேலைக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்களோ, அதுபோலவே விந்தியமலைக்கு வடக்கேயுள்ள அனேக தேசங்களில் குதிரை, ஒட்டகங்களைக் கொண்டே பெரும்பாலும் வேலைகள் நடக்கின்றன என்றே சொல்லலாம்.

தனத்திலும் செழிப்பிலும் சிறந்த இந்த தேசத்திலுள்ள தசபுரத்தில்தான் போஜராஜன்[6] பிறந்தான் என்றும் சிலர் சொல்வதாகவும் தெரியவருகிறது. இந்த தேசத்தின் நேர் கிழக்கில் அனூபநகரம் என்பது முன்பு ஒரு சமயத்தில் கார்த்த வீர்பனுடைய அரசுக்குட்பட்டிருந்ததாகவும் அதற்கு சமீபத்திலுள்ள ஒரு பெரிய தாமரைக் குளத்தில் கஜேந்த்ர மோக்ஷ விருத்தாந்தம் நடந்ததாயும் சில புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

❋

அடிக்குறிப்புகள் :

1. இது இப்பொழுது விந்தியமலையின் மேல்பாகத்திலிருக்கும் மால்வா (Mālwā) என்று ஏற்படுகிறது.

2. இந்த இந்தியாவில் ஸிம்மதேசத்தின் தென்கிழக்கில் இருந்து உதிக்கும் ஸூர்ய பிம்பமானது கொஞ்சம் கொஞ்சமாய் ஆகாயத்தின் மேற்கிளம்பி பிறகு இந்த மலையின் ஸமீபத்தில் வரும்போது இந்த பரத கண்டத்தில் வஸிக்கும் ஜனங்களின் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து போகிறபடியால் இதற்கு அஸ்தகிரி என்னும் சூர்யாஸ்தகிரி என்னும் பெயர் வைக்கப்பட்டதாயிற்று.

3. சூர்யபிம்பம் உதித்தது போல் தோன்றும் மலைக்கு உதயகிரி என்றும் பெயர் உண்டாயிற்று. இதுபோலவே நெல்லூர் ஜில்லாவில் உதயகிரி என்று ஒரு மலையும் அதன் அடிவாரத்தில் முன்பு ராஜதானியாயிருந்த ஒரு ஊரும் இப்பொழுதும் தோன்றி வருகிறது. கீழ் சமுத்ரக் கரையிலுள்ள இந்த மலையின் மேலுள்ள கற்கள் சிவந்தவர்ணமாயிருப்பது பற்றியும் அதில் காலையில் சூர்யன் புறப்படும்பொழுது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிரணங்கள் விழுந்து அதன் அடிவாரத்திலுள்ள பசும் சோலை சூழ்ந்த ஊரிலுள்ள ஜனங்கள் பார்வைக்கு விசேஷ உற்சாகத்தை உண்டாக்குவதுபற்றி இதற்கு உதயகிரி என்று பெயர் ஏற்பட்டது.

4. வெகுகாலம் இந்த உதயகிரி மலை களிங்கதேசத்து (Orissa) ராஜாக்களின் ஆளுகைக்குட்பட்டிருந்து பிறகு விஜயநகர சமஸ்தானத்து கிருஷ்ணதேவராயருக்கு கைவசப்படுத்தப்பட்டது. பிறகு மகம்மதியர்கள் பிடித்துக் கொண்டு மலையின்மேல் மசூதி முதலிய கட்டடங்களும் கட்டிக் கொண்டார்கள். தற்காலத்திலும் இந்த மலையின் மேல் கோட்டை முதலிய சின்னங்களும் அடிவாரத்தில் ஏராளமான புராதன கோயில்களும் இருந்துவருகின்றன. இவ்விடத்திலுள்ள கிருஷ்ணன் கோயிலிலிருந்த பாலகிருஷ்ண பிம்பத்தையே விஜயநகர சம்ஸ்தானத்தில் கிருஷ்ணன் கோயில் ஒன்றுகட்டி அதில் ப்ரதிஷ்டை செய்ததாகவும் பிறகு அதை, அந்தநகரம் ஜீர்ணமானதால், தற்காலம் சென்னைப்பட்டணம் கண்காட்சி ஸ்தலமாகிய (Museum) மியூசியத்தில் வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

5. இந்த நகரத்தின் மேன்மையைப் பற்றி காளிதாஸ மஹாகவியும் தமது மேகஸந்தேச காவ்யத்தில் ''தசபுரவதூலோசனை; பீயமான:'' என்று வெகு புகழ்ச்சியாய் கூறியிருக்கிறார்.

6. இவன், யுக்தி கல்பதரு அறுபத்து நான்கு கலைக்ஞானம், ராமாயண சம்பு முதலிய நூல்களை இயற்றியதாக தெரியவருகிறது. இந்த போஜராஜனது பெருமையை லக்ஷ்மணகவியும் ராமாயண சம்பு யுத்தகாண்ட ஆரம்பத்தில் புகழ்ந்து பொழிந்திருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொங்கணம் (அல்லது) ஸௌராஷ்ட்ர தேசம்

அத்யாயம் – 19

இருப்பிடம்

[1]கொங்கண தேசமானது மஹாராஷ்ட்ர தேசத்திற்கு வடக்கிலும் விந்திய பர்வதத்தின் தெற்கு அடிவாரம் முதல் மேற்குக் கடற்கரை ஓரமாய் பாண்டுரங்க க்ஷேத்ரம் வரையில் மிகவும் நீண்டு பரவியுமிருக்கிறது. இதற்கு ஸௌராஷ்ட்ர தேசமென்று மற்றொரு பெயருண்டு.

இந்த தேசத்தின் தெற்கு பாகத்திற்கு ஜில்லகம் என்று ஒரு உபதேசமுண்டு. அதில் கழுகு, காக்கை, பருந்து முதலிய சில பக்ஷிகள் அதிகமாய் உற்பத்தியாகி எப்பொழுதும் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

இந்த தேசத்தில் மேற்குக் கடற்கரை ஓரமாய் பெரிய மலைகளும் கற்பூமிகளுமே அதிகமாயிருக்கும். அதற்கு கிழக்கிலிருக்கும் பூமி வெகுதூரம் வரையில் நல்ல செழிப்புடன் கூடியிருப்பதால் அவ்விடங்களில் பலவித தான்யங்களும் ஏராளமாய் பலித்தபோதிலும் கடலை, பருத்தி முதலிய புஞ்சைத் தான்யமே மிகவும் உண்டாகும்.

மலை – நதி

இந்த தேசத்திற்கு கிழக்கில் விந்தியமலையின் அனேக குன்றுகளும் அதற்கு அருகிலே தண்டகாரண்யமுமிருக்கிறது. இந்த கொங்கண தேசத்தின் தென்கிழக்கிலிருக்கும் ஓர் பெரிய மலையிலிருந்தே[2] கோதாவரி நதி உற்பத்தியாகி கிழக்குமுகமாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓடுகிறது. அந்த கோதாவரி நதியின் சமீபத்திலே (தெற்கில்) கிஷ்கிந்தையும் பஞ்சவட நதியின் தீரத்தில் சீதாதேவியுடன் முன்பு ஸ்ரீராமன் சிலகாலம் வஸித்தார் என்னும் சில வித விஷயங்களை நாம் ஸ்ரீவால்மீகி ராமாயணத்திலிருந்தே அறிந்து கொண்டிருக்கிறோம்.

பஞ்சவடிக்கு கொஞ்சம் வடக்கில்தான் சிரஞ்ஜீவியாகிய பலிசக்ரவர்த்தி ஒரு நகரை ராஜதானியாக ஏற்படுத்திக் கொண்டு அச்வ மேதயாகம் நடத்தி விசேஷதானம் செய்து வந்தான். அவ்விடத்தில் ஸ்ரீ பகவான் அவனுக்காக வாமனாவதாரம் செய்தார் என்று வாமன புராணத்தினால் ஏற்படுகிறது.

இந்த தேசத்தில் அனேக காடுகளும் சிறிய குன்றுகளும் அவை களிலிருந்து பலகாட்டாறுகளும் உண்டாகி பெரும்பாலும் மேற்கு கடலிலேயே வீழ்கின்றன. இந்த தேசத்தின் தெற்கில் ப்லக்ஷாவதரணம் (குரங்கு இறங்கும் தடாகம்) என்று ஒரு பெரிய தடாகமிருக்கிறது. அதைச் சுற்றிலும் அதிகமாய் நாவல்மரங்களும் அதில் விளையாடும் பலஜாதி குரங்குகளின் சேஷ்டைகளும் பார்க்கிறவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணும்.

இந்த தேசத்திற்கு சனிபகவான் அதிகாரியானபடியால் நீசஜாதிப் பறவைகளும் மிருகங்களுமே அதிகமாய் வளர்ந்து வருகின்றன.

இந்த கொங்கண தேசத்தில் துணி வியாபாரிகளே விசேஷ மாயுண்டு. அவர்கள் நெடுநாளாய் துணி நெய்தல், பாய் பின்னுதல் தைத்தல் முதலியவைகளின் சிறப்பையடைந்து வருவதாயும் நன்கு விளங்குகிறது. இவர்கள் இத்தேசத்திலிருக்கும் பெரிய காட்டு யானைகளையும் தமது வேலைக்கு உபயோகிக்கும் வழக்கமுண்டு.

கணிகையின் கதை

ஸௌராஷ்டிர தேசத்தில் ஒரு சமயம் சத்யசீலன் என்னும் பிராம்மணன் இருந்தான். இவன் பால்யம் முதல் தனது குலத்திற்குத் தகுந்தபடி காரியங்களை நடத்திக் கொண்டு வந்தான். காலக்ரமத்தில் இவனுக்கு அந்த தேசத்தைச் சேர்ந்த காம்பில்ய பட்டணத்திலுள்ள கணிகை என்னும் பெண்ணை கல்யாணம் செய்து வைத்தார்கள். நாளடைவில் இந்தப் பெண்ணாகிய கணிகை வெகு துஷ்டையாய் தன் பர்த்தாவுக்கு தகுந்தபடி நடவாமல் வெகு கெட்டமாதிரியாய் காலக்ஷேபம் செய்து வந்தாள். ஆனால் சத்யசீலன் மட்டும் தனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குலாசாரத்திற்குத் தகுந்தபடி யோக்யமாய் தனது காலத்தைக் கழித்தான். இதன் காரணமாக மறு ஜன்மத்தில் காதி ராஜாவுக்கு ராஜபுத்ரனாய்ப் பிறந்தான். இவன் காலம் முடிந்தும், இந்த கணிகை என்னும் விதவை மறுபடியும் துர்நடத்தையுடையவளாய் காலம் கழித்து ஒரு பாம்பினால் கடிக்கப்பட்டு மரணமடைந்தாள். ஸத்யவானாகிய பரமபுருஷனுக்கு விவாஹம் செய்யப்பட்ட புண்ய வசத்தால் மட்டும் கோதாவரியில் ஒரு தாசிக்குப் பெண்ணாக பிறந்தாள். இவள் மறு ஜன்மத்திலும் வெகு கெட்ட நடத்தையுடன் காலம் கழித்ததின் காரணமாக தீராத வியாதியால் பீடிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். பிறகு ஒரு சமயம் மஹாமக[3] உத்ஸவத்தின் பெருமைக்கு ஏராளமாய் ஜனங்கள் கும்பகோணம் போவதைக் கண்டு, அந்த புண்யகாலத்தின் பெருமையைத் தெரிந்து கொண்டு தானும் அவர்களுடன் கூடப்போய் தனது வியாதியை போக்கிக் கொள்ள எண்ணம் கொண்டாள். இப்படியாக இவளை அழைத்துப் போக அவர்கள் சம்மதித்த போதிலும் இவள் தேகத்திலுள்ள துர் வியாதியால் இவளை தூரமாக வரும்படி செய்து போகும் மார்க்கம் முழுமையும் புண்யகதைகளைச் சொல்லி வந்தார்கள். இவ்விதமாய் இவள் அந்த யாத்திரைக்காரர்களுடன் போய் மஹாமக காலத்தில் கும்பகோணத்திலுள்ள மஹாமகக்குளத்தில் ஸ்நானம் செய்ததும் தனது ரோகம் நீங்கி திவ்ய ஸுந்தர வடிவத்துடன் திரும்பி தனது ராஜ்யம் போய் ஸுகமாய் வாழ்ந்தாள்!

❋

அடிக்குறிப்புகள் :

1. இந்த தேசம் (Konkan, part of Bombay Presidency) பம்பாய் ராஜதானியின் மேற்குபாகம் முழுமையிலும் பரவி வருகிறது.
2. இதை சதபுரமலை (Satpura hills) என்றும் சிலர் சொல்லுவார்கள்.
3. இதன் விவரங்களை இந்துபுண்ய கதைகள் புஸ்தகம் இரண்டாம் பாகத்தில் 'மாசிமகம்' என்னும் அத்யாயத்தின் கீழ்பார்க்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூர்ஜரதேசம்

அத்யாயம் – 20

இருப்பிடம்: பூமியின் நிலைமை

[1] கூர்ஜாதேசமானது விந்தியமலையின் மேற்குபாகத்திலும் அஸ்தகிரிக்குத் தெற்கிலும், கோமதீ நதிக்கும் நர்மதா நதிக்கும் சமீபத்திலிருக்கும் ஆம்ரகூடம் என்னும் மலையின் சார்பு வரையிலும் நீண்டு அகன்று வில்லுபோல் வளைந்திருக்கிறது. இந்த தேசத்தின் ஆரம்பத்தில் அஸ்தகிரியின் சார்பிலும் பிறகு மேற்கு சமுத்திரத்தின் சமீபத்திலேயே வளைவாய் சென்று கோமதி, நர்மதா என்னும் இந்த முக்யநதிகளைத் தாண்டி தெற்கே போகும்வரையிலும் மணல்கலந்த பூமியாகவே இருக்கிறது. ஆம்ரகூடம், விந்தியம், அஸ்தகிரி இந்த மலைகளின் அடிவாரத்தில் மாத்திரம் கொஞ்சம் கற்பாறைப் பூமியாய் இருக்கும்.

மலை, குதிரை, கழுதை, ஒட்டகம் விசேஷம்

முன்சொன்ன அஸ்தகிரியும் விந்தியமலையுமே இந்த தேசத்திற்கு முக்கிய மலைகள். இவ்விரண்டு மலைகளிலிருந்து சிறிய நதிகள் உண்டாகி இந்த மலையின் சிறிய கூழாங்கற்களையும் உருட்டிக் கொண்டு போகும் வேகமுடையதாய் அவ்வளவு அலைவீச்சுகளுடன் மிகவும் உயர்ந்த பாகத்திலிருந்து இறங்கி ஓடுகிறது.

இந்த மலைப்பாங்குகளில் மிகவும் உயர்வுள்ள மரங்களும், அனேகவிதமான மான்கூட்டங்களும் காணப்படுகின்றன. இந்த தேசமானது பெரும்பாலும் மணல்பாகமாகவே இருக்கிறபடியால் விந்தியமலையின் நான்கு சார்பின் மலைத்தொடர்களிலும் அங்கங்கு குகைகளிலும் அடர்ந்த புதர்களிலும் உண்டாகும் ஒட்டகங்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காட்டுக் குதிரைகளும், கோவேரிக் கழுதைகளும் மந்தை மந்தையாய் இந்த தேசத்திலும் இதைச் சேர்ந்த அடுத்ததேசங்களிலும் ஸஞ்சரித்து உலவுகின்றன. இவ்வித கோவேரிக் கழுதை என்னும் காட்டுக் கழுதைகளையும் ஒட்டகங்களையுமே இந்த தேசத்திலிருப்பவர்கள் தமது வீடு, மாளிகை முதலியவைகளைக் கட்டுவதற்காக கல், மண் முதலியவைகளைச் சுமப்பதற்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள். இந்த தேசத்தில் வெண்மைப் பசுக்களும் சிறு பசுக்களும் அனேகம் இருக்கின்றன.

அஸ்தகிரி, விந்தியமலை தவிர மதுமான் என்னும் மலையும் சில காட்டாறுகளின் உற்பத்தி ஸ்தலமாகத் தோன்றிவருகிறது.

நதி

வில்லுபோல வளைந்த உருவத்துடன் கூடிய இந்த கூர்ஜா தேசத்திற்கு நடுவிலிருக்கும் விந்தியமலையின் தென்பாகத்தில் மதுமான் என்னும் மலையின் அடியிலிருந்து கோமதீ[2] என்னும் நதியானது உற்பத்தியாகி மேற்குமுகமாய் ஓடி இந்த கூர்ஜரதேசத்தின் நல்ல பூமியிலே பரவி பலவித விளைபொருள்களை உற்பத்தி செய் வித்துக் கொண்டு பிறகு துவாரகையின் மேற்கு பாகத்தில் சமமான பூமியில் இறங்கி மேற்கு கடலில் வீழ்கிறது. ஆம்ரகூட மலையின் தெற்குச் சார்பில் உண்டாகும் நர்மதை என்னும் நதியானது மேற்குமுகமாய் ஓடி மேற்கு கடலிலே வீழ்கிறது.

க்ஷேத்ரம் : கிருஷ்ணன் பெருமை

இந்த கூர்ஜாதேசத்தின் மேற்பாகத்தில் கடற்கரை ஓரத்தில் மூன்று பாகங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பட்ட துவாரகா என்னும் திவ்யக்ஷேத்ரம் விளங்கி வருகிறது. இவ்விடத்தில்தான் முன்பு யதுவுக்கு[3] புத்திரனாய் அவதரித்து ஸ்ரீகிருஷ்ணபகவான் ருக்மணி முதலிய அஷ்டமஹஷீ ஸமேதராய் அரசுபுரிந்து, ஸகல ஜனங்களுக் கும் துன்பம் விளைவித்த துஷ்டராஜாக்களை ஸம்ஹாரம் செய்து தர்ம சீலர்களுக்கு உதவிபுரிந்து பாண்டவர்களுக்கும் ஸஹாயமாய் இருந்து மஹாபாரத[4] யுத்தத்தை நடத்தி பக்தர்களின் உஜ்ஜீவனார்த்தமாய் கீதையையும் வெளியிட்டார். இந்த நகரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோவில் வெகு விமரிசையுடன் இப்பொழுது விளங்கி வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷம் : ஜனங்களின் பெருமை

இந்த கூர்ஜா தேசத்தில் வெகுநாளாய் அனேக வணிகர்களும் வெகுதர்மசீலர்களும், கல்விமான்களும் நீடித்து வாழ்ந்து வருகிறார்கள். மற்றுமுள்ள சில ஜனங்கள் இந்த தேசத்தின் ஸாரபூமியையும் நர்மதை கோமதீ முதலிய நதிகளின் கரையிலிருக்கும் பூமிகளையும் உழுது பலவித பயிர் செய்பவர்களாயும் சிலர் வியாபாரம் கணக்கு முதலியவைகளில் விசேஷ தேர்ச்சியையும் லாபத்தையும் அடைந்து மேன்மேலும் தனம் முதலிய பொருள் ஸம்பாதிக்கவேணும் என்னும் ஆசையினால் தமது மனைவி புத்திரர், வீடு, தேசம் முதலியவைகளை மறந்துவிட்டு மஹாராஷ்டிரம், ஆந்திரம், யவனம், வங்கம், கோஸலம், குரு, சூரஸேனம் முதலிய செல்வமுள்ள தேசங்களில் போய் ரத்னம், பட்டு முதலிய வியாபாரங்களையும் நடத்தி வருகிறார்கள்.

இந்த தேசத்தில் ஆண், பெண் முதலிய சைவ ஜனங்களும் பெரும்பாலும் நல்ல அழகை உடையவர்களாயும், விசேஷ ஆடை ஆபரணம் தரித்துக் கொள்ளுகிறவர்களாயும் இருப்பார்கள். இந்த தேசத்தில் இருக்கும் ஸ்திரீகள் மிகவும் வடிவமைத்து, நல்ல பொருந்திய சரீரமுடையவர்களாயும், அகன்ற கண்களையுடையவர் களாயும், புத்திசாலிகளாயுமிருப்பார்கள். இந்த தேசத்தில் வஸிக்கும் கன்னிப் பெண்களுக்கு கன்னி காந்தப்புரம் ஏற்படுத்திவரும் வழக்கமானது இந்த தேசத்தில்தான் இப்பொழுதும் நடந்து வருகிறது. இந்த தேசத்தில் உள்ள கன்னிப் பெண்களும்[5] மற்ற மாதர்களும் விசேஷ ஸங்கீதங்களையும் ஆடல், தாளம் முதலிய நாட்டியங்களையும் பெரும்பாலும் கற்றவர்களாய் இருக்கிறார்கள். இந்த தேசத்தின் வளமையானது வானத்திற்கு அதிக ஸௌகரியமாய் இருந்து வருகிறபடியால் இந்த தேசத்துள்ளோர்களில் செவிடு, குருடு, நொண்டி, பெரிய வியாதிக்காரன், வயிற்று வலிக்காரன், காக்கை வலிக்காரன் முதலிய நோயாளிகள் இல்லாதவர்களாகவே பெரும் பாலும் காணப்படுவார்கள். இந்த தேசத்தில் வஸிப்பவர்களுக்கு விந்தியமலையின் பனி உபத்திரவம் கொஞ்சம் ஏற்பட்டிருந்த போதிலும் விடியற்காலையில் ஸ்நானம் செய்வதும் தேவபக்தியுடை யவர்களாயும் இருக்கிறதாகத் தெரிய வருகிறது.

❄

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடிக்குறிப்புகள் :

1. இப்பொழுது வழங்கப்படும் குஜரட் (Gujarat) தேசத்தில் இருக்கிறது.

2. கோ என்றால் பசு. இந்த நதியானது தனது இருகரையிலும் ஏராளமாய் வளர்ந்த இளம்புற்களைக் கொடுத்து பசுக்களை வளர்த்து வருவதால் கோமதீ என்கிற இந்தப் பெயர் உண்டாயிற்று.

3. **சந்த்ரவம்சத்தின் உட்பிரிவாகிய யதுவின் வம்சாவளியாவது**

யது ...தேவகியை தர்மபத்னியாகக் கொண்டு பூர்வஜன்ம ஸுக்ருதத்தினால் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு பிதாவாக ஆனார்.
|
க்ரோஷ்டா
|
வ்ருஜினிவான்
|
ஆஹி
|
உசங்கு
|
சித்ராதன் ...இப்பெயர் கொண்ட மற்றொருவன் கந்தர்வ ஜாதியில் பிறந்தவன்
|
சசபிந்து
|
ப்ருது கீர்த்தி, ப்ருது ஜயன், ப்ருது தானன், ப்ருது ச்ரவஸ்
|
(ப்ருது ச்ரவஸ்)
|
தமன்
|
உசனன் ...சுக்ராசாரியருக்கு ஸமமாய் நீதியில் தேர்ச்சியடைந்ததால் இவ்வரசனுக்கு இந்தப் பெயர் உண்டாயிற்று.
|
விசிதாயுஸ்
|
ருக்மகாசன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஜியாமகன்
|
விதர்பன் ...இவனுக்குத் தான் தமயந்தி என்று பெண் பிறந்து நளனை மணந்தாள் என்று சிலர் சொல்வர்.
|
க்ருதன்
|
குந்தி
|
வ்ருஷ்டி
|
நிவ்ருத்தி
|
தசார்ஹன்
|
வ்யோமன்
|
ஜீமூதன்
|
விக்ருதி
|
பீமரதன்
|
மதுரதன்
|
சகுனி ...துரியோதனனுடைய மாமனாகிய சகுனி அல்லாத மற்றொருவன்
|
கரந்தி
|
தேவமதன்
|
தேவக்ஷேத்ரன்
|
மது
குருவசன்
|
அநுரதன்
|
புருஹோத்ரன்
|
அம்சு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யச்ருதன்

வருஷ்ணி | தேவ வ்ருதன் | அந்தகன் | மஹாபுஜன்

வருஷ்ணி
|
ஸுமித்ரன்
|
அநிமித்ரன்
|
வ்ருஷ்டி
|
சித்ரகன்
|
விதூரதன்
|
சூரன்
|
பஜமானன்
|
சிநி
|
போஜன்
|
ராதிகன்
|
தேவமீடன்
|
சூரசேனன்
|
வஸுதேவர்
|
ஸ்ரீக்ருஷ்ணன்

4 இந்த யுத்தசமயத்தில் அர்ஜுனனாகிய பார்த்தனுக்கு இந்த க்ருஷ்ணபகவான் ஸாரதியாய் உதவிபுரிந்ததைக்காட்ட சென்னைப் பட்டணம் திருவல்லிக்கேணி ஸமுத்திரக்கரையில் பார்த்தஸாரதி கோவிலும் உண்டு.

5. இது முதலிய வேறு சில விஷயங்களுக்கும் விவரங்களை வெங்கடாத் வரி என்பவர் செய்த விச்வகுணாதர்சம் என்னும் சம்பு புஸ்தகத்தில் விசேஷமாய்க் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆபீரதேசம்

அத்யாயம் – 21

இருப்பிடம்

[1] ஆபீரதேசமானது ஸிந்து தேசத்திற்கு கிழக்கிலும் குந்தி (குந்தல) தேசங்களுக்கு நேர் மேற்கிலும் த்ரிகூட மலைக்கு வடக்கிலும் அகன்ற ஒரு பெரிய பூமியில் இருக்கிறது. இந்த தேசத்தின் மேற்கு பாகத்தில் கொஞ்சம் பூமிதான் விளைபொருள்களின் உற்பத்திக்கு ஸாதகமாயிருக்கிறது. ஸால்வதேசத்திற்கு ஸமீபமாய் இந்த தேசத்தின் வடக்கு பாகத்திலும் நல்ல மண்ணும் மணலும் கலந்த பூமியிருக்கிறது. இவைகள் தவிர மற்றபாகங்கள் எல்லாம் மலைகளாலும் குன்றுகளாலும் சூழப்பட்டதாயும் பலவித மரங்களும் துஷ்ட மிருகங்களும் வாஸம் செய்யும் அரணாகவுமிருக்கின்றன.

மலை

இந்த தேசத்தின் தென்கிழக்கிலும் தெற்கிலும் ஆதர்சாவளி (அரவல்லி) என்னும் பெரியமலைத் தொடர்களே இந்த தேசம் முழுவதையும் பெரும்பாலும் கவர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த அரவல்லி மலைக்கருகில் பெரிய பாழ்வனமும் இப்பொழுதும் அதிக கடூரமான ஜீவஜந்துக்களால் சூழப்பட்டதாகவேயிருக்கிறது. அதில் சிலவிடங்களில் உப்புமண்ணும் சுண்ணாம்பு மண்ணுமாகவேயிருக்கும். சிலவிடங்களில் மரத்தின் நிழலே கிடையாது. மிகவும் பாழும் காடாகவேயிருக்கும். இவ்வித காட்டை வேடர் முதலிய காட்டு ஜனங்களும் தாண்டிச் செல்வதற்கு கஷ்டமாயிருக்கும்.

நதி

இந்த தேசத்தின் மேற்கு எல்லையில் ஓடும் அந்த பெரிய ஸிந்து நதியே இதற்கு முக்ய நதியாகும். ஆகிலும் முன் கூறிய அரவல்லிமலை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலியவைகளின் அடியிலிருந்து அனேக சிற்றாறுகள் கிளம்பி மேற்குமுகமாக ஓடி ஸிந்துவுடன் கலக்கின்றன. சில நதிகள் கிழக்கு முகமாய் ஓடிசர்மண்வதியுடன் கலக்கின்றன. இந்த நதிகளின் ஜலப்பெருக்கு பெரும்பாலும் விதிசா நகரம் வரையில் வடிந்து பாயும்.

விசேஷம் : சிசுபாலன் விருத்தாந்தம்

கிருஷ்ணாவதார ஸமயத்தில் அஸுராம்சமாய் பிறந்த சிசு பாலன் என்னுமரசன் தனக்கு சொந்தமான சேதிதேசத்துடன் இந்த ஆபீர தேசத்தையும் வநாயு பாஹ்லிக தேசங்களையும் சேர்த்துக் கொண்டு அநேக உபத்திரவங்களை விளைவித்துக் கொண்டு அரசு புரிந்தான். அவனது துஷ்டகாரியங்களைக் கண்டு தயாநிதியாகிய ஸ்ரீகிருஷ்ணனும் கோபித்துக் கொண்டு பாண்டவர்கள் நடத்திய ராஜஸூய யாகத்தின் முடிவில் இந்த்ரப்ரஸ்தத்தில் ஸம்ஹாரம் செய்தார் என்று மஹாபாரத கதையினாலும் பெரியோர்கள் கூறும் மொழியினாலும் நாம் அறிந்து கொண்டிருக்கிறோம்.

மேலும், சூரஸேன தேசத்திற்கு ப்ரதான நகரமாகிய வட மதுராபுரியைச் சேர்ந்த கோகுலம் என்னும் க்ஷேத்ரத்தில் நந்தன் உபநந்தன் என்று இரண்டு யாதவச்ரேஷ்டர்கள் இருந்தார்கள். அவர்கள் ஓர்வித காரணத்தினால் ராஜ்ய அதிகாரத்தை இழந்தமையால் கல்யாணி, நந்தினி, சுபத்ர என்னும் அனேகவித பசுஜாதிகளை மேய்த்து அவைகளை வளர்த்துக்கொண்டு வருவதே தமக்கு முக்கிய கார்யமென்று கருதி ஓர் பெரிய பசுக் கூட்டத்தைச் சேர்த்து அவைகளை மேயச்செய்து யமுனையில் நீர் ஊட்டி ப்ரந்தாவனம் என்னும் அழகிய வனத்தில் வஸித்துவருகையில் அந்த வடமதுராபுரியில் வஸிக்கும் வஸுதேவருக்கும் தேவகீதேவிக்கும் எட்டாவது குமாரனாய் அவதரித்த ஸ்ரீகிருஷ்ணனை கம்ஸனிடமிருந்து காப்பாற்றி வைக்க வேண்டுமென்ற கருத்தினால் அந்த வஸுதேவர் இந்த நந்தனுடைய அரண்மனையில் வளரும்படி விட்டுச் சென்றார். அன்றுமுதல் சிலகாலம் வரையில் ஸ்ரீ கிருஷ்ணனும் அவரது தமயனாகிய பலராமனுடன் கூடி அந்த கோகுலத்தில் வளர்ந்து வந்தார்.

அத்தருணத்தில் இந்த ஆபீர தேசத்தில் வஸிக்கும் சில இடையர் கள் தங்களுக்கு உறவினராயும் அதிகாரியுமான நந்தனிடம் சென்று ''ஓ நந்தரே! எங்களது ஆபீர தேசத்தில் ஆயிரக்கணக்கான அழகிய பசுக் கூட்டங்கள் இருக்கின்றன. அவைகளின் ஸமீபத்தில் உமது குமாரர் இருவரும் சிலகாலம் வந்திருக்கும்படி நீங்கள் அவர்களை அனுப்ப வேணும்.'' என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்களின் வேண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோள்படி நந்தனால் அனுப்பப்பட்ட கிருஷ்ணன் இந்த ஆபீரதேசத்தில் ஒவ்வொரு இடைச்சிகளும்[4] அழகிய பாட்டை பாடிக்கொண்டு தயிர் கடையும்போது அவர்களது தயிர் பால் வெண்ணெய் முதலியவை களை உட்கொண்டும் அந்தப் பசுக்கூட்டங்களை மேய்த்தும் சிலகாலம் இந்த தேசத்தில் வாஸம் செய்தார். அதுமுதற்கொண்டு இந்ததேசத் திற்கு சிறந்த செல்வமும் ஸௌக்யமும் உண்டாயிற்று. இப்பொழுதும் இந்த தேசத்தில் அனேக தனவான்களும் பசுக்களை வெகு ஆதரவுடனே வளர்த்துக் கொண்டு பசுக்களை ஹிம்ஸை செய்யாதபடி தகுந்த ஏற்பாடு செய்து வருவதுடன் பசுமடம் என்னும் தர்மசத்திரம்கட்டி கிழப்பசுக் களுக்கும் நாதனில்லாத பசுக்களுக்கும் உணவு கொடுத்து ரக்ஷித்து வருகிறார்கள்.

இந்ததேசத்து ஸ்திரீகள் பாட்டில் விசேஷ விச்வாஸம் வைத்தவர்கள். இந்த தேசத்தாருக்கு காலம், டம்பம், அஹங்காரம், கோபம் முதலிய கெட்ட குணங்கள் பெரும்பாலும் கிடையாதென்று தெரியவருகிறது.

நமது தென்னிந்தியாவில் வஸிக்கும் மாதர்கள் அணியும் ஆபரணம் போல் இந்த ஆபீர்தேசத்து ஸ்திரீகள் ஆபரணம் அணி வதில்லை. ஆனால் காதுகளிலும், கால்களிலும், கைகளிலும் தங்கம் வெள்ளி முதலிய ஆபரணங்களை மிகவும் பெரிய உருவமுடையதாய் அணிந்து வருகிறார்கள். இந்த தேசம் முதல் கூர்ஜரம் மஹாராஷ்ட்ரம் ஸால்வம் முதலிய சிலதேசங்களில் ஸ்திரீகள் விசேஷமாய்த் தெருக்களில் வராமல் வீட்டிற்குள்ளே (கோஷாவாக) பெரும்பாலும் வசித்து வருகிறார்கள்.

❄

அடிக்குறிப்புகள் :

1. Part of Rajputana Country.
2. சந்திர வம்சத்திலுதித்த யது என்னும் அரசன் முதற்கொண்டு அவரது வம்சத்திலுதித்தவர்களுக்கு யாதவன் என்று பெயர் உண்டாயிற்று. இவ் வித யாதவர்களின் சரித்ரத்தை மஹாபாரதத்தில் விபரமாய்க் காண்க.
3. பலராமர் பிம்பம் சென்னைப்பட்டணம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் கர்ப்பக்ருஹத்தில் இருந்து வருகிறது.
4. இவர்களின் உத்தம குணங்களைப் பற்றி வேதாந்ததேசிகர் தமது யாதவாப்யுத காவ்யத்தில் விசேஷமாய் கூறியிருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸால்வதேசம்

அத்யாயம் – 22

இருப்பிடம்

ஸால்வதேசமானது ஆபீர தேசத்திற்கு வடக்கிலும் விராட, சூரசேன தேசங்களுக்கு மேற்கிலும் சதத்ரு நதியின் தென்பாக பூமியில் தங்கியிருக்கிறது. இது மிகவும் சிறியதேசம். ஆகிலும் இந்த தேசத்தின் மண்குணம் வளப்பம் முதலியது மிகவும் சிறந்ததேயாகும். இதில் விசேஷ மலைகளும் காடுகளும் மேடு பள்ளங்களும் எங்குமே கிடையாதென்றே சொல்லலாம்.

நதி

விபாசா நதியும் சதத்ரு நதியும் மத்ஸ்ய தேசத்தைக் கடந்தபிறகு ஒரு பெரிய நதியாய்ச் சென்று பெரும்பாலும் இந்த தேசத்தின் பூமியை செழிக்கச் செய்து பிறகு சிறியதாகி ஸிந்து நதியுடன் சேருகிறது. அவ்விடத்தில் தக்ஷிணவிபாசாநதி எனப்படும்.

விசேஷம் : ஜனங்களின் குணம்

இந்த தேசத்தில் பட்டு, கரும்பு, புஷ்பச் செடிகள், பயிர்கள், த்ராக்ஷை முதலிய இனியபழ வர்க்கங்களும் ஏராளமாய் உண்டு. இந்த தேசத்தில் அனேக ஜைனர்கள் வெகுநாளாய் வஸித்து வருகிறார்கள். அவர்களின் பூர்வீகர்கள் நிர்மாணித்த பெரிய கட்டடங்களும் இப்பொழுதும் உறுதியாய் நிலைபெற்று இருந்து வருகின்றன.

இந்த தேசத்தின் ப்ரதான நகரத்திற்கு கரவீரபுரம் என்று பெயர். அழகிய கோட்டையினால் இது சூழப்பட்டு வருகிறதாகவும் ஏற்படு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிறது. இந்த தேசத்தில் அனேகர் வர்த்தகர்களாகவேயிருக்கிறார்கள். கூர்ஜா தேசவாஸிகள் போலவே மிகவும் செல்வமுடையவர்கள், அழகிலும் கணக்கிலும் சிறந்தவர்கள். ஓர் பெரிய கஷ்டமான கணக்குகளை இந்த தேசத்தில் படித்தவர்கள் வாயினாலேயே ஒரே நிமிஷத்தில் கூட்டி தகுந்த பொருள் சொல்ல வல்லவர்கள் என்பது எங்கும் ப்ரஸித்தம்.

❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸிந்துதேசம்

அத்யாயம் – 23

இருப்பிடம் : பூமியின் ஸ்வருபம்

[1]ஸிந்துதேசமானது[2] வநாயுதேசத்திற்கு தெற்கிலும் ஆபீரதேசத்திற்கு மேற்கிலும் ஸௌவீர தேசத்திற்கு வடக்கிலும் பாரியாத்ரம் என்னும் குலபர்வதத்தின் மேற்கு அணிவரையிலும் மஹாமலையின் தென்மேற்குத் தொடர்ச்சி வரையிலும் பரவி மிகவும் நீண்டு அகலம் கொஞ்சம் குறுகியதாய் இருக்கிறது.

இந்த தேசத்தின் மண் பெரும்பாலும் குளிர்ந்ததாகவே இருக்கும். இந்த தேசத்தில் கிழக்கிலிருந்து தென்மேற்கு முகமாய் ஓடும் ஸிந்து நதியின் இருகரையும் களி மண் பூமியாகவே இருக்கும். இவ்விதமான களிமண்பூமி யமுனையாற்றின் இருகரைகளில் சில விடங்களிலும் விந்த்யமலையின் ஓரங்களிலும் இதுபோலவே ப்ரபாஸ தீர்த்தம் கோகர்ணம் முதலிய இடங்களிலும் செம்மண் பூமியாக காணப்பட்டு வருகிறது.

மலை : விஷஜந்துக்களின் வாஸம்

இந்த ஸிந்துதேசத்தின் தென்மேற்கு மூலையில் முன் சொன்ன பாரியாத்ரமலை தவிர நீலகிரி என்று ஒரு மலை இருக்கிறது. இந்த மலையின் நான்கு புறத்திலும் சில யோஜனை தூரம் வரையில் அடர்ந்த காடுகளும் அவ்விதக் காட்டில் முட்செடிகளும், மூங்கில், கடம்பு, வனத்தாழை என்னும் காட்டுத்தாழை, திந்துகம், பூர்ஜம், வேலை, காட்டுத் துளி[3], இலுப்பை முதலிய பலவித விருட்சங்கள் நெருங்கியதாயுமிருக்கின்றன.

மேலும் இந்தக் காடுகளில் மலைப்பாம்பு, பெரும்பாம்பு, கடிபாம்பு, இருதலைப்பாம்பு, ஐந்து தலைநாகம் முதலிய ஸர்ப்ப ஜாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

களும் கொடுந்தேள் என்னும் நண்டு வாய்த்தேள், ஜலமண்டரி, பதினாறுகால்[4] தேள் முதலிய கொடிய துஷ்ட ஜந்துக்களும், பெரிய யானைகளும், கரடி, புலி முதலிய மிருகங்களும் எவ்விடத்திலும் பரவி கூட்டங் கூட்டமாய் உலாவுகின்றன.

நதி

இமயமலையில் உற்பத்தியாகி தெற்குமுகமாய் வரும் ஸிந்து நதியானது இந்த ஸிந்துதேசத்தின் கிழக்குத்திக்கில் ஓடிவருமிடத்தில் தான் ஐராவதி நதியும் விபாசா நதியும் சேருகின்றன. முதலில் ஐராவதியும் அதற்குச் சற்று தெற்கில் விபாசா[5] நதியும் இந்த தேசத்தின் முக்கிய நதியாகிய ஸிந்துவுடன் சேர்ந்தோடுகின்றன.

இவைகள் தவிர, முன்சொன்ன நீலகிரி என்னும் மலையிலிருந்து சில சிற்றாறுகள் கிளம்பி கிழக்குமுகமாய் ஓடி ஸிந்துவில் வீழ்கின்றன. அவைகளுள் படலாவதீ என்பதே மிகவும் பெரியதாயும் அதிக ஆழமுடையதாயுமிருக்கும்.

பன்றி, குதிரைகள் மிகுதி

இந்த தேசத்தின் மேற்கு பாகத்திலும் தென்மேற்கு பாகத்திலும் வளர்ந்தோங்கிய காடுகளிலும் ஸிந்து நதியின் கரையில் சிற்சில இடங்களிலும் காட்டுக் குதிரைகள் விசேஷமாய் மேய்ந்து உலாவும். காட்டுப் பன்றிகளும், முள்ளம் பன்றிகளும் நூற்றுக்கணக்காய் சில ஸமயங்களில் இந்த தேசத்திலிருக்கும் கிராமங்களில் நுழைந்து ஜனங்களுக்கு பயத்தையும் அபாயத்தையும் உண்டு பண்ணும். இவ்வித உபத்ரவத்தை தடுப்பதற்காக இவ்வித கொடுமைகளை அனுபவிக்கும் ஜனங்கள் பயிரை அழிக்கும் பன்றிகளையும், கரடி முதலியவைகளையும் பிடிப்பதற்கும் கொல்லுவதற்கும் தகுந்த உபாயங்களையும் வலைகளையும் அங்கங்கு ஒளித்து வைத்திருப்பார்கள்.

விசேஷம் : ரகுமஹாராஜன் திக்விஜயம் செய்தது

முன்பு ஒரு காலத்தில் உத்தரகோசல ராஜனான ரகு மஹாராஜன் யுத்தயாத்ரை புறப்பட்டு ப்ரதக்ஷிணமாய் பரதகண்டத்தை சுற்றிவந்து தண்டகாருண்யத்தின் தென்மேற்கு மூலையின் கோணத்திலிருக்கும் அபராந்தமலையின் காடுவழியாய் தனது ஸேனையை நடத்தி அந்த அபராந்தமலைக் காட்டைக் கடக்க வடக்கு நோக்கி செல்லுங் காலையில் இந்த ஸிந்துமதி ஸங்கமமாகும் மேற்கு கடற்கரையில் தங்கினான். அவனது ஸேனையிலிருந்த குதிரைகள் இந்த ஸிந்து நதியின் கரையில் இருபுறத்திலும் ஏராளமாய் முளைத்திருக்கும் குங்குமப்பூச் செடிகளில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புரண்டு தங்களது நீண்ட கழுத்தில் ஒட்டிக் கொண்ட குங்குமப்பூ[6] தூள்களை உதறிக் கொண்டன.

ஆகையால் பாஹ்லிக தேசத்திலும் சேதி தேசத்திலும் குங்குமப் பூச்செடி, உத்தமமான குதிரைகள், வெண்மையான பசுக்கள் அதிகமாய் உண்டு என்னும் விஷயமும்[7] தெரியவருகின்றது.

க்ஷேத்ரம்

இந்த தேசத்தின் தென்மேற்கு மூலையில் கடற்கரை ஓரத்தில் மூன்றுபக்கங்களிலும் கடலாற் சூழப்பட்ட துவாரகா என்னும் திவ்ய நகரமிருக்கிறது. இந்த நகரத்தை முன்பு ஸ்ரீகிருஷ்ண[8] பகவான் ருக்மணி முதலிய அஷ்டமஹஷீ ஸமேதராய் அரசுபுரிந்து சகல ஜனங்களுக்கும் துன்பம் செய்த துஷ்ட ராஜாக்களை ஸம்ஹாரம் செய்து சிஷ்டர்களை பரிபாலனம் செய்து பாண்டவர்களுக்கு ஸஹாயமாய் மஹாபாரத யுத்தத்தை நடத்தி நமக்கும் உஜ்ஜீவனார்த்தமாய் கீதையையும்[9] வெளியிட்டு ரக்ஷித்தார்.

❋

அடிக்குறிப்புகள்:

1. இப்பொழுது வழங்கப்படுகிற (Sind) தேசத்தில் அடங்கி இருக்கிறது.
2. ஸிந்து என்று பெயர்பெற்ற அரசன் இந்ததேசத்தை வெகு க்யாதியுடன் ஆண்டுவந்த காலம்முதல் இதற்கு ஸிந்துதேசம் என்று பெயர் வழங்கலாயிற்றே தவிர இந்த தேசமானது ஸிந்து நதியின் கரையில் இருப்பதால் இந்தப் பெயர் உண்டாயிருக்குமோ என்று நினைப்பது பொருந்தாது.
3. இதற்கு கருநாகைமரம் என்று சிலர் பொருள் உரைப்பார்கள்.
4. பதினாறு கால்தேள் என்பதை கல்தேள் என்பாருமுண்டு.
5. இப்பொழுது (Bias) என்பதுதான் இந்த நதி என்று ஊஹிக்க வேண்டியிருக்கிறது.
6. இதன் விபரத்தை ரகுவம்சம் புஸ்தகத்தில் பார்க்கவும்.
7. இப்படிப்பட்ட மற்றைய விசேஷங்களை மஹாபாரத புஸ்தகத்தில் காணலாம்
8. இப்பொழுதும் இந்த இடத்தில் கிருஷ்ணன் கோயில் இருப்பதாக ஏற்படுகிறது.
9. இதன் வ்ருத்தாந்தங்களை பாகவத புஸ்தகத்தில் பார்க்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸௌவீரதேசம்

அத்யாயம் – 24

இருப்பிடம் : பூமியின் ஸ்வருபம்

[1]ஸௌவீரதேசமானது[2] ஸிந்து தேசத்திற்குத் தெற்கிலும் மாளவ தேசத்திற்கு வடமேற்கிலும் மண்ணும் மணலும் கற்பாறைகளும் கலந்த பூமியில் இருக்கிறது.

இந்த தேசமானது ஸிந்து நதியை எல்லையாக வைத்துக் கொண்டும் தென்மேற்கில் மேற்கு கடற்கரையில் ஓங்கி வளர்ந்த பாரியாத்ரம் என்னும் மலையின் அடிவாரம் வரையிலும் பரவியும் அதற்கும் தென்கிழக்கிலிருக்கும் த்ரிகூட மலையின் வடமேற்கு பாகம் முழுமையிலும் பரவி ஓர் பெரிய பூமியில் வெகுதூரம் நீண்டு இருக்கிறது. இந்த தேசத்தின் பூமி மட்டமானது ஸிந்து நதியின் கரையில் தாழ்ந்தும் அதற்கு தென்மேற்கிலும் தென்கிழக்கிலும் பாரியாத்ரம், த்ரிகூடம்[3] இவைகளின் பீடபூமிவரையில் மேன்மேலும் உயர்ந்தும் இருக்கிறது. அதாவது இந்த தேசபூமி மட்டமானது; மூன்று பக்கங்களில் உயர்ந்தும் மேற்கு பாகத்தில் மாத்திரம் தாழ்ந்தும் சரிவாய் இருப்பதால் இந்த தேசத்தில் பெய்யும் மழை ஜலம் பூராவும் ஸிந்துவுடன் சேருவதுமன்றி பாரியாத்ரமலைச் சுனைத்தண்ணீரும், த்ரிகூட மலையின் சிற்றாறுகளும் ஸிந்து ஜலத்திலேயே கலந்தோடக் கூடிய நிலைமையிலிருக்கிறது.

மலை

இந்த தேசத்தின் தென்மேற்கில் பாரியாத்ரம் என்னும் குலபர்வதமும் தென்கிழக்கில் த்ரிகூடம் என்னும் பர்வதமுமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முக்ய மலைகளாகும். இது தவிர இந்ததேசத்தின் வடகிழக்கில் விதர்ப்பதேசத்தின் ஸமீபத்தில் தேவகிரி[4] என்ற ஒரு மலையுமுண்டு.

நதி

இந்த ஸௌவீர தேசத்திற்கும் ஸிந்து நதியே முக்ய நதி. அன்றியும் முன்சொன்ன தேவகிரி என்னும் மலையிலிருந்து ஒரு சிறிய நதி உற்பத்தியாகி இந்த தேசத்தை குறுக்காகத்தாண்டி ஸிந்து நதியுடன் கலந்து செல்லுகிறது.

விசேஷம் : இந்த தேசத்தின் பெயர் ஏற்பட்டதன் காரணம்

இந்ததேசத்திற்கு ப்ரஸ்ம்பதி அதிபதியாக கூறப்பட்டிருக்கிறது.

குருதேசத்தின் பிரதான நகரமாகிய ஹஸ்தினாபுரத்தின் அரசாட்சியை சந்த்ரவம்சத்தரசர்கள் அடைவதற்கு முன்னமே ஸுவீரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவ்வரசன் இந்த தேசத்தில் தனது பிரதான நகரமாகிய ராஜதானியை ஏற்படுத்திக் கொண்டு விந்தியமலை முதல் இமயமலை வரையில் அடங்கிய நாற்பது தேசங்களையும் ஏக காலத்தில் ஆண்டுவந்தான். ஹஸ்தினாபுரத்தை சந்த்ரவம்சத்தரசர்கள் ராஜதானியாக அடைந்த பிறகும் அந்த சந்த்ரவம்சத்தரசர்களும் இந்த ஸௌவீர தேசத்தின் நிலைமையை[5] நன்றாய் யோசித்து தங்களுடைய ஸேனைகளையும் அனேகமாய் இத்தேசத்திலேயே அமைத்து வைத்தார்கள். ஏனெனில் சிற்பசாஸ்த்ர முறைப்படி ராஜதானிக்குத் தென்மேற்கு திக்கில்தான் ஸைன்யங்களை வைக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. தனுர்வித்யையில் பாண்டியத்யம் (தேர்ச்சியை) பெற்ற பீஷ்மர், த்ரோணர், க்ருபர் இவர்கள் இந்த ஸௌவீர தேசம், விடாரதேசம் இவைகளில் தான் ஆரம்பத்தில் வில்வித்தை உபதேசம் பெற்றார்கள்.

❋

அடிக்குறிப்புகள் :

1. இதுவும் இப்பொழுதுள்ள ஸிந்து (Sind) தேசத்தில் அடங்கி இருப்பதாகத் தோன்றுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. ஸுவீரன் என்னும் அரசன் இந்த தேசத்தை அதிக க்யாதியுடன் பரிபாலனம் செய்ததுபற்றி அவன் காலம் முதற்கொண்டு இந்த தேசத்திற்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

3. இந்த மலையின் உச்சியில் மூன்று மலைச்சிகரங்கள் போல் எழுச்சி தோன்றுகிறபடியால் அதுபற்றி இதற்கு திரிகூடம் என்று பெயர் உண்டாயிற்று.

4. பாஞ்சால தேசத்தின் வடக்கில் இமயமலைச் சார்பில் சதத்ரு என்னும் நதி உண்டாகும் இடத்தில் ஹ்ருஷீகேசம் என்று ஒரு ஷேத்ரமுண்டு. அதில் ஸ்ரீவிஷ்ணு ஆவிப்பவிர்ப்பதற்கு முன்னமே இந்த மலையில் ஒரு ஸமயம் பகவான் வாஸம் செய்ததுபற்றியும் அவ்விடத்தில் தேவர்கள் அவரைப் பூஜித்தது பற்றியும் இதற்கு தேவகிரி என்று பெயர் உண்டாயிற்று. தற்கால டிவாகர் (Dewagar) ஆக இருக்கலாம்.

5. இந்த தேசத்திற்கு மேற்கில் ஸிந்து ஓடுகிறபடியால் நதி அடைப்பும், தென்மேற்கில் கடல் இருப்பதால் கடல் அடைப்பும், தென்கிழக்கில் த்ரிகூடமலையிருப்பதால் மலை அடைப்பும் இவ்விதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியால் இந்த தேசத்தில் ஒரு பக்கத்தை மாத்திரம் தமது ஸேனைக்கு வழியாயும், மற்றபக்கம் நுழையவொட்டாதபடி ஸேனைவைக்கும் பூமியாக்கிக் கொள்ளும் தன்மையை யோசித்து என்று பொருள் கொள்ள வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாரஸீகதேசம்

அத்யாயம் – 25

இருப்பிடம் : கால்நடைகளின் விசேஷம்

[1] பாரஸீகதேசமானது[2] பர்பர தேசத்திற்கு மேற்கிலும் காந்தார தேசத்திற்கும், கிராத தேசத்திற்கும் தென்மேற்கிலும் ஸமபூமியாய் மிகவும் விசாலமுள்ளதாயிருக்கிறது.

இந்த தேசமானது தகுந்த உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் எப்பொழுதும் அடையாமல் ஓர் விதமான குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருப்பதால் இதில் வ்ஸிக்கும் ஜனங்களும் பசு, ஆடு, எருமை, கரடிகளும் வெண்மை நிறமுடையதாகவே பெரும்பாலும் காணப்படும்.

நதி

பாரஸீக தேசத்தில் முக்யமான நதி ரதசித்ரை[3] என்பதே. இந்த முக்ய நதியானது பின் விவரிக்கப்படும் எல்லையிலிருந்து கிழக்கு முகமாய் ஓடி இத்தேசத்தில் பூமியை பெரும்பாலும் செழுப்பித்து பர்பரதேசத்தின் மேற்கு மலையின் நீர்ச்சுனையில் சுருங்கிய உருவத்துடன் வீழ்ந்து விடுகிறது.

மலை

இந்த தேசத்தின் தெற்கில் மஹாமலைத் தொடரும், வடக்கில் கிராத தேசத்தின் பெருமலையும், கிழக்கில் ப்ர்பரதேசமலைகளும் இருக்கின்றன. இத்தேசத்தின வடக்கில் மஹாமலையை ஒட்டியது போலவே ஒரு மலை உண்டு. அந்த மலையுடன் இந்த பரதக் கண்டம் முடிவு பெறுகிறது. அதற்கு அப்புறம் உள்ள பூமி புண்யபூமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அல்லவென்று ஏற்பட்டிருக்கிறது. இது காரணம் பற்றியே இந்த மலைக்கு ஸீமாமலை என்றும் எல்லைமலை என்றும் தேசபாஷையில் வழங்கி வருகிறார்கள்.

விளைபொருள் : கோரைப் புல் மிகுதி ரத்னம் குதிரை

இந்த தேசத்தில் முக்யமாய் ரதசித்ராநதியின் இரு கரையிலும் செழிப்பான தோட்டங்களும் சோலைகளுமுண்டு. இதுபோலவே மூங்கில், பிரம்பு, ஜம்புக்கோரை, ஏரகடக்கோரை, கடம்பு முதலியவைகளும் அடர்ந்த காடுகளும் வளர்ந்தோங்கி வருகின்றன. இவைகளில் தேக்கு, பலா, திந்துகம், பூர்ஜரம் முதலிய மரங்களே அதிகமாய்த் தோன்றும்.

இந்த தேசத்துக் காடுகளில் பச்சைக்கிளி, பஞ்சவர்ணக்கிளி, குயில், மயில், ஆடுங்குருவி, நற்குருவி, சிறுகுருவி, ஊர்க்குருவி முதலிய அனேகவித பக்ஷி ஜாதிகள் இடைவிடாமல் ஸுகமாய் வஸிக்கின்றன. இந்த தேசத்தில் மிருதுவான மண்புலப்படும் மலைச்சாரல்களில் மரகதப்[4] பச்சைக்கற்களும் கோமேதகமும் உண்டாகின்றன.

இந்த தேசத்தின் மேற்குதிக்கில் உயர்ந்த ஜாதிக் குதிரைகள் அனேகம் உண்டு. யானைகளும் அனேகம் வஸிக்கின்றன. ஆகிலும், இந்த தேசத்தின் காட்டில் வஸிக்கும் யானைகள் அற்பபுத்தி உடையதாகவே இருக்கும்.

நகரம் : புராதன சின்னங்கள் உள்ளன

நெடுநாளாய் இந்த தேசத்தை யவனர் என்னும் வெண்மைநிறத் துருக்கர்களே ஆண்டுவந்ததாகத் தெரிய வருகிறது. முன் ஒருகாலத்தில் அயோத்யா நகரத்தை அரசுபுரிந்த ரகு[5] மஹாராஜன் திக்விஜயம் செய்து வருகையில் இந்த தேசத்தரசனுடன் பல்லாயுதச்[6] சண்டை நடந்த போது இந்த துருக்க அதிபதியை யுத்தத்தில் ஜயித்து தனக்கு அடிமையாகச் செய்து கொண்டான். இந்த தேசத்தில் ரகுமஹாராஜன் துருக்க அரசனுடன் சண்டை செய்த இடங்களும் மேடுபள்ளங்களும் ஆயிரக்கணக்காய் துருக்கர்கள் மடிந்த இடமும் இப்பொழுதும் காண்பிக்கப்படுகின்றன.

❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடிக்குறிப்புகள் :

1. தற்காலத்தியபெர்ஸியா (Persia) தேசத்தில் அடங்கி இருக்கும்.

2. பாரஸீகன் என்னும் அரசன் பகைவர்களை வென்று இந்த தேசத்தை மஹிமையுடன் அரசாண்டதின் காரணமாக அது முதல் இதற்கு பாரஸீகம் என்று பெயர் வழங்கலாயிற்று.

3. ரதம் என்றால் தேர். சித்ரா என்பது தேவதாஸ்திரீயின் பெயர். இவளை ஒரு அஸுரன் தனது ரதத்தில் வைத்துக் கொண்டு இந்த தேசத்துக்கருகில் கொண்டு வருகையில் அவளை இச்சித்த மற்றொரு அஸுரனுக்கும் இவனுக்கும் சண்டைஉண்டானபொழுது அந்த தேவதாஸ்திரீ கொல்லப் பட்டாள். அந்த ஸமயத்தில் இவள் பிரார்த்தித்துக் கொண்டபடி இவளுடைய சரீரத்திலிருந்து பெருகிய உதிரம் இந்த ரத சித்ரா என்னும் நதியாக உண்டாயிற்றென்றும், இந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால் விசேஷபலன் உண்டாவதென்றும் ஏற்படுகிறது.

4. இப்படி இவ்விடத்தில் இந்த பச்சைக்கல் கோமேதகம் உண்டாகும் விபரத்தை அகஸ்த்யர் ஸோமராஜன் செய்த சத்யாபீக்ஷை புஸ்தகத்தில் பார்க்கலாம்.

5. இதன் விபரத்தை காளிதாஸ மஹாகவிசெய்த ''ரகுவம்சம்'' என்னும் புஸ்தகத்தில் பார்க்கலாம்.

6. சல்லடை (நெல் சலிக்கும் கருவி) போல் உருவமுடையதாயும் அதன் குறுக்கிலும் நெடுக்கிலும் கூர்மையான சிறு கத்திகளை உடையதாயுமிருக்கிற ஓர்வித ஆயுதத்திற்கு ஸம்ஸ்கிருதத்தில் பல்லம் என்று பெயர். இவ்வித பல்லாயுதங்களினால் ரகுமஹாராஜன் இந்த தேசத்து துருக்கர்களுடைய தலைகளை அறுத்து தேன் அடைபோல் பூமியில் பரப்பினான் என்பதையும் ரகுவம்ச புஸ்தகத்தில் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வநாயுதேசம்

அத்யாயம் – 26

இருப்பிடம் : பூமியின் நிலைமை

[1]வநாயுதேசமானது பர்பாதேசத்திற்கு தெற்கிலும் ஸிந்து தேசத்திற்கு வடக்கிலும் ஸிந்து நதியின் மேற்குக் கரையில் சதுரமான பூமியில் அடங்கியதாய் இருக்கிறது.

இந்த தேசத்தின் பூமி மட்டமானது மேற்கு திக்கில் இருக்கும் மலையின் அடிப்பாகத்தில் மிகவும் உயர்ந்தும் கிழக்கு முகமாய் கொஞ்சம் தாழ்ந்தும் முடிவில் கிழக்கு திக்கில் இந்த தேசத்தின் எல்லைப்புறமாக ஓடும் ஸிந்து நதியின் சமீபத்தில் சரிவாகவும் காணப்படுகிறது. இந்த தேசத்தில் மண்பாகமுள்ள பூமியைக் காட்டிலும் மணல்பாகமுள்ள பூமியே அதிகமாய்த் தோன்றுகிறது.

மலை :நீர்ப்ராணிவாஸம் செய்வது

இந்த வநாயுதேசத்தின் வடக்குதிக்கில் சகம், கக்ஷம், என்னும் இரண்டு பெரிய மலைகள் உண்டு. இவ்விரண்டு மலைகளும் மேற்கில் நீண்டு மஹாமலையடிவாரத்துடனே கலந்து இருக்கின்றன.

இவ்வித மலைகளிலும் இதற்கு நாயகன் போல விளங்கும் மஹாமலையின் தென்மேற்கு பாகங்களிலும் மேற்கு கடற்கரை ஓரத்தில் சிலஸமயங்களில் கடலில் சஞ்சரிக்கும் சில நீர் ப்ராணிகள் தங்கியிருக்கும். இதுபோலவே கூர்ஜா தேசத்தின் மேற்குபாகத்தின் கடற்கரையிலும் கர்னாடக தேசத்தின் வடமேற்கு திக்கில் இருக்கும் கோகர்ண க்ஷேத்திரத்தின் ஸமீபத்திலும் ராமேச்வரத்தின் சமீபத்திலும் ஸேதுவிலும் சிலவித ப்ராணிகள் ஸஞ்சாரம் செய்வதுண்டு.

நதி

இத்தேசத்தின் வடபுறத்தில் மிகவும் உயர்ந்தோங்கிய சகம், கக்ஷம் என்னும் மலைகளிலிருந்து கன்யகா என்னும் சிற்றாறு ஒன்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உண்டாகி இத்தேசத்தின் தெற்குமுகமாய் ஓடி பிறகு கிழக்கு முகமாய்த் திரும்பி ஸிந்து நதியுடன் சேருகிறது.

விசேஷம்: குதிரைகள் மிகுதி

இந்த வநாயு தேசத்திலும் ஸிந்து, ஆபீரம், பாஹ்லிகம், சேதி, மத்ஸ்யம், குந்தலம், குந்தி, துரஸேனம் என்னும் இந்த எட்டு தேசங்களிலும் நல்ல லக்ஷணம் பொருந்திய குதிரைகள் விசேஷமாய் அங்கங்கு காடுகளிலும் ஸிந்துநதிக்கரையிலும் மிகவும் உல்லாஸமாய் உலாவுகின்றன. இப்படிப்பட்ட தேசங்களில் உண்டான குதிரைகளுக்கு எவ்வித குணம் என்றால், இவ்விதக் குதிரைகள் பெரும்பாலும் வெண்மை நிறமுடையதாயும் நீண்ட காதுகளையும், அகன்ற கண்களையும், பருத்த பின்கால்களையும் உடையதாயிருக்கும். சிகப்பு நிறமுடைய குதிரைகளும் சில உண்டு. இவ்வித சிகப்புக்குதிரைகளின் நெற்றியில் நக்ஷத்ரம் போன்ற வெண்மை மயிர்க்குறியும் முத்துமாலை போன்ற மயிர்ச்சுழியும் ''தேவமணி'' என்னும் கழுத்துச் சுழியும் நன்றாய்க் காணப்படும். வேறு ஒரு விதநிறமில்லாமல் உடம்பு முழுமையிலும் வெண்மை நிறமுடைய குதிரைகளும் உண்டு. இவைகளுக்கு ''கர்க'' குதிரை என்று பெயர். இது மிக்க உயர்ந்த ஜாதியாகும். முன் சொன்னபடி வெளுப்பு சிகப்பு இவ்விரண்டுவித ஜாதிக் குதிரைகளை இவ்வெட்டுத் தேசங்களிலும் விசேஷமாய்ப் பார்க்கலாம்.

இவ்விதக்[2] குதிரைகள் விபுலம், அர்த்தபுலாயிதம், வேகம், மந்தகமனம், நடனம் முதலிய பலவித நடைகளில் மிகவும் சிறப்புடைய குணம் பொருந்தியதாயும் எஜமானனுடைய வேலைகளையும் அவன் கருத்தையும் நன்றாய் அறிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி நடந்து கொள்ளக்கூடிய குணமுடையதாயும் அதிகபலத்தையும், அதிக வயதையுமுடையதாயுமிருக்கும்.

❄

அடிக்குறிப்புகள்:

1. இந்ததேசம் ஸிந்து (Sind) தென்கிழக்கில் கீழ்புறத்திய தேசத்தில் அடங்கி இருக்கிறதென்று தோன்றுகிறது.
2. இவைகளின் மற்ற விவரங்களை கர்கர் என்பவருடைய புத்திரராகிய கணர்செய்த அச்வசாஸ்திரம் மற்றும் பாண்டவர்களில் ஒருவனாகிய நகுலன் இயற்றிய அச்வலக்ஷணம் மாகம், இவைகளில் பார்க்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பர்பரதேசம்

அத்யாயம் – 27

இருப்பிடம் : பூமியின் ஸ்வருபம்

[1] பர்பரதேசமானது காந்தார தேசத்திற்கு நேர் தெற்கில் சதுரமான அளவையுடையதாய் ஸிந்துநதியின் மேற்குக் கரையில் இருக்கிறது. ஆகிலும் இந்த தேசத்தில் பெரும்பாகங்களில் ஸமவெளியில்லாமல் கொஞ்சம் கொஞ்சம் மேடு பள்ளமாகவும், தாழ்ந்த மடுக்களும், ஆழ்ந்த நீரோடைகளும் இருக்கின்றன. இவ்வித நீரோடைகளின் அடியில் சுக்கங்[2] கற்பாறைகள் அதிகமாய் ஊன்றி யிருக்கிறபடியால் இந்த தேசத்தின் கிழக்கில் ஓடும் ஸிந்து நதி ஜலத்தையே பெரும்பாலும் ஜனங்கள் உபயோகித்து வருகிறார்கள்.

மலை, குரங்கு, நாய் மிகுதி

இந்த பர்பரதேசத்தின் வடக்குப் பாகத்தில் பாரியாத்ர மலையின் வடக்குத் தொடர் பாகமும் மஹாமலையின் தெற்குத் தொடர்ச்சி கிளை மலையும் தெற்கு வடக்கில் மிகவும் நீளமுடையதாய் நீண்டு வளர்ந்து சற்றேறக் குறைய விந்திய மலைக்கு ஸமமாகவே தோன்றும். இதில் இந்த மஹா மலையானது பாரஸீக தேசத்தின் வடக்கில் உண்டாகி அனேக இறகுகள் போன்ற தொடர் குன்றுகளுடன் கூடியதாகப் புலப்படுகிறது.

இவ்வித மலைகளில் நீலக்குரங்கு என்னும் கருங்குரங்கு வெண்குரங்கு, சிவிங்கிப்புலி, செந்நாய், காட்டுநாய் முதலிய காட்டு பிராணிகளும் காட்டு ஆடுகளும் விசேஷமாக உண்டு. இவைகளில் அனேகங் குரங்குகள் மனிதர்கள் செய்யும் அனேகவேலையை தாமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்யும் பழக்கத்தை உடையதாயும் மிகப்பெரிய உருவ முடையதாயும் காணப்பட்டு வருகின்றன.

நதி

இந்த பர்பர தேசத்தின் நேர்கிழக்கு பாகம் முழுமையும் ஸிந்து நதி வடக்கிலிருந்து தெற்கு முகமாய் ஓடிவருகிறது. இமயமலையின் நீளத்தில் இருபத்து நான்கின் நாலுபாகத்தில் ஒரு குன்றிலிருந்து இந்த ஸிந்துநதி உண்டாகி அந்த இமயமலையிலேயே மேற்கு முகமாய் வெகுதூரம் ஓடி பிறகு காச்மீர தேசத்தின் வடகிழக்கில் இறங்கி காந்தாரதேசத்தின் கிழக்கு பூமியில் பிரவேசித்து இந்த பர்பரதேசத்தில் ஓடிவருகிறது. இந்த ஸிந்து நதி மிகவும் ஆழமுடையதாயிருக்கிறது. இந்த ஜலம் சரீரத்துக்கு மிகவும் ஆரோக்யத்தை உண்டு பண்ணும்.

விசேஷம் : ஜனங்களின் வ்ருத்தாந்தம்

இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் அழகாயும், புத்தி தீக்ஷண்யமுடையவர்களாயுமிருப்பார்கள்.

❋

அடிக்குறிப்புகள் :

1. இப்பொழுதுள்ள Punjab தேசத்திய வடகிழக்கு கீழ்பாகத்தில் அடங்கியதாகத் தெரியவருகிறது.

2. இந்த தேசத்தில் பெரும் அரசு என்னும் ப்ருஹதச்வத்த மரங்கள் முன்பு ஒரு சமயத்தில் இதில் தவம் செய்த ரோமபாத மஹாராஜாவின் பர்ண சாலையைச் சுற்றிலும் அடர்ந்து இருந்து அம்மரங்களின் இலைகள் பர்பரவென்று காற்றினால் சப்தம் செய்து கொண்டிருந்தமையால் இது காரணம் பற்றி இந்த தேசத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று. 'ரோமம்' என்றால் மயிருக்கும், செல்வத்தை விளைவிக்ககூடிய ஓர்வித அதிர்ஷ்ட ரேகைக்கும் பெயர் என்று ஸாமுத்ரிகாலக்ஷணம் என்னும் க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்வித அதிர்ஷ்டரேகையை வலது காலில் (வலது உள்ளங்காலில்) இந்த ராஜன் உடைத்தா யிருந்ததுபற்றி இவருக்கு ரோமபாதன் என்று பெயர் வழங்கலாயிற்று. இவ்விதமாய் காரணப்பெயர் பெற்ற இந்த ரோமபாத மஹாராஜன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த பர்பரதேசத்தில் ப்ரதான நகரத்தை ஏற்படுத்திக் கொண்டு இமயமலையின் மேற்கு எல்லை முதல் கிழக்கு எல்லை வரையிலும் தெற்கில் விந்தியமலை வரையிலும் இதன் மத்தியில் ப்ரயாகை முதலிய இடங்களில் ஐந்த்ரோபவனம், பச்சிமோபவனம் முதலிய காடுகளில் உலாவுகிற மந்த பத்ரம்ருக என்னும் நல்ல லக்ஷணம் பொருந்திய யானைகளை வேட்டையாடி தனது ஆசார்யனான பாலகாப்யர் என்னும் மஹரிஷியின் உதவியினால் அவைகளை ஸ்வாதீனம் செய்து அந்த மஹரிஷியினால் செய்யப்பட்ட கஜசாஸ்திரங்களையும் யானைப்பாகர் களுக்குக் கற்பித்து ப்ரஸித்தி பெற்று ஆண்டு வந்தான் என்றும் விஷயத்தை பாலகப்யர் செய்த கஜசாஸ்ரத்தில் வனப்ரகரணத்தில் காணவும், அந்த காலத்தில் இவ்வரசன் யானைகளைப் பிடிப்பதற்காக கட்டின, (வெட்டிய) பள்ளங்களையும் இன்னமும் காணலாம்.

3. சுக்கங்கற்பாறை படிந்த இடங்களில் ஊறியஜலமானது ஜனங்களின் தேகத்தை வற்றச் செய்வதுடன் தாகத்தையும் பித்தத்தையும் வளரச் செய்யும் என்பது முதலிய விவரங்களை காச்யபஸம் ஹிதை என்னும் வடமொழி வைத்யநூலில் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிராததேசம்

அத்யாயம் – 28

இருப்பிடம் : காடுகள் மிகுதி

[1] கிராததேசமானது[2] காச்மீரத்திற்கு மேற்கிலும் முன்சொன்ன காந்தாரதேசத்திற்கு தென்மேற்கிலும் இருக்கிறது. இந்த தேசத்தின் பூமி மட்டமானது; பெரும்பாலும் மேடு பள்ளமில்லாமல் ஸமபூமியாக வேயிருக்கும்.

மேலும் இந்த தேசபூமியானது மலைகளிலும் அடர்ந்து வளர்ந் தோங்கிய பெரிய அரண்யங்களினாலும் மூடப்பட்டும் புலி, கரடி, சிங்கம், குரங்கு, மலைப்பாம்பு முதலிய கொடிய காட்டு மிருகங்களி னாலும் சூழப்பட்டுமிருக்கும். இந்த தேசத்தில் பெரும்பாலும் அனேக இடங்களில் எப்பொழுதும் மழை, பனி, குளிர் அதிகமாகவே வீசிக் கொண்டிருக்கும். இந்த தேசத்துப் பனிக்காற்றையும் குளிர் காற்றையும் நல்ல பலமுடையவனும் கூட பொறுத்துக் கொள்வது அரிதேயாகும். இந்ததேசத்தில் ஸூர்யகாந்தி எப்பொழுதும் குறைவாகவேயிருக்கும். இந்த தேசத்து ஜனங்கள் காடுகளிலேயே அதிகமாய் ஸஞ்சரித்துக் கொண்டு அங்கு சுலபமாய் கிடைக்கக்கூடிய உணவுகளை முக்யமானதாய் வைத்துக் கொண்டு நாகரிகத்தன்மையில்லா தவர்களாயும், வீடு, மாளிகை முதலியவைகளில் வஸிக்க மன விருப்பம் அனேகமாய் இல்லாதவர்களாயும் அனேகவித ஆயுதங் களினால் பூமியின் கீழ் பெரிய பள்ளம் தோண்டி அவைகளிலிருந்து பொன் முதலிய சிலலோகங்களைத் தேடி எடுக்கிறார்கள். அனேக ஜனங்கள் வேடர்களாய் காடுகளில் எப்பொழுதும் திரிவார்கள். சிலர் வெகு நல்ல குணத்துடன் நாதன் இல்லாதவர்களுக்கும், ஏழை, பரதேசி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலியவர்களுக்கும் தமக்குரியதில் உதவி செய்து தேறுதல் சொல்லி வருகிறார்கள் என்று தெரிய வருகிறது.

மலை

இந்த கிராததேசத்தின் நேர் வடக்கு திக்கில் இமயமலையின் மேற்குத் தொடர் மலைகளில் ஒரு மலையானது மிகவும் பனியினால் சூழப்பட்டு வெகு உயரமாய் வளர்ந்தும் காடுகளுடன் கூடியும் பார்ப்பதற்கு பயங்கரமாயுமிருக்கும். இதுவும் இமயமலைபோலவே பனிமலையேயாகும்.

நதி

இவ்வித மலையிலிருந்து அனேக சிறுநதிகளும் நீரோடைகளும் மலை ஊற்று என்னும் சார்புத் தண்ணீரும் எப்போதும் இடைவிடாமல் கிழக்கு முகமாகவும் மேற்கு முகமாகவும் சிதறிப்போகிறது. அதில் கிழக்குத் திக்கில் சிதறிப்போகும் ஸகல ஓடை நதி முதலியதும் கொஞ்சம் கொஞ்சமாய் இந்த தேசத்திற்கு வளப்பத்தை உண்டுபண்ணி இந்ததேசத்தின் தெற்கு பாகத்தையும் தென்கிழக்குப் பாகத்தையும் தாண்டி காந்தார தேசத்தின் நடுவில் புகுந்து பிறகு மஹா நதியுடன் கலந்து போகிறது.

விளைபொருள் : கர்ஜூரிப் பழம் மிகுதி

இந்த தேசத்தின் தென் மேற்கிலும் தெற்கிலும் ஏராளமான கர்ஸூரிப்பழத் தோட்டங்கள் இருந்து வருகின்றன. இந்த தேசத்திலுள்ள ஏழை ஜனங்களும் மற்றும் சிலரும் இந்த கர்ஸூரிப் பழத்தையே ஆஹாரமாக உட்கொண்டு காலக்ஷேபம் செய்துவருகிறார்கள்.

❄

அடிக்குறிப்புகள் :

1. தற்காலத்திய (N.W. Frontier Province) தேசத்தில் இது அடங்கி இருக்கிறது.
2. கிராத என்னும் ஸம்ஸ்கிருதத்திற்கு வேடன் என்றும், வில்லி என்றும் அர்த்தம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காந்தாரதேசம்

அத்யாயம் – 29

இருப்பிடம் : பூமியின் ஸ்வரூபம்

[1] காந்தாரதேசமானது காச்மீர தேசத்திற்கு மேற்கிலும் கிராததேசத்திற்கு வட கிழக்கிலும் முன் சொன்ன மத்ரதேசத்திற்கு வடமேற்கிலும் மிகவும் விசாலமாய் அகன்றபூமியிலிருக்கிறது. இந்த பெரிய தேசத்தின் தெற்குபாகத்தில் பதினாறில் ஒரு பங்கு பூமிதான் மண்ணாகவும் விளை பொருள்களுடன் கூடியதாயும் வானத்திற்கு அனுகூலமாயும் இருக்கும். இது தவிர மற்றபாகங்கள் எல்லாம் பெரிய கற்பாறைகளிலும் அடர்ந்த காடுகளிலும் குரூரமான மிருகங் களினாலும் சூழப்பட்டு நடந்து செல்வதற்குக்கூட அஸாத்யமாய் (முடியாமல்) வெகு கடினபூமியாயுமிருக்கும். மேலும் இந்த தேசத்தில் கொஞ்சம் வெயில் காணப்பட்டபோதிலும் வழிகளில் ஜனங்கள் நடந்து செல்ல முடியாமல் வருத்தமடைந்தவர்களாகவேயாவார்கள்.

மலை, காடு, பூனை மிகுதி

இந்த தேசத்தின் மேற்கு எல்லை முழுமையிலும் மஹாமலை யின் தொடர் குன்றுகளேவிசேஷமாய் வளர்ந்து வந்திருக்கின்றன. இந்த குன்றுகளில் அனேகவித காட்டு மரங்களும், நரிகளும் சமரி மிருகம் என்னும் சாமரை மிருகங்களும், புனுகுபூனை, காட்டுப் பூனை, புலி, கரடி, கிரி, பாம்பு, புற்றுப் பாம்பு முதலிய பிராணிகளும் வஸிக் கின்றன.

நதி

இந்த தேசத்தின் மேற்கிலிருக்கும் மஹாமலைத் தொடரிலிருந்து சிறுநதிகளும் உபநதிகளும் அனேகமுகமாய்க் கிளம்பி மேற்கிலிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிழக்கில் வந்து தெற்கு முகமாய் ஓடும் ஸிந்துநதியுடன் கலந்து போகின்றன. இந்தநதியின் ஜலம் பெரும்பாலும் மணல் கலந்ததாகவே இருக்கும்.

விசேஷம் : ஜனங்களின் கல்வியின் பெருமை

இந்த காந்தாரதேசத்தில் வஸிக்கும் ஜனங்கள் பெரும்பாலும் கல்விமான்களாகவும், அங்கம், வங்கம், கோஸலம், பாஞ்சாலம், மஹராஷ்டிரம், பாரஸீகம், ஆந்த்ரம், சோழம் என்னும் இந்த எட்டு தேசங்கள் போலவே ஸம்ஸ்க்ருத சாஸ்திரத்தில் விசேஷ பயிற்சியும் சிறப்பும் உடையவர்களாயும் இருக்கிறார்கள்.

துரியோதனனுக்கு மாமனாகிய சகுனி என்பவன் பாண்டவர்களின் காலத்தில் இந்த தேசத்தை வெகு புகழ்ச்சியாய் ஆண்டு வந்ததாகவும் பிறகு சில துலுக்க (துருஷ்க) அரசர்களின் ஆளுகைக்குட் பட்டதாகவும் ஏற்படுகிறது.

❋

அடிக்குறிப்புகள் :

1. இது தற்காலத்திய (N.W. Frontier Province) தேசத்தின வடமேற்கு பாகத்தில் அடங்கியதாகத் தெரியவருகிறது.

2. இதன் மற்றைய விபரங்களை பார்க்கவபுராணத்தில் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மத்ரதேசம்

அத்யாயம் – 30

இருப்பிடம் : தேச அமைப்பு அலங்காரம்

[1] மத்ரதேசமானது[2] காச்மீர தேசத்திற்கு தென்மேற்கிலும், தெற்கிலும், கேகய தேசத்திற்கு நேர் மேற்கு திக்கிலும் அழகிய வனங்களினால் அலங்கரிக்கப்பட்ட பூமியிலிருக்கிறது. இந்த தேசத்தின் பூமி மட்டமானது; ஸிம்ம தேசத்தின் பூமி மட்டத்தைக் காட்டிலும் அனேகம் பங்கு தாழ்ந்ததாய் இருக்கிறது. அதிலும் இந்த தேசத்தின் நடுவிலிருந்து மேற்கு பாக பூமி முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாய் மேற்கு முகமாய் சாய்ந்து ஸிந்து நதியின் கரையினும் சாய்வாகவே இறங்குகிறது. இதுபோலவே இந்த தேசத்தின் நடுவிலிருந்து கிழக்குபாக பூமி முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாய் கிழக்கிலும் வடகிழக்கிலும் சாய்ந்து இந்த தேசத்திற்கு கிழக்கில் தென்மேற்காக ஓடும் ஐராவதி நதியின் கரை வரையிலும் சாய்வாகவே இருக்கிறது. அதாவது இந்த தேசத்தின் நடுபூமியானது கொஞ்சம் உயர்ந்து மேற்கு கிழக்கு பாகங்களில் சாய்ந்து மத்தளம் போல் இருப்பதால் இதற்கு மத்தளதேசம் என்னும் பெயரையும் சிலரிடமிருந்து நாம் கேள்விப்படவும் கூடும்.

மலை, காடுகள் மிகுதி

இந்த தேசத்திற்கும் கேகயதேசத்திற்கும் நடுவில் வடக்கு கிழக்காய் ஒரு மலை உண்டு. இதற்கு பஹுகூடம் என்று பெயர். இந்த மலையானது சற்றேறக்குறைய பாரஸீக தேசத்திலிருக்கும் மஹா மலைக்கு ஸமமான உயரமுடைய தாய் ஓங்கி வளர்ந்து இந்த தேசத்தின் வடக்கு எல்லையை பெரும்பாலும் கவர்ந்து கொண்டிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வித மலையிலிருந்து சில காட்டாறுகளும் பெருகி ஐராவதி நதியுடன் சேருகிறது. இந்த பஹுகூடமலையின் கிழக்கு தொடர்ச்சியின் அடியில் சில ஸமயங்களில் ஐராவதி நதியின் வெள்ளம் அதிகமாய் கரைமேல் பெருகிவரும். இந்த மலையின் மேற்குத் தொடர்ச்சி மலைச்சார்பானது மிகவும் உயரமாய் ஸிந்துநதியின் கரையோரத்தில் அதிக செங்குத்தாக வளர்ந்திருக்கிறது. இந்த மலையைச் சுற்றிலும் சிறுகாடுகளும் அழகிய தோட்டங்களும் ஆல், பலா முதலிய மரங்களும் விசேஷமாய் வளர்ந்திருக்கின்றன.

நதி ஓரங்களில் நாவல் மரம் மிகுதி

இந்த மத்ரதேசத்திற்கு மேற்கு பாகத்தில் ஸிந்து[3] நதியும் தென்கிழக்கு பாகத்தில் ஐராவதி[4] நதியும் இடைவிடாத ஜலப் பெருக்குடன் கூடியதாய் ஜீவநதி என்று பெயரை வகித்துக் கொண்டு ஓடுகின்றன.

இந்த இரண்டு உத்தம நதிகளானது வருஷத்தில் 10 மாத காலங்களில் வெள்ளத்தினால் இந்த தேசபூமியில் ஜலஸாரம் என்னும் வண்டல் படிந்து தேசத்தை செழிக்கும்படி செய்கிறதுமன்றி அனேக ஊர்வன ஜந்துக்களையும் ஆவணி மாதத்தில் ஏராளமாய் உண்டுபண்ணி வருகிறது. இந்த மாத்ரதேசத்தில் நாவல்மரக் காடுகளும் ஸிந்து நதியின் கரை ஓரங்களில் உண்டு.

விசேஷம் : மாத்ரீயின் சரித்திரம்

குருதேசத்தின் அரசனான பாண்டுமஹாராஜன் இந்த மத்ர தேசத்தரசனுடைய பெண்ணாகிய மாத்ரீ என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு தன் மூத்தமனைவியாகிய குந்தி தேவியுடன் இவளையும் சேர்த்து போகங்களை யனுபவித்து அரசுபுரிந்து வரும் நாளில் இவ்விருவர்களிடத்திலும் ஒரு புத்ரன் கூட உண்டாகாத படியால் மனந்தளர்ந்து ராஜ்யத்தை மந்த்ரிகளிடம் ஒப்புவித்து இவ்விரு மனைவிகளுடன் கானகமேகி அங்கு முதற்பத்னியின் தந்த்ர யுக்தியினால் அவளுக்கு மூன்று புதல்வர்களையும் இந்த தேசத்தரசனின் புத்ரிக்கு நகுலனையும் ஸஹாதேவனையும் உண்டு பண்ணி வைத்து உலகத்தை ஆண்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸாவித்திரியின் கதை

இதுவுமன்றி இந்த தேசத்தை ஒரு காலம் ஆண்ட அச்வபதி என்பவனுக்கு புத்ரன் இல்லாததுபற்றி ஸாவித்ரி தேவியைக் குறித்து ப்ரார்த்தனைகள் செய்ய அதன் காரணமாக தன் மனைவியாகிய மாளவியின் மூல்யமாய் ஒரு பெண் குழந்தையை அடைந்தான். அவளுக்கு ஸாவித்ரி என்றே பெயர் வைத்து, காலக்ரமத்தில் அவள் வளர அவளது வேண்டுகோளின்படி ஸால்வதேசத்தின் ராஜகுமாரனான ஸத்யவானுக்கு கல்யாணம் செய்து கொடுத்தான்.

இப்படி கல்யாணம் செய்யப்பட்ட ஸாவித்ரி என்னும் ஸ்திரீ தனது கணவனுடன் வாழ்ந்து வருகையில், நாரத மஹரிஷி அந்த ஸத்யவானுக்கு அற்பாயுள் என்று சொன்னதின் நிமித்தம் கௌரீ வ்ரதத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்தாள். அந்த ஸமயத்தில் ஸத்யவான் ஆயுள் காலம் முடிவுபெற்றதினால் வாடாத மாலையுடன் தர்மராஜன் ஸத்தியவான் உயிரை எடுத்துப் போனதை ஸாவித்ரி கண்டு அந்த யமதர்மராஜனுடன் மன்றாடினாள். ''பிறப்புண்டேல் இறப்புண்டு'' ஆகையால் ஸத்தியவான் உயிரை அவசியம் எடுத்தே செல்ல வேண்டுமென்று சொல்லவும், ஸாவித்ரி தர்ம புத்ரராகிய யமனை நேரிடக் கண்ட பாக்கியம் வீண் போகாதாகையால் அதன் விசேஷத்தினாலாவது தனக்கு அனுக்ரஹம் கிடைக்க வேணுமென்று வாதாடி கௌரீ விரதத்தை வெகு நியமத்துடன் கொண்டாடினதின் காரணமாக தன்புருஷன் ஆயுள் காலத்தை[5] நீடிக்கச் செய்து வெகுகாலம் ஜீவித்திருந்தாளாகையால் ஏற்பட்ட கால நிர்ணயத்தைக் கூட சரியான வ்ரதம் அனுஷ்டித்து நிவர்த்திக்கலாமென்கிற த்ருஷ்டாந்தத்தை ஸாவித்ரி உலகத்தில் ப்ரஸித்திபெறச் செய்தாள். அது முதல் உலகத்தில் சுமங்கலிகள் இந்த ஸாவித்ரி வ்ரதத்தை ஆனிமாத பௌர்ணமியில் முறைப்படி அனுஷ்டித்து தங்கள் மாங்கல்யத்தை காப்பாற்றி வருகிறார்கள்.

❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடிக்குறிப்புகள் :

1. தற்காலத்தில் Punjab தேசத்திய வடமேற்கு பக்கத்திலிருக்கலாம்.

2. சிபிச்சக்ரவர்த்தியின் பிள்ளையில் ஒருவனாகிய மத்ரன் என்பவன் பெருமையுடன் இந்த தேசத்தை ஆண்டகாலம் தொடங்கி இந்தப் பெயர் உண்டாயிற்று.

3. இப்பொழுது Indus என்று வழங்கப்படுகிறது.

4. இதைத்தான் Ravi என்று பெயரிட்டு, இது Chenab என்பதை இடதுபுறத்தில் சேருவதாகச் சொல்லுகிறார்கள்.

5. இதுபோலவே பதினாறு வயதென்று ஏற்பட்டமார்க்கண்டேய மஹரிஷி விசேஷ சிவபூஜை செய்ததின் பெருமையினால் அந்த ஆயுள்காலத்தை தாண்டி வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியான வரத்தைப் பெற்று ஈச்வரனால் கடாக்ஷிக்கப்பட்ட பெருமையும் அடைந்தார். இதற்கு விசேஷ ஸ்தலம் மாயவரம் ஸமீபத்திலிருக்கும் திருக்கடையூர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காச்மீரதேசம்

அத்யாயம் – 31

இருப்பிடம் : சீதோஷ்ணம்

[1] காச்மீரதேசமானது வடஇந்தியாவின் வடமேற்கு பாகத்தில் இமயமலையின் அருகில் இருக்கிறது.

இந்த தேசத்தின் வடபாகத்திற்கு மஸிரம் என்றும் தென்பாகத்துக்கு கந்தி என்றும் உட்பெயர் உண்டு. இவ்விரண்டும் இந்த[2] காச்மீரதேசத்துக்கு உபதேசங்கள் என்றும் வழங்கப்படும்.

இந்த தேசத்தின் நடுவிலும், மேற்குபாகம் முழுமையிலும் எப்பொழுதும் விடாத பனி, மழை, குளிர் இவைகள் அதிகமா யிருக்கும். இந்த தேசத்திற்கும், இதற்கு ஸமீபத்திலிருக்கும் காம் போஜம், மாத்ர முதலிய சில தேசங்களுக்கும் தெற்கு பாகத்திலேயே சூர்யன் உதிப்பதும் தென்பாகத்திலேயே அஸ்தமிப்பதுமாயிருக்கும். அதாவது இந்த தேசம் மிகவும் வடக்கிலிருப்பதால் தென் இந்தியா வைப் போல் சரியானதிக்கில் சூர்யன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் தோன்றாது.

மலை காடுகள் மிருகங்கள் மிகுதி

இந்த தேசத்தின் நடுப்பாகத்திலும் மேற்கு பாகம் முழுமை யிலும் அனேக பெரிய மலைகள் உண்டு. இந்த தேசத்தின் விசாலத்தில் நான்கில் ஒரு பங்கை மலைகளே ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றன. ஆகிலும் இது மிகவும் குளிர்ந்த வாஸத்திற்குத் தகுந்த பூமியா யிருக்கிறது. இந்த தேசத்தின் நடுவில் இருக்கும் மலைக்கும் மேற்கி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விருக்கும் மலைக்கும் இடையில் அனேக பெரிய காடுகள் உண்டு. இந்த காடுகளில் பெரிய சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய மிருகங்கள் அனேகம் உண்டு. ஆகிலும் இந்த தேசத்தில் எப்பொழுதும் அதிக பனியுடன் குளிர்ந்த காற்று வீசுகிறபடியால் இந்த தேச மிருகங்கள் அதிக கோபமில்லாமல் பெரும்பாலும் சாந்தமாகவே யிருக்கும். இந்த தேசத்துக் காடுகளில் முத்தம்பி ஸூதநாதன் என்னும் பெரிய வனயானைகளும் வஸிப்பதுண்டு.

விசேஷம் : ஜனங்களின் கல்விப் பெருமை

இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் கல்வியில் ஆசையுடையவர்கள். ஸம்ஸ்கிருத பாஷையில் அநர்க்கராகவம் என்னும் புஸ்தகத்தை எழுதிய முராரி என்னும் மஹாகவியும், நைஷதகாவ்யம், கண்டனகண்டனகாத்யம், வித்தஸாலபஞ்சிகை முதலிய புஸ்தகங்களை இயற்றிய ஸ்ரீஹர்ஷன் என்னும் மஹாகவியும் இந்த தேசத்தில் பிறந்தவர்களாகத் தெரியவருகிறது.

நதி: ஸூப்ரயோகையின் ஜலத்தின் குணம்

''ஸூப்ரயோகை'' என்னும் நதி வடக்கில் உற்பத்தியாகி தெற்கு முகமாய் ஓடி இந்த காச்மீர தேசத்தைக் கடந்து பிறகு ஸிந்துநதியுடன் சேருகிறது.

இந்த நதியின் ஜலம் அதிக சீதனமானபடியால் பித்தத்தை வளர்க்கும். ஆகிலும் சரீர புஷ்டியையும் பலத்தையும் மேன்மேலும் கொடுக்கும்.

விளைபொருள் பட்டுப் பூச்சி மிகுதி

இந்த தேசத்தின் வடக்கு பாகத்திலும் ஸூப்ரயோகைஎன்னும் நதியின் கரையிலும் அனேகவித பட்டுப் பூச்சிகள் ஏராளமாய் உண்டாகின்றன. ஆகையால் இந்த தேசத்தின் நெடுநாளாய் பலவித சித்ரங்களுடன் கூடிய பட்டுச் சேலைகளும் பட்டுவஸ்திரங்களும் உண்டாக்கப்பட்டு வருகின்றன.

நகரம் : புஷ்கலாவதியின் பெருமை

இந்த தேசத்தின் பிரதான நகரத்திற்கு புஷ்கலாவதீ[3] என்று பெயர். இந்த நகரத்தை சந்த்ரவம் சத்தரசர்களில் ஒருவராகிய யயாதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மஹாராஜன் என்பவர் ஆண்டார். அதற்கு முன்னதாக வரகுணன் என்னும் அரசனும் அரசு செய்ததாகத் தெரியவருகிறது. இந்த தேசத்தின் கிழக்கில் இமயமலையின் தாழ்வரையில் குங்குமகிரி என்று ஒரு மலையுண்டு. அதில் ஸ்ரீ சாரதாமடம் என்னும் ஸரஸ்வதிசாலை (லைப்ரெரி). வெகுநாளாய் அனேக புலவர்கள் செய்த நுல்களை வடதேசத்திலுள்ளோர் எல்லோரும் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அதின் ஸமீபத்தில் கபிலேச்வரன் என்னும் சிவபிரானுடைய பெரிய ஆலயமும் விளங்கி வருகிறது.

இவ்வித கபிலேச்வராலயத்தின் தெற்கில்தான் முன்பு அர்ஜுனன் பாசுபதம் என்னும் அஸ்த்ரத்தை கைலாஸ நாதனிடமிருந்து அடைய வேணுமென்று தவம் செய்கையில் ஈச்வரனே அந்த அர்ஜுனனுடைய பல பராக்ரமத்தைப் பரீக்ஷித்துப் பார்க்க வேணும் என்று ஒரு காட்டுப் பன்றியை பின் தொடர்ந்த வில்லியின் உருவத்தை எடுத்துக் கொண்டு அவன் பர்ணசாலை ஸமீபம் வந்தார். அப்பொழுது அவ்விருவருக்கும் நடந்த சண்டை முதலிய விவரங்களையும் அவன் பாசுபதாஸ்தரம் பெற்ற விதத்தையும்[4] மஹாபாரதத்திலும் கிராதார்ஜுனீயம் என்னும் காவ்யத்திலும் காணலாம். முன்பு இந்த காச்மீரதேசத்தை சந்த்ராபீடன் என்னும் அரசன் வெகுபுகழ்ச்சியாய் ஆண்டுவந்ததாக ராஜதரங்கிணி, காதம்பரி என்னும் நூல்களில் விவரமாய் கூறப்பட்டிருக்கிறது. அதில்– இந்த காச்மீரதேசத்தின் அரசாக்ஷியை தனது தகப்பனாரால் கொடுக்கப் பெற்று தாராபீடன் என்னும் அரசன் பரிபாலித்து வருங்காலையில் ஒரு நாள் பட்ட மஹிஷீ அவ்வரசனை நோக்கிக் கூறியதாவது: ''ஓ ராஜ ராஜனே! நேற்றிரவு நான் அயர்ந்து உறங்கும் பொழுது ஸம்பூரண மண்டலம் பொருந்திய சந்த்ரன் எனது வாய்க்குள் பிரவேசிப்பதாக கனவு கண்டேன்'' என்று கூறினாள். அதைக் கேட்ட அவ்வரசனும் த்மக்கு இது ஒரு பெரிய பாக்யத்திற்கு காரணமாகவே இருக்க வேணுமென்று மனமகிழ்ச்சியுடனிருந்தான். அது முதற் கொண்டு அந்த பட்டமஹிஷீ கர்ப்பத்தை அடைந்து தகுந்த காலத்தில் ஒரு புத்ரனைப் பெற்றாள். அவ்விருவர்களும் முன்பு நேர்ந்த கனவுக் கிணங்கி சந்தராபீடன் என்று அக்குழந்தைக்கு பெயர் வழங்கினார்கள். அந்த சந்த்ராபீடனும் வளர்ந்து குல முறைப்படி ஸகலசாஸ்த்ரங்களிலும் பயிற்சியை யடைந்து தகுந்த காலத்தில் இளவரசு பட்டத்தையும் பெற்றான். இப்படியிருக்கையில் ஒரு நாள் அந்த சந்த்ராபீடன் வேட்டை மார்க்கமாய் இந்த காச்மீர தேசத்தைக் கடந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இமயமலையின் மேலேறி அச்சோ தம் என்னும் பொய்கையின் ஸமீபம் சென்றான்.

அவ்விடத்தில் வாஸம் செய்துவந்த மஹாச்வேதை என்பவளைக் கண்டு பேசி இளைப்பாறிய பிறகு அவள் மூலமாய் காதம்பரீ என்னும் கன்னியா மணியைக் கண்டு விவாஹம் செய்து கொண்டான் என்னும் அழகிய சரித்ரத்தை காதம்பரியில் விசேஷமாய்க் காணலாம்.

❋

அடிக்குறிப்புகள் :

1. தற்காலத்தில் Kashmir தேசத்தில் அடங்கி இருக்கிறதாகத் தெரியவருகிறது.

2. உப என்றால் வடமொழியில் ஸமீபம் என்று பொருள். உபதேசம் என்றால் ஒரு முக்கிய தேசத்தின் ஸமீபத்திலிருக்கும் மற்றொரு சிறிய தேசம் என்று பொருள். 'உப' என்றும் ''தேசம்' என்றும் பதம் பிரிக்காமல் உபதேசம் என்று சொல்லும்போது ஓர் குருவினிடத்திலிருந்து சிஷ்யன் அறியும் விஷயம் என்று பொருளும் கொள்ளலாம்.

3. ''ரளயோரபேத'' என்கிற ஸஸ்கிருத வாக்யப்படி இதை சிலர் புஷ்கராவதீ என்று வழங்குவார்கள். சைவ ஜீவன்களுக்கும் ஆதாரமாய் வர்ஷிக்கக் கூடிய ஸப்தவித மேகங்களில் புஷ்கலம் என்னும் மேகமானது எப்பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாய் இடைவிடாது மழை பொழியும் குணமுடையது. அவ்விதமேகம் இந்த தேசத்தில் எப்பொழுதும் உலாவுவதால் இந்த காச்மீரதேசத்தின் ப்ரதான நகரத்திற்கு புஷ்கலாவதீ என்று பெயர் உண்டாயிற்று. இவ்வித புஷ்கலமேகமானது இமயமலையிலும் விந்திய மலையிலும், களிங்க மலையிலும், மஹேந்த்ர மலையிலும், கேரளதேசத்தின் ஸமீபத்திலுள்ள தக்ஷிண நீலகிரி மலையிலும், வராகமலை என்னும் பழநிமலைத் தொடர் ஸமீபத்திலும் (Kodaikanal) எப்பொழுதும் உலாவும் குணமுடையது. ஆவர்த்தம் என்றால் ஜலச்சுழி. இங்கு ஆவர்த்தம் என்பது ஓர் உயர்ந்த ஜாதிமேகத்தை குறிப்பிடுகிறது. இவ்வித ஆவர்த்த மேகமானது திடீரென்று தோன்றி சிறிது நேரத்திற்குள் அதிகமாய் மழையைப் பெய்யும் குணமுடையது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புஷ்கலம், ஆவர்த்தம் என்னும் இவ்விரண்டு மேகங்களுமே இந்திரனுக்கு பிரதான வாஹனங்கள், பாற்கடலை தேவர்களும் அஸுரர்களும் வாஸுகி என்னும் ஸர்ப்பராஜனை மந்தரமலையில் சுற்றிக் கடையும் போது நான்குதந்தங்களுடனும், முகத்தில் சிகப்பு தங்கக்குறியை தரித்தும் வெண்மைநிறம் பொருந்தியுமுள்ள ஐராவதம் என்னும் யானை, விமானம் முதலியவைகள் இந்திரனுக்கு வாஹனமாய் ஏற்பட்டிருந்தபோதிலும் பூலோக ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டு பண்ண இவைகள் ப்ரயோஜனமாகமாட்டாமை யால், ப்ரம்மதேவனுடைய கட்டளைப்படியும் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஆக்ஞையின் படியும் இந்திரன் மேகங்களையே முக்ய வாஹனமாகக் கொண்டான் என்பதை பாகவத புஸ்தகத்தில் பார்க்கவும்.

4. முன்பு பாண்டவர்கள் த்வைத வனத்தில் வஸிக்கும் தருணத்தில் அர்ஜுனன் தமக்கு நேரிட்டிருக்கும் கொடுங்கஷ்டத்தை மனதிற் கருதி துயரப்படுகையில் ஸ்ரீகிருஷ்ணன் கருணையுடன் அவனது எதிரில் ஆவிர்ப்பவித்து "ஓ அர்ஜுனா! நீ இனி வருத்தமுறவேண்டாம். உனது பகைவரை வெகு ஸுலபமாய் வெல்லும் வண்ணம் இந்நாளைக் குறித்து விஜயவடம் (இப்பொழுது) (Bezwada) என்னும் நகரத்திற்கு ஸமீபமாய் கிருஷ்ணா நதியின் கரையிலுள்ள இந்த்ரகீல பர்வதச் சார்பில் பாசுபதாஸ்த்ரம் பெறுவதற்காக தவம்புரிவாய்" என்றுரைத்தார். அர்ஜுனனும் வெகுதூரம் தெற்கில்வந்து அந்த மலையில் தவம்புரிய முயற்சி செய்யும்பொழுதே இந்திரன் எதிரில் வந்து "ஓ மைந்தா! நீ என்னைக்குறித்து தவம்புரிவதால் ஒரு பயனுமில்லை. கைலாஸபதியிடமிருந்தே பெறக்கடவாய்." என்றாசி கூறினான். அவனும் அவ்வண்ணம் கொடிய தவம் புரியவே, அதைக் கண்டு ஈச்வரனும் வேட உருவத்துடன் அர்ஜுனனுடன் தனது பாசுபதாஸ்திரம் கொடுத்ததை விளக்கக்கூடியதாய் அடியுண்ட ஈச்வர சிலா பிம்பமும் அர்ஜுனன் சிலா பிம்பமும் அம்மலையில் அர்ஜுனனுக்குண்டான பலநாமதேயங்கள் எழுதப் பெற்ற சிலாசாஸநமும் இப்பொழுதும் நன்கு விளங்குகிறது. பெரியமேகங்கள் கடூரமாய் கர்ஜிக்கும்பொழுது அந்த அர்ஜுனனுடைய 10-நாமங்களை உச்சரிப்பவர்களுக்கு இடிபயம் நீங்கும் என்பது நமது ஆரியர்களின் கொள்கை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காம்போஜ தேசம்

அத்யாயம் – 32

இருப்பிடம் : பனி மிகுதி

[1]காம்போஜதேசமானது இந்தியாவின் வடக்கில் காச்மீர தேசத்திற்கு வடகிழக்கில் இமயமலையின் மேல் பாகத்திலும், அப்புறம் அடித்தொடரின் சார்பிலும் அகன்று விசாலமுள்ள பூமியிலிருக்கிறது.

இந்த தேசத்திற்கு உபசேதம் ஒன்றும் இல்லை. முழுமையிலும் காம்போஜ மென்றே வழங்கி வருவதாகத் தெரியவருகிறது. இந்த தேசத்தில் மழை, குளிர், விடாப்பனி முதலியது அதிகமாய் உண்டு. இந்த தேசத்தின் வடக்கு பாகம் முழுமையும் சம பூமியாயும் மிகவும் ச்லாக்யமானதாயுமிருக்கிறது. இதன் தெற்குபாகங்களில் இமயமலையின் சார்பில் அனேக பெரிய குகைகள் இருக்கின்றன. இமயமலையின் மேற்பாகத்தில் மேற்கு முகமாய் ஓடும் ஸிந்து நதியானது சிதறி இவ்வித குகைகளிலும் கொஞ்சம் கொஞ்சம் சிற்சில ஸமயங்களில் பாயும் வழக்கமுண்டு.

மலை, காடுகள் மிகுதி–குதிரை உற்பத்தி

இந்த காம்போஜ தேசத்தின் மேற்கிலும் தெற்கு பாகம் முழுமையிலும் பெரிய மலைகள் நீண்டு வளர்ந்து இமயமலையுடன் சேர்ந்து இருக்கின்றன. இதின் கிழக்கு மேற்கு நீளம் முழுமையிலும் பெரிய அரண்யங்கள் உண்டு.

இவ்வித காடுகளில் அனேகவித மரங்கள் இருந்தபோதிலும் அங்கோலம்[2] என்னும் மரங்கள் தான் அதிகமாய்த் தோன்றும். இந்த மரங்களின் கீழ் நிழலில் தங்குவதற்கு காட்டுயானைகள் மிகவும் ஆசைப்படும். இந்த மரத்தின் கிளை, தண்டு இவைகள் உறுதியாயும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துளிர், இலை இவைகள் மிகவும் ருசியாயுமிருக்கும். இந்த இலையைத் தின்னும் யானைகளுக்குச் சரீரத்தில் அதிக புஷ்டியும் யாராவது காட்டில் நுழையும் பொழுதே அவர்களையறிந்து கொள்ளக்கூடிய ஸூக்ஷ்மமான புத்தியும் விசேஷமாய் உண்டாகிறது.

இந்த தேசத்தின் வடபாகத்திலும் கிழக்கு பாகத்திலும் மணலும் மண்ணும் கலந்த பூமியானபடியால் தென் பாகத்திலுள்ள மலைக் காடுகளில் மிகவும் சிறந்த குதிரைகள் உண்டு. இவ்விதக் குதிரைகளில் ''கர்கம்'' என்னும் வெள்ளை ஜாதிக்குதிரை அதிகமாய் உண்டு. உடம்பு முழுமையும் வேறுவித நிறமில்லாமல் ஒரே சிகப்பு நிறமுடைய நல்ல ஜாதிக் குதிரைகளும் அனேகம் வளர்ந்து காட்டில் உலாவுகின்றன.

நதி

இந்த தேசத்தின் கிழக்கில் ஸைப்யா, ஸதாநீரா என்று இரண்டு நதிகள் இமய மலையிலிருந்து உற்பத்தியாகி கிழக்கு முகமாய் ஓடுகிறது. பாஞ்சால தேசத்தின் வடகிழக்கு மூலையில் கங்கோற்பத்தி ஸ்தானத்திற்கு ஸரியாய் இமயமலையின் அப்புறத்தில் சங்கையிலிருந்தே சில சிறு நதிகள் அருவிகளாகவே ஓடி இந்த ஸைப்யா, ஸதாநீரா என்னும் பெரிய நதிகளுடன் கூடி இந்த தேசத்துக்கு ஸம்பூரணமான ஜலஸெளக்யத்தை உண்டுபண்ணுகிறது.

விசேஷம்

முன்பு ஒரு ஸமயத்தில் வடகோஸல மன்னனாகிய ரகுமஹா ராஜன் திக்விஜயம் செய்து வருகையில் இந்த காம்போஜ தேசத்தரசன், ரகுமஹா ராஜனையும் அவன் படை எழுச்சியையும் கண்டு பயந்து கப்பம் கட்டிவந்தான்.

❋

அடிக்குறிப்புகள்:

1. தற்காலத்தில் Tibet தேசத்தில் அடங்கி இருக்கிறதாகத் தெரிய வருகிறது.
2. இந்த மரமானது ஏழிலைப்பாலைமரத்தின் இலைபோன்ற இலைகளை அடைந்ததாயும் கர்ப்பூரவல்லியின் நிறம்போல் நிறமுடையதாயுமிருக்கும். அவ்வித மரங்களின் அடியில் யானைகளை கட்டும் விஷயமானது ரகுவம்சத்தில் நன்றாய்க் கூறப்பட்டிருக்கிறது. யானைகளுக்கு இது மிகவும் பிரியமானது என்றே முனிவ்யாஸர் செய்த கஜசாஸ்த்ரத்திலும் பால காப்யர்செய்த கஜாயுர்வேதம் என்னும் புஸ்தகத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நேபாளதேசம்

அத்யாயம் – 33

இருப்பிடம்

[1]நேபாளதேசமானது பாஞ்சால தேசத்திற்கு வடமேற்கிலும் கோஸலதேசத்திற்கு வடக்கிலும் ஆரட்ட தேசத்திற்கு மேற்கிலும் இமயமலையின் தெற்கிலும் நிலைபெற்றிருக்கிறது. நமது இந்தியாவிலிருக்கும் ஸகல தேசங்களைவிட இந்த நேபாள தேசத்தின் பூமி மிகவும் உயரத்திலிருக்கிறது. அதாவது விந்திய மலைக்கு வடக்கிலிருக்கும் தேசங்களின் பூமிமட்டத்தைக் காட்டிலும் அநேக அடி உயரமுள்ள பிரதேசத்தில் இந்த தேசம் தங்கியிருக்கிறது. மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் இந்த தேசம் வெகுதூரம் நீண்டிருக்கிறது.

இந்த தேசத்தில் குளிரும் பனியும் மிகவும் அதிகம். இவைகள் கொஞ்சம் ஓய்ந்த காலத்தில் மழையின் வேகத்தைச் சொல்லவே முடியாது. ஆகையால் இந்த தேசத்தில் ஸ்வல்ப ஜனங்கள்தான் வஸித்து வருகிறார்கள். இந்த தேசத்தின் அதிக சீதன குணத்தினால் ஜனங்களுடைய சரீரத்திலும் பெரும்பாலும் வெண்மை நிறமே காணப்படும். இதற்கு கிழக்குபாகத்தில் ஆயவர்ஹம் என்று ஒரு உபதேசமிருப்பதாய் ஏற்படுகிறது.

ஸாளக்கிராம மஹிமை

இந்த நேபாள தேசத்திற்கு வடக்கு பாகத்தில் இமயமலையின் மேலிருக்கும் ப்ரம்மகபாலம் என்னும் க்ஷேத்ரத்துக்கு ஸமீபத்திலிருந்து கௌசிகி என்று ஒரு பெரிய நதி உண்டாகி தெற்கு முகமாய்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெகுதூரம் ஓடிவந்து கயாக்ஷேத்திரத்திற்கு ஸமீபத்தில் கங்கையுடன் சேருகிறது. இந்த கௌசிகீ நதியானது இமயமலையின் உச்சியிலிருந்து உண்டாகிறதென்றே சிலர் சொல்லுவார்கள். இதற்கு அனேக உபநதிகளுமுண்டு. இந்த நதிக்கு கிழக்கே ஆரட்டதேசமும், மேற்கில் நேபாள தேசமும் என்று பிரித்துக் காட்டுவது போலவே இந்த நதியின் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. இது தவிர வடக்கில் இமயமலையிலிருந்து தெற்கு முகமாய் இந்த தேசத்தை தாண்டிக் கொண்டு அனேக சிறு நதிகளும் பனிக்கட்டி ஓடைகளும் அலையின் ஆரவாரிப்புடன் ஓடுகின்றன. இந்த கௌசிகீ நதிக்கு கண்டகீ என்று மற்றொரு பெயருண்டு. இந்த நதியில் மத்ஸ்யமூர்த்தி, கூர்மமூர்த்தி, வராஹமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி முதலிய பலவித ஸாளக்கிராமங்கள் (பொன்ரேகை, சக்ரம், சங்கு முதலியவைகளுடன் கூடிய ஓர்வித கருப்புக்கற்கள்) உண்டாகின்றன. இவ்வித ஸாளக்கிராமங்களில் ஸ்ரீபரமாத்மாவினுடைய ஸாந்நித்யம் எப்பொழுதும் குறையாமலிருக்கிறதென்றும் அவைகளே பக்தி செய்யும் நமது ஆரியர்களுக்கு இம்மையில் சிறந்த செல்வத்தையும் மறுமையில் மோக்ஷ ஸுகத்தையும் கொடுக்கவல்லனவென்றும், பூர்வ மஹரிஷிகளின் வசனங்கள் ஏற்பட்டிருக்கிறபடியால் நமது தக்ஷிண தேசத்திலும் கங்கா யமுனாநதி தீரங்களிலும் அனேக ப்ராம்மணர்கள் நெடுநாளாய் ஸாளக்கிராம மூர்த்திகளை பூஜித்து வருகிறார்கள். இவ்வித கண்டகீ நதியின் ஸமீபத்தில் கௌதமீ என்று ஒரு உபநதி ஓடுகிறது. பயஸ்வினீ என்று ஒரு உபநதியும் அவையுடன் சேருகிறது. அதற்கு த்ரோணா, கோவர்த்தனீ என்று இரண்டு உப நதிகளும் வந்து சேருகின்றன.

இந்த தேசத்தில் கற்பாறை பூமி அதிகமாய் இருந்த போதிலும் அவைகளின் மேல் படிந்து ஓடும் அனேக நதிகளின் ஜலங்கள் உடம்புக்கு மிகவும் நன்மையை உண்டு பண்ணும். தாகத்தை அடக்கி புத்தியை வளரச்செய்யும்.

இவ்வித நதிகளின் ஜலத்தை உட்கொண்டு வளர்ந்து வரும் இந்த தேசத்தின் ஆடுகளும் ஏராளமாய் கொஞ்ச நாளைக்குள் செழுமையாய் வளர்ந்து வருகின்றன. இந்த தேசத்தின் ஆடுகள் மிகவும் பெரிய உருவமுடையதாயும் வெண்மை, சிகப்பு நிறத்தையே அதிகமாய் அடைந்தவைகளாயும் கூட்டங்கூட்டமாய் அங்கங்கு மலைகளிலும் வனங்களிலும் எங்கும் காணப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை

இந்த தேசத்தின் நடுவில் தவளகிரி[2] என்று ஒரு மலையும், தவளகிரி என்னும் பெரிய நகரமும் இருக்கிறது. இந்த தவளகிரி தவிர வேறு சில மலைகளும், குன்றுகளும் இதில் அங்கங்கு நிறைந்திருப்ப தால் இதை ஒரு மலை நாடென்றே சொல்லலாம். இந்த தேசத்தின் வட புறம் முழுமையையும் இமயமலையே கவர்ந்து கொண்டிருக் கின்றன. இவைகளின் சார்பில் வெண்மை நிறமுள்ள ஆடுகளும் பலவித காட்டு ஜந்துக்களும் விசேஷமாய் வளர்ந்து வருகின்றன.

விசேஷம். கஸ்தூரியின் மிகுதி

இந்த தேசத்திலிருக்கும் தவளபுரம் என்னும் நகரத்துக்கு ஸமீபத் தில் லலிதாபுரம் என்று ஒரு நகரமுண்டு. அதில் அனேக அழகிய வீடு களும், சித்திரசாலைகளும், வைத்யநாதனுடைய தேவாலயமும் விசேஷ சிறப்பாய் காணப்படுகின்றன. இவைகள் தவிர இந்த தேசத் தின் வடக்கில் ஜடேச்வர க்ஷேத்ரமும் கிழக்கில் யோகினிகுண்டமும் மிகவும் சிறந்தவைகளாகும். இப்பொழுதும் இந்த யோகினி குண்டத் தின் ஸமீபத்தில் அனேக மந்த்ரவாதிகளும் வைத்யர்களும் வந்து பணிந்து தமது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டு போகிற வழக்க முண்டு. இந்த தேசத்தின் கஸ்தூரி மிகவும் சிறந்தது. இதில் அனேகர் கஸ்தூரி, குங்குமப்பூ, அகில், சந்தனம் இவைகளின் வியாபாரிகளா கவே இருப்பார்கள். மற்றும் சிலர் தோல் வியாபாரிகளாகவும் நெடு நாளாய் புலப்பட்டு வருகிறார்கள். சவரி, சணல்துணி (கோணி), பல வித கயிறுகள், பாதரக்ஷைகள் முதலியவை களை இந்த தேசத்து ஜனங் கள் வெகு அழகாய் செய்வார்கள். இதை முன்பு அனேக தர்மராஜாக்கள் ஆண்டு வந்ததாய் அப்பய தீக்ஷிதர் செய்த ''குவலயாநந்த''த்தில் ஏற்படுகிறது.

❄

அடிக்குறிப்புகள் :

1. Nepal State
2. தென் இந்தியாவில் வடஆற்காடு ஜில்லாவிலுள்ள வந்தவாசி (Wandiwash) என்னும் ஸ்தலத்திலுள்ள மலைக்கும் தவளகிரி என்று பெயர். அந்த மலையின் உச்சியில் ஒரு விசேஷ ஈச்வரன் கோயிலும் அதிலுள்ள மூர்த்திக்கு தவளகிரீச்வரர் என்று பெயரும் வழங்கி வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆரட்டதேசம்

அத்யாயம் – 34

இருப்பிடம்

[1] ஆரட்டதேசமானது இமயமலையின் கங்கோற்பத்தி ஸ்தலம் முதல் தென் பாகத்தில் மலையின் அடிவாரத்தில் நேபாள தேசத்திற்கு கிழக்கில் கிழக்கு மேற்காக மிகவும் நீண்டிருக்கிறது. இது பெரும்பாலும் கற்பாறைகளால் கவரப்பட்டிருப்பதுமன்றி பெரிய காடுகளாலும் சூழப்பட்ட தேசமாயிருக்கிறது. இதில் விசேஷமாய் பெரிய கிராமங்கள் நகரங்கள் தேவாலயங்கள் முதலியன இல்லை என்றே சொல்லலாம். இதில் குளிரும் பனியும் மழையும் இடைவிடாமல் பெய்வதால் ஸுகத்தை விரும்பிய ஜனங்களின் வாஸத்துக்கு விரோதமாயிருக்கும். காடுகளிலே பிறந்து அங்கே வஸிக்கும் சில வேடர் முதலிய சில ஜாதியரே இதில் விசேஷமாய் வசிக்கிறார்கள்.

மலை, நதி

இந்த தேசத்தில் இமயமலையின் தொடர்ச்சி குன்றுகளே வெகு தூரம்வரையில் பரவியிருக்கின்றன. அவ்வித குன்றுகளிலிருந்தும் இமயமலையிலிருந்தும் அனேக சிற்றாறுகள் ஓடி கண்டகீ நதியுடன் கலந்தோடுகின்றன. மற்றும் சில சிற்றாறுகள் விதேஹ அங்க தேசங்களின் வழியாய் அங்கங்கு ஓடும் பெரிய நதியுடன் சேருகின்றன.

குதிரை, யானைகள்

இந்த ஆரட்ட தேசத்தின் தென்பாகம் முழுமையிலும் முற்கூறிய இமயமலைத் தொடரின் சுற்றுப்புற காடுகளிலும் அநேக ஜாதி மிருகங்கள் வஸித்தபோதிலும் யானைகளும் குதிரைகளுமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷமானவை. ஆகிலும் இந்த தேசத்தில் வஸிக்கும் யானைகள் மாத்திரம் அவ்வளவு பலமுடையதல்ல. மேலும் அற்பவயதை யுடையதாகவேயிருக்கும். குதிரைகளோ பலத்திலும் நடை வேகத் திலும் மிகவும் சிறந்தவைகள். இந்த தேசத்தில் பெரும்பாலும் கற்பாறை படிந்திருப்பதால் அவைகளின் மீது இந்த தேசத்துக் குதிரைகளின் இளமைப்பருவம் முதல் வெகு வேகமாய் நடந்து ஓடி தாவி உலாவும்போது வெகு அழகாயிருக்கும்.

இவ்வித குதிரைகள் பாஞ்சாலம், ஸிம்மம், விதேஹம், கோஸலம் முதலிய சுற்றுப்புறத்து நாடுகளிலும் காடுகளிலும் சில ஸமயங்களில் ஓடி ஸஞ்சரிக்கும் வழக்கமும் உண்டு.

❊

அடிக்குறிப்புகள் :

1. இந்த ஆரட்ட தேசத்தில் பிறந்த குதிரைகள் ஜடஜடவென்று போகும் நடையின் ரீதியையும் அர்த்தபுலாயிதம்முதலிய நடைகளின் பேதங்களையும் நகுலன் செய்த அச்வ சாஸ்த்ரத்திலும் மாகன் செய்த சிசுபாலவதம் என்னும் காவ்யத்தின் ஐந்தாவது ஸர்க்கத்திலும் விபரமாய்ப் பார்க்கலாம்.

   This may lie in the modern Behar province.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதேஹ தேசம்

அத்யாயம் – 35

இருப்பிடம்

[1] விதேஹ தேசத்தின் பூமி மட்டமானது முற்கூறிய ஆரட்ட தேசத்தைக் காட்டிலும் அனேக அடி ஆழம் தாழ்ந்ததாய் கோஸல தேசத்திற்கு நேர் கிழக்கிலும் அங்க தேசத்திற்கு வடக்கிலும் இருக்கிறது. இந்த தேசத்தின் மண்குணம் மிகவும் மேலானது. கள் வாஸனை போலும், முல்லை மலரின் வாஸனை போலும் பரிமளம் வீசும்.

இந்த தேசத்திற்கு மேற்கில் கண்டுகி நதிக்கு கிழக்கில் மலதம் என்றும் கருசம் என்றும் இரண்டு சிறிய தேசங்கள் அடங்கியிருக்கிற தாக வால்மீகி ராமாயணத்திலே நன்றாய்க் கூறப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு உபதேசங்களும் மற்ற பாகமும் சேர்ந்து ஓர் பெரிய அழகிய தேசமாய் விளங்குவதுடன் தனத்தினாலும் தான்யம் முதலிய செல்வத்தினாலும் இதுவே மிகவும் பெயர் பெற்ற தேசம். மேடுபள்ள பூமியே இதில் எங்கும் இல்லை. எங்கும் சம வெளியாயும் தோப்புகளும் வளங்களும் சூழப்பட்டதாய் கோஸல தேசம் போலவே விளங்கும்.

மலை, நதி

இந்த தேசம் இமயமலையின் ஸமீபத்திலிருந்த போதிலும் இதில் பெரிய மலைகளே கிடையாது. சிலவிடங்களில் சிறிய குன்றுகளும் அதைச் சுற்றிலும் சிறியகாடுகளும் உண்டு.

இமயமலையின் தாழ்வரையிலிருந்து ஆரட்ட தேசவழியாய் ஓடிவரும் சில சிற்றாறுகளும் கண்டகீ நதியுமே இந்த தேசத்திற்கு முக்யமாகும். இந்த நதிகளின் பாய்ச்சலை அடைந்த பூமி முழுதும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நல்லவிளை பொருள்களையும் மிகவும் ருசியுள்ள கத்திரிக்காய், வெண்டைக்காய் முதலிய பதார்த்தங்களையும் ஏராளமாய் கொடுக் கின்றன.

விசேஷம்: மிதிலையின் சிறப்பு

இந்த விதேஹ தேசத்திற்கு மிதிலா நகரமே முக்ய நகரமாகும். இது தவிர கௌசாம்பீ, மஹோத்யம், தர்மாரண்யம், கிரிவ்ரஜம் என்று நான்கு பெரிய நகரங்கள் இப்பொழுதும் விசேஷ சிறப்புடன் வாழ் கின்றன. முன்பு இந்த தேசத்தை அரசு புரிந்த குசன் என்பவனுடைய புத்ரர்களில் குசாம்பன் என்பவன் கௌசாம்பீ நகரத்தை நிர்மானித்தான். குசநாபன் என்பவன் மஹோதய நகரத்தையும், தூர்த்தர ஜஸ்ஸு என்பவன் தர்மாரண்ய நகரத்தையும், வஸு என்பவன் கிரிவ்ரஜ நகரத்தையும் ஏற்படுத்தினார்கள் என்று ராமாயணத்திலேயே விவரமாய்க் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு ராஜதானியாகிய மிதிலா என்னும் நகரத்தை மிதி என்னும் அரசன் முதலில் அரசு புரிந்தான். அவனது வம்சத்தில் தேவராதன் முதலிய அனேக அரசர்களும் ஜனக சக்ரவர்த்தியும் இதை வெகு புகழ்ச்சியுடன் நன்றாய் ஆண்டு வந்தார் கள். வேதங்களாலும் புகழப்பட்ட புண்ய சீலனான ஜனகமஹா ராஜனுக்கு புத்ரியாக அவதரித்த ஸீதாதேவியை ஸ்ரீராமன் சிவ தனுஸ்ஸை முறித்து கலியாணம் செய்து கொண்ட விபரத்தையும் விசுவாமித்ர மஹரிஷியின் அற்புத செயல்களில் அந்த தேசத்தில் நடந்தவைகளில் சில விஷயங்களையும் ராமாயணத்தின் பால காண்டத்திலேயே நாம் வெகுவாய்க் கேட்டிருக்கலாம்.

இப்பொழுது இந்த தேசத்தில் அனேக பெரிய நகரங்களும் கிராமங்களும் ஸ்ரீராமனுடைய தேவாலயங்களும் விசேஷமாய் ஏற்படுத்தப்பட்டதாய் விளங்குகின்றன.

❋

அடிக்குறிப்பு:

1. Probably in the present Behar territory.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பார்வத தேசம்

அத்யாயம் – 36

இருப்பிடம்

முதற் பாகத்தில் இந்த [1]பார்வத தேசத்தின் நிலைமையைப் பற்றி சுருக்கமாய் விவரித்திருக்கிறோம். ஆகிலும் இதன் நிலைமை யானது இமயமலையின் கிழக்கு முனைக்கு தென்பாகத்தில் ஆரட்ட தேசத்திற்கு கிழக்கில் ப்ராக் ஜோதிஷ தேசத்திற்கு மேற்கில் இமய மலையின் அடிவாரத்தில் கொஞ்சம் பூமியிலும் மலையின் மேல்பாகத்திலே விசேஷ பூமியிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த தேசத்தில் எப்பொழுதும் அதிக பனி, குளிர், மழை முதலிய இடையூறுகளே அதிகமாயிருக்கும். அது மாத்திரமல்ல; இந்த தேசத்தின் பூமி மட்டமானது; சிலவிடங்களில் மிகவும் பள்ளமாயும் சிலவிடங்களில் மிகவும் மேடாயுமிருப்பதால் வாசத்திற்கு மிகவும் அஸௌகர்ய தேசமென்றே கருதவேண்டும். ஆகையால்தான் இதில் நாட்டு ஜனங்கள் தவிர வேறு நாகரீகத் தனமுள்ள ஜனங்கள் எப்பொழு தும் வஸித்ததாக புலப்படவில்லை. இதில் வசிக்கும் குரவர், வில்லி, வேடர் முதலிய ஜனங்கள் பெருங் காடுகளில் வேட்டையாடி பலவித மிருகங்களைக் கொன்று அவைகளின் மாம்ஸத்தையே உணவாகப் புஜித்து வருகிறார்கள். இதில் விசேஷ நகரமும் கிராமமும் கிடையாது.

மலை, நதி

இமயமலையின் தொடர் குன்றுகளும் மற்றும் அனேக பெரிய மலைகளும் இந்த தேசம் முழுமையையும் கவர்ந்து கொண்டிருக் கின்றன. இந்த தேசத்தில் பெரும்பாலும் பூமிபாகம் இமயமலையின் உச்சியிலும் தாழ்வரைகளிலும் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப் பதால் இதற்கு மலை விஷயம் சொல்லுவதே அவசயமல்ல.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதிகளோ இமயமலையின் அனேக பாகங்களிலிருந்து பெரிய நதிகளாகவும் சுனை அருவிகளாகவும் சிற்றாறுகளாகவும் இதில் பரவி மஹாவேகா என்ற பெயருடன் கூடிய ஒரு நதியாய் இது முதல் அனேக தேசங்களைக் கடந்து வங்கதேசத்திலிருக்கும் கல்கத்தா நகரத்திற்கு ஸமீபத்தில் கங்கையுடன் சேருகிறது.

விசேஷம்: கருடன் பிறப்பு

முன்பு இமயமலையின் தாழ்வரையில் தவம்புரிந்த கச்யப ப்ரஜாபதிக்கு விந்தா தேவியினிடத்தில் அருணனும்[2], கருடனும்[3] கத்ருவினிடத்தில் ஸர்ப்பஜாதிகளும்[4] இந்த பார்வத தேசத்தின் வடபாகத்தில்தான் ஓர் பர்ணசாலையில் பிறந்ததாக ஏற்படுகிறது.

மேலும் வட கோஸலநாட்டை முன்பு பரிபாலனம் செய்துவந்த ரகுமஹாராஜன் திக்விஜயம் செய்து வருகையில் அக்காலத்திலும் இந்த பார்வத தேசத்தில் வஸிக்கும் ஓர்வித முரட்டுத்தனமுள்ள சில ஜனங்கள் தடி, வில்லு, வாள், கற்குண்டுகள் இவைகளையே முக்கிய ஆயுதங்களாகக் கொண்டு அவனுடன் கடும் போர் விளைத்து முடிவில் தோல்வியடைந்ததாகவும் காளிதாஸன் செய்த ரகுவம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் இந்த தேசத்தில் நாகரிகத்தனமற்ற காட்டு ஜனங்களே மிக வறுமையுடன் வசிப்பதாக ஏற்படுகிறது.

❄

அடிக்குறிப்புகள்:

1. "Bhutan" may be said to mark this country.
2. இந்த அருணன் தனது தகப்பனாராகிய கச்யப மஹரிஷியின் மந்த்ரங்களால் ஏற்படுத்தப்பட்ட முட்டையிலிருந்து பிறக்கும்பொழுதே இடுப்புக்குக் கீழ் துடைமுதல் அவயவங்களை அடையாமல் பிறந்ததற்கு காரணமும், பிறகு இவன் சூர்யனுக்கு தேர்ஸாரதியாய் அமர்ந்த விபரமும் விஷ்ணுபுராண மஹாபாரதங்களில் நன்கு விளங்கும்.
3. கருடன் பிறக்கும் முன்னமே தனது இளையதாயாரிடம் தானும் தனது தாயுமாய் அடிமைத்தொழில் செய்யும்படி நேரிட்ட விபரத்தையும் பிறகு இந்த கருடன் மிக வல்லமை வாய்ந்தபடியால் தேவலோகத்திலிருந்து அமிர்தம் கொண்டுவந்த விஷயத்தையும் மஹாவிஷ்ணுவுக்கு வாஹனமாய் அமர்ந்தவிபரத்தையும் மஹாபாரதத்திலும் வேதாந்த தேசிகன் செய்த கருடபஞ்சாசத் என்னும் நூலிலும் விபரமாய்க் காண்க.
4. ஸர்ப்பங்களுக்கும் கருடனுக்கும் விரோதம் ஏற்பட்டதற்கு மூலகாரணமும் ஸர்ப்பங்களுக்கு இரண்டு நாக்கு உண்டானதின் விபரமும் விஷ்ணு புராணத்தில் விளங்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சீனதேசம்

அத்யாயம் – 37

இருப்பிடம்

நமது இந்தியாவின் வடகிழக்கில் நிலைபெற்றிருக்கும் [1]சீன தேசமானது ஆதிகாலம் முதல் ஓர் தனிமை தேசமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஏனெனில் இந்த பரதகண்டத்தில் அடங்கிய மற்ற தேசங்களில் சீதோஷ்ணஸ்திதி எக்காலத்திலும் மாறாமல் ஒரே நிலைமையிலிருப்பதால் இதில் வஸிக்கும் ஜனங்கள் பெரும்பாலும் கருப்புநிறமுடையவர்களாய் இருப்பார்கள் என்று ஓர் பழமைச் சொல் உண்டு.

சீன தேசத்திலோ இமயமலைப் பான்மையை விட வெகு சீதளம் பரவியிருப்பதால் அதில் வஸிக்கும் ஜனங்கள் அனேகமாய் வெண்மை நிறமுடையவர்களாகவேயிருக்கிறார்கள். ஆகையால் இந்த தேசத் திலுள்ளவர்களை ஹூணர்கள் என்றும், யவனர்கள் என்றும் வழங்கப்படுவதாயும் காளிதாஸனுரையினாலேயே ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட வெண்மை ஜனங்கள் (வெள்ளைக்காரர்கள்) நிறைந்த இந்த தேசத்தில் அழகிய மாளிகைகள் சூழ்ந்த நகரங்களும், கோணாத வீதிகளும், குளிர்ந்த சோலைகளும் வஸிப்பதற்கு மிகவும் சுகத்தை அளிக்க வல்லதாயிருக்கின்றன.

மலை

இந்த சீனதேசத்தின் தெற்கு மேற்கு பாகங்களில் இமயமலையும் அதன் தொடர் மலைகளும் குன்றுகளும் நிலைபெற்றிருக்கின்றன. மற்ற திக்குகளில் இடையில் கொஞ்சம் கொஞ்சம் ஸமபூமியும் அதற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருகில் சிறு சிறு மலைகளும் விசேஷமாய் காணப்படுகின்றன. இவ்வித பர்வதங்களின் சமீபத்தில் மரங்களும் புதர்களும் சூழ்ந்த காடுகளுமுண்டு. அவைகளில் பெரிய புலிகளும் கரடிகளும் குரங்குகளும் மற்றுமுள்ள கொடிய காட்டு மிருகங்களுமே விசேஷமாய் உலாவுகின்றன. இந்த தேசத்தில் வஸிக்கும் ஜனங்கள் அவ்வித மிருகங்களிடமிருந்து கொஞ்சமேனும் பயப்படுவதில்லை. அனேகவித ஆயுதங்களின் உதவியைக் கொண்டு அவைகளுடன் வேட்டையாடி அவைகளைச் கொல்வதிலும் துரத்தி ஓட்டுவதிலும் மிகவும் விருப்பமுள்ளவர்கள்.

நதி

இந்த தேசத்தின் வடமேற்கு பாகத்திலிருந்து ஒரு பெரிய நதி கிளம்பி நேர்கிழக்காக ஓடுகிறது. இந்தநதியே இந்ததேசத்திற்கு மஹாநதியெனப்படும். இந்த நதிக்கு இருபுறங்களிலும் அனேக உபநதிகள் வந்து கூடுகின்றன. இந்த நதிகள் எல்லாம் எப்பொழுதும் வற்றாதவைகள். மழைக்காலத்தில் இருகரையில் புரளும் வெள்ளமும் அடிக்கடி உண்டாகும். சில ஸமயங்களில் அவ்வித வெள்ளத்தினால் நதியின் கரையிலுள்ள வீடுகள், கட்டடங்கள், மரங்கள் முதலியவைகள் நாசத்தையடையும் வழக்கமுண்டு. இவ்வித வழக்கம் சிலஸமயங்களில் கங்கையின் கரைக்கு ஸமீபத்திலுள்ளவைகளுக்கும் உண்டாகிறதென்றே நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். ஆகிலும் கங்கையைவிட இந்த சீனதேசத்தின் பெரிய நதியின் வெள்ளமே மிகவும் அதிகமாய் வருமென்றே சொல்ல வேண்டும்.

இவ்வித நதிகளின் ஜலம் பாயும் இந்த தேசத்தின் பூமியில் கோதுமை முதலிய் புஞ்சைத் தான்யங்களும் பருத்திகளும், பச்சைக் கோரைகளும் விசேஷமாய் விளைகின்றன. இந்த தேசத்து ஜனங்கள் பருத்தியினாலும் பட்டுப்பூச்சிகளின் பட்டுநூலினாலும் பலவிதமாய் வஸ்திரங்கள் நெய்வதில் வெகுநாளாய் மிகவும் கைதேர்ந்தவர்கள்.

விசேஷம் : விளையாட்டு ஸாமான் மிகுதி

மேலும் பாலர்களின் விளையாட்டுக்குரிய பலவித வேடிக்கை ஸாமான்களையும் விசித்ரமாய் செய்வார்கள். ஆதிகாலம் முதல் இவர்களுக்கு ஒரே ஸங்கேதம் (மனம் ஒற்றுமை) உண்டு. பொறாமை முதலிய துர்குணங்கள் இவர்களுக்கு முற்றிலும் இல்லை என்றே சொல்லலாம். பெரும்பாலும் ஒருவர்க்கொருவர் நல்லன்பு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாராட்டுகிறவர்களாகவும் தமது தேசத்திலிருந்து வெளிதேசம் செல்வதிலும் அனேக நதி, மலை, குகை, நாடு முதலியவைகளைத் தாண்டிச் செல்வதிலும் வெகு உத்ஸாகமுடையவர்களாயும் சரீரதைர்யம், மன உறுதி படைத்தவர்களாயுமிருக்கிறார்கள்.

இந்த தேசம் முழுமையிலும் புத்தர்கள் கோயிலும், அதில் சமணமதஸ்தர்களின் கோட்பாடும் நடைபெற்று வருகின்றன. மற்ற தேசங்களைப் போல் சிவன், விஷ்ணு முதலிய தேவாலயங்கள் இதில் கிடையாது. ஒன்று இரண்டு இருந்தபோதிலும் இந்த ஜனங்கள் நம்மைப் போல் சில விஷ்ணு பக்தி செய்வதுமில்லை. நமது நடை உடை, ஆசாரம், உணவு, கல்யாணம் முதலிய குடும்ப காரியங்களை வேறாகவே நடத்தி வருகிறார்கள். இவ்வித ஏற்பாடுகள் இந்த சீனதேசத்திலும் ப்ராக்ஜோதிஷ தேசத்தில் சிலரிடத்திலும், பாரஸீக தேசத்திலும் நடைபெற்று வருகின்றன.

இந்த தேசவாஸிகள் ஓடம், தோரணி முதலிய ஜலத்தை தாண்டும் ஸாதனங்களை வெகுநாளாய் நடத்தி வருகிறார்கள். இந்த தேசத்தை முக்காலத்தில் கோஸலதேசத்தரசர்களும் பிறகு குருதேசத்தரசர்களும் தமது ஆளுகைக்குட்படுத்திக் கொண்டு சில நாள் ஆண்டதாயும் மஹாபாரதத்தினால் பொருள் ஏற்படுகிறது. அவர்களுக்குப் பிறகு சில ஜைனர்களும் புத்தர்களும் ஆண்டார்கள் என்றும் நன்கு விளங்குகிறது.

❋

அடிக்குறிப்பு:

1. Chinese Empire

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காமரூப தேசம்

அத்யாயம் – 38

ஸிம்மதேசத்திற்கு வடக்கிலும் ப்ராக்ஜோதிஷ தேசத்திற்கு தெற்கிலும், விதேஹதேச்த்திற்கு நேர்கிழக்கில் ஓர் அகன்றபூமியில் [1]காமரூபதேசம் அடங்கியிருக்கிறது. விந்தியமலைக்கு வடக்கிலுள்ள தேசங்களில் கோஸலதேசம் பெரியது. அதைக்காட்டிலும் இந்த காமரூப தேசம் மிகவும் பெரியது என்பதில் ஸந்தேகமே கிடையாது.

இந்த தேசத்தில் விசேஷ காடுகளும் மலைகளுமுண்டு. அவ்வித காடுகளில் மிகவும் பருத்து வளர்ந்த தேக்கு மரங்களும் கோங்கு மரங்களும் மூங்கில் காடுகளுமே அதிகமாய் வளர்ந்திருக்கின்றன. இந்த தேசத்தின் பூமிமட்டமானது மேற்கிலும் வடக்கிலும் உயர்ந்து மற்ற பாகங்களில் பிரம்மபுத்ரா நதியின் கரைவரையில் தாழ்ந்திருக்கிறது. இதன் மண்குண்டமானது மரங்களுக்கும் செடி கொடிகளுக்கும் மிக வளர்ச்சியை கொடுக்கும் என்பது எங்கும் அறிந்த விஷயமேயாகும்.

மலை

இந்த காமரூப தேசத்தின் நேர்கிழக்கில் பிரம்மபுத்ராநதியின் கரை ஓரத்தில் கஜகிரி என்று ஒரு பெரிய மலையும் அதற்கு மேற்கில் அச்வகிரி என்று மற்றொரு மலையுமுண்டு. இவ்விரண்டிலும் பெரிய மத்த கஜங்களும் (யானைகளும்) அச்வங்களும் (குதிரைகளும்) பரம்பரையாய் அழியாமல் வளர்ந்துவருவதால் அவ்விதகாரண பெயர் உண்டாயிற்று. இவைகள் தவிர மற்றும் அனேக சிறு குன்றுகளுமுண்டு. அவைகளில் காட்டு ஜீவஜந்துக்கள் ஆயிரக்கணக்காய் வஸிக்கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த தேசத்தில் கிழக்குபாகத்திலும் வடக்குப்பாகத்திலும உள்ள பூமியை பிரம்மபுத்ரா நதியிலிருந்து பெருகி தனி ஆறுபோல் வருகிற சில உபநதிகளிலிருந்து வரும் பெருக்கே நன்றாய் செழிப்பிக்கும்.

விசேஷம்

முன்பு அயோத்யா நகரத்தை பரிபாலனம் செய்து வந்த ரகுமஹாராஜன் திக் விஜயம் செய்து, இந்த தேசத்தை நாடிவருகையில் இதன் அரசன் அனேக ரத்னங்களையும் பொன் குவியல்களையும் அவனுக்கு காணிக்கையாக செலுத்தி அவனைப் போற்றினான் என்று காளிதாஸனது ரகுவம்ச காவ்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இந்த தேசத்தையும் சில ஜைனர்களும் ஆண்டு வந்தார்கள். இந்த தேசத்து ஜனங்கள் ஸங்கீதத்தில் மிகவும் ப்ரஸித்தி பெற்றவர்கள். இதில் அநேக கல்மண்டபங்களும் பழைய கோயில்களும் கற் சிலைகளும் எங்கும் பரவியிருக்கின்றன. அவைகள் எல்லாம் சில துஷ்ட அரசரின் ஆளுகை ஸமயத்தில் நாசப்படுத்தப்பட்டதாய் தோன்றுகிறது. இந்த தேசத்தில் உண்டாகும் கஸ்தூரி மிகவும் சிறந்தது. மிகவும் கருப்பு நிறமுடையதாயிருக்கும்.

❋

அடிக்குறிப்பு :

1. In Assam territory.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ராக்ஜோதிஷதேசம்

அத்யாயம் – 39

இருப்பிடம்

காமரூப தேசத்திற்கு வடக்கில் இமயமலையின் கிழக்கு முனை சார்பில் தங்கியிருக்கும் [1]ப்ராக்ஜோதிஷதேசம் மிகவும் பெரியது. இந்த தேசத்தின் வடக்கு பாகத்தில் பனி, குளிர், மழை மிக அதிகமாயிருப்பதால் அதில் அனேகமாய் ஜனங்கள் வஸிப்பதில்லை. தெற்கு பாக பூமியானது சற்றேறக்குறைய வாஸத்திற்கு யோக்யமானது.

இதன் பூமி மட்டம் மேற்கில் உயர்ந்து பிரம்மபுத்ரா நதி ஓரமாய் சாய்ந்திருக்கிறது. இந்த தேசத்தில் மண் பூமியும் கல் பூமியும் ஸமமாக இருக்கும். ஆகிலும் விளை பொருள்கள் நன்றாய் விளையும்.

இமயமலையின் அடித் தொடரிலிருந்து ஓடிவரும் சிறிய நதிகளின் ஜலம் பாயும் இந்த தேசத்தின் பூமிப் பாகம் எல்லாம் குளிர்ந்ததாயும் அழகிய செடிகள் மரங்கள் முதலியவைகளுடன் கூடியதாயும் எப்பொழுதும் கோதுமை முதலிய தான்யங்களை உண்டுபண்ணியும் வருகிறது.

மலை

இந்த தேசத்தில் சிலர் கற்பாறைகளில் அனேக விசித்ர வேலைகள் செய்து வருகிறார்கள் என்றும் ஏற்படுகிறது. இந்த தேசத்திற்கு புராவதீ என்னும் பெரிய நகரம் முக்யபட்டணமாகும். இது பிரம்ம புத்ராவிற்கு உபநதியான சலினீ நதியினருகில் இருப்பதாக ஏற்படுகிறது.

இந்த தேசத்தின் மேற்கில் இமயமலை ஒன்றே மிகப் பெரியது. தெற்கில் தபனகிரி என்னும் மலையும் அதற்கொப்பாகவேயிருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மற்றவிடங்களில் சிறிய மலைகளும் குன்றுகளும் எங்கும் புலப்படும். அவைகளின் அருகில் பெரும் காடுகளுமுண்டு. இந்த ப்ராக்ஜோதிஷ தேசமும் சீனதேசம் போல் மிகப் பெரியதேயாகும். (சற்றேறக்குறைய அதற்கு முக்கால் பாகம் விஸ்தீரணமுள்ளதென்றபடி) இந்த தேசத்தில் அங்கோல மரங்களும், அகழ்ஞ்சிச் செடிகளும், கோரைகளும், ஸமபூமியிலும், காடுகளிலும் ஏராளமாய் வளர்ந்திருக்கின்றன. அவ்வித கோரைகளாலும் சில மரங்களின் பட்டைகளின் மெல்லிய நூல்களாலும் இந்த தேசத்து ஜனங்கள் பாய், உட்காரும் சணல் தடுக்கு, (ஜமக்காளம்) குடை முதலிய சில ஸாமான்களை விசித்ரமாய் செய்கிறார்கள்.

நதி

இமயமலையின் உச்சியில் மானஸ ஸரஸ்ஸுக்கு கொஞ்சம் கிழக்கு பாகத்தில் உண்டாகும் பிரம்மபுத்ராநதி இந்த தேசத்தின் மேற்கில் அம்மலையிலிருந்து இறங்கி தெற்கு முகமாய் வெகுதூரம் சென்று இந்த ப்ராக்ஜோதிஷ தேச பூமியை செழிப்பிக்கிறது. இந்த நதியின் விசேஷப் பாய்ச்சலினால் பலவித விளைபொருள்கள் உற்பத்தியாகின்றன. இந்த பூமியில் ஸஞ்சரிக்கும் பிராணிகள் கங்கைக்கரையில் வளர்வது போலவே மிக்க செழுமையாய் வளரும். அவைகளில் பசுக்களும் ஆடுகளும் ஆயிரக்கணக்காய் வளருகின்றன.

விசேஷம் : நரகாஸுரன் வரம்

இந்த ப்ராக்ஜோதிஷ தேசத்திற்கு ப்ராக் ஜோதிஷபுரம் என்னும் நகரமே முன்பு ராஜதானியாயிருந்தது.

பூமிதேவிக்குப் புத்திரனாய் பிறந்த நரகாஸுரன் என்பவன் அந்த நகரத்தில் நிகும்பன், பஞ்சஜனன், முரன், ஹயக்ரீவன் என்னும் நான்கு அஸுரர்களை நான்கு திக்குக்கு காவலராக ஏற்படுத்திக் கொண்டு பலத்தின் கர்வத்தினால் தானும் அனேக கொடியச் செயல்களையும் நடத்தி வந்தான். தேவர்களுக்குத் தாயாகிய அதிதி என்பவளின் இருகாதில் விளங்கியிருந்த ரத்னகுண்டலத்தை கைப்பற்றும் வண்ணம் அந்த ஸ்திரீயை எதிர்த்து பல உபத்திரவங்கள் செய்தான். அதைக் கண்டு ஸஹிக்காமல் இந்திரன் த்வராகாபுரியில் அவதரித்திருந்த ஸ்ரீகிருஷ்ண பகவானை வேண்டிக் கொள்ளவே, அவரும் இந்த ப்ராக்ஜோதிஷ தேசத்தின் மீது தமது யாதவப்படையை நடத்தி முதலில் அந்நான்கு அஸுரர்களைக் கொன்று முடிவில் அந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நரகாஸுரனையும் ஸம்ஹரித்தார். அப்பொழுது அவனது தாயாகிய பூமி தேவி பகவானை வேண்டிக் கொண்ட வண்ணம் அவன் இறந்த காலமாகிய உதயகாலத்தில் எல்லோரும் மங்கள ஸ்நானஞ்செய்து சுபத்தை கொண்டாடும்படி தீபாவளி என்னும் பண்டிகை முதலில் இந்த தேசத்திலே ஏற்பட்டு பிறகு மற்ற தேசம் முழுமையிலும் பரவியதாக மஹாபாரத ஸபாபர்வத்தில் ஐம்பத்தாறாவது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

❋

அடிக்குறிப்பு :

1. Mostly in Assam and Partly in Bengal probably.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸிம்மதேசம்

அத்யாயம் – 40

இருப்பிடம்

[1]ஸிம்மதேசம் வங்கதேசத்திற்கு நேர் கிழக்கிலும் காமரூப தேசத்திற்கு தெற்கிலும் பிரம்ம புத்ரா நதியின் மேற்குக்கரையில் உதயகிரிவரையிலும் பரவி இருக்கிறது.

இதன் பூமிமட்டம் இதற்கு கிழக்கில் ஓடும் பிரம்மபுத்ரா நதியின் அடித்தரைக்கு ஸமமாகவே அமைக்கப்பட்டிருப்பதால் அதன் வெள்ளப் பெருக்கினால் எங்கும் மிகவும் செழுமையடைந்ததாகவே இருக்கிறது.

மலை, நதி

இந்த ஸிம்மதேசத்தின் பூமியில் அங்கங்கு பெரிய மலைகளும் குன்றுகளும் இருந்தபோதிலும் காடுகள் கொஞ்சம் தான் உண்டு. அவைகளிலும் உபயோகமுள்ள அனேக மரங்களும் செடி கொடிகளும் அதிகமாய் வளர்ந்திருக்கின்றன. நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உதவிபுரியும் பிராணிகளே இதில் உண்டு. கொடிய மிருகங்களே இல்லை என்றே சொல்லலாம். அவ்வித ஜீவராசிகளுக்குள் பசுக்களும் ஆடுகளுமே விசேஷமாய் வளரும்.

இந்த தேசத்தின் மேற்குபாகத்தில் தெற்குமுகமாய் ஓடும் ரேவதி நதியானது பல பிரிவுகளாய்ப் பிரிந்து கிழக்கிலும் ஓடி இந்த தேச பூமி யில் பாய்கிறது. மேலும் கிழக்கு பாகத்தில் ஓடும் பிரம்மபுத்ரா நதியின் பிரிவுகளாலும் அனேக இடங்களில் பாய்ச்சல் ஏற்பட்டுவருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷம்: த்ரிசங்குராஜ விருத்தாந்தம்

இந்த தேசத்தில் அனேக பெரிய நகரங்களுண்டு. அவைகளுள் பரந்தாபுரி என்பதே சிறந்ததாகும். அதில் ஸ்ரீ காளிதேவியின் ஆலயம் வெகு விமரிசையாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. காளிதேவியின் பாதாரவிந்தங்களில் பக்தி செலுத்தும் சிலர் அதில் எப்பொழுதும் வஸித்துவருகிறார்கள். அந்தக் கோயிலுக்கு கிழக்குபாகத்தில்தான் முன்பு த்ரிசங்கு என்னும் சூர்யவம்சத்தரசன் தனது குலகுருவாகிய வஸிஷ்ட மஹரிஷியை நாடி தான் மானிட சரீரத்துடன் ஸ்வர்க்கத்தில் வஸிக்கும்படி தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோள் தப்பு என்று அம்முனிவர் மறுத்தார். உடனே அவரது புத்ரர்களாலும் நிராகரிக்கப்பட்ட அந்த த்ரிசங்குராஜன் இவ்விடத்தில் (காளிகோயிலுக்கருகில்) ஓர்வித காரணத்தினால் கடும் தவம்புரியும் விச்வாமித்ர மஹரிஷியை சரணமடைந்ததும் அவர் ஒருவாறு அவ்வரசனை ஸ்வர்க்கத்தில் ஸ்தாபித்தவிஷயமும் மஹாபாரதத்திலும் ராமாயணத்திலும் நன்றாய்க் கூறப்பட்டிருக்கிறது.

அனேக வருஷக்காலம் சென்ற பிறகு அதே சூர்ய வம்சத்தில் பிறந்த ரகுமஹாராஜன் திக்விஜயம் செய்து வருகையில் இந்த தேசத்தை அக்காலத்தில் ஆண்டுவந்த அரசன் அவ்வித படை எழுச்சியைக் கண்டு பயந்து உடனே வணங்கி ரகுராஜனுக்கு கப்பம் செலுத்தினான் என்று காளிதாஸனது ரகுவம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது.

❋

அடிக்குறிப்பு:

1. Probably the portion now occupied by Chittagong.

   இதை சிலர் ஸூம்மதேசம் என்று சொல்லுவார்கள். காளிதாஸன் மல்லிநாதன் முதலியவர்களின் நூலில் ஸிம்மதேசம் என்பதாகவே வரையப்பட்டிருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உத்கலதேசம்

அத்யாயம் – 41

இருப்பிடம்:

[1] உத்கலதேசமானது சித்ரகூடமலைக்குத் தெற்கிலும் ஹேஹயதேசத்திற்கு கிழக்கிலும் மஹோததியின் கரைமுதல் வைதரணி நதி உற்பத்தி ஸ்தலம் வரையில் பரவியிருக்கிறது.

இந்த தேசபூமி முழுமையும் நிலவளத்தில் சிறந்ததேயாகும். கத்திரிக்காய், சேம்பு முதலிய பதார்த்தங்களும், கோதுமை, கடலை, நெல் முதலிய தான்ய சாதிகளும் விசேஷமாய் இதில் உற்பத்தியா கின்றன. இதன் மண் மிகவும் குளிர்ந்திருப்பதுமன்றியும் மிக மிருது வாயும் இருக்கும். மேற்கில் உயர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் கிழக்கு கடல் ஜலமட்டத்துக்குச் சரியாய் பூமிமட்டம் தாழ்ந்திருக்கிறது.

இந்த தேசத்தில் ஓடும் மஹாநதியின் தென்பாகம் எல்லாம் மேகல தேசம் என்றும், வடக்கில் வைதரணீ நதி ஸமீபம் எல்லாம் பல்லாடதேசம் என்றும் இப்படி இருவித உபதேசங்களையுடைய தாகவும் ஏற்படுகிறது.

மலை, நதி

இந்த தேசத்தின் மேற்கில் ஹேஹயநாட்டுக்கு ஸமீபத்தில் கந்தர்வகிரி என்ற மலை ஒன்றுண்டு. அதன் அருகிலிருந்து மஹாநதி கிளம்பி பெரியதாய்ப் பரவி இந்த தேசத்தைக் கடந்து கிழக்குக் கடலில் வீழ்கிறது.

சித்ரகூடத்திற்கும் கயாக்ஷேத்ரத்திற்கும் வெகுதூரம் தெற்கில் ஒரு மலை உண்டு. அதிலிருந்து வைதரணீ நதி உற்பத்தியாகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்றியும், ஹேஹயநாட்டின் கிழக்குக் கோடியிலுள்ள பிரம்மகிரியிலிருந்து ப்ராம்மண நதி என்று ஒரு நதியும் பெரியதாகவே உண்டாகி இந்த உத்கலதேச பூமியைச் செழிப்பித்து கிழக்குக் கடலுடன் சேருகிறது. இந்த நதிகள் எல்லாம் மிக புண்யநதிகள் என்றே நமது ஆர்யர்களால் மிகவும் மதிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் கரையிலும் அதற்கு ஸமீபத்திலும் அனேக பெரிய கிராமங்களும் தர்மஸ்தலங்களும் அழகிய தோப்பு தோட்டங்களும் விசேஷமாய் நெடு நாளாய் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இந்த தேசத்தில் துஷ்ட மிருகங்களே கிடையாது. தயையற்ற மனிதருமே காணப்பட மாட்டார்கள் என்றும் இவ்வித மஹிமையும் இதற்கு உண்டு என்றும் சிலர் சொல்வதுமுண்டு.

விசேஷம்: புத்தர்கள் மிகுதி

இந்த தேசத்தை சில புத்தர்கள் கைப்பற்றி ஆண்டு வந்ததாயும் அவர்களாலேயே அனேக கட்டடங்களும் கோயில்களும் குளங்களும் மடங்களும் கட்டப்பட்டதாயும் இப்பொழுதும் காணப்படுகின்றன வென்று வேமன்னன் செய்த தெலுங்கு காவ்யத்தில் வரையப் பட்டிருக்கிறது.

புத்தர்களுக்கு முன் மகததேசத் தரசருடைய ஆளுகைக்கும் பிறகு சந்த்ரகுப்தன் அரசுக்கும் ஸ்வாதீனமாய் இந்த தேசம் இருந்ததாயும் விஷயம் கருதப்படுகிறது.

❋

அடிக்குறிப்பு

1. Orissa என்று தற்காலத்தில் பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வங்க தேசம்

அத்யாயம் – 42

இருப்பிடம்

[1]வங்கதேசம் அங்கதேசத்திற்கு கிழக்கிலும் மகததேசத்தின் வடக்கு நுனியில் கங்கையும் யமுனையும் ஒன்று சேருமிடமாகிய ப்ரயாகை க்ஷேத்ரம் முதல் வடக்கில் காசி வரையிலும் கிழக்கில் (காளிகட்டம்) என்னும் கல்கத்தா நகரம் வரையிலும் அதற்கும் வெகுதூரம் கிழக்கில் உதயகிரி வரையிலும் பரவியிருக்கிறது. (காசிநகரம் முதல் கங்கைக்கு வடக்கு பாகபூமி முழுமையும் வங்கதேச பூமி என்பதாயிற்று)

கல்கத்தா நகரமிருக்கும் மாகாணத்திற்கு பௌண்ட்ர தேசம் என்றும் அதற்கு மேற்கில் கரவடம் என்றும் இதற்கு இவ்விதம் இரண்டு உபதேசங்களுமுண்டு.

மலை

இந்த தேசத்தில் சிறிய மலைகள் அனேகமுண்டு. அவைகளின் இடையில் காடு பூமி கொஞ்சமாகவும் செழிப்பான நல்லபூமியே அதிகமாகவுமிருக்கும். அவ்வித மலைகளில் ஹரகிரி மற்றும் ஹரிகிரி என்னும் இரண்டு மலைகளே மிகவும் சிறந்தவைகளாகும். அவைகளின் அடித்தாழ் வரையில் மஹாவிஷ்ணுவின் ஆலயமும் சிவபிரானது ஆலயமும் மிக சிறப்புடன் கூடியதாய் இப்பொழுதும் காணப்படுகின்றன.

இந்த வங்க தேசத்தில் பெரிய காடுகளே கிடையாது. சிலவிடங்களில் சிறிய காடுகள்தான் உண்டு. அவைகளிலும் துஷ்ட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிருகங்கள் பெரும்பாலும் கிடையாது. அழகிய மரங்களும் செடிகொடிகளும் அனேக மூலிகைகளும் எங்கும் விசேஷமாய் உண்டு.

நதி

இமயமலையின் மேல்பாகத்தில் உற்பத்தியாகி பாஞ்சால தேசத்தின் வடக்கு எல்லையில் ஹரித்வார் ஸமீபத்தில் பூமியில் இறங்கி வரும் கங்கையானது இந்த வங்க தேசத்திற்கு மேற்கிலுள்ள ப்ரயாகை க்ஷேத்திரத்தில் யமுனாநதியை உபநதியாகச் சேர்த்துக் கொண்டு முன்சொன்ன கல்கத்தா நகரத்திற்கு தெற்கில் பலபிரிவு களாய்ப் பிரிந்து கிழக்கு ஸமுத்திரத்தில் வீழ்கிறது. இப்படிப்பட்ட கங்காநதியே இந்த வங்க தேசத்திற்கு ஸ்நான பாய்ச்சல்களுக்கு முக்ய நதியாகும்.

இந்த கங்காநதியின் ஜல பாய்ச்சலைப்பெற்ற இந்த தேசம் முழுமையும் மிகவும் மிருதுவாயும் அனேகவித பயிர்த்தொழிலுக்கு மிகவும் தகுந்ததாயுமிருக்கிறது.

விசேஷம்: புண்யஸ்தலம் மிகுதி

இந்த தேசத்திற்கு கர்ணஸுவர்ணம்[2] என்னும் நகரமே முன்பு பெரிய நகரமாயும் ராஜதானியாவும் இருந்ததாய் ஏற்படுகிறது. இந்த தேசத்தின் மேற்கு எல்லையிலிருக்கும் காசி[3] நகரமே நமது ஆர்யர்களுக்கு முக்யமான புண்யஸ்தலம் என்று எங்கும் ப்ரஸித்தம். இந்த சிறந்த விஷ்ணுஸந்நிதானம் பொருந்திய ஆலயமும் சிவலிங்க ஸன்னிதானம் பொருந்திய ஆலயமும் விளங்குகின்றன. அவைகளின் சிவாலயங்களே மிகவும் ப்ரஸித்தி பெற்றது. அவைகளில் அனேக ஸ்வயம்புலிங்கமூர்த்தியாய் ஸ்ரீகைலாஸபதியே அவதாரம் செய்திருக்கிறார் என்று காசிமாஹாத்மியம் முதலிய அனேக நூல்களில் காசியின் மஹிமையை நன்றாய்க் காணலாம். இந்த காசி க்ஷேத்திரத்தில் சரீரத்தை விடுகிறவர்களுக்கு ஸ்ரீவிச்வநாத ஸ்வாமியே தாரகமந்த்ரத்தை வலது காதில் உபதேசிக்கிறார் என்றும் நாம் கேள்விப்படுகிறோம். இதில் வஸிப்பவர்களுக்கு மோக்ஷமே தவிர மறுபிறப்பில்லை என்பதே நமது ஆர்யர்களின் ஸித்தாந்தம்.

இந்த காசிநகருக்கு அதிஷ்டமான தேவதையாகிய ஸ்ரீவிசாலாட்சியம்மனது திருக்கோயிலை ப்ரதக்ஷிணம் செய்து பக்தி யுள்ள அனேக பெரியோர்களும் ஸித்தர்களும் முக்தியடைந்திருப்ப

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாயும் நன்கு விளங்கக்கூடிய சில சின்னங்களும் இப்பொழுதும் காணப்படுகின்றன. இந்த தேசத்து ஜனங்கள் கல்வியில் மிகவும் ஆவலுடையவர்களாய் அதில் தேர்ச்சி அடைந்து நெடுநாளாய் பூர்வீகர்களின் நூல்களைக் காப்பாற்றி (ப்ரசுரித்து) வெளியிட்டு வருகிறார்கள். அவர்களில் சிலர் வைத்ய சாஸ்திரத்தில் மிகவும் சிரமப்பட்டு தேறுதலையடைந்து ஜனங்களுக்கு உண்டாகும் ஸகல வியாதிகளையும் நீக்கவல்ல மருந்துகளைச் செய்ய வல்லவர்கள். ரணவைத்தியத்திலும் மிகவும் கைதேறிய அனேக வைத்தியர்கள் ஆதிகாலம் முதல் இதில் விளங்கி வருகிறார்கள்.

ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் கங்காநதி ஜலத்தையே உபயோகிக்கும் இந்த தேசத்து ஜனங்கள் பெரும்பாலும் நல்ல அழகையுடையவர்களாகவேயிருக்கிறார்கள். மாதர்களிலும் அனேகர் நல்ல அழகு பொருந்தியவர்களாயும் ஸங்கீத சாஸ்திரம் பயின்றவர்களாயும் தர்மசிந்தையுடையவர்களாயும் காண்கிறார்கள். காசிநகரத்தை சிலர் காசிதேசம் என்றே வழங்குவார்கள். இப்படிப்பட்ட காசி சேர்ந்த இந்த தேசம் முழுவதையும் முன்பு அனேக இந்திய அரசர்கள் வெகுநாள் பரிபாலித்து வந்ததாயும் ஏற்படுகிறது.

❋

அடிக்குறிப்புகள்:

1 வகரத்திற்கும் பகரத்திற்கும் பேதமில்லாமையை முக்ய காரணமாகக் கொண்டு வடதேசத்தாரும் ஐரோப்பயரும் இதை பெங்கதேசம் (Bengal) என்று வழங்கி வருகிறார்கள்.

2 இதற்கு Kansana என்றுஇப்பொழுது பெயர் வழங்கப்படுகிறது.

3 Benares என்றும் இப்பொழுது பெயர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அங்கதேசம்

அத்யாயம் – 43

இருப்பிடம்

வங்கதேசத்தின் வடமேற்கிலும் விதேஹதேசத்திற்கு தெற்கிலும் கண்டகீநதியின் ஸமீபத்தில் [1]அங்கதேசமிருக்கிறது. இதுவும் ஓர் அழகிய தேசமாகும்.

இதன் பூமிமட்டம் மேற்கில் உயர்ந்தும் கிழக்கில் சாய்ந்தும் மிகவும் நல்ல மண்ணுடன் கூடியதாய் விளங்குகிறது. இந்ததேசத்திற்கு வடக்கில் அருணம் என்றும் தெற்கில் அபரகாசி என்றும் இவ்விதம் இரண்டு மாகாணம் என்னும் உபதேசமிருப்பதாய் ஏற்படுகிறது. இந்த தேசத்தில் எப்பொழுதும் மழை விடாமல் பெய்து கொண்டே யிருக்கும்.

முன்பு கோஸலதேசத்தை தசரதன் அரசுபுரிகையில் ருஷ்ய ச்ருங்கர் என்னும் கலைக்கோட்டு மஹாமுனிவ்ரை இந்த தேசத்தில் அவர் ஓர்வித தந்திரமாய் வரவழைத்தார் அல்லவா! அவரது கருணையால் அதுமுதல் நாளைக்கும் மழை ஏராளமாய் பெய்து வருகிறது என்றே இந்த தேசத்தின் பெரியோர்கள் சொல்லும் வசனத்தையும் கேள்விப்படுகிறோம்.

மலை, நதி

இந்த அங்கதேசத்தின் கிழக்கு பாகத்தில் அனேக மலைகள் உண்டு. அவைகளுள் மோதாகிரி என்பதே மிகவும் உயர்ந்தது. வெகு ப்ரஸித்தி பெற்றதாகும். அந்த மலையின் சார்பிலும் மற்று முள்ள இடங்களிலும் பெரிய அரண்யங்களும் அவைகளில் கொடிய மிருகங்களும் வெகுவாய் ஸஞ்சரிக்கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த அங்கதேசத்தின் வடக்கில் சம்பா[2] என்னும் நகரத்தின் ஸமீபத்தில் கண்டகீ[3] நதியும் கௌசிகீ[4] நதியும் சேர்ந்து வருகின்றன. அந்த கண்டகீ நதியில் ஸாளக்ராமங்கள்[5] என்னும் ஓர்வித கல் சிலைகள் உண்டாகின்றன. அதில் சங்க உருவமும் சேர்ந்த ஸாளக்ராமத்திற்கு கேசவ மூர்த்தி என்றும், தாமரை புஷ்பந்தினுருவமும் கதாயுதத்தின் உருவமும் தோன்றும் ஸாளக்ராமத்திற்கு நாராயணமூர்த்தி என்றும், சங்கத்தின் உருவமும் தாமரை புஷ்பத்தின் உருவமும் தோன்றும் ஸாளக்ராமத்திற்கு மாதவ மூர்த்தி என்றும் இவ்விதமாய் அனேகவித ஸாளக்ராமத் தின் ஸ்வரூபத்தையும் லக்ஷணத்தையும் அவ்வித மூர்த்திகளை தினந் தோறும் பூஜிப்பதினால் உண்டாகும் நற்பயனையும் பாகவதத்திலும் விஷ்ணுபுராணத்திலும் காணலாம். மற்றொரு நதியாகிய கௌசிகீ நதியின் கரையில் முன்பு விச்வாமித்ரர் பர்ணசாலையமைத்துக் கொண்டு தவம் செய்தார். இவ்வித மஹிமை வாய்ந்த கண்டகீ நதியும் இந்த அங்கதேசத்திற்கு முக்கியமாகும். இவைகளின் பெரும் ஜலப் பெருக்கே இத்தேச பூமியை செழிப்பித்து நல்ல விளை பொருள்களை உண்டுபண்ணுகின்றன. இவ்விரண்டு நதிகளும் கங்கா நதி போலவே மிகவும் புண்ய நதிகள் என்றே புகழ்ச்சி பெற்றிருக்கின்றன. இமய மலையின் உச்சியிலிருந்தே இவ்விரண்டு நதிகளும் உண்டாகின்றன என்னும் விஷயங்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கலாம்.

விசேஷம்: வாமனாவதாரம்

இந்த தேசத்திற்கு ராஜதானியாகிய சம்பாநகரத்திற்கு வெகு தூரம் தெற்கு திக்கில் அகஸ்த்யாச்ரமம் என்று ஒரு திவ்ய ஸ்தலமிருக்கிறது. அவ்விடத்தில் முன்பு ஸ்ரீராமனுக்கு அகஸ்திய மஹரிஷி அனேக பூர்வ சரித்ரங்களை சொன்னதாகவும் ராமாயணத்தில் வால்மீகிரிஷி கூறியிருக்கிறார்.

மேலும், அந்த அகஸ்த்தியாச்ரமத்தின் ஸமீபத்திலே முற்காலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு வாமனாவதாரம் செய்து முதல் அடியை வைத்து அளந்ததாயும் வாமன புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோலவே, முன்பு மன்மதனும் தனது மோஹன சக்தியினால் சிவபிரானுடைய யோகத்தை கெடுத்த சமயத்தில் அடங்காத கோபத்தையடைந்த ஈச்வரன் தமது மூன்றாவது கண்ணைத்திறந்து பார்க்கும்பொழுது இமயமலையின் தாழ்வரையில் (ஈச்வரனுக்கு எதிரில்) நின்று கொண்டிருந்த மன்மதனுடைய சரீரம் திடீரென்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கரிக்கட்டை போல எரிந்து ஆகாயத்தில் கிளம்பி துள்ளி இந்த அங்கதேசத்தின் ஓர் பாகத்தில் வீழ்ந்தது. இவ்விதம் மன்மதன் இந்த தேசத்தில் தனது அங்கத்தை (சரீரத்தை) விட்டது முதல் அங்கதேசம் என்று பெயர் உண்டாயிற்று என்று போஜசம்புவிலும் ராமாயணத்தி லும் புலப்படுகிறது.

குந்திதேவியின்[6] மூத்தகுமாரனான கர்ணன் என்பவன் பால்யவயது முதல் துரியோதனனிடம் வளர்ந்து பிறகு அவனால் நீதியாய்க் கொடுக்கப்பட்ட இந்த அங்கதேசத்தில் அதிகாரத்தைப் பெற் றுக் கொண்டு, அங்கதேசத்தரசன் என்று பெயருடன் மிகவும் ப்ரஸித்தி யாய் விளங்கினான். கர்ணனுக்குப் பிறகு பாண்டவர்களும், அவர் களுக்குப் பிறகு மகததேசத்தாரும், அதற்குப் பிறகு சிலபுத்தர்களும் இந்த தேசத்தை வெகு ஆவலுடன் பரிபாலித்ததாகவும் ஏற்படுகிறது.

❄

அடிக்குறிப்புகள் :

1. இந்த தேசத்தரசர் குலத்திலுதித்த ஒருவனுடைய பெண்ணாகிய அம்பாலிகையை பாண்டுமஹாராஜனது தகப்பனாகிய விசித்ரவீரியன் கலியாணம் செய்துகொண்டான் என்றும் மற்றும் அனேகவித விஷயங்களும் இந்த தேசவிஷயமாய் மஹாபாரதத்தில் காணலாம்.
2. Bhaggalpur
3. Gandaki River
4. Kosi River
5. இதன் மற்றைய விவரங்களை ஸாளக்ராம நிர்ணயம் என்னும் புஸ்தகத்தில் காணலாம்.
6. இந்த கர்ணன் குந்திதேவியினிடம் சூர்யனுக்குப் புத்திரனாய்ப் பிறந்த விபரத்தையும் தானம் செய்யும் விஷயத்தில் இவனுக்கு நிகர் ஒருவருமில்லை என்று அவ்வித புகழ்ச்சியடைந்தவனாய் மஹாபாரத யுத்தம் நடக்கும் தருணத்தில் ஒருகிழ ப்ராம்மணன் உருவத்தை அடைந்து கிருஷ்ணன் யாசனை செய்தபொழுது தனது வைரக்கல் மயமான பற்களை அவருக்குக் கொடுத்த விஷயத்தையும், மற்றும் அநேகவிதமாய் இந்த கர்ணனால் செய்யப்பட்ட அற்புதச் செயல்களையும் மஹாபாரதத்தில் விவரமாய்க் காண்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகத தேசம்

அத்யாயம் – 44

இருப்பிடம் : மண்ணின் குணம்

[1] மகததேசம் காசிக்குத் தெற்கில் யமுனையும் கங்கையும் கூடும் ப்ரயாகை என்னும் க்ஷேத்ரம் முதல் கிழக்கில் கயா க்ஷேத்ரத்தையும் அடக்கிக் கொண்டு தெற்கில் சித்ரகூடமலை அடிவரையில் பரவியிருக்கிறது.

இந்த தேசத்தின் பூமிமட்டமானது நடுவில் உயர்ந்தும் நான்கு பக்கங்களிலும் சரிவாய்த் தாழ்ந்துமிருக்கிறது. இதன் மண் குணமும் மிகவும் சிறந்ததேயாகும். மண்ணும் மணலும் கலந்த பூமிக்குள் இந்த மகததேசத்தின் பூமிதான் விளைபொருளுற்பத்திக்கும் ஜனங்கள் வாஸம் செய்வதற்கும் தகுந்ததேயாகும்.

குளிர்ந்த குணமுடைய இந்த தேசத்தில் வஸிப்பவர்களுக்கு சரீரத்தில் சொரி, சிரங்கு, படை முதலிய ரோகங்கள் ஒரு பொழுதும் உண்டானதில்லை என்று எங்கும் ப்ரஸித்தியுண்டு. ஏனெனில், இந்த தேசத்தின் இயற்கையான மண் குணத்துடன் நல்ல ஜலத்தின் குணமும் சேர்ந்ததேயாகும். வடக்கிலுள்ள ப்ரயாகையில் கங்கா யமுனா நதிகள் ஜலப்பெருக்கும், கிழக்கிலுள்ள பல்குனீ நதியின் பெருக்கும் தெற்கில் சோணாநதியின் ஜலப்பெருக்கும் எப்பொழுதும் குறைவற்றதாய் செல்லுவதாலும் இந்த நதிகளின் ஜலத்தின் குணம் சிறந்ததற்கு காரணமாகும்.

ஆகையால் மற்ற தேசங்களைக் காட்டிலும் மகததேசத்தில் வஸிப்பவர்களுக்கு தேக ஸௌக்யம் அதிகமாய் உண்டாகும் என்பது திண்ணம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை, நதி

இந்த தேசத்தின் தெற்கில் நிலைபெற்றிருக்கும் சித்ர கூட மலையே இதற்கு முக்யமாகும். இந்த மலையின் தொடர்ச்சிக்கு கமட்டாகிரி என்று பெயர் வழங்குவாருமுளர்.

இந்த மலையின் அருகிலே பல்குனீநதி உற்பத்தியாகிறது. இது மிகவும் ஆழமுடையதாய் அதிக அலைகளுடன் வேகமாய் செல்லும் நதியாகும். இதற்கும் சில உப நதிகளுண்டு. கங்கையும் யமுனையும் சேருமிடமாகிய ப்ரயாகையிலுள்ள நதிகளும் இந்த தேசத்திற்கு முக்கியமாகும். இவைகள் தவிர தேவிகாந்தி, கிரிகாணதீர்த்தம், வைதரணிநதி முதலியதும் இந்த தேசத்தின் தெற்கில் சித்ரக்கூட மலையின் தெற்கில் உற்பத்தியாகி கங்கையுடன் சேர்ந்து கிழக்குக் கடலில் வீழ்கின்றன. இவைகளும் முக்கிய புண்ய நதிகள் என்றே நமது ஆரியர்களால் மிகவும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவ்வித நதிகளின் கரைகளிலும் மலைகளின் அருகிலும் பெரிய காடுகளுமுண்டு. அவைகளில் முட்செடி, ஈச்சங்கொடி, பிரம்பு, காட்டுவாழை, கருடமல்லி, தேக்கு முதலிய உபயோகமுள்ள மரங்களும் விசேஷமாய் வளர்ந்திருக்கின்றன.

விசேஷம்: கயாஸுரன் விஜயம்—மகதராஜ வம்சாவளி

ப்ரயாகை ஸ்தலமும், அதற்கு கிழக்கில் கயாக்ஷேத்ரமும் அதற்குத் தெற்கில் உருபில்வம்[2] என்னும் ஸ்தலமும் இவ்விரண்டுக்கும் கிழக்கில் கிரிவ்ரஜம்[3] என்னும் ஒரு மாகாணமும் இந்த தேசத்தில் பிரஸித்தமானவைகள். இவைகளில் கயாக்ஷேத்திரத்திற்கு தெற்கில் கோலாஹலகிரி என்று ஒரு மலையுண்டு.

அறுபத்துநான்கு கலைஞானம்

அதன் அருகிலிருந்து மாகதீ என்று ஒரு நதி உண்டாகிறது. அதுவே கயாக்ஷேத்ரம் உண்டாவதற்குமுன் மிக ப்ரஸித்தியாயிருந்தது என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட மாகதீ நதியின் தெற்கு பாகத்தில் ஒருவனமுண்டு. அதற்கு தர்மாரண்யம் என்று பெயர். அதற்குக் காரணம் என்னவென்றால்—முன்பு ப்ருஹஸ்பதியின் பத்னியாகிய தாரை என்பவளை சந்த்ரன் ஆக்ரமித்த ஸமயத்தில் பரஸ்திரீ ஸங்கமம் செய்யலாகாது என்னும் தர்மத்தின் தேவதை ப்ரமமாவினது ஆக்ஞை யினால் முதலில் இங்குவந்து தங்கியது. அதுமுதல் தர்மாரண்யம் என்று பெயர் பரவலாயிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்ததேசத்தின் வடக்கு எல்லையில் ஓடும் கங்காநதியின் கரையில் விளங்கும் கயாக்ஷேத்திரத்தில் எப்பொழுதும் நமது ஆரியர்கள் தங்கள் பித்ருக்களை உத்தேசித்து தர்ப்பணம் ச்ராத்தம் முதலியவைகளை நெடுநாளாய்ச் செய்து வருகிறார்கள். இந்த கயாக்ஷேத்ரத்தின் மஹிமையைப் பற்றி வாயுபுராணத்திலும் ப்ரம்மாண்ட புராணத்திலும் விசேஷமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் கயாக்ஷேத்திரத்தில் கயாஸுரன் என்பவனுடைய சிரஸில் முன்பு ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் தமது பாதக்கமலத்தை வைத்து அவனை அடக்கிய விஷயமும், இந்த க்ஷேத்ரத்தில் ஒரு கற்பாறையில் தோன்றும் அந்த விஷ்ணு பாததர்சன விஷயமும் கச்யப் பதம் கணேசபதம் அக்ஷய வடவ்ருக்ஷ ஸ்மரணம் முதலியவை களின் மஹிமையையும் வெகுவிபரமாய் கயாமா ஹாத்மியத்தில் காணலாம்.

ஆதிகாலத்தில் இந்ததேசத்தை ஆண்டுவந்த ஜராஸந்தனுடைய பெண்ணாகிய அஸ்திப்ராப்தி என்பவளையும் கம்ஸன் விவாஹம் செய்து கொண்டதாயும் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஜராஸந்தன் முதற்கொண்டு அனேக அரசர்கள் இந்த மகததேசத்தை விசேஷமாய் ஆண்டுவந்தார்கள். ஆகையால் அவர்களுடைய வம்சாவளி இங்கு விவரிக்கப்படுகிறது.

மகதராஜ வம்சாவளி

பாண்டவர்களின் ஸமகாலத்தில் இந்த மகததேசத்தை அரசு புரிந்துவந்த ஜராஸந்தனுடைய வம்சாவளி இங்கு விவரிக்கப்படு கிறது:–

ஜராஸந்தன்
|
ஸஹதேவன்
|
மார்ஜாரி
|
ச்ருதச்வரஸ்
|
அயுதாயுஸ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிராமித்ரன்
|
ஸுநக்ஷத்ரன்
|
பருஹத்கிஸனன்
|
கர்மஜித்
|
ச்ருதஞ்ஜயன்
|
விப்ரன்
|
சுவி
|
க்ஷேமன்
|
ஸுவ்ருதன்
|
தர்மஸூத்ரன்
|
ஸமன்
|
த்ருடஸேனன்
|
ஸுமதி
|
ஸுபலன்
|
ஸுநீதன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யஜித்

விச்வஜித்

புரஞ்ஜயன் ...(என்னு மிவ்வரசன் கலியுகத்தில் (1000) ஆயிரம் வருஷத்தில் தோன்றி, மிகவும் ஸாமர்த்திய முடையவனாய், தனது வம்சத்தாரைவிட அதிக பூமியை வசப்படுத்திக் கொண்டு ஆண்டுவரும் நாளில் இவனது மந்திரியாகிய சுநகன் என்பவன் நீதிமுறை நழுவிய இவனைக் கொன்று இவனது புத்திரனாகிய ப்ரத்யோசனன் என்பவனுக்கு அரசு முடிசூட்டினான்.

ப்ரத்யோதனன்

பாலகன் ...(முதற்கொண்டு இவ்வரசர் முறை மாறுபட்டு தாறுமாறுமாகிய வம்சத்தில் ஸம்பந்தம் ஏற்பட்டு கலியாணம் முதலிய ஒழுங்கு குறைந்துவிட ஆரம்பித்தது. ஆகிலும் ராஜ்யாதிகாரம் குறையவில்லை.)

விசாகயூபன்

ராஜகன்

நந்திவர்த்தகன் ...(ப்ரத்யோதனன் முதல் இவன்வரையில் (138) நூற்று முப்பத்தெட்டு வருஷகாலம் இந்த பரத பூமியை பெரும்பாலும் அரசு செய்து வந்ததாகத் தெரியவருகிறது)

திசுநாதன்

காகவர்ணன்

க்ஷேமதர்மன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

க்ஷேத்ரக்ஞன்
|
விதிஸாரன்
|
அஜாதசத்ரு
|
தர்ப்பகன்
|
அஜயன்
|
நந்திவர்த்தனன்
|
மஹாநந்தி ...(சிசுநாகன் முதல் மஹாநந்திவரையில் பத்து அரசர்களும் (360) முன்னூற்றறுபது வருஷம் ராஜ்யத்தை பெரும்பாலும் ஆண்டுவந்ததாகத் தெரியவருகிறது.)
|
நந்தன் ...(சூத்ரஸ்திரியினிடத்தில் பிறந்தவன்.)
|
ஸுமாலன் முதலிய எட்டு புத்ரர்கள் (8) ...(முதலிய எட்டு புத்திரர்களும் நூறு வருஷ காலம் அரசுபுரிந்தவர் இவர்கள் அரசுபுரியுந் தருணத்தில் நந்தன் மிகவும் கிழவனாயிருந்தபடியால் அவனையும், இந்த எட்டு புத்திரர்களையும், சாணக்யன், என்று உலகெங்கும் ப்ரஸித்தி பெற்ற ஒரு ப்ராம்மணன் பலவித உபாயங்களினால் கொன்று மௌர்ய வம்சத்தில் பிறந்த சந்த்ரகுப்தனை அரசனாகச் செய்தான். ஆகையால் நந்தன் வரையில் தான் கலியுகத்தில் ஹரியான க்ஷத்திரியவம்சம் இருந்ததாக மஹாபாரதத்திலும், ஸ்ரீபாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. சந்த்ரகுப்தனுக்குப் பிறகு அரசு விஷயம் எல்லோருக்கும் நன்கு விளங்குமாகையால் மகதராஜ அரசமுறை சந்த்ரகுப்தன் வரையில் நிறுத்தப்பட்டது.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தனுக்குப் பிறகு சில ஜைனர்களும் பௌத்தர்களும் இந்த தேசத்தின் அதிகாரத்தைப் பெற்று அனேக விசித்ரம் பொருந்திய பல கட்டடங்களையும், கோயில்களையும் கட்டி வைத்ததாயும் ஏற்படுகிறது. அவந்தி தேசத்தைப் பரிபாலனம் செய்த போஜராஜன் காலம் முதல் இந்த இந்தியாவில் அறுபத்து நான்கு கலைஞானம் பரவலாயிற்று. அவைகளில் அனேக கலைஞானத்தின் முறை இந்த மகத தேசத்தில் விளங்கும் ப்ராயாகையில் பரவியிருந்ததாய் இப்பொழுதும் ஏற்படுகிறது. ஆகையால் அப்படிப்பட்ட கலைஞானத்தின் பெயரும் அவைகளின் சுருக்கப் பொருளும் இங்கு விவரிக்கப்படுகிறது.

1. கீதம்

நமது இந்தியாவில் விசேஷமாய் மாதர்களாலும் சில ஸமயங்களில் (சிலவிடத்தில்) புருஷர்களாலும் வாயினாலும் வீணை முதலியவைகளாலும் பாடத் தகுந்ததாகும். பாடுகிறவர்களுக்கும் அதிக ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியதாய் பரதர், நாரதர் முதலிய பூர்வீக மஹரிஷிகளால் இந்த கீதத்தின் லக்ஷணமும் இதற்குறிய தாளமும், பாடும் காலமும் ஸங்கீத ரத்னாகரத்தில் விசேஷித்து கூறப்பட்டிருக்கிறது. கீதம், ஸங்கீதம், கானம் என்னும் இம்மூன்று பதமும் ஒரு பொருளையே குறிப்பிடுகிறது. பூர்வ ஜன்மத்தில் நல்ல புண்யம் செய்தவர்களுக்குத் தான் ஸங்கீதகலையில் தேர்ச்சி உண்டாகும். பணத்தினாலும் முயற்சியினாலும் இதைக் கற்க முடியாதென்றே சிலர் கூறுவார்கள். கீதத்தின் மஹிமைபற்றியும் ஸ்திரீராக புருஷராகங்களின் பேதங்களைப் பற்றியும் மற்றும் அனேக லக்ஷணங்களையும் ஸங்கீததாமோதரம் என்னும் புஸ்தகத்தில் வெகு விசேஷமாய் வரையப்பட்டிருக்கிறது.

2. வாத்யம்

தேவாலயங்களிலும், அரசர் முதலியவர்களின் மாளிகைகளிலும், கலியாண மண்டபங்களிலும் மற்றுமுள்ள சுப காரியங்கள் நிறைவேறும் ஸமயங்களிலும் நடைபெறத் தகுந்தது. வீணை, தம்புரு, மத்தளம், நாகஸுரம், காஹளம் முதலிய அனேகவித கருவிகளின் ஸகாயத்தினால் வாத்யம் நடைபெறத் தகுந்ததாகும். இவ்வித வாத்யங்கள் ஒவ்வொரு தேசங்களிலும் வெவ்வேறு விதமாய் அமைக்கப்பட்டு வருகின்றன. ''தாளம் இசை முதலிய வாத்தியங்களின் ஒலியைக் கேட்பதற்கு விருப்பமற்ற மனிதர் இலார்'' என்றே இதைப்பற்றிய தமிழ் பழமொழியும் உண்டு. தோல், கயிறு, மரம், இரும்பு, பித்தளை, வெள்ளி, பொன், தந்தம் முதலிய உலோகங்களினால் வாத்யக் கருவிகள் செய்யத் தகுந்தவையாகும். இவ்வித வாத்யங்களுக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்யவேண்டிய வேலைப்பாடுகளையும் காலையிலும் மாலையிலும் விசேஷமாய் வாத்யங்களை உபயோகிப் பதனால் உண்டாகும் நன்மையைப் பற்றிய விளக்கத்தையும் போஜராஜன் செய்த யுக்திகல்பத்ரு என்னும் நூலில் தெளிவாய்க் காணலாம்.

3. நர்த்தனம்

நடனம், நர்த்தனம், ந்ருத்யம் என்பவை ஒரு பொருளின் பெயரேயாகும். இது தேவநர்த்தனம் என்றும் மனுஷ்ய நர்த்தனம் என்றும் இருவகைப்படும். நடன் என்னும் நட்டுவக்காரனுடைய உதவியினாலும் நடீ என்னும் தாஸிகளாலும் பாலிகைப் பெண்களாலும் பலவிதமாய்க் கண் புருவம் நெற்றி கைகால்களால் காண்பிக்கக்கூடிய அபினயங்களுடன் கூடிய ஓர்வித பயிற்சி என்று பொருள். பரத நாட்டியம் முதலியவைகளின் முறையை யனுஸரித்து அதில் தேர்ச்சியடைந்தவர்களால் இந்த நடனம் என்னும் ஒரு கலை இப்பொழுதும் நமது இந்தியாவில் எங்கும் பரவி வருகிறது.. இதன் உட்பிரிவுகளும் மற்றும் அனேகவிதமான லக்ஷ்ணங்களும் பரதநாட்யம், ஸங்கீதராத்னாகரம் முதலிய நூல்களாலும் தொன்று தொட்டுவரும் வழியினாலும் கற்கத் தகுந்ததாகும்.

4. நாடகம்

ஸ்ரீராமன், கிருஷ்ணன், அரிச்சந்த்ரன், பிரஹ்லாதன், துஷ்யந்தன், அர்ஜுனன், நளன், புரூரவஸ் முதலிய பூர்வீக மஹான்களுடைய சரித்ரங்களை பல புஸ்தகங்களில் படித்து தெரிந்து கொள்ளாதவர்களும் (தெரிந்து கொண்டவர்களும்) கண்களால் நேரில் பார்த்து களிக்கும்படி அவரவர்களின் உருவம்போல் வேஷம் தரித்துக் கொண்டு ஆடல், பாடல், பேச்சு முதலியவைகளுடன் (அனேகம் பேர்கள் ஒன்றுசேர்ந்து) காண்பிக்கக் கூடிய ஒருவித வினோதகாட்சி என்பதாகும். ச்ருங்காரம் (ஒருவர் மேல் ஒருவர் விருப்பம் வைத்தல்) வீரம் (மஹா தைரியத்துடன் யுத்தம் முதலிய செய்தல்) கருணை (துக்கத்தினால் புலம்பல்) அற்புதம் (ஆச்சரியக்காட்சி) ஹாஸ்யம் (மிகவும் சிரிப்பு உண்டாகும் படி செய்தல்) பயாநகம் (பார்ப்போர்களுக்கு அதிக பயமுண்டு பண்ணுதல் பீபத்ஸம் 'ரௌத்ரம்' சாந்தி என்னும் இவ்வித ஒன்பது விதரஸங்களுடன் கூடிய பூர்வ சரித்ரங்களை ராஜா, மந்திரி, நாயகி, விதூஷகன் முதலிய பல பாத்ரங்களால் மிகவும் ஜாக்ரதையுடன் காண்பிக்கத் தகுந்ததாகும். இவ்வித நாடகங்களின் லக்ஷணம் முதலியதைப் ப்ரதாபருத்ரீயம் முதலிய வடமொழி நூல்களிலும் சில தென்மொழி நூல்களிலும், நன்றாய்க் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. சித்ரம்

ஜனங்களுக்கு உண்டாகக் கூடிய அனிஷ்டங்கள் நீங்கி இஷ்டங்கள் நிறைவேறும் பொருட்டும், இம்மையில் சிறந்த செல்வத்தையும், மறுமையில் பேரானந்தத்தையும் பெறுவதற்காகவும், சிவன், விஷ்ணு, ப்ரம்மா, கணபதி, ஸுப்ரம்மண்யன், லக்ஷ்மீ, ஸரஸ்வதி, பார்வதி, முதலியவர்களின் ஸ்வரூபத்தை சுவர், பலகை, துணி, கண்ணாடி முதலியவைகளில் பல வர்ணங்களால் எழுதிக் கொள்ளுதல், இது போலவே கண்ட மாத்திரத்திலேயே மனதிற்கு ஸந்தோஷம் உண்டு பண்ணக் கூடியதாய் ரம்பை, ஊர்வசி, திலோர்த்தமை, சகுந்தலை, தமயந்தி, அருந்ததி, ஸீதை, ருக்மணீ முதலியவர்களின் உருவத்தையும் காடு, ஆச்ரமம், மலை, குகை, மணல்தீவு, மேகம், தடாகம், சோலை, கடல், கடற்கரை முதலியயிடங்களின் உருவத்தையும் எழுதுவது, இவ்விதமாய் எழுதக்கூடிய பிம்பங்களின் உருவ லக்ஷணத்தையும் அவைகளின் ஆயுதம் தேஹவர்ணம் முதலியவைகளையும் சில்பரத்னம் என்னும் நூலில் காண்க.

6. தண்டுலகுஸுமபலி

ஊர்கோலம் என்னும் ஊர்வலம், விவாஹம், க்ருஹப்ரவேசம், ராஜபட்டாபஷேகம், முதலிய பசுமையங்களில் கலியாணப் பெண், கலியாணப்பிள்ளை யஜமானன் முதலியவர்களுக்கு ஓர்வித தீங்கும் வராவண்ணம், அனேக ஜனங்கள் திகைத்துப் பார்ப்பதினால் உண்டாகும் த்ருஷ்டிதோஷம் நீங்கும் பொருட்டு ஸுமங்கலிஸ்திரீகள் அவர்களின் எதிரிலே ஆரார்த்திகை (ஆலத்தி) எடுத்தல், சிகப்புச்சோறு மஞ்சள்சோறு முதலியவைகளைச் சுற்றி நான்கு திக்குகளிலும் வீசுதல், கற்பூர ஆரத்தி எடுத்தல், அவர்களின் நெற்றியில் பொட்டிடுதல், புது வஸ்திரம் கிழித்தல், தேங்காய் உடைத்தல், புஷ்பத்தினாலும் அரிசியினாலும் மாவினாலும் தட்டு தயாரித்தல் லக்ஷிமீகல்யாணம், கௌரீ கல்யாணம் பாடுதல் முதலியன. இவ்வித வழக்கமானது நமது இந்தியாவில் ஔவைத் தாயார் காலத்திற்குமுன்னமே ஏற்பட்டதாய் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. இவைகளின் பலனையும் லக்ஷணத்தையும் சொல்லும் நூல் ஹேமசந்தரன் இயற்றிய களாபாரிஜாதம் என்று ஊஹிக்கப்படுகிறது.

7. புஷ்பாஸ்தரணம்

வஸந்த காலத்திற்கும், க்ரீஷ்ம காலத்திற்கும் தகுந்தபடி புஷ்பங்களினாலும் துளிர்களினாலும் கட்டில், மெத்தை, படுக்கை முதலியவைகளைப் பலவிதமாய் அலங்கரித்தல். அகில், குங்கிலியம் முதலிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாஸனை வஸ்துக்களால் பரிமளமான புகையை எழுப்புதல். ஜன்னல் களுக்கும் புறாக் கூண்டுகளுக்கும் கிளிக் கூண்டுகளுக்கும் அதிக அழகு உண்டாகும்படி வஸ்திரம் முதலியவைகளால் அலங்கரித்தல். படுக்கையறையில் சுகநித்திரை செய்வதற்காக ஜலம், கண்ணாடி, விசிறி, பச்சைப்புல், பால், சிறு ஆடை, தீபம் பால்பழ வர்க்கங்கள் சிற்றுண்டி முதலியவைகளை தகுந்த இடத்தில் வைத்தல், தலைகாணி என்னும் தலையணை, துப்பட்டி, கம்பளி முதலியவைகளையும் தகுந்த திக்குகளில் வைத்தல் முதலிய சிலமுக்ய காரியங்கள். (இவ்விதமாய் படுக்கையறைகளை தயாரிப்பதினால் உண்டாகும் பலன்களையும் குறிப்பிடும் நூல்கள் இப்பொழுது கிடைப்பது வெகு துர்லபம் என்று தோன்றுகிறது.)

8. விசேஷ கச்சேத்யம்

குழந்தைகளுக்கும், கன்னிகைகளுக்கும், குமாரிகளுக்கும் மற்று முள்ள ஸ்திரீகளுக்கும் நெற்றியில் பலஸமயங்களில் அணியக்கூடிய கஸ்தூரி திலகம், சாந்துப்பொட்டு, குங்குமம் முதலியன தயாரித்து இடுதல், கண்களுக்கு மை தயாரித்தல் முதலியவை.

9. தசனவஸநாங்கராகம்

வாயில் நல்ல பரிமளம் வீசுவதற்கும் பற்களிலும் அதரத்திலும் சிவப்பு நிறம் உண்டாகும்படி சில வஸ்துக்களை உட்கொள்ளுதல். விசேஷமாய் மாதர்களின் கால்களிலும் கைகளிலும் குரவகம் என்னும் மருதாணி ரஸத்தினால் அழகிய சிவந்தநிறம் உண்டுபண்ணுதல். ஆடை உடைகளில் பலவித வர்ணமுள்ள நூல்களினால் புஷ்பம் போலவும், செடி கொடி பக்ஷிகள் போலவும் சித்ரவேலை செய்தல், ரவிக்கை தைத்தல், தலைப்பாகை கட்டுதல்.

10. மணிபூமிகாகர்மா

நவராத்ரி முதலிய சில மங்கள ஸமயங்களில் பதுமை (பொம்மை) கொலு வைப்பதற்காக பலவித வீடுகள், மேடைகள் மரங்கள், பழங்கள் முதலியவைகளை சிறு உருவத்தில் ஏற்படுத்தல், மற்றும் சில ஏற்பாடுகள்.

11. சயனஸுகம்

ஆடவர்களும் மாதர்களும் தகுந்த ஸமயத்தில் ஒருவருக் கொருவர் மேல் ப்ரீதி வைப்பதும், ஸுகத்தை அடைவதற்கு தகுந்த ஏற்பாடு செய்வதும். தம்பதிகள் தமது மனங்களிக்கும்படி காம சாஸ்த்ரம் கற்றுணர்ந்து வீண் கோபம் முதலியவைகளை வெளியிடா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மல் சமயம்போல் ரமித்தல் முதலியவைகள். தம்பதிகளுக்கு பிறக்கக்கூடிய ஸந்ததியின் நன்மையைக் கோரியே ரதிகாலத்தில் நடந்து கொள்ளும் முறையையும் அவைகளின் பலன் லக்ஷணம் முதலிய விவரங்களையும் அமருகம், அனங்கரங்கம், வாத்ஸாயன காமஸூத்ரம் முதலிய நூல்களில் நன்றாய் காணலாம்.

12. உதகவாத்யம் உதககாதம்

தம்பதிகள் வஸந்த க்ரீஷ்ம காலங்களில் மன உல்லாஸத்திற்காக ஜலத்தில் இறங்கி பீச்சாங்குழலினால் ஒருவர்க்கொருவர்மேல் தண்ணீரை வீசிக் கொண்டு புலன் விளையாடுதல். அதற்குரிய மற்றும் சில முஸ்தீப்புகள்.

13. சித்தயோகம்

மனதை பல விஷய விருப்பங்களில் அலையவிடாமல் நிலை நிறுத்தி யோகம் செய்தல், த்ரிமூர்த்திகளின் பிம்பத்தை முறைப்படி சுவர், மாளிகை, மண்டபம் முதலியவைகளில் ஸ்தாபத்து பூஜித்தல், யாகசாலை, ஜபமண்டபம் முதலியவைகளை தகுந்த இடத்தில் ஸ்தாபித்தல்.

14. மால்யக்ரதனம்

புஷ்பங்களினால் மாலை கட்டுதல், தேவர்களுக்கும் அரசர்களுக்கும் கலியாணப்பெண் பிள்ளை முதலியவர்களுக்கும் காலத்திற்கும் ஸமயத்திற்கும் தகுந்தபடி பலவிதமாய் மாலைகட்டி அலங்கரித்தல். பந்தல் போடுதல். 4, 8, 12, 16, 28, 48, 96, 100 கம்பங்கள் ஊன்றி அவைகளின் வரிசைகள் கொஞ்சமேனும் தவறாமல் நிலைக்கச் செய்து நடுவில் தேவர்கள், அரசர், தம்பதிகள் முதலியவர்களுக்கும் ஸபையோர்களுக்கும் இடம் ஸ்தாபித்தல். வாழை, கமுகு, திராக்ஷைக்கொலை, தோரணம், விளக்கு முதலியவைகளால் பந்தல் அலங்கரித்தல், கலியாணமேடை ஏற்படுத்துவதுடன் மேல்ஸாமான் கட்டி வெகு விநோதமாய் விளக்கு, சித்ரம் முதலானவைகளால் அலங்கரித்தல், பல்லக்கு அலங்கரித்தல், ஊஞ்சல் தயாரித்தல். ஜமக்காளம் விரித்தல் முதலியன சேர்ந்ததாகும்.

15. சேகராபீடயோஜனம்

விசேஷமாய் மாதர்கள் தலையில் அணியக்கூடிய ராக்குடி (ராக்கடி) சந்திரன் ஸூர்யன் உருவம் போன்ற ஆபரணங்கள் (தலை ஸாமான்கள் என்று சிலர் சொல்வர்) செய்தல், தாழம்பூ, மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களை மாதர்களின் கூந்தலில் வைத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தலைவாரிப் பின்னல் பின்னுதல், அவைகளைப் பலவிதமாய் எடுத்துக் கட்டுதல், கொண்டை கட்டுதல், நன்றாய் மயிர் கறுத்து வளரும்படி தைலம் தயாரித்து உபயோகித்தல் முதலியவைகள்.

16. நைபத்ய யோஜனம்

ஆடவர்கள் மனம் களிக்கும்படி பாதாதிகேசம்வரையில் மாதர்களை பலவித ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்தல். இது போலவே மாதர் மனம் களிக்கும்படி ஆடவர்களை அலங்கரித்தல். கலியாண ஸமயங்களில் காலத்திற்கும் தமது முறைக்கும் தகுந்தபடி அலங்கரித்துக் கொள்ளுதல். ஊர்கோலம் புறப்படும் ஸமயங்களிலும் வெளி ஊர்களுக்கு புறப்படும் ஸமயங்களிலும் தக்கபடி உடைதரித்துக் கொள்ளுதல். தேவாலயத்திற்கும் கல்விச் சாலைக்கும் குருகுலத்திற்கும் போகும் போது ஜாதி முறைப்படி அலங்கரித்துக் கொள்ளல் முதலியவைகளாகும்.

17. கர்ணபத்ரபங்கம்

மாணிக்கம், முத்து, பவழம், நீல ரத்னம், வைரம், பத்மராகம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பெரோஜம், தங்கம், பொன், வெள்ளி, யானை தந்தம் முதலியவைகளால் கம்மல் (காதுஓலை) அட்டிகை, காப்பு கொலுஸு, ஒட்டியாணம், மோதிரம், வங்கி, திருமாங்கல்யம் என்னும் தாலி, நூபுரம் என்னும் பாதத்திண்டை சிலம்பு முதலிய ஆபரணங்கள் செய்தல் (அதர்வண உபவேதத்தில் மத்ய படலங்களில் இவைகள் செய்யும் லக்ஷணமும் வேலைப்பாடு முறைகளும் அவைகளை அணிந்து கொள்வதினால் உண்டாகக்கூடிய பலன் முதலியவைகளும் விவரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வித நூல்கள் இப்பொழுது நமது இந்தியாவில் எங்கும் கிடைக்கவில்லை. ஆகிலும் நெடுநாளாய் ஒருவர்க்கொருவர் வேலைமுறையை கற்றுக் கொள்வதினால் தட்டான், கருமான், கன்னான் முதலியவர்களின் வேலைகள் இப்பொழுதும் ஸரியாய் நடைபெற்று வருகின்றன. இவ்வித நகைகளும் பாத்திர வகைகளும் நமது இந்தியாவில் ஒவ்வொரு தேசங்களிலும் வெவ்வேறு விதமாய்ச் செய்து வருகிறார்கள்.)

18. ஸுகந்தயுக்தி

பகல் காலத்தில் வஸிக்கும் இடங்களிலும் இராக்காலங்களில் நித்ரை செய்யும் ஹால்களிலும் நல்ல வாஸனை உண்டுபண்ணுதல். சிலவித ஓஷதி செடி கொடிகளைக் கொண்டு ஓர்வித பொடி தயாரித்து கொசு ஈ எரும்பு முதலியவைகளை ஓட்டுதல். (இவ்வித முறை போஜன குதூஹலம் என்னும் வடமொழி நூலில் நன்றாகக் கூறப் பட்டிருக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கிறது) சந்தனம், பன்னீர், குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், கோரோஜனம், கஸ்தூரி முதலியவைகளால் வாஸனை ஸாமான்கள் செய்தல். (இவ்வித விஷயங்களைப் பற்றிச் சொல்லும் புஸ்தகம் இப்பொழுது கிடைப்பது அரிது) ஆகிலும் சுமார் 2000 வருஷகாலமாய் துலுக்கர்களால் விசேஷமாய் இவ்வித வேலைகள் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

19. பூஷண யோஜனம்

சில சில ஆபரணங்களை சில சில அவயவங்களில் அணிந்தால் தான் வெகு அழகாய் இருக்கும் என்று ஊஹித்து அம்முறையில் அலங்கரித்தல், தலைப்பாகை, கச்சுபட்டை, பஞ்சகச்சவேஷ்டி, புடவை, ரவிக்கை முதலியவைகளை அழகு வாய்க்கும்படி கட்டிக் கொள்ளுதல், கஸ்தூரி திலகம், சாந்துப்பொட்டு, விபூதி, திருமண், சந்தனப்பொட்டு முதலியவைகளை நெற்றியில் ஸரியாய் (கோணல் மாணலாய் விகாரம் உண்டாகாதபடி) அழகாய் அணிதல், முதலியன.

20. பதாதிசஸ்த்ர ஸந்தானம்

பதாதி என்னும் ஆள்களையும் (ஸோல்ஜர்களையும்) குதிரை முதலியவைகளையும் யுத்த களத்தில் தகுந்த ஸமயம் பார்த்துச் செலுத்தல். தாம் நஷ்டப் படாமல் பகைவரை வெல்லும் வண்ணம் அணிவகுத்து எதிர்த்தல். யுத்தமில்லாத ஸமயத்திலும் யுத்த ஸமயத்திலும் சேனைத்தலைவர் முக்யமாய் செய்ய வேண்டிய வேலைகள், (அவர்களின் லக்ஷணம் குணம் முதலியவைகள் அனேக புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் யுத்தம் செய்யும் முறையைக் கூறும் புஸ்தகங்கள் விசேஷமாய் கிடைப்பதாக ஏற்படவில்லை)

21.களசுமாரயோகம்

வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியன செய்வதற்கு ஆலை ஏற்படுத்தல், அவைகளை ஸரியாய் நடத்தல் (எண்ணெய்க் காக செக்கு செய்தாலும் இத்துடன் கூடியதாகும்) நஷ்டமடையாமல் காலத்திற்கும் தேசங்களுக்கும் இடங்களுக்கும் தகுந்தபடி நன்றாய் யோசித்து பயிர் செய்தல், துணி நெய்தல், பட்டு நெய்தல், ஸமயங்களுக்குத் தகுந்தபடி குடித்தனம் செய்வதற்கு வேண்டிய ஸாமான்கள் செய்தல்: அவை யாவன. உரல், உலக்கை, அம்மி, முறம், சல்லடை, மண்வெட்டி, ஏர்க்கால் வண்டி, வீட்டு பாத்திரங்கள் முதலியன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

22. ஹஸ்தலாகவம்

உலகத்திலுள்ள கடினமான வேலையை எளிதில் செய்து முடிப் பதற்காகவும், பளுவான வஸ்துக்களை சுலபமாய் கீழே இறக்கவும் மேலே தூக்கவும், கைகால் முதலிய அவயவங்களில் ஓர்வித பயிற்சியையடைதல் உடம்பின் கருவிகளை பலவிதமாய் மடக்கவும் நீட்டவும் பயின்றல், மனதை தனக்குள் அடக்குதல் முதலியவைகளை யோகசாஸ்திரத்திலும், ஸித்தகலா என்னும் யோகநூலிலும் காண்க.

23. பாகக்ஞானம் அல்லது பாகசாஸ்த்ரம்

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனுஷ்யரும் தனது ஆத்மாவைக் காக்கும் பொருட்டும் விருந்தினர் முதலியோரை நன்றாய் ஆதரிக்கும் பொருட்டும் செய்யப்பட்ட அன்னம் (சாதம்) பக்ஷணம், ஊறுகாய் வற்றல், வடாம், துகையல், பச்சடி, கறியமுது முதலியவைகளைத் தயாரித்தல், அவைகளுக்குத் தகுந்தபடி உப்பு புளி மிளகாய் சீரகம், வெல்லம், சர்க்கரை, நெய், எண்ணெய் முதலியவைகளைச் சேர்த்து அவைகள் கொஞ்சமேனும் கெட்டுவிடாதபடி மிகவும் ஜாக்கிரதை யாய்ச் செய்தல். இவைகள் செய்யவேண்டிய முறை, காலம், பதார்த்தங் களின் குணம், சேர்க்கை குணம் முதலியவைகளைக் கற்றல். இவ்வித விபரங்களை நளன் செய்த பாகசாஸ்திரத்திலும், போஜன குலம் என்னும் வடமொழி நூலிலும் விபரமாய் காண்க.

24. ஆஸவாதிரசனை

மத்யம் என்னும் கள் பானகம், நீர் மோர், வெற்றிலை முதலிய வைகளைத் தகுந்தபடி தயாரித்தல், இவைகளை உட்கொள்ளும் முறை, காலத்தின்பேதம், அதிகமாய் உபயோகிப்பதால் உண்டாகக் கூடிய கெடுதி முதலியவைகளை அறிந்து கொண்டு அதுபோல நடத்தல் முதலியன.

25. ஸுசீவாபகர்மம்

யானை, குதிரை, பல்லக்கு, வண்டி முதலியவைகளில் ஸுகமாய் ஏறி வீற்றிருப்பதற்காக தோல்களினால் ஜீனி முதலியன தயாரித்தல். தோல் பதனிடும் வழி. அதற்குரிய காலம். ஏற்ற ஸாமான் கள் சேகரித்தல், யானை, குதிரை, மாடு, மான், ஒட்டகம், நாய் கழுதை, கிளி, புறா, மயில் முதலியவைகளின் வயது இவ்வளவு என்று தெரிந் துக் கொள்ளுதல், போர்வை, அங்கி, சொக்காய், ரவிக்கை முதலியவை தைத்தல், அவைகளில் கிளி, அன்னம் முதலிய சித்ர வேலை செய்தல்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸரிகைபட்டு முதலியவைகளாலும் செய்ய வேண்டிய உடுப்பு விஷயம் முதலியன.

26. ஸூத்ரக்ரீடை

தமது தேசத்திற்கும் காலத்திற்கும் விதைகளுக்கும் தகுந்தபடி பயிர்செய்ய முயலுதல், பயிர்த் தொழிலில் பயிற்சியடைந்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய சில முக்கிய விஷயங்கள். வயலை உழுதல். நாற்றுவிட்டு நட்டு களைப் பறித்து தக்க ஸமயத்தில் அறுவடை செய்தல், மரமேறுதல், ஜலத்திலும் வெள்ளத்திலும் நீந்துதல், கிணறில் மூழ்குதல், நஷ்டமான பொருளைத் தேடிப்பார்த்து பலவித உபாயங்களால் கண்டுபிடித்தல், யஜமானன், குரு, மனைவி, தாய், தகப்பன், சுற்றத்தார், ஸ்நேகிதர் முதலியவர்களின் மனம் போல் நடந்து கொள்ளுதல். கெட்ட நடவடிக்கை செய்யாதிருத்தல். அபூர்வமான விஷயங்களைப் பற்றியும் லாபத்தை விளைவிக்கும் விஷயங்களைப் பற்றியும் ஸூக்ஷ்மமாய் யோசித்தல் முதலியன.

27. வீணாதிரசனை

புல்லாங்குழல், வீணை, தம்புரு, மத்தளம், காஹளம், நாகஸ்வரம் முதலிய வாத்தியக்கருவிகளும், சிவபிம்பம், விஷ்ணு பிம்பம், மணி வட்டில், உத்தரணி முதலிய பூஜா பாத்திரங்களும் வீட்டிற்குரிய மற்றுமுள்ள பாத்ரங்களும் தயாரித்தல் (வார்ப்பக்குதல்) (இவைகளின் லக்ஷணம் அளவு வார்ப்பிக்கும் முறை முதலிய மற்ற விபரங்கள் சில்பரத்தினத்தில் கூறப்பட்டிருக்கின்றன.)

28. ப்ரஹேளிகை

கோபத்தினாலாவது மற்றெவ்வித காரணத்தினாலாவது அதிகமாய்த் தண்டிக்காமல் குற்றத்துக்குத் தகுந்தபடி குற்றவாளிகளை தண்டித்தல். அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அவசியம் இருக்க வேண்டிய முக்யகுணங்கள். கோர்ட்டு (ந்யாயஸ்தலம்) அரண்மனை முதலியவைகளில் நடந்து கொள்ளக்கூடிய விஷயம். தடஸ்த்தன் (மத்யஸ்தன்) சேவகன், வேலைக்காரன் முதலிய ப்ரிஜனங்களின் தினத்தொழில் பாரா கொடுத்தல்; வேலையில் மிக்க ஞாபகம் செலுத்தல் முதலியவைகள்.

29. ப்ரதிமாலா

இலைதைத்தல், பலவிதமாய்க் கோலங்களால் கோயில் மண்டபம் திண்ணை வீடு முதலியவைகளை அலங்கரித்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காசபாத்ரம் என்னும் ஸீஸா–குலோப் முதலிய செய்தல், பாத்ரங் களையும் மற்றுமுள்ளவைகளையும் தினந்தோறும் சுத்திசெய்ய கற்க வேண்டிய முறைகள், வீடுகளையும் தெருவுகளையும் அலங்கரித்தல், கொஞ்சமேனும் கோபிக்காமல் வருபவர்களை நல்வரவேற்றல், மாதர்கள் (எல்லா ஜாதியாரும்) நடந்து கொள்ள வேண்டிய முக்ய ஒழுக்கங்கள். பார்யாதர்மம், கற்பு, (பாதிவ்ரத்யம்) பத்மினீ, சங்கினீ, ஹஸ்தினி, சித்தினீ என்கிற நான்குவிதமான உத்தமகுணமுடைய ஸ்திரீகளின் பேதம், அவர்களின் தினத்தொழில் முதலியவைகளையும் வாத்ஸாவன ஸூத்ரம் முதலியவைகளில் காணலாம்.

30. துர்வாசகயோகம்

மல்லுயுத்தம், குத்துச்சண்டை முதலியவை; யுக்தியாய் அனேகவித ஸாஹஸ காரியத்தைச் செய்துமுடித்து அதனால் நற்கீர்த்தி யடைதல்; தமக்குள் ஓர்வித ஸங்கேதம் செய்து அதற்கேற்றபடி நடந்து கொள்ளல்; பிறர் அறியாவண்ணம் வார்த்தைகளை மாற்றிச் சொல்லு தல்; எழுத்துகளை திருப்பி எழுதுதல்; அகடவிகடம் பரிஹாஸம் செய்தல் முதலியவைகள்.

31. புஸ்தகவாசனம்

புருஷர்களும் மாதர்களும் அவசியம் கல்விகற்றல்; தமது தேசபாஷையையும் அதற்கடுத்த தேசத்தின் பாஷையையும் அவசியம் கற்றல்; உத்தம, மத்யம, அதம, சிஷ்யர்களின் லக்ஷணம், குருவின் லக்ஷணம்; கல்வியின் மஹிமை, அதனாலுண்டாகக் கூடிய நன்மைகள். புத்தியின் சிறப்பு, புலவர்களின் மேன்மை, ஸத்காவ்யமறிதல்.

32. ஆக்யாயிகாகதனம்

பூர்வ சரித்திரங்களை ஸபையோர்களுக்கு நன்குவிளங்கும் வண்ணம் உபந்யாஸம் செய்தல்; ஹரி கதை சொல்லுதல்; அபநயித்துக் காண்பித்தல்; ஜனங்களின் மனதில் நற்கொள்கை உண்டாக்குதல்; காமம் கோபம் மோஹம் முதலியவைகளைக் கூடியவரையில் அடக்கும்படி செய்தல்.

33. காவ்ய ஸமஸ்யா

கவனம் செய்தல் இம்மையிலும் மறுமையிலும் நன்மையை அளிக்கவல்ல சிறந்த நூல்களை தகுந்த வித்வான்களுடன் கூடிப் படித்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தும் அதன் உட்கருத்தை அறிந்தும் ஸந்தேகங்களை நீக்கியும் அது போலவே தாமும் காவ்யங்களைச் செய்து கொண்டு ஆனந்தத்துடனிருத்தல்.

34. பட்டிகாவேத்ரவிகல்பம்

வருமுன் காப்பு; யுத்தம் ஏற்படுவதற்கு முன்னமே மிகுந்த ஜாக்ரதையுடன் யுத்தத்திற்கு வேண்டிய ஏராளமான பொருளை தயாரித்து வைத்தல்; குதிரைகளுக்கு பலவித நடை கற்பித்தல்; காலாட் படைகளுக்கு நன்றாய் யுத்தப் பயிற்சி செய்வித்தல்; படை எடுக்கும் முறை, காலம் முதலிய சில விஷயங்கள். இதுபோலவே ஸகல ஜனங்களும் மழை காலம் வருவதற்கு முன்னமே வீட்டு ஸாமான்களை சேகரித்து வைத்தல்; கலியாணம்; ச்ராத்தம் முதலியதற்கும் முன்னமே, ஸாமான்கள் தயாரித்தல்; வெள்ளம் வருவதற்கு முன்னமே அணைகோறல்; ஆபத்து வருவதற்கு முன்னமே அதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி தேடுதல் முதலிய சில உலக நடவடிக்கை.

35. தர்க்க சாஸ்த்ரம்

ந்யாயநூல் (தத்வ நூல்) உலகத்தின் ஸ்ருஷ்டி க்ரமத்தையும் ஈச்வரனால் செய்யப்பட்ட அபூர்வச் செயல்களையும் கூறும் நூல். உலகத்தில் பலவித ந்யாயங்களை நன்றாய் (உள்ளபடி) அறிந்து கொள்ளல்.

36. தக்ஷணம்

தச்சுவேலை செதுக்குதல்; நவரத்னங்களையும், கற்பாறைகளையும், மரங்களையும், யானைத்தந்தம் முதலியவைகளையும் அதற்குரிய தகுந்த கருவியின் உதவியினால் செதுக்கி இழைத்து பலவித சித்ர.வேலையடங்கிய நகைகள் செய்தல்; பெட்டி பேழை செய்தல் (பேழை சிறு பெட்டி, பணப்பெட்டி என்றும் சிலர் கூறுவர்).

37. வாஸ்துவித்யா

தேவாலயங்கள், மடங்கள், மண்டபங்கள், அரண்மனை, மாளிகை, உப்பரிகை, வீடு, யானைகட்டுமிடம், குதிரைலாயம், பசுவின் தொழுவம், கிணறு, தடாகம், குளம், கட்டில், மணை, ஸிம்மாஸனம், ஊஞ்சல்பலகை, கிளிக்கூடு முதலியவைகளை ஸரியான முறைப்படி நிர்மாணித்துக் கட்டுவது; ஆயாதி லக்ஷணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலிய தவறாதிருத்தல்; வீடு நகரம், ராஜதானி அமைக்கும் முறை; ஸுகாதாரப் பொருள் தேடுதலின் பலன்; இவ்வித கட்டடங்களைக் கட்டி முடிப்பதற்கு தகுந்தபடி முயற்சி செய்தல். காலபரீக்ஷை முதலிய வாஸ்து சாஸ்த்ரவிஷயங்கள்; இவைகளின் லக்ஷணத்தையும் மற்றுமுள்ள பல பேதங்களையும் மயமதம், மானஸாரவாஸ்து, சில்பதந்தரம், விச்வகர்ம சில்பம் முதலியவைகளில் காணலாம்.

38. ரத்னபரீக்ஷை

வைரம், புஷ்பராகம், முத்து, மாணிக்கம் முதலிய நவரத்னங்களின் பரீக்ஷை கற்றல், ரத்னங்களின் ஜாதி, குணம், தோஷம், விலை, மதிப்பு முதலிய சில விபரங்கள், ரத்னங்களுக்குரிய க்ரஹங்கள், ஆபரண விஷயம் முதலியவைகள்.

39. க்ரஹக்ஞானம்

(ஜோதிஷ சாஸ்த்ரம்) ஸூரியன், சந்த்ரன், புதன் முதலான ஒன்பது க்ரகங்களின் குணாகுண விஷயம். ஜனங்களின் ஜாதக பலன், சகுன சாஸ்த்ரம், ரேகா சாஸ்த்ரம், ஆரூடம் முதலியதுள்பட மற்றும் சிலவித முக்ய விஷயங்கள்.

40. மணிக்ஞானம்

பொன், வெள்ளி, தாம்ரம், பித்தளை, ஈயம் முதலிய உலோகங்களின் இயற்கை குணத்தை யறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி அவைகளைக் கொண்டு பாத்ரம் முதலிய செய்து அவைகளில் வைக்கக் கூடிய பொருளின் குணாகுண விஷயமான ஞானம், முகத்தில் தோன்றும் சிலவித குறிகளைக் கொண்டு கர்ப்பம் உண்டு என்று நிச்சயித்தல். இது போலவே பொய் மெய் அறிதல் முதலிய மற்றும் சில காரியங்கள்.

41. ஆகரக்ஞானம்

பூமியில் இவ்விடத்தில் வெட்டினால் பொன் கிடைக்கும்; இவ்விடத்தில் வெட்டினால் வெள்ளி கிடைக்கும்; இவ்விடத்தில் வெட்டினால் நல்ல ஊற்று நிறைந்த கிணறு கிடைக்கும் என்று இவ்விதமாய் பூமி கர்ப்பம் கண்டுபிடித்தல்; வானத்தையும் நக்ஷத்திரம் முதலியவைகளையும் உற்றுப் பார்த்து மழை, காற்று வரும், வராது என்று நிச்சயித்து ஆராய்தல் முதலியன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

42. வ்ருக்ஷாயுர் வேதம்

வாழை, தென்னை, மா, புளி முதலிய மரங்களுக்கும், மல்லிகை, முல்லை, முதலிய செடி கொடிகளுக்கும் சிலவித ஏற்பாடுகள் செய்து பூமியில் குழிவெட்டி எரு தழை முதலியவைகளுடன் சேர்க்கக் கூடிய சிலவஸ்துக்களையும் சேர்த்து வளர்த்தல் (இவ்விதம் பயிற்சி செய்தால் மரங்கள் செடி கொடிகள் விசேஷமாய் கட்டாயம் பலிக்கும்.) இதுபோலவே கத்திரி, பூசனி, புடலை, அவரை, கொத்தவரை, பாகல், வெள்ளரி, சேம்பு, கருணை, மஞ்சள் முதலியவைகளையும் பயிர் செய்வதற்குரிய முறைகளைக் கற்றல். தேன்வட்டை அழித்து, அபாயமில்லாமல் தேனையடைதல்; புஷ்பச் செடி நிறைந்த நந்தவனம் துளசிவனம் வளர்த்தல்முதலிய சில காரியங்கள் கற்றல்.

43. குக்குடாதி யுத்தவிதி

மயில், கிளி, பூனை, ஆடு, கோழி, புறா முதலிய பிராணிகளை வீட்டில் வைத்து வளர்க்கும் முறையும், சில ஸமயங்களில் அவைகளுக்குக் கோபத்தையும் ஆவேசத்தையுமுண்டுபண்ணி ஒன்று மற்றொன்றின் மேல் கோபத்துடன் பாய்ந்து சண்டை செய்யும்படி விடுதல்; அப்பொழுதே அவைகளுக்கு ஸமாதானமும் ஏற்படுத்தல்; முதலிய சில காரியங்கள்.

44. சுகசாரிகாலாபம்

கிளி, புறா, சாரிரை முதலிய பக்ஷிகளுக்கு பேச்சுக் கற்றுக் கொடுத்தல், அவைகளை நடத்தும் முறை முதலிய சில முக்ய ஏற்பாடுகளைத் தெரிந்து கொள்ளுதல்.

45. உத்ஸாதனம்

செல்வமிருந்தாலும் இராவிடினும், கொடுந்தொழிலையும், பாபகாரியங்களையும் செய்யாமல் கூடியவரையில் ஸுகமாயிருக்கும் படி முயற்சிசெய்து அது போல் நடந்து கொள்ளுதல்; பிறர் பொருளை அபகரிக்காமலும் பிறருக்கு உபத்திரவம் உண்டு பண்ணாமலும், காமம், கோபம், லோபம், மோஹம், மதம், பகை முதலிய ஆறுகெட்ட குணங்களை நீக்கி ஜாதி முறைக்குத் தகுந்தபடி அமர்ந் திருத்தல், டம்பம், வீண் பேச்சு முதலியவைகளைத் தொலைத்தல் இவை போன்ற மற்றும் சில விஷயங்கள்.

40. தேசாடனம்

வாழ்நாளில் அனேக காலங்களை தமது ஜன்ம பூமியிலேயே கழித்துவிட்ட போதிலும் எப்பொழுதாவது ஒரு ஸமயம் கங்கை,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காவேரி முதலிய புண்ய தீர்த்தங்களைக் குறித்தும், திவ்யக்ஷேத்ரங்களைக் குறித்தும் ப்ரயாணம் செய்தல்; ஆலய கைங்கரியம் முதலியவைகளுக்குப் பொருள் ஈயல், உபயம் செய்தல் முதலானவைகள்.

47. அக்ஷரமாத்ருகை என்னும் பால சிக்ஷை

தர்மமாய் கல்வி கற்பித்தல், ஏதாவது பதில் உபகாரத்தை விரும்பிய போதிலும் அன்புடன் கல்வியுரைத்தல், சிறுவர்களுக்கு விளங்கும்படி பாடம் சொல்லுதல், உபாத்யாயர்கள் பாடம் போதிக்கும்முறை, குழந்தை வளர்க்கும் முறை முதலியன.

48. குவிகல்பம்

ஸமயத்திற்குத் தகுந்தபடி பேசி காரியத்தை முடித்து பிறருக்கு எவ்விதமாவது உபகாரம் செய்தல். எல்லோருக்கும் சிரிப்பு உண்டாகும்படி அகஸ்யம் (வேடிக்கை வார்த்தை) பேசுதல்; ஒருவருக்கும் கெட்ட எண்ணம் உண்டாகாதபடி பேசுதல்; இரண்டுஅர்த்தம் தோன்றும்படி பேசுதல்; இருபுறத்திலும் தகுந்தபடி பேசி கலியாணத்தை முடித்தல்; வித்ூஷகன் ஸ்வரூபம்போல் நடத்தல். (விகட கவிக்கூற்று என்றும் சிலர் பொருள் உரைப்பார்கள்).

49. தேசபாஷாஞானம்

ஒவ்வொரு தேசங்களிலும் வழங்கும் பாஷைகளைக் கற்றல்; நாநா பாஷைகளைக் கற்பதினால் உண்டாகும் பயனி, ஒரு பாஷைக்கும் மற்றொரு பாஷைக்கும் ஏற்படும் பேதாபேத விளக்கம் முதலிய அனேக விபரங்களைக் கூறுவது.

50. புஷ்பசகடிகா

புஷ்ப பல்லக்கு ஜோடித்தல். கல்யாணம் முதலிய ஸமயங்களில் செலவழியக்கூடிய ஸாமான்களின் மதிப்பு (ஜாப்தா) கூறுதல், ஊர் கோலத்திற்கு வேண்டியவைகளைச் சேகரித்துச் சிறப்பிக்க நடத்தல்; பலவிதமாய் கோலம் போடுதல் (கோலாட்டம் என்பர் சிலர்) முதலியன.

51. தாரணஞானம்

எந்த ஸமயத்தில் எஜமானன் எது சொல்லிய போதிலும் அதை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அது போல் நடந்து கொள்ளுதல்; செய்ந்நன்றி மறவாமை; தண்ணீர், நெய், பால், தயிர் முதலிய பொருள்களில் இருக்கும் குணதோஷங்களை அறிந்து உட்கொள்ளுதல்; சாப்பிடும் முறை முதலியன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

52. ஸம்வாச்யம்

கடிதம், பத்திரம் முதலியவைகளை எழுதும் பொழுது (பிறர் ஸுலபமாய் பாடத்தை தெரிந்து கொள்ளும்படி) நன்றாய் எழுதுதல், பேசுதல், காட்டுதல், கபடமாய் பேசாமல் நிஜமாகவே பேசுதல், இனிமையாய்ப் பேசுதல், துர்ப்பாஷணையைத் தவிர்ப்பது முதலியவைகள்.

53. மானஸீக்ரியா

ஒரே ஸமயத்தில் அனேக காரியங்களைச் செய்து காண்பித்தல். அதாவது அஷ்டாவதானம், தசாவதானம், சதாவதானம் முதலிய வைகள். அஃதென்ன வெனில், பலர் கூடியிருக்கும் ஒரு ஸபையில் ஒருவருடன் கணக்கு விஷயமாய் பேசுதல் மற்றொருவன் கேட்கும் வினாவுக்கு பதில் கூறல்; அதே ஸமயத்தில் மற்றொருவன் சொல் வதைக் கவனித்து அவன் சொல்லியதை நன்றாய் அறிவித்தல். இவ்விதமாய் ஒரே காலத்தில் எட்டு பேர்களுக்கு பதில் அளித்தல் அஷ்டாவதானமெனப்படும். பத்து பேர்களுக்கு பதிலளித்தல் தசாவதானம் என்றும், நூறுபேருக்கு பதிலளித்தல் சதாவதானம் என்றும் முறையே பொருள். மானஸீக்ரியை என்னும் கலைஞானத்தை கற்பதே மிகவும் கஷ்டம். இதற்கு நல்ல ஞாபகசக்தியும் மற்றும் சில உபாயங்களும் அவசியமாய் வேணும். ஆயிரத்தில் ஒருவன் தான் இந்த கலையில் நல்ல தேறுதலையடைவான். இந்த கலையில் அற்புதச் செயல்களை காண்பிக்கும் புருஷனையும் இதுபோலவே இந்திர ஜாலவித்தையை காண்பிக்கும் புருஷனையும் மிகவும் உகந்து கொண்டாடாதார் இலார் என்றே சொல்லவேணும். (இந்த கலையின் ஸ்வரூபத்தைக் கூறும் நூல்கள் இப்பொழுது எங்கேயோ ஒளிந்து விட்டதாக ஏற்படுகிறது. ஆகிலும் பரம்பரையாய் கற்று வந்தவர்களில் சிலர் இந்த கலைஞானத்தை காண்பித்து வருகிறார்கள்.)

54. கோசம்

அருமையான பதங்களின் உட்கருத்தை விளக்கும் நிகண்டு களைக் கற்றல்; அவை போன்ற நிகண்டுகளைத் தாமும் செய்யக் கருதல்; தமது ஆன்மாவைக் காப்பாற்றும் பொருட்டும், உறவினரை யும் விருந்தினரையும் உபசரிக்கும் பொருட்டும் செல்வம் (பொருள்) ஸம்பாதித்தல்; மழை காலத்திற்கும் வெய்யில் காலத்திற்கும் முக்கியமாய் உபயோகப்படக் கூடிய ஸாமான்களை சேகரித்து வைத்தல். (முன் ஜாக்ரதை முதலியன.)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

55. சந்தோக்ஞானம்

தமது ஜாதிக்குரிய வேதங்களையும் தத்வ நூல்களையும் கற்றல். மருந்துகளைக் கொடுத்து ஜீவராசிகளுக் குண்டாகும் பிணியை நீக்கல். தாதுக்ஞானம் (நாடியறிதல்) லேஹ்யம், பஸ்பம், கஷாயம் முதலிய மருந்துகள் செய்தல் முதலியவைகளும், மந்த்ர சக்தியினால் தேள் பாம்பு முதலிய துஷ்டப் பூச்சிகளின் விஷத்தை நீக்குதலும் மற்றும் சிலவிஷயமும்.

56. க்ரியாவிகல்பம்

மனதை ஓரிடத்தில் நிலையாய் நிறுத்தி அனேக நியமங்களுடன் ஸந்த்யாவந்தனம், தேவபூஜை முதலியவைகளைச் செய்தல்; பூர்வீக மஹான்களின் உட்கருத்தை ஆராய்ந்து நடந்து கொள்ளல்; தேவாலய உத்ஸவங்களைத் தரிசிப்பதால் உண்டாகும் பயன் முதலியவைகள்.

57. சலிதகயோகம்

அனேக ஜனங்களால் செய்ய முடியாத வேலையைத்தான் ஒருவன் செய்ய முயன்று ஜயமடைதல்; ஸாஹஸ வேலையைச் செய்து முடித்தல்; வாயு ஸ்தம்பனம் செய்து (மூச்சை அடக்கி) சில அற்புதச் செயல்களை காண்பித்தல்.(சூன்யம் முதலியன என்கின்றனர் சிலர்.)

58. கோபனம்

வெட்கத்தினால் உண்டாகும் நன்மை; ஆடவர்கள் மாதருடன் புணர்வதற்கு ஏகாந்த ஸ்தலம்தான் நலம் என்பதின் விளக்கம்; ஏகாந்தத் தில் உண்டாகும் ஸுக விஷயம்; லீலையின் ஸுகமும், மாதர்களின் உட்கருத்தும், வஸ்த்ரமணிதலின் பயனும் சேர்ந்த சில விஷயம்.

59. த்யூதவிசேஷம்

(மார்ஜனம்.) சதுரங்கம், நாய், புலி, பாச்சிகை, கட்டல், தாண்டல், மடக்கல் முதலிய ஆட்டம் ஆடுதல்; தோப்பு, நதியோரம், வளம் முதலிய இடங்களில் உல்லாஸமாய்க் காவல் கழித்தல்; சுசியாய் (நிர்மலமாய்) ஸந்தோஷத்துடன் பொழுது போக்கல்.

60. ஆகர்ஷக்ரீடை

குதிரைகளுக்கு நடை கற்பித்துக் கொடுத்து அதன்மேல் ஏறிசவாரி செய்தல், குதிரைப் பந்தயம் விட்டு ஜயமடைதல்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யானைகளைப் பிடித்தல், வளர்த்தல், வலையினால் மற்றும் சில வேலைகள் செய்தல்.

61. பாலக்ரீடகம்

காண்போர்களுக்கும், விசேஷமாய்ப் பாலர்களுக்கும் ஆனந்தம் உண்டாகும்படி பலவிதமாய் ஸாமான்களைச் சேகரித்து ஓரிடத்தில் வைத்தல், நானாதேச வஸ்துக்களை ஓரிடத்தில் சேர்த்துக் காண்பித்தல். (மியூஸியம் போன்றவை என்று பொருள்).

62. விநயம்

க்ஷத்ரிய குலாசாரப்படி எதிரிகளிடத்தில் வணக்கமாய் இருந்து அவர்களின் மர்மங்களைத் தெரிந்து கொண்டு தக்க ஸமயத்தில் எதிரிகளை வேருடன் வெல்லுதல்; ரஹஸ்யத்தை வெளியிடாமலிருத்தல்; பெரியோர்களிடத்தில் வணக்கமாய் நடந்து கொண்டு கல்வி கற்றல்; பயனடைதல் முதலியன.

63. ரஜ்ஜுக்ஞானம்

தாம்புக்கயிறு, தேர்வடம் முதலியவைகளை கயிறுகளாலும், இரும்பு சங்கிலிகளாலும் செய்தல்; டேரா என்னும் கூடாரம் தைத்தல் முதலியவைகள்.

64. வைதரளகம்

ஓடம், கப்பல் முதலிய ஜல ப்ரயாண ஸாமான்கள் செய்தல்; கடலில் செல்லல், ஸாஹஸ வியாபாரம் செய்தல் முதலிய சில காரியங்கள்.

❋

அடிக்குறிப்புகள் :

1. இது Biharயில் சேர்ந்ததாக தோன்றுகிறது.
2. இதற்கு Buddhagaya என்று பெயர் வழங்கப்படுகிறது.
3. Rajgir என்று இதற்கு இப்பொழுது பெயர் வழங்கப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஹேஹயதேசம்

அத்யாயம் – 45

இருப்பிடம்

[1]ஹேஹயதேசம் மகததேசத்திற்கு நேர் தெற்கிலிருக்கும் சித்ரக்கூடமலை அடிவாரம் முதல் கிழக்கில் உத்கலதேசம் வரையில் பரவி தெற்கில் மஹேந்தரமலை வரையில் நீண்டிருக்கிறது.

இந்த தேசத்தின் மேற்கு எல்லைப்பூமி மிகவும் உயர்ந்து கிழக்குபாகத்தில் மஹாநதி உண்டாகுமிடத்தில் தாழ்ந்தும் குளிர்ந்த மண்குணமுடையதாயுமிருக்கிறது.

மலை நதி

இந்த தேசத்தின் வடக்கில் சித்ரகூடம் என்று ஒரு பெரிய மலை உண்டு. கிழக்கில் பஹுரூபம் என்னும் மலையும் தெற்கில் காஹள மலையுமே மிகவும் பெரியது.

இந்த காஹள மலையிலிருந்தே மஹாநதி உற்பத்தியாகி உத்கல தேசத்தின் நடுவில் ஓடி பிறகு கிழக்கு கடலில் சேருகிறது. சித்ரகூட மலையிலிருந்தும் பஹுரூப மலையிலிருந்தும் பல சிறு நதிகள் உண்டாகி இந்த ஹேஹய தேச பூமிக்கு செழுமையை உண்டுபண்ணுகிறது.

சித்ரகூடமலையின் வடமேற்கில் விந்தியமலையின் தாழ்வரையிலிருந்து சோணாநதி உண்டாகி ப்ரயாகா க்ஷேத்ரத்திற்கு ஸமீபத்தில் கங்கை யமுனையுடன் சேருகிற சோணாநதியின் உற்பத்திஸ்தானம் முதல் தெற்கில் மஹேந்திர மலை அடிவாரம் வரையிலும் மேற்கில் வெகுதூரம் வரையிலும் மிகவும் கடினமான பூமியில் ஒரு பெரியவனம் உண்டு. அதற்கு தண்டகாரண்யம் என்று பெயர்.

முன்பு விச்வாவஸு என்னும் கந்த்ரவன் ஒரு மஹரிஷியின் சாபத்தினால் வாநரரூபமாகி இந்த தண்டகாரண்யத்தில் வஸித்தான். மேலும் தனு என்னும் ஒரு அஸுரன் அரிய தவம் செய்து பிரம்மாவி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னிடத்திலிருந்து அனேகவரங்களைப் பெற்றுக் கொண்டு கர்வத்தினால் இந்த்ரனுடன் போர் புரியலானான். இந்திரனும் கோபித்து தனது வஜ்ராயுதத்தினால் இந்த அஸுரனுடைய தலையில் அடித்தான். அப்பொழுது அவனது தலை உடலுக்குள் ஆழ்ந்து போன படியால் அதுமுதல் கபந்தன் என்ற பெயருடன் இந்த அரண்யத்தில் வஸிக்கலா னான். ஸ்ரீராமன் சித்ரகூடபர்வதத்தில் அனேக காலம் வஸித்துவிட்டு இந்த வனத்தில் அடி வைக்கும்போது இந்த்ரன் வரத்தினால் மிகவும் நீண்ட கைகளைப் படைத்த அந்த கபந்தன் சீதா தேவியை எடுக்க முயலும்போது ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் தமது கத்தியினால் அவனது தோள்களைத் தூண்டித்து விட்டார்கள் என்று ராமாயணத்திலும் மஹாபாரதத்திலும் விபரமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

அந்த தண்டகாரண்யத்தில் புலி, கரடி முதலிய மிகவும் கொடிய மிருகங்களும் துஷ்ட ஜந்துக்களுமே எங்கும் நிறைந்திருக்கும். சிலவிடங் களில் மலைக்குன்றுகளும் மேடு பள்ளங்களும் கற்பாறைகளும் புதர் களும் நெருக்கமான செடி கொடிகளும் காணப்படும். மற்றும் சிலவிடங் களில் ஜனங்கள் செல்லக்கூடா வண்ணம் அடர்ந்த காடுகளே தோன்றும். இப்பொழுதும் இந்த பெரிய காட்டில் ஜன ஸஞ்சாரமே கிடையாது. அரவல்லிமலைக்கு ஸமீபமாயுள்ள அரண்யத்திற்கு சற்றேறக்குறைய தண்டகாரண்யம் அவ்வளவு விஸ்தாரமுடைய தாயிருக்கிறது.

விசேஷம்: கார்த்த விரியார்ஜுனன் வ்ருத்தாந்தம்

இந்த ஹேஹயதேசத்திற்கு மாஹிஷ்மதீ என்னும் நகரம் ராஜ தானியாயிருந்தது. இந்த நகரத்திற்கு ஸமீபத்தில் மேகலகிரி[1]என்னும் மலையின் அடிவாரத்தில் தான் மாஹிஷ்மதீபுரி இருப்பதாய் ஏற்படு கிறது. ஆகையால் இந்த நகரம் கிரிதுர்க்க நகரம் எனப்படும். தத்தாத் ரேயருடைய அனுக்கிரஹத்தினால் ஆயிரம் கைகளைப் படைத்த கார்த்தவீரியார்ஜுனன் அந்த மாஹிஷ் மதீபுரியை அரசு புரிந்தான். பிறகு திக்விஜயம் செய்து வருகையில் ராவணன் இந்த கார்த்து வீரியனுடன் எதிர்த்து அவனால் சிறையில் கட்டுண்டு பிதாமகனாகிய புலஸ்த்ய மஹிரிஷியினால் விடுவிக்கப்பட்டான் என்னும் விபரத்தை யும் கார்த்தவீரியன் அனேக த்வீபங்களில் யாகம் செய்த விஷயத்தை யும் அவனது வம்சத்தில் உதித்த ஹேமாங்கதன் முதலிய சில அரசர்களின் சரித்ரத்தையும் பத்மபுராணத்தில் காணலாம்.

❄

அடிக்குறிப்பு

1. இது Central Indiaவில் இருக்குமிடம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

களிங்கதேசம்

அத்யாயம் – 46

இருப்பிடம்

உத்கலதேசத்திற்கு தெற்கில் ப்ரம்ம நதி[2] கிழக்குக் கடலில் சேருமிடம் முதல் கடற்கரையோரமாகவே ஸிம்மாசலம் வரையிலும் பரவி வடக்கு தெற்கு பாகத்தில் மிகவும் நீளமான பூமியில் [1]களிங்கதேசம் இருக்கிறது.

மஹேந்திர பர்வதத்திற்கு தெற்கு முதல் யவன தேச பீடபூமி வரையிலும் கடற்கரைவரையிலும் பரவியுள்ள இந்த கலிங்கதேசத்தின் பூமி முழுமையிலும் மண் மிகவும் சிறந்ததாகவேயிருக்கும்.

இந்த தேசத்தின் தெற்குபாகத்திற்கு உட்ர தேசம் என்று பெயர். தண்டகாரண்யத்திற்கு கிழக்கிலும் மஹேந்தரகிரிக்கு மேற்கிலுமுள்ள பூமிக்கு அடவீசிகரம் என்று பெயர். அதுவும் இந்த களிங்கதேசத்திற்கு உபதேசமென்று சிலர் வழங்குவார்கள்.

மலை நதி

இந்த தேசத்திற்கு மேற்கிலிருக்கும் மஹேந்த்ர மலையின் தொடர்களே சிறு குன்றுகளாகும். அதற்குச் சமீபத்தில் ஸ்ரீ கூர்ம்கிரியும் அதற்கு வெகுதூரம் தெற்கில் பத்ராசலம், ஸிம்மாசலம் என்பதே முக்ய மலைகளாகும். கூர்மகிரியின் அடியில் பரசுராமாச்ரமம் இப்பொழுதும் குஹையில் காணப்படுகிறது.

இந்த தேசத்தின் மேற்கிலுள்ள சில குன்றுகளிலிருந்து பல சிற்றாறுகள் உண்டாகிய போதிலும் இதன் மண் குணத்தினால் அந்த ஜலப்பாச்சலே மிகவும் பூர்த்தியாகிவிடுகிறது. இந்த தேசத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தெற்குபாக பூமியில் மட்டும் கோதாவரி நதியின் கிளைகளால் ஜலப்பாச்சல் ஏற்பட்டு வருகிறது.

இந்த தேசத்தில் கடினமான மலைகளும் காடுகளும் கிடையாது. துஷ்ட மிருகங்களும் கிடையாது. இந்த தேசத்தின் மண்குணத்தினால் நல்ல ஜாதி பசுக்களும் எருதுகளும் எருமைகளும் ஆடுகளும் விசேஷ வளர்ச்சியை அடைந்து வருகின்றன. நஞ்சை புஞ்சை தான்யங்களும் ஏராளமாய் பலிக்கின்றன.

விசேஷம்: க்ஷேத்ரங்கள்

இந்த களிங்கதேசத்திற்கு தந்தபுரமே ப்ரதான நகரமாகும். இதில் வெகுநாளாய் தனவான்களும் புத்திமான்களும் தர்மிஷ்டர்களும் கல்வியில் சிறந்தவர்களும் வஸித்துவருகிறார்கள். இந்த தந்தபுரத்திற்கு தெற்கில் ஜகந்நாத க்ஷேத்ரமும், புவனேச்வர க்ஷேத்திரமும் விளங்குகின்றன. இதில் ஜகந்நாத க்ஷேத்ரத்தில் ஜகந்நாதப் பெருமாள் ஆலயம் மிகவும் ப்ரஸித்தியடைந்து, அந்த பகவானுடைய மஹிமையைப் பற்றியும் மற்றும் சில ஆச்சரிய சரித்திரத்தைப் பற்றியும் ஜகந்நாத மஹாத்மியத்தில் காணலாம்.

மேலும் பத்ராசலத்தில் ஶ்ரீராமஸ்வாமியின் திருக்கோயிலும் ஸிம்மாசலத்தில் நரஸிம்மமூர்த்தியின் திருக்கோயிலும் விசேஷ சிறப்புடனே விளங்குகின்றன. வோபதேவன் முதலிய சிலபுத்தர்கள் தென் இந்தியாவை ஆளும் ஸமயத்தில் இந்த தேசத்தின் தெற்கு எல்லையில் விஜயநகரத்தை நிர்மாணித்ததாகவும், சுக்ரதேவன், ஸத்யதேவன், கேதுமான் என்பவர்களை இதில்வெகுநாள்வரையில் அரசுபுரியும்படி ஏற்படுத்தியதாகவும் சில சிலாசாஸனங்களினால் ஏற்படுகிறது.

❋

அடிக்குறிப்புகள்:

1. Orissa முதலிய இடங்களைச் சேர்ந்தது
2. இதை சிலர் ப்ராம்மண நதி என்று வழங்குவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆந்த்ரதேசம்

அத்யாயம் – 47

இருப்பிடம்

யவன தேசத்திற்கு கிழக்கிலும் கலிங்க தேசத்திற்கு தெற்கிலும் கிழக்கு கடற்கரை ஓரமாய் தெற்கிலும் மேற்கிலும் பரவி அகன்ற பூமியில் [1]ஆந்த்ரதேசம் நிலை பெற்றிருக்கிறது.

இந்த தேசத்தின் மேற்கு பூமி மிகவும் உயர்ந்தும், கோதாவரியின் ஜலப் பாய்ச்சல்போல் கிழக்கில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தாழ்ந்து மிருக்கிறது. இந்த தேசத்தில் சிலவிடங்களில் காடுகளும் செடிகளும் நிறைந்திருக்கின்றன. சிலவிடங்களில் மிருதுவான அழகிய பூமியும் தோட்டங்களும் தோப்புகளும் வயல் பூமியும் உண்டு.

மலை

இந்த ஆந்த்ர தேசத்தின் நடுவில் கருடமலையும், (அஹோபில மலையும்) அதன் தொடர்மலைகளுமே முக்கியமானவைகள். இவைகள் தவிர ஸமுத்ரக்கரை ஸமீபத்திலும் யவனதேசத்தின் கிழக்கிலும் சில மலைகளுமிருக்கின்றன. இவைகளின் அடிவாரங்களிலும் சுற்று ப்ரதேசங்களிலும் மேடுபள்ள பூமியும் கொடிய காடுகளும் கரடி புலி முதலிய துஷ்ட மிருகங்களும் எங்கும் உலாவும். ஆகையால் இந்த தேசத்தில் கால்நடை பிராயணத்திற்கு மிகவும் கஷ்டமா யிருக்கும்.

நதி

மஹாராஷ்ட்ர தேச ஸமீபத்திலிருந்து யவன தேச வழியாய் கிழக்கு முகமாய் ஓடிவரும் கோதாவரி நதியே இதற்கு முக்ய நதியாகும். இது மிகவும் ஆழமானது. சிலவிடங்களில் அகலத்திலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிகம். எப்பொழுதும் நீர் வற்றாமலிருப்பதுடன் மிகவும் புண்யநதி என்றே நமது ஆரியர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. க்ரௌஞ் சாலத் என்னும் மலைகள் அடிவார ஓரமாய் இந்த கோதாவரி வருமிடத் தில் மிகவும் அழகான இடம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட கோதாவரியின் கிளை நதிகள் பல முகமாய்ப் பிரிந்து இந்த தேச பூமியில் பரவி விசேஷங்களை உண்டு பண்ணுகிறது.

மேலும் ருச்யமுக பர்வதத்தின் அருகிலிருந்து அதிக வேகமாய் ஓடிவரும் பம்பா நதியும் இந்த தேசத்தின் தெற்கு பாகத்தில் பல கிளைகளாகப் பரவி மஹோநதியில் வீழ்கிறது.

விசேஷம்

ஆதிகாலத்தில் இந்த தேசத்திற்கு ஏகசிலா² நகரமே முக்யமாய் இருந்ததாயும் காளிதாஸன், போஜன் இவர்கள் காலத்தில் மிகவும் சிறப்புடனிருந்ததாகவும் வித்வான்களுக்கும் மாணாக்கர்களுக்கும் நல்ல விருத்தி கிடைத்திருந்ததாகவும் ஏற்படுகிறது.

மேலும் இந்த தேசத்தில் அழகிலும் புத்தியிலும் சிறந்த மாதர்களும், கிளி, குயில், மயில், புறா, பசுக்கள் முதலியவைகளும் நெடுநாளாய் விசேஷமாய் வளர்ந்து வருவதாகவும் ஏற்படுகிறது. பூர்வகால அரசர்கள் ஆளும்பொழுது இந்த தேசத்தில் அனேகர் சில கிராமங்களை நிர்மாணித்து அதில் சில பாகங்களை வித்வான்களுக்கு தானம் செய்ததாயும் நன்றாய் தெரியவருகிறது.

❋

அடிக்குறிப்புகள்:

1. இது Godaveri முதலிய தெலுங்கு தேசங்களிலடங்கி இருப்பதாகத் தோன்றுகிறது.
2. ஒண்டிமிட்டா (Vontimitta) என்று இதற்கு சிலர் பெயர் வழங்குகிறார்கள். இவ்விடத்தில் இப்பொழுதும் ஒரு விசேஷ கிருஷ்ணன் கோயில் இருந்து வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யவனதேசம்

அத்யாயம் – 48

இருப்பிடம்

[1] யவனதேசம் மஹாராஷ்ட்ர தேசத்திற்கு தென்கிழக்கிலும் குளிந்த தேசத்திற்கு வடக்கிலும் ஆந்த்ர தேசத்திற்கு மேற்கிலும் கோதாவரியின் தெற்குபாகபூமியில் கிழக்கு மேற்கில் மிகவும் நீண்டு அகன்ற பூமியில் இருக்கிறது.

ஆந்த்ரதேசம் போலவே இதிலும் பாதிபூமி நல்லதாயும் பாதிபூமி கடினமாயும் மேடுபள்ளமாயுமிருக்கும். ஆகிலும் அவ்வித மேடுபள்ள பூமியிலும் அனேகவிதமான காட்டுமரங்களும் ஜனங்களுக்கு மிகவும் உபயோகமுள்ள ஒஷத செடி கொடிகளும் தோப்புகளும் விசேஷமாய் வளர்ந்திருக்கின்றன. இதன் பூமி மட்டம் கூடிய வரையில் ஏறத்தாழ்வு இல்லாமல் ஸமமாகவே இருக்கும். இந்த தேசத்தில் சீதோஷ்ண ஸ்திதிஸமமாகவே எப்பொழுதும் தோன்றும்.

மலை

இந்த தேசத்திற்கு மேற்கில் சூர்யமுக மலையில் தொடர் குன்றுகளும் மற்ற பாகங்களில் அங்கங்கு சிறிய மலைகளும் விசேஷமாய் உண்டு. அவைகளின் ஸமீபத்தில் ஸாதாரணமான சிறிய காடுகளே தவிர பெரியகாடுகள் இதில் இல்லை என்றே சொல்லலாம். அம்மலைகளிலிருந்து சிறியகாட்டாறுகள் கிளம்பி இந்த தேசபூமியை செழிப்பிக்கின்றன. இதில் புஞ்சை தான்யம் விளையும் பூமியே அதிகமாய் உண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி

இந்த தேசத்தின் வடக்குபாகம் முழுமையிலும் கோதாவரிநதி ஒடுகிறது. அதிலிருந்து கிளை நதிகள் அனேகமுகமாய் கிளம்ப வண்டல் படியக்கூடிய அவ்வளவு வெள்ளத்துடன் பூமியை செழிப்பிக்கும். தெற்குபாகத்திலோவென்றால் மால்யவான் மலையிலிருந்து கிளம்பிவரும் பம்பாநதியின் ஜலப்பெருக்கும் மழைக் காலங்களில் விசேஷமாய்ப் பரவிவரும்.

இவைகள் தவிர பீமநதி, கிருஷ்ணா, துங்கபத்ரா என்று பிரஸித்திபெற்ற இம்மூன்று நதிகளும் இந்த தேசத்தின் தெற்கு மேற்குபாகத்தை விசேஷமாய் மேன்மைப்படுத்துகின்றன. இவைகளின் கிளைநதிகளும் வாய்க்கால்களும் நூற்றுக்கணக்காய் கிளம்பி அங்கங்கு பாய்கிறபடியால் இந்த யவனதேசமும் இதைப் போன்ற கோஸலம், சூரஸேனம், வங்கம், சோழம் என்னும் இவ்வைந்து தேசங்களும் இந்த இந்தியாவில் எப்பொழுதும் நீர்வளம் பொருந்திய தேசம் என்று நற்கீர்த்தி பரவலாயிற்று.

விசேஷம்: குதிரை மிகுதி

இந்த யவன தேசத்திற்கு இவ்விதமாய் நீர்வளம் ஏற்பட்டிருக் கிறபடியால் இதை பாக்யதேசம் என்று கூறுவாருமுளர். இந்த யவன தேசத்திற்கு பாக்யபுரம் என்பது பிரதான நகரமாகும். முன்பு ஒரு ஸமயத்தில் பஞ்சாப் என்னும் பஞ்சநதத்தின் பூமியிலுள்ள தேசங்களை பாரஸீகதேசத்திலிருக்கும் துருஷ்கஜாதியர் ஆக்ரமித்துக்கொண்டு அங்கிருந்து தெற்குமுகமாய் விந்த்யமலை அடிவாரம் வரையிலுள்ள சிலதேசங்களையும் அதற்குத் தெற்கில் மஹாம்பாபுரம்[2] பீஜபுரம்[3] முதலிய சில ஸமஸ்தானங்களையும் கவர்ந்து கொண்டு கடைசியாய் இந்த தேசத்தில் தண்டுவிட்டிறங்கி ஸ்திரமாய் வாஸம் செய்ய லானார்கள். அவ்வித துருஷ்கர் என்னும் யவனரே இதில் பெரும் பாலும் வஸிப்பதால் இதற்கு யவனதேசமென்று பெயர் உண்டாயிற்று. இந்த தேசத்தில் வஸிப்பவர்கள் சில சில ஸமயங்களில் நமது ஆர்யமதத்தின் கோட்பாட்டுக்கு விரோதமாய்[4] தூஷித்து நடந்து கொண்ட போதிலும் இவர்களுக்கு நல்ல தைரியமும் பராக்கிரமமு முண்டு. இவர்கள் நெடுநாளாய் பணக்காரர்களாகவும் வர்த்தகர்களாகவும் இருக்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த தேசத்தில் குதிரைகள் விசேஷமாய் வளருகின்றன. குதிரைகளுக்கு அழகிய நடை கற்பதிலும் அவைகளை வளர்ப்பதிலும் தேர்ச்சியடைந்த அனேக குதிரை வைத்தியர்களும் மாந்திரீகர்களும் இதில் வஸித்து வருகின்றார்கள்.

❋

அடிக்குறிப்புகள் :

1, Hyderabad ராஜ்யத்திலுள்ளது.

2, Bombay

3, Bejapur

4. இவ்வித நடவடிக்கையை வெங்கடாத்வரீ செய்த விசீவகுணா தர்சம் என்னும் சம்பு காவ்யத்தில் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மஹாராஷ்ட்ரதேசம்

அத்யாயம் – 49

இருப்பிடம்

கொங்கணதேசம் முதல் மேற்கு கடற்கரை ஓரமாகவே கோகர்ண க்ஷேத்ரம் வரையிலும் யவன தேசத்திற்கு மேற்கிலும் தண்டகாரண்யம், பஞ்சவடி இவைகளின் தென்மேற்கிலும் பரவி இதன் நடுவில் சதுரமான பூமியில் [1]மஹாராஷ்ட்ர தேசம் மிக பிரஸித்தி பெற்றதாய் விளங்குகிறது.

இதில் சில விடங்களில் மணல் பூமியும் சிலவிடங்களில் மண்ணும் கல்லும் கலந்த பூமியுமுண்டு. அவ்வித மிகுந்த போதிலும் இந்த தேசபூமி முழுமையிலும் நல்ல புஞ்சை தான்யங்களும் நஞ்சை தான்யங்களும் ஏராளமாய் பலிக்கின்றன.

மேற்குக்கடல் ஓரத்திலுள்ள தேசங்களுள் இந்த் மஹாராஷ்ட்ர தேசமே மிகவும் பெரியதும் முக்யமுமானது. இதன் பூமிமட்டம் அனேகமாய் கிழக்கில் சாய்ந்திருக்கும்.

மலை.

இந்த தேசத்தின் வடக்கு திக்கில் பஞ்சவடி க்ஷேத்ர ஸமீபத்தி லிருக்கும் ருச்யமுக மலையும், மால்யவான் மலையுமே மிகவும் பெரியது. பஞ்சவடிக்கு வடக்கிலும் சில மலைகள் உண்டு. அம்மலை யின் தொடர் குன்றுகளே வெகுதூரம் வரையில் வடக்கிலிருந்து தெற்கு முகமாய் பரவி இந்த தேசத்தை கவர்ந்து கொண்டிருக்கின்றன. இவை களுக்கு கிழக்கில் மற்றும் சில மலைத்துடர்கள் மேற்குக் கடற்கரை ஓரமாய் வெகுதூரம் வரையில் எங்கும் உயர்ந்து காணப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதி

இந்த தேச பூமி முழுமையிலும் வருஷத்தில் எட்டு மாதம் மழை பெய்துக்கொண்டேயிருக்கும். ஆகையால் இந்த தேசத்தில் நதியின் அபேக்ஷையே அதிகமாய் வேண்டியதில்லை. இவ்விதமாய் ஸ்ருஷ்டி இயற்கையில் ஏற்பட்டிருந்த போதிலும் துங்கவேணா முதலிய சிலநதி களும் இதில் ஓடுகின்றன.

இந்த மஹாராஷ்ட்ர தேசத்தில் பல மரங்களடர்ந்த பெரிய காடு களும் விசேஷமலைகளும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் துஷ்ட மிருகங்கள் வஸிக்கும் புதர் முதலான மேடுபள்ள ஸ்தலங்களும் அதிகமாய் உண்டு.

விசேஷம்

இந்த தேசத்தின் வடக்கில் பஞ்சவடியும் கிஷ்கிந்தையும் நடுவில் கல்யாணபுரமும்[2], மஹாம்பரபுரமும்[3], தெற்கில் மஹாபலேச்வரமும்[4], கிழக்கில் ப்ரதிஷ்டானமும் மிக ப்ரஸித்தி பெற்றவைகளாய் விளங்கு கின்றன. நெடுநாளாய் இந்த தேசத்திற்கு மஹாம்பாபுரமே முக்ய பட்ட ணமாய் இருப்பதாய் தெரிய வருகிறது– கல்யாணபுரத்தின் ஸமீபத்தி லேயே பீமரதி நதி உற்பத்தியாகிறது. இந்த தேசத்தின் முக்கிய நகரத்தின் அமைப்பும் த்வாரகாநகரத்தின் அமைப்பும்[6] ஒன்றாகவே இருக்கிறது.

மேலும் இந்த தேசத்தின் வடக்கு எல்லையின் நுனியில் கடல்கரை ஓரத்தில் நாதத்வாரம் என்னும் க்ஷேத்ரமும் மிக ப்ரஸித்தி பெற்றது. இதில் சிவராத்திரி மஹோத்ஸவமும் மற்றுமுள்ள சில முக்ய உத்ஸவங்களும் விசேஷமாய் நடைபெறப்பெற்று வருகின்றன. இதுபோலவே இந்த தேசத்தின் தெற்கில் பாண்டுரங்கம் என்னும் திவ்யஸ்தலமும் ப்ரஸித்திபெற்றதேயாகும். இதில் ஸ்ரீ வைகுண்ட நாதனான பாண்டுரங்கப் பெருமாளுடைய திருக்கோயிலில் காலந் தோறும் நடக்கவேண்டிய உத்ஸவமுறைகளும் வெகு சிறப்பாகவே நடைபெறுகின்றன.

இந்த தேசத்து ஜனங்கள் பெரும்பாலும் பெரிய தனவந்தர்களா கவும் சில்பசாஸ்த்ரம் முதலிய கல்வியில் வெகு தேர்ச்சியுடையவர் களாயும், தேவபக்தியுடையவர்களாயும் இருக்கிறார்கள். பூமியின் இயற்கைப்பான்மையும், மழையின் ஸௌகரியமும், நற்காற்றின் அனு கூலமும் இந்த தேசத்தில் மிகவும் நல்லதாய் ஏற்பட்டிருக்கிறபடியால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த தேசத்திலுள்ள ஆண்களும் பெண்களும் மிக அழகு வாய்ந்தவர்களாயும், நல்ல மனோதைரியமுள்ளவர்களாய்மிருப்பார்கள்.

மகததேசத்தரசர்களின் ஸமகாலத்தில் இந்த தேசத்தை அரசு புரிந்த பௌத்தர்கள் காலம் முதல் இந்த மஹாம்பாபுரியில் ஸர்வ கலாசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு இப்பொழுதும் அது சிறப்புடன் காணப்படுவதாயும் ஏற்படுகிறது. ராஜஸ்தானம் என்னும் ராஜபுதன மாகாணத்தை ஜைனர்கள் முன்பு கைப்பற்றியபொழுது இந்த தேசம் தான் மிகவும் சிறந்தது என்னும் கருத்துடன் இதில் அவர்கள் அங்கங்கு அனேக கல்மண்டபங்களையும் விஹாரஸ்தலங்களையும் பசு மடங்களையும் தர்மசாலைகளையும் ஏற்படுத்தினார்கள். அவைகள் மேன்மேலும் ஜீரணோர்த்தாரணம் செய்யப்பட்டு இப்பொழுதும் உறுதியாகவும் மிக அழகாயும் காணப்படுகின்றன. இந்த தேசத்தில் கலாஸல் என்னும் ஊரில் சாலிவாஹனன் பிறந்ததாயும் அவன் வெகு அமர்தியாய் அன்புடன் பிரஜைகளை ஆண்டுவந்ததாயும் சில நவீன ஜோதிஷநூலில் கூறப்பட்டிருக்கிறது.

❋

அடிக்குறிப்புகள் :

1. Bombay ராஜதானியில் அடங்கியது.

   இதன் செல்வப் பெருக்கையும் ஜனங்களின் இயற்கையையும் வெகு விவரமாய் விச்வகுணாதர்சனத்தில் வேங்கடாத்வரீ கூறியிருப்பதைக் காண்க.

2. Kalyan

3. Bombay

4. Mahabaleshwar

5. Paitan

   இதன் கருத்தாவது–பம்பாய் நகரமும் த்வாரகா நகரமும் கடலால் நான்கு பக்கங்களிலும் சூழப்பட்டதாய் அமைக்கப்பட்டிருக்கிறது என்று பொருள். பம்பாய் நகரம் வில்லுபோல் வளைவாயும் த்வாரகாபுரம் சதுரமான ஸர்வதோபத்ரமாயும் சில்பசாஸ்த்ர முறைப்படி அக்காலத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது என்றும் விளங்குகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குளிந்த தேசம்

அத்யாயம் – 50

இருப்பிடம்

[1]குளிந்ததேசம்[2] யவனதேசத்திற்குத் தெற்கிலும் திராவிட தேசத்திற்கு வடக்கிலும் துங்கபத்ரா, கிருஷ்ணா நதிகளின் நடுவில் சிறிய பூமியில் நிலைபெற்றிருக்கிறது. தெற்கில் துங்கபுத்ரா நதியும் வடக்கில் கிருஷ்ணா நதியும் எவ்விதம் கிழக்குமுகமாய் சாய்ந்து ஓடுகிறதோ; அவ்விதமே இந்த குளிந்த தேசத்தின் பூமிமட்டமும் சாய்ந்திருக்கிறது. அதுவுமன்றி இந்த தேசபூமி முழுவதும் மிகவும் ம்ருதவான மண்ணுடன் கூடியதாயிருக்கும்.

மலை, நதி

இந்த தேசத்தில் சிறிய குன்றுகள் இரண்டு மூன்று தான் உண்டு. ஏனெனில் இந்த தேசம் மிகவும் சிறியதேயாகும். இதில் அங்கங்கு மலையடிவாரத்தில் சிறிய காடுகளும் தோப்புகளும்[3] தோட்டங்களும்[4] உண்டு.

கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளின் உட்பிரிவு வாய்க்கால் களுடைய ஜலப்பாச்சலும் வயல்களின் குணமும் வேமன்னன் செய்த தெலுங்கு பத்யகாவ்யத்தில் நன்றாய் விளங்கும். இந்த தேசத்தின் மண்குணத்தினால் ஆடுகளும் மாடுகளும் அனேகமாய் சிகப்பு நிறமுடையதாயிருக்கும். துங்கபத்ரா, கிருஷ்ணா நதிகளின் ஜலமானது சரீரத்திற்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். பித்தத்தையடக்கும். சாந்தியை உண்டுபண்ணுவதுடன் உஷ்ணத்தையும் தணிக்கும். மிகவும் ருசியாயிருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷம்: தென்னாலிராமன் வ்ருத்தாந்தம்

ஐச்வரியத்தில் சிறந்த அப்பாச்சிராயர் ஆந்தரதேசத்தை ஆளும் சமயத்தில் தென்னாலிராமன் என்பவன் காளிதேவியின் கடாக்ஷத்தினால் ஆச்சரியகரமான புத்தியின் ஸாமர்த்தியத்தை அடைந்து அவரது ஸபையிலும் மற்றெவ்விடத்திலும் வெகுமானத்தையும் நற்கீர்த்தியையும் அடைந்தான் என்னும் விஷயமும் எங்கும் ப்ரஸித்தமே. இவனது அற்புதச் செயல்கள் அடங்கிய நூலுக்கு தென்னாலிராமன் கதை என்று பெயர்.

சந்தரகுப்தன் அரசுக்குப்பிறகு இந்த குளிந்ததேசத்தை சில வேளாளர்களே ஆண்டு வந்ததாயும் ஏற்படுகிறது. இந்த தேசத்தில் பல பல இடங்களில் பாளயக்காரர் கட்டிய கோட்டைகளும் மற்றும் சில சின்னங்களும் இப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன.

❋

அடிக்குறிப்புகள் :

1. இது தற்காலத்திய ஸீடெட் டிஸ்டிரிக்கு (Ceded Districts)களில் அடங்கியிருக்கலாம். இந்த குளிந்ததேச விஷயமாய் சிலர் கூறுவதாவது:குளிந்ததேசம் என்பது ஆந்த்ரதேசத்தின் உட்பிரிவேயாகும். ப்ரயாகா க்ஷேத்ரத்திற்கு மேற்கில் கங்காயமுனையின் நடுவில் வத்ஸம் என்று ஒரு தேசம் உண்டு. அதற்கு கான்யகுப்ஜம் (Kanouj) என்பதுதான் முக்கிய நகரம். இப்படிப்பட்ட வத்ஸதேசம் சேர்ந்து தான் ஐம்பத்தாறு தேசங்கள் இந்த இந்தியாவில் அடங்கி இருந்தன என்று கூறுவாருமுளர்.
2. இந்த தேசத்தின் மேற்கில் கரீஷகம் என்று ஒரு சிறு உபதேசமிருக்கிறது என்பாருமுளர்.
3. தோப்பு என்றால் தானாகவே முளைத்த மரம் செடிகளாகும்.
4. தோட்டம் எனில் வைத்து வளர்த்த மரங்களினால் நிறைந்ததாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

த்ராவிடதேசம்

அத்யாயம் – 51

இருப்பிடம்: ஜனங்களின் நிறம், குணம்

[1] த்ராவிடதேசம் குளிந்த தேசத்தின் தென்பாகத்தில் ஓடும் கிருஷ்ணா நதிக்குத் தெற்கிலும் சோழ தேசத்திற்கு வடக்கிலும் ஓர் விசால பூமியில் கர்னாடகதேச எல்லைவரையில் பரவியிருக்கிறது. இது ஒரு பெரிய தேசமேயாகும்.

இந்த தேசத்தின் பூமிமட்டமானது சிலவிடங்களில் மேடுபள்ளமாயும் சிலவிடங்களில் நல்ல ஸமபூமியாயும் காணப்படும். இந்த தேசத்தில் வெயில் காலத்தில் உஷ்ணமானது அதிகமாகவே தோன்றும். இதில் வருஷத்தில் ஆறுமாஸகாலம் வெயில் காலமாகவே பெரும்பாலும் தோன்றும். ஆகையால் இந்த தேசத்தில் வஸிப்பவர்கள் அனேகமாய் கறுத்த நிறமுடையவர்களாய் இருந்த போதிலும் பாண்டிய தேசத்தின் தென் கோடியிலிருந்து திருப்பதி ஸ்தலம் வரையில் வஸந்த காலங்களில் தென்றல் காற்று வருஷம்தோறும் வீசுவதால் இந்த த்ராவிட தேசவாஸிகளுக்கு ஸௌக்யமும் ஆரோக்யமும் எப்பொழுதும் குறையாமலிருக்கும்.

மலை

இந்த தேசத்தின் நான்கு திக்குகளிலும் அனேக மலைகள் உண்டு. அவைகள் எல்லாம் பெரும்பாலும் சிறு குன்றுகளேயாகும்.

அவைகளில் சில பர்வதங்கள்தான் தேவஸ்தானமாய் இருக்கிறபடியால் மிகவும் ப்ரஸித்தி பெற்றவைகள். அவைகள் எதுவெனில்–இந்த தேசத்தின் நடுவில் வெங்கடாசலம் என்னும் திருப்பதி மலையும், காளஹஸ்தி மலையும் கடிகாசலமும், தெற்கில் வேதகிரியும், ஹஸ்திகிரியும், அருணகிரியும், தேவகிரியும் சிறந்தவைகள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவைகளில் வெங்கடாசலமே மிகவும் பெரியது. வெகுதூரம் வரையில் நீண்டு அகன்று உயர்ந்து அனேக தொடர்குன்றுகளால் கவரப்பட்டதாய் விளங்குகிறது. இதில் ஏழுமலைகள் சேர்ந்திருக் கின்றன. அவைகளாவன: வ்ருஷகிரி, அஞ்ஜனகிரி, நாதகிரி, நாராயணகிரி, கருடகிரி, சேஷகிரி, வெங்கடகிரி என்பவைகளாகும். இவைகளில் வெங்கடாசலமே மிகவும் உயர்ந்தது. இதில் பகவான் ஸ்ரீநிவாஸன் என்னும் திருநாமத்துடன் இந்த கலியுகத்துக்கு ப்ரத்யக்ஷ தெய்வமாக விளங்குகிறார். தன்னிடத்தில் உண்மையான பக்தி செய்பவர்களுக்கு எவ்வித கஷ்டங்கள் உண்டான போதிலும் அவைகளை இந்த ஸ்ரீநிவாஸ பகவான் ஒருவரே தீர்த்து இக்கலியுகத்தில் ப்ரஜைகளை ரக்ஷிக்கிறார் என்பது எங்கும் ப்ரஸித்தம். வெகுநாளாய் இந்த பகவானுக்கு நானாதேசத்திலிருந்து ஜனங்கள் வந்து பலவித பொருள்களை ப்ரார்த்தனை த்ரவ்யமாக ஸமர்ப்பித்து வருகிறார்கள். இந்த மலையின் மேல் திருக்கோயிலில் விளங்கும் ஸ்ரீநிவாஸ பகவானுடைய மஹிமைகளையும் இந்த வெங்கடாசலத் திற்கு முக்கிய நகரமான திருப்பதி நகரத்தின் மஹிமையையும் வெங்கடாசல மஹாத்மியத்தில் விசேஷமாய் காணலாம். இந்த வெங்கடாசலத்தில் அனேக மலையருவிகள் உண்டு. அவைகளில் பாபநாசம் ஆகாயகங்கை என்னும் நீரோடைகளே மிகப் புண்யதீர்த்த மென்று கார்த்திகைமாஸத்தில் நமது ஆரியர்களால் கொண்டாடப் பட்டு வருகிறது. இந்த ஏழுமலைகளிலும் அதன் அடிவாரங்களிலும் பெரிய காடுகள் உண்டு. அவ்வித காடுகளில் பலவித காட்டு ஜந்துக்களிருந்தபோதிலும், குரங்குகளே இதில் அதிகமாய் உண்டு. சிலவிடங்களில் புலிகளும் கரடிகளும் மலைப் பாம்புகளும் அதிகமாய்க் காணப்படும்.

காளஹஸ்தி என்னும் மலையில் பரமசிவபிரானுடைய லிங்க ஸ்வரூபமும் ஸுப்பிரம்மண்யர், விநாயகர், சண்டிகேஸ்வரர் முதலானவர்களின் திருக்கோயில்களும் விசேஷமாய் விளங்குகின்றன. இந்த காளஹஸ்தி க்ஷேத்ரத்தில் வாயுலிங்கம், கண்ணப்பநாயனார் முதலியவர்களின் மஹிமை விஷயங்களை காளஹஸ்தி ஸ்தலபுராணத் தில் விபரமாய்க் காணலாம்.

கடிகர்சலம்* என்னும் பர்வதத்தில் ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தியின் அர்ச்சாஸ்வரூபம் மிகவும் ஆச்சரியகரமாய் விளங்குகிறது. ஸ்ரீநிவாஸப் பெருமாள்போலவே இந்த நரஸிம்மமூர்த்தியும் பக்தர் களுடைய இஷ்டங்களை பூர்த்தி செய்வித்து அனேகவித ப்ரார்த்தனைப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருள்களை பெற்றுக் கொள்ளுகிறார். இந்த கடிகாசல க்ஷேத்ரத்தில் ஆஞ்ஜனேயருடைய திருக்கோயிலும் தக்கான்குளமும் வெகு புண்யஸ்தலமேயாகும்.

வேதகிரி[3] என்னும் மலையின் உச்சியில் முன்பு பரமேச்வரன் பக்தர்களுக்காக தன் ஸ்வரூபத்தை காண்பிக்கும்போது நான்கு வேதங்களும் இந்த மலையின் உருவமெடுத்துக் கொண்டு ஈசனுடைய பாதகமலங்களைத் தாங்கியதாகவும் அது முதற் கொண்டு இதற்கு வேதகிரி என்று பெயர் உண்டாயிற்று என்றும் இந்த க்ஷேத்ர ஸ்தலபுராணம் விவரமாய்க் கூறுகிறது.

ஹஸ்திகிரி என்பது இப்பொழுது கட்டடத்தினால் மூடப்பட்ட தாய் காஞ்சி நகரத்தில் விளங்கும் ஓர் தேவாலயத்திற்குள் விளங்கு கிறது. அம்மலைக்கருகில் அனந்தஸரஸ் என்று ஒரு புண்ய தீர்த்த முண்டு. அதன் ஸமீபத்தில் முன்பு ப்ரம்மதேவன் நெடுநாள் தவம் செய்து பிறகு அச்வமேதயாகம் செய்தார். அதன் அவப்ருத ஸமயத்தில் பகவான் வரதராஜ ஸ்வரூபியாய் ஆவிர்ப்பவித்து அந்த ஹஸ்திகிரியின் சிகரத்தில் விளங்கினார். ஸப்தபுரிகளில் ஒன்றாகிய காஞ்சிநகரில் அப்படிப்பட்ட வரதராஜஸ்வாமியினுடைய உத்ஸவம் முதலிய விப வங்கள் இப்பொழுதும் விசேஷ சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இந்த ஹஸ்திகிரியினுடைய விபவத்தையும் ப்ரணதார்த்திஹா வரதன் என்னும் ஸ்ரீதேவப் பெருமாளுடைய மஹிமையையும் ஹஸ்திகிரி மாஹாத்மியம் என்னும் புராணத்தில் தெளிவாய்க் காணலாம்.

அருணகிரி என்பது ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்திற்கு தெற்கிலிருக் கிறது. இதில் கைலாஸநாதனுடைய லிங்க ஸ்வரூபம் விசேஷவி பவத்துடன் விளங்குகிறது. இதற்குத்தான் திருவண்ணாமலை என்று பெயர் விளங்கி வருகிறது. இவ்விடத்தில்தான் ஈச்வரனைஅவரது வாகபாகம் பெற அம்பிகை தபம் செய்தாள். கார்த்திகை தீபம் இவ்விடத்தில் மிக ப்ரஸித்திபெற்றது.

தேவகிரி[4] என்பது காஞ்சீநகரத்திற்கு வெகுதூரம் தெற்கிலி ருக்கும் சஞ்ஜீபுரியில் விளங்கும் மலைக்குப் பெயர். இதில் முன்பு ஒரு ஸமயம் ஸ்ரீரங்கநகரிலிருந்து ரங்கநாதன் இந்த மலையில் சில காலம் வஸித்ததாயும் அதுமுதல் இப்பொழுதும் ரங்கநாதனுடைய திருக் கோயிலே இதில் மிக சிறப்பாய் விளங்கி வருகிறது. இந்த மலையின் அடிவாரத்தில் சஞ்ஜீபுரி என்னும் நகரமும் வெகுநாளாய் நிர்மாணிக்கப் பட்டதாய் ஏற்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்விதமாய் விவரிக்கப்பட்ட ஸப்தகிரிகளின் ஸமீபத்தில் சிறிய காடுகளும் சிலவிடங்களில் அழகிய தோப்புகளும் தோட்டங் களும் செழுமையாயிருக்கின்றன.

நதி

இந்த த்ராவிட தேசத்தில் ஸ்வர்ணமுகி, வேகவதி, க்ஷீரநதி (பாலாறு) பெண்ணையாறு, கருடநதி இவைகளே மிகவும் புண்யநதிகள் என்று எங்கும் ப்ரஸித்தம்.

இந்த நதிகளின் கரைகளில் நல்ல உத்யானவனங்களும் தோப்பு களும் ஈச்சை, நாணல், கொங்கு, பனை, பலா, கடம்பு, மா, புளி, இலவை, இலுப்பை முதலிய பலவித மரங்களும் விசேஷமாய் வளர்ந் திருக்கும். இந்த நதிகளின் ஜலம் பாயப்பெற்ற நிலங்களில் நஞ்சை தான்யங்களே விசேஷமாய்ப் பயிராகின்றன. இந்ததேசத்தில் சில விடங்களில் துவரை, கடலை முதலிய புஞ்சை தான்யங்களுமுண்டு.

விசேஷம்

இந்த த்ராவிட தேசத்தில் காஞ்சீபுரமே மிகவும் ப்ரஸித்தி பெற்ற துடன் இதற்கு முக்ய நகரமாகவும் நெடுநாளாய் ஏற்பட்டிருக்கிறது. இந்த காஞ்சிநகரத்திற்கு காமாக்ஷீ தேவியே நகரதேவதையாக பூஜிக்கப் பட்டு விளங்குகிறாள். இவளது திவ்யாலயமும் காலந்தோறும் நடக்க வேண்டிய உத்ஸவ முறைகளும் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

❋

அடிக்குறிப்புகள்:

1. இதற்கு தமிழ்தேசம் என்று பொருள்; ஏனெனில் இதில் பெரும்பாலும் தமிழ் பாஷையே நெடுநாளாய் வழங்குவதால் அகஸ்தியரால் ப்ரசாரத்தையடைந்த தமிழ் பாஷைக்கு த்ராவிடம் என்று வடமொழியில் பெயர் ஏற்பட்டபடியால் புராணங்களுரைக்குங் காலத்திலே சக்தி ஸங்கமதந்த்ரத்தில் த்ராவிடதேசம் என்று வழங்கலாயிற்று.
2. இதற்கு Sholingur என்று பெயர்.
3. Tirukkalukunran near Chingleput.
4. Gingee 20 miles from Tindivanam.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சோழதேசம்

அத்யாயம் – 52

இருப்பிடம்

[1]சோழதேசமானது த்ராவிட தேசத்திற்கு தெற்கிலும் பாண்டியதேசத்திற்கு வடக்கிலும் நிலைபெற்றிருக்கிறது. இந்த தேசத்தின் பூமிமட்டமானது மேற்கிலிருந்து கிழக்குமுகமாய் சாய்ந்து கிழக்குக் கோடியில் கிழக்குக் கடலின் ஜலமட்டத்திற்கு ஸமமாய் இருக்கிறது.

கோஸலதேசத்தின் மண்குணம் போலவே இந்த தேசத்தின் மண் மிருதுவாகவும் கறுப்பாகவுமே இருக்கும். இந்த தேசம் கிழக்கு மேற்கில் நீண்டும் தென்வடக்கில் குறுகியும் இருக்கிறது.

இந்த சோழதேசத்தில் கோடைகாலத்திலும் ஸூர்யதாபமே அதிகமாகத் தோன்றாது. இதில் அங்கங்கு விசேஷ தோப்புகளும், உத்யானவனங்களும், செடிகொடிகளுமேஅதிகமாய் வளர்ந்திருக்கின்றன. ஆகிலும் இந்த தேசத்திற்கு வாழையும் தென்னையுமே முக்ய லக்ஷணமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் இவ்வித குறிகளை நாம் நேரில் காணலாம். இந்த தேசத்தில் உறுதியான மண்ணும் துஷ்ட மிருகங்களும் கிடையாதென்றே சொல்லலாம்.

மலை, நதி

இந்த தேசத்தில் எவ்விடத்திலும் மலைகளையும் சிறு குன்றுகளையும்கூட காணமுடியாது. ஆகிலும் மண்குணத்தினால் ஒஷத கொடிவகைகள் நன்றாய்ப் பலிக்கின்றன. காட்டு மிருகங்களும் உயர்ந்த மரங்களுமடங்கிய காடுகளும் கிடையாது. எங்கும் ஸம பூமியாகவே அழகிய பாங்குடன் காணப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கர்னாடக தேசத்தின் தென்பகுதியிலிருக்கும் ஸஹ்யம் என்னும் குடகுமலையிலிருந்து காவேரி நதி உற்பத்தியாகிறது. இந்த நதி உற்பத்தியாகுமிடத்தில் மிகவும் குறுகியதாய் சற்றுதூரம் வரையில் தெற்கு முகமாய் ஓடி பிறகு கிழக்கு முகமாய் திரும்புகிறது. அவ்விடமிருந்து மிகவும் வேகமுடைய பெரியநதியாய்க் கிளம்பி இந்த தேசத் தின் பூமி முழுமையையும் நன்றாய் விளைவிக்கச் செய்கிறது. இந்த தேசத்தின் மேற்குதிக்கிலிருக்கும் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின் ஸமீபத்தில் இந்த காவேரிநதி இரண்டு பிரிவாய்ப் பிரிகிறது. அதில் வடக்கில் ஓடும் பிரிவிற்கு கொள்ளடம் என்றும், தெற்கில் ஓடும் பிரிவுக்கு காவேரி என்றும் பெயர். இந்த காவேரி நதியின் ஜலகுணமானது கங்கை போலவே மிகவும் சிறந்தது. இதில் ஸ்நானபானம் செய்பவர்களின் சரீரத்திற்கு பளபளப்பையும் புத்திக்கு தீக்ஷண்யத்தையும் கொடுக்கும். விளைபொருள்களை விசேஷமாய் பாவிக்கச் செய்யும். இப்படிப்பட்ட காவேரி நதியின் ஜலமானது வருஷத்தில் பத்து மாதகாலம் வரையில் இந்த தேசத்தில் எங்கும் பரவிக் கொண்டே இருக்கும். இந்தக் காவேரி நதியிலிருந்து பல சிற்றாறுகள் மட்டும் பிரிகிறதே தவிர வேறு நதிகளே இந்த தேசத்திற்கு கிடையாது.

காவேரி நதியின் உற்பத்தி

பூர்வத்தில் கவேரன் என்னும் ராஜரிஷி இமயமலையில் மோக்ஷத்தை வேண்டி பிரம்மாவை குறித்து தபம் செய்தார். அந்த ஸமயத்தில் மஹா விஷ்ணுவின் மாயையாகிய கன்னிகை இந்த கவேரனுக்கு பெண்ணாகப் பிறந்து நதிரூபமாய்ப் பூலோகத்தில் பரவி இந்த கவேர ம்ஹரிஷியையும் மற்றும் அவனது ஜலஸம்ஸர்க்கம் பெற்றவர்களையும் மோக்ஷமடையும்படி செய்துவந்தாள்.

பின்பு இந்த காவேரி லோபாமுத்திரை என்னும் உருவத்துடன் மஹாவிஷ்ணுவை தான் ஜனங்களுக்கு க்ஷேமத்தை செய்யும் மார்க்கத்தை வேண்ட பகவான் தான் ஸஹ்ய மலையில் ஓர் நெல்லிமரமாக தோன்றுவதாகவும் ப்ரம்மா விரஜாநதிஜலத்தை சங்கில் கொண்டு வந்து அந்த வ்ருக்ஷத்தினடியில் அபிஷேகம் செய்யும் ஸமயம் இவள் இந்த ஸஹ்யபர்வதத்திலிருந்து தக்ஷிணகங்கை என்னும் பெயருடன் நதியாய் வெளியாகி எல்லோரையும் சுத்தமாக்கலாமென்றும் தானும் அந்த உற்பத்தி ஸ்தானத்தில் தத்தாததிரேயர் என்னும் நாமத்துடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாஸம் செய்வதாகவும் மத்யத்தில் ஶ்ரீரங்கநாதனாக அவளது மடியில் பள்ளிகொள்ளுவதாகவும் ஆக்ஞாபித்தார். ஆனது பற்றியே காவேரி நதிக்கு தக்ஷிணகங்கை, ம்ருத்வ்ருதை, சங்கதீர்த்தம், ஸக்யாமலகதீர்த்தம் என்று பல பெயர் வழங்கலாயிற்று.

மேலும் மற்ற புண்ய நதிகளும் தங்களிடம் பாமிகள் ஸ்நானம் செய்வதினால் தங்களுக்கு உண்டாகும் பாபத்தை போக்கிக் கொள்ள, துலாவிஷு புண்யகாலத்தில் ஸஹ்யா மலகத்தினிடத்திலும், ஶ்ரீரங்கநாதன், ஜம்புகேச்வரன் இவர்கள் ஸந்நதியின் அருகிலும் காவிரியை அடைகின்றன. ஆகையால் துலாஸங்கிரமண காலத்தில் தலைக் காவேரி, ஶ்ரீரங்கம் இவைகளில் ஸ்நானம் செய்வதினால் ஸகல புண்ய நதிகளிலும் ஸ்நானம் செய்த பலன் உண்டாகும். ச்வேதாரண்யம் எனப் படும் திருவெண்காடு க்ஷேத்திரத்தின் அருகில் தான் இந்த காவேரி ஸமுத்திரத்தோடு சேருகிறது. இவ்விடத்தில் ருத்திரபகவான் எப்பொழுதும் ப்ரஸன்னராயிருக்கிறார். புத்திரலாபம், தனலாபம், கன்னிகாலாபம், ஆயுர்லாபம், மோக்ஷம் இவைகளை ஸமுத்திர ஸங்கம ஸ்நானம் கொடுக்கும்.

இந்த காவிரியை ஸ்மரிப்பவர்களுக்கு முக்தி உண்டாகும். இந்த நதியானது புஷ்பங்களுக்குள் துளசி போலவும், விரதங்களுக்குள் ஏகாதசி போலவும், தேவர்களுக்குள் நாராயணமூர்த்தி போலவும், எழுத்துக்களுக்குள் ப்ரணவம் போலவும், மந்திரங்களுக்குள் அஷ்டாக்ஷரம் போலவும், வேதங்களுக்குள் ஸாமவேதம் போலவும், ஏகாதசருத்திரர்களுக்குள் சங்கரன் போலவும், ப்ராம்மண் ஸ்திரீகளுக்குள் அருந்ததி போலவும், மாதர்களுக்குள் லக்ஷ்மி போலவும், தானங்களுக் குள் அன்னதானம் போலவும், பூஜைகளுக்குள் விஷ்ணு பூஜை போலவும், ஜாதிகளுக்குள் ப்ராம்மண ஜாதிபோலவும், பொறுமை உடையவர்களுக்குள் பூமிதேவிபோலவும், அஸ்தரங்களுக்குள் ப்ரம்மாஸ்திரம் போலவும், புண்ய க்ஷேத்திரங்களுக்குள் ஶ்ரீரங்கம் போலவும், பசுக்களுக்குள் காமதேனுபோலவும், யுகங்களுக்குள் க்ருதயுகம் போலவும் சிறந்த மஹிமை உடையது.

மதுரையில் ஒரு ஸமயம் ப்ராம்மணர்களில் உத்தமரான வேதராசி என்பவர் தமது தர்மபத்னியாகிய சந்த்ரகாந்தை என்பவளுடன் கூடி வாஸம் செய்துவந்தார். இந்த சந்தரகாந்தை தனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கணவனுக்கு முறைப்படி உபசரணை செய்து வந்தாள். ஆகிலும் அயல் வீட்டிலிருந்த விபசாரியானவளும் அதிக துஷ்டஸ்வபாவமுள்ளவளுமான வித்யாவளி என்பவள் சந்திரகாந்தையின் பாதி ஸாத்யத்தைக் கலைக்க முயன்றபொழுது சந்த்ரகாந்தை அவளுக்கு பலவாறாக புத்திமதி சொல்லி தான் தன் கணவனுடன் தர்ம சாஸ்திரப்படி மாதவிடாயான ஐந்தாநாள் முதல் பதினாறுநாள் வரையில் மத்தியில் நிஷித்தமான நாள்களைத் தள்ளி மற்றைய சுத்த தினங்களில் சேருவதாகவும் அப்படிச் செய்வதால் தான் தம்பதிகளுக்கு பிறக்கும் புத்திரன் தீர்க்காயுசும், வித்துவானாகவும், பாக்கியசாலியாகவும் இருப்பானென்றும் அப்படிக்கின்றி விலக்கப்பட்ட தினங்களில் உற்பத்தியான புத்திரன் கேவலம் பாபியாகவும், அற்பாயுசாயும், தாய் தந்தைக்கு அதிக துக்கத்தை விளைவிப்பவனாயுமிருப்பானென்றும் தான் தனது பர்த்தாவைவிட்டு பிறரை நினைக்கமாட்டாததாகவும் உறுதியாய்ச் சொன்னாள். இவ்விதம் க்ருஹஸ்தாச்ரம தர்மத்தை உபதேசிக்கப்பட்ட வித்யாவளி தேறாமல் நாளடைவில் இந்த சந்திரகாந்தையை மயக்கி அவளையும் தன் இனத்துடன் சேர்த்துக் கொண்டாள். அப்பொழுது இந்த மதுரை நகரத்தரசனாகிய இந்திரத்யும்னன் என்பவன் இப்படிப்பட்ட துஷ்டவ்யபிசாரி தனது தேசத்திலிருக்கக் கூடாதென்று சந்திரகாந்தையின் பொருளைப் பிடுங்கிக் கொண்டு தனது நாட்டிலிருந்து அவளைத் துரத்திவிட்டான். இப்படி பதித்ரோகம் செய்த பாபத்தினால் வெகு கஷ்டப்பட்டு மறு ஜன்மத்தில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் காவேரியில் துலாமாஸத்தில் ஸ்நானம் செய்ததின் பலனாய் அவள் நல்ல கதியை அடைந்தாள்.

விசேஷம்: சோழ ராஜாக்களின் பெருமை.

இந்த தேசத்தின் மேற்குபாகத்தில் ஸ்ரீரங்கமும், கிழக்கில் கும்பகோணமும், அதற்கு கிழக்கில் மாயூர (மாயவரம்) ஸ்தலங்களுமே மிகவும் ப்ரஸித்தி பெற்றவைகள். மேலும் அங்கங்கு காவேரியின் இருபுறங்களிலும் அநேக விஷ்ணு ஆலயங்களும் சிவாலயங்களும் பூர்வ அரசர்களால் நெடுநாளாய்ப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. ஆந்த்ரதேசத்தில் விஜயநகரம் என்னும் ஸமஸ்தானம் ஓங்கி வளர்ந்து வருகையில் அவ்வம்சத்தில் உதித்த சேவப்ப நாயக்கன் அச்சுதப்ப நாயக்கன் முதலிய சில தர்மிஷ்ட இந்து அரசர்களே இந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசத்தை மிகவும் சிறப்பாக பரிபாலித்து வந்ததாக சிலாசாஸனங்களினால் ஏற்படுகிறது. அதற்குமுன் இந்த தேசம் தோழன் என்று ப்ரஸித்தி பெற்ற தமிழ் நாட்டரசனால் வெகு விமரிசையாய் செங்கோல் செலுத்தப்பட்டதாகவும் ஏற்படுகிறது.

❋

அடிக்குறிப்புகள்:

1. Chola Kingdom comprised mostly in the present Tanjore District.
2. இதற்கு பொன்னி என்று தமிழிலும், ஸ்வர்ணநதி என்று வடமொழியிலும் பெயருண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸிம்மளதேசம்

அத்யாயம் – 53

இருப்பிடம்

பாண்டிய தேசத்தின் கிழக்கிலுள்ள ராமேச்வரத்திற்கு வெகுதூரம் தென்கிழக்கில் நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட ஓர் சிறிய தீவுக்கு [1]ஸிம்மளதேசம் என்று பெயர். இந்த தேசத்தின் பூமி யின் பரப்பு வடக்குபாகத்தில் சுருங்கியும் தெற்கில் மிகவும் அகன்றும் இருக்கிறது. மேலும் இதில் பூமிமட்டமானது நடுவில் உயர்ந்தும் கடல் ஓரங்களில் சாய்வாகவும் இருக்கிறது. சில விடங்களில் செம்பாறை, வெண்பாறை கற்களுமுண்டு. இதில் அநேக இடங்களில் மிகவும் மிருதுவான மண்ணே தோன்றும்.

மலை, நதி

இந்த தேசத்தில் சிறிய அநேக குன்றுகள் உண்டு. அவைகளில் ஸிம் மகிரி என்பதே மிகவும் பெரியது. இஃது இத்தேசத்தின் மேற்கு திக்கில் ஓங்கி நிற்கிறது. இம்மலையிலிருந்தே வேணா என்னும் ஓர் பெரிய நதி கிளம்பி கிழக்குமுகமாய் ஓடி இத்தேச பூமியை செழிப்பித்துக் கொண்டு கடலுடன் சேருகிறது. இந்நதிக்கரையிலும் மற்றும் சில குன்று நதிக்கரைகளிலும் அநேக சோலைகளுண்டு. அவைகளில் தேன் கூண்டு மரங்களும் பலா மரங்களுமே மிகவும் சிறந்தவைகளாய் வளருகின்றன.

இத்தேசத்தில் அங்கங்கு சிறு காடுகள் உண்டு. ஆகிலும் கொடிய ஜீவசந்துக்களின் துன்பம் விசேஷமாய் நேரிடுவதில்லை. இப்படிப் பட்ட இந்த ஸிம்மதேசத்தில் ஓடும் வேணா நதி ஸங்கமத்தில் சில ஸமயங்களில் அழகிய வெண்முத்துக்களும் மேன்மையான பவழக் கொடிகளும் உற்பத்தியாகின்றன வென்று ஏற்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விசேஷம்

இந்த தேசத்தின் மண்குணமும் அழகிய காற்றும் வாஸத்திற்கு மிக்க அனுகூலமாயிருந்த போதிலும் இதில் வஸிப்பவர்கள் நெடுநாளாய் கறுப்பு நிறமுடையவர்களாய் தோன்றிவருகிறார்கள். அவர்களிலும் சிலர் தயையற்றவர்களாயும் நாகரிகமில்லாதவர் களாயும் ரணத்தொழிலையே விரும்புபவர்களாயும் காடுகளில் உலாவி வருகிறார்கள். மனிதர்கள் இவ்விதமிருந்தபோதிலும், பசுக்களும் ஆடுகளும் கிளி முதலியவைகளும் மிகவும் சிறந்ததாகவே இருக்கும்.

விந்தியமலைக்கு தெற்கிலுள்ள தேசங்களில் இந்த ஸிம்மதேசம் சிறந்ததென்று சொல்லுவதற்கு இதில் உண்டாகும் நல்முத்துக்களே காரணமென்று நன்றாய் ஏற்படுகிறபடியால் அவைகளின் லக்ஷணம் இவ்விடத்தில் குறிப்பிடப்படுகிறது. அதில் முத்துகள் நவரத்ன ஜாதிகளின் ஒன்றாகியபடியால் அவைகளின் உற்பத்தி முதலிய சில விஷயத்தை ஹாலாஸ்யமா ஹாத்மியம் ரத்னபரீக்ஷை என்னும் புஸ்தகங்களிலிருந்து குறிப்பிடப்படுகிறது.

1. வைரம்

அநேக தாதுக்களும் பலவித உலோகங்களும் பூமியிலிருந்து அங்கங்கு பூஸாரத்திற்குத் தகுந்தபடி உண்டாகின்றன. தாதுக்களைக் காட்டிலும் உலோகங்களே மிக்க சிறந்தவைகள். அவைகளைக் காட்டிலும் ரத்னங்கள் மிகவும் உயர்ந்தவைகள். அவைகளில் வைரம் என்னும் வஜ்ரக்கற்களே மிகவும் மேன்மை உடையவைகள்.

இப்படிப்பட்ட வைரக்கற்கள் பூமியின் சில பாகங்களில்தான் உண்டாகின்றன. கோஸலதேசத்தில் உண்டாகும் வைரம் காட்டு வாழை புஷ்பம் போல் சிவந்த வர்ணமாயிருக்கும். களிங்கதேசத்தில் உண்டாகும் வைரம் கொஞ்சம் மஞ்சள் வர்ணமாயிருக்கும். இமயமலையிலுண்டாகும் வைரம் நல்ல வெண்மைகாந்தம் உடையதாயிருக்கும். மஹாராஷ்டிர தேசத்தில் உண்டாகும் வைரம் ரத்தவர்ணமாயும் ஸௌவீரதேசத்திலுண்டாகும் வைரம் கருப்பாகவும் தோன்றும்.

காட்டுவாழை புஷ்பத்தின் காந்தம் உடைய வைரத்திற்கும் வாழை இலையின் நிறம் போன்ற வைரத்திற்கும் விஷ்ணுவைரம் என்று பெயர். கனியிலிருந்து வெளியிலெடுக்கும் பொழுதே ஆறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முலைகளையும் வெண்மையையும் அடைந்திருக்கும் வைரத்திற்கு இந்திர வைரம் என்று பெயர். பலாசபுஷ்பம் போல மிகவும் சிறந்த வைரத்திற்கு வாயுவைரம் என்று பெயர். நெருப்புப்போல் காந்தம் வீசும் வைரத்திற்கு அக்னிவைரம் என்று பெயர். இவ்விதமாய் வைரத்திற்கு தேவப்பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சுத்த வெண்மையாய் விளங்கும் வைரம் ப்ராம்மணஜாதி வைரம் என்றும், முயல்கண் போல் விளங்கும் வைரம் க்ஷத்திரியஜாதி வைரம் என்றும், வாழை இலைபோல் விளங்குவது வைச்யஜாதி வைரம் என்றும், வாள்போல் கரு நீலமான வைரம் சூத்ரஜாதி வைரம் என்றும் ஜாதிப்பெயரும் உண்டு. உலகில் முக்யமாய் விளங்கும் நான்கு ஜாதியரும் அந்தந்த ஜாதிக்குரிய வைரக்கற்களை ஆபரணங்களில் அணிந்தால் நன்மையே உண்டாகும். வைரக்கற்களினால் எவ்வித ஆபரணங்கள் செய்த போதிலும் ஸ்திரீகளின் மாங்கல்யத்தை மாத்திரம் செய்யலாகாது.

காந்தம் குறைவு, கோடுகள், த்ராஸம் (அதாவது எப்படி திருப்பிப் பார்த்த போதிலும் வைரத்தின் நடுவில் பிளவு ஏற்பட்டாற் போல் தோன்றுதல்) காக்கைக்கால் புள்ளி என்னும் இவ்வைந்தும் வைரத்திற்கு முக்ய தோஷங்கள். அதிக காந்தம் வீசிக்கொண்டும் பெரிய உருவத்துடன் கூடின ரத்னங்கள் புருஷஜாதி என்றும், சிறிய உருவத்துடன் நற்காந்தி வீசிக் கொண்டு கெட்டியாயிருக்கும் ரத்னங்கள் ஸ்திரீஜாதி என்றும், ஒளி இல்லாமல் கரடு முரடாயிருக்கும் ரத்னங்கள் நபும்ஸகஜாதி என்றும் சொல்லப்படும். புருஷஜாதி வைரங்கள் செல்வத்தையும், ஸ்திரீஜாதி வைரங்கள் ஸந்ததியையும் கொடுக்கும். நபும்ஸகஜாதி வைரங்கள் தரித்திரத்தையும் பலக்குறைவையும் துன்பங்களையும் உண்டாக்கும்.

ஒரு வைரத்தை கையிலெடுத்துப் பார்க்கும் ஸமயத்தில் அந்த ரத்னத்தின் எதிர்பாகத்தில் ஓர் கோடு இருப்பது போல் தோன்று வதற்குத்தான் ரேகா தோஷமென்றும், கோடு தோஷமென்றும் பெயர்.

இவ்வித வைரக்கற்களினால் தேவதைக்கு கிரீடம், ஹாரம், பதக்கம் முதலிய ஆபரணங்களைச் செய்யலாம். அரசர்களுக்காகில் கிரீடத்தில்தான் வைரங்களை உபயோகிக்கலாம். இதர மனிதர் களுக்கோவென்றால் அரைஞாணிலும், கடுக்கண்களிலும் ஹாரங் களிலும், மோதிரத்திலும், காப்புகளிலும், தோள்வளைகளிலும் உபயோகிக்கலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. முத்து

முத்துகள் சிலவிடங்களில் ஜலத்தில் உண்டாகும். சிலவிடங்களில் பூமியிலும் உண்டாகும். மேலும் நாட்டில் வஸிக்கும் 200 வயதுள்ள யானையின் மஸ்தகத்திலும் மூங்கில், கரும்பு இவைகளின் அடிக்கணுவிலும், பன்றியின் கடைவாயிலும், பெரிய மீனின் பற்களின் நடுவிலும், பாம்பின் படத்திலும் முத்துகள் உண்டாகும். ஜலத்திலுண்டாகும் முத்துகளுக்கு சிப்பிமுத்து என்று பெயர். மற்றவைகள் கிடைப்பது அரிது. சிப்பிமுத்துகள் மிக வெண்மையாயும் மாடப்புறாவின் முட்டை அளவு பருமனாகவும் இருக்கும். மீன் தலையில் உண்டாகும் முத்து பச்சை வெண்மையாயிருக்கும். மேகத்திலுண்டாவது சூர்ய வெளிச்சம் போல் மிகவும் ப்ரகாச முடையதாயிருக்கும். பன்றியின் பற்களிலுண்டாவது சிவப்பாகவே இருக்கும். பாம்பு படத்தின் முத்து நீலமாயிருக்கும். யானை மஸ்தகத்திலுண்டானது மஞ்சள் நிறமாயிருக்கும். இவைகளுள் சிப்பி முத்துகளே ஏராளமாய் உண்டாகும். இவைகளுக்கு குணமும் அதிகம்.

எந்த முத்தில் சிப்பியின் ஓர் பாகம் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ அதற்கு சிப்பிதோஷம் என்று பெயர். அவ்விதமுத்தை அணிபவர்களுக்கு குஷ்டரோகம் உண்டாகும். மீன் கண்போலிருக்கும் முத்துக்கு கண்தோஷம் என்று பெயர். இதை அணிவதால் புத்திரஹானி உண்டாகும். காந்தம் குறைந்த முத்து கிழமுத்து என்று பெயர். இது வறுமையை கொடுக்கும். சிகப்பு நிறம் காணப்படும் முத்துக்கு ரத்ததோஷமென்று பெயர். இது துன்பத்தைக் கொடுக்கும். மேடு பள்ளமாயும் சப்பட்டையாயுமிருக்கும் முத்துக்கு த்ரிவ்ருததோஷ மென்று பெயர். இது அபகீர்த்தியை விளைவிக்கும். முக்கோண வடிவுள்ள முத்துக்கு கோணதொஷமென்றும் அது செல்வக்குறைவை கொடுக்கும் என்றும் ஏற்படுகிறது. இவ்வித தோஷங்கள் நீங்கி நக்ஷத்திரம் போல் மிகவும் வெண்மையாய் கனமுள்ள உருண்டை முத்துக்களையே உபயோகிக்க வேண்டும். இவ்வித நல்லமுத்தை அணிவதினால் செல்வம், கல்வி இவைகள் விருத்தி அடையும்.

3. மாணிக்கம் என்னும் பத்மராகம்

ஸிம்மளதேசத்தில் ஓடும் வேணா நதிக்கு ஐராவண கங்கை என்று மற்றொரு பெயர் உண்டு. இதில் சிலவிடங்களில் மாணிக்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உண்டாகின்றன. இது மிகவும் சிறந்தது. ஆந்த்ரதேசத்திலும் மாணிக்கம் கிடைக்கும். இவைகளில் குருவிந்தம் என்றும் பத்மராகம் என்றும் இரண்டுவிதமுண்டு.

தாமரை இதழ்போலும் மினுமினுப் பூச்சிபோலும் மாதுளம் முத்துப்போலும் மிகவும் சிவந்த நிறமுடைய கற்களுக்கு பத்மராகம் என்று பெயர்.

4. மரகதம் என்னும் பச்சை

பாரஸீகதேசத்திலும் மேற்குகடலில் சில விடங்களிலும் மரகத பச்சை கற்கள் உண்டாகின்றன. அவைகள் மயில் கழுத்தின் வர்ணம் போலும் பச்சைப்புல் நிறம் போலவும் தோன்றும். அவைகளில் ஓர் ரத்னத்தை பாலின் நடுவில் வைத்தால் பால் முழுமையும் பச்சைவர்ணம் பரவுமேயாகில் அதுவே உயர்ந்த மரகதமெனப்படும்.

நல்ல மழமழப்பு, வெடிப்பில்லாமை, கொப்பளமில்லாமை, மேன்மேலும் காந்தம் வீசுதல், பளுவாயிருத்தல் இவைகள் நல்ல குணமுடையவைகள். பாசிபோல அதிகமாய் ஆழ்ந்த பச்சையாய் இருப்பது சிறந்ததென்றே சொல்லப்படும்.

5. புஷ்யராகம்

இமயமலையிலும் ஸிம்மளதேசத்திலும் விந்தியமலையின் தாழ்வரையிலும் தாபனி நதியின் கரையிலும் புஷ்யராகக் கற்கள் உண்டாகின்றன. சந்திர வெளிச்சம் போல் மிகவும் வெண்மையாகவும் புள்ளி, கோடு முதலிய தோஷமில்லாமலும் வைரம் போலவே 5,7,9 முலைகளையுடையதாயிருக்கும் புஷ்யராகங்கள் சிறந்தவைகளாகும்.

6. வைடூரியம்

மகத தேசத்திலும் பாரஸீக தேசத்தின் மேற்கு பாகங்களிலும் மலையமலையின் குகைகளிலும் தோன்றும் கனிகளிலிருந்து வைடூரியம் கிடைக்கின்றன. இவைகளின் நிறம் தேன் போலவும் கோமூத்திரம் போலவும் காணப்படும். இவைகளை அணிவதால் சர்மவ்யாதிகளே அணுகா. இவைகள் பூனைக்கண் மேல் மஞ்சள் நிறமுடையதாயிருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. பவழம்

ராமேச்வர தீபகற்பத்தின் தெற்கில் ஸேதுவின் ஸமீபத்திலும் வேணாநதி ஸங்கமத்திலும் பவழக்கொடிகள் உண்டாகின்றன. ஜலத்தின் தொகுதியில் சிவந்த கொடியாய் முதலில் படர்ந்து சிலகாலம் சென்றவுடன் அக்கொடி கெட்டிப்பட்டு விடுகின்றன. அவைகள்தான் பவழமெனப்படும். இது மிகவும் சிறந்த நிறமாயிருக்கும். ஆகிலும் ரத்னம்போல் காந்தம் வீசாமல் சிவந்த நிறமுடையதாய்மட்டும் தோன்றும். இவ்வித பவழங்களில் பூச்சி துளையில்லாமலும் வெண்மைப் பொட்டு தோன்றாமலும் பளுவாயும் பருத்துமிருக்கும் பவழங்களே சிறந்தவைகளாகும். இவ்வித பவழங்களை புருஷர்கள் அணிந்து கொள்ளக் கூடாது. ஸ்திரீகள் மட்டும் அணியலாம். அவ்விதம் உபயோகிப்பதாலும் நல்ல பவழங்களை எப்பொழுதும் மாலையாய் அணியும் ஸ்திரீகளுக்கு மாங்கல்யம் வெகுகாலம் வளரும். ஸ்திரீ தேவதைகளுக்கு பவழமாலை ஏற்பட்டிருந்தால் அவைகளுக்கு பூஜை நிற்காமல் நடந்துவரும்.

8. நீலம்

நீல ரத்னமானது பூமியில் சிலவிடங்களில் கனியின் நல்ல குணத்தினால் உற்பத்தியாகும். இவ்வித நீலக்கற்கள் பிளவை அடையாமலும் வேறு எவ்வித வர்ணம் வீசாமலும் நல்ல நீலக் காந்தம் மாத்திரம் அடைந்தவைகளே அதிக குணமுடையவைகளாகும்.

9. கோமேதகம்

கோஸல தேசத்திலும் மற்ற இடங்களிலும் கோமேதக ரத்தினங்கள் கிடைக்கின்றன.

❈

அடிக்குறிப்பு :

1. The island of Ceylon on the South east of India near Ramesvaram. It appears, at one time, this had land Connection with India.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாண்டியதேசம்

அத்யாயம் – 54

இருப்பிடம்

சோழ தேசத்திற்கு தெற்கிலும் கேரள தேசத்திற்கு கிழக்கிலும் ஓர் அகன்ற பெரிய பூமியின் நடுவில் [1]பாண்டியதேசம் நிலை பெற்றிருக்கிறது.

இந்த தேசத்தின் மண்ணின் இயல்பானது. சில விடங்களில் மிருதுவாகவும் சிலவிடங்களில் மிகவும் கடினமாகவும் இருக்கும். எக்காலத்திலும் உஷ்ணமே இந்த தேசத்தில் ஓங்கி இருக்கும். ஆகிலும் இந்த தேசத்தின் தெற்கிலுள்ள பொதியம் என்னும் மலையிலிருந்து எப்பொழுதும் மந்தமாருதம் வீசிக்கொண்டிருப்பதால் ஜனங்களின் வாஸத்திற்கு இது சிறந்ததென்றே கூறலாம். இந்த தேசத்தின் தென்பாகத்தில் கடினமான வனங்களுண்டு. அவைகளில் சந்தன மரங்களும் வெற்றிலைக் கொடிகளும் விசேஷமாய்த் தோன்றக்கூடும். சில விடங்களில் ஏலக்கொடிகளும் வாழைகளுமுண்டு. இயல்பாகவே சீதளமாய் வீசக்கூடிய தென்றல் காற்றானது, சந்தன வாஸனையுடன் சேர்ந்து இந்த பாண்டிய தேசம் ஒன்றில்தான் எப்பொழுதும் வீசுமென்று காளிதாசன் இயற்றிய ரகுவம்சத்தில் சிறப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

மலை, ராமேச்வர மஹிமை

இந்த தேசத்தின் தெற்கில் மலையம், தர்துரம், பெரிய மலை என்னும் மலைகளும் மேற்கில் வ்ருஷகிரி[2], வராககிரி[3] முதலிய சிறு மலைகளும் நிலைபெற்றிருக்கின்றன. இவைகளுள் தெற்கிலிருக்கும் பர்வதங்களிலிருந்து மலை அருவிகளும், சிறு ஓடைகளும், நீர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுனைகளும் பரவுகின்றன. இந்த தேசத்தின் வடமேற்கு பாகத்தில் ஸ்ரீரங்க க்ஷேத்திரம் முதல் மேற்கில் ஸுப்ரம்மண்யம் வரையிலும் அழகிய சோலைகளும் வனங்களும் உண்டு. இவைகள் இந்த பாண்டிய தேசத்திற்கும் கேரள தேசத்திற்கும் எல்லைகள்போல் தோன்றுகின்றன. இவ்வித பாண்டிய தேசத்தின் கிழக்கில் மஹோநதி என்று கிழக்கு கடலுக்கும் ரத்னாகரம் என்று தெற்கு ஸமுத்திரத்திற்கும் ஓர் வாய்க்கால் நெடுநாளாய் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத்தான் பாம்பன் வாய்க்கால் என்றும் பாம்பன் நதி என்றும் பெயர். அதன் தென்கரையில் மூன்று பாகங்களிலும் கடலால் சூழப்பட்ட ராமேச்வரம் என்னும் த்வீபம் நமது தென் இந்தியாவிற்கு திலகம்போல் விளங்குகிறது. இந்த த்வீபம் பாண்டிய தேசத்தைக் காட்டிலும் குளிர்ந்தது. முற்றிலும் மணல் மயமாய் இருக்கும். இரண்டொரு மலைகளும் உண்டு. இப்படிப்பட்ட ராமேச்வர த்வீபத்தில் விசேஷ நதிகளும் தடாகங்களும் கிடையாது. சில புண்ய தீர்த்தங்களும் தேவாலயங்களும் உண்டு.

நதி, முத்து சிப்பி விளைவு

இந்த தேசத்தின் தென்பாகத்தில் வைகை நதியும் தாமிரபரணி நதியும் மிகவும் சிறந்தவைகள். தாம்ரபரணியும் கடலும் சேருமிடத்தில் முத்து சிப்பிகள் உண்டாகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நதிகளும் மற்றும் சில காட்டாறுகளும் இந்த தேசபூமியை செழிப்பிக்கின்றன. இதில் புஞ்சை தான்யங்களே விசேஷமாய்ப் பலிக்கின்றன.

விசேஷம்

அவந்தி தேசத்தின் ராஜதானியாகிய தாரா என்னும் நகரத்தை போஜராஜன் எவ்விதமாய் சிறப்புடன் பரிபாலித்தானோ அது போலவே இந்த பாண்டிய தேசத்திற்கு ராஜதானியாய் விளங்கும் மதுரை (தென்மதுரை) மாநகரத்தை அநேக இந்து அரசர்கள் அரசு புரிந்தனர். அவர்களில் திருமலைநாயக்கன் என்பவனுடைய அரசு காலத்தில் மதுரையில் கட்டப்பட்ட அழகிய அரண்மனையும் மற்றும் சில தேவாலயங்களும் இப்பொழுதும் வெகு புதியது போலவே அழகாய் விளங்குகின்றன. இந்த மதுரையின் ஸ்தலபுராணத்தின் கருத்துப்படி வட்டமிட்டுக் கொண்ட ஸர்ப்பத்தின் உருவம் போல நகரத்தின் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்நகரின் சிறப்பு அயோத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யின் சிறப்புப் போலவே மிகவும் கொண்டாடத்தக்கதேயாகும். இவ்வித மதுரை நகரில் ஸ்ரீ சுந்தரேசன் என்னும் கைலாஸநாதனு டைய கோயிலும் அவரது அறுபத்து நான்கு லீலையும் ஹாலாஸ்ய மஹாத்மியம் என்னும் வடமொழி நூலில் விசேஷமாய் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இந்நகரில் நெடுநாளாய் தமிழ்சங்கம் என்னும் புலவர் சபை ஏற்படுத்தப்பட்ட இதற்கு அகஸ்தியர் முதல் அரிய பெரிய தமிழ் புலவர்கள் இயற்றிய நூல்களின் சிறப்பு விஷயமாய் கொண்டாட்டமும் பாஷையின் மஹிமையும் முக்கிய நோக்கம்.

வைகைநதியின் தென்கரையில் விளங்கும் மதுரை நகரம் போலவே தாமிரபரணி என்னும் பொருநையின் கரையில் குருகை என்னும் ஆழ்வார் திருநகரியில் விஷ்ணு ஆலயமும் விளங்கி வருகிறது. திருவாய்மொழி, திருவிருத்தம் முதலிய ஆறு திவ்ய ப்ரபந்தங்களை இயற்றிய நம்மாழ்வாரின் அவதார ஸ்தலமும் பெருமையும் இவ்வூரிலேயே விசேஷமாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தேசத்தின் தெற்கில் தாமிரபரணி நதியின் கரையில் திருநெல்வேலி க்ஷேத்ரம் மிக ப்ரஸித்தமானது. இதில் தான் அகஸ்திய மஹரிஷிக்கு ஈச்வரன் தமது திருக்கலியாண வேலை கொடுத்தார். மேலும் ஈச்வரன் நடனம் செய்த பஞ்ச சபைகளில் ஒன்றாகிய தாம்ரஸபை இவ்வூரில் விசேஷ மஹிமை உடையதாய் விளங்குகிறது.

ஸ்ரீராமன் இலங்கையை நோக்கிச் செல்லும் காலத்தில் இந்த பாண்டிய தேசத்தின் கிழக்கிலிருக்கும் ஸமுத்திரக்கரைஅடைந்தார். சிலநாள் வரையில் அணைகட்டுவதற்கு அனுகூலம் செய்யாதபடி ஸமுத்திர அலைகள் வீசிக் கொண்டிருந்தபடியால் அக்கரையிலேயே தர்ப்பத்தின் பேரில் சயனித்தார். அதுமுதற்கொண்டு அந்த ஸ்தலத்திற்கு தர்ப்பசயனம் என்றும் திருப்புல்லாணி என்றும் ப்ரஸித்தமான பெயர் வழங்கலாயிற்று. இதில் ராமேச்வர யாத்திரை செல்பவர்கள் ஸ்நானம் செய்யும் வழக்கமும் நவக்கிரஹங்களை பூசிக்கும் வழக்கமுமுண்டு. அப்படிப்பட்ட நவக்ரஹங்கள் ஸ்ரீராமனது கையினாலேயே மண்ணினால் நிறுத்தி வைக்கப்பட்டதென்று ஐதீகம்.

இந்த தேசத்தின் மேற்கிலிருக்கும் வ்ருஷகிரி என்னும் மலையில் ஸுந்தரபாஹு என்னும் விஷ்ணுவின் திவ்ய ஆலயம் விளங்குகிறது. அம்மலையிலிருந்து நூபுரகங்கை என்னும் சிறியமலைஅருவியும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருகுகிறது. கங்காநதி போலவே இதுவும் புண்ய தீர்த்தமென்று விசேஷமாய் கொண்டாடப்பட்டு வருகிறது.

❋

அடிக்குறிப்புகள்:

1, Pandya Kingdom comprised mostly in the present Madura, Tinnevelly and Ramnad Districts.

2. இதற்கு அழகர்கோயில் என்று பெயர்

3. இது பழனி என்று பெயர் வழங்கி வரப்படுகிறது.

4. Pamban Channel between the island of Ramesvaram and the peninsula of India.

5. நம்மாழ்வார் இந்த ஆழ்வார் திருநகரி கோயிலில் தூங்காப்புளியமரத்தினடியில் வளர்ந்ததாக ஐதீகம். இவ்வூர் கோயிலில் தங்க புளியமர வாஹனம் இப்பொழுதும் இருந்து வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கேரளதேசம்

அத்யாயம் – 55

இருப்பிடம்

தென்கடலும் அரபிக்கடலும் கூடுமிடமாகிய கன்னியாகுமரி முதல் மேற்கில் வெகுதூரம் வரையில் [1]கேர்ள தேசமானது வில்லுபோல் வளைந்த உருவமாய் பரதகண்டத்தின் தென்கோடியில் நிலைபெற்றிருக்கிறது.

கேரளம் என்றும், மலையாளம் என்றும் இதற்கு இரண்டு பெயர் உண்டு. இந்த தேசமானது தென்கேரளம் என்றும், வடகேரளம் என்றும் இரண்டு பிரிவாய் வகுக்கப்பட்டிருக்கிறது. தென்கேரளத்திற்கு அனந்தபுரம் என்றும், வடகேரளத்திற்கு கொச்சி என்றும் பெயர்.

இந்த தேசத்தின் பூமிமட்டமானது முற்கூறிய இரண்டு கடல்களின் ஸமீபத்தில் சாய்ந்தும் சிற்சிலவிடங்களில் உயர்ந்தும் இருக்கும். இதில் விசேஷமாய் ஸமபூமியே கிடையாது. ஸிந்து யமுனைநதியின் கரையில் வஸிப்பவர்களுக்கு எவ்வித சுகம் உண்டாகுமோ அதைக் காட்டிலும் இந்த தேசத்தில் வஸிப்பவர்களுக்கு பதின் மடங்கு சுகம் அதிகமாய் உண்டாகுமென்று பிரஸித்தி உண்டு. சீனம், நேபாளம், பாரஸீகம் போலவே இந்த கேரளதேசமும் சீதளதேசமென்றே கருதவேண்டும். அவைகளைக் காட்டிலும் மனிதர்களுக்கும் மற்றுமுள்ள பிராணிகளுக்கும் மிகுந்த சுகத்தைக் கொடுப்பதில் இதுவே சிறந்ததாரும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மலை

இந்த தேசத்தில் அனேக சிறு குன்றுகள் உண்டு. இரண்டொரு பெரிய மலைகளும் உண்டு. அவைகளுள் ஆனந்தகிரியே மிகவும் சிறந்ததாகும். இப்படிப்பட்ட மலைகளில் கந்தமாதனமலை ஒஷத வகைகளால் சிறந்ததாகும். பொதுவாய்ப் பார்க்குமிடத்தில் இந்த தேசம் முழுமையிலும் அங்கங்கு சிறுகாடுகளில் சிறந்த ஒஷதக் கொடிகளும் வெற்றிலைக்கொடிகளும் ஏலம், மிளகுக் கொடிகளும், சந்தன மரங்களும் விசேஷமாய்ப் பயிராகின்றன. சிலவிடங்களில் தருவாழையுமுண்டு. இதைக் கேரளபாஷையில் சிறுவாழை என்று வழங்குவார்கள். இவ்வித காடுகளிலும் மலைகளின் குகைகளிலும் மந்தம், மிருகம் என்னும் யானைக் கூட்டங்கள் விசேஷமாய் உலாவுகின்றன.

நதி

இந்த தேசத்தின் நடுவிலிருந்து சில நதிகள் தெற்கு முகமாயும், சில நதிகள் மேற்கு முகமாயும் ஓடுகின்றன. அவைகளுள் முரளா என்னும் நதியே ஆதிகாலம் முதல் புண்யநதியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஜலம் மிகவும் கறுத்தும் ருசியாயுமிருக்கும். மற்ற நதிகளின் ஜலமும் ருசியுள்ளவைகளேயாகும்.

அநேகமாய் இந்த தேசத்தில் எவ்விடத்திலும் வெண்தாழைச் செடிகளும் மருதாணிச் செடிகளும் தென்னை மரங்களுமே விசேஷமாய்ப் புலப்படும்.

விசேஷம்: பரசுராமரின் பெருமை

இந்த அத்யாயத்தின் முதலில் கூறப்பட்டபடி இந்த கேரளதேசமானது இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் பரசுராமக்ஷேத்ரம் என்றே பொதுவாய் இதற்குப் பெயருண்டு. தசாவதாரங்களில் ஏழாவது அவதாரமாகிய பரசுராமன்*, சுப்ரமண்யனுடன் சேர்ந்து கைலாஸத்தில் சிவபிரானிடமிருந்து தனுர்வேதத்தை ஸம்பூர்ணமாய் கற்றுணர்ந்தார். பிறகு சிலகாலம் சென்றவுடனே தனது தகப்பனாராகிய ப்ருகுமஹரிஷிக்கு க்ஷத்ரியனால் உண்டுபண்ணப்பட்ட ஓர்வித கஷ்டத்தை நிமித்தியமாய் வைத்துக் கொண்டு பரசுராமன் தனது கையிலிருக்கும் கோடாரியினால் இவ்வுலகிலுள்ள ஸகல அரசர்களையும் தண்டிக்கத் தொடங்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அநேக வருஷங்காலம் வரையில் அவ்விதம் அரசர்களை வென்றுவரவே ஸகலபூமியும் பரசுராமருக்கே சொந்தமாகிவிட்டது. ப்ராம்மணனாகிய தாம் அந்த பூமி முழுமையும் பரிபாலிப்பது ஸரியல்லவென்று தீர்மானித்துக் கொண்டு அதை கச்யபருக்குத் தானமாக கொடுத்துவிட்டார். அவரும் அதை அங்கீகாரம் செய்தார். இவ்விஷயங்களைக் கண்ட சில பெரியோர்கள் தானம் செய்த பூமியில் வஸிப்பது தகுதி அல்லவென்று பரசுராமனிடம் தெரிவித்தார்கள். அவரும் அதை ஸரி என்றே கருதினார். ஆகிலும் பூமிமுழுவதையும் தானம் செய்துவிடவே தான் வஸிப்பதற்கு கொஞ்சமேனும் இடம் இல்லாமையைக் கண்டு கவலைப்பட்டார். ஒருவாறு தேறுதலை அடைந்து ஸமுத்ரராஜனை இடம் தரவேணுமென்று வேண்டினார். அந்த ஸமுத்ரராஜனும் தனது ஸ்வாருமாகிய அலைகளினால் மூடப்பட்டிருந்த பூமியை பரசுராமருக்காக விட்டு விட்டு வெகுதூரம் ஒதுங்கிப் போனான். அவ்வித பூமிக்குத்தான் கேரள தேசம் என்று பெயர். அது முதல் பரசுராமன் இதில் வாஸம் செய்ததால் இதற்கு பரசுராம க்ஷேத்ரம் என்று பெயர் வழங்கலாயிற்று.

முற்கூறிய தென் கேரள தேசத்தில் அனந்தபத்மநாபன் என்னும் மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரம் விளங்கிவருகிறது. மேற்குக் கடலின் கரை ஓரத்தில் ஜனார்த்தனம் என்னும் மற்றொரு விஷ்ணுவின் க்ஷேத்ரமும் மிகவும் ப்ரஸித்தி பெற்றது. நமது பரதகண்டத்தில் வஸிக்கும் ஆரியர்கள் ச்ராத்தம்[3] செய்யும் தருணத்தில் இந்த ஜனார்த்தனனையே நினைத்துக் கொண்டு தமது பிதுர்களுக்கு பிண்டதானம் செய்து வருகிறார்கள். இவ்விரண்டு விஷ்ணு ஆலயங்கள் தவிர அநேக காளிகோயில்களும் பகவதி (பார்வதியின் ஆலயமும்) அநேகம் உண்டு. கார்த்திகை மாதத்தில் பகவதியின் ஆலயத்தில் இந்த தேசத்திலுள்ளோர் ஓர் அழகான உத்ஸவத்தை நடத்தி வருகிறார்கள்.

குரு, அவந்தி முதலிய தேசங்கள் போலவே இந்த கேரள தேசத்தையும் நெடுநாளாய் இந்திய அரசர்களே பரிபாலித்து வருகிறார்கள். இவ்வரசர்களுக்கு ப்ரதான தேவதை விஷ்ணுவே ஆயினும் ஈசனிடத்திலும் மிகுந்த பக்தி உடையவர்கள். தனது மாமனாகிய கம்ஸனுடைய சொத்துக்களை கண்ணபிரான் அடைந்தது போலவே இந்த தேசத்து அரசர்களுள் மாமனது பொருளை மருமானே அடையும் நியாய முறை இப்பொழுது காணப்பட்டு வருகிறது. இந்த தேசத்துஅரசர்களும் ஜனங்களும் கல்வியில் மிகவும் நிபுணர்களாவே இருப்பார்கள். வடமொழி என்னும் ஸமஸ்க்ருதமும் தென்மொழி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னும் தமிழும் கலந்த பாஷைகளே இத்தேசத்திலுள்ளோர்களுக்கு ப்ரதான பாஷையாகிய மலையாளமெனப்படும். இவ்வித ஜனங்கள் பெரும்பாலும் நல்ல அழகை உடையவர்களாகவே காணப்படுவார்கள். இந்த தேசத்தில் மரவேலை[1] செய்பவர்களும் விஷ வைத்தியர்களும் மாந்திரீகர்களும் நெடுநாளாய் வஸித்துவருகிறார்கள். இவர்கள் வீடு முதலியவைகளை அமைக்கும் தருணத்தில் இந்த தேசத்து யானைகளையே அதற்கு உதவியாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மற்றைய தேசங்களைப் பார்க்கிலும் இந்த தேசத்து மாதர்களின் உடை விஷயம் விலக்ஷணமாய் காணப்பட்ட போதிலும் அவர்களின் அழகும் குணமும் கல்வியும் மனதைக் கவரத் தகுந்ததாய் இருக்கும். கூர்ஜர தேசத்து ஸ்திரீகளுக்கு அழகு மாத்திரமே தவிர ஆசாரம் முதலியதில் நல்லொழுக்கம் கிடையாது. இந்த தேசத்திலுள்ள மாதர்களுக்கோ அவ்விரண்டும் அமர்ந்திருப்பதே மிகவும் வியக்கத்தக்கதாகும்.

மேலும் கூர்ஜர தேசத்து ஸ்திரீகள் கை கால் வளையல்களை எவ்விதம் பருமனாய் அணிந்து கொண்டிருக்கிறார்களோ அது போலவே இந்த தேசத்து மாதர்கள் காது ஓலைகளை மாத்திரம் மிகவும் பெரியதாய் அணிந்து வருகிறார்கள். அவ்வித தோற்றமானது பார்வைக்கு அவ்வளவு திருப்திகரமாயில்லாமலிருந்த போதிலும் அவர்களின் சிறந்த கூந்தலே முகத்திற்கு வெகு அழகை உண்டு பண்ணுகிறது. இம் மாதர்களின் பெருமையை பலவிதமாய் சொல்லுவாருமுளர்.

வங்கம், விதேஹம், ஆந்த்ரம், த்ராவிடம் முதலிய தேசங்களில் சிலசில ஸமயங்களில் சந்தைகள் கூடும் வழக்கமுண்டு. இந்த தேசத்திலோவெனில் எப்பொழுதும் ஒவ்வொரு வாரமும் பெருத்த சந்தைகூடும் வழக்கமுண்டு. அதில் சிறந்த யானைக்குட்டிகள், அழகிய குதிரைகள், சிறந்த பசுக்கள், புதிய வஸ்திரங்கள், ருசியான வெற்றிலைகள், மிருதுவான பாக்குகள் முதலிய அநேக ஸாமான்கள் கிடைக்கும்.

இவ்விதமான மஹிமைகளுக்கெல்லாம் காரணம் மாதம் மும்மாரியே ஆகும். வெயில் காலத்திலும் இந்த தேசத்தில் விசேஷ மழைபொழியும். எப்பொழுதும் தென்றலும் குளிர்ந்தகாற்றுமே வீசும். இந்ததேசம் முழுமையிலும் நஞ்சை தான்யங்கள் சொற்பமாகவும் புஞ்சை தான்யங்கள் மிகுதியாகவும் பலிக்கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த தேசத்தின் வடமுனையிலிருக்கும் கொச்சி என்னும் ராஜதானியானது கடலால் சூழப்பட்டதாய் தாழ்ந்த பூமியிலிருக்கிறது. இது மிகவும் சிறந்த நகரம். இதில் ராஜ பரம்பரையும் அவர்களின் செங்கோலும் தொன்று தொட்டு வழங்கி வருகிறது.

❋

அடிக்குறிப்புகள் :

1. The ancient chera-kingdom now comprised mostly in Travancore and Cochin States and Malabar District.
2. பரசுராமன் முன்யுகத்தில் அவதரித்தவரானாலும் சிரஞ்சீவி என்று இப்பொழுதும் கொண்டாடப்படுகிறார்.
3. இதன் விசேஷங்களை ஹிந்துக்களின் விரதங்கள் பண்டிகைகளைப் பற்றிய (Hindu Fasts and Festivities) இரண்டாம் பாகத்தில் மஹாளயம் என்னும் அத்யாயத்தில் காணலாம்.
4. இந்த தேசத்திலுள்ள வீட்டுக் கட்டடங்களின் மேல் கூரை அநேகமாய் மரத்தால் நன்றாய் வேலைசெய்யப்பட்டிருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கர்னாடகதேசம்

அத்யாயம் – 56

இருப்பிடம்

கேரள தேசத்திற்கு வடக்கிலும், மஹாராஷ்டிரதேசத்திற்கு தென் கிழக்கிலும், த்ராவிட தேசத்திற்கு வடமேற்கிலும் ஓர் அகன்ற காட்டு பூமிக்கு [1]கர்னாடாகதேசம் என்று பெயர். இந்த தேசம் முழுவதிலும் ஸமபூமியே கிடையாதென்று சொல்லலாம். எங்கும் மேடுபள்ளமாகவும் பூமியின் குணம் எக்காலத்திலும் உஷ்ணமுமாகவே விளங்கும்.

மலை, நதி

கோகர்ண மலையின் தொடர்கள் மிகப் பெரியதாய் ஓங்கி தெற்கில் பரவி இந்த தேசத்தின் நடுவிலுள்ள தர்துரமலையுடன் சேர்ந்திருக்கின்றன. இவைகளே இந்த தேசத்தில் மிகப்பெரிய மலைகள். இதன் கிழக்கு பாகத்தில் சிறிய குன்றுகளுமுண்டு. அவைகளின் ஸமீபத்தில் மரங்கள் நெருங்கிய பெரிய காடுகள் பெரும்பாலும் பூமியை கவர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்விதக்காடுகளில் ஒட்டகம், யானை முதலிய உஷ்ணபூமி மிருகங்களே எங்கும் விசேஷமாய் உலாவும்.

இவ்வித மலைத்தொடர்களின் மேற்கில் ஒரு பெரிய முகடு உண்டு. அதற்கு யதுகிரி என்று பெயர். இதன் அடிவாரத்தில் திருநாராயணபுரம் (மேலக்கோட்டை) என்னும் நகரத்தில் ஸ்ரீமந்நாராயணன் செல்வப்பிள்ளை என்னும் விக்ரஹரூபியாய் ஓர் அழகிய கோயிலில் விளங்குகிறார். பலிசக்ரவர்த்தியின் குமாரனாகிய ஒரு அஸுரன் பகவானுடைய கிரீடத்தை முன்பு அபகரித்ததாகவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவனைக் கருடன் ஸம்ஹரித்து அந்த கிரீடத்தை இந்த பகவானுக்கு ஸமர்ப்பத்தாரென்றும் ஒவ்வொரு வருஷமும் பங்குனிமாஸத்தில் இந்த திருநாராயணபுரத்தில் ஓர் சிறந்த உத்ஸவம் நடத்தப்பட்டு வருகிறது.

தர்துரமலையின் தென்பாகத்தில் ஸஹ்யம்[2] என்று மற்றொரு சிறுகுன்று உண்டு. அதற்குக் குடகுமலை என்று மற்றொரு பெயருண்டு. அதிலிருந்து உற்பத்தியாகும் நதியே காவேரிநதி என பிரஸித்திபெற்று விளங்குகிறது.

விசேஷம்

இந்த தேசத்தில் ஓடும் காவேரி நதியின் ஸமீபத்திலிருக்கும் ஆதிரங்கம்[3] என்னும் க்ஷேத்ரத்தில் ரங்கநாதஸ்வாமி சயனமுள்ள பூர்வீக கோயிலும் மற்றுமுள்ள சில கட்டடங்களும் இப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன.

இந்த தேசத்தின் தென்கிழக்கில் சிருங்கேரி என்று ஒரு திவ்விய க்ஷேத்திரமுண்டு. அதில் ஈசனுடைய ஸந்நிதானத்தில் முன்பு ஆதிசங்கராசாரியஸ்வாமிகள் விசேஷ பூஜை செய்ததாகவும் இப்பொழுதும் விசேஷ சிறப்புடன் ஈசஸன்னிதானம் விளங்குகிறது. இந்த தேசத்தின் மத்தியில் மஹீசூரபுரம்[4] என்னும் நகரமே இதற்கு ராஜதானியாய் விளங்குகிறது. இந்த நகரத்தை முக்கியமாக வைத்துக் கொண்டு சாலிவாஹனனுடைய வம்சத்தில் பிறந்த சில இந்திய அரசர்களே இப்பொழுதும் இந்த கர்னாடக தேசம் முழுவதையும் பரிபாலித்து வருகிறார்கள்.

❋

அடிக்குறிப்புகள்:

1, Covered mostly by the Mysore Province

2, Coorg Mountain.

3, Seringapatam

4, Mysore

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அனுபந்தம்

இந்தியாவென்னும் இந்த பரதகண்டத்தில் பூர்வகாலத்திற்குப் பிறகு நடைபெற்ற விஷயமும், போஜனுக்குப் பிறகு நடந்த விஷயங்களும்

இவ்விதமாய் விவரிக்கப்பட்ட 56 தேசங்களின் இருப்பிடமும் மற்றும் சில சரித்திர விஷயங்களும் இது வரையில் எழுதப்பட்டன. சில வருஷம் சென்ற பிறகு இவ்விததேசங்களில் பரவிய மதங்களையும் கோட்பாடுகளையும் நன்கு அறிவிக்கும் பொருட்டு மற்றும் சில விஷயங்கள் சுருக்கமாய் எழுதப்படுகின்றன. அவையாவன:–

சுமார் 2000 வருஷகாலங்களுக்கு முன்பு நேபாள தேசத்தில் கபிலவஸ்து என்னும் நகரத்தை சாக்கியர் என்னும் அரசர்கள் பரிபாலித்து வந்தார்கள். அவரது வம்சத்தில் சுத்தோதனன் என்னும் ஓர் அரசன் இருந்தான். இவன் இளமையிலேயே கல்வியில் தேர்ச்சியை அடைந்த மாயாதேவி என்பவளை மணந்து கொண்டான். அவர் களுக்கு ஸித்தார்த்தன் என்று புத்ரன் பிறந்தான். அவனுக்கே கௌதமன் என்றும் சாக்யமுனி என்றும் இரண்டு பெயர் ஏற்பட்டது. இவனும் வடதேசம் முழுமையிலும் ஸஞ்சாரம் செய்து அங்கங்கு அநேக பெரியோர்களிடம் சென்று பலவித கல்விகளைக் கற்றான். பிறகு தனது அரசாக்ஷிக்குட்பட்ட ஜனங்களுக்கு ஓர்வித மதத்தை ஏற்படுத்திக் கொடுத்தான். அதுமுதல் இவனுக்கு புத்தன் என்று விசேஷ கீர்த்தி உண்டாயிற்று.

தனது மனைவியாகிய கோபா என்பவளிடத்தில் ராஹுளன் என்னும் புத்திரன் உதித்த பிறகு ராஜ்யத்தினின்றும் விலகி காசிக்ஷேத்திரத்தின் ஸமீபத்தை அடைந்து புத்தகயை என்னுமிடத்தில் அரிய தவம் செய்ய ஆரம்பித்தான். அவ்விதம் ஆறுவருஷகாலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வரையில் மூச்சை அடக்கிக் கொண்டு தவம்புரியும் புத்தனுக்கு ஈசனது கருணையினால் தத்வக்ஞானம் உண்டாயிற்று. பிறகு காசியில் அநேக சிஷ்யர்களை அடைந்து காமபுருஷார்த்தத்தையே அவர்களுக்கு உபதேசம் செய்தான். அதுமுதற் கொண்டு பரம்பரையாய் விந்தியத்திற்கு வடதேசம் முழுவதிலும் புத்தமதம் வெகுகாலம் பரவியிருந்தது.

சிலகாலம் சென்ற பிறகு ஜைனமதம் பரவலாயிற்று. இதை ஜினன் என்பவனே முதலில் ஏற்படுத்தினான். கூர்ஜரதேசத்திலும் கர்னாடகதேச முழுவதிலும் த்ராவிட தேசத்திலுள்ள காஞ்சீமண்டலத்திலும் அநேக ஜைனர்கள் வந்து குடி ஏறி தங்கள் மதத்தை பரவச் செய்யலாயினர். ஆகிலும் வஸிஷ்டர், கௌதமர் முதலிய மஹரிஷிகளின் தர்மானுஷ்டானங்கள் அவ்வவ்விடங்களில் நமது ஆர்யமதஸ்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டன. இவ்விதமாய் ஜைனமதம் அதிகமாகவும் ஆர்யமதம் குறைந்துமிருக்கும் தருணத்தில் பாரஸீகதேசத்திலிருந்து தரவ்யன்[1] என்னும் துருஷ்க அரசன் இந்தியாவின் வடபுறத்தில் வந்து பஞ்சநதம் பூமியை கைப்பற்றிக் கொண்டு அரசுபுரியலானான். அலகஸாந்தரன்[2] என்னும் மற்றொரு அரசனும் அவனுடன் சேர்ந்து விந்தியமலைக்கு வடக்கிலுள்ள தேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பிறகு மகததேசத்து அரசும் அவர்களால் கைப்பற்றப்பட்டது. அந்த அலகஸாந்தரனுடைய ஸேனாபதியாகிய ஸெயலூரன்[3] என்பவன் மகததேசத்தை பரிபாலனம் செய்து வந்த சந்திரகுப்த மஹாராஜனுடன் போர் விளைவிக்க முயன்றான். ஆகிலும் அவனது எண்ணம் கைகூடவில்லை. பூமியின் சிலபாகங்களை சந்திரகுப்தன் தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டு ஸெயலூரனை துரத்திவிட்டான். அவன் போன பிறகு மகததேசத்திலிருக்கும் பாடலீபுத்திரம்[4] என்னும் நகரத்தை நந்தன் என்னும் பெயர்பெற்ற அரசன் பரிபாலித்துவந்தான். அவனுக்குப் பிறகு ஸமுத்திரகுப்தன் விந்தியத்திற்கு வடபாகத்தை கைப்பற்றினான். தென்பாகத்தைமாத்திரம் அவனது ஸமகாலத்தில் உதித்த அசோகராஜனே[5] பரிபாலிக்கத் தொடங்கினான். அந்த அசோகன் புத்தமதத்தைத் தழுவி இருந்த போதிலும் நமது ஆரியமதத்திற்கு ஓர்வித கெடுதிகளையும் செய்யவில்லை. சந்திரகுப்தனுக்கு முதல் மந்திரியாயிருந்த சாணக்யன்[6] என்பவரே அனேக ராஜயுக்திகளையும் யுத்த முறைகளையும் வெளிப்படுத்தியவர். சகன்[7] என்னும் ஓர் வித ஜாதிக்காரர்கள் காஸ்மீரம் முதல் வடஇந்தியா முழுமையையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆண்டுவந்தார்கள். அவர்கள் ராஜ்யகாரியம் ஆரம்பித்த தேதியை முதன்மையாக்கிக் கொண்டு சகவருஷம் என்று கணக்கிடலானார்கள். அவர்களது காலத்திலேயே மாளவதேசத்தின் இராஜதானியாகிய உஜ்ஜீனிநகரத்தில் விக்ரமாதித்யன் என்னும் ஓர்புண்ய அரசன் தோன்றி விளங்கினான். இவனது அரசாக்ஷி வடஇந்தியாவிலும் தென் இந்தியாவிலும் சில இடங்களிலும் பரவிஇருந்தது. விக்ரமாதித்யன் அரசுபுரிகையில் ஸகல ஜனங்களுக்கும் கல்வி, நற்குணம், செல்வம், சில்பக்ஞானம், வியாபார பயிற்சி, ஸ்திரீகளுக்கு கல்வி, பாதிவ்ரத்தியம் முதலிய நன்மைகளெல்லாம் குடிகொண்டிருந்தன வென்று சில இதிஹாசங்களால் நன்கு விளங்குகிறது. இவ்வித பெருமை பொருந்திய விக்ரமாதித்யன் சந்திரகுப்தனுடைய ஸகாயத்தை அடைந்து சகஜாதியர்களை முற்றிலும் துரத்திவிட்டான். புத்த மதத்தினால் அடங்கி இருந்த ப்ராம்மண மதத்தையும் ஸம்ஸ்க்ருத கல்வியையும் விசேஷமாய் அமைப்பித்தான். இவன் வெகு அழகாய் ராஜ்யபரிபாலனம் செய்தவனென்று எங்கும் ப்ரஸித்தியுண்டு. இவனது ராஜசபையில் தன்வந்தரி[8] க்ஷபனகன்[9] அமரஸிம்மன்[10] சங்கு[11] வேதாளபட்டன்[12] கடகர்ப்பரன்[13] காளிதாசன் வராஹமிரன் வரருசி என்னும் உத்தமபண்டிதர்கள் விளங்கினார்கள். இவர்கள் தவிர பாணன் முதலிய அநேக திவ்யகவிகளும் பலவேலைகளை கற்றோரும் சூழ்ந்திருந்தார்கள். இவ்வித பெருமையினால் விக்ரமாதித்யனும் தான் அரசுபுரிய ஆரம்பித்த தினம் முதல் வருஷக்கணக்கை வரையலானான். இந்த விக்கிரமாதித்தியனுடைய அற்புத செயல்களையும் ஸம்பூர்ண சரித்திரத்தையும் விக்ரம சரித்திரம் என்னும் வடமொழிநூலில் நன்றாகக் காணலாம். விக்ரமாதித்யனுக்குப் பிறகு சாலிவாஹன மகாராஜனும் அவனுக்குப் பிறகு போஜமஹாராஜனும் நமது இந்தியா முழுமையும் நன்றாய் அரசு புரிந்தார்கள். ஸரஸ்வதி கண்டாபரணம், ராமாயண சம்பு முதலிய நூல்களில் போஜராஜனுக்கு நிகர் ஒருவருமில்லை என்றே புலப்படும். ஸ்ரீஹர்ஷன், பட்டவாணன் முதலிய பூர்வ கவிகளுக்குப் பிறகு கேரளதேசத்தில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீசங்கராச்சார்யர் என்னும் மஹானுபாவர் அவதரித்தார். இவர் எட்டாவது வயதிலேயே ஸந்நியாசத்தை பெற்று அநேக புண்ய ஸ்தலங்கள் சென்றார். பத்ரிகாச்ரமம் வரையில் அங்கங்கு நிறைந்திருக்கும் பௌத்த ஜைன பாஷண்ட மதங்கள் வேதத்தின் நடைக்கு விரோதிகளென்று பல நூல்களினால் நன்றாய் எடுத்துக்காட்டி அவைகளைக் கண்டித்து ப்ராம்மண மதத்தையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அத்வைத ஸித்தாந்தத்தையும் நன்றாய் ஸ்தாபித்து விளக்கினார். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியார் என்றும் ஆசார்யபாதர் என்றும் விருதுகளை அடைந்த சங்கராசார்யஸ்வாமிகளின் காலத்தில் ஆந்திர தேசத்தில் சாலுக்ய[14] அரசர்களும், காகதீய[15] அரசர்களும்; த்ராவிட தேசத்தில் வல்லளார்களும்[16] விசேஷமாய்ப் பரவலானார்கள். அச்சமயந்தான் சைவமதமும் விசேஷமாய்த் தலை தூக்கி விளங்க ஆரம்பித்தது. வெகு ஆதிகாலம் முதல் சுருங்கி இருந்த சைவமதத்தை பரவச் செய்யும் பொருட்டு 63 நாயன்மார்கள் என்னும் சில பக்தர்கள் தோன்றினார்கள். இது போலவே கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, காளமேகன் முதலிய கவிகளும் ஆழ்வார்களும், நமது தமிழ் பாஷையின் மஹிமையை பல பக்திரசங்களைக் கொண்டு சிறப்பிக்கச் செய்தார்கள். சங்கராசார்யருக்குப் பிறகு, காஞ்சீபுரத்தில் ஸமீபத்தில் பூதபுரி[17] என்னும் ஸ்ரீபெரும்பூதூர் என்னும் நகரில் ராமானுஜாசாரியர் அவதரித்தார். அத்வைத மதத்தின் கோட்பாட்டை அங்கீகரித்துக் கொண்டே, இந்த ராமானுஜாசார்யர் சில அழகிய வழிகளையும் நிலை நாட்டினார். இவர் ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்னும் ப்ராம்மணர்களுக்குப் ப்ரதான ஆசார்யனாய் விளங்கியதுமன்றி, வேத மார்க்க ப்ரதிஷ்டாபகர் என்னும் ப்ரஸித்தியையும் அடைந்தார். பாஷ்யகாரர் என்று இவருக்கு மற்றொரு பெயருமுண்டு. இவரது மதத்தை நன்றாய் உறுதிப்படுத்துவதற்காக காஞ்சீபுரத்தில் அவதரித்த வேதாந்ததேசிகன் அநேக அருமை நூல்களை இயற்றினார். கவிதார்க்கிக ஸிம்மம் என்னும் ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்னும் அநேக விருதுகளைப் பெற்று விளங்கிய வேதாந்த தேசிகரை அப்பய்ய தீக்ஷிதர் அவர்களும் நன்றாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள்.

பொதுவாய்ப் பார்க்குமிடத்தில் காச்மீரம் முதல் விந்தியமலை வரையில் ஸ்ரீஹர்ஷன், பவபூதி, ஹர்ஷவர்த்தனன், விசாகதத்தன், பட்டநாராயணன், பாரவி, பட்டிமாகன், தண்டி ஸுபந்து, காளிதாசன் முதலிய மஹாகவிகளின் நூல்கள் விசேஷமாய் விளங்குகின்றன. அது போலவே விந்தியத்திற்குத் தெற்கில் உதித்த பண்டித ஜகந்நாதன் அப்பய்யதீக்ஷிதர், சங்கராசாரியர், வேதாந்த தேசிகன், கோவிந்த தீக்ஷிதர், குட்டிகவி முதலிய சில மஹான்களின் நூல்க்ள் இப்பொழு தும்உலகமெங்கும் ப்ரஸித்தி பெற்றவைகளாய் விளங்குகின்றன.

இப்படிப்பட்ட தக்ஷிண தேசமஹான்கள் இயற்றிய நூல்களே வர்ணாச்ரம அனுஷ்டான முறையை நன்றாய்ப் போதிக்க வல்லவை கள். அஷ்டமி, ஏகாதசி, அமாவாஸை முதலிய திதிகளின் விரதங்களை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யும் பூஜா நியமங்களையும் ஆச்ரம தர்மங்களையும் தக்ஷிணதேச ஆர்யர்களே இப்பொழுதும் முறைப்படி கைப்பற்றி வருகிறார்கள். வடதேசத்திலோவென்றால் கங்கா நதியின் மஹிமையினாலும் சில க்ஷேத்திர மஹிமையினாலும் அவர்களின் ஒழுக்கம் சிறந்ததாயினும் வர்ணாச்ரம அனுஷ்டானம் அவ்வளவு உயர்ந்ததாக காணப்பட வில்லை.

பரதகண்டம் என்னும் நமது இந்தியாவில் அநேக வருஷகாலமாய்ச் சிற்சில தேசங்களில் ஜனங்களின் ஆசாரம், மதம், நடை, உடை முதலியவைகள் வெவ்வேறு விதமாய் நடைபெறப் பட்டு வருகிறபடியால் அவைகளில் சில முக்கிய விஷயங்கள் மாத்திரம் இங்கு விவரிக்கப்படுகிறது.

1. தமிழ் தேசத்திலிருக்கும் ஸுமங்கலி ஸ்திரீகள் எப்பொழுதும் வெண்மை வஸ்திரத்தை அணிந்து கொள்ளவே மாட்டார்கள். தெலுங்கு தேசத்திலும், மஹராஷ்டிரம், கூர்ஜரம், (குஜராத்) முதலிய வடதேசங்களில் ஸுமங்கலி ஸ்திரீகள் அவ்வித வெண்மை வஸ்திரத்தை அணிந்து கொள்ளும் வழக்கம் நெடுநாளாய் ஏற்பட்டு வருகிறது. இதுபோலவே தக்ஷிணதேசத்துப் ப்ராம்மணர்கள் பெரும்பாலும் முகத்தில் மீசை வைத்துக் கொள்ளமாட்டார்கள். ஸ்திரீகளுடன் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு சாப்பிடமாட்டார்கள். இவ்விரண்டு வழக்கமும் தமிழ்தேசம் தவிர மற்றும் வடதேசங்களில் நியாயமென்று ஒப்புக்கொண்டு அதுபோல நடத்தப்பட்டு வருகின்றன.

2. ஸிந்து, மாளவம், கொங்கணம் முதலிய சில தேசங்களில் தை முதல் ஆனி வரையிலும் விவாஹம் முதலிய சுபகாரியங்களை நடத்துவதில்லை. தெலுங்கு தேசத்திலும் தமிழ்தேசத்திலும் தை முதல் ஆனி வரையிலுள்ள இவ்வாறு மாஸங்களில்தான் ஸகலவித சுபகாரியத்தையும் நடத்தி வருகிறார்கள். வங்கதேசத்திலும், கோஸலதேசத்திலும் அவைகளின் சுற்றுப் ப்ரதேசங்களிலும் இவ்வாறுள்ள மாதங்களே சுபத்திற்கு நலம் என்று கருதி அதுபோல் நடத்தி வருகிறார்கள். இவ்விதம் உத்தராயணகாலம் என்றும் தை முதல் ஆனி வரையிலுள்ள மாதங்களை சிறந்ததென்று ஒப்புக் கொண்டவர்கள் ஆடி, புரட்டாசி, மார்கழி, பங்குனி என்னும் இம்மாதங்களை சூன்யமாதம் என்றும் சொல்லுகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த இந்தியாவில் வஸிக்கும் ஜனங்கள் பல ஜாதிகளாய் இருந்த போதிலும் ப்ராம்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர்களென்னும் நான்கு முக்கிய பிரிவுகளே எங்கும் ப்ரஸித்தி பெற்றவைகள். இவர்கள் எல்லோரும் ஈச்வர பிம்பங்களை பூஜித்துப் பக்தி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஜோதிஷமும் சகுனமும் தர்ம சாஸ்திரங்களுமே முக்கியமானவைகள்.

யவனம், கிராதம், பாரஸீகம், காம்போஜம், சீனம் முதலிய சில தேசங்களில் வேறு ஜாதி ஜனங்கள் நெடுநாளாய் வஸிக்கிறபடியால் அவர்களுடைய மதமும், ஆசாரமும், உணவும், உடுப்பும் ஓர் விரோதமாகவே காணப்படும்.

மேற்சொல்லிய தேசங்கள் தவிர மற்றும் சில தேசங்களில் புத்தர்களும், ஜைனர்களும், விசேஷமாய்க் குடி ஏறி வாஸம் செய்து வருகிறார்கள். ஆகையால் அவர்களின் மதாசாரங்களைப் பற்றி இங்கு விவரமாய் உரைப்பது உசிதமாகாது. பொதுவாய்ப் பார்க்குமிடத்தில் ராமேச்வரம் முதல் ஹரித்துவாரம் வரையிலும் எவ்விடத்திலும் எந்த தேசத்திலும் நமது ஆர்யமதமே சிறந்ததாய் அநுஷ்டிக்கப்படுகிறது. ஆர்யர்களுக்குப் புண்யதீர்த்த ஸ்நானம், ஈச்வர தர்சனம், குருபக்தி குலதர்மம், ஸமமான ஜாதியில் விவாஹம், அஹிம்ஸை, வ்ரதானுஷ்டானம், சாஸ்திராப்பியாஸம் முதலியவைகளே சிறந்த குணங்கள். இவ்வித நல்லொழுக்கங்கள் பூர்வீக நூல்களில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்நூல்களில்,

ஸ்மிருதி	தர்க்கம்	கணிதம்
தர்மசாஸ்திரம்	மீமாம்ஸை	ஸங்கீதம்
புராணம்	ஜோதிஷம்	ஸாஹித்யம்
வ்யாகரணம்	வைத்தியம்	வேதம்

முதலிய பாகங்களே இம்மைக்கும் மறுமைக்கும் உபாய வழிகளைக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட கடினமான சாஸ்திரங்களை சில காலத்திற்கு முன்னிருந்த நமது முன்னோர்கள் அந்தந்த தேசங்களில் வழங்கி வந்த பாஷைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளில் தமிழ், கேரளம், (மலையாளம்), ஆந்திரம், (தெலுங்கு), குஜராத்தி, மராத்தி, வங்கம் என்னும் பாஷைகளில் இயற்றிய நூல்களே அந்தந்த தேசங்களில் சிலவைகள். ஏட்டு பிரதிகளாயும், சில அச்சிடப்பட்டும் இருந்து வருகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்தப் பரதகண்டத்தில் பெரும்பாலும் எவ்வித பாஷையை அநுஷ்டித்தபோதிலும் எந்த தேசத்தில் வஸித்தபோதிலும் ஸ்ரீ சங்கராசார்யரின் அத்வைத ஸித்தாந்தமும் ஸ்ரீராமானுஜாசாரியரின் விசிஸ்டாத்வைதமும் ஸ்ரீமத்வாசாரியாரின் த்வைத சித்தாந்தமுமே சிறந்தவைகளென்று அந்தந்த மதஸ்தர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆகிலும் வட இந்தியாவில் ஜைன மதமும், பௌத்தமதமும் படர்ந்து கொண்டே வருகின்றன. இதுவுமன்றி அநேக வருஷகாலங்களாய் துருஷ்கமதமும் ஒவ்வோரிடத்திலும் பரவி வருகிறது. இந்த துருஷ்கர்களின் ஜாதியில் முன்பு உதித்த சில மஹான்கள் நவாப் என்ற பட்டத்தைப் பெற்று இவ்விந்தியாவை அநேக இடங்களில் அநேக வருஷகாலம் பரிபாலனம் செய்து வந்தார்கள். அவர்களின் ஆசாரத்தையும் நடையுடைகளையும் நாம் கவனிக்காவிடிலும் நமது தாய் பாஷைக்கு அவர்களால் செய்யப்பட்ட பேருதவியையும் சிறந்த ப்ராம்மணர்களுக்கு அவர்களாலேயே அங்கங்கு விடப்பட்டதான சொத்துக்களையும் நாம் ஒருக்காலும் மறக்கவே மாட்டோம்.

சேரன், சோழன், பாண்டியன், பல்லவன், அசோகன், குப்தன், போஜன், விக்ரமாதித்யன், சாலிவாஹனன், சாதவாஹனன் முதலிய இந்திய அரசர்கள் இராஜ்யமாளும் ஸமயத்தில் அவர்களிடத்தில் அநேக நற்குணங்கள் குடிகொண்டிருந்தன. எவ்விதத்திலும் ஜனங்களின் க்ஷேமத்தையே கோரிக்கொண்டு நியாய முறையை சற்றேனும் கைவிடாமல் அரசுபுரிந்தனர். அவர்களது அரசாளுகையில் வேதாத்யயனம், அக்னி ஹோத்ரம், யாகம், ஸத்யம், தானம் இவைகள் நன்றாய் நிறைவேற்றப்பட்டு வந்தன.

அவ்வித இந்திய ராஜ சக்ரவர்த்திகள் ராஜ்ய தந்திரத்திலும் யுத்த முறைமையிலும் கைதேர்ந்தவர்கள். இந்தியாவில் உண்டாகும் விளை பொருள்களின் வியாபாரம் அங்கங்கு ஸரிவர நிறைவேறும்படி தகுந்த சட்டங்களை ஏற்படுத்தியவர்கள். அவர்கள் காலத்தில் கால மழை பெய்தும் கொடுமையான சோகங்கள் இல்லாமலும் இருந்தன.

❋ ❋ ❋

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்புகள்:

1, Darius Hystaspus
2, Alexander
3, Selucus
4, Patna
5, Asoka
6. இவர் அர்த்தசாஸ்திரம் என்னும் புஸ்தகத்தை வெளியிட்டார்.
7,. Indo-Scythians
8, He has edited several medical works
9, Author of a Sancrit Dictinary
10, Annotator of the art of dancing
11, Law-givers
12, Poet
13, Author of Astrology and Astronomy
14, Chalukyas
15, Kakaktiyas
16, Ballalas
17, Sriperambudur near Trivellore

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்நூலில் குறிப்பிட்ட ஆதார புஸ்தகங்களின் பெயர்கள்

விஷ்ணுபுராணம்
மஹாபாரதம்
மாகம்
க்ருஷ்ண கர்ணாம்ருதம்
சிவரஹஸ்யம்
ஸ்கந்தபுராணம்
மேகஸந்தேசம்
மார்க்கண்டேய புராணம்
நைஷதம்
ஹம்ஸ ஸந்தேசம்
கஜசாஸ்திரம்
ஸங்கீத சாஸ்திரம்
ராமாயணம்
போஜசம்பு
இந்துபாக சாஸ்திரம்
ருக்வேதம்
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ பீடிகை
சிவபுராணம்
சகுனசாஸ்திரம்
அமரகோசம்
சாகுந்தலம்
யாதவாப்யுதயம்
பாகவதம்
மயசில்பசாஸ்திரம்
மூர்த்தி த்யானம்
இந்து புண்ணிய கதைகள்
பார்க்கவ புராணம்
வேதாரண்ய ஸ்தலபுராணம்
மஹாபுராணம்
ப்ரபோத சந்த்ரோதயம்
சக்திஸங்கம தந்திரம்
ஆக்நேய புராணம்
காளிகா புராணம்
சுக்ரநீதி
பெரியபுராணம்
வாமனபுராணம்
விச்வகுணாதர்சம்
ரகுவம்சம்
ரத்னபரீக்ஷை
ஸாமுத்ரிகாலக்ஷணம்
காச்யப் ஸம்ஹிதை
கிராதார்ஜுநீயம்
காதம்பரீ
கஜாயுர்வேதம்
அச்வலக்ஷணம்
குவலயாநந்தம்
கருடபஞ்சாசத்
ஸாளக்ராம நிர்ணயம்
ப்ரம்மாண்ட புராணம்

குறிப்பு : – மேல்கண்டவைகள் தவிர ஆர்க்யலாஜிகல் இலாகா வருஷாந்தர ரிபோர்ட்டுகளின் உதவியும் சேர்க்கப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேசம் என்ற வரையறை பலவித பரிசீலனைகளுக்குள்ளாகி இருக்கும் வேளையில் சுமார் நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நூல், இந்தியா என்ற புராதன தேசத்தின் புவியியல் பிரிவுகளையும், பண்பாட்டு, இயற்கை வளங்களையும் ஆய்வுபூர்வமாக எடுத்துரைக்கிறது. 56 தேசங்களின் புராணப் பின்னணியைச் சொல்லி அதன் பிரத்யேகமான தாவரங்கள், பறவைகள், விலங்குகள், சீதோஷ்ணம் வரை சிறப்பான தகவல்களைத் தருவது இந்நூலின் கூடுதல் சிறப்பு. நூறு வருடங்களுக்கு முன் தமிழ் உரைநடை எப்படி இருந்தது என்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கும் இப்புத்தகம் பல வெளிச்சங்களைத் தரக்கூடியது.

சந்தியா
பதிப்பகம்

விலை ரூ 65

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection